

ஓம்.

பரப்பிரம்மணேநம:



இந்து பைபிள் 4341.
XXII.C.12.

என்னும்

ஆரியர் சத்திய வேதம்.

பழய ஏற்பாடு—உபநிஷத்துக்கள்.

(முதற்பாகம்.)

இஃது

தமிழ்வாலிபர்களின் உபயோகத்திற்காக

கோயமுத்தூர் கலாநிதி பத்திரிகாதிபரும்,

ஆஸ்திகமதசித்தாந்தமென்னும் மாசிகைகர்த்தரும், ஆரியர் ஆசாரமென்னும்

இந்து தரும சாஸ்திரம், யோக சாஸ்திரம், சமுத்திரிகசாஸ்திரம்,

சங்கீத சாஸ்திரம், தருக்கசாஸ்திரம்,

பக்தி சாஸ்திரம், கலியுகதருமம், வேதப்பொருள் சார சங்கிரகம்,

காசி யாத்திரையாதி திவ்விய தேச சரித்திரம், ஸ்ரீவைஷ்ணவ பிரகாசிகை

முதலான கிரந்தங்களின் கருத்தருமமாகிய

சேலம், பகடாலை,

நரசிம்ம ஐ நாயடு

அவர்கள் தொகுத்து



தமது

கோயமுத்தூர்

கலாநிதி முத்திராக்ஷர சாலையில்

பதிப்பிக்கலாயிருக்கிறது.

1898.

The Country

TO WHICH

I AM SO PROUD OF BELONGING;

To the Vedas

TO WHICH

I AM SO DEEPLY INDEBTED;

AND TO THE

Memory

OF

MY BELOVED SON,

S. P. Ranganatham Nayudu

AT WHOSE REQUEST

THIS WORK WAS COMPILED,

I DEDICATE THIS WITH AFFECTION.

முகவுரை.

இப்பூவுலகில் பிரபலமாக இருக்கும் பெரிய மதங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய வேதம் அல்லது சமயகிரந்தம் இருத்தல் பிரதியக்ஷம். அவைகளில பெரும்பான்மையானவை கல்வியும் நாகரீகமும் விருத்தியாகும் இக்காலத்தில், அந்தந்த மதஸ்தர் களுடைய பாஷைகளிலும், வேறுபாஷைகளிலும் அச்சிடப்பட்டிருப்பதால்; அந்தந்த மதஸ்தர்கள் அவைகளைப்பெற்றும், கற்றும், கேட்டும், தம்தம் மத சித்தாந்தங்களின் உண்மையை யறிந்தும், அநுஷ்டித்தும் வருவதன்றியில்; ஏனையோரும் அம்மத நூல்களை அறிந்துய்யும்படி பகிரங்கப்படுத்தியும், அவைகளைத் தழுவிவரும் படிசெய்தும் வருதல் பிரதியக்ஷம்.

இப்படி பூலோகத்தில் பிரபலமாகவிருக்கும் எல்லாப்பெரிய மதங்களிலும் புராதனமானதும், சிறந்ததுமான மதங்களில் ஒன்றுகிய, ஆரியர் மதமென்னும் நமது இந்து மதத்துக்கும் புராதனமும், பெருமைப் பெற்றதுமான வேதம், ஸம்ஸ்கிருத பாஷையில் இருத்தல் பிரதியக்ஷம். அந்த ஸம்ஸ்கிருத பாஷைக்கு ஆதிமூதல் நாளது வரையில் அதற்கென்று தனியான எழுத்துக்கள் இல்லாமையாலும், பிறகு நாளாவட்டத்தில் எழுத்துக்கள் ஏற்பட்ட காலம் முதல் நாகரி, கிரந்தம், தெலுங்கு, மஹராஷ்டிர முதலானஎழுத்துக்களில் எழுதி வெளியாக்கக்கூடியதாக இருக்கினும்; மஹாபரிசுத்தமும் ரஹஸ்யமுமானதாக எண்ணியஇந்துவேதத்தை அனைவரும் படிக்கும்படி வெளியிடுதல பாவமென்று பாமரத்தனத்தால சிலர் பயந்தும்; சிலர், தம்மைப்போலவே ஏனையோரும் வேதத்தைப்படித்தால் தமது மஹிமைக்குக் கெடுதி வருமென்ற துரபிமானங் கொண்டு மூடிவைத்தார்கள். ஆயினும், கல்வி கேள்வி சீர்திருத்தம் விருத்தியாகு மிக்காலத்தில, மதாபிமானம் தேசாபிமானமுள்ள சிலர், பாமரருடைய பிதற்றலுக்குப் பயப்படாமலும், தம்மைப்போலவே ஏனையோரும் தத்துவ ஞானமடைந்து இகபரசுகமடைய வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடனும் தேவநாகரி, கிரந்தம், மஹராஷ்டிர முதலான சிலபாஷைகளில் வேதத்தின் சிலபாகங்களையும், முக்கியமாக உபநிஷத்துக்களையும் அச்சிட்டு வெளியாக்கி இருப்பதினால்; அவைகள் அந்தபாஷைகள் தெரிந்தவர்களுக்கு உபயோகப்பட்டு வருவதன்றி ஐரோபா கண்டத்துக்கும்போய்; அங்கு இத்தலி, பிரான்சு, ஜர்மனி, ஆங்கிலேய முதலான பாஷைகளில் மொழிபெயர்த்து பதிப்பிக்கப்பட்டும், அவைகளின் பெருமையை ஐரோபாகாக் கண்டத்தார்களும் கண்டு ஆநந்தமடைந்து வருகிறது.

இப்படி இந்த இந்துதேச வேதத்தின் பெருமை தேசங்களுக்கெங்கு துதிக்கப்பட்டு வரச்சே, இந்த இந்து

தென்பாகத்தில் வதிந்துவரும் தமிழ் வாலிபர்களுக்கு அவர்கள் அனுஷ்டித்துவரும் ஆரியர் மதத்தின்பெருமையை தக்கபடி மொழி பெயர்த்து பதிப்பித்த ஆதி வேதம் இல்லாதது பெரும் குறை வன்றே ?

இக்குறைவைநீக்கக்கருதியே இடைக்கிடை சிலபுத்திமான்கள் மத்தியகாலங்களில் வேதாந்த உபநிஷத்துக்களின் சில பாகங்களை மொழிபெயர்த்து அச்சிட்டிருந்தாலும், அவைகள் பெரும்பான்மையும் அத்துவைத விசிஷ்டாத்துவைத சித்தாந்தங்களைச் சார்ந்தவைகளாகவும்; வைதீக விஷயங்களில் உயர்தரஞானமடைந்த சிலருக்கன்றி, வாலிபர் முதலான சாதாரண ஜனங்களுக்கு அவ்வளவாகப்பயன்படாமலிருக்கின்றன. இதையறிந்தே சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பு சென்னையில் பிரசுரஞ்செய்துவந்த தத்துவபோதினியில், ரிக்குவேதத்தின் சில பாகங்களையும், உபநிஷத்துக்களின் சிலவற்றையும், மொழிபெயர்த்து இடைக்கிடை பதிப்பித்துவந்தாலும்; அந்தப் பத்திரிகையைத் தக்கபடி போஷிப்பாரின்றி நின்றுவிட்டது.

பிறகு தமிழ் நாட்டார் ஆரியவேதத்தை தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியாக்கத் துணிந்தார்களில்லை; துணியாததற்குக் காரணம், தமிழ்ப்பாஷையானது ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து உற்பத்தியான தெலுங்கு கன்னடி முதலான பாஷைகளைப்போலல்லாமல், இது தன்னந்தனிய சுதந்தர பாஷையாகவும், இதில் இலவுகீக வைதீக விஷயங்களுக்கு இன்றியமையாத இலக்கிய இலக்கண நூல்களும், வாகடஜோதிஷாதி நூல்களும் ஏராளமாக இருப்பதன்றியில்; திருவாசகம், தேவாரம், திருவாய்மொழி முதலான சிறந்த பக்திரசாதி கிரந்தங்களும்; கைவல்யம் முதலான வேதாந்த கிரந்தங்களும் ஏராளமாக இருப்பதனாலும், இவைகளின் கருத்தெல்லாம் ஆரியவேதத்தின் சாராம்சமாக இருப்பதனாலும், இனி இவ்வளவு சுலபமான பாஷையில் இருக்கும் கிரந்தங்களைவிட்டு, கஷ்டமான பாஷையாகிய ஸம்ஸ்கிருத பாஷையிலிருக்கும் ஆரியவேதம் முழுதையும் மொழிபெயர்த்து அச்சிடுவ அவசியமென்று விட்டார்கள்போலும்.

ஆயினும், காலவித்தியாசத்தினால் இக்காலத்துத் தமிழ் வாலிபரில் சிலர், தம் முன்னோரியற்றிய அருமையான தமிழ் இலக்கண பக்தி ஞான வேதாந்த நூல்களை உபேக்ஷைசெய்து கராகிரமமதியாக காலங்கழித்துவருகிறார்கள். சிலர், கிறிஸ்தான மதஸ்தர்கள் தம் தம் மத கிரந்தங்களை அழகாக அச்சுவைகளின் பெருமையைப்பற்றி பகிரங்கமாகப்பிரசங்கஞ் பண்ணிக்கச்சே மதிமயங்கி, அந்த மதங்களில் பிரவேசிக்க,

அதனால், தம்பெற்றோர் உற்றோருக்கு மனஸ்தாபங்களும், மாச்சரியங்களும், சண்டை சச்சரவுகளுமுண்டாகி கோர்ட்டுகள் கச்சேரிகளுக்குப்போய் வியாஜியங்கள்செய்தும் விசனப்படச் சம்பவிக்கிறது. தமிழ் வாலிபர்களில் சிலர், கிறிஸ்து முதலான மதஸ்தர்களுடைய உபதேசங்களைக்கேட்கும்போது, அவ்விதமான உபதேசங்களே தமது தேவாரம் திருவாய்மொழி இராமாயணங்களிலிருக்கக்கண்டு அவர்களுக்குக் காட்டினால்; கிறிஸ்து முதலான மதஸ்தர்கள்: "ஓ! இந்தத் தேவாரா திருவாசக திருவாய்மொழிகள் நவீனமான நூல்களென்றும், அவைகளில் ஒன்று சிவமதத்தைக் கண்டித்தும், மற்றொன்று விஷ்ணுமதத்தைக் கண்டித்தும் இருப்பதால்; அவைகள் இந்துக்களுடைய ஆதிவேதமல்லவென்றும், கடைசியாக தமிழர்களுக்கு வழிபடும் வேதமே கடையாதென்றும் சொல்லக்கூடாதே," தமிழ் வாலிபர்கள்கேட்டு மதிமயங்குகிறார்கள். அதற்குத் திருஷ்டாந்தமாக.—அன்றோர் நாள் எனது குமாரன் "அரிகதாஸ்" என்னும் வாலிபன் கோயமுத்தூர் கடைவீதியில் போய்க்கொண்டிருக்கையில், ஒரு கிறிஸ்துமத போதகர் இவ்விதமாகப் பிரசங்கஞ்செய்துக்கொண்டிருந்ததைக்கேட்டு வந்து "என்னே நோக்கி "கிறிஸ்து முதலான மதஸ்தர்களுக்கு அவரவர்கள் மதவேதம் அச்சிடப்பட்டும், அனைவரும் வாசித்தறியும்படியாக வெளியிடப்பட்டும் வரச்சே, நமது தமிழ் நாட்டாருக்கு மாத்திரம் நமதமத வேதமில்லாதக் காரணமென்ன? ஒரு வேளையிருந்தால், அதை அனைவரும் அறியும்படி வெளியிடாதிருக்கக் காரணமென்ன?" என்று கேட்டான். இக்கேள்வி உண்மையான கேள்வியாகவும், நியாயமான கேள்வியாகவும் இருந்தமையால்; அவனுக்கும், அவனேப்போன்ற வாலிபர்களுக்கும் திருப்தியாகவும், உதவியாகவும் இருக்கும் பொருட்டு; ஆரியவேதத்தில் முக்கியமான தலோபநிஷத்துக்களையும் தமிழில் பொருளுடன் பதிப்பிக்க எண்ணினேன். ஆனால் அப்படி அந்த தலோபநிஷத்துக்கள் முழுமையும் பதிப்பித்தால் புத்தகம் பெரிதாகி, இக்காலத்து வாலியர்கள் படிக்கமாட்டார்களென்று எண்ணியே "சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்" என்னும் விதியைத் தழுவி, பிரபஞ்ச சிருஷ்டி விநோதத்தைப்பற்றியும், ஜீவாத்துமாவின் விலக்ஷணத்தைப்பற்றியும், பரமாத்துமாவின் விலக்ஷணத்தைப்பற்றியும், மாத்துமாவையடையும் உபாயனையைப்பற்றியும், ஆதி ஆரிய மானுஷ்டானங்களைப்பற்றியும் பல உபநிஷத்துக்களில் சொல்லியிருக்கிற சங்கதிகளைத்தொகுத்து இதை முதற்புத்தகம் அல்லது ஏற்பாடாகவும்; மது முதலான தருமசாஸ்திரம், பகவத்கீதை புராணங்கள், பாரத ராமாயணாதி இரண்டாவது

பொது சத்தியங்களைத்திரட்டி, அதை இண்டாம் புத்தகம் அல்லது புது ஏற்பாடாகவும் பதிப்பிக்க; ஆந்திரம் ஆங்கிலேய முதலான பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருந்த ஆரிய வேதத்தின் சில உத்கிருஷ்டமான உபநிஷத்துக்களையும், அவைகளுக்கு ஸ்ரீதேவேந்திரநாதமஹரிஷி, ஸ்ரீதரர் முதலான மஹான்கள் செய்த வியாக்கியானங்களையும், அவைகளுக்கு இங்கிலீஷ் கருத்துகளையுஞ் சேர்த்து "இந்து பைபில்" என்னும் தலைப்பிலும் எனது கலாநிதி பத்திரிகையில் பகூஷந்தோறும் பதிப்பித்து வந்தனன். இதைப்படித்துப்பார்த்த சில தமிழ் வித்துவான்கள்: இதன் உத்தேசத்தை அங்கீகரித்தாலும், இதற்கு இந்து பைபில் என்றும், ஆரியர் சத்தியவேதமென்றும் பெயரிட்டது பொருந்தாதென்றும்; இதற்கு இந்து பைபில் என்ற பெயரிட்டதனால் "இது கிறிஸ்து மதப்புத்தகப்பெயரென்றும், இது கிறிஸ்தவர்களுடைய பாணியென்றும் "பைபில்" என்ற பெயருக்கு வேதமென்னும் பொருள் பொருந்தாதென்றும் பின்னும் பலவிதமாக ஆக்ஷேபித்தும்" சில பத்திரிகைகளில் பதிப்பித்து வந்தார்கள். (அதற்கோர் சமாதானம்.)

பைபில் (Bible) என்பது இங்கிலீஷ்பதம், இப்பதத்திற்கு மூலம் அஃறிணைப்பன்மைப்பெயராகிய பிபிலியா அல்லது பைபிலியா = (Biblia) லத்தீன் மொழி. இந்த பைபிலியா என்னும்பதம்=புத்தகங்கள் எனப்பொருள்தரும் பன்மைப்பாலாய பிபிலியா = (Bibilia) என்னும் கிரேக்கு மொழியிலிருந்து பிரிக்கதும், இதன் ஒருமைப்பாலாகிய பிபிலியான் என்னும் கிரேக்குமொழியிலிருந்து உற்பவித்தது. இந்த பிபோபியோன என்னும் மொழியோ, புப்ரோஸ் என்னும் ஓருவகை மரத்தின்பட்டை என்னும் சொல்லிலிருந்து ஜனித்தது. ஆகவே பப்புரோஸ் என்னும் மொழியினின்று, பப்புரூஸ் என்னும் லத்தின் மொழியும், இப் பபுரூஸ் என்னும் மொழியினின்று பப்பியே என்ற பிரஞ்சு மொழியும்=பேபர் என்ற அங்கிலேய மொழியும் பிறந்தது. இந்த பப்பியே அல்லது பேபர் என்ற பதத்துக்கு தமிழில்=கடிதம், அல்லது கடிதாதி என்று பொருளாகிறது; ஆகவே, பைபில் என்றபதத்துக்கு கிறிஸ்து வதமென்று பொருள்கொண்டது பொருந்தாது. கிறிஸ்து வேதத்திலுள்ள சரித்திரங்கள் பலவருஷங்களாக வாய்மொழிபோதகமாகவிருந்து, பிறகு எழுத்துக் ஏற்பட்ட பிறகு அவைகளை முதல்முதல் மரப்பட்டைகளில் எழுதி பாடஞ் செய்யப்பட்டும், பிறகு அந்தமரப்பட்டைகளையே நாளாவட்டத்தில்மெலிசும்மேன் மாகச்செய்யப்பட்டும், அவைகளே பேபர்=கடிதமென்று பெயரைப்பெற் றம்மரப்பட்டையே பிறகு புத்தகமென்று வழங்கிவரப்பட்டும், கடைசியாக நாளில் விசேஷ புத்தகமாகிய வேதத்துக்கு வழங்கப்பட்டதனால் பைபில் பெயரைப்பெற்றது. இப்பெயரை இப்போது வழக்கத்தில் வேதபுத்தகத் மாகப்பெயராக வழங்கிவருகிறார்கள். ஆகவே பைபில் என்னும் பதம் கர்த்தர்களுடையவேதத்துக்குமாத்திரம் உரியதாகாமல், குரானுக்கு= பைபில் என்றும், பார்சிகள் ஜந்தவஸ்தைக்கு=ஜந்தபைபில் என்றும், திரிபதாகத்துக்கு=புத்த பைபில் என்றும் சொல்லிவருவதை சாதா

ரணமாக இருப்பதால்; ஆதியில் எழுத்துக்களில்லாமல் கேவலம் ஒலிரூபமாகிய ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்த ஆரியவேதத்தின் சாரசங்கிரஹத்தை இப்போது எழுத்துக்குறிகளால் கடிதத்தில் பதிப்பித்த புத்தகரூபமாக வெளியில் விடுவதால் இதற்கு இந்துபைபில் என்ற பெயரிடப்பட்டது. இப்பதபிரயோகத்தைப்பற்றி ஆக்ஷேபிக்கும் தமிழ்ப் பண்டிதர்கள் ஆங்கிலேய பாஷையையும், இப்போது பல மதஸ்தர்களுடைய வேதங்களை அந்தந்தமத பைபில் என்று ஐரோபிய இந்தியபண்டிதர்கள் பெயரிட்டு பதிப்பித்திருக்கிற கிரந்தங்களையும் பார்வையிட்டால் திருப்தியையடைவார்கள்போலும். இது கிடக்க,

சிலர், பிறப்பில் பிராம்மணனல்லாத நான், இப்படிப்பட்ட வேதாதி உபநிஷத்துக்களை அச்சிடவும், வெளியிடவும் கூடுமோ என்று எண்ணுகிறார்கள். இந்தச் சங்கேதம் ஆதி முதல் நாளது வரையிலனுஷ்டிக்கப்பட்டுவந்தனவோ என்பதைப்பற்றி ஆரியர் வேத உபநிஷதங்களை ஆராய்வேமாகில்.

பிருஹதாரணியம் 2-வது அத்தியாயம் 1-வது பிராம்மணத்தில், "கார்க்கியர் என்ற பிராம்மணன், அஜாதசத்துரு என்ற அரசனை ஆசாரியனாகக்கொண்டு பிரம்ம விதத்தையை அப்பியஸித்ததாகவும்,—சந்தோக்கிய உபநிஷத்து 5-வது அத்தியாயத்தில் சுவேதகேது, ஆருணேயர், ஜைபலி அரசனிடம் பிரம்ம வித்தையை அப்பியஸித்ததாகவும்,—கேந உபநிஷத்து 4-வது அத்தியாயத்தில் ஜானசுருதி என்ற சூத்திரன் ரக்குவியர் என்ற பிராம்மணரிடம் பிரம்ம வித்தையை அப்பியஸித்ததாகவும்;—ஐதரிய பிராம்மணம் 5வது சஞ்சிகையில், கவுஷன் என்ற வேடன் வேதாப்பியாஸம் செய்ததுடன் ரிஷியுமாகி யாகாதி கிருத்தியங்களில் பிராம்மணர்களோடு கலந்து மகிமை பெற்றதாகவும்,—ஜனகமஹாரிஷியிடம் சகர் உபதேசம் பெற்றுக்கொண்டதும், சதபத பிராம்மணம் தர்ச பூரணமாச பிரகரணத்தில் பிராம்மண க்ஷத்திரியர்கள் இன்னின்ன மந்திரங்கள் உச்சரிக்க வேண்டுமென்று விதித்ததுபோலவே, சூத்திரன் "ஆயாவெதி" என்கிற வேதவாக்கியத்தை உச்சரிக்கவேண்டுமென்றும் சொல்லி இருத்தல் பிரதியக்ஷம்.

அன்றியும் சூத்திரன் புராணங்களைப்படிக்கவும் கேட்கவும் அதிகாரமுண்டென்னும் பக்ஷத்தில், "பாரதம், ஆதிபர்வம்" 8-ம் அத்தியாயத்தில், "தேவாவஸ்ரீ" என்ற வாக்கியமும், சகுந்தலோபாக்கியானம் 74-வது அத்தியாயத்தில் காம்தாளம் &c., என்றறி சுருதி வாக்கியங்களையும் படிக்கவும் கேட்கவும் கூடுமே, அப்போது இந்தச் சங்கேதத்துக்கு என்ன வகூறக்கூடும்? ஒரு வேளை இந்தப் புராணங்களைப் படிக்கவும் சூத்திரர்களுக்கு அதிகாரமில்லை என்று சிலர் எண்ணும் பக்ஷத்தில்; அப்போது இந்தப் புராணங்களை எழுதியவர்களில் பலர் சூத்திரர்களாக இருத்தல் பிரதியக்ஷம். சம்வர்த்தை என்னும் கிரந்தத்துக்குக் கர்த்தா சூதர் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம், இவர்களுக்கு மாத்திரம் இந்த சுவாதந்திரியம் எப்படி கிடைத்ததெனில், இவர்கள் மஹான்களாகையால் நிஷேதமில்லை என்பது. அவர்களுடைய மஹத்துவத்துக்கு ஞானமேயல்லவாக்காரணம்.—இந்த ஞானமேயல்லவா கந்தஹர், கண்ணப்பர் முதலான நாயன்மார்களை வாழ்வார், திருமங்கையார் முதலான ஆழ்வார்களையும் மணம் செ இப்போதம் அந்த ஞானத்தை பரதவருஷத்தில் பிரபலப்படுத்தினஞ் நிலுள்ள சூத்திரர்களில் பலர் பெருமையைப் பெருவார்களன்றே?

நமது ஆரியவேதத்தின் அநேக பாகங்களையும், உபநிஷத்துக்களையும், பார்ஸி, பிராஞ்ச, ஜர்மனி, இங்கிலீஷ் முதலான பாஷைக்காரர்கள் படிக்கும்படி ஏனையாட்டார் தம் தம் பாஷைகளில் பதிப்பித்து வெளிவிடச்சே; இந்த இந்துதேசத்திலேயே பிறந்தும், இந்து சமூஹத்திலேயே வளர்ந்தும், இந்த இந்துமத சமயாசாரங்களிலேயே அனுட்டித்தும், இந்த இந்துமத வேஷபாஷாதிகளை ஸ்வரூப சின்னங்களாகக்கொண்டும், இந்த இந்துமதத்தின் பெருமையை அனைவரும் அநுட்டித்து, இந்த இந்துதேசத்தை அலங்கரிக்கவேண்டுமென்ற தேசாபிமான மதாபிமான ஆவல் கொண்ட நான், இதை அச்சிடவும், வெளியிடவும் கூடாதென்று எண்ணுவது விந்தையே. இவ்விதத் தேசாபிமானங்கொண்டவர்கள், என்னால் பதிப்பிக்கப்பட்ட வேதாந்த சூரியோதயம், அல்லது வேதப்பொருள் சாரசங்கிரஹம் என்னும் கிரந்தங்களை வாசித்துப் பார்த்தால் அவர்களுக்குத்தக்க சமாதானம் கிடைக்கும்.

கடைசியாக, இந்தப்புத்தகத்தின் மூலவாக்கியங்கள் புராதனமும் கஷ்டமுமான ஸம்ஸ்கிருதபாஷையாகவும், இவற்றின் பொழிப்புரை விசேஷ உரை தமிழ்ப்பாஷையாகவும், இவற்றின் கருத்துரை இங்கிலீஷ் பாஷையாகவும் இருக்க; இம்மூன்று பாஷைகளுக்கும் புறம்பானவனும், பிறந்தது முதல் நாளதுவரையில் வீட்டிலும் வெளியிலும் விசேஷமாக வழங்கிவரும் தெலுங்கு பாஷைக்காரனுகிய நான் ஒருவனே, இந்நூலை குறைவு குற்றங்களின்றி திருத்தீகரமாக வெளியாக்கத் துணிந்தது மூடவன் கொம்புக்தேனுக்கு ஆசைப்பட்டதுபோலாம்; ஆயினும், அன்சரசொல்லைக்கொண்டு அம்பலமேறினால், அரைச்சொல்லும் மூழுச் சொல்லாகலாமென்று எண்ணி, யானையுலாவுங்காட்டில் பூனை உலாவத் துணிந்ததைப் போல இந்நூலை அச்சிடத்தொடங்கினேன். அந்தோ! இந்நூலை அச்சிட்டு முடிவதற்குள்ளாக, இந்நூலை அச்சிடுத்தரும்படியாக ஏவிய எனது அருணமயான ஏக புத்திரனுகிய அரங்கநாதன் வியாதியால் பீடிக்கப்பட்டு பரமபதம் அடைந்ததனால், ஆதியில் எண்ணியபடி இப்புத்தகத்தைத் திருத்தீகமாக முடிக்கக்கூடவில்லை. ஆகவே, புத்திமான்களான பெரியோர்கள் இந்நூலில் காணும் குறைவுகுற்றங்களை க்ஷமித்தும், இதில் வேண்டியவை இன்னவையென்றும், இதில் இன்னும் சேர்க்கவேண்டியவை இன்னவையென்றும் தெரிந்து, எனக்கும் தெரிவித்தால் இரண்டாம் பதிப்பில் தக்கபடி சரிசெய்து பதிப்பிக்கத்தக்கதாயிருக்குமென்றனன்.

சென்னபட்டணம்,
தியாகராயநகர்.

இப்படிக்கு,
சே. ப. நரசிம்மலுநாயுடு.

பொருள் அடக்க அட்டவணை.

—:o:—

	பக்கம்.
பிரபஞ்சசிருஷ்டி விகாசம்	8
புருஷ ஜக்தம்	41
ஸ்திரீத்துவாவின் இருப்பு	70
ஸ்ரீ சங்கரர் சரித்திரம்	75
அத்துவைத சித்தாந்த விளுவிடை	76
ஸ்ரீ ராமானுஜர் சரித்திரம்	106
விசிஷ்டாத்துவைத சித்தாந்தம்	106
ஸ்ரீ மத்வாசாரியர் சரித்திரம்	125
துவைத சித்தாந்த விளுவிடை	126
பிரம்மலக்ஷணம்	140
ஓங்காரத்தின் பெருமை	143
பிரணவத்தின் பலபெயர்கள்	155
பிரணவத்தையடைபவர்களுக்குண்டாகும் பலன்	241
சந்தியாவந்தனத்தின் பொருள்	247
பிரதோஷபூஜையின் பலன், சோமவாரவிரதம்	258
சூரியர் ஆதி தருமாதிஷ்டானங்கள்	259

உபநிஷத்துக்களின் அட்டவணை.

———:o:———

உபநிஷத்துக்கள்.	பக்கங்கள்.
சாந்தோக்கிய உபநிஷத்து ...	1—29—72—140—147—153—179—199 211—214—228.
பிரஹதாரணிய உபநிஷத்து ...	2—6—18—19—24—25—26—27—40—105 147—167—168—169—176—186—201—202 206—208—209—211—213—217—225—226 227—231—240—245—251—268—270.
தைத்திரிய உபநிஷத்து ...	3—142—146—173—185—187—192—200— 203—204—207—245—259—260—262—263 272.
கைவல்ய உபநிஷத்து ...	3—141—153.
கடோபநிஷத்து	8—30—162—172—177—187—188—191— 202—205—215—218—220—221—222—232 236—241—268—269.
முண்டகோபநிஷத்து ...	11—13—124—147—150—152—175—187— 212—223—224—227—229—233—234—238 257—271.
சுவேதாசுவதர உபநிஷத்து ...	23—32—34—35—49—69—136—146—164 165—168—171—174—179—180—181—194 209—212—235—242—243—244—270.
ஈசோபநிஷத்து	57—170—171—210—257.
பிரசுனோபநிஷத்து	34—147—177—214.
மாண்டூக்கிய உபநிஷத்து ...	146—184.
கடிவல்ய உபநிஷத்து ...	37.
கேனோபநிஷத்து	151—162—163—166—182—183—193—219
வாஜஸ்நேய உபநிஷத்து ...	188.
புருஷசூக்தம்	41—42—43—44—45—46—47.

முன்னுரை.

———:0:———

வேதம் என்பது வடமொழிப்பதம். இப்பதம் வித் என்னும் தாதுவிலிருந்து பிறந்தது. இதற்கு "வேத யதீதி வேத:=அறிவிக்கின்றமையால்=வேதம் என்னும் பெயரைப்பெற்றது. இப்பதத்திற்கு அமரத்தில், வேதம், சுருதி, ஆம்நாயம் என்னும் மூன்றுபதங்களும் ஒரேபொருளைக்குறிப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றுள், வேதம் என்பதற்கு நிஷ்பத்தி கூறுங்கால் "விதந்தியநேனதர்மாதர்மாவிதி வேத:" என்றதினால் இதன்சஹாயத்தினால் தர்மாதர்மங்களை அறிவிக்கிறார்கள் ஆகையால், வேதமாயிற்றென்றும்; "சுரூயதஇதி சுருதி:"=என்றதனால் கேட்கப்படுவதனால் என்றால்=பரமேசுவரரிடமிருந்து நேராககேட்கப்பட்டபடியால் சுருதி ஆயிற்றென்றும்; சுரோத்ரேந்திரியத்தால் சப்தரூபமாக அறியப்படுகிறபடியால் "சுருதி" ஆயிற்றென்றும்; "ஆம்நாயதேபாரம்பர்யேணேத்யாம்நாய: என்றால்,=பரம்பரையாய் அப்பியசிக்கப்படுகின்றமையால்; என்றால், தகப்பன் மகனுக்கும், மகன் பேரனுக்கும் இன்னும் இவ்விதமாகவே சந்ததிதோறும் சந்தைசொல்லி நிலைத்தபடியால்; "ஆம்நாயம்" என்ற பெயரைப்பெற்றதென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த வேதத்தை ஆதியில் பரமேசுவரரே இயற்றியதாக இன்றளவும் சிலர் எண்ணியிருக்கிறார்கள்; எப்படியெனில் ஆதியில் பரமேசுவரரே இந்த வேதத்தை ஆதிமனுஷனாகிய பிரம்மாவுக்கு நேராக உபதேசித்ததாகவும், அந்த பிரம்மாவானவர், அக்காலத்திலிருந்த சில உத்தம ரிஷிகளுக்கும், தபோதிகளுக்கும், முனிவர்களுக்கும் உபதேசித்ததாகவும்; அவர்கள் தம்தம் சீடர்களுக்கு வரிசைக்கிரமமாக போதித்தும் வரச்சே; சங்கன் என்னும் ஓர் அசுரன் அதை(வேதத்தை) திருடிக்கொண்டுபோய் மறைத்து வைத்துவிட்டதாகவும், அதை மறுபடியும் மச்சஸ்வரூப பெயரையுடைய பரமேசுவரர் மீண்டுகொடுத்து பத்திரமாக வைத்து பாதுகாக்கும்படி கட்டளையிட்டதாகவும்; ஆகவே, அன்றுமுதல் இந்த வேதத்திற்கு இரகசியசாதனம் என்னும் மறை என்ற பெயரைப் பெற்றதாகவும்; அதை அத்தியயனம் செய்து ஆதரிக்க அனுக்ரஹாவதாரம் அடைந்தபடி, சுருதி காமகஸ்வரூபமாக்கி சில மஹான்களுடைய ஹ்ருதயம் என்னும் மறை இரகசி

மான பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டும், அவர்களால் அவர் சந்ததிகளில் சாதுக்களான சிலருக்கு மாத்திரம் சந்தை சொல்லி பாதுகாக்கப்பட்டதாகவும் சொல்லுகிறார்கள். இப்படி இந்த வேதத்தை பரமேசுவராலேயே ஆதியில் போதிக்கப் பட்டதென்பவர்களுக்கு சிருஷ்டிகள் என்று பெயர்.

சிலர், வேதத்தில்கண்ட சங்கதிகள் பல காலங்களில் பல மஹான்களால் இயற்றப்பட்டவைகளாகவும், அதற்கு உதாரண மாக விசுவாமித்திரர், ரிக்வேதம் 3-வது கண்டத்திலுள்ள கீதங்களுக்குக் கர்த்தாவாகவும்; பராத்துவாஜர், ரிக்வேதம் 6-வது கண்ட சேர்மான கீதங்களுக்குக் கர்த்தாவாகவும், வசிஷ்டர் ஷை 7-வது கண்டத்தின் கீதங்களுக்குக் கர்த்தாவாகவும், கீதசம்மதன் ஷை 2-வது கண்டத்திலடங்கிய கீதங்களுக்குக் கர்த்தாவாகவும், வாமதேவர் ஷை 4-வது கண்டத்தின் கீதங்களுக்குக் கர்த்தாவாகவும், புதர் அத்திரியன் மற்ற சந்ததிகள் 5-வது கண்டத்தின் கீதங்களுக்குக் கர்த்தாவாகவும் இருக்கிறதன்றியில்; அகஸ்தியர், கஸ்யபர், ஆங்கீரசர், ஜமதக்னி, பராசரர், கௌதமர், பிரஹஸ்பதி, காரதர், கண்ணுவர், மேதாதிதி, மதுசந்தனர், சுனஸேபன், குத்ஸன், சவியன், விரகங்கர், திர்தசயன் மூதலானவர்கள் ஷை வேதத்தின் மறற காண்டங்களின் கீதங்களுக்குக் கர்த்தர்களாக இருப்பதாலும்; இவர்கள் யாவரும் மானவ ஜாதியார்களாகையாலும், இவர்களால் இயற்றப்பட்ட வேத வாக்கியங்களாலேயே பரமேசுவரரின் பெருமை வியக்தமாக விளங்கமாட்டாதாகையாலும்; இவர்களையும், இவர்களிலும் வல்லவர்களையும், மற்றும் அநந்த அற்புதமான சராசரங்களையும் தாங்கிக்கொண்டிருக்கிற இந்த பிரபஞ்சமே பரமேசுவருடைய பெருமையைப் பல மடங்கு பிரபலமாகக் காட்டுவதால், இந்தப் பிரபஞ்சமே வேதமென்றும் சொல்லுகிறார்கள். இப்படி இப்பிரபஞ்சமே வேதமென்று சொல்லுபவர்களுக்குப் பிரபஞ்சவேதிகள் என்று பெயர்.

இப்படி இந்த வேதத்தின் உற்பத்தியைப்பற்றி பலர் பல விதமாக அபிப்பிராயப்பட்டாலும்; இதில், அடங்கியிருக்கும் பொருள்கள் மாத்திரம் இந்தப்பூவுலகில் பிரபலமாகவிருக்கும் எல்லா தேசத்தாருடையவும் எல்லா காலத்தாருடையவும், எல்லா ஜாதியாருடையவும், எல்லா மதஸ்தர்களுடையவும், எல்லா வேதங்களுக்கும் புராதனமும், பெருமை பெற்றதும் இகபர சுகத்துக்கு இன்றியமையாத தர்மானுஷ்டானங்களைப் பற்றியும், தத்துவஞானத்தைப்பற்றியும், சகல

தர்மசாஸ்திரத்தையும், ஸ்மிருதிகளையும், ஆசாரத்தையும் வழியையும் பற்றியும், தெளிவாகத் தெரிவிக்கும் சிறந்த சாதனமென்று சகல கால, சகல தேச புத்திமான்களும் அங்கீகரிக்கிறார்கள்.

வேதத்தின் மூன்று காண்டங்கள்.

இப்படிப்பட்ட இந்த வேதத்தில் கர்ம காண்டம், உபாசனா காண்டம், ஞானகாண்டமென்ற மூன்றுவகுப்புகளிருக்கின்றன.

1. முதல் வகுப்பாகிய கர்ம காண்டத்தில், இகபரசுகத்துக்கேற்ற கர்மானுஷ்டானங்களைச் செய்கிற முறைகளையும், அசுவமேதம் முதலான யாகக்கிரியைகளைச் செய்கிறவிதங்களையும், அவைகளைச்செய்வதனால் கிடைக்கும் பலன்களைப் பற்றியும்.

2. இரண்டாவது வகுப்பாகிய உபாஸனா காண்டத்தில், பரமேசுவரனிடம் பக்தியை வைக்கும் விதங்களையும், அப்படி பக்தி வைப்பவர்களுக்கு உண்டாகும் பலன்களைப் பற்றியும்.

3. மூன்றுவது வகுப்பாகிய ஞான காண்டத்தில், தத்துவஞானத்தினால பிரமஞானத்தையடையும் வழியையும், அதனாலடையக் கூடிய பலனைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றது.

பிராம்மண மந்திரங்கள்.

மேலும் இந்த வேதத்தில் பிராம்மணம், மந்திரம் என்னும் இரண்டு பாகங்களிருக்கின்றன. பிராம்மணம் = என்றால் பிராம்மணர் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள். மந்திரம் என்றால் = ஸ்தோத்திரங்கள்; இவற்றில் வேதோக்த கருமங்களையும், அவைகளை உபயோகப்படுத்தும் விதங்களையும், உதாரணங்களையும், தர்க்கங்களையும், தத்துவ விஷயங்களையும் பற்றி போதிக்கிற சங்கதிகளிருக்கின்றன. அன்றியும் ஒவ்வொரு சங்கிதத்துக்கும் ஒவ்வொரு பிராம்மணமும், அந்த பிராம்மணங்கள் அந்தந்த வேதத்தின் கருத்தை ஸ்தாபிக்கின்றன. எப்படியெனில், ருக்வேத பாகத்தின் பிராம்மணங்கள் ஹோதிரிகளுடைய கடமைகளைப்பற்றியும், யஜுர்வேதத்தின் பிராம்மணங்கள் அத்வர்யுவின் கடமைகளையும், சாமவேதத்தின் பிராம்மணங்கள் யுத்காதிரியாடும் சாமகானத்தையும் பற்றிச் சொல்லியிருக்கிறதன்றியில்; வேதபாகத்தில் புராதனமான ஐத்தரேய பிராம்மணமும் கௌஷிதகி பிராம்மணங்களும்; எஜுர் (கருப்பு) வேதபாகத்

இல்லை. தைத்திரேய பிராமணமும், ஷட்வெம்ஸவேத பாகத்தில் சாதாரபத பிராமணமும், சாமவேத பாகத்தில் இருந்த எட்டு பிராம்மணங்களில் தாண்டிய பிராம்மணமும், அதர்வண வேதபாகத்தில் கோபாத பிராம்மணமும் இருக்கிறது. இந்த பிராம்மண மந்திரங்கள் ஆரியருடைய ஆதி வசன காவியங்களாகவும் தோற்றுகின்றன. இந்த வேதத்தில் இப்படி பிராம்மணமந்திரங்களிருப்பதன்றில் அநேக ஆரணியகங்கள் என்னும் வேறுருவிதபாகங்களும் இருக்கின்றன.

——:++:——

ஆரணியகங்கள்.

ஆருணன்=சூரியன் சூரியமண்டலாவர்த்தியான சுவரஸ் தோத்திரங்கள் மலிந்திருக்கின்றமையால் ஆருண்யம் ஆருண்யகம் எனப்பெயர்பெற்றதெனச் சொல்வாருமுண்டு. மேலும்வேதத்துக்குள்ள பலநாமங்களில் "ஆரண்ட" என்பதும் ஒரு பெயராக வழங்குகிறதாக சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்; ஆயினும்,

ஆரண்யகம்: என்றால் சம்ஸ்கிருதபாஷையில் வனம் என்று பெயர். அதாவது ஆரியர்கள் இல்லறத்தைத்துறந்து, வானப்பிரஸ்தம் சன்னியாசம் பெற்றுக்கொண்டபிறகு, காடுவனங்களுக்குப்போய் ஜகதீசுவரனைப்பாடி பொழுதுபோக்கும் பாட்டுகளாம். இவ்வாரணியகங்களில் பரமேசுவரருடைய பெருமையைப்பற்றியும, பின்னும் வனவாசிகள் அனுஷ்டிக்கவேண்டிய தருமாதி சடங்குகளைப்பற்றியும் சொல்லப்பட்ட பிராமண பத்திகளிருக்கின்றன. இவைகளில் பிரஹதாரணியகம், தைத்திரியாரணியகம், ஐதரேயாரணியகம், கௌசிதாகி ஆரணியகம் என்ற நான்கும் சிறந்தவைகள். இவ்வாரணியகங்களின் ஆழ்ந்த கருத்துகளை உற்றுப்பார்ப்பவர்களுக்கு, இவைகள் கேவலம் மூன்சொன்ன பிராமணங்களின் விரித்துரை என்று ஸ்பஷ்டமாகும். ஆனால், பிராமணங்களுக்கும் ஆரண்யகங்களுக்கும் வித்யாசம் என்னவென்று பரிசீலனைசெய்யில், இவ்வாரணியகங்களில் தத்துவ ஞானத்தைப்பற்றி விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாகத் தத்துவ ஞானத்தைப்போதிக்கப்பட்டவைகளுக்கு உபநிஷத்துக்களென்று பெயர். இந்த உபநிஷத்துபாகங்களைத்தான் பரதகண்டத்தில் பெரும்பான்மையார் பெருமைப்படுத்திக் கொண்டாடுகிறார்கள்.

இவ்வுபநிஷத்துகளின் ஆதாரத்தையே வேதத்தின் முடிவான சாரமென்றதற்கு முழுவுபுருஷனென்னும் வேதாந்திகளும்,

சாங்கியர், வைசேஷிகர், நையாயிகர், யோகிகள் என்றுதி தத்வ சாஸ்திரிகளும், தம்தம் சித்தாந்தங்களுக்கு பிரமாணங்களாகக் கொண்டாடுவதன்றியில்; இந்த ஆரியதேசத்தில் ஆதியிலிருந்த அநேக மதஸ்தர்களும், இக்காலத்திலிருக்கும் சைவம் வைணவம் சாக்தேயம் காணபத்தியாதி அநேக மதஸ்தர்களும், தம்தம் மதங்களுக்கு ஆதார பிரமாணங்களென்று சொல்லிக் கொண்டாடுகிறார்கள். இவ்வாரணியகங்களுக்கும் உபநிஷத்துகளுக்கும் அதிக நெருங்கிய சம்பந்தம் இருப்பதைப்பற்றியே, இவ்வாரணியகங்களையும், உபநிஷத்துகளையும் கலந்து சாதாரபதபிரமாணத்தைச்சார்ந்த பிராஹ்மணாரணியக உபநிஷத்து என்றும், ஐதிரேய பிரமாணத்தைச்சார்ந்ததை ஐதிரேய பிரமாணமெல்லும் சொல்வது ஸ்பஷ்டம்.

இப்படி ஆரணியகம் உபநிஷத்துகளென்னும் பாகங்கள் தவிர வேதத்தில் சூத்திரங்கள் என்னும் பாகங்களுமிருக்கின்றன.

———:o:———

சூத்திரங்கள்.

சூத்திரங்கள் என்றால் சுருக்கமானவைகள். இவைகள் வேதங்களுக்கும் பிற்காலத்து ஸ்மிருதிகளுக்கும் சம்பந்தப்படுத்துகிறவைகளாக இருக்கின்றன. இவைகளில் கல்ப சூத்திரங்கள், கிராஹ்ய சூத்திரங்கள், சமயாசாரிக சூத்திரங்கள் சிறந்தவை.

ஆரியர் வேதத்தில் இப்படி கருமகாண்டம் உபாசனாகாண்டம்? ஞானகாண்டம், பிராம்மணங்கள், மந்திரங்கள், ஆரணியகங்கள், உபநிஷத்துகள், சூத்திரங்கள், யாகயக்ஞியங்கள் முதலானவை ஒருமிக்கக்கலந்து படிப்பவருக்கு கஷ்டசாத்தியமாகவிருந்தமையால்; வாதராயணரிஷியானவர் (அத்தியயனம் செய்வோருக்கு அநுகூலமுண்டாகும்படி இந்த ஆரியர்வேதத்தை) ரிக்கு, யஜுர், சாமம் அதர்வணம் என நாலு வேதங்களாக வகுத்தார். அன்றுமுதல் அந்த மஹரிஷிக்கு வியாசர் அதாவது வி + ஆஸ் = வகுத்தல் = வேதத்தை வகுத்தவர் என்னும் வேதவியாசர் என்று பெயருண்டாகியது; அப்படி அவர் வகுத்த வேதத்தின் நான்குவகுப்புகளின் சாரசங்கிரகத்தை இதனடியில் காட்டுகிறோம்.

இரிக்குவேதம்.

இருக்கு என்பது, ரிக் என்னும் வினைச்சொல்லிலிருந்து உற்பத்தியாயது. இப்பதத்துக்கு துதித்தல், ஸ்தோத்திரம் செய்தல் என்பதாம்

வொருவனாம்—என்றால் பரமாத்மாவை சங்கீத பிரார்த்தனைகளினால் புகழ்ந்து கொண்டாடும் வாக்கியங்களையுடைய பாகமாம்.

இந்த ரிக்வேதபாகம் 10 மண்டலங்களாக வகுக்கப்பட்டும், சுமார் 3000 வருஷங்களுக்கு முன்பே இவன் ஒவ்வொரு வாக்கியம், வார்த்தை, சீர், அசை களை எண்ணிக் கணக்கிட்டதில்; 10622 சங்கீதப்பாட்டுகளும், 153825 பதங்க ளும், 432000 அசைகளும் அடங்கியிருக்கின்றதாக கணக்கிட்டிருக்கின்றார்கள். இந்த பத்துமண்டலங்களில் ஒன்றுமுதல் ஏழுவரையிலுள்ள மண்டலங்களில் பெரும்பான்மையான சங்கீதங்கள் பரப்பிரமமதத்தை அக்னி என்னும் நாமத் தால் பாடப்பட்டிருக்கின்றன. 10-வது மண்டலத்தில (பிரம்மதத்தை) இந்திர நாமத்தால் பாடப்பட்டிருக்கின்றது. மற்ற சங்கீதங்கள் பிரம்மத்தை வை ஸ்வ தேவதைப்பெயரால் பாடப்பட்டிருக்கின்றது 8-வது மண்டலத்தில் 92 சங்கீதங்களும், 9-வது மண்டலத்தில் 114 சங்கீதங்களும், இவைகளில் சில சோமபூஜை—ப்பற்றியும் பாடப்பட்டிருக்கின்றது.

இந்த ரிக் வேதத்தைப்—ற்றி சற்று விவரமாகச் சொல்லவேண்டுமானால், இதை அஷ்டபாகங்கள் அல்லது சந்—ஸ்—ஹிதைகளாக வகுக்கப்பட்டும், இந்த சந் தஸுக்களையும் உட்பிரிவுகளான அதேக அத்தியாயங்களாக வகுக்கப்பட்டும், மற்றொருபிரிவை பத்து மண்டலங்களாகவும், இந்த 10 மண்டலங்களுக்குள் 100க்கு மேல்பட்ட அனுவாகங்களாகவும் வகுக்கப்பட்டிருக்கிறதனறியில்; இவ் வனுவாகங்களில் சுமார் 1000 சூத்திரங்களென்னும் கீதங்களும், மேலேயின்ற உட்பிரிவில் 2000 வருக்கமென்னும் பிரிவுகளும்; ஆக இவ்விரண்டில் 10000 க்கு மேற்பட்ட சங்கீதங்கள் அடங்கியிருக்கின்றன.

மேலும், இதில் ஒவ்வொரு சங்கீதத்தை இயற்றிய ரிஷியின் பெயரும், அதை எந்த தேவதையின் பெயரால் இயற்றப்பட்டதோ அந்த தேவ தையின் பெயரும், எந்த விஷயத்துக்காக இயற்றப்பட்டதோ அந்த விஷயத் தின் விவரத்தையும், எவ்வித கர்மானுஷ்டானங்களால் ஓதப்பட வேண்டுமோ அவற்றையும், இசை விகற்பங்களையும், கீதங்களின் கருத்தையும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

அன்றியும் இந்த மீவகதத்தின முதற்புத்தகம் 15வது அத்தியாயத்தில் சூத்ஸன் என்பவனைப்பற்றியும், கயகபுத்திரன் கிருதன் என்பவனைப் பற்றியும் 2 கீதங்களும், மற்றொரு கீதத்தில் அப்புவின் புத்திரர்களாகிய ஆபியாகன் என்றறிந்து பிதாதனாகள் ஓர் பாலைவனத்தின் வழியாகப் போய் அவர்களில் ஒருவன் தாகத்துக்கு நிணறறியிறங்க மேலிருந்தவன் ஓர் வண்டியின சகிரத்தை அந்நிணறறின் மேல் போட்டு மூட, உள்ளிருந் தவன் பரிதாபத்தோடு படியகீதங்களிருக்கின்றன.

இருபத்து மூன்றாவது அத்தியாயத்தில் அகஸ்தியர், இந்திரன், மருத்துகளைகூட்டி நடந்த சல்லாபனைகளும்; 24-வதில பரமேசுவரனை, அக வினி, ஆதித்தன் முதலான பெயர்களால் அகஸ்தியர் பாடிய 2ம் கீதங் களும், அவர் விஷ்ணுதத்துக்கு அஞ்சி பாடிய கடைசி கீதமும் இருக்கின்றன. இதேமாதிரியாகவே 7-வது புத்தகம் 3-வது அத்தியாயம், 8-வது பிரகரணத் தில் வசிஷ்டரும் விஷ்ணுவின் மீவகதனையை நீகைப் பாடியிருக்கின்றார்.

மூன்றாவது புத்தகம் 5 அத்தியாயங்களில் காதினன புத்திரன் விசுவாமித்திரன் இயற்றிய பிராதத்தனைகளில், கடைசி கீதத்தில் 6 மந்திரங்களும், அவற்றின் ஒன்றில் பரமாத்மாவை ஓம் காரம் காயத்திரியு [illegible]

6-வது புத்தகம் 3 சூதங்களில் பரமேசுவரனை சூரியன் பெயரால் பிரார்த்திக்கப்பட்டும், மழையில்லாத காலத்தில் மேகத்தை நோக்கி பாடியும் தவளைகள் கூவுகிறபடியாகவும், வசிஷ்டர் பாடியபாட்டுகளுமிருக்கின்றன.

7-வது புத்தகம் 8-வது அத்தியாயக்கடைசியில் ஆரியர் ஆதியில் வீடுவாசல்களைக்கட்டும்போது உச்சரிக்கும் மந்திரங்களையும், இல்லறதேவதைகளைப் பற்றிய சூதங்களும், 4-வது அத்தியாயம் 4-வது சூதத்தில் ருத்திரனைநோக்கி பாடும் பாட்டுகளுமிருக்கின்றன.

7வது புத்தகத்தின் கடைசிபாகத்தில் ஆதிகாலத்திலிருந்த ராஜாக்களுடைய பெயர் விவரங்களைப்பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

8வது புத்தகம் 27வது அத்தியாயத்தில், இராஜபட்டாபிஷேகம் செய்யும் விவரங்களைப்பற்றியும், 3-முதல் 38-வையிலுள்ள அத்தியாயங்களில் இந்திரன் தேவர்களை வர்ணிக்கும் விசயங்களையும், 34-வது அத்தியாயத்தில், பயபக்திக்குறிய கர்மங்களைப்பற்றியும், 4-வது அத்தியாயத்தில், புரோஹிதர்களையும் ஆசாரியர்களையும் தெரிந்தெடுக்கும் விஷயங்களைப்பற்றியும், அவர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைப்பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

10-வது புத்தகம் 6-வது அத்தியாயத்தில் சத்துருக்களை ஜயிக்கச்சொல்லி 2 சூதங்களும், 7-வது அத்தியாயத்தில் சக்கிரசூரியர் சல்லாபனையைப் பற்றியும்; எமன், எழுமுனைவைக்கெடுக்க எத்தனித்தபோது நீத்மொழிகளைப் பாடியதைத்தித்த சூதங்களும், 10வது அத்தியாயம் கடைசிபாகத்தில் அம்பரீஷன் குமாரி சிரேஷ்டவாக்காளைப்பற்றியும், முடிவில் சூரியனைப்பற்றி வர்ணிக்கப்பட்டும், 11-வது அத்தியாயத்தின் முதலில் மதுசந்தன் புத்திரன் அகமரசன் உலக சிருஷ்டி விஷயமாகப்பாடிய 2 சூதங்களுமிருக்கின்றன.

இந்த ரிக்வேத பாகத்துக்கு சம்பந்தப்பட்ட மற்றோர் பாகத்துக்கு ஐதரேய பிராம்மணம் என்று பெயர். இந்த பிராம்மணத்தை அஷ்ட பஞ்சிகங்களாக வகுக்கப்பட்டும், அப்படி வகுக்கப்பட்ட பஞ்சிகங்களில், 5 அத்தியாயங்கள் அத்தியயனங்களாகவும், ஏகதேசமான எண்களுடைய பிரகரணங்கள் அல்லது ஸந்தர்ஷனென்னும் 285 பிரிவுகளுள்ளதாகவும் இருக்கின்றன. இந்த வேதத்தின மற்றொரு பாகம் ஐதரேய ஆரண்யகம் 5 பாகங்களாகவும், 18 அத்தியாயங்களுள்ளதாகவும், இரண்டாவதில் 7 அத்தியாயங்களும் இருக்கின்றன. இதிலிருந்தே ஐதரேய உபநிஷத்து உண்டாயிற்று.

இந்த உபநிஷத்தில் உலக சிருஷ்டியைப்பற்றி விசித்திர விநோதமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறதன்றியில், ஆத்ம தத்வ விசாரணையைப் பற்றியும் விஸ்தாரமாக விளக்கப்பட்டிருக்கிறது.

அன்றியும் இந்த வேதத்தின் மற்றொரு முக்கிய சாகையைச்சார்ந்தது சுவுஷ்தீக பிராம்மண உபநிஷத்து. இதில் வேதாந்த தத்துவங்களைப்பற்றி அஜாதசத்துருவுக்கும், பாலாகி என்னும் குருவுக்கும் ஞானோபதேசமாக நடந்த சல்லாபனைகளும். இதன் சங்கிரகத்தை மாத்துவாசாரியர் குருவராயவித்தியாரணிய சுவாமிகள் 20 அத்தியாயங்களில் 12 உபநிஷத்துகளுக்கு செய்யுள் நடையாக விரித்துரைத்திருக்கின்றனர். இதைச்சார்ந்த கடவல்லி [illegible]

தூண்பிரதிஷ்டையின் ஒருபாகமாகவும், அதன் ஆரம்பத்தில் சாம்பேயனி என்னும் இரண்டும், சமவ்தகேதவும், அருணன் புத்திரனுடைய உத்தாலகரோடு செய்த வாசகங்களிருக்கின்றன

கடைசியாக இந்த ரிக்வேதபாகத்தில் பல பொருள்களைப்பற்றி சொல்லி யிருக்கிறும். பரப்பிரம்மத்துக்கு அக்கினி, வாயு, சூரியன் பிர ஜாபதி, இந்திரன், வருணன், மித்திரன், என்றறிய பெயர்க ளாலும், படைத்தழித்தாக்கவல்ல மூலசெழிறகாரணமூர்த்தியெனறும் அவர் ஓம் என்னும் பெயரால் பிரகாசிக்கிறாரென்றும் பிரபலப்படுத்தப்பட்டிருக்கிறது.

யஜுர்வேதம்.

ஸம்ஸ்கிருதபாஷையில் யாஜ் என்னும் பதத்திற்கு யாகம், பலி என்றறிபொருள்களானபடியால், வேதத்தின் இந்தப்பாகத்தில் அதன்பொருளுக் குத்தக்கபடி ஆதி ஆரியர்கள் யாகம், பலி, தானம் முதலான சடங்கு களைச்செய்யும் விவரங்களும், புரோஹிதர்கள் பாடும் பாடல் முதலா னதுகளும், கர்வேத்திய விவரங்களும் அவைகளுக்கு ஆதி முக்கிய ஆதாரங்களு மாக இருக்கின்றன. இதைத்தழுவிவரும புரோஹிதாகளுக்கு அத்வாயுகள் என்ற பெயர்.

இந்த யஜுர்வேதத்தின் முதன்மையான பாகங்களில் மந்திரங்களும், சம்ஹிதத்தில் 40 அத்தியாயங்களில் ஸ்தோத்திரங்களிருக்கிறதனறியில, ரிக்கு வேதத்தில் இருப்பதுபோல 286 அநுவாகங்களும், சுமார 1987 பிரகரணங்க ளும், ஒரே வாக்கியத்தைப் பலதரம் பாடுவதனால் 13 முதல் 117 கண்டிகளும் அடங்கியிருக்கின்றன.

முதலிரண்டு அத்தியாயங்களில் அமாவாசை பௌர்ணமி காலங்களில் செய்யவேண்டிய வேள்விகளைப்பற்றியும்; கடைசி பிரகரணங்களில் பிதர் கர்மங்களைச்செய்யும் விசங்களைப்பற்றியும், 3-வது அத்தியாயத்தில் நித்தியாக் னிஹோத்திரத்தைப்பற்றியும், இரதத பலியைப்பற்றியும் அடுத்த 5 அத்தியா யங்களில் அக்கினிஷ்டோமத்தைப்பற்றியும், சோமபானத்தைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றன.

அடுத்த இரண்டு அத்தியாயங்களில் வாஜபேயம், ராஜசூயம், ராஜபட்டாபிஷேகம் முதலான சடங்குகளைப்பற்றியும், பத்தாவது அத்தியாயத்தின் கடைசி பிரகரணத்தில் சௌத்திராமணியாகத்தைப் பற்றியும், 19முதல் 20வரையிலும், 22முதல் 25 வரையிலும் இராஜாக்கள் சர்வதேச சக்கிரவர்த்திகளாக விரும்பிச் செய்யும் அசுவமேதயாகத்தின் சடங்குகளையும் சங்கதிகளையும். அடுத்த இரண்டு அத்தியாயங்களில் பற்பல வீதவிதயங்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றன.

30-31-வது அத்தியாயங்களில் சௌத்திராமணி, அசுவமேத யாகம், புருஷமேதயாகம், நாராயணபலி செய்யும் சடங்கு களைப்பற்றியும்; அடுத்த 3 அத்தியாயங்களில், சருவமேதயாகத்தைப் பற்றியும்; அதற்கடுத்த அதியாயத்தில் பிதர்மேதம் அல்லது அந்த யேஷ்டி யாகத்தைப்பற்றியும், கடைசி 5 அதியாயங்களில், அதர்வண புரோஹிதன் அல்லது தயசுமேதகர்மாவைப்பற்றியும், தவம், நியமம் முதலா னவைகளைப்பற்றியும். கடைசி அத்தியாயத்தில் தத்துவஞான பிரமஞானங்களைப் பற்றியும் போதிக்கின்றது.

இந்த 5 அத்தியாயங்கள் முறை, ஸ்தோத்திரத் திரட்டில் பரமேஷ்டியின் பிரஜாபதி, பரமேஷ்டி, நாராயணன், பிரஜாபதி, இந்திரன் வருணன், அக்னி என்னும் பெயர்களால் வருணிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்தோத்திரங்களுக்கு வசிஷ்டர், வாமதேவர், விசுவாமித்திர், மதுச்சந்த, மேதாதிதி, முதலானவர்கள் கிருத்தர்த்தர்களென்று ஸ்பஷ்டமாகிறது. மேலும்,

இந்த வேதத்தின் 40-வது அத்தியாயத்திலிருக்கும் ஈசாவாஸ்யம் என்னும் உபநிஷத்தை, அதர்வணன் புத்திரனாகிய ததயக்கன் இயற்றியதாகவும் தோன்றுகிறது. 2-வது பாகத்தில் சதப்திய பிராம்மணமும் இதில் 14 காண்டங்களும், இக்காண்டங்களும் இரண்டு பாதங்களாக வகுக்கப்பட்டும், முதல் பாதத்தில் 10 காண்டங்களும், 2 வதில் 4 காண்டங்களுமிருக்கிறதன்றியில்; புத்தகமுழுதும் பிரபாடகம் என்னும் அத்தியாயங்களாகவும், காண்டிகங்கள் என்னும் சிறிய பிரிவுகளாகவும் இருக்கின்றன. இந்தப்பாகமடங்கிய 14 காண்டங்களில் 68 அத்தியாயங்களும் 100 அத்தியயனங்களுமிருக்கின்றன.

பிராம்மணம் என்னும் பிரதியேக பாகத்தில் 440 பிரிவுகளும், 7624 காண்டிகங்களுமிருக்கின்றன. சமய கிரியைகளுக்கேற்ற ஸ்தோத்திரங்களில் முதலிரண்டு காண்டங்கள் அமாவாசை, பௌர்ணமிகளில் ஓமாக்கினி செய்யும் விதங்களையும் விவரமாக்கப்பட்டிருக்கிறதன்றியில், 3 - 4 காண்டங்களில் சோமரசத்தைத் தயாரிக்கும் விதத்தையும், ஜயாதி ஸ்தோமாதிகளைப் பற்றியும், அடுத்த 5-வது காண்டத்தில் ராஜசூய யாகத்தைப்பற்றியும், அதற்கடுத்த 4 காண்டங்களில் யக்கியஓமாக்கினி பிரதிஷ்டையைப்பற்றியும், 10வது காண்டத்தில் அக்கினி ரகசியத்தையும், அச்சடங்கைச்செய்வதனாலுண்டாகும் பலன்களைப்பற்றியும்; இரண்டாம் பாகத்தைச்சார்ந்த காண்டங்களில் சௌத்திராமணியாகத்தையும், கடைசியிலிருக்கும் 4-வது காண்டத்தில் பிரம்ம ஞானத்தையும், முதல் 18 காண்டத்தில் அசுவமேதத்தையும், 16-வது காண்டத்தில் பிரஜாதாரணியாகத்தைப்பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த யஜுர்வேதத்தில் சொல்லியிருக்கும் அசுவமேத புருஷமேதாதி யாகங்களில், உண்மையாகவே குதிரைகளையும், புருஷர்களையும் பலிகொடுப்பதாக சிலர் எண்ணுகிறார்கள். அதோ! அது தப்பெண்ணம். அசுவமேதயாகத்தில் 609 மிருகங்களை, பசுபகுயாதி ஜந்துக்களை 21 யாகஸ்தம்பங்களில் கட்டியும், வீட்டுக்குறிய சாதுவான மிருகங்களை கற்றூண்களுக்கு மத்தியில் கட்டியும் யாகஸ்தோதாதிரவ்களைச் செய்யபிறகு, அப்பிராணிகளுக்கு எவ்விதவருத்தமும் இல்லாதபடி அவிழ்த்து விடும்படி விதிக்கிருப்பதன்றியில்; புருஷமேதயாகத்தில் பற்பல குலஸ்தரான 185 புருஷரை 11 யாகஸ்தம்பங்களுக்கு கட்டி ஓட்டலங்காரமான நாராயணபலி தேங்காய்ப்பாடி முடிந்தபின் அப்புருஷர்களுக்கு எவ்விதமான வருத்தமும் கொடாமல் அவிழ்த்து விடும்படி விதிக்கிருக்கின்றன. ஆகவே, இந்த யாகங்களெல்லாம் கேவலம் ஓட்டலங்காரமேயொழிய யதார்த்தமான பலிகளல்லவென்று சரித்திரவியாக்கியானங்களால் ஸ்பஷ்டமாகின்றது. அன்றியும், யாகத்தில் உண்மையாகவே பலிகொடுக்கவேண்டுமென்ற விதிகளிருப்பதால், புருஷர்களை யாக வஸ்துக்களாகக்கொண்டு கட்டுகளைச்

செய்வோர், அந்த யாகபுருஷருடைய மாம்சத்தையும் உண்ணவேண்டுமென் றல்லவர் ஏற்படுகிறது. இதையாரேனும் ஒப்புவார்களா? அதேவேதத்தில் மனுஷ்யமாமிசத்தையுண்ணக்கூடாதென்று விதி இருப்பது பிரத்தியக்ஷமாகை யால், இந்த யாகபலிகள் எல்லாம் ஒட்டலங்காரமேயாம்.

அதற்கு திருஷ்டார்த்தமாக, அசுவமேதத்தின் தத்துவார்த்தத்தை விசாரிக் கும்போது அசுவமென்னும் பெயரைப்பெற்ற விராட்டுக்கு, காலப் பொழுது சிரசாகவும், சூரியன் அதற்கு கண்ணாகவும், சந்திரன் அதற்கு காதாகவும், பின்னும் பலவிதமாக வர்ணிக்கப்பட்டு இருத்தல் தைத்திரிய யஜுர்வேதத்தில் சொல்லியிருப்பதன்றியில, சதபதபிராம்மணம் 14-வது கண்டத்தில் பலிகளைக்கண்டித்திருத்தலும் பிரத்தியக்ஷம்.

இதைப்பற்றியே வேதவாக்கியங்களுக்கு பூதார்த்தவாதம் குணார்த்தவாதம் என்ற இரண்டுவித அர்த்தங்களிருக்கின்றன. விசாரிப்பவர்களுக்கு உண்மை ஸ்பஷ்டமாகும்.

சதபத பிராம்மணத்தின் 14-வது காண்டத்தில் பிரஹதாரணீயம், வாஜஸ்நேயி அல்லது சுவேதயஜுர்சுவின் அந்தமிருக்கிறது. அதில் 8 அத்தியாயங்களும், மற்றதில் பிரஹதாரணீய உபநிஷத்து அல்லது வாஜஸ்நேய உபநிஷத்து இருக்கிறது. இதற்கு யஞ்ஞவல்கியர் போதகர்.

இந்த பிரஹதாரண்யத்தில் சிருஷ்டி விஷயமாயும், ஆத்மஞான பிரம்ம ஞான விஷயதைப் பற்றியும் பிரபலமாகச் சொல்லப்பட்டிருக்கிறதன்றியில்; யஞ்ஞவல்கியருக்கும், அவர் மனைவி மயித்திரேயிக்கும் கடந்த தத்துவசர்ச்சையும் இருக்கிறது.

மேலும் வெண்மை யஜுர்வேதத்தை விட கருப்பு யஜுர்வேதின் மந்திரங்கள் விஸ்தாரமாகவும், அதன் சங்கிதம் 7 காண்டங்களாகவும் வகுக்கப்பட்டும்; அவற்றில், 6 முதல் 7 வரையில் அத்தியயன பிரபாடகங்களடங்கிய 650 கத்தியங்கள் இருக்கின்றன. அன்றியும் காண்டங்களாக வகுக்கப்பட்ட வேறொரு அட்ட வணையின் மந்திரத்திரட்டில் அசுவமேதாதிகளைப்பற்றி சொல்லப்பட்டிருக் தாலும், கடைசி பாகத்தில் சிருஷ்டி விமர்சனையைப்பற்றி விஸ்தார மாகச்சொல்லப்பட்டிருக்கின்றன. இதன் இரண்டாவது பாகத்திலிருக்கும் நூ ஆரணிபத்தில் தைத்திரியம், காராயணம், கடம், சுவேதாசுவதராதி உபநிஷத்துக்கள் இருக்கின்றன.

சாமவேதம்.

சாமவேதம் முழுதும் சாமம் என்னும் இன்னிசை கீதங்களுள்ள பாகமாம். இதில் 1549 பாட்டுகளிருந்தாலும், சுமார் 78 பாட்டுகள் ரிக்வேதத்தி லிருந்து இதில் சேர்க்கப்பட்டவைகளாக தோன்றுகின்றன.

இக்கானப்பாட்டுகளில் பரமேசுவரனை அக்கினி இந்திரன் முதலான பெயர்களால் பாடப்பட்டிருக்கின்றன. வேதத்தின் இந்தப்பாகத்தை சற்று விவரமாகச்சொல்லவேண்டுமானால், இதில் பாபநிவாரணமாகிய பலனைக்கொடுக் கும் கீதங்களாகவும், இகபோகங்களை பாடும்படியான இன்னிசை விகற் பங்களுடனும், இவற்றைப்பாடும் விதத்தினால் அப்பலனைப்பெறக்கூடியவை களாகவுமிருக்கின்றன. இச்சாமகானத்தைப் பாடுபவர்களுக்கு யுத்காதிரிகள் என்று பேர்

இந்த வேதத்தின் பிரதான பாகத்திற்கு ஆர்ச்சிகம் என்று பெயர். இந்த ஆர்ச்சிகத்தில் அரையத்தியாயங்களாகவும், தசதி என்னும் பிரகரணங்களாகவும், வகுக்கப்பட்ட 6 பிரபாடகங்களாகவும்; ஒவ்வொரு பிரபாடகத்தின் 10 தன்திகளும், அவற்றில் 10 வாக்கியங்களும், அடங்கியிருக்கின்றன. பிரார்த்தனைநிரட்டில் கிராமகேயகானம் 17 அத்தியாயங்களுமாகப் பாகிக்கப்பட்டிருக்கிறதன்றியில், மற்றொருபாகம் ஆரணியகமென்ற பெயரிடப் பட்டிருக்கிறது. இந்த ஆரணியகத்தையும் 3 பிரதிகளாகவும். 3 அத்தியாயங்களாகவும் வகுக்கப்பட்டும்; அவைகளையும் அரை அத்தியாயங்களாகவும், பத்து பத்து பிரகரணங்களாகவும் வகுக்கப்பட்டு மிருக்கின்றன.

மேலும், மேலேகாட்டிய அதுபந்தங்களில் உயிரெழுத்துகள் அளபெடுப் பதிலும், ஈருயிர் புணர்ச்சிகளை இரண்டு அல்லது பல அசைகளாகுவதிலும், ஓசையை ஒழுங்குபடுத்துவதற்காக இலக்க அடையாளங்களை எற்படுத்துவதற்கும் இலக்கணங்களிருக்கின்றன. இசைவிகற்பங்களுடைய சில தோத்திர பாட்டுகளின் வித்தியாசம் தெரிவதற்காக பாட்டுகளை ஒருதரமன்றி பலதரம் பாடப்படுகின்றன.

இந்த சாமவேதத்தில் ஆரிஷ்ய பிரமாணம் என்கிற பெயரினால் இரண்டு பாகங்களுக்கு அட்டவணைகளும், அதில் வாக்கியங்களுடைய பெயர்கள் அல்லது முதல் மொழிகள், ஆரணியகானத்தைத் தொடர்ந்து வருகிற கிராமகேயம் அல்லது ஆர்ச்சிகத்தில் வருகிறபடி இலக்கமிட்டும், அவைகள் எந்தெந்த தேவதையின் பெயரைச் சொல்லி பாடப்படுகின்றனவோ, அந்த தேவதையின் பெயரும், சந்தர்ப்பத்தையும் குறிக்காமல் அதன கிரந்தகர்த்தாவாகிய ரிஷியின் பெயரைமாத்திரம் குறிக்கப்பட்டும், இவைகளில் சில பாட்டுகள் காதுக்கும் கேட்காத விதமாகவும், கேவலம் ஊகையிலறியக்கூடிய ஊகைக்கானமென்ற ஒருவகுப்பும் இருக்கிறது.

இந்த சாமவேதத்தின் 2-வது பாகத்துக்கு உரித்தான பிராம்மணம் என்னும் பெயரால் பலவித கிரந்தங்களும், இவற்றில் ஒன்று வீரிவாயும், அவற்றிலொன்றான சாரதி விஷம் என்பதில் 24 அத்தியாயங்களும் மற்றொன்றுக்கு அத்பூதம் என்றும், 3-வது பிராம்மணத்துக்கு பஞ்சவிம்சம் என்றும் பெயர்பெற்று, இதில் 24 அத்தியாயங்களிருக்கின்றன. மேலும். இந்த வேதபாகத்தின பிராமணங்களில் தாண்டியம் என்னும் பிராம்மணம் பிரசித்தியானதாய் சாயணசாரியால் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறதன்றியில், பாஞ்சிகம் என்னும் 2ம் கண்டம் அடங்கிய பாகத்துக்கு அக்னிஸ்தோமம் சமயாசாரச் சடங்கு விஷயத்தைச் சார்ந்திருக்கிறது.

கடைசியாக இந்த சாமவேதத்தில் சிலபிராம்மண மந்திரகளிருப்பதன்றியில் விசேஷமும் விஸ்தீரணமுமான சாந்தியோகிய உபநிஷத்து 8-பிரபாடகங்களுடன் இருக்கின்றன. இவைகள் பிராம்மணங்களிலிருந்து சேர்க்கப்பட்டவைகளாகவும், 3முதல் 10 வரையில் இலக்கமிடப்பட்டும், முதல் இரண்டில் சமயாசார சடங்குகள் சேர்க்கப்படாமல் சுமார் 150 பிரகாணங்களுக்குமேலிருக்கின்றன.

இந்த சாமவேதத்தின் தலவாகாரசாகையைச்சார்ந்த தலவாகார உபநிஷத்துமிருக்கிறது. ஸ்ரீ சங்கரர் பாஷ்யபிரகாரம் இது 9வது அத்தியாயத்தைச்சார்ந்ததாகவும், 4 சந்தஸுகளுடையதாகவும். உபாத்தியாயர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் சுடர்த சல்லாபனைகளடங்கியதாயும் இருக்கிறது.

அதர்வணவேதம்.

வேதத்தின் 4வது பாகமாகிய இந்த அதர்வணவேத ஸ்தோத்திரங்களின் மொட்டு 28 காண்டங்களாகவும், 1015 வாக்கியங்களாகவும், சுமார் 100க்கு மேற்பட்ட அநுவாகங்களாகவும், 760க்கு மேல்பட்ட சூக்தங்கள், மிச்சுகள் ஏறக்குறைய 40 பிரபாடகங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறதன்றியில், 19-வது காண்டம் 43-வது சூக்தம் முழுதிலும் இந்த அதர்வணவேத பாஷை நடை முதல னதுகளைக்காட்டியும், அந்த காண்டத்தின் ஆரம்பத்தில் 6வது சூக்தம் வெள்ளையஜுர்வேதின் 31வது அத்தியாயத்திலிருந்து இதற்குமுன் சொன்ன மொழிகளைப்போலிருக்கின்றன.

மிச்சுகளிலும் அங்காங்கு ஒவ்வொரு மொழி பேதப்பதித்தி மாற்றியிருப்பதாகவும், அதே காண்டத்தின் அடுத்த சூக்தத்தில் திருத்திகைமுதல் 28 சூக்தங்களின் விவரத்தையும், ஆங்கிலேசம்மார்க்க ரிஷாதங்களைப்பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிம், 19-வது காண்டம் 4-வது அநுவாகத்தில் மந்திரோச்சாடனத்தைப்பற்றியும், சத்துருசாசத்தின் பொருட்டு அநேக சாபனைகளைப் பற்றியும் சொல்லப்பட்ட அலங்காரங்களிருக்கின்றன. இவைகள் உண்மையில் தேசத்தைவ பீடிதங்களையும் ஆத்மதத்துவ பீடிதங்களையும் பற்றி நீக்கிக் கூறும் விதானங்களாம். அதற்கு திருஷ்டாந்தமாக அதேத காண்டங்களில் பரமேசுவருருக்கு யஜனியமென்னும் கிரியையகளையும் வேதாசார கிரியைகளையும்அநுஷ்டானங்களையும் பற்றிய ஸ்தோத்திர சூக்தங்கள் அநேகமிருக்கின்றன

இந்த அதர்வணவேதத்தின் இரண்டாவது பாகத்துக்கு கோபத பிராம்மணம் சேர்ந்ததாயும், 5 பிரபாடகங்களையுடையதாயும், இதன் முதலத்தியாயத்தில் பிரபஞ்சத்திற்கு ஆதிகாரணம் பிரம்மமென்றும், இந்த அத்தியாயம் 4-வது பிரகரணத்தில் அதர்வணர் உலகத்தை திருஷ்டித்து பிராணிகோடிகளை பாதுகாக்கும்படி பிரஜாபதியாகமாறியதைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறதன்றியில், 5வது அத்தியாயத்தில் முதல்புருஷன் பஞ்சாங்கத்திற்கு சம்பந்தமுண்டாக்குகிற சம்வத்சரதோடு உண்டானவைகளை எண்ணப்பட்டும், 5-வது பிரகரணத்தில் 12 சந்திரமாசங்கள் ஒரு வருஷமென்றும், அதன் உட்பிரிவுகள் 360 நாள்களாகவும், 10800 முகூர்த்தங்களாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

மற்ற பாகங்கள் அடியிற்கண்ட உபநிஷத்துக்களையும் அவற்றின் தாத்பரியங்களையும்பற்றி சொல்லியிருக்கின்றன.

இந்த அதர்வண வேதத்தில் முண்டக உபநிஷத்து இரண்டு பாகங்களாகவும், 6 பிரகரணங்களாகவும் சங்கரரால் பாஷியம் செய்யப்பட்டும், அந்த பாஷியத்துக்கு அந்தஜனியர், கௌதபாதர், அநந்தகிரி முதலானவர்களுடைய விரித்துரையுமிருக்கிறது. வேதத்தின் இந்த பாகத்திலிருக்கும் சுரசிம்மதாபனி என்னும் உபநிஷத்துக்கும் சங்கரர், கௌதபாதர் முதலானவர்கள் பாஷியம் செய்திருக்கின்றனர். இந்த உபநிஷத்துக்குத்திருக்கும் கடவல்லிக்கும் சங்கரர் பாலகிருஷ்ணையர் பாஷியமிருக்கின்றன. இதன் 6 பிரகரணங்களில் சுவேதகேதனுக்கும், யமனுக்கும் நடந்த சல்லாபனை இருக்கிறது மேலும் இந்த அதர்வணத்தில்தான் கேனோபநிஷத்து எனனும் ஒரு பெரிய பாகம் இருக்கிறதன்றியில், நாராயண உபநிஷத்தும் இருக்கிறது இதன் போக்கைப்பார்க்கும்போது தைத்திரிய யஜுர்வேதத்தின் பூரணியத்தைச்சார்ந்து முடிந்திருக்கிறதாகத் தோன்று

இதன்றியில் பிருகுவல்லி, ஆகந்தவல்லி என்னும் ஸாதிரிய வாரணியம் என்கிற பெயரால் கருப்பு யஜுஸின் ஆரணியத்திலிருந்து இதில் சேர்த்ததாகத்தோற்றுகிறது.

ஆரியர் வேதத்தில் இருக்கும் சங்கதிகளின் சார சம்பிரதத்தை இவ்வளவு எடுத்தக்காட்டியதில் இதில் ஆரியருடைய ஆதிகர்மானுஷ்டானங்களின்னவை யென்றும், அக்காலத்தில் அவர்கள் ஸ்லைக்குத்தக்கபடி ஒரே பரப்பிரம்மத்தை அக்னி, வாயு, வருணன், மிதரன் என்றுநி பெயர்களால் உபாஸனை செய்து வந்த, முடிவில்; தத்துவஞானிகளாகி, அந்த ஒரேபிரம்மத்தை அறிந்து அந்த கலியாண குணங்களால் அலங்கரித்த வேறான்ற உபநிஷத்துக்களைக் கொண்டு உஜ்ஜீவித்தார்களென்றும் ஸ்பஷ்டமாகும். இந்த வேறான்ற உபநிஷத் துக்கள் விருத்தியானகாலமுதல்தான் இந்த ஆரியவர்த்தத்தில் அந்த சமயக் கோட்பாடுகளும் சாஸ்திரகோட்பாடுகளு முண்டானதன்றியில், அவ்வுபநிஷத் துக்களே இப்பிரபஞ்ச பரிசுத்த ஆஸ்திகமதத்துக்கு ஆதி அஸ்திவாரங்களாகவும் அவதார புருஷர்களேப்போன்ற ஸ்ரீ சங்கரர், மஹிதரர், வித்தியாரணியர், மத்வ சாரியர், இராங்க ராமானுஜர் முதலான மஹான்களால் பல பாஷியங்கள் செய்யப்பட்டும் இன்றளவும் இக்காட்டிலும் மற்றெக்காட்டிலுமுள்ள தத்துவசாஸ்திரிகளும் சாது சர்ஜனர்களும் கொண்டாடி வருகிறபடியால், இனி உபநிஷத் துக்களின் சாரசம்பிரதத்தைப்பற்றி சற்று விசாரிப்போம்.

உபநிஷத்துகள்.

உப + நி + ஷத் = உபநிஷத்து என்னும் பதம், ஷத் என்னும் தாதுவினால் = உட்காரல் (Sit) என்றும்; நி. என்னும் முன்னிடைச்சொல்லினால் = கீழே (down) என்றும்; உப, என்னும் பதத்தினால் = அருகில் அல்லது கிட்ட (near) என்றும் அதாவது ஒரு உபாத்தியாயருக்கு அருகில் சிடர்கள் சுற்றி கீழே உட்கார்ந்த கேட்கும்படியான விஷயமென்றும், இதற்கு உதாரணமாக நிரிக்ண்டசேஷமென்பதில் சமீபசாதனம் என்னும் பதத்தி னால் (வித்துவானிடத்தில்) அருகில் உட்கார்ந்து பாடம் கேட்டல் என்ற பொருளாகிறது என்று (பாணினி முதலானோர்) அபிப்பிராயப்படுகிறார்கள்.

சிலர், ஷத் என்னும் பதத்துக்கு = கெடுத்தல், நசிக்கச்செய்தல், என்றுநி பொருள்களாகையால், இதன் சஹாயத்தால் காமகுரோதாதிகளே நசிக்கச்செய்வ தால் உபநிஷத்தென்றுயற்றென்றும்; சிலர் ஷத் என்னும் பகுதிக்கு = முன்வரு தல் எதிர்நிற்றல் என்றுநி பொருள்களாகையால், இந்த (உபநிஷத்தின் சாயித் தால்) ஒருவன் பிரம்மஞானத்துக்கு முன்வரவும், எதிர்நிற்கவும் உதவியாயிருக் கிறதென்றும், சிக்ஷேதம் 9-11-6ல் சமஸதித்யுபவதாநா என்றதனால் அவரி டம் சமஸ்கரித்தலில் என்பதாயும், சாந்தோக்கியம் 6-10-1ல் "அதம பிரதர் யுபவீதாநா" என்றதினால் "ஞானத்தின் பொருட்டு நானேயினம் காலே என்னிடம் வா" எனபதையும், கேபிலிய ரெஹஸ்ய சூத்திரம் 2-10-38ல் ஒரு சிட்ட தன் ஆசாரியன் முன், கைகட்டி பயபக்தியுடன் ஆசாரியனுடைய முகத்தையே பார்த்தக்கொண்டிருக்கவேண்டுமென்ற விதிக்கு யுபஸத் என்று சொல் லப்பட்டிருப்பதால், உபநிஷத்த என்பதற்கும் ஆசாரியனருகில் உட்கார்ந்து சற்றுக்கொன்னும் பிரமஞானமென பொருள்செய்திருக்கிறார்கள்.

உபநிஷத்த என்னும் இந்த வடமொழிப்பதத்துக்கு அகராதிகளில் இரக
சியம், அர்த்தரகசியம், ஞானம், பிரார்த்தனை என்றுமிவை
யென்றும்; ஸ்ரீ சங்கரர் முதலானோர் பாஷியக்காரர்கள், இதற்கு பிரமஞானம்,
தத்வஞானம் என்றுமி பொருள்களென்றுஞ்சொல்லியிருக்கிறார்கள். ஆகவே,
உபநிஷத்த என்னும் பதத்துக்கு "இவியப்ரியபூரண ஞானத்தையும்,
அந்த ஞானத்தினால் ஆசாபாசங்களினின்று நிவர்த்தியாகி மோக்ஷதையடையும்
மார்க்கத்தையும் உண்மையாகக்காட்டும் சாதனம் என்பதாம். ஆனபடியே,
மஹாவித்வ சிரோன்மணியாகிய தாராநாததர்க்கலங்காரவாசஸ்
பதியவர்கள் உபநிஷத்து என்னும் பதத்துக்கு எது பரமேசுவரனுக்கு
சமீபத்தில் சேர்த்தகின்றதோ, அதாவது எது ஜீவாத்மாவை பர
மாத்துமாவினிடம் சேர்த்துகின்றதோ அதவே உபநிஷத்தென்றும், உரை
செய்திருக்கின்றனர்.

இவ்வுபநிஷத்துக்களெல்லாம் நான்குவேதப் பிரிவுகளிலிருக்கும் சம்ஹிதை
பிராம்மணம், ஆரணியகம் என்ற பாகங்களிலேச்சார்ந்தவை, இவைகள்
இவ்வளவு என்று சொல்ல சரியான கணக்கு எவருக்கும் இதுவரையில் அகப்
படவில்லை. மஹாவாக்கிய முக்தாவளி என்னும் கிரந்தத்திலும்,
முக்திகஉபநிஷத்திலும் 108 உபநிஷத்துகளென்று சொல்லப்பட்டிருகின்
றன. இந்த 108ம் தக்ஷணதேசத்தில் மஹாபரிசுத்தமான கணகென்றும்.
இந்த கணக்கின்படியே 108 விஷ்ணு ஆலயங்களிருப்பன பிரத்யக்ஷமாகை
யால் இந்த எண்ணே நம்பக்கூடாதென்று பர்னல் சாஸ்திரி அபிப்பிராயப்படு
கிறார். வெபர் சாஸ்திரியார் 235 உபநிஷத்துகளிருகிறதாக கணக்கிட்டிருக்
கிறார். லெர் 170 உபநிஷத்துகளிருக்கிறதாவும், இவைகளில் 52விசேஷமான
வைகளாகவும்; இவற்றில், முதல் 15 அதர்வணவேதத்தைச் சார்ந்தவைகளாகவும்
மற்ற 37 பல சாகைகளிலேச்சார்ந்தவைகளாகவும், அடுத்த 9 உபநிஷத்துக்களில்
3 முதல் 15 வரையிலுள்ளவைகள் விசேஷமானவைகளாகாமையால், எவரும்
வியாக்கியானம் செய்யவில்லை என்றும். 16முதல் 28 வரையிலுள்ள பிலலரை
உபநிஷத்துக்களில் முதல் 13-க்கும் வியாக்கியானமில்லை என்றும் 29-முதல்
34-வரையிலுமுள்ள அடுத்த 6 உபநிஷத்துக்களுக்கு நரசிம்மதாபனி
என்றும், இவைகள் 5 பூர்தாபனி என்றும், இதற்கு கௌதபாதரும்
ஸ்ரீ சங்கரரும் பாஷியம் செய்திருக்கிறதாகவும், அடுத்த 2 உபநிஷத்துக்களே
கடவல்லி என்றும் அவற்றிற்கு ஸ்ரீ சங்கரர், பாலகிருஷ்ணர்
பாஷியம் செய்திருக்கிறதாகவும்; அவைகளில் 6 பிரகரணங்களே வல்லி
என்றும், அவைகளும் உத்தரவல்லி, பூர்வவல்லி என்றும் பெய
ரைப்பெற்று அதில் எமன் நசிகேதன் சம்வாதமடங்கியிருக்கின்
றதென்றும், அடுத்த 3 உபநிஷத்துகளுக்கும் வியாக்கியானம் செய்யப்படவில்லை
யென்றும்; ஆகந்தவல்லி, பிருகுவல்லி, என்ற உபநிஷத்துக்கள்
தைத்திரியவாருணி என்றபெயர்களால விளகப்பட்டகருப்பு யஜுசுவின் ஆரண்
யத்திலிருந்தெடுத்ததாகவும், மேலே சொன்ன 44 - 45 வது உபநிடதங்களே
தொடர்ந்திருக்கிறதாகவும், மற்ற 7 உபநிஷத்துகளுக்கும் வியாக்கியானம்
கிடையாதென்று சொல்லுகிறார்கள்.

ஸ்ரீ நாராயணபட்டர் பாஷியம் செய்திருக்கிறதாக ஸ்ரீராம மாய தர்மசாஸ்
திரமத (Bibliotheca Indian) இந்து வேதாகம நூலில் குறித்திருக்கிற
உபநிஷத்தக்கள் எவையெனில்—

1 சிரோபநிஷத்து, 2 கர்போபநிஷத்து, 3 காதலிக்கு உபநிஷத்து, 4 பிரா மவித்து உபநிஷத்து, 5 அமிர்தவிந்த உபநிஷத்து, 6 நிர்வாணோபநிஷத்து, 7 தேஜோபிந்த உபநிஷத்த, 8 யோகசிகோபநிஷத்த, 9 யோகத்தலை உபநி ஷத்த, 10 சன்யாச உபநிஷத்து, 11 ஆருணிய உபநிஷத்த, பிரமவித்திய உபநி ஷத்து, 13 குண்டிகா உபநிஷத்த, 14 கலிகா உபநிஷத்த, 15 அதர்வசிகை உபநிஷத்து, 16 பிராமோபநிஷத்த, 17 பிராணாக்கினிஹோத்ர உபநிஷத்த, 18 கீலருத்ரோபநிஷத்த, 19 காந்த ருத்ரி உபநிஷத்து, 20 பிண்ட உபநிஷத்து, 21 ஆதிமோபநிஷத்த, 22 இராமபூர்வதாபனி உபநிஷத்த, 23 இராமோத்தர தாபனி உபநிஷத்து, 24 ஹயக்ரீவ உபநிஷத்த, 25 சர்வோபநிஷத்து, 26 ஹம்ஸ உபநிஷத்த, 27 பரமஹம்ஸ உபநிஷத்த, 28 காபாலோபநிஷத்த, 29 மை வலிய உபநிஷத்து, 30 கருட உபநிஷத்த, 31 நரசிம்ம பூர்வதாபனி உபநிஷத்து 32 நரசிம்ம உத்தரதாபனி உபநிஷத்து, 33 ஸத்காரை உபநிஷத்து, 34 கோபால தாபனி உபநிஷத்து என்றிருநிகள் சமயாபிமானமும் சாதாரணமும் கவினமு மானவைகளென்று எழுதியிருக்கின்றனர்.

இதற்கு திருஷ்டாந்தமாக நமது தக்ஷிணதேசத்தில் தக்ஷிணா மூர்த்தி உபநிஷத்த, அன்னபூரணி உபநிஷத்து. அவதூதோப நிஷத்த, பஸ்மஜாபாலோபநிஷத்த, கைவலியோபநிஷத்து, காலாக்கினி ருத் ரோபநிஷத்து, நிராலம்போபநிஷத்து, கணபத்தியுபநிஷத்து, ருத்திரபிரம்ம ஜோபநிஷத்து, பாசுபத பிரார்மோபநிஷத்து, முதலானதுகளே வைஷ்ணவர்கள் சிரேஷ்டமானவைகளென்றெடுத்துக்கொள்ளாதிருப்பதேபோலவே; நாராயணோபநிஷத்த, வராஹோபநிஷத்த, வாசுதேவோபநிஷத்து, வஸிதோபநிஷத்து, ராமதாபனி உபநிஷத்து, நரசிம்மதாபனிஉபநிஷத்து, கருடோபநிஷத்து, ஹயக்ரீவஉபநிஷத் து, திருவஷ்ணோபநிஷத்து கோபாலதாபனி உபநிஷத்து முதலானவைகளே சைவர் களும் சிரேஷ்டமானவைகளென்று கொள்ளாமலிருத்தல்பிரதியக்ஷம். மேலும்,

இந்த நூறியாண்டை ஆக்பர்பாதுஷா ஆண்டுவரும் காலத்தில், அவர் தாக்ஷணிபத்துக்கு உட்பட்டஆரிய பண்டிதர் ஒருவர் அல்லா உபநிஷத்து என் ற பெயரால் ஒரு புது உபநிஷத்தைக்கற்பித்து வேதத்தில் தழைகதசக்தி அரேபியருக்குத் தெரிந்த விஷயம; அதை இதனடியில் காண்பிக்கிறோம்:

அல்லா உபநிஷத்து.

ஓம்! அஸ்மல்லம் இல்லா-மித்ரா வருணை-நிவ்யநிதத்த. இலில்லாவருணை ராஜபுணர்த்தத: ஹபாமிமிதரோ இல்லம் இலலல்லாஹி-இல்லல்லாம் வருணை மித்ரோ தேஜோகாம: ஹோதாரமிதரோ-மஹாரூரிந்தர: அல்லே ஜ்யாஸ்தம் ஸ்ராஸ தம் பரமம் பூரணம். பிரம்மானமல்லாம்-அல்லோரசூர மஹமதாக்கம் - வரண்ய அல்லோ-அல்லம் அதல்லா உகமேகாகாம், அல்லம் உகாம் நிகதாகாம்-அல்லோ யக்ஞேஹஹாதாஹாத்தவாஹா அல்வாரூர்யசந்த்ர ஸர்வ ஹஸ்தர: அல்லோருவி காம் ஸாநிவ்யாநிந்தியஸ் பூர்வம்மயாபரமானஹ அந்தரிக்ஷஹ அல்லோபுருநிவ்ய அந்தரிக்ஷம்விஸ்வரூபம்-நிவ்யாநிதாநி, இலில்லாவருணை ராஜபுணர்த்தத: இல் லாருவாரா, இல்லாருவாரா இல்லில்லாஹி இல்லில்லாஹ இல்லா இல்லில்லா அனந்தில்வரூப அதல்வனேசாகம். ஹரிரும் ஹரிரிம் ஜானனபாஸன் விதான் ஜவதர்ன அதிருஷ்டம் குருகுருபத் அஸுரிலம் ஹாரிணிம் ஹம அல்லோரசு மஹமதாமை வரல்ய அல்லோ அல்லம் இல்லல்லாஹி இல்லல்லாஹ என்றபிற.

அல்லா என்னும் பதத்திற்கு ஸம்ஸ்கிருதத்தில் தாய் என்ற பொருள் அதாவது அல்லாயிதி இத்யால், இவ்ப் அலிபுஷியாயி குருஞதி லாதிலா கா என்ற சப்தத்தில் ஸ்பஷ்டமாகும்.

ஆப்பர்பாதஷாவுக்குப் பிறகு எத்னே புது உபநிஷத்துகளைப் பாடி வேதங்களில் நுழைத்தார்களோ தெரியவில்லை. இப்போது நமது நாட்டில் கொண்டாடிவரும் எல்லா உபநிஷத்துக்களையும் சம்பாதித்து, தக்கபடி பண்டி தர்களைக்கொண்டு சோதிப்போமானில், பெரும்பாகமான இல்லரை உபநிஷத்துக ளெல்லாம் புராதனமான பத்து பெரிய உபநிஷத்துகளிலிருந்து சில வாக்கியங் களையெடுத்து; அவைகளுடன், தம்தம்மதசித்தாந்தத்துக்கு தக்கபடி சில புது வாக்கியங்களைச்சேர்த்து புது உபநிஷத்துக்களாக பெயரிட்டிருத்தல் பிரதியக் ஷமாகும்; இப்படிப்பட்ட புது உபநிஷத்துகள் அசர்வணவேதபாகத்தில் அதிக மிருக்கின்றன. புராதனமான பெரிய உபநிஷத்துகளின் பாஷை நடைகளின் போக்கும், புது உபநிஷத்துகளின் பாஷை நடைகளின்போக்கும் படிப்பாளி களுக்கு பட்டப்பகல்போல ஸ்பஷ்டமாகும்.

ஸ்ரீ வேதமூர்த்திகளான சங்கராசாரியர் முதலான பிரபல பாஷியக்காரர்க ளாலும், நிருக்தர்களாலும் பாஷ்யங்களும் நிருத்தங்களும் வியாக்கியானங்களும் எழுதப்பட்டும்; இராவணரி மஹான்களால் செக்குபரியேற்படுத்தப்பட்டும், ஹிமசேதுபரியந்தமுள்ள சகலவிதஹிந்துமத புத்திமான்களாலும் அங்கீகரிக்கப் பட்ட உபநிஷத்துகள் பத்து, அவைகளே தசோபநிஷத்துக்களென்று எவரா லும் கொண்டாடப்படுகின்றன. அவை எவையெனில்:

1-சாந்தோக்கிய உபநிஷத்து, 2-தலவாகரம் அல்லது கேனோபநிஷத்து, 3-ஐதரேய உபநிஷத்து, 4-கவுஷிதாகி உபநிஷத்து, 5-வாஜஸ்நேயம் அல்லது ஈசா உபநிஷத்து, 6-கடோபநிஷத்து, 7-முண்டக உபநிஷத்து, 8-தைத்திரேயக உபநிஷத்து, 9-பிரஹதாரணியக உபநிஷத்து, 10-சுவேதாசுவதர உபநிஷத்து, பிரஸ்னோபநிஷத்து என்பவைகளாம். ஸ்ரீ வித்தியாரணிய சுவாமிகள் இயற் றிய ஸர்வோபநிஷதார்த்ததநுபூதிபிரசினே என்னும் கிரந்தத்தில் ஈசோப நிஷத்தைவிட்டு அதற்கு பதில மைத்ரேயண உபநிஷத்தைச் சேர்த்தும், இந்த தசோபநிஷத்துக்களே ஆதி உபநிஷத்துக்களென்றும், பட்டியமானவைகளென் றும், சகலசமயத்தாரும் அங்கீகரிக்கத்தக்கவைஎன்றும் சொல்லியிருக்கிறார்.

———:++:———

தசோபநிஷத்துகளின் சாரசங்கிரகம்.

———:o:———

சாந்தோக்கிய உபநிஷத்து.

இது சாமவேதத்தைச்சார்ந்த பிரபாடகங்களென்னும் 8 அத்தியாயங் களுடையதாயும், 150 பிரகரணங்களுக்கு மேலான உப பிரிவுகளுடையதாயும் ஓங்கார பிரதிபாதிதமான பிரம்ம ஞானத்தை பிரபலமாக்குகின்றது. முதலி ரண்டு பிரபாடகங்கள் சமயாசார சடங்குகளைப்பற்றி போதிப்பவைகளாக இருக்கினும் அது ஓங்கார ஸ்வரூபமான பிரமஞானத்தைப்பற்றி போதிப்பதே யாகும்.

6வதில் பிரஜாபதிக்கும் இந்திரனுக்கும் ஆத்மாவைக்குறித்த சல்லாபனையும், 7-வது அதியாயத்தில் சனத்குமாருக்கும் நாரதருக்கும் நடந்த சல்லாபனை

களும் 6-வது அத்தியாயத்தில் சுவேதகேதுவுக்கும், உத்தாலகருக்கும் நடந்த சல்லாபனைகளும், 5-வது அத்தியாயத்தில் ஜீவலன் புத்திரன் பிராவகன் உத்தாலகரை வேதாந்தத்தில் ஜயித்த சல்லாபனையும், 4-வது அத்தியாயத்தில் ஜானன் சுருதி என்பவனைக்குறித்த கதையும், இந்த உபநிஷத்தின் 5-வது அத்தியாயத்தில் உபமனியுவின் புத்திரன் பிராசீனசீலன், ஸத்திய ஜனியன், இந்திரத்யும்ன, ஜனன் உளசிலன் என்பவர்கள் செய்த பிரமலக்ஷணசர்ச்சையில் பிரமமானது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் முதலான பூதியங்களுக்கு மேற்பட்டு எல்லாவற்ற சக்திப்பொருளென்று நிரூபித்த தர்க்கித்த விஷேத சல்லாபனை இருக்கின்றது இந்த சாந்தோகிய உபநிஷத்து வேதாந்த தத்துவஞானம் போதிப்பதிற் சிறந்தது.

ஈசோபநிஷத்து.

இதை ஈசாவாஸ்ய உபநிஷத்து என்று சொல்வதுமுண்டு. இது யஜுர்வேதத்தைச்சார்ந்த ஒரு சிறிய உபநிஷத்தாக இருந்தாலும், இதில் பிரபஞ்சப் பொருள்கள் எல்லாவற்றிலும் சிறந்தது பிரமஞான மென்றும், அதுவே நிரந்தரமானதென்றும், இதற்கு இரண்டாந்தரமானது வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிற கர்மானுஷ்டானங்களென்றும், குரு சிஷ்ய சல்லாபனை பாவனையாக சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த உபநிஷத்தை (Raja Ram Mohan Roy) இராஜாராம மோஹனராயரும் (Sir William Jones) ஸ்ரீ வில்லியம் ஜோன்ஸ் (Baily) பெயிலிமுதலானவர்கள் அங்கிலேய பாஷையில் மொழிபெயர்த்திருக்கினறனர்.

கடோபநிஷத்து.

இந்த கடோபநிஷத்தை சிலர் சாமவேதத்தையும், சிலர் அதர்வணவேதத்தையும், சிலர் எஜுர்வேதத்தையும் சார்ந்ததென்று எண்ணினாலும், இதுவரையில் ஆராய்ந்த பண்டித சிகாமணிகளால் இது யஜுர்வேத தைத்திரிய பிராம்மணத்தைச்சார்ந்ததென்றும், அதற்காதாரமாக இதில் நசிகேதருடைய கதையிருத்தலே பிரத்தியக்ஷமென்றும் ஸ்தாபிச்சிறார்கள்.

இந்த உபநிஷத்தில் கிட்டத்திட்ட 6-வல்லிகள் (கொடிகள்) அல்லது சாகைகளும்; இவைகளிற்சில வசன பாகரங்களாகவும், சில கவிகளாகவும் இருக்கிறதன்றியில்; பாஷையின் வியாகரணம், சந்தசு முதலானதுகளால் இது புராதன உபநிஷத்தென்று ஸ்பஷ்டமாகிறது, இதில் பரமாத்மாவை தாத்தீ என்னும் பெயரால் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இதை இராமமோஹனர் முதலில் இங்கிலீஷ் பாஷையில் மொழி பெயர்த்தாலும்; பாரசீகம், பிராஞ்சு, ஜெர்மனி பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதன்றியில். (Wendischaman) விண்டிஸ்காமன், (Poley) போலி, (Gough) கவுப், (Weber) வெபர், (Muir) முயர், (Colebrook) கோல்புரூக் மோக்ஷமூலர் முதலானவர்களுடைய மொழிபெயர்ப்புகளும் இருக்கின்றன.

பிரசனோபநிஷத்து.

இது அதர்வண வேதத்திலிருக்கும் பிப்பலாட சாகையைச்சார்ந்தது. பிப்பலாடம் என்றால், இதை போதித்த ஓர் உபாத்தியாயருடைய பெயர். இதை மந்திரபாகத்தைச் சார்ந்ததென்று ஸ்ரீ சங்கரர் எண்ணினாலும், முண்டக உபநிஷத்தைச்சார்ந்த மந்திரோபநிஷத்தென்று அநந்தகிரியார் அபிப்பிராயப்பட்டார்; இதற்கு திருஷ்டாந்தமாக மந்திரோபநிஷத்தென்று அநேக உபநிஷத்துக்களுக்கு பொதுவாகச் சொல்லிவருவதும் பிரத்தியக்ஷம்.

பிரஹ்தாரணிய உபநிஷத்து.

இது யஜுர்வேத பாகத்திலிருக்கும் சதபத பிராம்மணத்தைச்சார்ந்த 6 அத்தியாயங்களுள்ளது. பிரம்ம ஞானத்தைப்போதிப்பதற்கு இதவும் ஓர் விசேஷ உபநிஷத்து; இதற்கு ஸ்ரீ சங்கரர் செய்த பாஷியத்தை (Dr. Roer) ரோயர் என்பவர் இங்கிலீஷில் மொழிபெயர்த்திருக்கிறதன்றியில், ஸ்ரீ தலி வேதி நாராயணசுனதி என்பவரும் தலிவேதி கங்கர் என்பவரும் வியாக்கியானம் செய்திருக்கின்றனர்.

முண்டக உபநிஷத்து.

இது அதர்வணவேதத்தைச்சார்ந்த மந்திர உபநிஷத்து. இதில் யாக யக்கியங்களாலும், பூஜைபுனஸ்கார கர்மங்களாலும் பிரமத்தை அடையக்கூடாதென்றும்; ஆனால், எவர் உலக ஆசாபாசங்களை விட்டொழித்து சுத்த சன்னியாசிகளாகின்றனரோ அப்படிப்பட்டவர்களால் மாத்திரம் அடையக்கூடுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது; இதை (Dara Shoka) தாராஸாகோ, என்பவர் பார்ஸீக பாஷையில் மொழிபெயர்த்தார். பிறகு (Roer) ரோயர் பண்டிதர் ஐரோப்பா பாஷையில் மொழிபெயர்த்தார்; பெயர்த்தமென்ன? இந்த உபநிஷத்துக்கு இந்த பெயர் வந்தகாரணம் இன்னதென்று பூரணமாகக்கண்டுபிடித்தார்களில்லை. சில சிறந்த பண்டிதர்கள் இதற்கு ஒருவித பொருளுரைத்திருக்கின்றனர். அதாவது முண்டகமென்றால்=சுத்தி செய்யல் என்றும்; ஆகவே, மனம் புத்தி சித்தாதிகளை சுத்தி செய்விக்கும் உபநிஷத்து என்றும், இந்த உபநிஷத்தின் ஆதாரத்தைக்கொண்டே, புத்தமதகுருமார்கள் சர்வாங்கமுண்டனமாக க்ஷவரம் செய்துகொள்ளுகிறார்களாம். அதாவது ஸர்வாங்கம் மாசுநீக்கி சுத்தி செய்துகொள்ளுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.

தைத்திரிய உபநிஷத்து.

இது யஜுர்வேதபாகத்தின் தைத்திரேய ஆரணியத்திலிருக்கிறது. இதன் 10-பிரபாடகங்களில் முக்கியமான ஆரணியங்கள் ஆறு; மற்ற 7-8-9-பிரபாடகங்கள் கூடியதற்கு தைத்திரிய உபநிஷதமென்றும்; 10-வது பிரபாடகத்தை மஹா நாராயண உபநிஷதமென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இதற்கு பாஷியம்செய்த ஸ்ரீமத் சங்கராசாரியர் தமது கிரந்தத்தில் சீக்ஷாவல்லி, பிரம்மாநந்தவல்லி என்று பெயரிட்டாலும், மூன்றுவதாகிய பிருகுவல்லியின்பெயரைப்பற்றி சொல்லாமல் பாஷியமாத்திரம் செய்திருக்கிறார், சயானர் இந்த தைத்திரேய ஆரணியத்துக்கு பாஷியம்செய்தபோது இதன் 7-வது அத்தியாயம் சிக்ஷாத்தியாயம் என்றும் 12-அனுவாகங்களை சம்ஹிதஉபநிஷத்தென்றும் விவரப்படுத்தியிருக்கிறதன்றியில்; 8-9 பிரபாடகங்களுக்கு வாருணி உபநிஷத்தென்று சொல்லினர். இவர் பாஷியத்துக்கு சிக்ஷாபாஷியமென்றும் பெயர். இதன் ஆனந்தவல்லி பிருகுவல்லிகளை சில சமயங்களில் அதர்வண உபநிஷத்துகளோடு சேர்த்து சொல்வாருமுண்டு; இதன் ஒவ்வோர் வல்லியின் முடிவில் அனுவாக அட்டவணையும் அப்படிப்பட்ட அனுவாகங்கள் பனிரெண்டுமிருக்கின்றன.

சுவேதாசுவதர உபநிஷத்து.

இது கருப்பு யஜுர்வேதம் தைத்திரேயபாகத்தைச்சார்ந்ததும், சில சமயங்களில் சுவேதாசுவதர நாம மந்திரோபநிஷத்தென்று சொல்வதுமுண்டு. இதன் முதல் அத்தியாயத்தின் அந்தத்தில் சுவேதாசுவதர் சிறந்த வனவாசிகளுக்கு

கற்பிக்கும்போது இது மஹா இரகசியத்தவமாக கொண்டாடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சுவேதாசுவதரம் என்றால் வெள்ளாட்டுமேல் கழுதைக்கும் பெயர். இது அக்காலத்தில் ஒருவருடையபெயர். அதற்கு திருஷ்டாந்தமாக, அர்ஜுனனுக்கு, சுவேதாஸ்வா = வெள்ளாட்டுதிரையென்று பெயரிருப்பதன்றியில் சில வேதரிஷிகளுக்கு வியாவாஸ்வா = கருங்குதிரை என்ற பெயருமிருந்தது.

இந்த உபநிஷத்தின் பெயரெப்படியிருக்கினும் வித்தியாரணியருடைய ஸர்வோபநிஷத்து அர்த்தானுபூதி பிரகாவிகை எல்லும் கிரந்தத்தில் கண்ட 12-உபநிஷத்துகளில் இதவும் ஒன்றாகவும், ஸ்ரீ சங்கரர் இதை ஓர் விசேஷ உபநிஷத்தாகக்கொண்டு பாஷியம் செய்திருக்கின்றனர். இது புராதனமும் கஷ்டமானதும் பரமாத்துமாவை அக்கினி, ஆதித்தன், வாயு, ஹர, சிவ, பகவத் என்றுதி பெயர்களால் பாடப்பட்டு பிரகாசிக்கின்றது. இதை கவீன உபநிஷத்தென்று எண்ணுவாருமுண்டு.

இதிலிருந்தே சாங்கிய சாஸ்திரமுண்டானதாக சிலரும்; வேதாந்த சாஸ்திரமுண்டானதாக சிலரும் அபிப்பிராயப்பட்டாலும், இதில் பரமாத்துமாவைப் புருஷாகாரப்படுத்தியும், சுவரூப அத்துவைதத்தைக் கண்டித்தும், துவைதசித்தாந்தத்தை ஸ்தாபிக்கிறது. இதற்கு ஸ்ரீ சங்கரர் செய்த பாஷியத்தை (Dr. Roer) சாஸ்திரி முதலில் ஐரோபர பாஷையில் மொழிபெயர்த்தார். இந்த உபநிஷத்தின் சரித்திரத்தை விவரமாக அறியவிரும்புவோர் பரமாம் ஸபரிவர்க்கநிரியகந்தாத்மருடைய சிடர் சங்கராகந்தர் செய்த பாஷியத்தைப்பார்க்கவும்.

தலவாகரம் அல்லது கேனோபநிஷத்து.

இது சாமவேதத்திலிருக்கும் தலவாகர பிராம்மணத்தைச்சார்ந்தது. இதை கேனோபநிஷத்து என்று சொல்வதுமுண்டு. கேனி ஸ்தம் = என்றால் பிரம்மத்தைக்கும் பெயராகையாலும், இந்த உபநிஷத்தில் பிரமஞானத்தைப்பற்றி விசேஷமாகச் சொல்லியிருப்பதாலும், இதை பிராமோபநிஷத்தென்றும் சிலர் சொல்வதுமுண்டு. இதற்கு பாஷியம்செய்த ஸ்ரீ சங்கரர் தலவாகர பிராம்மணத்தின் ஒன்பதாவது அத்தியாயமாகவும், பிரம்மஞானத்தைப்பற்றி விசேஷமாகச்சொல்வதாகவும், இதற்குமுந்தி இருக்கும் மற்ற எட்டு அத்தியாயங்களில் யாகயக்ஞ கருமானுஷ்டானங்களைப்பற்றி விவரமாகச்சொல்லி பிறகு வம்ஸ விருக்ஷத்தையும். காயத்திரி சமனத்தைப் பற்றி சொல்லிஇருக்கிறதாகவும் சொல்லி இருந்தாலும் 1878-ஹு தஞ்சையில், (Dr Burnell) பர்னல் சாஸ்திரியார் தகுந்த வேத வித்துவான்களைக்கொண்டு புராதன கிரந்தங்களைக் கொண்டு பரிசோதிக்கச்சே, இது தலவாகர பிராம்மணத்தைச்சார்ந்த தென்றும், இதன் ஒன்று குறைய கடைசிபாகத்தில் 145 காண்டங்களில் காயத்திரி ஸமனத்தைப் பற்றியும், 134-வது காண்டம் வம்ஸாவளியைப்பற்றி சொல்லியிருப்பதாகவும், இந்த கேனோபநிஷத்து 135முதல் 145வரையில் அதாவது 10-வது அனுவாகம் வரையிலிருப்பதாகவும், இதன் 139-வது அத்தியாயம் 'அலம்வா இதம் அக்ர அஸித்' என்று ஆரம்பிக்கிறதாகவும் தெரியவந்ததன்றியில், இந்த உபநிஷத்தில் தாண்டியர், ஸத்தியாயனி என்ற உபாத்தியாயர்களுடைய போதனாருபமாகவிருக்கிறதென்றும்; ஆகவே, இந்த பிராம்மணத்தின் பெரும்பாகம் அக்னிஹோத்ரம், அக்னிஸ்தோமாதிகளைப்பற்றியும், கடைசி 4 அத்தியாயங்களின்

145 வாக்கியங்களில் பிரம்மஞானத்தைப்பற்றி சொல்லியிருப்பதாகவும், ஸ்ரீ சங்கரர் சொல்லி இருப்பதைப்போல இது 9-வது அத்தியாயத்தைச்சார்ந்த 4-வது அத்தியாயத்தைச்சார்ந்த 10-வது அனுவாகமென்றும் தெரிவித்திருக்கிறார். இந்த உபநிஷத்தைப்பற்றி வித்துவான்களின் அபிப்பிராயங்கள் எப்படி இருந்தபோதிலும், இது ஒரு விசேஷ உபநிஷத்தானபடியால் முதலில் இராஜாராமமோஹனர் பங்காள, ஹிந்தி, இங்கிலீஷ் பாஷைகளிலும் (Dara Shukoh) தாராசுகோ என்பவர் பார்சி பாஷையிலும், (Auquetil Defferronn) டப்பிரின் லத்தின் பாஷையிலும், (Wendischaman) ஜெர்மனி பாஷையிலும், (Web) வெப், (Colebrook) கோல்புரூக், (Poley) போலி முதலானவர்கள் மற்ற ஐரோபா பாஷைகளிலும் மொழிபெயர்த்திருக்கின்றனர்.

ஐதரேய உபநிஷத்து.

இது ரிக்வேதத்திலிருக்கும் ஐதரேய ஆரணியகத்தைச் சார்ந்தது. ஐதரேய பிராம்மணத்தில் அநேக சில்லரை விஷயங்களுண்டு. அவற்றில் பிரம்மஞானத்தைப்போதிக்கும் சில பிராம்மணங்களை, மஹிதாசர் என்னும் ரிஷியானவர் தம் சீடர்களுக்கு போதித்த பாகத்துக்கு ஐதரேய உபநிஷத்து என்று சிலர் எண்ணுகிறார்கள். இந்த ஐதரேய ஆரணியகத்தின் சில பாகங்களில் சரமாணுஷ்டானங்களைப்பற்றி போதித்தாலும் கூட ஆரணியகத்தின் இரண்டாவது பாகத்தைச்சார்ந்த 4—5—6 அத்தியாயங்களிலேயிருப்பதாகத்தோற்றுகிறது. நாராயணேந்திரர், அநந்தஜ்ஞானர், அநந்த தீர்த்தர் முதலானவர்கள் பாஷ்பம்செய்திருக்கின்றனர். இந்த ஐதரேய உபநிஷத்தை பார்சீபாஷையில் மொழிபெயர்த்திருக்கிறதன்றியில், ராஜேந்திரலால் மித்திரர், ஸ்ரீ சங்கர பாஷ்யத்தின்மேல் சயாயனர் செய்த பாஷ்யத்தை இங்கிலீஷில் மொழிபெயர்த்திருக்கிறார்.

கவுசிதாகி பிராம்மண உபநிஷத்து.

இந்த உபநிஷத்து ஐதரேய உபநிஷத்தைப்போல ரிக்வேத சாகைக்குச் சார்ந்தது. இது கவுஷிதாகினி பிராம்மணத்தைச்சார்ந்த 30 அத்தியாயங்களுடையது. இதன் நான்கு அத்தியாயங்களும் அவற்றையடுத்த ஐந்து அத்தியாயங்களைப்போல ஐதரேய ஆரணியகத்தைச்சார்ந்தவைகளைப்போல தோன்றுகின்றன. இதற்கு சங்கராசாரியர் செய்த பாஷ்யத்தின்மேல் சங்கரானந்தர் தீபிகை எழுதியிருக்கின்றனர். வித்தியாரணியரும் அநந்தாத்ம முனிகளும் பாஷ்யம் செய்திருக்கின்றனர். இதை விவரமாக அறியவிரும்புவோர் (Cowell) கவல் சாஸ்திரியின் மொழிபெயர்ப்பைப் பார்க்கவும்.

உபநிஷத்துகளின் பாஷ்யங்களும் அவைகள் வெளியான விதமும்.

இந்து வேத வாக்கியங்களும் முக்கியமாக உபநிஷத்துக்களும் புராதனமானவைகளாக இருப்பதோடு, அவற்றின்பொருளை கற்றோரன்றி மற்றோர் கண்டறியல் கஷ்ட சாத்தியம்; மேலும் பெரும்பான்மையான வாக்கியங்களுக்கு யூதார்த்த வாதம்=அதாவது நடந்ததை நடந்த விதமாகவும் சரித்திரமாகவும் சொல்லுதல் என்னும் அருத்தமும் குணார்த்த வாதம்=தத்துவ விஷயமாகவும், மஹிமாவிஷயமாகவும் அலங்காரமாகவும் சொல்லுதல் என்னும் இரண்டு விதமான அர்த்தங்களும் இருப்பதன்றியில், ஒவ்வொரு வாக்கியத்துக்கும் 'கர்மார்த்தம்' 'ஞானார்த்தம்' என்ற இரண்டுவித அர்த்தங்களுமுண்டு.

இவ்வேதவாக்கியங்களுக்கு தொன்றுதொட்டே மஹாவித்தகரெனமணிகள் பலர் பற்பலவித பாஷியங்களைச் செய்திருக்கினும், ஸ்ரீ வேசமூர்த்தி சங்கராசாரியருக்குமுன்பு பாஷியம் செய்திருக்கிறவர்களுடைய பெயர் முதலான விவரங்களே நிட்டமாகக் காட்டும் சரித்திரமகப்படவில்லை. ஆகவே, அப்பாஷியங்களை இக்காலத்தில் விசேஷமாகக்கொண்டாடுவாருமில்லை

1198-ஆவது வருஷம் தொற்றாண்டுக்குமுன் ஓர் அவதார புருஷராக ஜனித்த ஸ்ரீ சங்கராசாரியர் வேதவாக்கியங்களுக்கு பாஷியம் செய்த பிறகே, ஸ்ரீ வித்தியாரணியசுவாமிகள், மண்டனர், சயாயனர், இரங்கராமானுஜீயர், ஆனந்த தீர்த்தர், ஆனந்தகிரியார், அனந்தானந்தர் முதலானவர்கள் பாஷியங்களைச்செய்தனர். இப்படிச்செய்த பாஷியங்கள் அந்தந்த மதஸ்தர்களில் உயர்குலத்தாராகிய சிலருக்கு மாத்திரம் தெரிந்து அனுஷ்டித்து அத்தரங்கமாக வைத்திருந்தனர். பிறகு,

இந்த இந்துதேசம் மஹம்மதியர் வசமாகியதில், இடைக்கிடை இந்துக்களுக்கும் மகம்மதியருக்கும் மத விஷயமாக மனஸ்தாபங்கள் உண்டாகிவரச்சே, மஹமதிய சக்கிரவர்த்திகளில் சமரஸவேத ஞானியாக இருந்த ஆக்பர்பாதுஷா சக்கிரவர்த்தியானவர் தமது ராஜாங்கத்துக்குட்பட்ட இந்து மஹம்மது மதஸ்தர்களுக்குள் சமயாதீத சஹோதரவாஞ்சை உண்டாக்கி சுகமாக வாழச்செய்தால், தம துராஜ்ஜிய பாரத்துக்கு சுகமும் க்ஷேமமுமுண்டாகுமெனக்கருதியும்; அக்காலத்தில் தமது ஸமஸ்தானத்திலிருந்த ஆரியபண்டிதர்களைத்தருவித்தும், சில வேதவாக்கியங்களையும், பகவத்கீதாதி சில கிரந்தங்களையும் பார்சி முதலான பாஷைகளில் மொழிபெயர்ப்பித்து பரவச்செய்துக்கொண்டிருக்கச்சே, அவர் பரமபதமடைந்தனர்.

பிறகு அவரது பேரரும், ஸஹிஜஹான் சக்கிரவர்த்தியின் ஜ்ஞேஷ்ட குமாரருமாகிய மஹமது தாராசுகேகுல் தான் என்பவர் தமது பாட்டனார் ஆக்பர்பாதுஷாவைப் போலவே ஸமரஸசமயஞானியாக இருந்தமையாலும், தாம் ஒருகால் காஷ்மீர தேசத்துக்குப் போயிருந்தபோது அவ்விடத்திய ஆரியபிராம்மணர்களை அருணோதயகாலத்தில் வேத உபநிஷத்துக்களைப்படித்துத்தமனே உபாசிப்பதைக்கண்டாகந்தித்து; இப்படிப்பட்ட வேதாகருத்துக்களை பார்சிபாஷையில் மொழிபெயர்த்து தம் இந்து மஹம்மது குடிகளுக்கு கரபித்தால், தமது ராஜியத்தில மதக்கலகமின்றி சுகமாக வாழ்வார்களென்றெண்ணி தமது ராஜதானியாகிய டில்லி பட்டணத்துக்கு வந்து கி. பி. 1640-ஆவது காசிபட்டணத்திலிருந்த அநேக ஆரிய பண்டிதர்களை தருவித்தும், மஹாசபைகூட்டியும் அவர்களுதவியால் சுமார் 50-உபநிஷத்துக்களை பார்சிபாஷையில் மொழிபெயர்ப்பிக்க ஆரம்பித்து 1657-ஆவது முடிப்பித்தார்.

இந்த சங்கதியையறிந்த இவர் சமையனரும், இந்துமதத்துவேஷியுமாகிய அவுரங்கசீப்பானவர், இந்த வேத உபநிஷத்துக்கள் வெளியானால், மஹம்மது மதத்தின் மகிமை இந்தியாவில் மேலிட்டோங்காதெனக்கண்டு, அநியாயமாக மஹாசமரஸஞானியாகிய மஹமத்தாராசுகேசுல்தானவர்களை கொலை செய்வித்தும் அந்த அவுரங்கசீபே இந்துதேச சக்கிரவர்த்தியாகியும், இந்து மதத்தைக் கண்டித்திறத்தார்.

அக்காலத்தில் இந்த இந்துதேசத்தில் பார்வி பாஷையே இராஜகீய பாஷையாகி இமஸ்தானபரியந்தம் பரவியிருந்தமையாலும், பார்சிபாஷையில் மொழிபெயர்த்த உபநிஷத்துக்கள் இந்நாட்டில் பலபாகங்களில் ப்ரவேசமை

வானதன்றியில், அக்காலத்தில் ஐரோபாகண்டத்திலிருந்து இக்நாட்டுக்கு வர்த்தக விஷயமாகவும், வைதீகவிஷயமாகவும் வந்துப்போய்க்கொண்டிருந்த கிரேக்கர், உரோமர், போர்த்துகேயர், பிரான்சியர் முதலானவர்களுக்கும் வேத உபநிஷத்துகளின் பார்சிக மொழிபெயர்ப்புகள் கொஞ்சம் கஞ்சம் அகப்படவே, அவர்கள் அவைகளை ஐரோபா கண்டத்துக்குக்கொண்டுபோய், லத்தின், கிரேக், பிரான்சு, ஜெர்மனி, இங்கிலீஷ் முதலான பாஷைகளில் மொழிபெயர்த்து விநோதசாலைகளில் விநோதகாக்ஷிகளாக வைத்தார்கள்.

——:++:——

இந்த வேத உபநிஷத்துக்களை ஐரோபா பாஷைகளில் மொழிபெயர்த்து பாதுகாத்தவர்கள்.

இப்படி நமது ஆரியவேத உபநிஷத்துக்களை ஐரோபாபாஷைகளில் மொழிபெயர்த்த பாதுகாத்த பேருபகாரிகள் யாவர்களெனில், கி. பி. 1801-1802 ஆம் அண்டில் டிப்ரோன (Auquetil Dupperron Onprnellhat) என்பவர் சில உபநிஷத்துகளை லத்தின் பாஷையிலும் 1827முதல் 1834-ஆவதரையில் விண்டிஸ்காமன் (K· J. H. Windischamann) என்பவர் சில உபநிஷத்துக்களை ஜர்மனி பாஷையிலும், 1838-ஆம் விண்டிஸ்காமன் (F. W. Windischamann) என்பவர் ஸ்ரீ சங்கராசார்யர் செய்த வேதாந்த பாஷ்யத்துக்கு ஜெர்மனி பாஷையிலும் மொழிபெயர்த்ததன்றியில், கர்னல் போலியா (Col Polia) ஆரிய வேதம் முழுதும் கையெழுத்து பிரதியாக ஜயபூர் ஸமஸ்தானத்தில் அகப்பட்டதை லந்தன் கண்காக்ஷி சாலையில் சேர்த்தார். ஸ்ரீராபர்ட்டு சேம்பர்ஸ் (Sir. R. Chambers) என்பவர் ஆரியவேதத்தின் அதிகபாகம் கல்கத்தாபட்டணத்தில் சம்பாதித்து லந்தனுக்கு அனுப்பினார். ஜெனரல் மார்ட்டின் (Gl. Martin) என்பவர் வேதங்களின் அதிக பாகதையை சேகரித்து லந்தனுக்கு அனுப்பினதன்றியில், ஸ்ரீ வில்லியம் ஜோன்ஸ் (Sir William Jones) என்பவர் வேதவேதாந்த உபநிஷத்துகளின் சில பாகங்களை இங்கிலீஷில் மொழிபெயர்த்தார். ஸ்ரீ ரோயர்பண்டிதர் (E. Roer) 1853-ஆம் வைதிரியம், ஐதிரியம், சுவேதாசுவதரம், கேநை, ஈசா, கடம், பிரசன்னம், முண்டகம், மாண்டேக்கியாதி உபநிஷத்துக்களை (Bibliothica Indian) இந்துவேதநூல் என்னும் பெயரால் இங்கிலீஷில் மொழிபெயர்த்து பதிப்பித்தார். ஸ்ரீ கவுல் (E. B. Cowell) பண்டிதர் 1861-ஆம் கவுவிதாகி பிராம்மண உபநிஷத்தை இங்கிலீஷில் மொழிபெயர்த்து பதிப்பித்ததன்றியில், 1870-ஆம் தைத்திரேய உபநிஷத்தை இங்கிலீஷில் திருப்பி பதிப்பித்தார்; வெபர் பண்டிதர் (A. Webere) வஜிரசூசி, அஸ்வகோஷி, இராமதாபனி முதலான உபநிஷத்துக்களை 1860-ஆம் ஜர்மனி பாஷையில் மொழிபெயர்த்து பதிப்பித்தார். கிபூ (Ab Gough) பண்டிதர் உபநிஷத்து தத்துவமென்னும் பெயரால் கல்கத்தா ரிவ்யூவில் பதிப்பித்திருக்கிறார்.

1876-ஆம் ரெகுநட்டர் (P. Regunutter) என்பவர் சில உபநிஷத்துக்களை பிராஞ்ச பாஷையில் மொழிபெயர்த்து பாரீஸ் பட்டணத்தில் பதிப்பித்தார். போலி என்பவர் (Poley) என்பவரும் சில உபநிஷத்துக்களை பிராஞ்ச பாஷையில் மொழிபெயர்த்திருக்கிறார்.

ரியண்டல் டிரான்ஸலேஷன் கம்பெனியார் ரிக்வேதத்தை (மேஸ்டர் ஸ்டிவின்ஸன் என்பவரால்) இங்கிலீஷில் மொழிபெயர்த்து அருத்தத்துடன் அச்சிட்டனர். புஞகாலேஜ் மார்ட்டின் ஹாக் என்பவர் ஐதரேய பிராம்மணத்தை அங்கிலேய பாஷையில் மொழிபெயர்த்து பதிப்பித்தார். மேஸ்டர் வார்ட்ஸ என்பவர் தான்குவேத சங்கிரஹத்தை இங்கிலீஷில் மொழிபெயர்த்து பதிப்பித்தனர். கோல்புரூக் என்பவர் (H. T. Colebrook) என்பவர் 1873-ஹு வேதங்களின்சில்லரை விஷயங்களை 3 புத்தகங்களாக இங்கிலீஷில் பதிப்பித்தனர். 1870-ஹு மோக்ஷமூலர் (F Max Muller) ரிக்வேதத்தையும் தசோபநிஷத்துக்களையும் இங்கிலீஷில் மொழிபெயர்த்து பதிப்பித்தார். இதுநிற்க,

இந்த இந்தியாவில் இங்கிலீஷ் ராஜ்யம் ஸ்தாபிக்கவே, அவர்களுடையு மதாநுஷ்டானிகளாகிய கிறிஸ்து பாதிரிமார்கள் இந்நாட்டுக்கு வந்து இந்துமதம் அஞ்ஞானமதமென்றும், கிறிஸ்துமதமே ஸத்தியமதமென்றும் தம் கிறிஸ்துமதத்தின் பெருமையைப்பற்றி பலவிடங்களில் பிரசங்கங்கள் செய்தும், கோயில்களைக் கட்டுவித்தும், இந்துக்களைத் தம் கிறிஸ்து மதத்துக்கு வந்துசேரும்மடி போதித்துவரச்சே, இந்துக்கள் இந்த கிறிஸ்து மதத்தையும் இதற்குமுன் இந்நாட்டுக்கு வந்த மஹம்மதிய மதத்தையும் பார்த்து பிரமித்து தம் சொந்தமதம் நல்லதா? அல்லது இந்நாட்டுக்கு நவீனமாக வந்த மதம் நல்லதா என்று எக்கமகொண்டிருக்கையில்,

1774-ஹு ஓர் அவதார புருஷராக ஜனித்த ஸ்ரீ ராஜா ராமமோஹன ராயர் என்னும் ஓர் பிராம்மணசிரேஷ்டர், ஸம்ஸ்கிருதம், ஹிந்துவி, பங்காளி, பார்சி, அரபி, பாலி, கிரேக்கு, லத்தீன், இங்கிலீஷ் முதலான பல பாஷைகளைக்கற்றுத்தெளிந்த கல்விக்கடலும் நிபுணசிரோமணியுமாக இருந்தமையால், ஆரியவேதமென்னும் ஆழ்ந்த சமுத்திரத்தில் புகுந்து அதின் ஆழத்திலிருந்த முத்துகளைப்போன்ற உபநிஷத்துக்களையெல்லாம் எடுத்து, அவைகளிலும் பாலிமுத்துக்களாக இருந்தனவற்றை விட்டெறிந்து, ஆணிமுத்துகளாகவிருந்த தசோபநிஷத்துக்களைச் சேகரித்து வங்கபாஷையிலும், ஹிந்தி இங்கிலீஷ் முதலான பாஷைகளிலும் மொழிபெயர்த்தும் அவற்றிலுள்ள சத்துக்களான சரக்குகளை பலருக்கும் காட்டியும் அவைகளை சகலதேச, சகலகால, சகலமதஸ்தர்களும், சமரசமாக கொள்ளத்தக்கவையென்று தக்க தருக்கங்களால் பிரஸ்தாபித்தமன்றியில்; தமது சுஜாதியாராகிய இந்துக்களை தம் இந்துமதமாகிய சொந்த மதத்திலேயே சத்துக்களிருப்பதால் அவர்கள் இந்நாட்டில் நவீனமாக வந்த மதங்களுக்கேகவேண்டிய தனுவசியமென்று தகுந்த நியாயங்களால் நிரூபித்தும், அக்கருத்தை இந்நாட்டிற் பரவச்செய்ய 1830ஹு பிரம்ம மதசித்தாந்த ஸபையை ஸ்தாபித்தும், இந்து தேசாபிமான விஷயமாக 1831-ஹு இங்கிலாந்துக்குப்போக அங்கு பிரிஸ்டல் நகரத்தில் 1833-ஹு பரமபதமடைந்தனர்.

பிறகு இந்த பிரம்மமத சித்தாந்தத்தின் பெருமையை நன்கறிந்தவரும் காலிகட்டத்தில் கல்விப்பொருளிலும் செல்வப்பொருளிலும் சிறந்த இராஜரிஷியாக ஏழ்ந்தருளியிருக்கும் மஹரிஷி தேவேந்திரநாத சர்மாவவர்கள் இந்த ராஜாராமமோஹனருடைய கருத்து தகுந்த அஸ்திவாரத்தின்மேல் ஆதாரப்பட்டிருக்கிறதோ என்பதை அறியவேண்டி, புத்திமான்களான நான்கு பிராம்மண வாலிபர்களுக்கு தக்கதிரவியசகாயம்செய்து காசிபட்டணத்துக்கு அனுப்பி இருக்கு, ஜஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதபாகங்களையும்,

அங்ஙல்வரும் ஒவ்வொரு வேதபாகத்தை அருத்தித்துடன் கற்றுவரும்படி அனுப்ப, அங்ஙல்வரும் அப்படியே போய் சில வருஷங்கள் காசிபட்டணத்தில் சகுந்த பண்டிதர்களிடத்தில் நான்குவேதங்களே கற்றுத்தெளிந்து வந்து நான்கு வேதங்களின் சாராம்ஸமாகிய தஸோபநிஷத்துக்களே இந்துக்களுக்கு வேத மாகுமென்று பிரபல நியாயங்களால் நிரூபித்துக்காட்டியதன்மேல், ராமமோ ஹனர் ஸ்தாபித்த பிரம்ம ஸபையோடு, தத்துவபோதினி சபையை ஸ்தாபித்தும், அச்சபைக்கு சகுந்த சம்ஸ்கிருத வேதவேதாந்த பண்டிதர்களே நியமித்தும், பிரதிவாரத்தோறும் பிரம்ம சித்தாந்த சம்பந்தமான உபநிஷத்துக்களைப் படிக்கச் செய்தும், வியாக்கியானங்களே செய்யச்செய்தும், அவைகளே அச்சபையின் சஞ்சிகையாகிய தத்துவபோதினி பத்திரிகையில் பதிப்பித்தும் பரிசுகமாக்கிய தன்றியில், தாமும் உத்திருஷ்டமான சில உபநிஷத்துக்களையும் உத்திருஷ்டமான சிலதருமசாஸ்திர வாக்கியங்களையும் இரட்டி அவைகளின் பூர்வ பாஷ்யத்தோடு சிலசமரஸமான விசேஷ உபன்யாஸ உரையைச்சேர்த்தும்பிரமதருமம்என்னும் பெயரால் ஒரு கிரந்தத்தை வங்கபாஷையில் பதிப்பித்தனர்.

அதை இங்கிலீஷ் இந்தவி, குஜராத்தி, மஹராஷ்டிரம் முதலான பாஷைகளில் மெழி பெயர்த்திருப்பதைபபோலவே, சென்னையிற் சுமார் மூப்பது வருஷங்களுக்குமுன் ஸ்தாபிசமான வேத சமாஜத்தாரால் தத்துவபோதினி பத்திரிகையில் தமிழில் சிலபாகம் மொழிபெயர்த்து பதிப்பித்தார்கள். பிறகு ஸ்ரீதரர் வங்காட்டுக்குப்போய் வங்கபாஷையை கற்றுத்தெளிந்துவந்து, அந்த பிரமதருமத்தை தமிழிலும் விசேஷஉரையுடன் மொழிபெயர்த்து புத்தகரூப மாக பதிப்பித்தனர். இருடைய தெலுங்கு மொழிபெயர்ப்பையும் வேறு சில உபநிஷத்துக்களையும் புச்சயபந்துலு புத்தகரூபமாக பதிப்பித்தனர்.

அன்றியும் சம்வச்சராதி1881 வரு வடமேற்கு பாகத்தில் ஓர் அவதாரபுருஷ ஜனித்த தயாநந்த சரஸ்வதிபவர்களும் வேதங்களின் சில பாகங்களுக்கும், சில உபநிஷத்துக்களுக்கும் காலதேச வர்த்தமானதை அத்தழுவி வியாக்கியானம் செய்ததை பாஞ்சால தேசதலிருக்கும் அவரது சிடர்களாகிய ஆரியஸமாஜத்தார் இந்துவி பாஷையிலும், இங்கிலீஷிலும் பதிபபித்திருக்கின்றனர்.

இப்படிசுமார் மூன்றுவருஷகாலங்களாக ஆரியர் வேத உபநிஷத்துக்களே ஐரோபாவின் பல பாஷைகளிலும், இந்தியாவின் சில பாஷைகளிலும் மொழி பெயர்த்து அச்சிட்டிருக்கும் அநேக மஹான்களுடைய அரிய பெரிய கிரந்தங்களே பல வருஷங்களாக வாசித்தும், அவைகளையே ஆதார நூல்களாகக்கொண்டும்,இந்த இந்துபைபில் அல்லது ஆரியர் சத்தியவேதம் என்னும் இந்த கிரந்தை பதிப்பித்தனன். ஆகவே, நமது ஆரியாவேத உபநிஷத்துக்களே விவரமாக அறியவிரும்புவோர் இந்த நூலுக்கு ஆதாரமாக இருந்த மெய் ஆரியர்வேதமொழி பெயர்ப்பு கிரந்தங்களேக்கொண்டு வாசித்தறிந்து ஆநந்தமடையலாம்.

இப்படிக்கு,

சே. ப. நரசிம்மலுநாய்டு.

ஓம்.

கடவுள் வணக்கம்.

——:o:——

சுவேதாசுவதர உபநிஷத்து

இரண்டாம் அத்தியாயம் 17-வது வாக்கியம்.

யோதேவோக்நௌ யோ அப்ஸு-யொவிச்வம்
புவநமாவிவேச; யஓஷதீஷு-ம் யோ
வநஸ்பதிஷு-ம் தஸ்மைதேவாய நமோநமஃ.

பொழிப்புரை.

எத்தேவன் தீயிலும், நீரிலும், செடிகளிலும், மரங்களிலும், எல்லா உலகங்களிலும் பிரவேசித்திருக்கிறாரோ, அத்தேவன் பொருட்டு நமஸ்காரம் நமஸ்காரம்.

விசேஷ உரை.

நாம் வசிக்கும் இந்த உலகம் ஒருகாலத்தில் அதாவது ஆதியில் அதிக பயங்கர அக்னிஜ்வலரூபமாக இருந்தது. அப்போது, அந்த பயங்கர அக்னிஜ்வலத்தினிடையிலிருந்தும், அதை நியமனத்தில்வைத்தும், அப்போது அதில் வசித்துவந்த அநந்தகோடி அக்னிஜ்வல ஸ்வரூபமான ஜீவஜந்துக்களை ரக்ஷித்தும் சுகமாக வாழும்படி செய்வித்தவர் எவரோ,

நாம் வசிக்கும் இந்த உலகமே, அநேக ஆயிரம் வருஷங்களாக அப்படி அக்னிஜ்வலரூபமாக இருந்ததை பிறகு, அதிக பயங்கரமான அலைகளால் நிறைந்து எல்லையற்ற அகண்ட ஜலசமுத்திரமாக மாற்றியும், அதை நியமனத்தில் வைத்தும், அதனிடையிலிருந்தும், அதில் அநந்தகோடி ஜலஜந்துக்களை ரக்ஷித்தும் அவைகள் சுகமாக வாழும்படி செய்வித்தவர் எவரோ,

நாம் வசிக்கும் இந்த உலகமே, இப்படி ஜலசமுத்திரமாக இருந்த அநேக ஆயிரம் வருஷங்களுக்கு பிறகு, அந்த பயங்கரமான அகண்ட சமுத்திரத்தின் ஓர் சிறு பாகத்தில் அநேக ஆயிரம் விதமான கந்தமூலச்செடிகளும், பயங்கரமான பெரிபெரிய விருக்ஷங்களும் விகாரகோரங்களுக்குப்படி மாற்றிப்படைத்தும், அதினிடையிலிருந்தும், நியமனத்தில் வைத்தும், வேனிற்கால மழைத்தாரைகளால் சுகமாக வாழும்படி செய்வித்தவர் எவரோ,

நாம் வசிக்கும் இந்த உலகமே இப்படி பலவித மாறுதல்களுடன் பல்லாயிரம் வருஷங்களுக்குபிறகு, அநேக ஆயிரம் விசித்திர விசித்திர ஜீவஜந்துக்களையும், பற்பலவிதமான பக்ஷிகளையும், விதவிதமான விலங்குகளையும், மதிப்பற்ற மானவஜாதியார்களையும் வசித்து வரும்படிபடைத்து, நியமனத்தில் வைத்தும், அவற்றினிடையிலிருந்தும், அநந்தகோடி ஜந்து சமூஹ பிராணிகளைச்சுகமாக வாழும்படிசெய்வித்தவர் எவரோ,

நாம் வசிக்கும் இந்த உலகத்தைவிட அநேக ஆயிர மைல்கள் பருமனும், அநேக ஆயிரஞ்சூரியசந்திராதிகளால் சூழப்பட்டும், அநேக ஆயிரம் மைல்கள் தூரத்திலும், அத்திக்கனிக்ஷேப்போல் அந்தரத்திலாடிக்கொண்டிருக்கும் அநேக மாயிரங்கணக்காக விண்ணுலகங்களே சிருஷ்டித்தும், அவற்றினிடையிலி ருந்தும், அவைகளேநியமனத்தில்வைத்தும், அவற்றிலும் அநந்தகோடி ஜீவஜந்துக் களேப்படைத்தும் சுகமாக வாழும்படி செய்வித்தவர் எவரோ,


நாம் வசிக்கும் இந்த பூமிக்கும், நமது சிரசிற்குமேல் ககனமார்க்கத்தில் உல்லாசமாக உலாவும் விண்ணுலகங்களுக்கும் இடைவெளியில் அநேககோடி ஜீவஜந்துக்களேச் சிருஷ்டித்தும், அவைகளுக்கிடையிலிருந்தும், அவைகளே நியம னத்தில் வைத்தும், அவைகளேச் சுகமாக வாழும்படி செய்வித்தவர் எவரோ,

இப்படி எல்லா காலத்திலும், எல்லாவிடங்களிலும், எல்லா பொருள்களி லும், எப்போதும் தன்மயமாக ஜ்வலித்துக்கொண்டிருக்கிற ஸத்தியஸ்வரூபி யும், ஞானஸ்வரூபியும், அம்ருதஸ்வரூபியுமாகிய தேவாதிதேவனே நமஸ்காரிக் கின்றேம்.

ஓ நித்தியாநந்தனே! நின்ன இருப்பையும், நின்னால் சிருஷ்டிக்கப்பட்ட இப்பிரபஞ்சத்தின் பெருமையையும், இப்பிரபஞ்சத்தில் நின்னருளால் வந்து வரும் ஆத்மகோடிகளின் விலக்ஷணத்தையும், இவ்வாத்மகோடிகள் நின்னே யடைந்து இகபரசுகத்தையடைய சுலப சாதனமான உபாஸனமார்க்கத்தையும், இந்த உபாஸனமார்க்கத்தையவலம்பிப்பவர்கள் அநுஷ்டிக்கவேண்டிய நின் திருவுள்ளத்துக்கிசைந்த தருமங்களேயும், ஆதி ஆரியரிஷிகள் ஆரியபாஷையில் சொன்ன வேதவாக்கியங்களின் கருத்தை; புண்ணிய பூமியாகிய இந்த பரத கண்டத்தின் தென்திசையில் வந்திருவரும் நின் மக்களுக்கு அமிழ்தினும் சுவையுடைய தமிழ்பாஷையிற் சொல்ல அருள் ஞானசக்தியைத் தந்தருள் வாய்! நின் அருள்வேதமாகிய இதை இந்நாட்டாரின் ஒவ்வொருவர் உள்ளத் திலும் சுவர்ண எழுத்துகளேப்போல பதியச்செய்து நின் மக்களனைவரும் அநுஷ் டித்து இகபர சுகமடையச்செய்வாய்.

ஓ! ஆரியரிஷிகள் வணங்கிய ஆதிமூலமே! பரதவருஷத்தின் புராதனமான பகவானே! எமது முன்னோருடைய குலதெய்வமே! நினது பரிசுத்தமான இந்த சமரச வேதம் இந்த உலகமுழுதும் பரவும்படி செய்து, இவ்வுலக முள்ள சகல தேசத்தார்களும், சகல ஜாதியார்களும், சகல மதஸ்தர்களும் இவரி சமரச வேதசித்தாந்தமாகக்கொண்டு படித்தறிந்து இகபரசுகம்பெற்றுய்ய அருள் புரிவாய். நினது பரிசுத்தமான ஆஸ்திகமதம் எங்கும் பரவி யாவரும் ஈந்த மடைய அருள்புரிவாயாக. ஓம் தத்ஸத்.

ஓம் பிரம்ம கிருபாஹி கேவலம்.



இந்து பைபிள்

என்னும்

ஆரியர் சுத்திய வேதம்.

பழய ஏற்பாடு — உபநிஷத்துக்கள்.

ஆதி ஆகமம்—சிருஷ்டி விஷயம்.

முதல அத்தியாயம்.

(1). சாந்தோக்கிய உபநிஷத்து

6-வது பிரபாடகம 2-வது கண்டம் 1-வது வாக்கியம்.

இதம்வா அக்ரேநைவகிஞ்சிதாஸீத்;
ஸதேவ ஸௌமயேதமகர ஆஸீ தேகமேவாத்விதீயம்;
ஸவாஎஷ மஹாநஜ ஆதமா அஜரோ அமரோ
அம்ருதோ அபயஹ.

பொழிப்புரை.

• இவ்வுலக முண்டாவதற்குமுன் ஒன்றும் இருந்ததில்லை. ஓ பிரிய சிஷியனே! உலகமுண்டாவதற்குமுன் கேவலம் ஸத்ஸ்வரூபியும் ஒருவருமான அத்துவிதீயர் இருந்தார். அவர் சிறந்தவர், பிறப்பற்றவர், பரமாத்மா, மூப்பற்றவர், சாவற்றவர், நித்தியர், பயமற்றவர்.

விசேஷ உரை.

சிருஷ்டிக்கு முன்னம் ஒரே ஸத்தப்பொருளாகிய பிரமமிருந்தது, அது வன்றி இரண்டாவது பொருளில்லை; சிருஷ்டிக்குபின்னரும், சேதநாசேதநங் களாகிய எல்லாப்பொருள்களும் கேவலம் ஒன்றேயாகிய அவரையே பற்றிக் கொண்டிருக்கின்றன; இதனற்றன் அவர் ஒருவரான அத்விதீயரென்று சொல்லப்பட்டார். யார் ஸத்ஸ்வரூபியாகிய ஒன்றான அத்விதீயரோ, அவர் சேதநப்பொருள்; அவர் தன்னைத்தானறிகிறார்; இந்த ஹேதுவைப்பற்றி அவர் ஆத்துமாவென்னும் பதத்தினாற்சொல்லப்படுகிறார்.

சிருஷ்டிக்கு முன்னம் இருந்த பிரும்மம், பிருதிவி, அப்பு, வாயு முதலான அசேதன பதார்த்தங்களைப் போல ஞானமற்றதன்று. இதை நிரூபிக்க,

பிரஹதாரணியம் 1-4 10-ல்

(பிரஹ்மவாஇதமக்ரஆஸீத்ததாத்மா
நமேவாவைதுஅஹம்பிரஹ்மாஸ்மீதி)

பரமாத்துமா இந்த உலகத்தின் உற்பத்திக்கு முன்னிருந்தது, நான் பிரம்மமென்று தன்னைத்தான் அறிந்துகொண்டதனால் என்று சொல்லியிருப்பதினால், சிருஷ்டிக்கு முன்னிருந்த பிரும்மம் சேதனப் பொருள் என்று ஸ்பஷ்டமாகிறது. சிலர் நான் பிரும்மம் என்றும், தன்னைத் தான் அறிந்து இருந்தது என்ற இந்த வாக்கியத்தில் காணும் பிரம்மமே ஜீவாத்மா என்று மயங்கலாம்; ஆனால் இந்த வாக்கியத்தில் சொல்லியிருப்பது பிரும்மமே யன்றி ஜீவாத்மாவல்ல. ஆகவே, இதைதசெரிவிக்கும் நிமித்தம்—அவர் பிறப் பற்றவரொன்றும், சிறந்த ஆத்மாவென்றும், மூப்பற்றவரென்றும், சாவற்றவ ரென்றும், நித்தியரென்றும், பயமற்றவரென்றும் பிறகு சொல்லப்பட்டார்.

சிலர்: பரமாத்துமா எப்படி அனாதியோ, அப்படியே ஜீவாத்மாவும் அனாதி என்று சந்தேகிக்கிறார்கள். ஆனால்,

தைதிரியம் - 11-ல்

("ஆத்மாவா இதமேக ஏவாக்ர, ஆஸீத்நான்யத்கிஞ்ச
நமிஷத்ஸஈக்ஷதலோகான்நுஸ்ருஜாஇதி").

இந்த உலக சிருஸ்டிக்குமுன்பு ஒன்றான பரமாத்துமாவே இருந்தார். அவர் தனைத்தவிர வேறொன்றும் இல்லை எனக்கண்டு, உலகங் களை சிருஷ்டிசெய்ய இச்சித்தார் என்று சொல்லி இருப்பதால், உலகத்தின் உற்பத்திக்குமுன்பு ஒன்றான பரமாத்துமாவே இருந்தது, அநேக ஆத்மாக்கள் இல்லை என்பது திண்ணம். மேலும் பிருஹதாரணியம் 1-4 1ல் (ஆத்மை வேதமகிரஆஸீத்புருஷவிதஹ) இந்த உலக உற்பத்திக்குமுன்பு பரமாத்துமாவே இருந்தார். அவர் புருஷ ரூபியாய் இருந்தார், என்று சொல்லி இருப்பதால்; அவர் அசேதனசத்பதார்த்தமாக இருந்தனென்னும் பிராந்திக்கு இடமில்லாமல் இச்சாதி கர்த்ருதவங்கள் எல்லாம் உடைய புருஷரூபியாய் இருந்தார் என்று சொல்லியிருப்பதால்; அவர் பூரண புருஷர், ஸ்வயம்பு, ஸ்வதந்திரர், நித்தியர்.

இதின் இங்கிலீஷ் கருத்து.

Nothing of this was before. Only He the True, O! Beloved! before this was, Who is One only without

(2). தைத்திரிய உபநிஷத்து

ஆநந்தவல்லி 6-வது அனுவாகம் 2-வது வாக்கியம்.

ஸதபோதபய தஸதட ஸ்ருஜாதஸர்வ இதகும்
ஸர்வபஸ்ருஜ தயததகம் கிஞ்ச.

மொழிபுரை.

அவர் உலகத்தைப் படைக்கும் விஷயமாக ஆலோசனைசெய்தார். ஆலோசனை செய்துகொண்டே இங்கே எவ்வளவு ஸ்வல்பமோ அவ்வளவு இவையாவற்றையும் படைத்தார்.

விசேஷ உரை.

சிருஷ்டிக்கு முன் பிரம்மம் தவிர வேறொருபொருளும் இருந்ததில்லை. ஆனதால் அவர் சாதாரணமாக மனுஷ்யர்களைச் செய்கிறவர்களைப்போல ஒரு முதற்பொருளைத் துணையாகக்கொண்டு ஒன்றையும் படைக்கவில்லை. அவர் படைத்தலெனனும் செய்கைவிஷயமாகக் கருதினர். கருதிக்கொண்டே இவை யாவுமாகிய உலகத்தைப் படைத்தார். நாம மண், கல், உலோகம் முதலியவைகளைக்கொண்டு வேறு பொருள்களைச் செய்பமாட்டுவோம். ஆனால் அவற்றைப் படைப்பென்று சொல்லத்தகாது. வேறொரு முதற்பொருளின் துணையினறி தனதிச்சையால் ஒரு பொருளை உண்டுபண்ணும் செய்கையின் பெயர் படைப்பு. அதைபற்றி நமக்கொருபொருளையும் படைக்கும் வல்லமை இல்லை. படைக்கும் வல்லமை கேவலம் ஒன்றுகிய பரமாத்மாவினிடத்திலேயே யிருக்கிறது; அவர் தனியாக தனக்கியற்கையான ஞானம், வல்லமை, செய்கை இவைகளைக்கொண்டு சேதநா சேதனங்களாகிய எல்லாப்பொருள்களுடன் தவ்விடப்பட்டகிய உலகயந்திரத்தை உண்டாக்கினர்.

சிலர், இந்த உலகம் அறிவு என்றும், சிருஷ்டிக்குமுன்பு மூலபிரகிருதியாக இருந்ததென்றும் சந்தேகிக்கிறார்கள் ஆனால், பிரஹதாரணியம, 3-8 ம், 1-9 ல் (யஹ்வாவஞ்ஹஸாவவிதயஅக்ஷரஞானமயந்தபஹ தஸ்மாதேதத், ப்ரம்ஹநாம ரூபமந்நம்சஜாயதே) யார் சர்வகியமேனு, எல்லாம் அறிந்தவனோ, யாருடைய தபசு கியான மயமானதோ அந்த பிரம்மத்தால், நாமரூபங்களும், அன்ன ரூபமாகிய ஜகத்தும் உற்பத்தியாகின்றன எனறு சொல்லி இருப்பதால், நாமரூபங்களாகிய பிராணிகளும், அவைகளுக்கு அன்னரூபமான ஜகத்தும் அறிவியல்ல, அவரது இச்சாதி சக்திகளால் சிருஷ்டிக்கப்பட்டன.

He meditated a meditation, and meditating, all this He created whatever.

---

(3). நாராயண உபநிஷத்து

1-வது அனுவாகம் 12-வது வாக்கியமும்

சுவேதாசுவதர உபநிஷத்து

3-வது அதிகியாயம 3-வது வாக்கியமும்.

விஸ்வதஸ்சக்ஷுருத விஸ்வதோமுகோ
விஸ்வதோ பாஹுருதவிஸ்வதஸ்பாத்;
ஸம்பாஹுப்யாம தமதி ஸம்பத த்ராத்யாவ

பொழிப்புரை.

எங்கும் அவரதுகண், எங்கும் அவரது முகம், எங்கும் அவரதுகை, எங்கும் அவரதுகால், அவர் மனிதரது உடலுக்குக் கைகளையும், பறவைகளினது உடலுக்கு இறகுகளையும், சேர்த்து வைத்திருக்கிறார். ஒன்றுகிய பரமேசுவரரே மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் படைத்தார்.

விசேஷ உரை

எங்கும் அவரதுகண் ; அவர் யாவற்றிற்கும்சாக்ஷி ; யாவற்றினது உள்ளும் புறமும் அவர் ஸமமாய்ப் பார்க்கிறார். இருளடைந்த இரவினது கோரமாகிய இருளும் அவரது பார்வையை மறைக்க வல்லதன்று. எங்கும் அவரதுமுகம் ; பாபிகள் அவரதுமுகம் கொடுமையாயிருக்கவும், புண்ணியவான்கள் அவரது முகம் குளிர்ந்திருக்கவும் காண்கின்றனர். எங்கும் அவரதுகை, இவ்வுலகத்தில் எல்லாகாரியங்களிலும் அவரதுவல்லமையும் கௌசலமுமே விளங்குகின்றன. எங்கும் அவரது அடிகளிருக்கின்றன. அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். அவர் மனித உடல்களுக்குக் கைகளைச்சேர்த்திருக்கிறார். மேலும் அவர் பக்ஷி உடல்களுக்கு இறக்கைகளைச்சேர்த்திருக்கிறார். அதற்குரிய தொழிலைச்செய்யவும் அதற்குவேண்டிய சுகத்தைப்பெறவும் எதற்கேவ்வகையான உறுப்புப் பயனை அதற்கவ்வகையான உறுப்பை யருளியிருக்கிறார்.

நாம் வசிக்கும் இந்த மண்ணுலகம் ஆதியில் அக்கினி ஜலரூபமாக சிருஷ்டிக்கப்பட்டு ; பிறகு 50 லக்ஷம் வருஷங்களான பிறகு கேவல ஜல ரூபமாக மாற்றப்படடும் ; பிறகு 35 கோடி வருஷங்களானபிறகு இப்போது இருக்கும்படியான பிரகிருதி ரூபமாக மாற்றப்பட்டதென்றும் பூதத்துவசாஸ்திரம் முறையிடுகின்றது.

நமது சாதாரண பார்வைக்கு கேவலம் சட்டை ரூபமாகத்தோன்றும் இந்த உலகத்தை பூகோள சாஸ்திரரீதியாகச் சோதிப்போமாகில், இது உருண்டை வடிவாகிய கபித்தாக்கார கோளமாய் இருக்கிறது. இது இருபத்தையாயிரத்து இருபது மயில்கள் சுற்றளவு உள்ளதாயும், நிரக்ஷரரேகைக்கு ஏழாயிரத்து தொழாயிரத்து ஏழுபத்து எட்டு மயில்கள் குறுக்களவு உள்ளதாயும், துருவமூலைகளுக்கு ஏழாயிரத்து தொளாயிரத்து மூப்பத்தெட்டு மயில்கள் உள்ளதாயும், பத்தொன்பது கோடியே எண்பததொன்பது லக்ஷத்து ஐம்பதினாயிரம் சதுர மயில்கள் விஸ்தாரணமுள்ள மேற புற பரப்புள்ளதாயும், மணி ஒன்றுக்கு அறுபத்தெட்டாயிரம் மயில்களாக சூரியனைசுற்றியும், மூன்றாற்று அறுபத்தைந்து நாள், ஐந்து மணி, நாற்பத்தொன்பது நிமிஷங்களில் வருஷமொன்றையுடையதாயும், கடையாக 1,256,195,670,000000000000000 டன் கனமுள்ள பிரகிருதி பாகத்தையுடையதாயும், அநந்தகோடி தாது கந்தமூல ஜீவராசிகளுள்ள விசித்திர வீடாயும் இருக்கின்றது. இப்படிப்பட்ட இந்த பூமியின் அடிபாகத்தைப்பற்றி பூதத்துவசாஸ்திரோகத்மாக சோதிப்போமாகில், கேவலம் கல், மண், நீர் நிறைந்த நிலத்தின் அடியில், மூப்பத்தைந்து மயில் ஆழத்தில் வெட்டிப்பார்க்கில், அங்கு அனந்த அக்கினி ஜ்வாலைகளிருக்கின்றன. மேலும் இப்பூமியின் அடியில் 2430 நெஜம் ஆழம் வெட்டி அங்கு தண்ணீர் விடில், அது வைரோசிவிடும்; 8400 நெஜ ஆழத்தில் ஈயம் உருகுவிடும் ; 21 மயில்கள் ஆழத்தில் பொன்னும் உருகி விடும், 74 மயில்கள் ஆழத்தில் இரும்பும் உருகிவிடுமே, நாறு மயில் ஆழத்தில் அனந்த அக்கினி ஜ்வாலைகளிருக்கின்றன.

நமது பாதத்துக்கு அடியிலிருக்கும் இந்த மண்ணுலகத்தின் மேன்மையே மாந்தருடைய மனதை மருட்டும்படி இருக்கிறதென்றால், நமது தலைக்குமேல் இருக்கும் விண்ணுலக அமைப்பு அதிலும் ஆச்சரியப்படத்தக்கதாய் இருக்கிறது. சூரியன் சந்திரன், அங்காரகன், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலான கிரஹங்கள் யாவும், நமது மண்ணுலகத்தைப்பார்க்கிலும் பெருமைபெற்ற உலகங்கள். இவைகளில சூரியவுலகம் 883217 (எட்டுலக்ஷத்து எண்பத்தி மூன்றாயிரத்து இருநூற்றுப்பதினேழு) மயில்கள் தூரத்தளவுள்ளதாயும், நமது சந்திரவுலகம் 2200 (இரண்டாயிரத்து இருநூறு மயில்கள் தூரத்தளவுள்ளதாயும், அங்காரகனுலகம் 4189 (நாலாயிரத்து நூறு எண்பதொன்பது) மயில்கள் உள்ளதாயும், புதனுலகம், 4200 (நாலாயிரத்து இருநூறு) மயில்கள் தூரத்தளவு உள்ளதாயும், வியாழனுலகம் 89170 (எண்பத்தொன்பதினாயிரத்து நூற்று எழுபது மயில்கள் தூரத்தளவும்—நான்கு சந்திரர்களை உடையதாயும், வெள்ளி உலகம், 7687 (ஏழாயிரத்து அறுநூறு எண்பத்தேழு மயில்கள் உள்ள நீரகம் பெருந்திய உலகமாயும், சனி உலகம், 80000 (எண்பதினாயிரம்) மயில்கள் தூரத்தளவும்—ஏழு சந்திரர்கள் உடையதாயும், இவைகளிடை விசேஷமான தூமகேதுக்கள் உத்பாதங்கள் இருப்பதன்றியில்; துருவீக்ஷணி என்னும் தூரதிருஷ்டி கண்ணுடியினால் ஜோதி மண்டலத்தைச் சோதிக்கையில் ஜ்யோதிரிலுகம், விசித்ர உலகம், பாலுலகம், ஹரிரிஷி உலகம், செப்தர்ஷி முதலான பல உலகங்கள் பிரகாசிக்கின்றன. இவைகளில், பாலுலகம் 2200 (இரண்டாயிரத்து இருநூறு) மயில்கள் தூரத்தளவுள்ளதாயினும், ஹரிரிஷி உலகம் 35109 (முப்பத்தையாயிரத்து நூற்றொன்பது) மயில்கள் நீளமுள்ளதாயும்,—ஆறு சந்திரர்களால் சூழப்பட்டதாயும் இருக்கிறது. நமது உலகத்துக்கு தக்ஷிண கோளார்த்தத்துக்கு சமீபத்திலிருக்கிறதாக தோன்றும் சநகபுரி என்னும் ஜோதி உலகமானது 2,10,00,00,000 (இருநூறுபத்துகோடி) மயில்கள் தூரத்திலிருப்பதனால் அதன் பிரகாசம் நமது உலகத்துக்கு வந்து சேர மூன்று வருஷமும மூன்று மாதங்களுக்கும மேலாகும். நமது வடகோளார்த்தத்துக்கு சமீபமாகதோன்றும் (Cygny) சகுணலோகம் 6,30,00,00,000 (அறுநூறறுமுப்பதுகோடி) மயில்கள தூரத்திலிருபபதால் அதன பிரகாசம் நமகு எட்ட பத்து வருஷங்களுக்கு மேலாகும்.

இம்மட்டோ! நமது கண்களுக்கு கேவலம் மின்மினுபூச்சிகளைப்போல பிரகாசிக்கும் நக்ஷத்திர கோடிகளை பெரிய தூரதிருஷ்டிக்கண்ணுடிகளைக் கொண்டு சோதிப்போமாகில், ஆகாச மண்டல ஆறாவது அளவில் மூவாயிரம் பெரிய உலகங்களும்; முதல் அண்டகோச அளவில இருபதும்; இரண்டாவது அண்டகோசத்தில எழுபதுமாக சுமார் நூறு பிரம்மாண்டமான உலகங்கள் நமது பூமி, சூரியன், சனி முதலான உலகங்களைவிட பெருமைபெறறும் பிரகாசிகின்றன. இந்த ஜோதி உலகங்களின் ஒன்றின் பிரகாசம் மாத்திரம் ஒரு நிமிஷம் ஒன்றுக்கு 1,20,00,000 (ஒரு கோடியே இருபது லக்ஷம்) மயில்கள் தூரம் பீறிகொண்டு வந்தாலும், அந்த பிரகாசம் நமது உலகத்தில் வந்துசேர குறைந்தபக்ஷம் 14000 (பதினாலாயிரம் வருஷங்கள் செல்லும்! இப்படி எத்தனையோ எண்ணிறந்த பிரம்மாண்ட கோளங்களாக நமது பார்வைக்கும் தூரதிருஷ்டிகண்ணுடிக்கும் தோன்றுமல் கோடானுகோடி மயில்கள் தூரத்தில் சுகமாக சஞ்சரிக்கும் விண்ணுலகங்களையும், நமது மண்ணுலகத்தையும், உயர் ஒப்பான இரண்டாவதற்ற பரமாத்மாவே விருஷ்டித்தார்.

His eye is everywhere. His face is everywhere. He is that furnisheth arms to men and wings to birds. One

(4). பிருஹதாரணிய உபநிஷத்து

5-வது அத்தியாயம் 8-வது பிராமணம் 9-வது வாக்கியம்.

ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கி!
த்யாவாபருதிவ்யௌ விதருதே திஷ்டதஹ.

பொழிப்புரை.

இவ்வழிவற்ற பொருளினது நியமத்தால் மண்ணுலக விண்ணுலகங்களும் தாங்கப்பட்டிருக்கின்றன.

விசேஷவுரை.

இப்படி எப்பொழுதும் அழிவற்ற அபாரசக்தியையுடைய பரமேசுவரரால் படைக்கப்பட்ட நமது மண்ணுலகந்தவிர, சூரிய சந்திர நட்சத்திராதி ஒளியையுடைய எத்தனை உலகங்கள் இருக்கின்றனவோ அவற்றின் தொகுப்புக்குப் பொதுப்பெயர் விண்ணுலகம். அவரது ஆக்ஞையால் விண்ணுலகங்கள் அத்தனையும் அந்தரத்தில் ஆடிக்கொண்டிருகின்றன. ஜோதிமண்டலத்தில் சூரியபிம்பம் நடு நாயகம்போல நடித்துக்கொண்டு; அதன் ஆகரஷணத்துக்கு உட்பட்டிருக்கிற நமது மண்ணுலகதையும்; சந்திரன், அங்காரகன், புதன், வியாழன், வெள்ளி, சனி, யூரனிஸ, நெப்தியூன், ஜுனோ, பல்லவாதி பல பிரம்மாண்டங்களையும் தனது ஒளியால் பிரகாசிக்கச்செய்தும், தனது மத்தியை நாடுகிற (Centripital force) சக்தியினாலும், மத்தியாதித (Centrifugal force) சக்தியினாலும சுழன்றுக்கொண்டிருக்கிறது. இப்படி அந்தரத்தில் ஆகரஷணையால் ஆடிகொண்டிருக்கும் சூரியபிம்பத்துக்கு நமது மண்ணுலகம் 9 கோடியே 20 லக்ஷம மயில்கள் தூரத்திலும், சந்திரவுலகம இரண்டரை லக்ஷம் மயில்கள் தூரத்திலும், அங்காரகனுலகம் 14 கோடியே 40 லக்ஷம் மயில்கள் தூரத்திலும், புதனுலகம் 3 கோடியே 70 லக்ஷம் மயில்கள் தூரத்திலும், வியாழனுலகம் 49 கோடியே 60 லக்ஷம் மயில்கள் தூரத்திலும், வெள்ளி உலகம 680 லக்ஷம் மயில்கள் தூரத்திலும், சனி உலகம் 900 கோடி மயில்கள் தூரத்திலும், யூரெனிஸ் என்னும் வருணி உலகம் 183 கோடி மயில்கள் தூரத்திலும், நெப்தியூன் என்னும் வருண உலகம் 286 கோடியே, 40 லக்ஷம மயில்கள் தூரத்திலும் பின்னும் அநேக ஜோதி உலகங்கள் அநேகமாயிரலக்ஷங்கோடி மயில்களுக்கு அப்பால் ஆடிக்கொண்டிருகின்றன. இந்த பிரம்மாண்டங்கள் எல்லாம் அந்த அற்புத புருஷருடைய நியமதினால் நியதமாக தாங்கப்பட்டு இருக்கின்றன. அவற்றில் ஒரு அணுவளவும் அவரது நியமத்திற்கு புறம்பாகாது.

It is through His rule, O! Gargi, the earth and the heavens are upheld.

---

(5). பிருஹதாரணியம்

5-வது அத்தியாயம் 7-வது பிராமணம் 4-வது வாக்கியம்.

ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கி!

பொழிப்புரை.

இவ்வுழிவற்ற பொருளினது நியமத்தால் ஓ கார்க்கி ! சூரிய சந்திர பிம்பங்கள் தாங்கப்பட்டிருக்கின்றன.

விசேஷ உரை.

சூரியபிம்பம் திருவந்திப்பொருள்களில் சிறந்தது. பிரபஞ்சப் பிராண கோடிகளுக்கு இன்றியமையா பொருள்களுக்கெல்லாம் பிரதானமாக இருப்பதால் பிரபாகரனே பிரபஞ்சத்துக்கு பிராணன் என்று எண்ணுவோரும் உண்டு. அருணோதயகாலம் திருவந்தியில் காணும் எல்லா காலங்களிலும் சிறந்தகாலம். ஆகாசன் ஆகாச வீதியில் பிரவேசிக்கும் முன்னம், அதன் அக்கினி ரூபமான கிரணங்கள் மேகங்களின் ஊடாக பீறிக்கொண்டு பிரவேசிப்பதைப்பார்க்கில், அந்த தினகரனுடைய வருகையை தேவதூதர்கள் முன்னோடியாகவந்து உலகத்தாருக்கு எச்சரிக்கை செய்வதைப்போல் இருக்கின்றன. இந்த எச்சரிக்கையைக்கண்டு இரவியின் வருகைக்கு எதிர்பார்க்கும் சில நிமிஷங்களுக்குள், வெய்யோனும் உதித்துவர, அதன் சுன்னுருளைம்பெருந்திய பிரகாசம் பிரபஞ்சத்தின் பல பக்கங்களிலும், பல பொருள்களின்மீதும் பீறிக்கொண்டுபாய, கடன் ஞாலத்தை கௌவிக்கொண்டிருந்த காடாந்தகாரமான இருள் யாரிடமும் சொல்லாமல் ஓடிப்போகின்றது. மனோஞ்சிதமான மலர்களின்மேல் விழுந்து தூங்கும் பனித்துளிகளின்மீது தவிழ்வன் காந்திவிழ, அப்பனித்துளிகள் முத்துப் பவள மரகத மாணிக்கங்களைப்போல மதிக்கச்செய்கின்றது. பாலசூரியன் உஜ்ஜுவல ரூபத்துடன் வருகையைக்கண்டு அநந்தகோடி பக்ஷிகள் உற்சாகம் பொருந்திய உள்ளத்துடன் இனியகீதங்களைப் பாடி, வேந்தனை வந்தனவழிபாடுடன் வர வழைப்பதைப்போல .டிக்கின்றன. பிரபஞ்ச இயற்கைப்பொருள்களாகிய பருவத பிரதேசங்கள், பள்ளத்தாக்குகள், பல விருக்ஷவனங்கள் விநோத வருணங்களைப்பெற்று விண்மணியின் பெருமையை உத்கோஷிக்கின்றன. இந்த விந்தையான வைகறையில் எந்த பிராணிதான் உற்சாகமடையாதிருக்கும்? அநந்தகோடி இருமிடைகங்கள் எழுந்த களிப்புடன் பாடி பறந்து பரிதியைப் பெருமைப்படுத்துகின்றன. பகலவன் பிரகாசத்தினால் பறவை, பசு, பலவித செடி, கொடி, மரம் முதலான உற்பிஜங்கள் உயிர்ப்பையடைகின்றன. இந்த பானுவின் பிரகாசத்தினால் உஷ்ணமும், உஷ்ணத்தினால் மேகங்களும், மேகங்களினால் மழைகளும், மழைகளினால், மண்ணுலகத்துக்கு மகிழ்ச்சியும் உண்டாகின்றது. ஆ ! இப்படிப்பட்ட அற்புதங்களுக்கு இடையிலிருக்கும் மானவ ஜாதியாகிய நாம் இந்த ஆதவன் அருமைப் பெருமையைக்கண்டு ஆநந்தப்படாமல், இருக்கக்கூடுமோ?

•

இப்படி இந்த பிரபஞ்சத்துக்கு அற்புத ஆநந்தத்தை விளைவிக்கும் சூரிய பிம்பத்தின் தத்துவத்தைப்பற்றி சாஸ்திரோக்தமாக சோதிப்போமாகில், அது நமது பூமியைப்பார்க்கிலும் பதின்மூன்று லக்ஷம் பங்குள்ள பெரிய உலகம். அதாவது நாம் வசிக்கும் மண்ணுலகத்தைப்போல பதின்மூன்று லக்ஷம் உலகங்கள் சேர்ந்தால் எவ்வளவு பெரிய உலகமாகுமோ, அவ்வளவு பெரிய உலகம் சூரியன். அது எட்டு லக்ஷத்து எண்பதினாயிரம் மயில்கள் குறுக்களவு நீளமும், இருபத்தி எட்டு லக்ஷம் மயில்கள் சுற்றளவும், மூப்பத்தி எட்டு லக்ஷம் மயில்கள் விஸ்தாரணமுள்ள பிரமாண்ட உலகமாய் இருந்தும், நமது உலகத்துக்கு ஒன்பது, கோடியே இருபது லக்ஷம் மயில்கள் தூரத்திலிருப்பதால், நமது இயற்கைப் பார்வைக்குச் சிறியதாகத் தோன்றுகிறது. இந்த சூரியவுலகில் பிரமாண்ட பருவதங்களும், பள்ளத்தாக்குகளும், சமுத்திரங்களும் இருப்ப

புகையானது அடிக்கடி கரும்புள்ளிகளைப்போலச் சாணுகின்றன. அவற்றின் ஒரு புள்ளி ஏழாயிரம் மயில் குறுக்களவும், மற்றொன்று லக்ஷத்து எண்பதினாயிரம் மயில் நீளமுமுள்ளதாம். இந்த சூரியவலகத்திலிருந்து நமது உலகத்துக்கு வரும் உஷ்ணம், அந்த சூரியவலகத்தில் இயற்கையாக இராமல் அதற்கு அநேக லக்ஷம் மயில்களுக்கு தூரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் அதன் மேகங்களில் இருந்து உண்டாவதால், அந்த சூரியவலகத்திலும் அநந்தகோடி ஜனங்கள் சுகமாக வாழ்ந்துக்கொண்டிருக்கின்றனர்.

நமது சிரசிற்குமேல் ஒவ்வொரு இரவிலும் நவ நவமாக உருவம் பூண்டு பிரகாசித்து பிரபஞ்சத்தின் பல பொருள்களிலும் அமுதம்போன்ற கிரணங்களை வீசும் தமாசகனுடைய தண்மை என்ன? அது மாசுகருடைய மனசை மலரச் செய்தும், அதன் மனோகரமான வெளிச்சத்தினல் உத்பீஜங்கள் வளப்பமான தன்மை உடனும் வன்மையுடனுமிருக்கின்றன இரமணீயமான சந்திர பிம்பத்தின் ததத்வத்தை சான்றிரீதியாக சோதிப்போமாகில்; நிசாபதி நமது பூமிக்கு இரண்டரை லக்ஷம் மயில்கள் தூரத்தில், இரண்டாயிரத்து நூற்றருபது மயில் குறுக்களவுள்ளதாயும், அதற்கு இயற்கையாக இல்லாத பிரகாசத்தை பானுவினிடம் பெற்று நமது பூமிகருதரும் ஓர் பெரிய உலகம். இந்த சந்திர பூமியை தூரவீக்ஷணிக்கருவியைகொண்டு பார்ப்போமாகில், அதில் அநேக பர்வதங்களும், பெரும்பாறைகளும், பள்ளதாக்குகளும் தெரிகின்றன. அந்தப் பருவதங்களில் சில மூன்று மயில் நானுகு மயில உயரமுள்ளவைகளாக விருக்கின்றன. இப்படிப்பட்ட சூரிய சந்திர பிம்பங்கள அப்ரமேயருடைய சக்தியினல் தாங்கப்பட்டும், அவரது சகதியால்அந்தரத்தில்ஆடிக்கொண்டுமிருக்கின்றன.

It is through the rule of this, Imperishable Being, O! Gargi, the Sun and the Moon are upheld.

---

(6). கடோபநிஷத்து 6-வது வல்லி 3-வது வாக்கியம்.

யதிதம்கிஞ்ச ஜகத்ஸர்வம் பாணஏஜதி நிஸ்ருதம்;
மஹத்பயம் வஜ்ரமுத்யதம்
ய ஏ தத்விதுரம்ருதாஸ்தேபவந்தி.

பொழிப்புரை.

இதோ இருக்கிற உலகமுழுதும் பரமாத்துமாவினிடத்திலிருந்து வெளிப்பட்டதாகி பிராணஸ்வரூபனுகிய அவரிலேயே அசைந்துகொண்டிருகின்றது. இடிகிற இடியைபோல அவர மிகவும் பயங்கரமானவர். இந்த வஸ்துவை அறிகிறவர்கள் நித்திய பதவியடைகின்றனர்.

விசேஷ உரை.

பரமாத்துமா இவ்வுலகத்திற்குப் பிராணன்; அவரிடத்திலிருந்தே எல்லா உலகங்களும் உண்டாகி அவரைப்பற்றிக்கொண்டே அந்தரத்தில் அசைந்துகொண்டிருக்கின்றன. எதுவும் அவரது கருத்தை மீறி நடக்க வல்லதல்ல. எதுவும் அவரது நியமத்தினுலேயே அதனதன் செய்கைகளில்

பிராணன் என்பது இன்னதென்று இதுவரையிலும் அறிந்தவர்கள் இல்லை. ஆனால் அதன் இருப்பு அதன் தொழில்களால் அறியற்பாலும். எப்படியெனில், மானிட சரீரம் ஜனிக்கும்போது அந்த சரீரம் எந்தெந்த பதார்த்தங்கள் சேர்ந்து ஆக்கப்பட்டதோ, அந்த பதார்த்தங்களே எப்போதும் நிலையாக நிற்காமல், தேக மூப்பற்கும், தேக தொழிலுக்கும் தக்க, வேறு நூதன பதார்த்தங்கள் தெரிந்து எடுக்கப்பட்டு தேக சத்துவத்தோடு சேரச்சேர, பிறக்கும்போது இருந்த பழைய பதார்த்தங்கள், புது பதார்த்தங்களுக்கு தமது இடத்தைத்தந்து ஆவிரூபமாக அகன்றுவிடுவது பிரத்தியக்ஷம். இப்படி தேக விருத்திக்கு உபயோகமற்ற பழைய பதார்த்தங்களைக் கழித்தும், இன்றியமையா புது பதார்த்தங்களைச் சேர்த்தும் சரீரத்தைத் தேறும்படிசெய்யும் சக்தி எதுவோ அதுவே பிராணன்.

இரண்டாவது—மானிட சரீரம் அதிக உஷ்ணமுள்ள பாலிவனத்தில் இருக்கினும், அல்லது குளிர்ச்சியான உறைபனிக்கட்டிகள் நிறைந்த வடதுருவ மூனையில் இருக்கினும், அல்லது ஆகாயத்தில் தண்ணீர் வெக்கீராகும்படியான இடத்திலிருக்கினும், உஷ்ணவரையறை (Thermometer) கருவியைக் கொண்டு சோதிப்போமாகில், இந்த மானிட சரீரத்துக்கு இன்றியமையாத (98° டிகிரி) உஷ்ணம் இருப்பது பிரத்தியக்ஷம். இப்படி மானிடன் எப்படிப் பட்ட சிதோஷ்ண தேசத்தில் இருக்கினும், அவனுக்கு இன்றியமையாத உஷ்ணத்தை மாறிப்போகாதபடி பாதுகாக்கும் சக்தி எதுவோ அதுவே பிராணன்.

மூன்றாவது—பூமைய கவர்ச்சி சித்தாந்தத்தின்படி, ஜலமானது எப்போதும் கீழ் நோக்கி வடிந்து விடவேண்டியது அதன் இயற்கை தருமமாதலால், மானிட சரீரத்தில் பரந்து நிற்கும் ஜலபாகம், மானிடன் எழுந்து நிற்கும்போது அவனது அடிபாகமாகிய பாதங்களுக்கும், படுக்கும்போது முதுகுக்கு அடியிலும் வடிந்துவிடவேண்டும், அப்படி வடிந்துவிடாமல் அந்தந்த பாகத்தின் ஜலம், அந்தந்த பாகத்திலேயே இருக்கும்படி செய்வது ஹிருதயதாளகத்தொழிலேயாம். இப்படி ஹிருதயதாளகங்கள் நிரமேனு தம்தம் தொழில்களை செய்யச்செய்யும் சக்தி எதுவோ அதுவே பிராணன்.

நான்காவது—ஒரு பதார்த்தத்தை வேறொரு பதார்த்தம் அல்லது கருவியைக்கொண்டு உறைத்து தேய்த்தால் அது கரைந்து அழிந்துவிடுவது சுபாவம். இந்த பிரமாணப்படி உயிரற்ற சரீரமானது தேய்ப்பு, உறைப்புகளினால் மெலிந்து உறைந்து அழிந்துபோகின்றன. ஆனால் உயிருள்ள சரீரமோ தேய்ப்பு உறைப்புகளால் வன்மையைப் பெருகின்றது. கடினமான வேலைகளைச் செய்யப்பட்டவர்கள், அக்கடினமான பதார்த்தங்களை அடிக்கடி தொட்டுச் செய்வதில் அக்கடினபதார்த்தங்களின் தேய்ப்பு உறைப்புகள் அவர்களுடைய கைகளின் தோல்களை தடிக்கச்செய்து கெட்டியாக்குவதும்; காடு, கானல், கரடுகளில் சதா நடமாடுபவர்களுடைய பாதங்கள் நிரமேனு தடித்து காப்புக் காய்த்து நிடன் பெறுவதும் பிரத்தியக்ஷம். ஆகவே தேய்ப்பு உறைப்புகள் சரீரத்தை மெலிதாக்கி அழிந்துபோகச்செய்யும் சுபாவத்தைத் தடுத்து அத் தேய்ப்பு உறைப்புகளால் தேகத்துக்கு நிடனே கொடுக்கும் சக்தி எதுவோ, அதுவே பிராணன்.

ஐந்தாவது—(உயிரற்ற) சரீரத்தை தன் கடையாகவிட்டிருந்தால், அது அழுகிப்போக ஆரம்பித்த துர்காற்றமெடுக்கவும், அந்தச் சரீரத்தில் சமபந்தப்பட்டிருந்த பிருதிவி, அப்பு, வாயு முதலான பௌதிக பதார்த்தங்கள் பரந்து தமக்கு இனமான பிரபஞ்ச பௌதிக பதார்த்தங்களுடன் சேர்ந்துவிடுகின்றன,

இவ்வுலகிலுள்ள இருக்கும் பௌதிக பதார்த்தங்களை பிரபஞ்ச பௌதிக பதார்த்தங்களுடன் கலக்க மறைந்து போகாதபடி செய்யும் சக்தி எதுவோ, அதுவே பிராணன். இத்தியாதி தொழில்களினால் பிராணன் இன்னதென்று விளக்கப்படுகிறது. கேவலமாகிய ஓர் மானிட சரீரத்தின் வளர்ச்சிக்கும், உஷ்ணத்துக்கும், உருதிக்கும், உயிர்ப்புக்கும், வாழ்வுக்கும் பிராணன் இன்றி யமையாததாயிருக்கில், பிரம்மாண்ட கோளமாகும் இந்த ஜடஜகத்தாகிய சரீரம் பரமாத்துமாவாகிய பிராணன் இல்லாவிட்டால், ஒரு விநாடிகூடிலிற்குமோ?

நமது பூமியானது ஆதியில் அக்கினி ஜலரூபமாக இருந்து பிறகு அனந்தலக்ஷ வருஷகாலங்களாக தணல்விட்டு எரிந்து உருகிய லோகங்களின் மொத்தையாகி அகண்ட அக்கினிமயமான ஆவிகளாலும், பயங்கரமான புகை களாலும், மஞ்சுவாக்குக்கு எட்டா மேகங்களினாலும் சூழப்பட்டிருந்தது. பிறகு அநேக லக்ஷம் வருஷங்களாக அகண்ட ஜலரூபபிண்டமாகமாறி அந்த ஜலத்தில் கொஞ்சபாகம் சண்டி பூமிகிட்டம் தோன்ற (9,80,00,000) ஒன்பது கோடியே எண்பதுலக்ஷம் வருஷங்களாயின. ஸெண்டிகிரேட்டு கணக்கின்படி 20,000° ஸெண்டிகிரேட்டு உஷ்ணத்திலிருந்து 200° ஸெண்டிகிரேட்டுக்குத் தக்குளிர்ச்சியைப்பெற 35,00,00,000 மூப்பத்தைந்துகோடி வருஷங்களாயிரு க்கவேண்டும். இந்த ஸ்திதியில் பூமியானது உஷ்ணமறிவிக்கும் கருவியால் சோதித்தால், பாரினீட்டு கணக்கின்படி 212° டிகிரியிலிருந்து 77° டிகிரிக்கு குளிர்ச்சியையடைய சுமார் (2,29,80,00,000) இருநூற்று இருபத்தொனபது கோடியே எண்பதுலக்ஷம் வருஷங்களாகும்.

இந்த பூமி இப்படிப்பட்ட பயங்கர ஸ்திதியிலிருந்து இப்போது இருக்கும் படியான சுக சந்தோஷங்களுக்கு இருப்பிடமாவதற்கு காரணம யாது? கேவலம் அக்கினிமயமாயும், ஜலமயமாயும் பல்லாண்டுகளாக இருந்த இந்த பிரம்மாண்டமான பூமி தனது கினகதி வருஷகதியில் அணுவளவும் பிசகாமல் அசைந்தாடிக்கொண்டிருக்க தாங்கி நிற்பவர் யார்? பிராணஸ்வரூபியாகிய பரமாத்துமாவேயல்லவா? இதோ இந்த ஜகம் கேவலம் ஸ்தூல தேகத்தைப் போல பௌதிக பதார்த்தங்களால் நிறைந்துள்ள அசேதனப்பொருள். இந்த ஜக தேகத்துக்கு பரமாத்துமாவாகிய பிராணனில்லாவிடில் இது மற்ற சூரியா சந்திர அங்காரகாதி கிரஹங்களுடன் கிட்டித் தாக்கிக்கொண்டும், ஒன்றோ டொன்று இடித்து அடித்துக்கொண்டும், சின்னபின்னமாகியும் அதோகதியாய வியும்; அப்படிப்பட்ட அபாயங்களுண்டாகாதபடி பரமாத்துமா தனது சக்தி யினால் தாங்கி ஆட்டிக் கொண்டிருக்கிறார் என்பது நிண்ணம்.

இடி என்பது என்னவென்று தத்துவசாஸ்திரத்தின்படி சோதிப்போ மாகில், அது கேவலம் (எலக்ற்றசிற்றி என்னும்) மின்சாரத்தினாலுண்டாகும் கர்ஜ்ஜனையாம். நமது மண்ணுலகத்தை ஆகாயமாகிய வாயுசமுத்திரம் மூடிக் கொண்டிருக்கிறது. நமது பூமியின்மேல் இருக்கும் ஜலம் சூரிய வெப்பத்தி னால் ஆவியாக பரிணமித்து அந்த ஆகாய சமுத்திரத்தில் மேகங்களாக மாறு கிறதைப்போலவே, பொட்டிலுப்பு, கந்தகம், மெழுகு முதலான நிரசவஸ்துக் கள், லெ மேகங்களில் அதிகமாகச்சேரும். அதிகமாகச் சேரச்சேர அம் மேகங்கள் கருத்து அடர்ந்த காணுகின்றன. அப்படிக்கருத்த அடர்ந்து காணுவதனால், இனி நிரசவஸ்துக்கள் அம்மேகங்களில் சேர்ந்திருக்க முடி யாமல் ஒன்றக்கொன்று தேய்ப்பினால் எரிந்து நமது பூமியின்மீதாவது, அல்லது நிரஸவஸ்துக்கள் அதிகமாக சேர்ந்திராத வேறு மேகங்களின் மீதாவது மின்சாரமாகப்பாயும். அப்படி பாய்ந்த பரக்கும் பிரகாசமே

மின்னல். மின்னல், ஆகாய சமுத்திரத்தில் நியமென்ற பீறிக்கொண்டு பாய்வதனால் ஆகாய சமுத்திரம் அலையலையாக அலைக்கப்பட்டு பயங்கர சப்தம் உண்டாகிறது. இந்த சப்தமே இடி—மின்னல் ஒரு வினாடிக்கு (186000) லக்ஷத்து தொன்னூராயிரம் மயில்கள் தூரம்செல்ல, இடி ஒரு வினாடிக்கு (1115) ஆயிரத்து நூற்றுப்பதினைந்து அடிகள் தூரம் பீறிக்கொண்டு பாயும். இப்படிப்பாயும் ஓர் வெளிவெட்டின் வேகத்தைத்தடுக்க (12220) பன்னிரண்டாயிரத்து இருநூற்று இருபது குதிரைகளின் சக்தியுள்ள இயந்திரம் வேண்டும்; ஆ! இடியானது இந்த பிரபஞ்சத்துக்கு எவ்வளவு பயங்கரமானது.

ஆகவே, பரமாத்துமா இவ்வுலகத்திற்கு பிராணன்; அவரிடத்திலிருந்தே எல்லா உலகங்களும் உண்டாகி அவரைப்பற்றிக்கொண்டே அந்தரத்தில் அசைந்துக்கொண்டிருக்கின்றன. எதுவும் அவரது கருத்தை மீறி நடக்க வல்லதல்ல எதுவும் அவரது நியமத்தினாலேயே அதனதன் செய்கைகளில் நியோகிக்கப்பட்டிருக்கின்றன. யார் காமகோரோதலோப மோஹாதிகளில் மனதை யடைந்து பாபத்தில் விருப்பமுடையவர்களாகி அவரால் நியமிக்கப்பட்ட தருமமாகிய எல்லையைக்கடந்து செல்லுகின்றனரோ அவர்களுக்கவர் இடிக்கிற இடியைப்போல் அதிபயங்கரமானவராகிறார். யார் அவரை சாந்தம், சத்தியம், பக்தியினால் அறிகின்றனரோ அவர்கள் நித்திய பதவியைப்பெற்று அழிவற்ற பிரமானந்தத்தை யனுபவிக்கின்றனர்.

WHATEVER is in this world, all proceeding from God, move in Him the Life: He is most terrible and is as the impending thunderbolt. They who know Him attain Immortality.

---

(7). முண்டகோபநிஷத்து

• 2-வது முண்டகம் 2-வது கண்டம் 5-வது வாக்கியம்.

அஸிந்தயௌஜ்ப்ரிதுவீசாந்தீஷு மோதம்மநஜ
லஹப்ராணஸ்ச லாவேஹி; தமேவைகம்
ஜாநத ஆத்மாந மகயாவாசோ விமுஞ்சத
அமருதஸ்யைஷ ஸேதுஹ.

பொழிபபுரை.

இவரிடத்தில் விண்ணுலகமும், மண்ணுலகமும், ஆகாயமும், மனதுடன எலலாபபெறிகளும நிலைபபட்டிருக்கின்றன. ஒன்றுமிய அநாதி பரமாதமாவை அறியுங்கள், அவருக்கு புறம்பாகிய வார்த்தைகளை விடுங்கள், மோக்ஷமாக்கத்துக்கு இவர் சேதுவைப்போன்றவர்.

விசேஷ உரை.

ஆகாயமானது இந்த பிரபஞ்சத்தின் எல்லா பக்கங்களிலும் வியாபித்து கவிந்துக்கொண்டிருக்கும் இயற்கைப்பொருள். அது நாம் கண்ணினால் காணக்கூடாததும், தெளிவும், வருணமற்றும் சோனாதமாக இருக்கிறும், பிரபஞ்சத்திலுள்ள மற்ற பதார்த்தங்களுக்குள்ள சலனம் எடை முதலிய குணங்கள் உண்டி. நாம் அதை பரிச உணர்ச்சியினால் அறிந்துக் கொள்வதோடுட்ட

அது அனைத்து நமது தேகத்தின்மீது தாக்கும்போதும் தெரிந்துக்கொள்ளு கிறோம். இவ்வளவு லேசான இந்தப் பொருளைத் தருத்த கருவியைக்கொண்டு சோதிப்போமானில், ஒரு கன அடி எடையுள்ள ஆகாயத்தின் பளுவு 573½ கெல் லெடை உள்ளதாகவும், பதிமூன்று கன அடி எடை ஒரு ராத்தலாகவும், இந்த கணக்கின்படி பூமியின்மேல் பரவி இருக்கும் ஆகாயத்தின் பாரம் ஒவ்வொரு சதுரங்கலத்தின் மீதும் பதினேந்து ராத்தலுக்குக் குறையாத அளவினதாய் இருக்கிறதன்றியில், 27,810 கன அடியுள்ள ஆகாயம் ஒரு டன் எடையுள்ள தென்றுங் காணப்படுகிறது. சாதாரண ஆரோதமுள்ள ஓர் மானிட சரீரத்தில் 2,000 சதுரங்குல வீதியுண்டு. இப்படிப்பட்ட சரீரம் அதைச்சுற்றியிருக்கும் 30,000 ராத்தல் அல்லது சுமார் பதினைந்து டன் ஆகாயத்தினால் அழுத்தப்படு கின்றது. அப்படி அழுத்துவதில் சரீரம் நசுங்கிப்போகாமலிருப்பதற்கேற்ற ஜலபாகம் தேகத்திலிருப்பதால் ஒன்றையொன்று அழுத்துவதனால் சரீரம் கூட ஸ்திதியைப் பெருகின்றதாம். ஆகாயமானது நமக்கு அதிசமீபத்திலிருக்கி னும், அது நமது பூமிக்கு நாற்பத்தைந்து மயில் உயரம் வரையில் பரவி அகன்ற சமுத்திரத்தைப்போல் கவிந்துக்கொண்டிருக்கிறது. இதை இருநூறு மயில் உயரம் வரையில் பரவி இருப்பதாக எண்ணுவோருமுண்டு.

ஆகாயம் என்பது ஓரே பூதியம் என்று அநேக வருஷங்களாக எண்ணி இருந்தார்கள். பிறகு போன நூற்றாண்டிலே அதைத் தக்கபடி பரிசோதிக்க ச்சே அது ஆக்விஜன் (Oxigen) என்னும் தண்ணீரிலிருக்கிற பிராணவாயுவு ஒரு பங்கும், நைட்ரோஜன் (Nitrogen) என்னும் உப்பு வாயுவு நான்கு பங்கும் கொஞ்சம் (Carbon) கரிவாயுவாதிகள் கலந்ததாய் காணப்பட்டது. இதில் பிராணவாயுவுதான் ஜீவஜந்துக்களுடைய பிராணதாரம். ஆனால் ஆகாயம் முழு வதும் இந்த பிராணவாயுவாக இருந்தால் எந்தஜந்துவும் உயிரற்றுப்போம். ஆகவே அது உப்புவாயுவோடு அளவாக கலக்கப்பட்டிருக்கிறது. ஜீவஜந்துக்கள் சுவாச த்தை உள்ளே வாங்கும்போது இந்த மிசர வாயுவை உள்ளே கொள்ளுகின்றன. இந்தமிசர வாயுவில் உள்ள ஆக்விஜன் (Oxigen) பிராணவாயுவு சுவாசாசயத்தில் அமைந்திருக்கும் இரத்த நரம்புகளிலுள்ள இரத்தத்தோடு கலந்து அதைச்சுத்திப் படுத்தி சுவாசத்தை வெளியில்விடும்போது, ஜீவகோடிகளுக்கு உபயோகமற்ற நைட்ரிஜின் (Nitrogen) என்னும் உப்புவாயுவும் தேகத்திலுண்டாகும் விஷத் தன்மையான கரித்தாவகம் போன்ற வாயுவும் வெளியில் வந்துவிடுகின்றது. ஜீவகோடிகளுக்கு உபயோகமற்று வெளியில் வந்துவிடும் இந்த விஷவாயுவு கந்தமூலங்களாகிய புல், பூண்டு, செடி, மரங்களுக்கு இன்றியமையாததாயிருக் கின்றன. இந்த விஷவாயுவை சோதிப்போமானில் இது அடுப்புக்கரி (carbon) சத்தும், ஆக்விஜன் (Oxigen) என்னும் பிராணவாயுவும் கலந்த மிசரவாயுவாக இருக்கிறது. இந்தவாயுவிலுள்ள அடுப்புக்கரி சத்தை கந்தமூலங்களாகிய தாவரங்கள் சூரியன் வெளிச்சத்தின் உதவியால் பிரித்து கிரஹித்துக்கொண்டு அதற்கு உபயோகமற்ற ஆக்விஜன் (Oxigen) என்னும் பிராணவாயுவை வெளி ப்படுத்த, அந்தப் பிராணவாயுவை ஜீவகோடிகள் கிரகித்துக்கொண்டு வாழுகின் றன. ஜீவகோடிகளும் தாவரங்களும் ஆகாயம் என்னும் இந்த பூதியத்தை இப் புடிப் பிரித்து தம் தமக்கு இன்றியமையாத சத்தைக்கோ கிரஹித்துக்கொண்டு ஒன் றுக்கொன்று உதவிசெய்துக்கொள்வது என்ன ஆச்சரிய அமைப்பு! ஆகாயத் தின் உதவியிலுல்தான் பூமியில் அருளோதயத்துக்கு முன்னும், அஸ்தமனத் துக்கு பின்னும் படிப்படியாக வெளிச்சமுண்டாகவும், படிப்படியாக வெளிச்சம் குறையவும் ஆகிறது. ஆகாயமில்லாவிடில் ஆதித்தன் அஸ்தமனமான உடனே நிசரென்று இருள் பிரபஞ்சத்தைக் கவிந்துக்கொள்ளும். மேலும் ஆகாயம்

அண்டத்தைசூழ்ந்துகொண்டிருப்பதால் வெய்யோன் வெப்பத்தினால் சுட்டை, குளம், சமுத்திரங்களிலிருக்கும் ஜலமானது ஆவிரூபமாக எழுந்து ஆகாயத்தில் சேர்ந்த நிற்க, அந்த ஆவி குளிர்ச்சியினால் ஜலரூபம் பெற்று மழைத்தளிகளாக பூமியின்மேல் விழுகின்றது. இம்மட்டோ! ஒருவர் பேசும்போது ஆகாயசமுத்திரத்தில், அலைகளுண்டாகி அவ்வலைகள் நமது காதில்மோத நமக்கு தொனி கேட்கச்செய்கிறது. அது பூமியை அதிகமாக குளிர்த்தபோகாமலும், அதிகமாக உஷ்ணமிக்காமலும் ஓர் மெலிந்த தணிபோலிருந்து சித உஷ்ணங்களை சமப்படுத்தின்றது. இந்த பூமியில் சேரும் அசுத்தங்களை நீக்கி பரிசுத்தமாக்குகின்றது. ஆகாயம் இல்லாவிட்டால் எல்லா ஜீவஜெந்துக்களும், தாவரங்களும் பாழ்த்தப்போம். தீயும் விளக்கும் எரியாது, கப்பலோடாது, பக்ஷிகளின் ஓசையும் கேட்காது, தேவாத்தியங்கள் இருந்தும் பிரயோசனமில்லை. ஆகவே, ஆகாயம் நமக்கும் மற்ற புல் பூண்டு பிராணி சமூஹங்களுக்கும் இன்றியமையாத பதார்த்தம். இப்படிப்பட்ட பெரும் பிரயோஜனமுள்ள ஆகாயத்தை அந்த அத்புத புருஷரே படைத்தார். இப்போது நமது பூமியைச்சுற்றிக்கொண்டிருக்கும் ஆகாயமானது 8,983,889,440,000,000,000 பிரஞ்ச ராத்தல் கனமுள்ளதாக கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே,

பரமாத்துமாவே யாவற்றிற்கும் இரக்ஷகர். இவரே யாவற்றிற்கும் ஆதாரமானவர். இவரை அறியுங்கள், இவருக்கு புறம்பான வார்த்தைகளை விட்டுவிடுங்கள். இவரைவிட்டு ஒரு வார்த்தையும் சொல்லாதேயுங்கள், இவரைவிட்டு ஒரு விஷயத்தையும் நினையாதேயுங்கள், இவரைவிட்டு ஒரு காரியதையும் செய்யாதேயுங்கள்; உண்மையாக இவருடைய சரணையடையுங்கள்; அப்பொழுது உலக பாபதாபமோகங்களிலிருந்து விடுபட்டு அழியாப்பதவியை யடைவீர்கள். இவர் அழியாப்பதவியை அடைவிக்கும் மார்க்கத்திற்கு சேதுவைப் போன்றவர்.

By Him are sustained the heavens, the earth, the sky, and mind with all the senses. Know Him, the One, and leave all talk else. He is the Bridge to Immortality.

---

(8). முண்டகோபநிஷத்து

2-வது முண்டகம் 1-வது கண்டம் 3-வது வாக்கியம்.

ஏதஸ்மாஜ்ஜாயதேப்ராணோ மநஸர்வேந்த்ரியாணிச;
சம்வாயுர்ஜ்யோதிராபஸ்பருதிவீ
விஸ்வஸ்யதாரிணீ.

பொழிப்புரை.

இவரில் பிராணனும், மநசும், எல்லா இந்திரியங்களும், வானமும், காற்றும், தீயும், யாவற்றையும் தாங்கிகொண்டிருக்கிற பூமியும் உண்டாகின்றன.

நமது பூமி சிருஷ்டிக்கும்போது அக்கினி ஜலரூபமாக இருக்கையில், இதில் ஒருவித அக்கினி ஜலவில பிராணிகளாக சிருஷ்டிக்கப்பட்டும், அவைகள் மடிந்த பிறகு அவற்றின் பிராணவாயு அமிலவாயுக்களால் பிரபஞ்சமே ஜலரூபமாக மாற்றப்பட்டும், இந்த ஜலப்பிரபஞ்சத்தில் அநேககோடி அணுரூபமான பிராணிகளும்,

தாவரங்களுமாக இருந்திருக்கப்பட்டும், இந்த ஜலப்பிராணிகளும் தாவரங்களும் அங்கே வருவதங்கள் வதித்தபிறகு, அவற்றின்தோல் ரம்பு நிணம் குடல்களால் ஒருவிதகளிமண்ணும் எலும்பு ஓடுகளால் மணல் முதலானதுகளாகி கலந்து பூமியின் கிட்டமாகி, அந்தகிட்டமேஅந்த வருவதங்களான பிறகு பல்கி கெட்டியாகி பூமியின் பிரதிருதிபாகமாகமாற்றப்பட்டும்,பிறகு அந்தவருஷகாலங்களாக இந்த பிரதிருதி மண்ணேப்போலவும் தாவரவர்க்கங்களேப்போலவும், அந்தகோடி பிராணிகள் படைக்கப்பட்டு, அவைகளும் அந்தகாலம் வதிந்த மடிந்த அவற்றின் மலம், உடல், எலும்பு முதலானதுகளால் பூமியின் பிரதிருதிபாகம் கெட்டியான தாகவும் பூசத்தவசாண்தீரம் முறையிடுகின்றது. இதனால் இப்பிரபஞ்சம் ஆதியில் அக்கினி ஜ்வலரூபமாகவும், பிறகு அந்தகாலம் ஜலரூபமாகவும் இருந்தகாலத்தில் இருந்த பிராணிகளின்தசை தோல், ரம்பு மலம் எலும்புகளினலும்; தாவரசத்துக்களாலுமே பிரதிருதி (மண்) பாகமாகமாற்றப்பட்டதென்று ப்பஷ்டமாகிறது. இதற்கு திருஷ்டாந்தமாக இந்த பூமியின் பலபாகங்களில் வெட்டிப்பார்க்கில் தாது தாவர பிராணிகளின் ரூபமான அங்கங்கள் மண் பாறைகளுக்குள்ளும் பரந்து இருத்தல் பிரத்தியக்ஷமாகும்.

பூமியானது ஜலரூபமாக இருந்தகாலத்திலுண்டான ஜலபிராணிகளின் தேகக்கூடுகளாகிய கிளிஞ்சில்கள், பலகரைகள், சங்குகள், நத்தையோடுகள், ஞண்டுஓடுகள், பவளத்தண்டுகள், மீன்சப்பட்டைகள் முதலானதுகள் பூமியின் அடியிலும், பாறைகளுக்கு அடியிலும் காணுகின்றன. அந்த ஜலபிராணிகள் இக்காலத்து ஜலபிராணிகளுக்கு வேறு (நபமுடையவைகளாகவும் இருக்கின்றன. அக்காலத்திலிருந்த பிராணிகள் இக்காலத்தில் இல்லை. இக்காலத்திலிருக்கும் பிராணிகளின் ரூபங்கள் வேறு வேறு வகையாக இருக்கின்றன. இவைகளுக்கு கணக்கேகிடையா. தாது ரூபமான பிராணிகள் அநந்தம், தாவரவர்க்க ரூபமான பிராணிகள் அநந்தம். மண்ணேப்போலவும், கல்லேப்போலவும் இருகும் பிராணிகளநந்தம், இலையைப்போலவும், சருகைப்போலவும், காயைப்போலவும், கனியைப்போலவும் இருக்கும் பிராணிகள் அநந்தம். நமது சாதாரண பார்வைக்குத்தோன்றுமல் கேவலம் அணுதரிசினி முதலான கண்ணுடிகளின சகாயத்திலுல் மாததிரம் பார்க்கக்கூடிய பிராணிகள் அநந்தம். அணுதரிசினி முதலான கண்ணுடிகளுக்கும் அகப்படாமல் அந்தரத்தில் அணுவிலும் அணுவாக இருக்கும் பிராணிகள் அநந்தம். நாம் குடிக்கும் ஜலத்தில் இருக்கும் பிராணிகள் அநந்தம், நாம் சுவாசம் விடும்போது நமக்குள் போவதமும் வருவதமாக இருக்கும் பிராணிகள் அநந்தம். நமது தேகத்தின் வெளியிலும் உள்ளிலும் வதித்து வரும் பிராணிகள் அநந்தம். ஆகவே, நமது பார்வைக்கு ஜடஜகத்தாய் இருக்கும் இந்த பிரபஞ்சமே ஒரு பெரிய பிராணி என்று சொல்லலாம்.

இதன் எந்தப்பக்கத்திலும் பிராண சத்துக்கள் நிறைந்திருப்பது பிரத்தியக்ஷம். இதன் எந்த அணுவிலும் உயிருள்ள சத்துக்களிருத்தல் பிரத்தியக்ஷம். இதன் ஒவ்வொரு பௌதிக அணு உயிர்கள் தமக்கினமான அணுக்களோடி தாவித்தழுவுதல் பிரத்தியக்ஷம். இதன் ஒவ்வொரு பிராணியும் தமக்கினமான வற்றை கவர்ந்து தம்மைப்போல் ஆக்கிக்கொள்ளுதல் பிரத்தியக்ஷம். பருவத சொரக்கள் இந்த பூமியாகிய பெரிய பிராணியின் சுவாசக்கருவிகளாக இருக்கின்றன. பெரிய ஆறுகள் இரதத்சுருடல்களாக இருக்கின்றன. இதிலிருக்கும் செடி, கொடி, விருக்ஷங்கள் ரோமங்களேப்போலிருக்கின்றன. அன்பு நிறைந்த அன்னேபானைவன்தனது அருமை மக்களேக் கட்டித்தாவி மார்போடனேத்த பால் கொடுத்து பாதுகாப்பதுபோல் பிரபஞ்ச பிராணியாகிய தாய் தனது அடியாக

மாயிய உடலில் சகல பொருள்களையும் உற்பத்தியாக்கி அதன் மக்களாகிய அநந்தகோடி தாவர ஜங்கமங்களை போஷித்து வருகின்றன. ஆ! என்ன! ஆச்சரியமான அமைப்பு! இந்த பிரபஞ்சத்திலிருக்கும் பிராணி கோடிகளின் கணக்கையும், பேதங்களையும் எண்ணி முடிய யாராலாகும்?

இதுவரையில் மானிட காஷ்டிக்கும், கேள்விக்கும் தெரிந்தம், ஜந்து லக்ஷண சாஸ்திரிகளால் குறிக்கப்பட்ட கணக்கை சோதிப்போமாகில், இந்த உலகில் கேவலம் ஜலபாசியைப்போல அசைந்து வாழும் பிராணிகளில் 20,000 விதவகுப்புகளும், பால்கொடுத்து பாதுகாக்கும் பிராணிகளில் 2,000 விதங்களும்; மீன்களில் 12,000 விதங்களும், அணுரூப ஜந்துக்களில் 10,000 விதங்களும், சமுத்திர கிளிஞ்சல் ரூபமான பிராணிகளில் 6,000 விதங்களும், பூமி தத்தை வகைகளில் 2,000 விதங்களும், சிறு பூச்சி இனங்களில் 70,000 விதங்களும், வண்டு இனங்களில் 35,000 விதங்களும், இரத்தமுள்ள பிராணிகளில் 300,000 விதங்களும், மின்னும்பூச்சிகளில் 10,000 விதங்களும், வண்ணுர பூச்சி இனங்களில் 15,000 விதங்களும், பக்ஷி ஜாதிகளில் 6,000 விதங்களும், மிருக ஜாதிகளில் 2000 விதங்களும் இருப்பதாக கணக்கிட்டிருக்கிறார்கள்.

மானவ ஜாதியாராகிய நாமும் பிராணிகளே. ஆனல் நாம் மற்றெல்லா பிராணிகளைப்பார்க்கிலும் மேன்மையான மனதையுடையவர்களாக படைக்கப் பட்டிருப்பதால், இந்த பிரபஞ்ச பிராண சிருஷ்டியில் மனுஷர் சிறந்தவர்கள்.

பிராணன் என்பது இன்னதென்று முன்னமே தெரிவித்தோம். சிலர்: பிராணனே, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆத்மா என்றிதி பல பெயர் களுடையதென்று எண்ணுகிறார்கள். சிலர்: பிராணன் என்பது கேவலம் உயிர் அல்லது ஜீவன் என்றும், அது தன்னைப்பற்றியாவது அல்லது வேறு விஷயத்தைப்பற்றியாவது யோசிக்கும் தசைக்கு மனம் என்ற பெயரைப் பெறுகிறதாகவும் எண்ணுகிறார்கள். ஆத்மமதத்துவசாஸ்திரிகளில் சிலர்: மனம் என்றால்—அது தன்னையும் வேறு பதார்த்தங்களையும்பற்றி நினைக்கிறதோ, கருது கிறதோ, எண்ணுகிறதோ, உணருகிறதோ, யூகிக்கிறதோ, சிந்திக்கிறதோ, வெறுக்கிறதோ, விரும்புகிறதோ, நிதானிக்கிறதோ, கவனிக்கிறதோ, சம்ம திக்கிறதோ, இத்தியாதி பலவித பகுத்தறிவுகளுக்கெல்லாம் கருவியாக இருக் கும் சக்தி எதுவோ அதுவே மனது என்று தீர்மானித்தார்கள். மனது என் னும் சேதனம் இல்லாவிடில் பிரபஞ்ச பௌதிக பூதியங்கள் ஒன்றோடொன்று சேரவும், சேர்ந்தவை பிரியவும் முடியா—மற்ற தாவர ஜங்கம ஜீவ்களும் தம் நிலையைவிட்டு நகரவும் தமக்கு இனமான வேறு பொருள்களைத் தம்மிடம் வருவிக்கவும் முடியா—ஆகவே, இந்த பிரபஞ்ச சிருஷ்டிகளுக்கு மனதே முக்கியமானது.

நீ.—என்பது இன்னதென்று நிட்டமாக அறிந்தவர்கள் அபூர்வம். இரசாயன சாஸ்திரப்படி சோதிப்போமாகில், இந்த பிரபஞ்சத்தில் இருக்கும் உஷ்ணம், வெளிச்சம், ஸ்காந்தம், மின்சாரம் என்னும் நான்கு சூக்ஷமபூதியங் கள் மற்ற பதார்த்தங்களை தம்மயமாக்கிக்கொள்ளும் சக்தியைப் பெற்றிருக்கி றதாம்; ஆகவே, நீயின் சத்து சகல பதார்த்தங்களிலும் அடங்கி இருக்கி றது. அது கேலோரிக் தாபகர தாதுவினலும், தேய்ப்பு, உறைப்புகளினலும் வெளியில் வந்து பிரபஞ்ச பாகுபதார்த்தங்களை கெட்டியாக்கியும், கெட்டியான பதார்த்தங்களை பாகுபதமாக்கியும் பின்னும் பல கண்மைகளுக்கு இன்றியமையா தியமாயிருக்கின்றது.

ஆதியில் அக்னி ஜ்வல ஆயிராக சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்தின்

அடியில் அகண்ட அக்கினிக்கடல்கள் இருந்தும் அது பிரதி நிமிஷந்தோறும் சுற்றும் உஷ்ணத்தை, பார்த்தியாக்க சூரியன் முதலான வேறு கிரஹங்களி லிருந்து அடிக்கடி உஷ்ணம் வராவிட்டால், இந்த பிரபஞ்சமே ஓர் பெரிய பனிக்கட்டியாகிவிடும்.

நமது பூமியானது ஒரு பனிக்கட்டியாகக்கொண்டு சூரியனிடமிருந்து ஒவ்வொரு வருஷத்திற்கு வரும் உஷ்ணத்தை இந்த பூமியின்மேல் பரப்பினால் அந்த உஷ்ணம் 100 கன அடி பனிக்கட்டியை கரைத்து நீராக்கிவிடும்; அல்லது வருஷாந்திரம் சூரியனிடமிருந்து ஒவ்வொரு சதுர அடிக்கு வரும் உஷ்ணம் ஒரு கன அடி நிறையுள்ள பனிக்கட்டி 54 ராத்தலானால், 5,400 ராத்தல் பனியைக் கரைத்தவிடும். இந்த சூரிய உஷ்ணம் இப்படி இந்தப் பூமிக்கு வராவிட்டால், அது அந்த சூரிய உலகத்தில் 55748 அடி அல்லது பத்தரை மயில் கனதியுள்ள பனிக்கட்டியைக் கரைத்தவிடும். இத்தியாதி கணக்குகளினால் சூரியன் நமது பூமிக்கு வருஷந்தோறும் அதன்மேல் 100 அடி கனமுள்ள பனிக்கட்டியைக் கரைக்கும்படியான உஷ்ணத்தையும்; மற்ற கிரஹங்கள் 85 அடி கனமுள்ள பனிக்கட்டியைக் கரைக்கும்படியான உஷ்ணத்தையும் தரு கின்றன. இப்படிப் பெறுவதில் சூரியனிடமிருந்து வரும் உஷ்ணத்தில் நூற் றுக்கு காற்பது பாகத்தையும், மற்ற கிரஹங்களிலிருந்து வருவதில் நூற்றுக்கு 60 பாகத்தையுதம் ஆகாயம் கிரகித்துக்கொள்ளுகின்றது. இந்த பூமியின் பெரும் பாகமான வெளிச்சமும், உஷ்ணத்தோடே வருகின்றது. வெளிச்சம் ஒரு வினாடிக்கு 190,000 மயில் வேகமாக ஓடக்கூடியதாயினும், பூமிக்கும், சூரியனு க்கும் 9 கோடியே 20 லக்ஷம் மயில் தூரமிருப்பதனால், சூரிய வெளிச்சம் பூமிக்கு வர சுமார் 8 நிமிஷங்களாகும்.

மேகம்.—சமுத்திரம், குளங்குட்டைகளில் உள்ள ஜலம் சூரிய உஷ்ணத் தினால் ஆவியாக மேலே எழும்பி ஆகாயத்தில் நிற்பதே மேகமாம். பூமியின் மீதுள்ள சமுத்திரங்களிலிருந்து பிரதி தினமொன்றுக்கு 450 கோடி ராத்தல் நிறையுள்ள ஜலம் ஆவியாகப் போய் ஆகாயத்தில் சேருகின்றது. இப்படி ஆவி யாக பரிணமிக்கும் ஜலம் நுண்ணிய நீர்த்துளிகளாகவும், அணுக்களாகவும் ஆகாய த்தில் தொங்குகின்றன. இப்படி ஆகாயத்தில் தொங்கும் ஆவிரூபமான மேகங்களின்மேல் சூரியனுடைய பிரகாசம் விழ அவைகள் காலைமாலைகளில் பொன்மலை, வெள்ளிமலைகளைப்போலவும், பின்னும் பலவித வர்ணபர்வதங்களை ப்போலவும் பிரகாசிக்கின்றன. இப்படிப் பிரகாசிக்கும் அநேக மேகங்கள் பூமிக்கு இரண்டு மயில்களுக்குள்ளாகவே இருக்கினும், சில ஐந்தாறு மயில்கள் வரையிலிருப்பதாக எண்ணுவோருமுண்டு. பலமான காற்று வீசும்போது மேகங்கள் ஒரு மணிக்கு நம்பது அல்லது அறுபது மயில்கள் ஓடும். இப்படி ஆவியாய்ச் சேரும் மேகம் குளிர்ச்சியினால் மறுபடியும் ஜலரூபமடையும்; அந்த ஜலம் ஆகாயத்தைவிட பளுவானதாகையால், ஆகாயத்தில் மிதக்கமாட்டாமல் காற்றினால் இங்குமங்கும் கொண்டுபோகப்பட்டு தளித்தளியாகப் பூமியின் மேல் மழையாகவிழும். இப்படி பூமியின்மேல் ஒரு வருஷத்தில் பெய்யும்மழை ஒரு லக்ஷ கன மயில் அடக்கிய ஓர் தடாகத்தை நிரப்பக்கூடியதாக இருக்கு மென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இப்படிப பெய்யும் மழைநீரில் சிலபாகம் பூமியில் சுவறியும், சிலபாகம், பயிர், பச்சை, செடி, ஜெந்துகளுக்கு உபயோக மாகியும், பெரும்பாகம் நிற்றோடைகளாகவும் பேராறுகளாகவும் பாய்ந்து சமுத்திரங் களில் விழ, மறுபடியும் சூரிய உஷ்ணத்தினால் ஆவியாக எழுந்து ஆகாயத்தில் சுற்றும் மேகரூபமாக மாறி, மறுபடியும் மழையாக பூமியின்மேல் பெய்து பெருமைப்படுத்துகின்றது. இப்படி மேகமானது மழையாகப்பெய்யும் தண்ணீர் எவ்வளவு அருமையானது.

காற்று.

பூமியின் ஒரு பாகத்திலிருக்கும் ஆகாயமானது உஷ்ணமாகும் போது அது மேலெழும்ப, அயலிலிருக்கிற குளிர்ந்த ஆகாயம் அதன் ஸ்தானத்திக்கு ஒடிவந்து அதை நிரப்புகிறது—ஆகாயத்தின் இந்த ஓட்டமே காற்று—காற்றுகளில் பலவகைகளும் பலபெயர்களும் உண்டு.

இந்தசமுத்திரத்தின் வடகிழக்கு தென்மேற்குமாய் மாறி மாறி யடிக்கிற காற்றை பருவகாற்றென்றும்; நிரந்தரமாகைக்கு இருபக்கத்தில் வருஷமுழுதும் ஒரே திசையாக அடிக்கும் காற்றுக்கு வர்த்தககாற்றென்றும், சிலவேளைகளில் ஒரு திசையாயும், சிலவேளைகளில் இன்னமொரு திசையாயும் வீசுகிற காற்றுக்கு மாறு காற்றென்றும், வெவ்வேறு திசையான காற்றுகள் ஒன்றையொன்று சந்தித்து சேர்ந்து சுழல்வதனால் சுழல் காற்றென்றும்; விஸ்தாரமான இடமெல்லாம் சுற்றி வீசும் சுழல்காற்றுக்கு புயல் காற்றென்றும் பின்னும் பலவகைக் காற்றுகள் பலவகைப் பெயர்களைப் பெற்றிருக்கின்றன. இக்காற்றுகள் சாந்தமான காற்று மணி ஒன்றுக்கு 7 மயிலும், இளந்தென்றல் 14 மயிலும், சிறான கல்ல காற்று 21 மயிலும், கடுங்காற்று 40 மயிலும் பெருங்காற்று 60 மயிலும், புயல்காற்று 80 முதல் 150 மயிலும் ஓடும். மணி ஒன்றுக்கு 100 மயில் ஓடும் வேகத்தையுடைய காற்று ஒரு சதுரடியின்மேல் 50 ராத்தல் பாரத்தையுதைக்கும் சக்தியுள்ளது.

தண்ணீர்.

அநேக ஆயிரவருஷங்களாக அப்பு என்னும் தண்ணீர் ஓர் தனிச்சரக்கு அல்லது தனிபூதியம் என்று எண்ணப்பட்டிருந்தது. இதன் பெருமையைப்பற்றி இருநூறுவருஷங்களுக்குமுன் சோதிதப்பார்க்கையில் இதில் ஆக்ஷிஜன் என்னும் பிராணவாயும், அதற்கிரண்டத்தனை பாகமுள்ள (Hydrogen) என்னும் ஜலவாயும் கலந்த கலப்பென தெரியவந்தது. இந்த ஜலவாயு எரியும்படியான சரக்கு, பிராணவாயு எரியும்படியான சக்தியற்றதாக இருக்கினும், எரிகிறதற்கு உதவிசெய்கிறது. தண்ணீரில் இந்த இரண்டு வாயுகள் சேர்ந்திருப்பதை பரிக்ஷிக்க விரும்பில், மின்தாதவினால் இந்த இரண்டையும் வாயுவாக பிரித்து விடலாம், அதேமாதிரியாகவே இந்த இரண்டு வாயுகளே சரியான அளவு கலந்த மின்தாதவின் சகாயத்தால் மறுபடியும் தண்ணீராக்கிவிடலாம். இப்படி இரண்டு வாயுகளால் உண்டான தண்ணீரின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ? ஆகவே,

உலகம் படைத்ததற்கு வேண்டிய நீர், காற்று, நீ முதலிய உபகரணங்களும், பிராணம், மனசு, மெய், வாய், கண், மூக்கு, செவி முதலான எல்லாப் பொறிகளையும் இவற்றைக் கேவலம் அந்த எல்லாம் வல்ல பூரண புருஷனே விரும்பிப் படைத்தார்.

By Him are created life, mind, and all the senses, sky, air, light, water and the all containing earth.

(9). பிருஹதாரணியம்

[illegible] அத்தியாயம் 8-வது பிராஹ்மணம் 9-வது வாக்கியம்.

ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரசாஸனே கார்கி!
நிமேஷா முஹூர்த்தா அஹோராத்ராண் யார்த்த
மாஸாமாஸா ரித்வஹ் ஸம்வத்ஸரா இதி
விதிருதாஸ்திஷ்டந்தி.

பொழிப்புரை.

ஓ! கார்கி! இவ்வழிவற்ற பொருளினது நியமனத்தினால் நிமிஷங்களும் முகூர்த்தங்களும் அஹோராத்திரிகளும் பக்ஷங்களும் மாதங்களும் பருவங்களும் வருஷங்களும் நியமத்தில் வைக்கபட்டிருக்கின்றன.

விசேஷ உரை.

காலம்.

காலமும் இடத்தைப்போல வகுக்கப்படாதது; ஆயினும் ஒவ்வொரு பதார்த்தங்களுக்கு இடையிலிருக்கும் இடத்தைக்கொண்டு அளவை அறிவதைப் போலவே, பதார்த்தங்களின் யாதாவது இரண்டு இயக்கம் அல்லது சலனத்தினால் கால அளவை அறிந்தக்கொள்ளுகிறோம். இந்த பூமி தன்னைத்தானே சுற்றுவதனால்தான் கால அளவை அறிகிறோம்—இந்தப் பூமியைச் சூரியன் சுற்றி வருகிறதாக சிலர் எண்ணினார்கள். ஆனால் ஜோதி சாஸ்திரப்படி சோதிக்கிச்சே, அது பிசகென்று கண்டிபிக்கப்பட்டது. நமது பூமியானது தன்னைத்தானே சுற்றுவதனால் நாம் சூரியனே கிழக்கில் காணும்படி அதன் பக்கமாக கம்மை திருப்புகிறது; பூமி சுற்றச்சுற்ற, தூரத்திற் போவதனால் சூரியன் மேற்கில் இறங்கிவிடுவதுபோல தோன்றுகிறது. இதனால்தான் இராப்பகல் என்ற பேதமுண்டாகிறது. இப்படி தன்னைத்தானேச் சுற்றிக் கொண்டிருக்கும் பூமி சூரியனைச் சுற்றி வருவதற்கு ஒருதரம் சுழல்வதனால் பருவதால பேதங்களுண்டாகின்றன. எப்படியெனில், நமது பூமியின் அது பத்து அசைவுகள் அல்லது சலனத்தால் ஒரு விநாடியும், அறுபது விநாடி ஒரு நாழிகையும், இரண்டரை நாழிகை ஒரு ஹோரையும், மூன்றேமுக்கால் நாழிகை ஒரு முகூர்த்தமும், ஏழரை நாழிகை ஒரு ஜாமமும், எட்டு ஜாமம் ஒரு சாளும், ஏழு நாள்கள் ஒரு வாரமும், நான்கு வாரங்கள் ஒரு மாதமும், இரண்டு மாதங்கள் ஒரு பருவமும், ஆறு பருவங்கள் ஒரு வருஷமாக வகுக்கப்பட்டிருக்கின்றது.

காலத்தை தத்துவசாஸ்திரிகள் நிலையின் அளவு என்றும், கவிகள் காலம் சாஸ்வதத்தின் ஒரு துண்டு என்றும் சொன்னார்கள் காலபேதம் இல்லாவிட்டால் உலக வியாபாரம் விருத்தியாகாது. காரணகாரியங்களை அறிவது கஷ்டம்; ஆகவே, அந்தந்த காலங்களில் இயற்கையாக உண்டாகிற சகல காரியங்களும் அவரது நியமத்தினாலேயே உண்டாகின்றன. அவரது கடக்கக்கூடாத நியமங்களுக்குப் புறம்பாக தெரிந்த காரியமும் சம்பவித்தமாட்டாது.

It is through HIS Rule, Nimishas, Muhurthas, Days and Nights, Fortnights and Months Seasons and Years are upheld.

(10). பிருதுமதாரணிவ உபநிஷத்து

5-வது அத்தியாயம் 8-வது பிராமணம் 9-வது மந்திரம்.

ஏதல்யுவா அஸ்ய ப்ரசாயை காரி:
ப்ராச்சோன்யா ரத்யஸ்யர்தஸ்தல் வேதேப்யோ
பர்வதேப்யஸ்யாதிச்யேஸ்யர்ஜ.

பொழிப்புரை.

இவ்வழிலற்ற பொருளினது நியமத்தினால் ஓர் கார்க்கி பிறக்கு திசை நோக்கி ஓடுகிற வேறு ஆறுகளும், மேற்திசையை நோக்கி ஓடுகிற வேறு ஆறுகளும் பனியினால வெண்மையா யிருக்கின்ற மலைகளிலிருந்து பெருகுகின்றன.

விசேஷ உரை.

நமது பூமியின் மேல்பாகத்தைக் கவிந்துக்கொண்டிருக்கும் ஆகாயசமுத்திரத்தின் அமைப்பு ஆச்சரியப்படத்தக்கதெனில், நமது பூமியின் அடியிலிருக்கும் அக்கினி சமுத்திரத்தின் அமைப்பு அதிலும் ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது. நமது பூமியின் மூன்று மயில் ஆழத்தில் இருக்கிற உஷ்ணம் வெந்நீர் காய்ச்சுக்குச் சரியாலுலும், நாற்பது மயில் ஆழம் வரையில் வெட்டிப் பார்க்கில் 4,000° டிகிரி உஷ்ணமிருப்பதால், அங்கு அணையா அக்கினி ஜல சமுத்திரம் இருப்பது பிரத்தியக்ஷமாகிறது. இப்படி பூமியின் அடியத்திலிருக்கும் அக்கினி மேல் நோக்கி வராதபடி அநேக மயில் திண்ணல்கொண்ட கெட்டியான பாறைகளையும் மண், கல், ஜலம் முதலானதுகளையும் அடக்கடக்காக வைத்து மூடப்பட்டிருப்பது பிரத்தியக்ஷம்.

பூகம்பம்

அப்படி மூடப்பட்டிருக்கும் அக்கினியானது சில சமயங்களில் பற்றி எரிந்து பூமியின்மேல் தோடை உதைப்பதனால் பூகம்பம் உண்டாகிறது. பூமியின் வயிற்றிலிருக்கும் அக்கினி இப்படி எரிந்து எழும்பிவரும்போது முதலில் பயங்கரமான பல இடி சப்தங்களைப்போல் கர்ஜனையுண்டாகும். மேற்கிந்திய தீவுகளுக்கடுத்த சென்டவினிசிண்டுதீவில் பூகம்பம் சம்பவித்தபோது உண்டான பூமத்திய சப்தம் 632 மயில்கள் தூரம் கேட்டது. இந்த சப்தம் 5,000 மயில் விஸ்தீரணமுள்ள நாடுகளுக்கும் கேட்டதாம். விசுவியஸ் மலையடிவாரத்திலுண்டான சப்தம் லண்டன் பட்டணத்தாருக்குக் கேட்டதாம். கோட்டபாகவி என்னும் எரிமலைக்கருகிலுண்டான சப்தம் 463 மயில்கள் தூரம் கேட்டதாம்.

1774-வது மெகிலிக்கோவுக்கு அடுத்த குலுக்கல்டோ என்னும் பட்டணத்தில் பூமியதிர்ச்சி சம்பவித்தபோது உண்டான சப்தம் ஒரு மாதம் காலம் வரையில் பூமிக்குள்ளிருந்தே பல பீரங்கி வெடிகளைப்போன்ற கர்ஜனை களுண்டாகி குடிகளெல்லாம் பயந்து ஓடிவிட்டார்கள். 1822-வது தென் அமெரிக்காவின் மேல் நாட்டில் 1,200 மயில்கள் தூரத்துக்கு பூகம்பமுண்டாகி அதனால பல அடி வித்தாரத்திற்கு எழுப்பிவிட்டது. 1868-வது வருஷம் பட்டணத்தில் பூகம்பமுண்டாகி வரைகடல் பாழாகிவிட்டது. 1811-வது

இந்தியாவில் உண்டான பூகம்பத்தினால் குச்சு காட்டில் 70 மயில் நீளமும் 16 மயில் அகலமான பூமி பத்தடி எழும்பிவிட்டது. பூகம்பங்களினால் சில சமயங்களில் மண்ணுலகத்துக்கு மஹத்தான கஷ்டங்களுண்டாகினும், அவைகளால் மானிடருக்கு அபூர்வமான லோகங்களும் பூமியை வளமாக்கும் எருவும் கிட்டுகின்றன.

அக்கினிமலைகள்.

சில சமயங்களில் பூமியின்மேலிருக்கும் தண்ணீர் அதன் வயற்றுக்குள் போய், நீராவியாகி உருகிநிற்கும் பாறை முதலான வஸ்துக்களை கொப்பளிக்கச் செய்கிறதினால் உருகிநிற்கும் பாறையும் பூமியின்மேலோட்டின் மெலிந்த பாகத்தையும் உடைத்துக்கொண்டு வெளியே பீறிக்கொண்டுவரும். அப்படி உள்ளே இருக்கும் அக்கினி வெளியே பீறிக்கொண்டுவரும் துவாரங்களே அக்கினி மலைகளாம்.

இதற்கு திருஷ்டாந்தமாக பெரும்பான்மையான அக்கினிமலைகள் கடலுக்குச் சமீபத்திலிருக்கின்றன. இப்படி கடலுக்குச் சமீபத்திலிருக்கும் சில அக்கினிமலைகள் சிலவேளைகளில் கடலுக்குக் கீழே புடைத்த புதுத்தீவுகளை உண்டாக்கியதும் பிரத்தியக்ஷம்.

இப்போது நமது பூமியில் முன்னூறு அக்கினிமலைகள் வரையிலிருக்கின்றன இவைகளில் எல்லாம் உன்னதமானது அமெரிக்கா கண்டத்தில் இருக்கும் கோட்டபாக்ஷி என்பதுவே,—சாந்துவிச்தீவிலிருக்கும் இளவுயைய அக்கினிமலை எல்லா எரிமலைகளிலும் பெரியது.

ஐரோப்பாக்கண்டத்தில் எத்னா, ஹெக்லா, விசுவியசு என்ற அக்கினி மலைகள் இருக்கின்றன.

இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன்பு இந்த வெசுவியஸ் மலையுச்சியின் மேல் ஆச்சரியமான பருமனும் விடவமுள்ள பயங்கர மேகம் கவிந்து நிற்பதாகதோன்றியது; உடனே சாம்பலும், கல்லும் கலந்த நீராவிஸ்தம்பம் 1,200 அடி உயரத்துக்கு பீறிட்டுக்கொண்டு எழுந்து அதன் சுற்றுப்புக்கம் அநேகமயில் விசாலத்தில் பரவ; உஷ்ண கல்லுகளும், சேரும், சாம்பலும் சோனை மாரியாகப்பெய்து மூன்று பெரிய பட்டணங்களையும் அங்குள்ள மூப்பதடி உயரமுள்ள கட்டிடங்களையும் மூடிவிட்டது. ஆசியாகண்டத்துக்கு அடுத்த சுமேத்ரா, ஜாவா என்னும் தீபங்களுக்கு இடையிலிருக்கும் சுண்டா வாய்க்காலில் பயங்கரமான தீருத்தலும், பூகம்பமும் சம்பவித்தது. கரகத்தோவா என்னும் அக்கினிமலையின் பெரும்பாகம் சமுத்திரத்துக்குள் மூழ்கிவிட்டது. அதனாலுண்டான கடலலை அநேகமாயிரம் மயில் தூரத்திற்கு எட்டினது. காற்றலை உலகமுழுவதும் சுற்றிப்போனது. அந்த வெடியின் சப்தம் அநேகமாயிரம் மயில் தூரம் கேட்டது. சில கற்கள் 30 மயில் உயரத்திற்கு எரியுண்டுப்போயின.

சேற்றெரிமலைகள்.

அக்கினிமலைகள் அக்கினியினால் உருகிய வஸ்துக்களை ஊருகக்கொட்டிடும் கக்கல்களினால் இந்த பூமியை செழிப்பாக்குகின்றன. ஆனால் தண்ணீரையும், சேற்றையும் மாத்திரம் தள்ளுகிற வேறு சில மலைகளுமுண்டு. இவை பூமியின் அகட்டிலுள்ள இணுகுகளிலிருந்து உண்டாகிறதாகத்தோன்றுகின்றன.

தென் அமெரிக்காவில் கார்த்தஜீனவுக்கருகே சுமார் 20 சேற்றெரி மலைகளிருக்கின்றன. இவ்விடத்தில் 150 அடி உயரமான மலை இருக்கின்றது. இம்மலைகள் ஒவ்வொன்றிலும் கருஞ்சேறு எப்போதும் தளும்பிக்கொண்டும் ஓயாமல் குமிழ்விட்டு வடிந்துகொண்டுமிருக்கின்றன. சில சமயங்களில் பூமியதர்ச்சியும், இடி சப்தம்போன்ற உட்சத்தமும் உண்டாகி கருஞ்சேரும் கல்லும் வேகமாய் பீறிட்டு இருநூறு முன்னூறு அடி உயரம் ஆகாயத்தில் எழுந்து விழுந்து சேற்றேரைகளாகவும் பாய்ந்ததுமுண்டு. இப்படி அக்கினி மலைகளும், சேற்றெரிமலைகளும் இருக்கிற விடங்களில் வெந்நீர் ஊற்றுகளிருப்பது சாதாரணம். பூமியின் வயிற்றிலிருக்கும் அக்கினியினால் தாக்கப்பட்ட பாறைகளிலிருந்து சுரந்து வரும் ஜலமே வெந்நீர் ஊற்றுகளுக்குக் காரணம்.

ஐஸ்லாந்து தீவில் அநேக வெந்நீர் ஊற்றுகளுண்டு; அங்கு 15 அடி உயரமான வெந்நீர் ஊற்றுகிய பெரிய வெந்நீரூற்று 66 அடி விட்டமுடைய தாயும், அதன் மத்தியில் 8 அடி விசாலமான ஒரு கூவாரம் பூமிக்குள் போகிற தாயும் காணப்படுகிறது. அந்த கூவாரத்தில் இருந்து ஓயாமல் வெந்நீர் பீறிக்கொண்டுவருகிறது. சில சமயங்களில் இருநூறு முன்னூறு அடி உயரத்துக்கு காலணைகளோடும் நீராவிப்படலங்களோடும் பீறிக்கொண்டுவந்து ஸ்தம்பமாக எறிவிடும். இப்படிப்பட்ட அநேக வெந்நீர் ஊற்றுகளும் நீராவிகளும் ஐக்கிய நாடுகளிலும், நேபில்சுக்கு அடுத்த சொல்வடார் என்னும் இடத்திலும், இந்தியாவில் மங்கீருக்குச் சமீபத்திலும், கங்கோத்திரிக்குச் சமீபத்திலும் இருக்கின்றன. ஆகவே, பூமியின் வயற்றிலிருக்கும் அக்கினி சமுத்திரத்தினால், அக்கினிமலை, சேற்றெரிமலை, வெந்நீர் ஊற்றுகளுண்டாகிறதென்றும் இவைகளின் அக்கினிச்சூடானது நாளாவட்டத்தில் மாறி குளிர்ந்து கேவலம் அவற்றின் கக்கமாகிய கல்லும், மண்ணும்கூடி உன்னத மேடாக நிற்பவையே பருவதங்களாம்.

மலைகள்.

பருவதங்கள் பிரபஞ்சத்தின் பெரும் செல்வங்கள். அவைகள் பிரபஞ்சத்தின் பிராணி கோடிகளுக்கும், முக்கியமாக பிரபஞ்சத்தின் மக்களாகிய மானவ ஜாதியாருக்கு இயற்கைக் காப்புகள். இப்பூவுலகில் பருவதங்கள் இல்லாவிடில் பெரும்பாகமான பூ பிரதேசங்களும், தாது கந்தமூல கிருமி கீடக பிராணி சமூகங்களும் பயங்கரமான காற்றுகளினாலும், கடல் அலைகளினாலும் அடிக்கப்பட்டும் இடிக்கப்பட்டும் பாழ்த்துப்போய்விடும். பருவத பிரதேசங்களின்மேல் பனிபெய்து அவைகள் கட்டியாக உரைந்துபோக, அதன்மேல் பிரபாகரனுடைய பிரகாசம் படும்போது காணும் காக்ஷியை கிரந்தங்களில் எழுதி முடியுமோ; அந்தப்பனிக்கட்டிகள் உருகி நீராகமாறி, பேரூறுகளாகி, பூ பிரதேசங்களின்மீது பாய்ந்தோடி கணக்கற்ற கந்தமூல கிரமி கீடகப் பிராணி சமூகங்களைப் பாதுகாத்தும், பிறகு பெருங்கடலில் புகுந்து கலந்து மறுபடியும் சூரிய உஷ்ணத்தினால் ஆவிரூபமாகமாறி மேகங்களாகியும்; விசேஷமாக உயர்ந்திருக்கும் உன்னத மலைகளின் மரம், விருக்ஷம் முதலான பச்சைப் பயிர்களின் சுவர்ச்சிகளால் இழுக்கப்பட்டுப்போய் மழையாக வருஷிக்கச்செய்யும் வித்தையை என்னென்று விவரிப்பாம். இவ்வுலகத்தின் தாது கந்தமூல கிருமி கீடகாதி பிராணிகளின் பிழைப்புக்கு இன்றியமையாத ஜலத்தின் பெரும்பாகம் பருவத பனிக்கட்டிகளினாலும், பருவத விருக்ஷாதி செடிகளால் இழுக்கப்பட்டு

செய்யும் மழைகளினாலும் உண்டாவதனால், அப்பருவதங்களின்மேல் மானிடர் எதேச்சையாய்போய் கெடுக்காவண்ணம், சிங்கம் புலி, கரடி, யானை, பாம்பு, அட்டை முதலான இயற்கைகாப்புகளை வைத்து காக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளில் இத்தேசத்தின் வட எல்லையிலிருக்கும் ஹிமாசலமலை 27,000 அடி அல்லது ஐந்து மயில்களுக்கு உயரமுள்ளதாயும்; அமெரிக்காவிலிருக்கும் ஆண்டீசுமலை நாலாயிரம் மயில் நீளமும், 20,000 அடி அல்லது மூன்று மயில் உயரமுள்ளதாயும்; ஐரோப்பாவில் ஆல்பஸ்மலை 15,217 அடி மயில்கள் உயரமுள்ளதாயும், இந்துகுஷ்மலை 20,000 அடி மயில் உயரமுள்ளதாயும், அராத்துமலை 17,230 மயில் உயரமுள்ளதாயும், இன்னும் அநேக மலைகள் அநேக ஆயிரம் மயில்கள் உயரமுள்ளவைகளாகவும் இருக்கின்றன.

இப்படி இந்த பிரபஞ்சத்தின்மீது பிரம்மாண்ட பருமனுடைய பருவதங்களிருக்கிறதனால், இவ்வளவு பளுவையுடைய பிரபஞ்சம் எப்படி அந்தரத்தில் அசைந்தாடக்கூடுமென்று சிலர் சந்தேகிக்கக்கூடும். ஆனால் பூமியையும் அதன் பருவதங்களையும் சாஸ்திரோக்தமாகச் சோதிக்கையில், பூமியிலிருக்கும் பிரம்மாண்ட மலையானது பூமியின் பளுவை 1,600 பாகமாக்கில், அதில் ஒரு பாகத்தின் பளுவுகூட பிரபஞ்சத்தின் எந்த பெரிய பருவதமும் இல்லையென்று தோன்றும். அதாவது ஒரு பெரிய கிச்சிலிப்பழத்தின்மேல் ஒரு சிறு மணல் அணுவை வைத்தால் எவ்வளவாகுமோ அவ்வளவேதான் உலகத்தின் உன்னத உயர்த்தமலை இருக்கும் ஸ்திதி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

நதிகள்.

இப்படி பெரும்பாகமான பருவதங்களிலிருந்து உற்பத்தியாகிவரும் நதிகளால் நமக்கு உண்டாகும் நன்மைகளைச் சொல்லவும் வேண்டுமோ; நதிகள் பிரபஞ்ச கந்தமூல கிருமிகோட பிராணி கோடிகளின் உயிருக்கு இன்றியமையாதனவாய் இருப்பதன்றியில், ஜனசமூஹத்தாருடைய சம்பத்தை விருத்தியாக்கவும்; வேளாண்மை வாணிகா வர்த்தகம் முதலானவைகளை விருத்தியாக்கவும் சிறந்த சாதனங்களாக இருக்கின்றன இவைகளில் அமெரிக்காக் கண்டத்திலேயும் மிசிஸிபிநதி 4,194 மயில் நீளமும், ஐப்பிரிக்காவிலுள்ள நையில்நதி 4,020 மயிலும், சீனாவிலுள்ள யாங்டிஸ்கியாங்க 3,158 மயிலும், ஆமூர் 2,920 மயிலும், ஓபி 2,700 மயிலும், வால்கா 2,400 மயிலும், ஓஹ்ங்கோ 2,500 மயிலும், தானியூப் 2,000 மயிலும், சிந்துநதி 1,800 மயிலும், கங்கை 1,570 மயில் நீளமும் பின்னும் அநேக நதிகள் அநேக ஆயிரம் மயில் நீளமும் அகலமும் உள்ளவைகளாக இருக்கின்றன. இந்த நதிகளால்தான் அகண்ட சமுத்திரங்கள் அழகாக இருக்கின்றன.

சமுத்திரங்கள்.

இந்த பிரபஞ்சத்தின் பெரும்பாகம் அகண்ட சமுத்திரத்தினால் மூடப்பட்டிருக்கிறதும், அது அந்தந்த இடத்திற்கும் ஸ்திதிக்கும் தக்க பெயர்களையும், ஆழ அகலங்களையும் பெறறிருக்கின்றன. இவைகளுக்கு முறையே, பாஸிபிக்கு அத்லாந்திக்கு இந்தியா சமுத்திரங்களென்றும், வடதென் சமுத்திரங்களென்றும் பெயர். இவைகளில் பாஸிபிக்கு சமுத்திரம் பூமேலாக 11,000 மயிலும், 8,000 மயில் அகலமும், 78,000,000 சதுரமயில் சுற்றளவுமுள்ளது. அத்லாந்திக்கு 8,600 மயில் நீளமும் 5,000 மயில் அகலமும், 25,000,000

சதுரமயில் சுற்றளவுமுள்ளது. இந்த சமுத்திரம் 4,500 மயில் நீளமும் அகலமும், 14,000,000 சதுரமயில் சுற்றளவுமுள்ளது. வடதென்சமுத்திரம் 9,000 மயில் நீள அகலமும், 30,000,000 சதுரமயில் சுற்றளவுமுள்ளது. இவைகளில் சில 5,000 பாதம் அல்லது 30,000 அடி அல்லது ஆறு முதல் ஏழு மயில்கள் ஆழமுள்ளவைகளாக இருக்கிறதன்றியில், இவைகளுக்குள் அநேக உன்னத பருவதங்களும் தாது கந்தமூல இருமிகிட கபிரணிகள் இருக்கின்றன. இந்த சமுத்திர ஜலம் கெட்டுப்போகாதபடி அதில் அநேகவித பூநியங்களிருக்கிறும் 3,051,342 கன மயில் பருமன் அல்லது இமயமலையின் மூன்றில் ஒரு பாக முடையதான சாதாரண உப்பு கலந்து இருக்கிறது.

ஆகவே மிகுந்த நன்மையே வடிவாகக்கொண்ட கடவுளினது நியமித்தினால் விரைவாக ஓடுகிற ஆறுகளனைத்தும் உயர்ந்த மலைகளினின்று வெள்ளமாகப்பெருகி எண்ணிறந்த உயிர்களுக்கு மிகுந்த உபகாரம் செய்வனவாயும், நன்மையைத்தருவனவாயும் இருக்கின்றன. பார்வைக்குப் புறம்பாகி அறியப்படாத யாதொரு மலையின் தெரியாத யாதொரு இடத்தில் சேருகிற நீர்த்திரளாம் அதினின்று அநேக யோசனை தூரத்திலிருந்தும் ஆபாசமின்றி அடைகிறோம்.

It is through HIS Rule, RIVERS that run East and West, flow from the Eternal snow of the mountains.

---

(11). சுவேதாசுவதர உபநிஷத்து

3-வது அத்தியாயம் 7-வது வாக்கியமும்.

தத³ஹ்பரம் ப்ரஹ்மபரம ப்ருஹந்தம் யதா²நிகாயம்
ஸர்வபூதேஷு கூடம் ; விச்வஸ்யைகம்
பரிவேஷ்டிதாரமீஸம் தம்ஞாத்வா அம்ருதாபவந்தி.

பொழிப்புரை.

சகல காரியங்களுக்கும் காரணராகிய பரப்பிரும்மம் யாவற்றிற்கும் பெரியவர், அவர் சகல பூதங்களிலும் உடலுக்கிடையில் மறைந்திருப்பவர். இவ்வுலகத்தைச் சூழ்ந்திருக்கிற ஒருவராகிய அவ்விசுவை அறிந்து உலகத்தார் அழிவற்றபதவியைப் பெறுகின்றனர்.

இந்த சுருதிவாக்கியத்தில் பரமாத்துமா சகல பூதங்களிலும் உடலுக்கிடையில் மறைந்திருப்பவர் என்றும், இவ்வுலகத்தைச் சூழ்ந்திருப்பவர் என்றும் சொல்லியிருப்பதால், சிலர் பரமாத்துமாவே ஜீவனுமாய், ஜடமுமாயும் பரிணமித்திருக்கிறார் என்றும்; ஆகவே ஜகமும், ஜீவனும் பரமாத்துமாவை விட வேறல்லவென்றும் சந்தேகிக்கக்கூடும், அவ்விதச் சந்தேகத்தை நிவர்த்தி

பிருஹதாரணியம் 3—7—3—ல்.

யஹ பிருதிவ்யாம் திஷ்டம் பிருதிவ்யா அந்தரோயம்
பிருதிவீ ந வேத யஸ்ய பிருதிவீ சரீரம யஹ
பிருதிவீ மந்தரோயமயத்யேஷத ஆத்மாந்தரி
யாமயம் ருத ஹ.

யார் பிருதுவியில் இருந்தும் பிருதுவியிலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை பிருதுவி அறியவில்லையோ,—யாருக்கு பிருதுவி சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்து பிருதுவியை நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமாவே உனது அந்தரியாமியாயுமிருக்கின்றார் என்றும்.

யோப்சு திஷ்டந் நத்யோக்நந்தரோய
மாபோன வித்யுர்யஸ்யாப ஹ சரீரம்யபோமந்தரோய
மயத்யேஷத ஆத்மாந்தர்யாம்யம்ருத ஹ.

யார் ஜலத்திலிருந்தும் ஜலத்திலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை ஜலம் அறியவில்லையோ,—யாருக்கு ஜலம் சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்து ஜலத்தை நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனது அந்தரியாமியாயுமிருக்கிறார் என்றும்.

யோக்நவ் திஷ்டந்நக்நே ரந்தரோய மக்நிர்ன
வேதயஸ்யாக்நிச்சரீரம் யோக்நிமந்தரோய மயத்யேஷத
ஆத்மாந்தர்யாம்யம்ருத ஹ.

யார் அக்னியிலிருந்தும் அக்னியிலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை அக்னி அறியவில்லையோ,—யாருக்கு அக்னி சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்து அக்னியை நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனது அந்தரியாமியாயும் இருக்கிறார் என்றும்.

யோந்தரிக்ஷே திஷ்டந்நந்தரிக்ஷாத்தந்தரோய
மந்தரிக்ஷம்ந வேதய ஸ்யாந்தரிக்ஷக் சரீரம்
யோந்தரிக்ஷ மந்தரோயமயத்யேஷ
ஆத்மாந்தர்யாம்யம்ருத ஹ.

யார் அந்தரிக்ஷத்திலிருந்தும் அந்தரிக்ஷத்திலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை அந்தரிக்ஷம் அறியவில்லையோ,—யாருக்கு அந்தரிக்ஷம் சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்து அந்தரிக்ஷத்தை நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனது அந்தர்யாமியாயுமிருக்கிறார் என்றும்.

யோவாயவ் திஷ்டன்வாயோ ரந்தரோயம்
வாயுர்ன வேதயஸ்யவாயு ஹ சரீரம யோவாயுமந்தரோய
மயத்யேஷத ஆதமாந்தர்யாம்யம்ருத ஹ.

யார் வாயுவிலிருந்தும் வாயுவிலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை வாயு அறியவில்லையோ,—யாருக்கு வாயு சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்து வாயுவை நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனது அந்தரியாமியாயுமிருக்கிறார் என்றும்.

யோதிவி திஷ்டந்தி வோர்த்தரோயம் நியர்ன
வேதயஸ்ய தவியஹ சரீரம் யோதிவய மந்தரோய
மயத்யேஷத ஆத்மாந் தர்யாம்யம்ருதஹ.

யார் சொர்க்கத்திலிருந்தும் சொர்க்கத்திலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை சொர்க்கம் அறியவில்லையோ,—யாருக்கு சொர்க்கம் சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்து சொர்க்கத்தை நியமிக்கின்றாரோ அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனது அந்தரியாமியாயுமிருக்கிறார் என்றும்.

யஆதித்யே திஷ்டந்ஆதி தயாதந்தரோய மாதித்யோ
நவேதிய ஸாதித்யஹசரீரம் யஆதிதய
மந்தரோய மயத்யேஷத ஆத்மாந்தர்யாம்யம்ருதஹ.

யார் ஆதித்தியனிலிருந்தும் ஆதித்தியனிலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை ஆதித்தியன் அறியவில்லையோ,—யாருக்கு ஆதித்தியன் சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்து ஆதித்தியனை நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனது அந்தரியாமியாயுமிருக்கிறார் என்றும்.

யோதிக்ஷு திஷ்டந்தி தியோக்யந்தரோயம்
திசோனவிதுரிய ஸியதிச்சசரீரம யோதிசோந்தரோய
மயத்யேஷத ஆத்மாந்தர்யாம்யம்ருதஹ.

யார் திக்குகளிலிருந்தும் திக்குகளிலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை திக்குகள் அறியவில்லையோ,—யாருக்கு திக்குகள் சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்து திக்குகளை நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனது அந்தரியாமியாயுமிருக்கிறார் என்றும்.

யஸ்சந்திரதாரகேதிஷ்டஸ்சந்திர
தாரகாதம்தரோயம் சந்திரதாரகம்நவேதயஸ்ய
சந்திரதாரகச்சரீரம் யஸ்சந்திரதாரகமந்தரோய
மயத்யேஷத ஆத்மாந்தர்யாம்யம்ருதஹ.

யார் சந்திர தாரகங்களிலிருந்தும் சந்திர தாரகங்களிலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை சந்திர தாரகங்கள் அறியவில்லையோ,—யாருக்குச் சந்திர தாரகங்கள் சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்து சந்திர தாரகங்களை நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனது அந்தரியாமியாயுமிருக்கிறார் என்றும்.

யஆகாசேதிஷ்டந்நாகாசாதமதரோய மாகாசோ
நவேதயஸ்யாகாசஹ சரீரம் யஆகாசமந்தரோய
மயத்யேஷத ஆதமாந்தர்யாம்யம்ருதஹ.

யார் ஆகாசத்திலிருந்தும் ஆகாசத்திலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை ஆகாசம் அறியவில்லையோ,—யாருக்கு ஆகாசம் சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்து ஆகாசத்தை நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனது அந்தரியாமியாயுமிருக்கிறார் என்றும்.

யஸ்தமஸி திஷ்டன்யமயோம்தரோயம் தமோ
ததேவதயஸ்யதமச்சரீரம் யஸ்மோந்தரோய
மயத்யேஷ்த ஆதமாந்தர்யாம்யம்ருதஹ.

யார் இருட்டிலிருந்தும் இருட்டிலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை இருட்டு அறியவில்லையோ,—யாருக்கு இருட்டு சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்து இருட்டை நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனது அந்தரியாமியாயுமிருக்கிறார் என்றும்.

யஸ்மேஜஸி திஷ்டன்ஸ்மேஜசோந்தரோயம்
தேஜோததேவத யஸ்யதேஜசரீரமயஸ்மே
ஜோந்தரோயம யத்யேஷ்த ஆத்மாந்தர்யம்யம்ருத
இத்யதிதைவதமதாதிபூதம்.

யார் வெளிச்சத்திலிருந்தும் வெளிச்சத்திலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை வெளிச்சம் அறியவில்லையோ,—யாருக்கு வெளிச்சம் சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்த வெளிச்சத்தை நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனத அந்தரியாமியாயுமிருக்கிறார் என்றும்.

யஸ்ஸர்வேஷு பூதேஷு திஷ்டன்ஸர்வேபயோ
பூதேப்யோந்தரோய க்ஸர்வாணிபூதானி
கவிதர்யஸ்ய ஸர்வாணிபூதானி சரீரம்
யஸ்ஸர்வாணிபூதான்யந்தரோய மயத்யேஷ்த
ஆத்மாந்தர்யாம்யம்ருத இத்யதிபூதமதாதியாத்மம்.

யார் எல்லாபூதங்களிலிருந்தும் எல்லாபூதங்களிலும் வேறுகவிருக்கின்றாரோ,—யாரை எல்லாபூதங்களும் அறியவில்லையோ,—யாருக்கு எல்லாபூதங்களும் சரீரமோ,—யார் அந்தர்வர்த்தியாயிருந்த எல்லாபூதங்களையும் நியமிக்கின்றாரோ? அந்த அமிருதஸ்வரூப பரமாத்துமா உனது அந்தரியாமியாயுமிருக்கின்றார் என்றும் சொல்லப்பட்டன.

மேல் கண்ட சுருதி வாக்கியங்களினால் பிரபஞ்சமுதலான சகல ஜடபதார்த்தங்களெல்லாம் பரமாத்துமாவினாலே நியமிக்கப் படுகின்றனவென்றும், அவர் அவைகளில் வியாபகனாய் நியமிக்கிறபடியால், அவைகளெல்லாம் அவருக்கு சரீரம்போலிருக்கின்றனவென்றும்; அப்படிக்கிருந்தும், அவர் அவைகளிலும் வேறானவராக இருக்கிறார் என்றும்; எப்படி ஜீவாத்துமா சரீரத்தில் வியாப்தனாய் அதை நியமிக்கிறதைப்போலவே, பூமி சூரியன் சந்திராதி அண்டபிண்டாண்டங்களில் வியாப்தனாக பிரேரேபிப்பவர் ஒன்றான பரமாத்துமாவே என்றும்; ஆகவே, அவருக்கு எல்லாபூதங்களும் சரீரமாகச்சொல்லப்பட்டன. உண்மையில் அவருக்கு எவ்வித சரீரமும் இல்லை. அன்றியும் எல்ர் (சர்தேஹப்பதைப்போல) அவர் பூதங்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு ஆத்மாவாகவும் இராமல், எல்லாவற்றிலும் வியாப்தசேதனனாக இருந்து அவைகளை நியமிப்பவர். அவைகள் அவரை உள்ளபடி அறியா; அவர் அவைகளை எல்லாம் ஆளுபவர். அவைகள் ஆளப்படுகின்றவைகள். அவர் கேவலம் ஜடவஸ்துக்களை மாத்திரமல்ல ஜீவாத்துமாக்களையும் நியமித்து அவைகளுக்குள் அந்தரியாமியாயும் இருக்கிறார். ஆகவே,

அவரால் இவ்வுலகமெல்லாம் படைக்கப்பட்டது, அவர் எல்லாக்காரியங்களுக்கும் காரணர், மேலும் பெரியவர். அவர் உள்ளும் புறமும் எல்லா இடங்களிலும் எப்பொழுதும் இருக்கிறார். அப்படியிருக்கும் அவரை யாரும் கண்களால் பார்க்கமுடியாது. காரணமென்னவெனில், அவர் ஞானமே வடிவாக உடையவர்; ஞானத்தை வடிவாக உடையவரை ஞானத்தினால் மாத்திரம் அறியலாகும். யார் இவரை ஞானத்தால் அறிகின்றனரோ அவர்கள் அவருடன் நித்திய வாழ்க்கையைப் பெறுகின்றனர்.

Knowing HIM, WHO is the CAUSE, the BEING, supreme, the GREAT, the HIDDEN, in the bodies of all beings, the GOVERNOR and Sole COMPOSER of the Universe, they become Immortal.

---

(12). பிருஹதாரணிய உபநிஷத்து

6-வது அத்தியாயம் 4-வது பிரமாணம் 22-வது வாக்கியம்.

ஏஷஸர்வேஷ்வர ஏஷ பூதாதிபதி;
ஏஷபூதபாலத ஏஷஸேதுர்விதரண
ஏஷாம் லோகானு மஸம்பேதாய.

பொழிபபுரை.

இவர் யாவற்றிற்கும் ஈச்வரா, இவர் எல்லாப்பொருள்களுக்கும் தலைவர், இவர் எல்லாப பொருள்களையும் காப்பவர், இவர் இவ்வுலகங்கள் தன்னிலேயிட்டுமாறுதபடி ஸேதுவைப்போல யாவற்றையும் தாங்கிகொண்டிருக்கிறார்.

விசேஷ உரை.

இந்த மண்ணுலகத்திற்கு அடியிலிருக்கும் அக்னி ஜ்வாலா சமூத்திரங்களிலுல் அநேக ஆபத்துகள் உண்டாகக்கூடியதாய் இருக்கினும், மண்ணுலகத்தின்மேலும் அநேக ஆபத்துகள் உண்டாகும்படியான பொருள்களிருக்கின்றன. அவைகளில் சில விண் வீழ்கொள்ளிகளும், அம்புபோலபாயும் நக்ஷத்திரங்களாம்.

விண்வீழ்கொள்ளி அல்லது ஆகாசக்கற்கள்

சில காலங்களில் சிறிதும் பெரிதுமானகற்கள் ஆகாயத்திலிருந்து பயங்கர கர்ஜனையுடன் பூமியின்மேல் விழுவதை அநேகர் பார்த்திருக்கிறார்கள். இப்படி ஆகாயத்திலிருந்து விழுங்கற்களை தக்கபடி பரிசோதிப்போமானில்; இதில் இரும்புபூகம் அதிகமாக இருப்பதாகவும்; நிகலம், கொபாலதம், மக்னெஸ்காந்தம் குரோமியம், செம்பு, பாஷாணம், தகரசத்து, பொட்டாசியம், சோடாகந்தகம் பாஸ்பரஸம், கார்பன் என்றறி பதார்த்தங்களால் எரிந்த ஒருவித கருத்த வருணம்பெற்ற ஆகாயகற்களாக தோன்றுகின்றன. பூமியிலிருக்கும்படியான நிரஸ வஸ்துக்கள் சூரிய உஷ்ணத்தினால் இழுத்து எடுக்கப்பட்டு, ஆகாயத்தில் ஒன்றோடொன்று உரசுதினால் நெருப்புப்பற்றி எரிந்த அதன் நிரசத்துக்கள் உருகி கக்குமாக, அக்கக்குமே இக்கற்களாக பூமியின்மேல் விழுகின்றனவோ; அல்லது பூமியின் பலவிடங்களிலிருக்கும் அக்னி மலைகளிலிருந்து நிரச

பதார்த்தக்கூட்டம் பிரிட்சேஸ்ளம்பி ஆகாயசமுத்திரத்தில் குளிர்ந்தபிறகு பூமி மீதில் விழுகின்றனவோ; அல்லது பூமியானது சூரியனைச்சுற்றி வருவதிலும் தன் மேலுள்ள வஸ்துக்களினால் பூமியின் கற்கள் ஆகாயத்தில் இழுக்கப்பட்டு தங்கி விழுகின்றனவோ; அல்லது சுமத்ரா தீவிற்கருகிலிருக்கும் அக்கினிமலைகளில் இருக்கப்பட்ட கற்கள் பிரிட்டு எழும்பி இந்த பூமியின்மீது விழுகின்றனவோ; உண்மையாகத் தெரியவில்லை. இந்த ஆகாசத்தினின்று சாரேடாபிறஸ் சாலத்தில் வந்தோபட்டணத்தில் விழுந்தவை இரண்டு இருந்திருக்கின்றன பருமனும், ஒரு பசுவின்மேடி பருவமுள்ளதாயும்; பத்தாம் தாரிகுமாதம் காளி தினில் விழுந்தபடிக்கல்லுகளின்மீதிலுமுள்ள பூமிமட்டத்துக்கு மண்வடி வேர்ந்திருந்தன. மேற்கு இலண்டனிலிருந்தில் விழுந்த ஒரு கல் காற்பாரம் உயரமிருந்தது. பிரிசுபட்டணத்தின் கணக்காயி சாலையிலிருக்கும் ஆகாசகல் 20 மணிக்கு கிறை கொண்டது.

அக்கினி பிண்டங்கள்

சில சமயங்களில் இந்த விண்மீன்கொள்ளிகளே பயங்கர அக்கினிப் பிண்டங்களாக பூமியில் கர்ஜித்துக்கொண்டு விழுந்து சுற்றித் திரிவதுமுண்டு. 1807-ம்ஹு டிசம்பர்-மீ 14-ம்கூ அமெரிக்காவைச்சார்ந்த கானிக்டிகட்டுக்கு அடுத்த வெஸ்டன் பட்டணத்தில் 500 முதல் 2,600 அடி சுற்றளவுள்ள பயங்கர அக்கினிப் பிண்டங்கள் ஆகாயத்திலிருந்து விழுந்து சுற்றிச்சுற்றி அடித்திருந்த அநேகப் பொருள்களைப் பஸ்மமாக்கியதாம். 1771-ம்ஹு ஜூலை-மீ 10-ம்கூ விழுந்த ஆகாய அக்கினிப் பிண்டம் 1,000 அடி சுற்றளவுள்ளதாயிருந்தது. 1718-ம்ஹு ஜனவரி-மீ 18-ம்கூ விழுந்த அக்கினி உருண்டை 2,600 அடி சுற்றளவுள்ளதாயிருந்தது. இம்மட்டோ! வானத்தில் மப்பு மந்தாரமற்ற சில சமயங்களில் அம்புபோல் பூமியின்மேல் பாயும் விண்வீழ் நக்ஷத்திரங்கள் அநந்தம். இவைகள் முப்பத்தி மூன்றரை வருஷத்திற்கு ஒருமுறை பெரு நக்ஷத்திர மழையாக பொழிந்தாலும், ஒவ்வொரு வருஷமும் ஆகஸ்டு பத்தாந்தேதிக்கு முன் பின்னான இரவுகளிலும், நவம்பர் பதின் மூன்றாம் தேதிக்குப்பின்னும் விசேஷமாகத்தோன்றும். 1799-ம்ஹு ஜிரின் லாந்திலும், 1833-ம்ஹு அமெரிக்கா கண்டத்திலும், 1866-ம்ஹு லண்டன் பட்டணத்திலும் நக்ஷத்திர மழை பெய்த பிரதேசங்களுக்கு பெரும் பயத்தை யுண்டாக்கியது. இந்த பிரபஞ்சத்துக்கு மேலிருக்கும் ஆகாயகற்களும், அக்கினிபிண்டங்களும், அண்டகோளங்களின் கற்களும் அடிக்கடி அநேக விடங்களில் கர்ஜித்துக்கொண்டு விழுந்தால் இந்த விநோதமான உலகம் என்ன கதியையடையும், பாழ்த்துப்போகாதா?

ஆகவே, பிரஜாபாலகராகிய பரமேஸ்வரர் ஒருவித்திலும் ஒருகாரியமும் அவரை மீறிநடந்த உலகம் ஒரு கெட்டவிலையை யடையும்படி நேரிடாத வண்ணம் உறுதியான நியமங்களை ஏற்படுத்தி இவ்வுலகராஜ்யத்தைச் சாந்து வருகிறார். உலகம் தன்னிலைவிட்டுமோதி கெடாதவண்ணம் வேதனைப்போல இவைகளையும் தாங்கிக்கொண்டிருக்கிறார்.

This Being is the Supreme Sovereign over all. He is the King. He is the Preserver. He is the Upholder, the Barrier against the disruption of these wonderful worlds.

(13). சாந்தோக்கிய உபநிஷத்து

8-வது பிரபாடகம் 4-வது கண்டம் 1-வது வாக்கியம்.

ஸ்வேதர் வித்ருதி ரேஷாம் லோகாநா மஸம்பேதாய;
நாநாம்ஸ்வேது மஹோராத்ரே தரதஹ
நஜீர்ய தம்ருத்யுர்ந லோகஹ.

பொழிப்புரை.

அவர் உலகத்தின் பங்கமில்லாமைத்தின் பொருட்டு [illegible] ரூபியாகி பாலமாயையும் தாங்கிக்கொண்டிருக்கிறார். இந்த [illegible] வருபி இராப்பகலைஞுக்கும், மூப்பு மரணம் துயரம் இவைகளுக்கும் உள்ளானவனன்று.

விசேஷ உரை.

மேத தலைக்குமேல் காணும் நக்ஷத்திரங்களில் சிலவற்றிற்கு விசேஷ வான்களிருக்கின்றன. அவைகளுக்கு வால்நக்ஷத்திரம், அல்லது தும்போது என்றபல பெயர்களே வழங்குகிறோம். இவைகளில் சில, சில காலங்களில் கண்களுக்குத் தோன்றியும்; சில காலங்களில் காணமற்போகும் உற்பாதபிண்டங்களே. நிரஹங்கள் யாவும் சூரியனைச்சுற்றி விருத்தமாய் யோகின்றன. வால் நக்ஷத்திரங்களோ சில சமயங்களில் சூரியனைக்கிட்டி நெருங்கியும், சில சமயங்களில் சூரியனை விட்டு வெகு தூரத்தக்கு தூடிப்போய்விடுகின்றன. நிரஹங்கள் மேற்கிலிருந்து கிழக்கு முகமாய் உருளுகின்றன. சில வால்நக்ஷத்திரங்கள் கிழக்கிலிருந்து மேற்கு முகமாய் ஓடுகின்றன. மேலும், நிரஹங்கள் வான மண்டலத்தின் ஒரு நியமன பாகத்துக்குள்ளேயே யடங்கி செல்லுகின்றன. வால்நக்ஷத்திரங்களோ வானமண்டல கீதி விலாசத்தில் எந்திக்கிலும் எதேச்சை யாக சஞ்சரிக்கின்றன. இது வரையில் கண்டறிந்த வால்நக்ஷத்திரங்கள்பல.

வால்நக்ஷத்திரங்களில்

ஹாலி, எனிக், பியாலா, பெயிலி, பிரூஸன, வின்னகஸ், யேட்டல் என்பவை நிறந்தவைகள். இவைகளில் ஹாலி என்னும் வால்நக்ஷத்திரத்தை 1682-ம் வருஷம் சோதிக்கையில் அது சூரியனைச் சுற்றிவர 76 வருஷங்களாகிறதாக தோன்றியது. இந்த கணிதத்தின்படி அது 1759 வருஷமும், 1835 வருஷமும் தோன்றியது. இது சூரியனுக்கு ஐந்து கோடி மயில் தூரத்தில் போய், பின்னும் 300 கோடி மயில் தூரத்துக்கு விரிந்து பின்வாங்கி யோடியது. இந்தக் கணக்கின்படி அது 1911-ம்ஆம் நமக்குக் காணப்படும். எனிக் என்னும் வால்நக்ஷத்திரம் மூன்று வருஷங்களுக்கு ஒரு தடவை சூரியனைச் சுற்றி வருகிறது. ஐந்து வருஷங்களுக்கு ஒரு தரம் சுற்றி வரும். இப்படிப்பட்ட அசே வால்நக்ஷத்திரங்கள் நமது வெறுங்கண்களுக்குத் தோன்றாத கோடி கோடி மயில்கள் தூரத்தில் சமமாக சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன. இவ் வால்நக்ஷத்திரங்கள் அநாதியும், எதிர்பாராதகாலத்திலும், திடீரென்று தோன்றி மற்ற நிரஹங்களைப்போல் பட்டபோகலுக்கு அடங்காமல் தம் இஷ்டப்படி தேச்சையாய் சஞ்சரிக்கின்றனவாதலால், சில சமயங்களில் [illegible] மீதாவது; மற்ற சூரியன் முதலான நிரஹங்களின் மீதாவது தாக்கி [illegible]

டங்கள் கண்டதண்டமாக அடிபட்டு இடிபட்டு நாசமாக விடக்கூடுமென்று தொன்றுதொட்டு அகே புத்திமான்களும் பயந்து வந்தார்கள். ஆனால் நமது பூமியின் பிரகிருதி பாகத்தையும், சூரிய பூமியின் பிரகிருதி பாகத்தையும், வால் நக்ஷத்திரங்களின் பிரகிருதி பாகத்தையும் பரிக்ஷைக்கையில் அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்த நீப்பற்றி எரியாதபடியான பதார்த்தங்களுடனும், ஒன்றோடொன்று வந்த மோதாத பதார்த்தங்களுடனும் படைக்கப்பட்டிருப்பதாக பிரத்தியக்ஷமாகியது. ஆகவே,

உலகங்களெல்லாம் பொடியாகிப் போகாதவண்ணம், அவர் இவைகளின் தையும் தாங்கிக்கொண்டிருக்கிறார். அவர் நித்தியப்பொருள்; அவர் இன்ன நாளில் உண்டானார், இத்தனைநாள் வரையிலிருப்பார், இவ்விதமாக இராப்பகல் கள்மூலமாக அவரை அளக்கமுடியாது. அவர் நிர்விகாரர்; ஆனதால் மூப்பும் துயரமும் அவரை அதிகாரம் செய்யமுடியாது. யார் காலதத்தைப் படைத் தவரோ, அதற்கிருப்பிடமானவரோ, அதன்னியந்தாவோ யாருடைய சரணமடைந் தால் மூப்பு, சாவு, துயரம் இவைகளைவிட்டுநீங்கி காப்பைப்பெறுவோமோ அந்த அமிருதஸ்வரூபனை ஜராமரணங்கள் எவ்விதமாக அதிகரிக்கும்.

He is the Upholder, the Barrier against the disruption of these worlds. This Barrier neither day and night can cross, *nor* decay ; *nor* death, *nor* sorrow.

---

(14). கடோபநிஷத்து 6-வது வல்லி 3-வது வாக்கியம்.

பயா தஸ்யாக்நி ஸ்தபதி பயா த்தபதி ஸூர்யஹ;
பயாதிந்த்ரஸ்ச்ச வாயுஸ்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சமஹ.

பொழிப்புரை.

இவரது பயத்தினாலே தீ வெப்பத்தைத்தருகின்றது. இவரது பயத்தினால் சூரியன் ஒளியைத்தருகிறான். இவரது பயத்தினால் மேகமும் காற்றும் ஐந்தாவதான மரணமும் சஞ்சரிக்கின்றன.

விசேஷ உரை.

இந்த பிரபஞ்ச வியாபாரத்தைக்கு காற்று, மேகம், சூரியன், தீ முதலியது கள் இன்றியமையாதவைகளாக இருப்பதைப்போலவே மரணமும் இன்றியமை யாததாயிருக்கிறது. மரணம் என்பது இல்லாவிடில், இந்த பிரபஞ்சம் இப்போது அனந்தகோடி தாது கந்தமூல கிரமி டேக ஜீவபிராணிகள் சுகமாக குடியிருக்கும்படியான வீடாகாது. மரணத்தின் சகாயத்தினால்தான் முன்னொரு கால் அக்கினி ஜல பிண்டமாக இருந்த இந்த உலகம் இப்போதிருக்கும்படி யான மண்ணுலகமாக மாறியது. மண்பாகத்தின் பெரும்பாகம், முன் கனி தாது மூல கிரமி டேக ஜீவிகளாகவிருந்து மரணமடைந்தவைகளின் சத்தக்களே.

மரணம்.

பெரியோர் இருட்டுக்கு அஞ்சுவதைப்போல இவ்வளவு உபயோகமுள்ள மரணத்தை சாதாரண ஜனங்கள் கண்டு பயப்படுகிறார்கள். மரணகாலத்திலுண்டாகிற பெருமூச்சு, சன்னி, மூகவிகாரம், உற்றோர் பெற்றோரின் அழுகை, இழவு சடங்கு, பிரேதத்தின் கோரமான கோலம் முதலானதுகளால் மரணம் பயங்கரமானதாகத்தோன்றினும், புத்திமான்கள் மரணத்தறுவாயில் பூரண சந்தோஷம் கொள்ளுதல் பிரத்தியக்ஷம். எனெனில், மரணமானது குடிசையைவிட்டு அரண்மனையில் பிரவேசிப்பதைப்போலவும்,-கந்தைத்தணியைத்தள்ளி புது வஸ்திரம் தரித்துக்கொள்வதைப்போலவும்,—பள்ளிக்கூடத்தைவிட்ட பிள்ளைகள் தம் சொந்த வீட்டுக்குப்போவதைப்போலவும்—எப்பக்கங்களிலும் சங்கடங்கள் நிறைந்த இவ்வுலகத்தைவிட்டு, எப்பக்கங்களிலும் சந்தோஷம் நிறைந்த சர்வேசுவரருடைய சாயுஜ்யபதவியையடைய வாசல் வழியாக இருக்கிறது; அது இயற்கைக்கு செலுத்தவேண்டிய கடனாக இருப்பதால் அதைப்பற்றி அஞ்சுவது பாலியத்தன்மையும் பலஹீனமுமே; ஆனதுபற்றியே, மரணமானது குரோதத்துக்கு கம்பீரம், அன்பிற்கு ஒரு துரும்பு, கீர்த்தி அதை காடுகிறது, விசாரம் அதைக்கண்டு ஓடுகிறது, பயம் அதைக் குடிக்கொள்ளச்செய்கிறது என்று ஓர் சிறந்த ஞானியும் சொன்னார்.

மரணம் எப்போதும் மானிடருடைய சிரசின்மேல் குடிகொண்டிருக்கிறதாகவே, மரணத்தை துருக்கி தேசத்தார் தமது தலைப்பாகை மூடுதிரையைப்போல் பாவித்து எப்போதும் நினைவுகூரும்படி அணிவார்களாம். தக்கங்கொண்டாடுதல் பல தேசத்தாருக்குப் பலவகையாயிருக்கின்றன. ஐரோப்பியர் மரணத்தைக் காட்டும் இருட்டான கருப்பு நிறத்தையும்-மரித்தவர்கள் சுத்த இடத்திற்குப் போனார்களென்று காட்ட சிலரில் வெண்மை நிறத்தையும்-மரம், புஷ்பம் இவைகளின் பழுதாகு தலைக் காட்ட எகிப்தில் மஞ்சள் நிறத்தையும் மண்ணிலிருந்தெழிக்கப்பட்டவன் மண்ணுக்கே திரும்புகிறானென்று காட்ட எத்தியோப்பியாவில் கபில நிறத்தையும்-மரித்தவர்கள் ஆகாயத்திற்குப் போனார்களென்று துர்க்கியின் சில பாகங்களில் நீல நிறத்தையும்-மற்ற பாகங்களில் ஒரு பக்கத்தில் தன்பழமும் மறுபக்கத்தில் நம்பிக்கையுங்காட்ட கறுப்பும் நீலமும் சேர்ந்த இந்திரநீல நிற வஸ்திரத்தையும்; மரணத்தினால் மானிடர் தேஜோரூபமான பிரம்மத்தைச்சார்ந்தார்கள் என்று காட்ட வட இந்தியாவில் அநேகர் செங்காவி வஸ்திரங்களை தரித்தலும், மானிடரின் பிரபஞ்ச சர்மங்களும் பாழ்த்தனவென்று காட்ட தென்தேசத்தில் அநேகர் தலைமயிர் மீசை தாடிகளை சிறைத்தக்கொள்ளுதலும், இறந்தவர்கள் தமது பாசமாகிய இருளுடம்பை புடத்தில் வைத்து சுத்த சைதன்னியராளர்களென்றுகாட்ட விபூதியையும்வெள்ளோரமத்தையும் தரித்தலும், மற்றும் அநேகர் அநேகவித மரணக்குரிகளை அணிதல் பிரத்தியக்ஷம்.

மனிதருடைய அசாபாசங்களையும், அகங்கார மம காரங்களையும், அக்கிரம எண்ணங்களையும், தொழில்களையும் அடக்குவதற்குவேண்டிய புத்திமதிகளை மரணத்தைபோல அவ்வளவு பக்குவமாய்ச்சொல்ல எவராலும் எவற்றாலும் முடியாது. மரணமென்னும் பெரும்பயம் இல்லாவிடில் அநேகர் தர்மாதிஷ்டானங்களையும் தேவ பக்தியையும்விட்டு நீசுவரசர்வீனராகி உலகத்தாருக்கு அநேகவித கஷ்டநிஷ்ரேங்களை விளைவிப்பார்கள். ஆகவே, முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் ஏப்படிப்பட்ட சுத்த வீரர்களாக இருக்கினும் மரணம்

[illegible] சுவேதாசுவதர உபநிஷத்து

6வது அத்தியாயம் 16-வது வாக்கியம்.

யோ தேவோ அக்னௌ யோ அப்ஸு யோ விஶ்வம் புவனமாவிவேஶ
ய ஓஷதிஷு யோ வனஸ்பதிஷு தஸ்மை தேவாய நமோ நமஃ

பொழிப்புரை.

யாரில் இந்தப் பிரபஞ்சம் சூழ்ந்துகொண்டிருக்கிறதோ அவர் உலகம் முழுவதையும் உருவமுடைய பொருள்கள் இவையெல்லாவற்றையும் விட வேறுபட்டவர், வேறானவர். அவர் தருமத்துக்கு மூலமானவர், பாவத்தையும் போக்குகிறவர், செல்வத்திற்கு தலைவர், அவர் எல்லா உயிர்களுக்கும் உள்ளேயிருப்பவர், அழிவற்றவர், உலகத்திற்கு தாரமானவர், அவர் உண்மையையே வடிவாகவுடையவர், உலகத்தைச் சூழ்ந்திருக்கிற ஒருவர். இவரை அறிந்த உயிர்கள் மிகச்சாந்தியை யெய்துகின்றன.

விசேஷ உரை.

இவ்வுலக ஸம்ஸாரத்தில் எவ்வளவு சிறிது பொருள்கள் இருக்கின்றன வோ, அவற்றில் ஒன்றைப்போலாவது அவர் இருக்கவில்லை; அவர் வெளி விஷயங்களைப்போல இருக்கவில்லை, அவர் உள்ளேயிருக்கிற சித்துப்பொருள் போலவும் இருக்கவில்லை. அவர் அசித்துப்பொருள் சித்துப்பொருள் இரண் டையும் சிருஷ்டித்தவர்; ஆனதால் அவர் எல்லாவற்றிற்கும் மேலானவர், மேலும் எல்லாவற்றிற்கும் வேறுனவர். அவர் ஸத்தியஸ்வரூபி, ஞானஸ்வ ரூபி, அநந்தஸ்வரூபி; அவருக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. அவர் எப்படி இந்த ஆகாசத்தில் இருந்துகொண்டு நியந்தாவாக எல்லா ஜடஜகத்தையும் பசுப் பிரகிருதியையும் நியமத்தில் வைத்துக்கொண்டிருக்கிறாரோ, அதுபோல அவர் மனித ஆன்மாக்களில் தருமத்திற்குக் காரணராகவிருந்துகொண்டு ஒவ்வொரு விமிஷத்திற்கும் நற்புத்தியைத் தருகிறார். ஜடஜகத்தும் பசுபக்ஷிகளும் நியம மறிபாமலே நியம பலத்தில் கட்டுப்பட்டு காரியங்களைச் செய்கின்றன. ஆன்மா கடமைகளின் உணர்ச்சியாகிய ஒளியினால் தருமத்தின் நியமத்தை யறிந்து ஸ்வாதீனத்தன்மையுடன் தருமகாரியங்களைப் புரிகிறது. எப்பொழுது ஆன்மா மாயையிப் பிரவிருத்திகளுக்குள்ளாகி தருமநியமமான கடமை யுணர்ச்சியினது கட்டளையை அசட்டைசெய்து பாபத்தினால் கவரப்படுகிறதோ, அப்பொழுது அது ஸ்வாதீனத்தன்மையைவிட்டு பிரஷ்டத்வத்தைப்பெற்று, திருத்தியு மென் னும் பாசத்தால் கட்டப்பட்டு ஆந்தரிகமான பொறுத்து முறு [illegible] மனோருத் தத்தை யனுபவித்துக்கொண்டிருக்கிறது. அப்பொழுது பாபத்தைப் போக்கத் தக்க ஈச்வரனன்றி அதற்கு வேறுகதியில்லை. அப்பொழுது பாபத்தினால் கவரப்பட்ட ஆன்மா இயற்கையான துயரத்தினால் எரிக்கப்பட்டு இவ்விதமாக இனிசெய்யேனென்று அவரைச் சரணடைகின்றது, அப்பொழுது அவரதை பாபத்திலிருந்துவிடுவித்து மறுபடியும் தனது ஸன்மார்க்கத்தில் விருத்திபடை யச்செய்கிறார். இது அவரது மகிமை, இது அவரது கருணை. பாபத்தையும் துயரத்தையும் வடிவாக உடைய இந்த ஸம்ஸாரத்திற்கு வேறுனவரும், பரிசுத் தரும், பாபமற்றவரும், அழிவற்றவருமான ஈச்வரனை தமது உள்ளத்தின் வழி யாகவிடைந்து மேலும் அவரைப் பாபத்தைப்போக்குகிறவராகவும், அழிவற்ற முத்தியைத்தருபவராகவும் அறிந்து ஆன்மா மிகச்சாந்தியைப்பெறுகின்றது.

He is Superior to and different from the universe, time and objects having form through Whom the world revolveth. Knowing HIM, the Fountain head of righteousness, the Remover of transgressions, the Lord of all riches, the Immortal, and the All Good, who dwelleth in the souls of creatures and is the dwelling place of the universe and its sole Encompasser, one attaineth great peace.

(16). பிரசிலேபநிஷத்து - 4 - 7.

ஸபத ஸௌம்ய வயாம்ஸிவாஸோ வ்ருக்ஷம்
ஸம்ப்ரதிஷ்டந்தே ஏவம்ஹவை வதத்
ஸர்வம் பராத்மனி ஸம்ப்ரதிஷ்டதே

பொழிப்புரை.

ஓ சௌம்மிய! பக்ஷிகள் எப்படி விருக்ஷங்களை ஆச்ரயமாக வாஸஸ்தானமாகச்செய்துக்கொண்டு அதில் வஸிக்கின்றனவோ அப்படியே சராசரமான ஜகத்தெல்லாம் பரமாத்மாவில் வஸிக்கின்றன.

விசேஷ உரை.

பிரபஞ்ச ஆகாயத்தில் பக்ஷிகளைப்போல அதிக வேகமாகவும், உயரமாகவும் பறக்கும்படியான சக்தி வேறு பிராணிகளுக்கு இல்லை. பக்ஷிகளின் பறக்கும் வேகத்தைப்பற்றி பரீக்ஷித்தவர்கள், ஹார்க்குருவிகள் ஒரு மணிநேரத்தில் 140 மைல்தூரம் அல்லது ஒரு வினாடிக்கு 190 அடி தூரமும், புறாக்கள் ஒரு மணி நேரத்தில் 35 மைல் அல்லது ஒரு வினாடிக்கு 50 அடியும் மார்ட்டின் பக்ஷிகள் ஒரு வினாடிக்கு 55 அடியும், வானம்பாடி ஒரு வினாடிக்கு 80 அடியும், லெ பக்ஷிகள் இன்னும் அதிக வேகமாக பறக்கும்படியான சக்தி உண்டு. இம்மாதிரி பக்ஷிகளின் இயற்கை லக்ஷணம்; அப்படி பறக்கும் பக்ஷிகளும் கடைசியில் தம் வாசஸ்தானத்துக்கு விருக்ஷங்களையே விசேஷமாகக் கொண்டிருக்கின்றன. அது போல, சராசரமான ஜகத்துகளெல்லாம் அநேக கோடானுகோடி மயில்கள் தூரத்திலும், அந்தரத்திலும் பறந்தாலும் அவைகள் யாவும் கற்பவிருக்ஷத்தைப் போன்ற கடவுளை தம் வாஸஸ்தானமாகக் கொண்டிருக்கின்றன.

O! Soumiah! As the birds of the air live on trees having them as their residence so all the heavens and the earth live in Him.

---

(17). சுவேதாசுவதர உபநிஷத்து

6-வது அத்தியாயம் 1-வது வாக்கியம்.

ஸ்வபாவமேகே வயோவதந்தி காலாந்தாந்யே
பரிமுஹ்யமானா தேவஸ்யேஷ மஹிமாது
லோகேயேனம் ப்ராம்யதே ப்ரஹ்மசக்ரம்.

பொழிப்புரை.

இந்த ஜகத்து சுற்றுவது ஸ்வபாவமென்று சில வித்வான்கள் சொல்லுகின்றார்கள்; காலத்தால இது நடக்கிறது என்று அறிவில்லாத மற்றும் சிலர் சொல்லுகின்றார்கள். ஆனால் ஜகத்தில் இந்த மகிமை பரமேசுவரனது. அவரால இந்த ஜகச்சக்கிரம் சுழலுகின்றது.

விசேஷ உரை.

சுபாவம் அல்லது இயற்கை என்றால் பரமாத்துமாவுக்கு இருக்கும் பல பெயர்களில் இதுவும் ஓர் சிறந்த பெயர். சிலர் இப்படி பொருள்செய்யக் கூடாதென்று ஆக்ஷேபிக்கில் அப்போது சுபாவம் என்பதுதானென்ன அது ஒருவஸ்துவா? அல்லது வெரும் வார்த்தையா? வஸ்துவென்றால் அதுவே பரமாத்துமா; வஸ்துவல்லவென்றால் அது வெரும் வார்த்தையே; ஆகவே வெரும்வார்த்தை என்னத்தைச் செய்யும். சுபாவம் என்னும் பதத்தினால் ஒரு காரியம் எப்படிச் சம்பவித்தது, எப்படி சம்பவிக்கிறது, என்பதைக் குறிக்குமேயன்றி; அக்காரியம் சம்பவிக்கிறதற்காக வேண்டிய காரணத்தையும், கருத்தாவையும் குறிக்காது. ஆகவே சுபாவமென்னும் வித்தாந்தம் சுத்த பிசகானதே. சிலர் காலத்தால் நடக்கிறதென்று சந்தேகிக்கிறார்கள். காலம் என்றால் என்ன? இதுவும் கடவுளுக்கு ஒரு பெயரா? கடவுளுக்கு ஒரு பெயரென்றால் ஆக்ஷேபிப்பார் இல்லை. அப்படியல்லவென்றால் இதுவும் ஒரு வார்த்தையாகி மேல் சொன்னபடி முடியும்.

Some Pandits say that the rotation of the earth is by *nature* and the ignorant think that it is by *time*. Nature is a *word*, what does it mean? To say nature or Law is merely describing how it happened but does not bring you a single step nearer to the *cause* or *power*. The earth rolls on by His force and power.

---

(18). சுவேதாசுவதர உபநிஷத்து

17–வது அத்தியாயம் 16-வது வாக்கியம்.

ஸ்தம் மயோஷ்யம் ருத ஸை ஸ்ம்ஸ்தேஜ்ஞஹ
ஸ்ர்வகோபுவனஸ்யாஸ்ய கோபதா; ய ஸை
அஸ்ய ஜகதோநித்ய மேவநாங்யோ ஹேதுர்வித்யத
ஸைனாய: தம்ஹதேவமாத்ம புத்திப்ரகாஸம்
முமுக்ஷுர் வைசரண மஹம்ப்ரபத்யே.

பொழிப்புரை.

அவர் ஞானஸ்வரூபி, அழிவற்றவர், யாவற்றிற்கும் தலைவராகி நன்றாகவிருப்பவர், ஞானமுடையவர், எல்லாவிடத்திற்கும் போகிறவர். இவ்வுலகத்தினது பாலகர். யார் இவ்வுலகதனை எப்பொழுதும் நியமத்தில் வைத்திருக்கிறாரோ அவர்தவிர இவ்வுலகியற்கிற்கு வேறுகாரணமில்லை. நான் முழுதும் ஆதமபுத்திப பிரகாசனுடைய அப்பரமேஸ்வரனை சரணடைகிறேன்.

விசேஷ உரை.

அவர் நமது உள்ளங்களில் நமது கடமைகளின் ஞானத்தையும், தருமபுத்தியையும் விளங்கச்செய்கிறார். அரசன் எப்படி தனது குடிகளுக்கு ஸ்வாதீனத்தைத்தந்த அரசின் நியமங்களனைத்தையும் வெளிப்படித்தியிருக்கிறாரோ, தருமத்திற்குக் காரணரான கடவுள் அவ்விதமாக மனித ஆன்மாக்களுக்கு ஸ்வாதீனத்தைத்தந்து அவைகளினது உள்ளங்களில் தருமநியமங்களனைத்தையும் பதித்து வைத்திருக்கிறார். நாம் கற்புத்தியுள்ள ஆலோசனையினால் நமது கடமைகளின்னவை என்னும் ஞானஒளியால் ஆன்மாவென்னும் படத்தில் தொன்று தொட்டுப் பதித்தவைத்திருக்கின்ற தருமநியமங்களனைத்தையும் படிக்கிறோம், மேலும் அதன்படி ஆசரித்து நல்லவர்களாகிறோம், ஸாதுக்களாகிறோம், விஷய முள்ளவர்களாகிறோம், நல்லசீலமுள்ளவர்களாகிறோம், கடவுளிடத்தன்புள்ளவர்களாகிறோம். தருமானுஷ்டானத்தினால் புண்ணியமாகிய ஒளியில் உள்ளம் தூய்மையுடையதாஞல் நாம் அதிபரிசுத்தமாகிய ஆத்துமானந்தத்தைப் பெறுகிறோம், மேலும் அந்த ஆத்துமானந்தத்தினால் நமது கருத்திலுள்ள துயரங்களனைத்தும் நசித்துப்போகின்றன. நாம் தருமத்தினது கட்டளையின்படி கருத்தினது தீயநோக்கங்களுக்கும் உள்ளத்தினது கெட்டவிருப்பங்களுக்கும் மாறுகச் சென்று ஆத்துமானந்தத்தை எவ்வளவு விருத்திசெய்துக்கொள்ளுகிறோமோ எவ்வளவு பரிசுத்தப்படுத்திக்கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கும் அந்தப் பவித்திர ஸ்வரூபனிடத்தில் நமது விருப்பம் செல்லுகின்றன. மேலும் அவரையடையும்நிமித்தம் ஸம்ஸாரத்தினது மரணமாகிய பாசத்திலிருந்து நீங்கி முத்தி விருப்பமுடையவர்களாகி அவரது சரணடைகிறோம்.

Full of intelligence is this Immortal Being, Who existeth as the Lord of all. He is All traversing, Wise, and the Preserver of the world. This universe is ever under His rule. No other Cause there is of its government. So this Being the Giver of religious knowledge, do I commit myself with the desire of Life Eternal.

சருதிகளில் சில, குணார்த்தவாதமாயும், சில பூதார்த்தவாதமாயும் இருக்கின்றன. பூதார்த்தவாதமென்றால் உள்ளது உள்ளபடியும் நடந்தது நடந்தபடியும் காட்டுவதாம்; குணார்த்தவாதமோவெனில் ஒரு பொருளை அல்லது காரியத்தை மகிமைப்படுத்தி அதன் தத்துவத்தை வர்ணித்துக்காட்டுவதாம் உலக சிருஷ்டிமைப்பற்றி வர்ணித்துக் காட்டும் உபநிஷத்துக்களில் இரண்டை இதனடியில் பதிப்பித்திருக்கிறோம்.

———:0:———

(19). இருக்கு வேதத்தைச் சார்ந்த ஐதரேய உபநிஷத்து.

முதலில் இவர் (பிரமம்) ஒருவர்மாத்திரம் ஆத்மாவாகவிருந்தார். அதைவள்ள வேறுயாதொன்றுமில்லை. உலகங்களை சிருஷ்டிப்போமென்று அவர் எண்ணி, ஜலம், தேஜஸ்ஸு, மரணம், அப்புகள், இந்த உலகங்களை சிருஷ்டித்தார். ஆகாசத்துக்குமேல் ஜலம், ஆகாசம் ஸ்தானம், நடுமண்டலத்தில் தேஜஸ்ஸும், பிரதிவியில் மரணம், அதற்குக்கீழ் அப்புகள், இதுகள்தான் உலகம் (இனி) லோகபாலர்களை சிருஷ்டிப்போமென்று அவர் எண்ணினார். ஜலத்திலிருந்தே புருஷனை பெடித்து அவர் உண்டாக்கினார். அவனை அபிதபித்தார். அப்படி அபிதபிக்கப்பட்டவனுக்கு முட்டைபோல் வாய் மலர்ந்து, வாயினின்று வாக்கும், வாக்கினின்று அக்கினியும் (உண்டாயிற்று) மூக்குகள் மலர்ந்து, மூக்குகளினின்று சுவாசமும், சுவாசத்தினின்று வாயுவும் (உண்டாயிற்று) கண்கள் மலர்ந்து கண்களினின்று பார்வையும், பார்வையினின்று ஆதித்தியனும (உண்டாயிற்று) காதுகள் மலர்ந்து, காதுகளினின்று கேள்வியும் கேள்வியினின்று திக்குகளும (உண்டாயிற்று) தவக் உண்டாகி, தவகினின்று மயிர்களும, மயிர்களினின்று பூண்டுகளும, செடிகளும (உண்டாயிற்று) ஹிருதயமும் உண்டாகி, ஹிருதயத்தினின்று மனதும், மனதினின்று சந்திரனும் (உண்டாயிற்று) நாபிமலர்ந்து, நாபியினின்று அபானமும் அபானத்தினின்று மிருத்தியுவும் (உண்டாயிற்று) சிருஷ்டிக்சருவியுண்டாகி, சிருஷ்டிக்சருவியினின்று ரேதஸ்ஸும், ரேதவினின்று ஜலமும் (உண்டாயிற்று).

இப்படி சிருஷ்டிக்கப்பட்ட இந்த தேவதைகள் இந்த சமுத்திரத்தில் விழுந்தன. அவனுக்கு (புருஷனுக்கு) பசிதாபங்களை யுண்டாக்கினர் அந்த தேவதைகள் தாங்களிருந்துண்ணும்படி நிலையிடத்தைத் காட்டவேணுமென்று கேட்டதுகள். அவர் பசுவைக்கொண்டுவந்தார், எங்களுக்கு இது போதாதென்றதுகள். அவர் அதுகளுக்குப் புருஷனைக்கொண்டுவந்தார். "நன்றாய் செய்யப்பட்டதல்லவா" என்று அதுகள் சொல்லிற்று; ஆகையால் புருஷன் தான் நன்றாய் செய்யப்பட்டவன். அவரவர் ஸ்தானத்தில் பிரவேசியுங்களென்று சொன்னார் அக்கினி வாக்காகி வாயில் பிரவேசித்தது. வாயு சுவாசமாகி, மூக்குகளில் பிரவேசித்தது. ஆதித்தியன் பார்வையாகி, கண்களில் பிரவேசித்தது. திக்குகள் கேள்வியாகி, காதுகளில் பிரவேசித்தது. பூண்டு மரங்கள் மயிர்களாகி தவக்கில் பிரவேசித்தன. சந்திரன் மனதாகி, ஹிருதயத்தில் பிரவேசித்தது. மரணம் அபானமாகி, நாபியில் பிரவேசித்தன. ஜலம்

தஸ்ஸாமி, திருஷ்டிக்குருவிகளில் பிரவேசித்தது. பதிதாகங்கள் அவரைப் ர்த்து (இடம்) காட்டுமென்றதுகள். நாலுங்களே இந்த தேவதைகளுடன் ர்த்து அதுகளில் உய்களைப் பங்குடையவராக்குகின்றேனென்றார். ஆனை ல் எந்த தேவதைகளுக்காக ஹவிஸ்ஸு எடுத்தபோதிலும் பதிதாகங்கள் பங்கு யதாகவிருக்கிறதுகள். அவர் இதுகள் லோகங்களும், லோகபாலகர்களும் னி) இதுகளுக்கு அன்னத்தை உண்டாக்குவோமென்று எண்ணினார்கள். பர் ஜலத்தை அபிதபித்தார். அப்படி அபிதபிக்கப்பட்ட ஜலத்தினின்றும் ர்த்தியுண்டாயிற்று. அதுவே அன்னம். சிருஷ்டியானவுடனே அது ஓட நம்பித்து. அதையவன் வாக்கால் பிடிக்க விரும்பினான்; அதை வாக்கால் டிக்கக்கூடவில்லை. அதை வாக்கினால் கிரகித்திருப்பானேயானில், அன்னத் உச்சரிப்பதனாலே திருப்தியுண்டாகும். சுவாசத்தினால் அதை பிடிக்க ச்சித்தான். அதை சுவாசத்தினால் கிரகிக்கக்கூடவில்லை. அதை சுவாசத்தி ல் கிரகித்திருப்பானால், அன்னத்தை முகருவதனாலேயே திருப்தியுண்டா ம். அதை பார்வையினால் கிரகிக்க இச்சித்தான். அதை பார்வையினால் கிக்கக் கூடவில்லை. அதை பார்வையினால் பிடித்திருப்பானால், அதைப் ர்ப்பதினாலே திருப்தியுண்டாய்விடும். அதைக்கேள்வியினால் பிடிக்கவிரும் னான். அதைக்கேள்வியினால் பிடிக்கக்கூடவில்லை. அதைக் கேள்வியினால் கித்திருப்பானால், அன்னத்தைக் கேட்பதினாலே திருப்தியுண்டாகும். தை தூவக்கினால் பிடிக்கவிச்சித்தான்; அதை தூவக்கினால் கிரகிக்கக்கூட ல்லை. அதை தூவக்கினால் கிரகித்திருப்பானால், அன்னத்தைத் தொடுவதி லேயே திருப்தியுண்டாகும். அதை மனதினால பிடிக்கவிச்சித்தான்; அதை னதினால் பிடிக்கக்கூடவில்லை. அதை மனதினால் பிடித்திருப்பானால், அன் த்தை நினைப்பதினால் திருப்தியுண்டாகும். அதை அபானத்தினால் கிரகிக்க ரும்பினான்; அதை கிரகித்தான். வாயுவானது தான் அன்னத்தை கிரகிக் றது; எனென்றால் வாயுதானுக்கும் அன்னத்தை ஜரிப்பிக்கிறது. நானில்லா ட்டால் இது (மூர்த்தி) எப்படியிருக்குமென்று அவன் நியானித்தான். அதை ன் எந்தவழியாய் அடைவேனென்று எண்ணினான். பேச்சுவாக்கினாலும், கித்தல் சுவாசத்தினாலும், பார்வை கண்ணினாலும், கேள்வி காதினாலும், பர்சம் தூவக்கினாலும், நினைவு மனதினாலும். அபானம் அபானத்தினாலும், மிச னம் சிருஷ்டிக்குருவிகளாலும் ஆகும்பக்ஷத்தில், நான் யாரென்று யோசித் ான். அவனிந்த ஸ்மானத்தைத் தானேபிளந்து அந்தவழியாய்த்தானே பிர வேசித்தான். அந்தவழிக்கு விவிருதியென்றுபெயர். அதுதான் ஆனந்த ஸ்தானம்.

1. There was not non-existent nor existent: there was no realm of air, no sky beyond it.

What covered in, and where? and what gave shelter? Was water there, unfathomed depth of water?

2. Death was not then, nor was there aught immortal: no sign was there, the day's and night's divider.

That One Thing, breathless, breathed by its own nature: apart from it was nothing whatsoever.

3. Darkness there was: at first concealed in darkness this All was indiscriminated chaos.

All that existed then was void and formless: by the great power of Warmth was born that Unit.

4. Thereafter rose Desire in the begining, Desire, the primal seed and germ of Spirit.

Sages who searched with their heart's thought discovered the existent's kinship in the non-existent.

5. Transversely was there severing love extended: what was above it then, and what below it?

There were begetters, there were mighty forces, free action here and energy up yonder.

6. Who verily knows and who can here declare it, whence it was born and whence comes this creation?

The Gods are later than this world's production. Who knows then whence it first came into being?

7. He, the first origin of this creation, whether he formed it all or did not form it.

Whose eye controls this world in highest heaven, he verily knows it, or perhaps he knows not.

---

(20). பிருஹதாரணிய உபநிஷத்து

4-வது அத்தியாயம் 5-வது பிராமணம் 15-வது வாக்கியம்.

தத்யதார தாநாமௌச ரதயே மௌசாராஹ
ஸர்வே ஸமர்பிதாஹ; ஏவமேவாஸ்மிந்நாத்மநி
ஸர்வாணி பூதாநி ஸர்வே தேவாஹ
ஸர்வே லோகாஹ ஸர்வேபராணாஹ
ஸர்வே ஏதஆத்மாநாஹ சமர்பிதாஹ.

பொழிபபுரை.

எப்படி சக்கிரத்தின் குடத்திலும் வட்டைச்சுற்றிலும் எல்லா ஆரைக்கால்களும் வைக்கபபட்டிருக்கின்றனவோ! அதுபோலவேபரமாத்துமாவினிடத்தில் சகலபொருள்களும், சகல தேவதைகளும் சகல உலகங்களும, சகல அசைவுசெய்கைகளும், இவ்வுயிர்களினைத்தும் வைக்கப்பட்டிருக்கின்றன.

விசேஷ உரை.

நீர், காற்று, நீ முதலியபொருள்களனைத்தும்; வேறு உலகங்களில் வாழ்கின்றவர்களும் மனிதர்களைவிட மேலானவர்களுமான தரும ஜீவிகளாகிய உயிர்களனைவரும்: சூரியன், சந்திரன், நிரகம், நக்ஷத்திரம், பூமி முதலிய உலகங்களனைத்தும்: உயிர்களினது காற்றுசம்பந்தமாகிய செய்கைகளனைத்தும் மேலும் எண்ணிறந்த உலகங்களிலிருக்கும் எண்ணிக்கையற்ற ஆன்மாக்களனைத்தும் இந்தப் பரமாத்துமாவைப் பற்றிக்கொண்டிருக்கின்றன.

As the spokes of a wheel depend on its nave and circumference, so on this BEING do depend all things, all Gods, all worlds, all lives and all these souls.

---

(21). புருஷ சூக்தம்.

ஓம் ஸஹஸ்ர சீர்ஷா புருஷ ஹ, ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத் ஸபூமிம் விஸ்வதோ விருத்வா, அத்யதிஷ்டத் தஸாங்குலம்.

பொழிப்புரை.

புருஷன் என்பவன் ஆயிரம் சிரசு-ஆயிரங்கண்-ஆயிரம்பாதம் இவைகளையுடையவன்; அவன் பூமியை எங்கும் வியாபித்து தசாங்குலம் என்னும் அனந்தயோசனைதூரம் கடந்து நிற்கிறான்.

புருஷ ஏவேதகம் ஸர்வம் யத்பூதம் யச்ச பவ்யம்
உதாம்ருதத்வ ஸ்யேஸாந ஹ, யதன்னே நாதிரோஹதி.

சென்றதும் இருக்கிறதும் வருகிறதும் ஆன இவை எல்லாம் புருஷன் என்பவனுக்குள்ளே அடங்கியிருக்கின்றன: (அதாவது அபுருஷனைப்பற்றித் தனித்திருத்தல், தனித்தறிதல், இல்லாமை என்றதாம்.) மேலும் மோக்ஷத்திற்கும் காரிய காரண ரூபமாகிய ஜகத்துக்கும் அவனே ஈசன்.

ஏதாவா நஸ்யமஹிமா, அதோ ஜ்யாயாம்ஸ்ச புருஷ ஹ
பாதோஸ்ய விஸ்வா பூதாநி, த்ரிபாதஸ்யா மிருதமதிவி.

மேற்சொல்லியவைகள் அவனுடைய மகத்துவமாம். இம்மகத்துவத்தைப் பார்க்கிலும் அப்புருஷன் என்பவனே மிகவும் பெரியவன். இங்குகாணும் சிருஷ்டிகள் யாவும் அவனுடைய ஓர் அம்சமாயும், பரமாகாசத்தில் நித்தியமாய விளங்குகின்றவைகள் பலவம்சம் ஆகவு மிருப்பதினாலே பிரபஞ்சத்தில் காணும் மகத்துவத்தைக்குமிஞ்சின மகத்துவமுடையவனென விளங்கும்.

த்ரிபாதூர்த்வ உதைத் புருஷ ஹ, பாதோஸ்யேஹா பவாத் புநஹ
ததோவிஷ்வங் வ்யக்ராமத், ஸாசநா நசனே அபி.

மேலுரைத்த அவனுடைய பலவம்சம் மேலேயே வியாபித்திருக்கிறது. ஆகிலும் அவன் ஓர் அம்சத்தினாலே மாத்திரம் இங்கெங்கும் விஸ்தாரமாக வியாபித்துச் சராசரங்களைச் சிருஷ்டிக்க வியாபரித்தான்.

தஸ்மாத் விராடஜாயத, விராஜோ அதி புருஷஹ
ஸஜாதோ அத்யரிச்யத, பஸ்சாத்பூமி மதோபுர ஹ.

புருஷனிடத்திலிருந்து மூலபிரகிருதி யுண்டானபின, பிரம்மா உண்டாகி உடனே பூமியெங்கும் வியாபிக்கும்படி வளர்ந்தான்.

யத்புருஷேண ஹவிஷா, தேவா யக்ஞ மதன்வத
வசந்தோ அஸ்யஸீதாஜ்யம், கிரீஷ்ம மித்ம ஸ்சரத்தவி ஹி.

பரமபுருஷன் விராட்டைச் சிருஷ்டித்தபின், பிரம்மாவைப் படைக்க; அவன் மௌனமாயிருக்க ஏது காரணமென்ற புருஷன் வினவ, அதற்கு அஞ்ஞானத்தா லென்றவணுரைக, ஆகில் நீ உன் னிந்திரியங்களைக் காத்தாவாகி மானதமான ஆராதனையில உன் ஆத்மத்தைச் செலுத்தி நெய் முதலியவைகள் விஸ்தாரமாக வண் டாரும் காலங்களோ ஓம சாமகிரியைகளாகப பாவித்து உன் ஆத் மாவை நான் என்னும் அக்கினியில செலுத்துவாயாகில (பரிக்டுவா யாகில) உனக்கு ஞானமுண்டாயிச் சிருஷ்டிகரும் சகதயுண்டாமென அச்சதுர்முகனுமை அவ்வாறே ஆத்மாவைப பரிதியிட்டான்.

சபதா ஸ்யாசன் பரிதயஹ, திரிஸ் ஸ ப்த சமித்ஹ க்ருதாஹ
தேவா யத்யஜ்ஞமதன்வாஹ, அபதகன் புருஷம் பசும்.

பிரம்மாவின் இந்திரியங்கள் தியானமாகிய யகஞத்தைச் செ ய்யவிரும்பித் தங்களுக்கு கிருபபிடமாகிய பிரம்மாவைப பசுவாகப பாவித்தபோது பிரம்மா தேகத்திலிருக்கின்ற தத்துவங்கள் பிரிதிவி அபபு, தேயு, வாயு, ஆகாசம, அகங்காரம், புதகி என்னும் இத் தத்துவங்கள் அபபூஜையில சுற்றிருக்கும் பரிதிகளாயும், அபபடியே பிரிதிவி, அபபு, தேயு, வாயு, ஆகாயம் இவைகளின் ஸ்தூலமும் சூட் சுமமும்; கண், நா, மூகது. செவி, உருவு, இவ்வைநதாகிய ஞானே ந்திரியங்களும்; வாக்கு, பாலி, பாதம், பாயு, உபஸ்தம் என்னும் காமேந்திரியங்கள் ஐநதும, அந்தக்காரணமும ஆக தத்துவங்கள் இருபத்தொன்றும் சமித என்னும் எரிகருவிகளாயின.

தம் யஜ்ஞம் பாஹிஷி பரௌக்ஷந் புருஷம் ஜாதமக்ரதஹ
தேன தேவா அயஜந்த ஸாத்யா ரிஷயஸ்சயே.

பதார்த்தங்களிருந்த விடமேபோய்க் கிரகித்தும் தான் சூட்சு மமாயிருப்பதால் அவ் வறிவைக்கொண்டு சாதிக்கத்தக்கவையாயிரு ந்தும் இந்திரியங்கள் ஆராதனைக்கு யோக்கியமாக மூண்மிற்கும

அச்சதுர்முகப்புருஷனை அவன் தேகத்தோடு சேர்த்து புரௌக்ஷ
ணத்திலுல் சுத்திகரித்துப பின அவனைப் பரம புருஷனுடைய அக்
கினியில வைத்ததாய்ப பாவிக்கிறன.

தஸ்மாத் யஜ்ஞாத் சர்வயுதஹ, சம்பரதம் ப்ரஷதாஜ்யம் [சயே.
பசூம்ஸ்தாகம்ஸ்சக்ரே வாயவ்யான், ஆரண்யான் க்ராம்யாம்ஸ்

நான் என்னும் அகங்காரம், எனது என்னும் மமகாரம் இவை
யெல்லாவற்றையும் பரித்தச் சர்வபிரகாரத்தினாலும், அப்பரம
புருஷனிடத்தில் ஆராதனை ரூபமாகச் செலுத்தபபட்ட அச்சதுர்
முக புருஷனிடத்திலிருந்து முன அப்பரமபுருஷன் படைத்த
விராட் என்னும மூலபிரகிருதி ஜகத் ரூபமாகி மாறும்படியான
சக்தியுடன் தோன்றியிற்று. பின் அதைகொண்டு அச்சதுர்முக
புருஷன் உபயோகமுள்ள பசுக்களையும பட்சிகளையும வன விலங்கு
களையும நாடுவாழ மிருகங்களையும் படைத்தான்.

தஸ்மாத் யஜ்ஞாத் சர்வயுதஹ, ரிசஸ் ஸாமானி ஜஜ்ஞிரே
சந்தாம்சி ஜஜ்ஞிரே தஸ்மாத், யஜுஸ் தஸ்மாதஜாயத.

அகங்காரம மமகாரங்களை விட்டுப பரமபுருஷனிடம எல்லா
வற்றையுஞ் செலுத்தி நிற்கின்ற பிரம்மாவிடத்திலிருந்து வேதங்
கள் முதலிய ஞானங்கள் எல்லாம் தோன்றினவாம்.

தஸ்மா தஸ்வா அஜாயந்த, யேகேசோ பயாததஹ
கவோஹஜஜ்ஞிரே தஸ்மாத், தஸ்மாஜ்ஜாதா அஜாவயஹ.

பிரம்மாவினிடத்திலிருந்து குதிரை கழுதை ஒட்டகம் எருது
ஆடு முதலிய பிராணிகள் யாவும் தோன்றின.

யத்புருஷம் வ்யததுஹு, கதிதா வ்யகலபயன்
முகம்கிமஸ்ய கௌபாஹு, காவூரு பாதாவுச்யதே.

பரமபுருஷனிடத்தில் பிரம்மனை இந்திரியங்கள் அபிக்கமாக்கி
விட்டபோது அவனுடைய அவயவங்களாகிய முகம், புஜங்கள்,
தொடைகள், பாதங்கள், எவைகளென்று பிரியாணிக்கப்பட்டிருப்பன
வென்பதாம்.

ப்ராம்மணோஸ்ய முகமாசித், பாஹுராஜன்யஹ்க்ருதஹ
ஊருததஸ்ய யத்வைஸ்பயஹ, பத்பயாக்ம் சூத்ரோ அஜாயத.

பிரம்மாவுக்கு பிராமணன் முகமாயும், க்ஷத்திரியன் புஜமா
யும், வைசியன் தொடையாயும், சூத்திரன் பாதமாயுமானார்கள்
என்பதாம்.

சந்த்ரமா மநஸோ ஜாதஹ, சக்ஷோ சூர்யோ அஜாயத
முகாதிந்த்ராஸ்ச்சாக்நிஸ்ச ப்ராணாத் வாயுரஜாயத.

மனசுக்காகச் சந்திரனும், கண்ணுக்காகச் சூரியனும், முகத்துக்காக இந்திரனும் அக்கினியும், பிராணனுக்கு வாயுவுமுண்டாயின.

நாப்யா ஆஸீதந்தரிக்ஷம் சீர்ஷ்ணோத்யௌஸ்ஸமவர்தத
பத்பயாம் பூமிர் திஸஸ்ரோத்ராத், ததாலோகாகும்ஸ்தலடயன்.

பரமபுருஷனுக்கு உலகங்களும், உலகத்தில் உள்ள வஸ்துக்கள் யாவும் அவயவங்களாயின வென்பதாம்.

வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம், ஆதித்யவர்ணம் தமஸஸ்துபாரே, சர்வாணி ரூபாணி விசித்ய தீரஹ, நாமானி கிருதவா அபிவதன் யதாஸ்தே.

பரமபுருஷன் உலகத்திலுள்ள வஸ்துக்களை ரூபமாக்கி அவைகளுக்குப் பேருமிட்டு விவகரிக்குமபடி செய்து மூலபிரகிருதிக்கபரால் ஆதித்திய பிரகாசனாக விருக்கிறான். இபபுருஷன மஹாமஹிமை பொருந்தியவன்.

தாதா புரஸ்தாத்யதாஜஹார, சக்ர ப்ரவித்வான் பிரதிஸஹ்ர சதஸ்ரஹ, தமேவம்வித்வா நமிருத இஹ பவதி நான்யஃபந்தா அயநாய வித்யதே.

பிரம்மாவும் இந்திரனும் அப்பரமபுருஷனை உள்ளபடி அறிந்து தன்னிஷ்டத்தைப பெற்றதுபோல் இந்த உலகத்தில் மனிதனும் அவ்வாறே அவனை அறிந்தே எல்லாம் பெறவேண்டுமென்பதாம்.

யஜ்ஞேந யஜ்ஞ மயஜந்த தேவாஹ, தானி தர்மாணி ப்ரதமான்யாஸன், தேஹநாகம் மஹிமாநஸ்ஸசந்தே, யத்ரபூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவாஹ.

பிரம்மா தனனுடைய சிருஷ்டி ஞானத்துக்காகப் பரமபுருஷனுரைத்த முறையே தன்னை அபிசாக அவரிடஞ்செலுத்தத் தன்னிந்திரியங்கள் இசைந்தன. இவ்வாறு மானசாராதனமே மோக்ஷத்துக்கு முக்கியமாம். இவ்விதஞ் செய்கிறவர்கள் சாயுஜ்யப்பதவி அடைவார்கள். முனிவர்களும் இக்கிரியையினாலேயே மேற்சொன்ன பதவியைப் பெற்றிருக்கின்றார்கள்.

விசேஷ உரை.

சுருதிகளில் முக்கியமா யிருக்கிறதும், அதி விசேஷமானதும் "புருஷசூக்தம்". இந்த புருஷசூக்தம் என்ற வாக்கியம் புருஷனை பற்றி என்றுசொல்லப்பட்டது என்னும் அருத்தத்தைக் காட்டுகின்றது. புருஷன் என்பவர் யாரெனில் "பூரணத்வாத புருஷஹ" எனறபடி பூரண மூர்த்தியாயிருப்பதால புருஷன் எனகடவுளுக்கே பரியாய நாமமாக விளங்கலாயிற்று.

இபபிரபஞ்சத்தின் சம்பூதி - விபூதி - பரிபூதி என்னும் சிருஷ்டி ஸ்திதி-ஸம்ஹாரம் ஆகிய கிருத்தியங்களை நடாத்தி வருவதற்குக் காரணராகியவரே புருஷன் ; இவருடைய மகத்துவத்தையும், பிரபஞ்ச சிருஷ்டியையும், முக்தியடையும் மார்கத்தையும், காட்டுவதே இப புருஷசூக்தத்தின் கருத்தாம்.

இந்தப் புருஷசூக்தம் கிருஷ்ண யஜுர்வேதத்தில் கடரிக்குகளாகவும், சுக்கில யஜுர்வேதத்தில் ருக்குகளில அடங்கியும், இருக்கு வேதத்தில் கசுருக்குகளாகச்சமைந்தும், சாம அதர்வண வேதங்களில் ருக்குகளாக முடிந்தும், இருக்கின்றன. இவைகளில இந்த புருஷன் வரலாற்றைகுறித்து கடரிகுகளாக கிருஷ்ணயஜுர்வேதத்தில பூரணமாய்க் கூறியிருக்கின்றமையால் அவைகளையே இங்கு எடுத்துக்காட்டியிருக்கின்றோம். முதல் கடரிக்குகளாகிய கவி "அனுஷ்டுப்" அடிகளாலும், பின்வரும் மூன்று ரிகுகளாகிய கவி "திருஷ்டுப்" அடிகளாலும் பாடபபட்டிருகின்றன.

முதல் ரிக்கில் பரமபுருஷன் எல்லா திசைகளிலும்; 2-ம் ரிக்கில் எல்லா காலங்களிலும் இருக்கின்றனரெனவும்; 3-ம் ரிகில இகபர சுகாதாத்தங்களுகு அவரே ஈசன் எனவும்; 4-ம் ரிக்கில் அவருடைய மகத்துவத்தை பிரஸ்தாபித்தும்; 5-முதல் 15-ரிக்குகள் வரையிலும் அவருடைய பல அம்சமானது பரமாகாசதகில வியாபித்திருபபதாகவும்; வஸ்துக்களின் சிருஷ்டியைப்பற்றியும், லோக சம்ரகூஷண நடாதகிவரும் விவரங்களைக குறிததும், 15-லிருந்து 18-வரையுள்ள ரிகுகளில அபபரமபுருஷனை அறியும் ஞானமே மோகூஷம் பெறும் வழியெனவும் கூறியிருகின்றது.

இந்த புருஷசூக்தத்தினால் பரமாத்துமாவுக்குச் சரீரமுண்டென்றும்; அந்தச் சரீரத்தின் அவயவங்களினின்று, பிராம்மணஜாதி சகூர் வருணத்தாரும், இந்திராதி தேவாகளும் உண்டானார்களென்றும் இத்தேசத்தாரில் சிலர் சந்தேகிக்கவும், வேறு மதஸ்தர்களிற்

லர் விபரீதமாக எண்ணவும் கூடும். இப்படி சந்தேகித்து விபரீதார்த்தங்கொள்வதற்குக் காரணம் அறியாமையே. பிராம்மணஜாதி சதுர்வருணத்தாரும் இந்திராதி தேவதைகளும் யாருடைய அவயவங்களில இருந்து உண்டானதாக சொல்லப்படுகிறதோ, அந்த புருஷன் மனுஷியரூபமாக உத்பிரேக்ஷிக்கப்பட்ட பிரபஞ்சத்தைக் காட்டிலும் வேறலலவென்று ஸ்பஷ்டமாய் ஏற்படும். இந்த புருஷசூக்தத்துக்கு ஸ்ரீசங்கரர், ராமாநுஜர், மத்வாசார்யர், மஹீதரர், விதத்யாரண்யர், தயாநந்தர் முதலான மஹான்கள் பாஷ்யம் செய்திருக்கின்றனர். இவர்களில, விதத்யாரண்யர் இதச் சொல்லுக்கு செய்திருக்கிற பாஷ்யத்தைச் சற்று கவனிப்போம்.

அதில் "அதிரின்றும்" விராட்டு உண்டாயிற்றென்னும் போது, எதை யெலலாம (ஜாதம்) கடந்ததென்று சொல்லப்பட்டதோ அதுவே பிரபஞ்சம். அதிரின்றும=ஆதிபுருஷனிடத்தினின்றும், விராட்டுண்டாயிற்று=நிருபமாண்டமாகிய பிரபஞ்சமாகிய தேகமுண்டாயிற்று." என்று வித்தியாரண்யர் பொருள் செய்திருக்கிறார். மஹீதர பாஷ்யமும இதற்கு இசைந்தேயிருக்கிறது. "சகலதத்தையும் கடந்ததென்று எது சொல்லப்பட்டதோ, அதுவே பிரபஞ்சமாகிறது. அதிரின்றும=ஆதி புருஷனிடத்தினின்றும், விராட்டு=பிரம்மாண்டதேகம், ஜனிதத=உண்டாயிற்று. எதினிடத்தில் பொருள்கள் பலவிதமாய் விளங்குகினறனவோ, அதுவே விராட்டு" என்று மஹீதரர் பாஷ்யம செய்திருக்கிறார். இதில் பிரதிபாதிக்கப்பட்ட யக்ஞியமும் மானசயக்ஞியமே என்று எல்லோராலும ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மானசயக்ஞியமென்றால் உண்மையாய் நடந்த யக்ஞியமல்லவென்றும்: கேவலம் மனதினால் கற்பிக்கப்பட்டதென்றும பொருள். இதுதான் உண்மையான கொள்கையெனபதற்கு, இத்தச்சுருதி வாக்கியத்திலேயே போதுமான நிதர்சனங்கள்ளிருக்கின்றன. இந்த யக்ஞியத்துக்கு விராட்டு புருஷனே ஆஜ்யமாயுதவும்=சோறாயும், வசந்தருதுவே நெய்யாகவும், கிரீஷ்மருதுவே சமித்தாகவும், இனனுமிவ்விதமாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இதை வாஸ்தவமாகக் கொள்ளும பக்ஷத்தில்; கேவலம் காலரூபமாகிய ருதுக்களே அவை சிருஷ்டியாவதற்கு முன் எப்படி நிர்மிலெடுத்துவிடக்கூடுமோ அதைச்சற்று யோசிக்கவேண்டும். இவை எல்லாம் நாம் கேவலம அனுமானத்தால் செய்த பொருளென்று நினைக்கவேண்டாம். அனறியும்,

பிராஹ்மணோஸ்ய முகமாஸீத், பாஹூராஜன்யஹ்க்ருதஹ
ஊருததஸ்ய யத்வைஸ்யஹ, பத்ப்யாகம் சூத்ரோ அஜாயத.

எனனும் இத்தரிக்ருக் முதல் வாக்கியத்தில் 'ஆஸீத்' எனறும் வினை

யையும்; இரண்டாவது வாக்கியத்திலிருக்கும் "கிருத ஹ" என்னும் வினையையும், மூன்றாவது வாக்கியத்தில் தொகுகியிருக்கும் அல்லது தோன்ற, வினையையும் நான்காவது வாக்கியத்திலிருக்கும 'அஜாயத' என்ற வினையையும் பற்றி யோசிப்போமாகில், ஆஸீத் என்றால் "ஆகியது" என்றும்—கிருத ஹ என்றால் செய்யப்பட்டது என்றும்; "அஜாயத" என்றால் பிறந்தது என்றும் அருத்தமாகிறது.

ஆகவே விராட்டு என்னும் பிரபஞ்சத்துக்குப "பிராம்மணன் முகமானன், க்ஷத்திரியன் தோள்களாக்கப்பட்டான், வைசியன் என்பது எதுவோ அதுவே தொடைகள்" என்று சொல்லியிருப்பதில், இவர்களே முகமாகவும், புஜங்களாகவும், தொடைகளாகவும், உத்பிரேக்ஷித்திருப்பதாகக் கருதுதேயன்றி, அந்தந்த அவயவங்களினின்றும், அவர்களானார்களென்பதன்று. இந்த உத்பிரேக்ஷைக்கு ஹேதுவில்லாமற் போகவில்லை. புத்திக்குக் குறியாகிய முகத்தை கல்வித்திறத்தால் வினையும் ஞானத்தைச் குறியாக்கொண்டிருக்கும் பிராம்மணனும்; பலத்துக்கு ஸ்தானமாகிய புஜத்தை, ராஜிய சம்ரக்ஷணார்த்தம் உதவும் பலத்தைக் குறியாகவுடைய க்ஷத்திரியனும்; சஞ்சாரத்துக்குச் சாதனமான தொடைகளை, வர்த்தகத்துக்கு இன்றியமையாத கருவியாகிய சஞ்சாரமுடைய வைசியனும்; விளக்கியிருக்கின்றது. இந்த வர்ணனையில் கடைசி வாக்கியத்தில் "பாதங்களினின்றும் சூத்திரன் உண்டானான்" என்று சொல்லியிருக்கிறபடியால், அவ்விடத்தில் 'உண்டாதல்' என்பதற்கு உத்பிரேக்ஷித்தல் என்பதுதவிர வேறு பொருளேற்படுத்துவதற்கு வழியில்லை. இந்த விஷயங்களுக்கு வித்தியாரண்யர் செய்திருக்கிற பாஷ்யமே போதுமானதாகும். இம்மாதிரியாகவே வேதத்தில் பிறவினைக்குத் தன்வினையும், பன்மைக்கு ஒருமையும் வழங்கி வருவது அருமையல்லவென்று சுவலப அனுபவமுடையவர்களுக்கு விளங்குமாகிலும், யாஸ்கரிருக்தி அவதாரிகையில் இந்த வினைக்கே இருப்புபொருளும் 'உண்டாக்கல்' என்கிற பிறவினைப் பொருளும் செய்யப்பட்டிருக்கிறது பிரத்தியக்ஷமாகும.

———:0:———

1 A thousand heads had Purusha, a thousand eyes, a thousand feet.
He covered earth on every side, and spread ten fingers' breadth beyond.

2 This Purusha is all that yet hath been and all that is to be;
The lord of immortality which waxes greater still by food.

3 So mighty is his greatness; yea, greater than this is Purusha.

All creatures are one fourth of him, three-fourths eternal life in heaven.

4 With three-fourths Purusaa went up: one-fourth of him again was here
Thence he strode out to every side over what eats not and what eats.

5 From him Viraja was born; again Purusha from Viraja was born.
As soon as he born has spaced eastward and westward o'er the earth.

6 When Gods prepared the sacrifice with Purusha as their offering,
Its oil was spring, the holy gift was autumn; summer was the wood.

7 They balmed as victim on the grass Purusha born in earliest time.
With him the deities and all Sadhyas and Rishis sacrificed.

8 From that great general sacrifice the dripping fat was gathered up.
He formed the creatures of the air, and animals both wild and tame.

9 From that great general sacrifice Richas and Soma-hymns were born:
Therefrom the metres were produced, the Yajus had its birth from it.

10 From it were horses born, from it all creatures with two rows of teeth:
From it were generated kine, from it the goats and sheep were born.

11 When they divided Purusha how many portions did they make?
What do they call his mouth, his arms? What do they call his thighs and feet?

12 The Brahman was his mouth, of both his arms was the Rajanya made.
His thinghs became the Vaisya from his feet the Sudra was produced.

13 The moon was gendered from his mind, and from his eye the Sun had birth.
Indra and Agni from his mouth were born, and Vayu from his breath.

14 Forth from his navel came mid air; the sky was fashioned from his head;
Earth from his feet, and from his ear the regions. Thus they formed the worlds.

15 Seven fencing-logs had he, thrice seven layers of fuel were prepared.
When the Gods, offering sacrifice, bound, as their victim Purusha.

16 Gods, sacrificing, sacrified the victim: these were the earliest holy ordinances.
The mighty ones attained the height of heaven, there were the Sadhyas, Gods of old, are dwelling.

(22). சுவேதாசுவதர உபநிஷத்து.

4-வது அத்தியாயம் 13-வது வாக்கியம்

யோதேவாநா மத்திபோயஸ்மின் லோகா அத்திஸ்ரிதாஸ்ச
யஈசேஸ்ய த்விபதஸ்ச சதுஷ்பதஹ கஸ்மை தேவாய ஹவிஷா விதேம.

பொழிப்புரை.

யார் தேவதைகளுக்கு கதிபதியோ, யாரிடத்தில் உலகங்கள் நிலை பெற்றிருக்கின்றனவோ, யார் இரண்டுகால் ஜந்துக்களையும், நான்கு கால் ஜந்துக்களையும் நியமத்தில் வைத்துக்கொண்டிருக்கிறாரோ அவர் பிறபபற்ற இந்த பரமாத்துமா.

விசேஷ உரை.

யார் கண்ணுக்குப் புலப்படாத கோணுக்கள் முதல், லோகாந்தரத்திலுள்ள தேவதைகள் ஈறாக சகல உயிர்களுக்கும் ஒன்றான ஆச்சிரயஸ்தானமும் அதிபதியுமோ, யாருடைய நியமங்களுக் குள்ளாகி மனிதர்கள் பசுக்கள் முதலியவையாவும் எப்பொழுதும் காப்பாற்றப் படுகின்றனவோ அவர் பிறப்பற்ற இந்த மஹாத்துமா.

குரங்கு ஜனமத்திலிருந்து மநுஷ்ய ஜன்ம என்னும் சித்தாந்தம்.

மண்ணுலகில் மனுஷன் எப்போது ஜனித்தான், என்னமாக ஜனித்தான் மனுஷன் பூநியில் ஜனிக்கும்போதே மனுஷனாக ஜனித்தானா; அல்லது புல்லாகி புழுவாகி பின்னும் பலபிராணிகளாகி கடைசியில் இப்போதிருக்கும் படியான மனுஷனாக மாறினனா என்ற விவரத்தை அறிய அநேக பூதத்துவ சாஸ்திரிகளும், பிராணதத்துவ சாஸ்திரிகளும் பல வருஷங்களாக பலவித பரிக்ஷைகளைச்செய்துவருகிறார்கள்; செய்துவந்தமென்ன? மிருக மானுஷிக தத்துவத்தை திருப்திகரமாக கண்டுபிடித்தார்கள் இல்லை; ஆயினும், மஹாதத்துவ சிரோமணிகளென்று மண்ணுலக மெங்கும் மன்காதபுகழ்பெற்ற (Huxley) ஹக்ஸ்லி, (Spencer) ஸ்பென்ஸர், (Lamark) லாமார்க்கு, (Wallice) வாலிஸ், (Lyell) லயெல், (Vogt) ஓக்ட், (Lubbok) லபக்கு, (Buchneer) பக்னியர், (Rolli) ரோலி, (Huckel) ஹக்கில், (Burnard Davis) பர்னர்டு டேவிஸ், (Bradley) பிராட்லே, (Wood) உட்டு, (Charles Darwin) சார்லஸ் டார்வின் என்றாதி பூதத்துவ பிராணத்துவ சாஸ்திரிகளின் ஆராய்ச்சியினால்,

இந்த உலகம் அக்கினி ஜலபிண்டமாய் அநேக கற்ரண்டுகளாக அலைத்தாடிக்கொண்டிருந்த காலத்தில் ஒருவித அக்கினி ஜ்வல ரூபமான பிராணிகள் தோன்றி அநேக ஆயிரம் வருஷங்களாக வளர்ந்து மாண்டுபோக, அப்பிராணிகளின் சவ சரீரத்துகளால் பூமியின்மேல் ஒருவித பிரகிருதி உண்டாயிதாகவும், அந்த பிரகிருதியில் ஒருவித தாது தாவர ரூபமான கேடுகளுண்டாகி அநேக

ஆயிர வருஷங்களிலிருந்து நான்கியோசை; அலைகளின் சீவ சத்துக்களால் பூமியில் கொஞ்சபாகம் பிரிந்தியும், பெரும்பாகம் அன்ற ஜலசமுத்திரங்களாக, அதில் பிரிந்தபாகத்திலிருந்த பிராணசத்துக்கள் புரண்டி உருண்டி வீழ. அலைகள் பலவித பிரம்மாண்ட மீன்களானதாகவும்; இந்த மீன்கள் பல்லாயிரவருஷங்களாக பலவித ரூபங்களுடன் பிராண லக்ஷணத்திற்சேர்ந்த சில பொறிபுலன்களைப் பெற்று பிராணிக்க; அப்போது பிரபஞ்சத்தில் பிராணி என்று சொல்லத்தக்கவை மீன்களே என்றும்; ஆகவே, மீன் ஜன்மந்தான மனுஷனுக்கு முதல் ஜன்மமென்றும்; இந்த மீன்கள (Evolution) (மஹாமாற்றம் என்னும் தருமத்தின்படி) அநேக ஆயிரம் வருஷங்களுக்கு பிறகு ஆமைகளாக மாறினதாகவும், இந்த ஆமைகளும் அநேக ஆயிரம் வருஷங்களான பிறகு கடற்கரையோரங்களில் அலைகளால் ஒதுக்கப்பட்டுத் தரையில் தங்கி மிருகங்களாக மாறியதாகவும், இந்த மிருகங்களும் அநேக ஆயிரம் வருஷங்களானபிறகு குரங்குகளாக மாறியதாகவும், இத்தக்குரங்குகளே அநேக ஆயிரம் வருஷங்களானபிறகு மனுஷர்களாக மாறியதாகவும், இப்படி மனுஷன் குரங்கு ஜன்மத்திலிருந்து மனுஷஜன்மத்திலில் தோன்றி குறைந்தபக்ஷம் 2,50,000 (இரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம்) வருஷங்களாகிறதென்றும்; இந்த உண்மையை ஸ்தாபிக்க பூமியில் 2,24,000 (இரண்டு லக்ஷத்து இருபத்து காலாயிரம்) வருஷங்களுக்குமுன் மானுஷடதேக எலும்புகளும், அக்காலத்தில் அவர்கள் உபயோகப்படுத்திய கல், கொம்பு, தந்தம் முதலான முரட்டுத்தனமான கருவிகள் பல, அநேக குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டு (Geology) பூசத்துவ சாஸ்திரோக்தமாக (Vide the Pre Historic Anthropology by Mano Gabril de Martillet) நிரூபிக்கிறதன்றியில், இப்படி தோன்றிய மனுஷன் 2,00,000 இரண்டு லக்ஷம் வருஷகாலம் மிருகங்களோடு திரிந்தும்; பிறகு 30,000 முப்பதினாயிரம் வருஷகாலமாக வேட்டையாடி மீன்பிடித்து கின்று காலங்கழித்தும், பிறகு கிழங்கு காய்களிலேத்தின்றும், வேளாண்மை, ராகீகம், கல்வி, கடவுள் நம்பிக்கை முதலானதுகளற்று தேஹமும் நிருவாண பிராணிகளாக திரிந்துவந்ததாகவும்; இப்படி அநேக ஆயிரம் வருஷங்களான பிறகு மழை வெய்யிலுக்குத்தக்க மரக்கிளைகளில் சேவலமான குடிசைகளேக்கட்டிக்கொண்டும்; வயிற்றின் ஆகாரத்துக்காக பலவிடங்களில்வருந்தி திரிந்தபோது உரைப்பு தேய்ப்புகளினால் தம் கைகளும் கரைந்தும், மேலிருந்த மயிர்களும் உதிர்ந்துவிடவே, குளிருக்காக மரப்பட்டை நார் கொடிகளேப் போர்வைகளாகவும், ஆகாரத்துக்காக அடிக்கடி அநேக இடங்களில் ப்பாய் ஓடிவந்து கொஞ்ச முடியாமல் நீர்வளம் நிலவளமுள்ள ஓரிடத்தில் தங்கி காய், கனி, பயிர் - பச்சைகளே பயிர்செய்து குடியானவர்களாகிவிட்டதாகவும் சொல்லி இருக்கின்றனர்.

இதற்கர்தாரமாக, பிரபஞ்சத்தில் பிரபலமான சில தேசத்தார்கள் அநேக ஆயிரம் வருஷங்களாக அரசாண்டுசெய்து ஜோதிசாஸ்திரத்தை கணித்து வந்திருக்கிறதாகவும், அவர்களில் இக்தேசத்தாருடைய கணக்கின்படி பிரம்மனுடைய கல்பாதிதாப்தம் 1,972,948,997 கோடி வருஷங்களாகிறதென்றும், சிருஷ்டியாதிதாப்தம் 1,955,884,997 வருஷங்களாகிறதென்றும், முதல் சுவயம்பு மன்வந்தரம் 1,971,220,997 வருஷங்களாகிறதென்றும், வைவஸ்வத மன்வந்தரம் 3,892,997 வருஷங்களாகிறதன்றியில், திரேதாயுகம், த்விதாயுகம், துவாபரயுகங்களில் அநேக மஹாராஜாக்கள் பூமண்டலத்தை அநேக ஆயிரம் வருஷகாலங்களாக அரசுபுரிந்திருக்கிறதாகவும் இப்போது கலியுகம் பிறந்து 4,998 வருஷங்களாகிறதென்று பஞ்சாங்கத்தில் கணித்திருப்பதாகவும்,

மேலும், பாபிலோன் தேசத்தில் 4,20,000 கான்கு வருஷத்து இருபது லக்ஷம் வருஷங்களுக்குமுன் பஞ்சாங்கம் வகுக்கப்பட்டதென்றும், அவர்களது முதலாவசர் 4,67,881 இவ்வாகனமேறியதாகவும், அவனது ஏழுகாந்திகளில் பதது இராஜாக்கள் 4,32,000-ஆம் ஆண்டாகவும்; வேறு 86 இராஜாக்கள் 34,080 வருஷங்களாண்டதாகவும், இஞ்சிதசத்தப் பஞ்சாங்கம், 15,000 யதி னோபாயிரம் வருஷங்களுக்கு முன்பே கணிக்கப்பட்டதாகவும், எகிப்து தேச த்தார் சரித்திரம் 11,500 பதிஞ்ஞாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்குமுன் கணிக்கப்பட்டதாகவும், அதன் முதல் இராஜன் 12,000 பன்னீராயிரம் வரு ஷங்களுக்குமுன் இவ்வாசனமேறியதாகவும், அவ்விடத்திய உன்னதகோபுரம் 10,000 பத்தாயிரம் வருஷங்களுக்கு முன்பாகவே கட்டப்பட்டதாகவும் ஹிரோடடஸ் (Herodutus) பன்சன் (Baron Bunsen) முதலானவர்கள் எழுதியிருப்பதால், உலகிருஷ்டியாகி 6000 ஆறுயிரம் வருஷமாகிறதென்று சொல்வது சாஸ்திர சரித்திர சம்மதமாகாதென்றும் சொல்லியிருக்கின்றனர்.

அன்றியும் ஆப்பிரிக்காக்கண்டத்தின் சில பாகங்களில் இப்போதிருக்கும் (Ourangoutang) அவுங்குடாங்கு (Gurilla) கரில்லா, (Chimpanzee) சிம்ப ன்ஸி முதலான குரங்குகளில் அதிகம் ஐந்தடி ஆறடி உயரமுள்ளதாகவும், மனுஷனைப்போல பருமனும், மயிரற்றும் இருப்பதால், இந்த ஆப்பிரிக்காக்கண்ட த்திலிருந்த குரங்கே ஆயிரம் மனுஷர்களாக மாறி இருக்கவேண்டுமென்றும், அவ்வி டத்திய குரங்குகளைக்கொண்டு அறுத்து பரிசோதித்தவர்கள் அவற்றின் தோல், சதை, நிணம், நரம்பு, இரத்தம், எலும்பு முதலானதுகளே மனுஷனுடைய இந்த ரம்புகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கச்சே யாதொரு வித்தியாசமும் இல்லாமலிருப்ப தாகவும்; அவைகளின் பூஞ்சையை உற்றுக்கேட்டதில் அவைகள் மனுஷன் தன் சுக சந்தோஷங்களை அனுபவிக்கும் பாஷையைப்போலவே இருக்கிறதாகவும்,

மனுஷன் எப்படி அழகுள்ள ஸ்திரீகளையே தேடி தேடி கூடிக்குலாவி விரும் புவதைப்போலவே, அக்குரங்குகளும் தம்மனதுக்குகந்த பெண்குரங்குகளுக்காக பலவித சண்டை சச்சரவுகளைச்செய்தும், எதிரிகளை ஜெயித்தும், சில சமயங் களில் சில பெரிய குரங்குகளுடன் மத்தியஸ்தம்பேசியும், சில சமயங்களில் தந்திர இந்திர ஜாலங்களால் மதிமயக்கி வசமாக்கிக் கொள்வதாகவும்; சில, தின் பண்டங்களைத்தேடி பெண் குரங்குகளுக்கும், குட்டிகளுக்கும் கொடுத்து பாது காப்பதாகவும்; சிலகுரங்குகள் ஆணும் பெண்ணுமாகூடி தம் குட்டிகளுக்கு பால்கொடுத்து பாதுகாப்பதாகவும்; பால் கொடுக்கும் வாடிக்கை ஆதியில் ஸ்திரீ, புருஷர் இருவருக்கும் இருந்ததென்றும்; ஆனால் ஆண்தன்மையுள்ள மனுஷன் அடிக்கடி வெளியில்போய் சஞ்சாரம் செய்யவேண்டி வந்ததில், அதில் கவ னம் செலுத்தாமல் விட்டுவிட, அவனது மார்பில் பால் சுரந்து வடியாமல் அவன் ஸ்தனியம் சுருங்கிவிட்டதாகவும், அதேமாதிரியாகவே ஆதியில் ஆண்களுக் கும், பெண்களுக்கும் தாடி, மீசை முதலான மயிர்கள் ஒரேவிதமாக இருந்தும்; ஸ்திரீகள் அழகைக்கருதி சில ஆயிர வருஷங்களுக்குமுன் பிடுங்கி வரவே காலாவட்டத்தில் பெண்களுக்கு மீசை, தாடி முளையாமல் போய்விட்டதா கவும்; குரங்குகளின் கை கால்களில் மனுஷனுக்கிருப்பதைப்போலவே ரேகை களும், மடிப்புகளும், மற்ற அங்க சின்னங்களும் இருக்கிறதாகவும்; மேலும் மனுஷனுக்கு உருவியுள்ள காப்பி, தேயிர், மது, மாமிசம், உடுப்புகள் முதலான தினுஸில் குரங்குகளுக்கும் ஆசை இருப்பதாகவும், சில குரங்குகள் ஒன்றுகூடி பெரிய கற்களாலும், மரம் முதலானதுகளாலும் அரண் புரட்டி எரித்து, அதில்

[illegible] இரவு எல்லா குரங்குகளுக்கும் சமமாக பங்கிட்டுக்கொள்ளு கின்றனவாம். சில குரங்குகள் சில போஜனபீடங்களில், அச்சுவை, சாதம், கறி முதலானவுகளை எந்தெந்த இடங்களில் வைக்கவேண்டுமோ அந்தந்த இடங்களைத் தெரிந்து வைப்பதாகவும்; சில குரங்குகள் மனுஷர்களைப்போல உடைகளைத் தரித்துக்கொள்வதாகவும், பாதரக்ஷைகளை மாட்டிக்கொள்வதாகவும்

தம் எஜமானுடன் சரிசமானமாக வெளியில் உலாத்தி அதே வேலைகளையும் செய்து வருகின்றனவாம். சில குரங்குகள் தம் எஜமானர் பேசும் வார்த்தைகளையும் சைகைகளையும் செவ்வையாக தெரிந்துக்கொள்வதாகவும்; சிலகுரங்குகள், நாடகம் கூத்துகளைப்பார்க்க அதிக விருப்பத்தைக் காட்டுவதாகவும்; சில குரங்குகள் பல பெண் குரங்குகளுடன் கூடிக் குலாவாமல், ஏகபத்னி விருதத்தை அனுசரிப்பதாகவும்; சில குரங்குகள் தம்மினத்துக்குள் எழை, எளிது, தொண்டி, மொண்டிகளுக்கு வேண்டிய உதவி செய்வதாகவும்; சில குரங்குகள் சங்கீத இனியராகங்களை விருப்பமுடன்பாடி, கோயில்களுக்குப் போகும்போது மனுஷரைப் போலவே போய் கண்களைமூடி முழுந்தாளிட்டு மனோராஜ்யம் செய்வதாகவும்; நியூகினியா, போர்னியா ஆஸ்திரேலியா முதலானவிடங்களில் இருக்கும் சில குரங்குகள் அதிக கஷ்டமான வேலைகளைச் செய்வதனால் அவற்றின் வால்கள் தேய்ப்பு உரைப்புகளால் கரைந்துப்போகவே, அக்குரங்குகள் மனுஷனைப்போல நிமிர்ந்து நின்று நடப்பதாகவும்; ஆகவே மனுஷன் குரங்கு ஜன்மத்திலிருந்து மாறியதேயன்றி ஆதம், ஏவாளைப்போல ஆதியில் மனுஷன், மனுஷியாக ஜனிக்கவில்லையென்றும் பல பிரபல நியாயங்களைக் கொண்டு சொல்லுகின்றனர். இதற்காதாரமாக நமது இந்துதேசத்தாரும், மச்ச, கூர்ம, வராக நரசிங்காதி அவதாரங்களும் இந்தக் கோட்பாட்டையே அனுசரித்து எழுதியதாகத் தோன்றுகிறது.

குரங்கு ஜனனம் வேறு, மனுஷ ஜனனம் வேறு என்னும் சித்தாந்தம்

கிரிஸ்த முதலான மதானுசாரிகளில் பெரும்பாலார் இந்த உலகை ருஷ்டியைப்பற்றி பைபில் முதலான சில சரித்திரங்களில் சொல்லியபடி ஏமார் ஆறுயிரம் வருஷங்கள்தானாகிறதென்றும்; சரித்திரங்களின் ஆதாரத்தைக் கொண்டு ஸ்தாபிக்கும் சித்தாந்தமே சிறந்த சித்தாந்தமென்றும்; இந்தியா, சீனா, பாபிலோன், எகிப்து முதலான சில புராதன நாகரிகளின் பூர்வ சரித்திர கணக்குகள் லேவலம் வர்ணனையும் கட்டுக்கதைகளேயென்றும்; செப்டியூஜென்ட் (Septuagent) கணிதத்தின்படி உலகம் சிருஷ்டியாகி 7517 வருஷங்களாகிறதென்றும், டாக்டர் ஹேல்ஸ் (Dr. Ha es) கணிதத்தின்படி 7294 வருஷங்களாகிறதென்றும், டாக்டர் வால்கட் (Dr. Volgute) கணிதத்தின்படி 6067 வருஷங்களாகிறதென்றும், பிஷப்பயுஷர் (Bishop Usher) கணிதப்படி 5967 வருஷங்களாகிறதென்றும், பின்னும் பலர் பலவிதமாக கணித்த வருஷங்களால் சரித்திராதாரத்தையே நம்பி சித்தாந்தப்படுத்துவதே நிரேஷ்டமானதென்றும் சொல்வதன்றியில்—

மனுஷன் ஆதியில் பிறக்கும்போதே ஆதம் ஏவாளைப்போல் முழுக்க ஜனனமாக பிறந்தானேயன்றி குரங்கு ஜன்மத்திலிருந்து மனுஷனாக மாறினார்

னென்பது பொய் சித்தாந்தமென்றும்; இதற்கு நிருஷ்டாந்தமாக; மனுஷன் நிமிர்ந்துநின்று நடக்கும்படியான இடுப்பும் கை கால் முதலான, அங்கங்களை உடையனென்றும்; குரங்கு குனிந்து நடக்கும்படியான இடுப்பும், மரங்களில் தாவி ஏறும்படியான கை கால்களை உடைய ஓர் மிருகமென்றும்; மனுஷன் சமயோசிதமாக பேசவும், படிக்கவும், பாடவும் புத்தியைப்பெற்றிருப்பதாகவும், இந்த புத்திக்கு இருப்பிடமான மண்டை ஓடே குரங்கு ஜாதியைப்பார்க்கிலும் மனுஷனுக்கு பெரிதும், விசித்தியாசமுடையதுமாக இருக்கின்றனவென்றும் சொல்லுகிறார்கள். எப்படியெனில்,—

மானுஷீக மண்டை ஓடுகளை யறிவிக்கும் (Craniology) பாலலக்ஷண சாஸ்திரப்படி மனுஷனுடைய மண்டையை (1) நீண்ட கபாலபேதம் (Dolichocephals), (2) மத்தரக் கபாலபேதம் (Mesocephals), (3) குறுகிய கபாலபேதம் (Brachycephals) என்று சாஸ்திரிகள் வருத்திருப்பதாகவும்; இப்படி வருகையில் (1) முதல்தர மண்டையோடு 100-க்கு 70–74 அங்குலமும், (2) இரண்டாந்தரம் 100 க்கு 75–79 அங்குலமும், (3) மூன்றாந்தர மண்டையோடு 100-க்கு 80 முதல் 95 அங்குலமும் இருக்கவேண்டியதென்றும்; இந்த கணக்கின்படி பரிசோதிக்கச்சே ஐரோப்பியருக்கு 92-3 அங்குலமும், ஆசியாக்கண்டத்தாருக்கு 87–1 அங்குலமும், அமெரிக்காக்கண்டத்தாருக்கு 87–5 அங்குலமும், ஆஸ்திரேலியருக்கு 81–9 அங்குலமுமாக இருப்பதன்றியில், 1426-ம்ஹை பிராஞ்சுதேசத்தில் இடர்துபோன இடுகாட்டுக்குழியில் எடுத்த மண்டையோடுகளையும்; 1484-ம்ஹை வர்தன் நகரில் இடிந்துபோன இடுகாட்டுக்குழியில் அகப்பட்ட மண்டையோடுகளையும் பரிசோதிக்கச்சே, அவற்றின் மண்டையோடுகள் முன்சொன்ன கணக்குக்குச் சரிப்பட்டிருக்கிறதென்றும்; ஆனை உருவிலும், உயரத்திலும், வயதிலும பெருமைபெற்ற (சிலர) குரங்கின மண்டையோட்டைப் பரிசோதிக்கையில் 36–51 அங்குலமும், சிம்பன்சி குரங்கின் மண்டையோடு 25–45 அங்குலமும், ஆரங்குட்டாங்கு குரங்கின் மண்டையோடு 27–34 அங்குலமும்தான் இருப்பதனால், இவை கேவலமான சிறு குழந்தைகளின் மண்டையோட்டிலும சிறுத்திருக்கிறதென்றும்; அன்றியும் குரங்கிலிருந்து மனுஷ ஜனனமானதென்றால் இப்போது உலகில் இருக்கும் குரங்குகள் அதே வருஷங்களாக மனுஷ ரூபமாக மாறாமல் இன்னமும் குரங்கு ஸ்வரூபமாகவும், குரங்கு புத்தியை மாத்திரம் உடைத்தாயிருப்பதற்கு யாதொரு காரணமென்றும்; மேலும் பேசும்பாஷை, பகுத்தறிவு, பொதுநலம், பரோபகாரம், பச்சாதாபம், பரிசுத்தம், பெருந்தன்மை, பகவத்பக்தி முதலான குணாநுபவங்கள் குரங்குகளிடத்தில் இல்லாமையால், குரங்குகள் கேவலம் மிருகஜாதியென்றும்; ஆகவே மனுஷன மாத்திரம் மனது என்னும் சிறந்த சாதனத்தை உடையவனாக இருப்பதால், அவன் ஆதியில் ஜனிக்கும்போதே மனுஷனாகவே ஜனித்தது சருஷ்டி யனுபவத்துக்கு சம்மதமானதென்றும் சொல்லுகிறார்கள். மிச்சம்,—

மனுஷ ஜனன விசாரம்.

இப்படி மனுஷ ஜனனத்தைப்பற்றி பலர் பலவிதமாக பரிசோதித்து சித்தாந்தப்படுத்தினாலும்; மனுஷ ஜன்மம் மனுஷலோகத்திலுள்ள மற்றெல்லா ஜந்துக்களிலும் சிறந்த ஜன்மமென்பதற்கு

மினவே. மனுஷனுக்கு பக்ஷிகளைப்போல உயரப் பறக்கும்படியான இறக்கைகள் இல்லை; ஆயினும், ஆகாயத்தின் அதிக உயரத்தில் பறக்கும்படியான பக்ஷிகளை எல்லாம் தன் பாதத்துக்கடியில் வருவித்து பணிவிடை செய்விக்கும்படியான புத்தி இருக்கிறது. பெரிய உருவமுடைய யானை காண்டாமிருகாதிகளுக்கு இருக்கும்படியான பலம் மனுஷனுக்கு இல்லை; ஆயினும் அப்படிப்பட்ட பெரிய உருவமும், பலமுமுள்ள மிருகங்களை யெல்லாம் அவன் காலுக்கடியில் வந்து நின்று அவன் காலாலிடும் கட்டளையை தலைகுனிந்து செய்யும்படி செய்விக்கச்சக்தி இருக்கின்றது. பயங்கரமான புலி, சிங்கம், பாம்பு முதலான கொடிய ஜந்துக்களுக்கு இருக்கும்படியான நகம், பற்கள், விஷம் முதலானதுகள் இல்லை. ஆயினும், பயங்கர புலி, சிங்கம், பாம்பு முதலான ஜந்துக்களெல்லாம் மனுஷனுடைய மனோராச்சியத்தின்படி அவனிடம் வந்து ஆடி அடங்கி இருக்க செய்யும் சக்தி இருக்கின்றது. இம்மட்டோ! மனுஷன் தனது உபயோகத்திற்காக, பூமியும் ஆகாசமும் நடுங்க இடி முழக்கம்போன்ற பேரொலியோடு இரவும் பகலும் ஓயாமல் வாயுவுக்கும் விசேஷித்த வேகத்துடனோடி, ஆரவென்பதில்லாமல் அநேக காதங்களால் பிரிக்கப்பட்டிருப்பவர்களை அற்ப காலத்தில் கூடிக்குலாவும்படிச்செய்யும் புகைவண்டி எலக்டிரிக்வண்டிகளையும்; மலைபோலெழுந்து மதிமயங்கச்செய்யும் பேரலைகளுக்கும், பெருமழைக்கும், சண்டமாருதத்திற்கும் அஞ்சாமல் பயமின்றி வருகிற அலைகளைச் சக்கரம் போலக் கண்ட துண்டமாக்கிக் காம்பீரமாய்ப் போய்வரும் புகைக்கப்பல்களையும், கொடியில் ககனமார்க்கமாய்ப் பாய்ந்து பூகோள ககோளங்களின் அநேக பாகங்களை ஒரேகாலத்தில் பார்த்தநுபவிக்கச் செய்யும் பெலூன் என்னும் ஆகாயக் கப்பல் புகைக்கூண்டுகளையும்; வாயுவேகத்தையும் மனோவேகத்தையும் வெட்கச்செய்து பதினாயிரமயில் தூரத்தைப் பத்து நிமிஷத்தில் கடந்து கஷ்ட இஷ்ட விசேஷங்களையும் சுக சந்தோஷங்களையும் வெளிப்படுத்த மின்சார தந்தித்தபாலையும், அபார சமுத்திரங்களைக் கடக்கும்படி இருப்புப்பாலங்களையும் ஆச்சரியமான தண்ணீர்க் குழாய்களையும், ஒரே பிந்துஜலத்தில் அனந்தகோடி பிராணிகளைப் பார்க்கக்கூடிய சூக்ஷ்மவீக்ஷணி கருவியையும், அநேக யோசனை கோடி மயில்களில் சுழலாநிற்கும் அண்டகோளாதி தூமகேதுக்களையும், சுமார் ஆயிர வருஷங்களுக்குப் பிறகு நடக்கும் கிரகணங்களையும் ஆகாயத்தில் [illegible] உதவும் தூரவீக்ஷணி என்னும் கருவியையும், அநுகூலமான ஸைகளை அகண்ட [illegible] க்ஷணத்தில [illegible] போது [illegible],

பத்தினிக்களையும் பதிபக்தர்களையும் அரசியாதிகளையும், சிறு ஷ்டிதிற்குள் கால விதியாசத்தை யறியக் கூடிய அளிலேர்ப பணிதீ, சச்சர குழாய்களையும்; அக்கத்தி ல்டக்கத்தக்க அழகிய அப்பாக்கிகளையும், பிஷ்டல்களையும், வெடிமீன்களையும், உத்தம வழித்தியத்திற்கேற்ற கத்திமுதலான விசிதமாக் கருவிகளையும் பின்னும் அநேகமான அற்புதக்கருவிகளையும் அமைத்தும்படியான அறிவை பெற்றிருப்பதால்; இந்த பிரபஞ்ச படிப்பின் பெருமையை பற்ற படிட்டு, மனுஷனுடைய தத்துவத்தை அறியும் படிபோன்ன பொய்யோ அநேகா சொல்லியிருக்கிறார்கள்; ஆகையால் இந்த மானிடஜன்மத்தின் அமைபடைப்பற்றி அடுதது விசாரிபோம்.

He is the Great and Unborn Being, Who is the Sovereign of Gods, Who governeth man & beasts, and by Whom are all worlds supported.

ஆரியர் சத்திய வேதத்தில் சிருஷ்டி விஷயமாக இந்த மூதலத்தியாயத்தில் கண்ட உபநிஷத்துக்களின் கருத்துரை.

ஆதியில் அத்துவதியர் ஒருவர்தவிர வேறு ஒருவருமில்லை. கேரொன்று மில்லை. அவர சிருஷ்டிக்கும் விஷயமாக ஆலோசனை செய்துக்கொண்டே இந்த மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும் சிருஷ்டித்தார். இப்படி சிருஷ்டிக்கப்பட்ட இந்த மண்ணுலகம் முதலில் அக்கினி ஜலபிண்டமாக அந்தரத்தில் அசைந்தாடிக்கொண்டிருந்தது. பயங்கர அந்தகாரத்தோடு அந்தரத்தில் அடைந்தோடிக்கொண்டிருந்த இந்த உலகத்துக்கு வெளிச்சத்தையும், உஷ்ணத்தையும் ஆகர்ஷணத்தையும் கொடுத்து உதவிசெய்ய சூரியன், சந்திரனங்காரகாதி விண்ணுலகத்தையும் படைத்தார. இப்படி மண்ணுலகமும், விண்ணுலகமும் ஒன்றையொன்று இழுப்புக்கவர்ச்சி ஓட்டக்கவர்சிகளால் பந்தப்பட்டு ஆடி ஆகாத்மூண்டாகி; முதலில் இந்த உலகத்தில் அக்கினி ஜுவல ரூபமான தாது கற்ப மூல கிரமி கீடங்களை சிருஷ்டித்தும், அவற்றின் சவ சத்துக்களால் மண்ணுலகில் பிட்டங்தோன்றச்செய்வித்தும், அதனிடத்திலும் அநேககோடி தாது கற்பமூல கிருமி கீடங்களைப்படைத்தும், அவற்றின் சவ சத்தக்களால் பிரபஞ்ச பிரதிருஷ்டாகத்தையும், பெரும் சமுத்திரத்தையும் உண்டாக்கியும், இவ்விரு பாதுகளிலும் சுகமாக வசிக்க அநேககோடி தாது கற்பமூல ஜீவபிராணிகளை சிருஷ்டித்தார்.

அவற்றின் சேய்ப்பு உரைப்புகளாலும், சவ சத்தக்களாலும் மண்ணுலகம் தண்ணீர் தொட்டியாகியும், அதை மூடிக்கொண்டிருந்த பயங்கரமான பஞ்சபூதங்களில் ஆயுஷ்மூண்டாகிப்பூமிக்கு அண்டத்தின் அடிவயிற்றில் அளவற்ற அக்கினிக்கடல்களையும், அந்த அக்கினிக்கடல்களிலிருந்து அடிக்கடி அக்கினி

ங்கள் கொத்தரித்து எழுந்த வந்து சேமியில் கொருப்புமலைகளாகப் பிரகாசித்து பயங்கரமான பனியைப் பகிர்க்கவும்; மண்ணுலகத்தின்மேலிருக்கும் அன்ற ஜலசமுத்திரங்களால் பூமியின்மேல் உஷ்ணத்தைத் தணிப்பாக்க நியமித்தம், பூமியின்மேல் புல், பூண்டு, பசு, பகுதி, மனுஷர் முதலானவர்களுக்கு இன்றி யமையாத பிருதவி, அப்ப, தேய, வாயு, ஆகாயமாகிய பஞ்சபூதங்களையும் உண்ண பருவதங்களையும், பள்ளத்தாக்குகளையும், நதிகளையும் படைத்தும், இப்பிரபஞ்சத்தை பிராணிகோடிகள் சுகமாக வாழ்படியான ஸ்திதிக்கு மாத்திய பிறகே அகோகோடி கணக்கான சந்தமூல ராசிகளையும், பிரமி டேடகங்களையும் பற்பலவிதமான பகுதி கோடிகளையும், மனோகரமான மிருகங்களையும் இந்த பிராணிகள் யாவற்றிற்கும் இடையில் அதி அற்புதமான பிறந்த பிராணியாக மனுஷனையும் படைத்தார். ஆ! மனுஷனுடைய உபயோகத்திற்கு மஹா மகிமைபெற்ற மீடாக இருக்கும் இந்த மண்ணுலகத்தின் அமைப்பு என்ன?

இந்த பிரபஞ்சமாகிய பூமி, சகல சராசர பதார்த்தங்களடங்கிய பாண்டாகாரமாக இருக்கிறதன்றியில், திருஷ்டிசெய்யுங் குடிவானவனைப்போல் ஞதானியங்களையும், இதர போஜன பதார்த்தங்களையும் நமக்காக முஸ்திப்பித்துத்தருகின்றது. அப்பு, ஜலத்தைக்கொண்டுவந்து தருபவனைப்போல நமது ஸ்நான பானங்களுக் குதவிசெய்கின்றது. அக்கினி, சமையற்காரனைப்போல ஆகாரஞ்செய்ய உதவுகின்றது. வாயு, வெளியிற் சாமரம்போல வீசுகின்றது. ஆகாயம், விளக்கேற்றுபவனைப்போற் சோம சூரிய நக்ஷத்திராதி ஜோதிகோடிகளைத் தரித்துக்கொண்டிருக்கிறது. மேகங்கள், ஜலத்தைச் சுமந்துகொண்டு வந்திறங்கும் ஸ்திரிகளுக்குச் சமானமாகவிருக்கின்றன. நதி பிரவாகம், குளம் முதலியவைகள் தண்ணீர் வைத்திருக்குங் கொப்பரைகளைப் போலிருக்கின்றன. விருக்ஷாதிகள், (சுவைய) தானியங்கள் முதலான பல சரக்குகளை வைத்துக்கொண்டிருக்கும் கடைக்காரர்களைப்போல இலைகள், புஷ்பங்கள், பிஞ்சுகள், காய்கனிகள், கிழங்குகள் தானியங்கள் முதலாகிய பலவித சம்பாரங்களைத் தருகின்றன. பருத்திச்செடி, பட்டுப் பூச்சி முதலானதுகள் நமக்கு வஸ்திர வியாபாரிகளாகவும்; நாய், ஆடு, புலி கரடி முதலியவைகள் சால்வைகள், பச்சடங்கள், கம்பளங்கள் முதலானவிவைகளைத் தரும் வர்த்தகர்களாகவும் இருக்கின்றன. பருவதங்கள், சமுத்திரங்கள், ரத்தின வியாபாரிகளைப்போல நவரத்தின முதலான விவித திரவியங்களைத் தருகின்றன. பூஞ்செடிகள், புஷ்பமாலிகைகளைப்போ விருக்கின்றன. சாலு விதமூலிகைகள், அவுஷதங்களைத்தரும் வைத்தியர்களாக விருக்கின்றன. பூந்தோட்டங்கள், நடன சாலைகளுக்குச் சமானமாக விருக்கின்றன. மயில், அன்னம், புறு, வான்கோழி, கொக்கு முதலிய பக்ஷிகள் நடனஸ்திரீகளைப்போல நடனஞ் செய்கின்றன. கோகிலம், கிளி, காகவாய் முதலான பக்ஷிகள் பாடகர்களைப்போல தேன்களைப் பாடுகின்றன. காகம், கழு, வல்லூறு, கோழி முதலான பக்ஷிகளும், பாம்பு, பல்லி, அரணை முதலானவைகளும், வீடுகளைச் சுத்திசெய்யும் ஜாமோலிகளைப் போல பல கிருமிடேங்களையும். செத்த ஜந்துக்களாதி உச்சிட்டங்களையும் பக்ஷிக்கின்றன. தானியங்கள் தேனைத் தருகின்றன. எருமை, ஆடு, மாடு முதலியவைகள் இடையர்களைப்போல நமக்குப் பாலைத்தருகின்றன. எருமை, குதிரை, ஒட்டை முதலியவைகள் நமக்கு வாகனங்களாகிச் சமப்பதன்றியில் பின்னும் பலவித பாரங்களைச் சுமப்பதற்குங்கூட பிரயோஜனப் படுகின்றன.

புல் முதலானவைகளோ அம்மிருகங்களுக்காகாரமாக வீருக்கின்றன. எறும்பு முதலானவைகள், வீடுகளைச் சுத்திசெய்வோரைப்போல் கெடுக்கிடக்கும் பல வஸ்துக்களைப் புசித்துச் சுத்தமாக்குகின்றன. நாய்கள், காவலாளிகளைப்போல வீடு முதலானவைகளைக் காக்கின்றன. கழுதைகள், நமக்காகப் பலபாரங்களைச் சுமக்கின்றன. சேவல், காகம், குருவி முதலியன நமக்குத்தினகரனுகிய சூரிய னுதிக்கிறனென்று தெரியப்படுத்தத் தட்டியெழுப்புங் காங்களைப்போலாகின்றன. சிங்கம், புலி, கரடி முதலான துஷ்ட மிருகங்களும், பாம்பு, தேள் முதலிய விஷ சந்துக்களுந் தெய்வ பயத்தைப் போதிக்கும் ஆசாரியருக்குச்சமானமாக வீருக்கின்றன. ஆகா! மனுஷன் சுகமாக வாழ்வதற்கு சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்தின் விந்தையான அமைப்பு என்ன?

முதல் அதிகியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்

ஜீவாத்மா இலக்ஷணம்.

(23). ஈசோபநிஷத்து

8-வது அத்தியாயம் 2-வது வாக்கியம் 1. 3.

தஸ்மாச்சதேவ பஹுதாஸம் பரஸ்மிதாஹ
ஸாத்யாமநுஷ்யஹ பசுவோவயாம்ஸி
ப்ராணாபாநௌ வீவாயவௌதத பஸ்சிர
த்தாஸ்த்யம் பரஹ்மசாயம் விதிஸ்ச.

பொழிப்புரை.

அவரிடமிருந்து அநேக விதமான தேவதைகளும், சாத்தியர்களும், மனிதர்களும், மிருகங்களும், பக்ஷிகளும், பிராணனும், அபானனும், தானியங்களும், யவையென்கிற தானியமும், தபசும், சிரத்தையும், சத்தியமும், பிரம்மசரியமும, விதியும் உண்டாயின.

விசேஷ உரை.

மானிடதேக விநோத காக்ஷி.

மானுஷிக உருவம் மற்ற எல்லா பிராணிகளின் உருவத்திலும் விசேஷமானது. அதன் ஒவ்வொரு உருப்பும் இன்றியமையாதவைகளாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. அதன் விவரத்தை இங்கு சற்ற சங்கிரகமாக எழுதவது அவசியம்.

மானிட சரீரத்தக்கு, எலும்புகள் ஓர் வித அஸ்திவாரமாய் இருந்து, மூளை, இருதயம், தூரைரீரல் முதலிய மிருதுவான உருப்புகளுக்கு, அபாயம் வரவொட்டாமல் காத்து, மாமிஸங்கள் இட்டிக்கொள்ள இடத்தைத் தருகின்றன. எலும்புகளை யதாஸ்தானத்தில் சேர்த்து, தந்திகளால் கட்டிபதற்கு, எலும்பு கோர்வை (Skeleton) என்று பேர்.

மானிடதேகத்தின் முன்பக்கத்திலிருக்கும் எலும்பு கோர்வைப்படம்.

சருப்பிண்டத்தில் எலும்புகள் மிருதுவாய் இருக்கின்றன; அதற்குருத்தெலும்பு என்ற பேர் (Cartilage); பிறகு வயது வித்தியாசத்தினால் இருக்கிற கஷ்ணைப்பு படிப்படியாய் அதிகரித்து உறுதிப்படும். தேகத்தில் பல ரூபமான எலும்புகளுண்டு; சில, இவ்விதம் இணைகளின் எலும்புகள் தட்டையாயும்—புஜம், முன்கை, தொடை, கால் இவைகளின் எலும்புகள் நீண்டும் முனைகளில் கணுக்கை, கணுக்கால் இவைகளின் எலும்புகள் விரிவாயும் இருக்கின்றன. அவைகளாவன:—

செரில் 8,—காதுக்குள் 6,—முகத்தில் 14,—பற்கள் 32,—முள்ளந்தண்

டில் 26,—நாக்கில் 1,—மார்பில் 1,— விலாவில் 24,—கைகளில் 64,—கால்களில் 62,—ஆக கால் பெருவிரல்களின் குளசுகளில் இருக்கிற சிறிய எலும்புகள் 8. ஆக மனிததேகத்தில், 246 எலும்புகள் இருக்கின்றன.

மூள்ளந்தண்டில் இருக்கிற ஒவ்வொரு எலும்புக்கு **முள்ளெலும்பு** என்று பெயர். அதில் ஒரு பெரிய துவாரமுண்டு; அந்தத் துவாரங்கள் ஒன்றுப்சேர்ந்து, முள்ளந்தண்டு மத்தியில் பெரிய துவாரம் ஒன்று காணப்படும்; அதில் மூளையின் கொடி அடங்கியிருக்கிறது. முள்ளந்தண்டுக்கு அடியில் முக்கோணவடிவாய் ஒரு எலும்பு உண்டு. அதற்கு, **திரிகண்டான எலும்பு** (Sacrum) என்று பெயர். அதனை குண்டி எலும்பு என்றும் சொல்வதுண்டு. குழந்தையில் அந்த எலும்பு 5-துண்டுகளாய் இருக்கும். அந்த எலும்பின் முன்பக்கத்து மேல் புறம், முன்னுக்குப் பிதுங்கியிருக்கும்; அந்தப் பிதுக்கம், ஸ்திரீகளுக்கு அதிகப்பட்டு இருந்தால், பிரசவகாலத்தில், சிசுவின் தலை கீழ்க்கு இறங்க இடமில்லாமல், தலை சிக்கிக்கொண்டு, தாயாருக்கு அதிக வேதனையை உண்டாக்கும். சருப்பையிலிருக்கிற குழந்தையில், தலையெலும்புகள் வெவ்வேறாய் இருக்கும்; எனென்றால், பிரசவ காலத்தில் சிசுவு, தாயின் கருப்பையை விட்டு இடைக்குழியில் இறங்கி வெளிப்படுகிறபோது, அந்தந்த ஸ்தானங்களுக்குத் தக்கபடி, சிரசு பொருந்தவேண்டியது. எலும்புகள் சேர்ந்து அசையாமல் இருந்தால், தக்கபடி சிரசு ஒடுங்கி அமையாமல், சிக்கிக்கொண்டு சிசுவுக்கும் தாய்க்கும் அபாயம் நேரிடும். மேலும் தலை ஒரேலும்பாய் இருந்தால், பலம் குறைச்சலென்று, பல எலும்புகளாய் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன. சிரசில் எலும்புகள் ஒன்றோடொன்று சேருகிற இடங்களில், தையலைப்போல் காணப்படுகிற வைகளுக்கு, **ரேகைகள்** என்று பேர் (Sutures). அவைகளை **பிரமனெழுத்து** என்று சொலுவது வழக்கம். அடிபட்டு தலை எலும்பில் வெடிவு கண்டால், அது அதிகமாய்ப் பரவிவாட்டாமல், கபல ரேகைகள் தடுக்கின்றன. குழந்தை உச்சியில் இரண்டு ரந்திரங்கள் இருக்கின்றன; அவைகளுக்குபிரமரந்திரம், உச்சித் துவாரம் எனறு பேர். அந்தத்துவாரங்களால், தலையோடுகள் ஒன்றின்மேலொன்று ஏறி பிரஸவ காலத்தில், சிரசு சிருத்து அடங்கிவிடுகின்றது.

மோவாய்க்கட்டை எலும்பானது, காதெலும்போடு சேர்ந்து, வாயை மூடவும் திறக்கவும் செய்கின்றது. இந்த மூட்டு விலகிவிட்டால், திறந்த வாயை மூடக்கூடாமலிருக்கும்.

கண் குழியில்; விழி, அதற்குடைய சதைகள், ரத்த ரேம்புகள், ஸ்பரிச ரேம்புகள், கண்ணீரைச் சுரப்பிக்கிற கோளங்கள், இவை முதலியவைகள் அமைந்திருக்கின்றன.

காசித்தவாரத்துக்கு மத்தியில் இருப்பதற்கு, **நண்டு** என்று பேர். காசித் துவாரங்களுக்கும், கண் குழிகளுக்கும் சம்பந்தமான துவாரங்களுண்டு, அவைகளின் வழியாய்க் கண்ணீர் மூக்குக்கு இறங்குகின்றது.

மானிட தேகத்தின் பின் பக்கத்து எலும்புக் காகூடி.

பழ எலும்பு தலை, கோரம் உருவாய், தோள்பட்டை எலும்போடும், தொடை எலும்புகளோடும் சேர்ந்திருக்கின்றது. முள்கையில் 2-எலும்புகளுண்டு, உட்புறம் இருப்பதற்கு, இரத்தினி எலும்பென்றும், (Ulna)—வெளிப்புறமாய் இருப்பதற்கு, தூரை எலும்பென்றும், (Radius). இதிலும் பெயர். மணிக்கட்டில் 8-எலும்புகளிருக்கின்றன. அவைகள் வரிசைக்கு 4-4ட இரண்டு வரிசைகளாக இருக்கின்றன. உள்ளங்கையில், 5-எலும்புகளும், ஒவ்வொரு விரலுக்கு மும்மூன்றாக, 4-விரல்களில், 12-ம், பெருவிரலில் 2-ம் ஆக 14-எலும்புகளுண்டு.

சரீரத்தின் கீழ்புறத்தில், 4-எலும்புகள் சேர்ந்து, குழியாய் இருக்கிறதாகு.

இடைக்குழி (Pelvis) என்று பேர். இந்த இடைக்குழியின் பக்கமாய் இருப்பவைகளுக்கு, **இடுப்பெலும்புகளென்றும்**; பின்புறமாய் இருப்பவைகளுக்கு **திரிகன்தான எலும்பு, குயில் மூக்கெலும்பு,** என்றும் பேர்.

பற்கள். முதலில் முளைகிற பற்களுக்கு, **பாற்பற்கள்** என்றும், அவைகள் விழுந்து இரண்டாந்தரம் முளைத்து விருத்தாப்பியம் வரையில் இருப்பவைகளுக்கு, **ஸ்திரப்பற்கள்** என்றும் பேர். குழந்தைகளுக்கு இருக்கிற பால்பற்கள் 20, அவைகளாவன:—முன்பற்கள் 8,—கோரைப்பற்கள் 4,—கடைவாய்ப்பற்கள் 8. ஆக 20-தாம். ஸ்திரப்பற்கள் 32.—அவைகளாவன:—முன்பற்கள் 8—கோரைப்பற்கள் 4.—கடைவாய்ச்சிறிபற்கள் 8,—கடைவாய்ப் பெரியபற்கள் 12 ஆக 32-ஆம். ஈறுக்கு வெளியிலிருப்பதற்கு பற்சிகரமென்றும், உள்ளே மறைந்திருப்பதற்கு வேர் என்றும் சொல்லப்படும். சாப்பிடுகிற பதார்த்தங்களை பற்கள் நசுக்கி மெதுவு படுத்துகின்றன; நாம்பேசும்போது, காற்றை உள்ளடக்கி சொற்களை தெளிவு படுத்துகின்றன. முன்பற்கள் இழந்தவர்கள், சில எழுத்துகளை தெளிவாய் உச்சரிப்பது கடினம். பற்கள் ஒழுங்காயும், லக்ஷணமாயும் இருந்தால் முகத்துக்கு அலங்காரம்.

நெஞ்சரையில், முன்பக்கம் மத்தியத்திலிருக்கிற எலும்புக்கு, மார்க்கண்ட எலும்பு (Sternum) என்றும், பக்கத்துக்கு 12-ஆக இருக்கிற எலும்புகளுக்கு பழு எலும்புகள் (Ribs) என்றும், சொல்லுவர். 7-விலா எலும்புகள், மார்க்கண்ட எலும்புடன் சேர்ந்திருக்கும்; 3-ஒன்றின்மேல் ஒன்று படிந்திருக்கும்; மற்ற இரண்டும் அந்தரமாய் இருக்கின்றன. நெஞ்சரைமேல் குறுக்காய், ஒரு மூளை மார்க்கண்ட எலும்போடும், மற்றொரு மூளை தோள்பட்டை எலும்போடும் கூடியிருப்பதற்கு. **காறை எலும்பு** (Clavicle) என்றும், நெஞ்சரைமேல் பின்புறமாய் இருக்கிற தட்டை எலும்புக்கு, **தோள்பட்டை எலும்பு** (Scapula) என்றும் பெயர்.

இடுப்பெலும்பு குழந்தையில் மூன்று துண்டுகளாய் இருக்கும். ஆணுக்கும், பெண்ணுக்கும் இடைக்குழியில் வித்தியாசமுண்டு. பெண்ணில் எலும்புகள் லேசாயும், இடுப்பெலும்புகள் அகன்றும், பள்ளமானது விசாலமாயும், அதிக ஆழமில்லாமலும் அடிப்புறத்தில் எலும்புகள் தூரமாயும், முன்புறத்திலிருக்கிற வளைவு பெரிதாயும் இருக்கும். தேகத் தெலும்புகளுக்குள், தொடை எலும்பு நீண்டது. அதன் சிகரம் உருண்டு பந்தைப்போல், இடுப்பெலும்போடு சேர்ந்து, சரீரத்தை தாங்கிக்கொண்டு இருக்கின்றது. கீழ்முளை இரண்டு பிரிவாகி, காலெலும்போடு கூடி இருக்கும். முழங்காலில் தனியாய் உருண்டு ஒரு எலும்பு இருக்கும்; அதற்கு முழங்கால் சிப்பி என்று பெயர். காலில் 2-எலும்புகளுண்டு; உட்புறமாய் இருக்கிற பெரிய எலும்புக்கு **கு திரை முக எலும்பு** (Tibia) என்றும்; **வெளிப்புறமாய் இருப்பதற்கு சரவெலும்பு** Fibula) என்றும்; இடுகுறிப்பேர். ஒவ்வொரு பாதத்தில் 26-எலும்புகளிருக்கின்றன. குதிக்காலில் 7-ம் உள்ளங்காலில் 5-ம் கால்விரல்களில் 14-ம் ஆம், இப்படி மானிட தேகத்தில் சுமார் 14 பவுன் எலும்புகளிருக்கின்றன.

2.—மூட்டுகள், (ஜாய்ன்ட்ஸ்-Joints.)

எலும்புகளின் முளைகளை, ஒன்றோடொன்று சேர்த்துக் கட்டுவதற்கும்

கிறது; பெலனுள்ள வெள்ளையான சவ்வுக்கு, சந்திபந்தனம் லிகமெண்ட் (Ligament) என்று பெயர். எலும்பு மூட்டுகளில் சிலது அசையாமலும், சிலது கொஞ்சமாய் அசைந்து கொண்டும் இருக்கும். முழங்கை, மணிக்கட்டு, விரல்கள், முழங்கால், கணுக்கால் ஆகிய இவைகள், பெட்டிக்கீல்களைப் போல் முன்னுக்கும் பின்னுக்குமாத்திரம் அசைவு கொடுக்கும்.

இனி மானிட தேகத்தின் மாமிசாதிகளைப்பற்றி விசாரிப்போம்.

3.—மாமிசம் பிளஷ். (Flesh)

மாமிசங்கள், எலும்புகளை மூடச்செய்து, தேகசலனங்களை உண்டாக்குகின்றன. சிவந்த நிறமான மாமிசங்களை, அடிக்கடிக்காய் அமைந்திருக்கும்; அவைகளில் சிலது, அகலமாயும், சிலது நீண்டும் இருக்கும். எலும்போடி ஒட்டிக்கொண்டு இருக்கிற மாமிச முனைகள், சிலது சரம்புகளைப் போல் நீண்டும், சிலது அகலமாயும் இருக்கும். நீண்டிருப்பவைகளுக்கு, மாமிச தந்திகள் (Tendon) என்று பெயர். மாமிசங்கள் சரீரத்துக்கு கோவிதரூபங்களைக் கொடுத்து, வித்தியாசத்தை உண்டாக்கின்றன. சரீரத்தில் இரண்டுஜாதி சதைகளுண்டு: ஒன்று மனதுக்கு அடங்கியமானதாயும் மற்றொன்று, மனதுக்கு அடங்கியப்படாததாயு மிருக்கும்.

4.—கண்கள். பார்வை. (ஐஸ். ஸயிட். The Eyes. Sight.)

கண்களை கொழுப்பும் சதைகளும் சுத்திக்கொண்டிருக்கின்றன. சதைகள் கண்களை தேவையானபடி திருப்புகின்றன. விழியில் 3-புரைகள் உண்டு; வெளிப்புரை உறுதியாயும், வெள்ளையாயு மிருக்கும்: அதற்கு வெள்விழி என்று பேர். இரண்டாம் புரை கருத்திருக்கும். பார்வை சரம்பு மலர்ந்து மூன்றாம்புரை எற்படுகின்றது; அதற்கு ரூப உற்பத்தி ஜவ்வு (ரெடினு Retina) என்று பேர். விழியில் முன்புறமாய் விளங்கி, வெள்ளையாய் இருக்கிற பாகத்துக்கு, சுத்தல மண்டலம் என்று பேர். இற்குப்பின், கறுத்த ஜவ்வு இருப்பதால், இதனும் கறப்பாகவே காணப்படும். அந்த கறுத்த ஜவ்வை கிஷ்ணமண்டலம் என்று சொல்லுதல் வழக்கம். கருவிழியில் காணப்படுகிற தூவாரத்துக்கு, கண்ணாரை என்று பேர் (கிஷ்ணமண்டல துவாரம்) அந்தத் தாரையான து வெளிச்சத்தில் சிறிதாகும்; இருளில், பெரிதாகும். கண்ணாரைக்குப் பின்னால் யானைக் குண்டுமணியைப்போல ரூபத்தைப்போன்று, அதிக வெள்ளைக் கட்டியாய் ஒரு மணியிருக்கும், அதற்கு கிஷ்ணமணி (Lens) என்று பேர். அது மீன்களில் உருண்டு இருக்கும், வயது தளர்ந்தவர்களுக்கு, இது மங்கலாகிவிட்டால், பார்வை தெரியாது. முட்டையின் வெள்ளை கருவைப்போல் சுழற்சுழப்பான ஓர்வித நீர் கண்ணுக்குள் நிறைந்திருக்கும். அதனால், ஜவ்வுகளும் மலர்ந்து விரிந்திருக்கின்றன; நாம் பார்க்கிற பொருளினின்மூல், கண்ணாரை வழியாகச் சென்று, ரூப உற்பத்தி ஜவ்வின்மேல் படிகின்றது; அந்த உணர்ச்சி, பார்வை சரம்பு வழியாய் மூளைக்குச்சென்று, மூளை மனதுக்குத்தெரிவிக்க, மனது இன்ன வஸ்துவென்று தெரிந்து கொள்ளுகின்றது.

5.—மூக்கு=வாசனை. (நோஸ். ஸ்மெல். The Nose. Smell.)

பதார்த்தங்களுடைய வாசனையைத் தெரிந்துகொள்ளுகிற புலன், நாசியிலிருக்கின்றது. நாசித்துவாரங்களை அணைந்து இருக்கிற ஜவ்விலிருந்து, சளி

சுரக்கின்றது. சளி குறைந்த நாசித்துவாரங்கள் வறண்டுபோனால், வாசனை செவ்வையாய் அகப்படாது, நாசியில் வேதனையுங்காணும். சுவாசம் உட் கொள்ளும்போது, தூசி, கிருமி முதலியவைகள் உள்ளே பிரவேசிக்க வொட் டாமல், நாசிரோமங்கள் தடுக்கின்றன. பதார்த்தங்களுடைய வாசனை அணுக் கள், ஆக்ரிராண நரம்புகளின்மேல் உறுத்த அந்த உணர்ச்சியை நரம்புகள் மூளைக்குக்கொண்டுபோக, மூளை புத்திக்குத்தெரிவிக்கின்றது.

6.—காதுகள் கேள்வி (இயர்ஸ். ஹியரிங். Ears. Hearing.)

விரிந்திருக்கிற காதின் மடலானது, சப்தமாகிய காற்றைக்கூட்டி காது துவாரம் வழியாய் செவிக்குள் பிரவேசிக்கச் செய்கின்றது. காதுக்குள் அண் டவடிவாய், சன்ன சவ்வு, காதைத்தடுத்திருக்கும். அந்த ஜவ்வுக்கு உட்புறத் தில் 3-எலும்புகள் கோர்வையாய்ச்சேர்ந்து, சவ்வுக்கும் எலும்புச்சுரும் தொடர் வாய் இருக்கின்றன. காதிலிருக்கிற ரோமங்களும், குறும்பியும், தூசி கிருமி முதலி வைகளை காதுக்குள் பிரவேசிக்க வொட்டாமல் தடுக்கும். காதுக்குள் எலும்பில் அறைகளுண்டு, அவ்வறைகளில் ஜலம் நிறைந்திருக்கும்; அந்த ஜலத் தில் கேள்வி நரம்புகளுடைய இழைகள், விரிந்து பிரிந்து கொண்டிருக்கின்றன. அசைவு கொண்ட காற்றுகிய சப்தமானது, மேளத்தைப்போலற்ற காதினு டைய சவ்வில் மோதும்; அந்த அதிர்ச்சி சிறிய எலும்பு கோவையின் வழியா ச்சென்று உட்காதில் ஜலத்தின்மேல் படர்ந்து மிதந்து கொண்டிருக்கிற, கேள் வி நரம்புகளுக்குப்பட; அவைகள் மூளைக்குக் கொண்டுபோக, மூளை மனதுக்கு தெரிவிக்கின்றது.

7.—நாக்கு. உருசி. (டங், The Tongue)

நாக்கு சதைகளால் எற்பட்டிருக்கின்றது. நாக்குமேல் இருக்கிற முள்ளு களுக்கு நாக்கடு என்று பேர். அடிநாக்குமேல் இருக்கிறவைகள் பெரிதாய் இருக்கும். சுரம் முதலிய வியாதிகளில், அவைகள் நீண்டிருக்கும். அசை நாக் கில் முள்ளுண்டாகி, தோலுரித்துவிட்டதென்று சொல்லுவது வழக்கம், அந்த முள்ளுகளில் சுவை நரம்புகளின் நுனிகள் இருக்கின்றன. நாம வாயிலிடுகிற பதார்த்தங்களுடைய உருசி இந்த பதார்த்தங்களுக்கு பட்டு, அவைகள் மூளைக்கு கொண்டுபோக, மூளை மனதுக்குத் தெரிவிக்கின்றது.

8.—சருமம். ஸ்பரிசம். (ஸ்கின். The Skin, Touch.)

சரீரத்தை மூடிக்கொண்டிருக்கிற சருமத்துக்கு, 2-புரைகளுண்டு; அவை களுக்கு மத்தியில், ஓர்வித பசையிருக்கும்; கறுத்திருந்தால், தேகம் கறுத்த நிறமாயும், வெளுத்திருந்தால், தேகம் வெளுத்தும் இருக்கும். தோலின் மேல் புரைக்கு பீத்தோல் என்று பேர். இது ஓர்வித கவசம்போல், அடித்தோலை மூடிக்கொண்டு, பத்திரப்படுத்துகின்றது. இந்தத்தோல் நீங்கியவிடத்தில், பாஷாணம் முதலிய விஷபார்த்தங்களை போட்டால், சரும நரம்புகள் அவை களை கிரகித்து, ரத்தத்துக்குக் கொண்டுபோக, தேகமுழுக்க வெடிப்பு தோன்றும். ரோமமும், நகமும், பீத்தோலிலிருந்து உண்டாகின்றன. தோலுக்கடியிலிரு க்கிற கோளங்களிலிருந்து வியாவை பிறந்து சரும துவாரங்களின் வழியாய் வெளிப்படுகின்றது. ஊசிமுனைத்தைக்க அவ்வளவு இடமில்லாமல், ரத்த நரம்

புகள் தேகமெங்கும் பரவி இருப்பதால், ஜனைதைத்த ரம்புகளில் இருந்த ரத்தம் வடியும். சருமத்தின் பிரயோஜனமாவது 1-வது தேகத்திலிருக்கிற அப் பிரயோஜனப் பொருள்களை வியர்வையால் வெளிப்படுத்திவிடுகின்றது. 2-வது உடம்பின்மேல் படுகிற பொருள்களை, கிரகித்துக்கொள்ளுகின்றது.

9—நெஞ்சை. (தோராக்ஸ். Thorax.)

நெஞ்சைரையானது, அடிவிரிந்தும், நுணி குவித்தும் இருக்கிறது; முன் புறமாய், மார்பெலும்பும், பக்கத்தில் பழுவெலும்புகளும், அடியில் ஈரல்தாங்கி என்னும் சதையும் இருக்கின்றன. நெஞ்சைக்குள் இருக்கிற உறுப்புகளாவன.—இருதயம், நுரையீரல்கள், அன்னவாகி, பெருநரம்புகள் ஆகிய இவைகளாம்.

10.—இருதயம். (ஹார்ட். The Heart.)

தாமரை மொக்குபோல் இருக்கிற இருதயமானது, இரண்டு நுரையீரல்களுக்கு நடுவில் சாய்ந்து, அடியானது வலது புஜத்தை நோக்கியும், நுனியானது கீழ்க்கு இறங்கியும், இடதுபக்கம், 5-6-வது பழுவெலும்புகளுக்கு மத்தியமாய் ஈரல்தாங்கி என்னும் சதைமேல் அமைந்தும் இருக்கிறது. இருதயத்தை மூடிக்கொண்டு பையைப்போல் இருக்கிற சவ்வுக்கு, இருதயகோசமென்று பேர். இருதயத்தில் 4-அரைகளுண்டு; மேல் அரைகளுக்கு, சிரவங்கள் (Auricles) என்றும்,—கீழ் அரைகளுக்கு சடரங்கள் (Ventricles) என்றும் பேர். இந்த அரைகளில் இருக்கிற நிரையைப்போலொற்ற சவ்வுகளுக்கு, கபாடங்கள் (Valves) என்று பேர். இவைகள் ரத்தம் பின்னிட்டு ஓடாமல் தடுக்கின்றன. இருதயத்தின் இடதுபக்கத்தில் சிவந்த ரத்தமும், வலதுபக்கத்தில் கறுத்த ரத்தமும், இருக்கிறது. இருதயத்தில் இடதுபக்கத்திலிருந்து ஜனிக்கிற நாடிக்கு பெருநாடி (Aorta) என்று பேர். அதிலிருந்து அநேக நாடிகள் சரீரத்து தேசமெங்கும் வியாபித்து இருக்கின்றன. நாடிகளில் ஓடும் ரத்தம், இந்திரகோபம்போல் சிவந்திருக்கும். நாடிகள் போகப்போகச் சன்னமாகி, நாளங்களில் முடியும் (Veins) நாளங்களில் கறுத்த ரத்தம் ஓடும். சன்னமாய் இருக்கிற நாளங்கள் ஒன்றோடு ஒன்றுசேர்ந்து, பெருத்து வரவர மெத்தப்பெரிதாகி முதலில் ஒன்று மேலாகவும், ஒன்று கீழாகவும் இருதயத்தின் வலது பக்கத்து சென்று முடிகின்றன. இருதயத்துக்கு விரிந்து, சுருங்குகிற தெழில் உண்டு. விரியும்போது, ரத்தம் உள்ளே பிரவேசிக்கும், சுருங்கும்போது ரத்தம் வெளிப்பட்டு நாடிகளுக்குப் போகும். அதைப்போலவே நாடிகளுக்கு விரிந்து குவியும் தன்மை இருக்கிறது. நாடி நடை இருதயத்தைக்கு ஒற்றிருக்கும்; இருதய நடை, தேகஸ்திதிக்கு ஒற்றிருக்கும். தேகம் சவுக்கியமாய் இருக்கும்போது ஒரு மினிட்டுக்கு சராசரி 70- முதல் 80-தரம் நாடி நடக்கும். குழந்தைகளுக்கு 120-முதல் 140-வரையில் ஓடும்.

11—நுரையீரல்கள். (லங்கஸ், The Lungs.)

இவைகள், மார்பில் இரண்டு பக்கமாய், இருதயத்தைத் தழுவிக்கொண்டு இருக்கின்றன. ஈரல் தாங்கியின்மேல் படிந்திருக்கும். வெள்ளையும் சிவப்புங் கலந்த நிறமாய் மேலே புள்ளி புள்ளியாய்த் தோன்றும். இவைகள் கீர்ப்பஞ்சியைப்போல் இருக்கும்; இதில் ஓர்வித சவ்வு இருக்கின்றது. நெஞ்சிலிருக்கிற

குக்கிலுள்ள சுவாசகோசத்தையும், இருதயத்தில் புகுந்து, இரண்டு வென்ட்ரிக்கிள்களுக்கும் தனித்தனியாகப் பிரிந்து, பக்கத்துக்கொன்றாய் தனித்தனியாகப் போய், அதே சிரைகளாய்ப் பிரிந்து, மூடியில் பெரிய சிரையாய் முடிந்த விடும். தாளபீரல் சுவாசத்தை வடிகட்டிவிடுகிறது.

12—ரத்தஓட்டம். (Circulation of the Blood.)

இருதயத்தின் இடது புறத்திலிருக்கிற சிவந்த ரத்தமானது, ஏழு தமனிகளின் வழியாகச் சென்று, தேகமெங்கும் வியாபித்து, உறுப்புகளைப் போஷித்து, பிறகு கறுத்து விடும்; அந்தக் கெட்ட ரத்தமானது, நாளங்களின் வழியாகச் சென்று, இருதயத்தின் வலது பக்கத்தைப் போகும்; அங்கிருந்து தாளபீரலுக்குச் செல்லும்; தாளபீரலில், உசவாஸ நிகழ்ச்சத்தால், ரத்தத்திலிருக்கிற தோஷம் நீங்கி, சிவந்து விடும்; அந்த சிவந்த ரத்தம், இருதயத்தின் இடதுபக்கத்துக்கு ஓடும்; அங்கிருந்து மறுபடியும் நாடிநாளங்களின் வழியாய்ச் சென்று தேகமெங்கும் பரவும். பிண்டம் சருப்பையில் இருக்கும்போதே, இவ்விதமாய் ஓட ஏற்பட்ட ரத்தம் எப்போது நிற்கின்றதோ, அப்போதே பிராணன் போய் விடும். ரத்தத்தில் சிவந்த அணுக்கள் இருக்கின்றன; மானிடதேகத்தில் சுமார் 25-அல்லது 30-பவுன் ரத்தமாயிருக்கும் 116-பவுன் ஜலமும் இருக்கின்றது.

13—சுவாசம். (செல்பிரேஷன். Respiration.)

சுவாசம் உட்கொள்ளும்போது, காற்று பரிசுத்தமாய் இருக்கும். வெளியில் வருவது கார்போனிக் ஆஸிட் என்கிற வாயு சேர்ந்து கெட்டு இருக்கும். சுவாசத்தால் தூரை ஈரலில் இருக்கிற கெட்ட கறுத்த ரத்தம், சிவந்த நல்ல ரத்தமாகி விடுகின்றது. நாசி, வாய் இவைகளின்வழியாய், காற்று தூரைஈரலுக்குள் போகவும், வெளிக்கு வரவும் ஆகச் செய்துகொண்டிருக்கிற தொழிலுக்கு சுவாசம் என்று பேர்.

14—வயிறு. (பெல்லி. Belly.)

வயிற்றுக்கு முன்புறம் சதைகளும், மேலே ஈரல்தாங்கியும் இருக்கின்றன. வயிற்றுக்கு கீழிருக்கிற பள்ளத்துக்கு, இடைக்குழி என்று பேர். தொப்புளுக்கு மேல் வயிற்றில் பள்ளமாய் இருக்கிற ஸ்தானத்துக்கு, சாற்குழி என்றும், அதற்கு வலதுபக்கமாய் இருப்பதற்கு, பித்தக்கண்டை ஸ்தானம் என்றும், இடதுபக்கமாய் இருப்பதற்கு, பிலீகஸ்தானம் என்றும் பேர். வயிற்றிலிருக்கிற உறுப்புகளாவன:—மேல்வயிற்றில் நீரிப்பை, கல்லீரல், மண்ணீரல், குடல் இவைகளும்,—நடுவயிற்றில் நாபிஸ்தானத்தில் சிறு குடலும், கணையமும், பெருங்குடலும், மூத்திரஞ்சுரக்காய்களும், அடிவயிற்றில் சிறுகுடலும் இருக்கின்றன. மேல்வயிற்றை உறுப்புகளை ஓவித்த சல்லி முடிக்கொண்டு, வயிறு பையைப்போல் இருக்கும்.

15—ஜீரணம். (டைஜெஸ்ஷன். Digestion.)

ஆகாரம் வாய்க்குட் சென்றபிறகு, பற்களால் மெல்லப்பட்டு, [illegible] மென்றபோது, வாயிலிருக்கிற அதிகமாய்ச்சுரக்கிற அதனோடு சேர்ந்த மிருதுவாகி, பிறகு அதை விழுங்கப்படும். அந்த [illegible] அன்னவாகினி

இரைப்பையில், நீரிப்பையில் போய், விழுகின்றது. இவ்விதமாய் ஒருவேளை சாப்பிடுகிற அன்னபானங்களெல்லாம், நீரிப்பையில் போய்ச்சேர்ந்த பிறகு நீரிப்பையானது அதைப் பிசைந்து, கன்றாய் மதியும்படிச் செய்கின்றது. சாப்பிட்ட பதார்த்தங்கள் மதிந்துகொண்டிருக்கும்போதே, ஜாடராக்கினி (Gastric juice) என்னும் ரசமானது, நீரிப்பையில் ஜனித்து, ஷே பதார்த்தங்களுடன் மிஸரமித்து, ஓர்வித மொத்தையாகும். அந்த மொத்தைக்கு அன்னபாகு (Chyme) என்று பேர். அந்த அன்னப்பாகு, பிறகு சிறு குடலில் இறங்கும்; அத்தருணத்தில் கல்லீரலில் ஜனிக்கிற பித்தநீர் (Bile) வந்துசேரும். சேர்ந்த பிறகு அன்னப்பாகானது ரசம் வேறு, நிப் பி வேறுப்பிரித்தவிடும். போஜனம் ஜீரணமாக 3-4-மணி நேரஞ் செல்லும்.

16—Brain &c. மூளை. ஸ்பரிஸரம்புகள். அவைகளின் தொழில்.

மனிதரின் மண்டை ஓட்டுக்குள் நிறைந்து இருக்கிற பிசைந்து வைத்த மாவுபோலிருக்கும் மூளையின் நிறம், வெளிப்புறம் கருகிய ஒருவித சாம்பல் ரூபாவையும், உள்ளே வெள்ளையாயும் அதன்மேல் இரத்த கோளங்களென்னும் சிறிய செந்துளிகள் படர்ந்து இருக்கும். மேல் பாகத்தை பெரிய மூளை என்றும், அடிப்புறத்தை, சின்னமூளை என்றும் சொல்லப்படும். மூளையை மூன்று விதமான சவ்வுகள் மூடிக்கொண்டிருக்கின்றன. புருஷர்களுக்கு மூளை கனமாயும், ஸ்திரீகளுக்கு கனம் குறைந்தும் இருக்கும். வித்துவான்களின் மூளை அதிக பலுவாய் இருக்கும். பெரிய மூளை இரண்டாகப் பிளந்திருக்கும். அதின் அடியில் இருக்கிற மூளைக்கு, சின்னமூளை என்று பேர். அதுவும் இரண்டாய் பிளந்திருக்கின்றது. மூளையைத்தொடர்ந்து, கீழுக்கு ஓடுகிற கொடிகளு, முள்ளந்தண்டுகொடி என்றுபேர். அதன் மூளை அநேக நரம்புகளாய்ப் பிரிந்திருகின்றது. மூளையிலிருந்து ஜனிகிற நரம்புகள், 9-சதை. அவைகளில், கண் மூக்கு செவி, நாக்கு இவைகளுக்குப் போகிற 4-சதை தவிர, மற்றவைகள் சரும சதைகளுக்கும் போய்ப்பரவுகின்றன. முள்ளந்தண்டுக் கொடியிலிருந்து, 31-சதைநரம்புகள் ஜனித்து, தேகமெங்கும் வியாபித்து, சதைகளுக்கும், சரும சதுக்கும் போய்ப்பரவுகின்றன. நரம்புகளுக்கு ஸ்பரிசமும், சலனமுங்கூடிய குணங்கள் உண்டு. ஆகையால் ஸ்பரிச நரம்புகள், சலன நரம்புகள் என இரண்டு வகைப்படும்.

தேகத்திலிருக்கிற சதைகளுடைய சலனத்தைக் கிரமப்படுத்துகிற சக்தி சின்னமூளையில் இருக்கின்றது. சரீரத்தில் எந்த இடத்திலாவது உண்டாகிற உணர்ச்சியை ஸ்பரிசநரம்புகளால், மூளை தெரிந்துகொள்ளுகின்றது: அவைகளுக்கு விசாரணைசெய்து உணர்ச்சியைக் கொடுக்கிற தன்மை அற்றுப்போவதே, "திமிர்" என்றுசொல்லப்படும். நம்மைச்சூழ்ந்திருகிற பொருள்களின் காரியத்தை நம்புலன்களால் தெரிந்துகொண்டு, மூளைக்குத் தெரிவிக்க, அது மனதுக்குத் தெரிவிக்கும். மனிதனுடைய தோற்றத்தை, மூளை தெரிந்துகொண்டு, நரம்புகள் மூலமாய் சதைகளுக்குண்டாட, சலனம் உண்டாக்கும். சதைகள் மனதுக்கேற்றபடி இயங்கி இருக்கின்றன. மூளையானது, ஒரு அரசனும், நரம்புகளானவை தூதர்களாயும், மற்ற உறுப்புகள் உத்தரணக்காரர்களாயும் உவமானித்துத் தொகுக்கிறோமுண்டு.

GENERATION.—ஜனனம்.

—:0:—

மண்ணுலகத்தில் மனுஷன் பிறக்கும் ஜனன உறுப்புகளின் விசேதம் சாதாரண ஜனங்களுக்கும் செவ்வையாக தெரிந்த விஷயமாஇருப்பதால், அவை களைப்பற்றி இங்கு விவரிப்பது அவசியம்; ஆயினும், ஜனன ஸ்தானத்தின் மேல் முதலானதுகளை ஒருவாறு சங்கிரகமாகச் சொல்வது அவசியம். இவ்வுல கிலுள்ள பிரதி ஸ்திரியின் இடைக்குழியில் மூத்திரப்பையும், மலக்குடலும் இருக்குமிடத்தில் கருப்பையும் இருக்கின்றது. இந்தக் கருப்பையின் சுற்று த்தை சவ்வு சதைகள் சுற்றிக்கொண்டு, சுமார் ஐந்து ஆறு அங்குல நீளமுள்ள நீண்ட குழல் இருக்கிறது. அதுவே (Vagina) செபாதையாம். கருப்பையானது மூன்றங்குல நீளமும், இரண்டங்குல அகலத்தோடு தட்டையாயிருக்கிறது. அதன் மேற்புறத்தில் ஒரு துவாரமுண்டு, அந்தப்பையைப்பிளந்து பார்த்தால், உள்ளே மூக்கோண வடிவமான ஒரு பள்ளமிருக்கிறது. அதுவே கருக்குழி. அதிலி ருந்து ரூதகம் சுரக்கின்றது. கருப்பையானது பூரண கர்ப்பத்தில் அதிக பெரிதாகி, பிள்ளை பிறந்த பிறகு பந்துபோல் சுருங்கி சிறிதாகிவிடும். மேலும் கருப்பையின் இரண்டு பகங்களிலும் இலுப்பைக்கொட்டைகளைப்போல சினைப்பைகளும், அச்சினைப்பைகளுக்குள் மூட்டைகளும் உண்டு. அவைகள் பருத்து மாதந்தோறும் கருப்பையில் வந்துவிழும். அப்போது ரத்தம் சுரந்து வெளியாகும். இந்த ரத்தமே சுரோணிதம்; இந்த மூட்டையே காதம் (Ovum) இந்த காதம், மாதம் மாதம் சுரோணிதம் உண்டாகிறபோத ஸ்ரீணித்துப்போகா மல் கருக்குழியில் வந்திரங்கில், பருத்த பிண்டமாகி படிப்படியாக ரூபங்களைப் பெறும், இப்படி ரூபங்களைப்பெற்ற பிண்டம் கருக்குழியில் தலைகீழாகவிருக்கும்.

முதலில் சுவாசத்தையும், பிறகு தாயின் ரத்தபோஷணையையும் பெற்று வள ர்ந்து 280 நாள் அல்லது பத்து மாதங்களுக்கு பிறகு பிரபஞ்சத்தில் பிள்ளையாக பிறக்கிறது. பிறகு பால்குடிக்கக் குடிக்க சரீரம் படிப்படியாக வளரும், கண், காது முதலான உருப்புகள் பிரபஞ்சப்பொருள்களை அடிக்கடிப் பார்த்தும் கேட்டும், மூசீர்ந்தும், தொட்டும், தம்தம் சக்தியைப்பெருகின்றன. எழெட்டு மாதம் பால் குடித்த பிறகு, பாலும், கஞ்சியும், சாதமும், உணவாகி, ஆ! ஊ! என்ற சப்தங் களைச்செய்தும், புன்சிரிப்பால் சந்தோஷத்தைத் தெரிவித்தும், பிறகு அம்மா! அப்பா! என்று படிப்படியாய் பேசவும்; கால், கைகளை முதலில் உதறி பலம் பெற்ற பிறகு திரும்பவும், எழுந்திருக்கவும், நிற்கவும், நடக்கவும், ஓடவும் ஆரம் பிக்கின்றது. பிறகு நாளாவட்டத்தில் திடனைப்பெற்ற உலகவாழ்க்கையில் பிரவேசிக்கிறது. அப்படி பிரவேசிக்கச்சே ஆணுறுல் மீசையும் தாடி முதலா னதுகளையும், பெண்ணுறுல் மார்பு பெருத்த தோன்களும் இடையும் விசால மாகியவ்வனதசக்கு வந்து விவகாரமாடியும், உண் பொருள் என் பொருளென்று வாதாட்டங்கள் செயதுகொண்டே ஐம்பது அறபது வயதுவரையில் ஓடி பாடி அநேக காரியங்களைச்செய்து, பிறகு தேகம் க்ஷீணத்திற்குவந்து தாதுக்கள் தளர்ந்து பிறகு மெழு முமாகி, மயிர் நரைத்து, பற்கள் பலனற்று ஒன்றொன்றாக விழு ம்நுறைத்து, காடி தளர்ந்து இந்திரியங்கள் கெட, பார்வை பாழ்த்தும், பேச்சு கெட்டும், கரச்சுறுகின்ற மேல், எடை மெதுவாகி, தடியுன்றி நடந்து தொனியும் வார்த்தையும் தாழ்ந்து, வாய் குளறி, மதல வார்த்தைகளில் [illegible] நின்வரு மருவாகுமுன் தேகம் க்ஷீணித்து [illegible]

[illegible] மனிதர் மரணிப்பதில் சராசரியாக 33 அதாவது:—ஒன்றில் [illegible] பேர் 7-வயதிலும், பிறி பேர் 17-வயதிலும் சாகிறார்கள், மேலும் 1000-ல் ஒருவர் 100-வயதும் 100-க்கு 6-பேர் 65-வயதும், 500-க்கு ஒருவர் 80-வயது வரையில் வாழ்வதாக கணிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இப்பிரபஞ்சத்தில் சுமார் 10,00,00,00,000 பூமிக்கோடி மனுஷர்கள் இருக்கிறார்கள். இவர்களில் வருஷம் ஒன்றுக்கு 3,33,33,33,333 மனுஷர்களும், பிரதினமொன்றுக்கு 9,13,240 மனுஷர்களும், ஒரு மணி நேரத்துக்கு 37800 மனுஷர்களும், ஒருநிமிஷத்துக்கு 600 மனுஷர்களுமாக மரணமடைவதாக கணக்கிட்டிருக்கிறார்கள்.

மனுஷதேக சத்துக்களின் சேதனை.

இப்படி விநோதமாக அமைக்கப்பட்டிருக்கிற மனுஷதேகத்தில் 14-பவுன் எலும்பும், 30-பவுன் இரத்தமும் தசையும், 116-பவுன் ஜலமும் கூடியிருக்கின்றன. மனுஷனுக்கிருக்கும் 30-பவுன் ரத்தத்தில் 15-பங்கு ஜலமும், 5-பங்கு தேகபோஷக சத்தும் இருக்கின்றன. இந்த மனுஷ எலும்புகளை சோதிக்கும்போது அதில் சுண்ணாம்பு பாகமும், பிரகிருதி பாகமும், கால்லண்டைன் என்ற சத்துபாகமும் கலந்திருக்கிறது. இந்த கால்லண்டைன் பாகத்தில் அப்புக்காரி சத்தைப்போன்ற கார்பனும், கொஞ்சபாகம் சாதாரண ஜலமும் வாயுவும் கலந்திருக்கிறது. இதனால் மனுஷதேகத்திலிருக்கும் 14-பவுன் எலும்பில் 10-பவுன் சுண்ணாம்பும், 2-பவுன் அப்புக்காரி பாகமும், 2-பவுன் வாயுவு பாகமும் கலந்திருப்பது ஸ்பஷ்டமாகும். இதே மாதிரியாகவே, மனுஷதேக மாமிசத்தையும் இரத்தத்தையும் சோதிப்போமானால் இவை 30-பவுனும், இதில் 15-பவுன் அப்புக்காரி சத்தும், 15-பவுன் வாயுசத்துக்களும் இருத்தல் ஸ்பஷ்டமாகும். ஆகவே மனுஷதேகத்தில் ரசாயன சாஸ்திரப்படி சோதிப்போமானால் 116-பவுன் ஜலத்தில் 14-பவுன் அப்புக்காரி சத்தும், 10-பவுன் சுண்ணாம்பும் கலந்தும், பிராணவாயு அமிலவாயு ஜலவாயுவு பாகங்கள் 14-பவுனும் கலந்திருப்பது பிரத்தியக்ஷமாகும். இப்படிக்கேவலம் மண், சுண்ணாம்பு, ஜலம், வாயு முதலான பிரகிருதி பாகங்களேக்கலந்துண்டாக்கப்பட்ட இந்த பிண்டம் சமயோசிதமாக உணரவும், நினைக்கவும், நிதானிக்கவும், தர்க்கிக்கவும், பேசவும் கூடும்படி செய்யும் சக்தி எதுவோ அது இன்னதென்று இதுவரையில் கண்டுபிடித்தவர்கள் இல்லை. காவிண்டிஷ் (Covindish) என்பவர் ஜல தத்துவத்தையும், ரூதர்போர்டு (Rutherford) அமிலவாயுவின் தத்துவத்தையும், லோவைஸர் (Lovoiser) பிராணவாயுவின் தத்துவத்தையும் கண்டு பிடித்தார்கள். ஆனால் மானிட தேகத்திலிருக்கும் பிராணன் அல்லது மனதின் தத்துவத்தைக் கண்டுபிடித்தவர்கள் இது வரையிலும் இல்லை. மேலும்,

மண்டை மூளையின் சோதனை.

மனுஷ்யனுடைய மூளையை அது பாகமாகக்கொண்டு ரசாயனசாஸ்திரப்படி சோதிப்போமானால், அதில் என்பதாபாகம் இல்லாது இருந்தாலும் ஜலசத்தும் பாகம் கொழுப்பைப்போன்ற சத்தும் [illegible] மண்ணும் முப்பாகமிருக்கும். கெல்லெஸ்டிரைன் என்ற [illegible]

ஒன்மாரும் என்னும் மீன் அனுசரத்தால், ஒன்றை பிரகஸ் பிஸ்பாஸ் என்னும் நிச்சுச்சி செய்வதற்கேற்ற சத்தும், மற்ற ஐந்தரை பாகம் பலவித புளிப்பு ஏப்பு சத்துக்களின் பாகமும் என்று தெரியவரும். இந்த சோதனை இறந்த மனுஷனுடைய மூளையை அறுத்து சோதித்த விஷயம். உயிரோடிருக்கும் மனுஷனுடைய மூளையில் இன்னும் என்னென்ன சத்துக்களிருக்குமோ தெரியவில்லை. மேலும் மூளையின் எந்தெந்த சத்துக்கள் நினைக்கவும், யோசிக்கவும், ஹிஞராக்கியம் செய்யும்படி செய்கிறதோ அதையும் இதுவரையிலும் சண்டிபிடித்தவர்கள் இல்லையென்னையாலும், பூ தத்துவாதிகளில் சிலர், ஒரு பிரகிருதி சத்து எப்போதும் பஞ்சபூதங்களில் இருக்கிறதென்றும், அது

வெற்றிலை பாக்குடன் சுண்ணாம்பும் சேர்வதனால் எப்படி சிவப்பு வர்ணமாக்குகின்றதோ அதுபோலவே, பஞ்ச பூதங்களை தேகரூபமெடுக்கும்படி செய்தும்அந்த தேகத்தின் முக்கியஸ்தானமாகிய மூளையில் (அந்தசத்தே) மனம் புத்தி சித்தம் ஜீவன் என்றறிதி பெயர்களுடன் தோன்றி தேகேந்திரியங்களை தம்தம் தொழில்களைச் செய்யும்படி தூண்டியும் ; அந்ததேகம் மூப்பு வியாதிகளால் தளர்ந்த இறந்த பழையபடி பஞ்சபூதங்களில் கலந்துபோகும்போது, அந்த பிரகிருதி சத்தும் அந்த பூதங்களுடன் கலந்து போகிறதென்றும், ஆகவே மானிட தேகத்தில் பிராணன் அல்லது ஆத்மா என்னும் சூக்ஷுமத் தனிப்பொருள் இல்லை என்றும் மனுஷனுடைய மரணமே மோக்ஷமென்றும் சொல்லுகிறார்கள்.

ஆனால் ஆஸ்திகரும் ஆத்தும தத்துவவாதிகளுடைய கருத்தோ வேறு. அதாவது மண்ணுலகத்தில் ஜனித்த மானிடதேகம் மண்ணுலகத்திலேயே மடிந்து மறைந்து விடுவது உண்மையானாலும், இந்த மண்ணுலகில் ஜனித்த மற்றெல்லாப்பிறப்புகளிலும் சிறந்த பிறப்பைப்பெற்ற மனுஷனுக்குள் மனம், மதி, புத்தி என்றறிதி பல பெயர்களுடைய ஆத்மா என்ற சத்து ஒன்றிருக்கின்றதென்றும்; அது மண்ணுலக சம்பந்தமான மானிட தேகம் இறந்தவுடன் அதை விட்டுப்பிரிந்து வேறு ரூபத்தைப்பெற்று அதைப் படைத்த தலைவனிடம் போய்ச் சேர்ந்து சுகம் பெற்றுய்கிறதென்றும் சித்தாந்தம் செய்திருக்கிறபடியால், அதைப்பற்றி இந்த அதிகாரத்தில் ஆராய்வோம்

---

(24). சுவேதாசுவதரம் 4—7—ல்

ஜமானமெவ்ருக்ஷே புருஷோ நிமக்னோ அநீஸ
யாஸோ சதிமுஹ்யமாநஹ; ஜுஷ்டம் யதாபஸ்யத்யந்ய
மீஸமஸ்ய மஹிமாந மிதிவீதஸோகஹ.

பொழிப்புரை.

ஜீவாத்துமா சரீரத்தில் விருந்து கொண்டு நிலத்தண்ணியில் மூழ்கியதாகிய துயரப்படுகின்றது ; ஆனால் எப்பொழுது பரமேஸ்வரனையும் அவரது மகிமையையும் பார்க்கின்றதோ அப்பொழுது துயரமற்றதாகின்றது.

விசேஷ குறை.

எது வரையில் சாம் பரமேசுவரனே மறந்து கேவலம் விஷய சுகத்தை யுடையும் மிமித்தம் சம்ஸாரத்தில் மூழ்கியிருக்கின்றனோ அது வரையில் துக்கடிக்கடி தயரமுண்டாகும்: ஆனால் அன்புடன் எப்பொழுது யாவராலும் தொழப்படும் பரமேசுவரையும் அவரது மகிமையையுங் கண்டு, மேலும் அவரால் நியமிக்கப்பட்ட தருமத்தைச்சிரத்தையுடன் முடிக்க விருக்கின்றனோ அப்பொழுது ஒருதயாமும் உண்டாவதில்லை, பேராநந்தம் உண்டாகின்றது.

Living in one common tree, the soul is immersed in desire, through tribulation grieveth senseless, but when it seeth HIM and His Glory who is the served of all, it becometh sorrowless.

ஆத்துமா சரீரத்தில் இந்த இடத்தில் இன்ன விதமாக இருக்கிறதென்பதற்கு

(25). உத்தரநாராயணம்.

ஹிருதயம் தத்விஜானீய்யா த்விஸ்வஸ்யாய தாம்மஹத்.
ஸுததம்ம் சிராபிஸ்துலம்பத்யாகோசஸன்னிபம்.

தஸ்யாந்தே சுஷிரக்கம் சூக்ஷும், தஸ்மிந்
ஸாவம பரதிஷ்டிதம். தஸ்யமத்யே வஹ்னிஸிகா
ணீயோதவா வ்யவஸ்திதஹ.

நீலதோ யதமதயஸ்தா விதயுல்லேகே வபாஸ்வரா,
நீவாரூ கவததவி பீதாபாஸ்யாத்தனூபமா.
தஸ்யாஸ்ஸிகாயாமத்யே பரமாத்மா வ்யவஸ்திதஹ.

பொழிப்புரை.

எது சகலத்திற்கும் மஹத்தான்ஸ்தானமோ அது ஹிருதய மென்றறி. அது நாம்புகளால சூழபபட்ட ஒரு பையைப் போலும் அதில் ஒரு சிறிய துவாயுண்டு. அதில சகலமும் வைக்கபபட்டிருக்கிறது. அதின் மத்தியில் மேல்நோக்கிய வெரு சூக்ஷுமமான ஒரு அகினிசிகை ஸ்வீக்கப்பட்டிருக்கிறது. அந்தச்சிகை யானது கருமேகத்தின் நடுவிலுள்ள மின்னல் கொடியைபபோல் பிரகாசிக்கின்றது. செந்தெல துனியைப்போல் சூக்ஷுமமாயும் சிவந்த நிறமுடையதாயும், உள்ளது. அத்தசிகையின் மத்தியில் ஆத்மா இருக்கிறார்.

விசேஷவுரை.

ஆத்மா, என்கிற பதத்திற்கு அநேகர் அர்த்தவித்தாச அருத்தஞ் செய்திருக்கிறார்கள். அமரம் பிரதமகாண்டம், காலவர்க்கம் 137-வது சுலோகத்தில் க்ஷேத்திரக்யாநி சப்தங்கள் மூன்றென்றும்; சாங்கியத்தில், ஜீவனுடைய பெயர் களென்றும்; க்ஷேத்திரமென்றால்=சரீரம்; அதை அறிந்தவன் என்றும்; சம் சாரத்திலேயே ஜ்வலிப்பவனென்றும்; கவகர்ம பலத்தைப் பக்ஷிக்கப்பட்டவன் என்றும்; புரமென்றால் சரீரம்.—அதிலிருப்பவனுசையால் புருஷன் என்றும்; சரீரத்திலிருக்கப்பட்டவ னென்றும்;—அதே அமரம், நிருதியகாண்டம், காலவர்த்த வர்க்கை நாந்தவர்க்கம் 226-வத சுலோகத்தில், ஆத்மன் என்ற சப்தம், யத்னத்திற்கும், தைரியத்திற்கும், புத்திக்கும் சுபாவத்திற்கும், பரமாத்மாவுக்கும் தேகத்திற்கும், "ச" காரத்தினால் ஜீவனுக்கும் சொல்லலாமென்றும்; இடை விடாமல் சஞ்சரிப்பது என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பரதகண் டத்தின் பூர்வபாஷா பிரபாகரராகப் பிரகாசித்த, ஸ்ரீமத் ஜீவாநந்த வித்தியா சாகரர்; தாராநாத தர்க்காலங்கார வாசஸ்பதியவர்களுடைய பெரு முயற்சி யால் வெளியாகிய "ஸமஸ்கிரதாபிதானம்" என்னும் அகராதியில், "ஆத்மா" என்னும் பதத்திற்கு அத+மநிண்=ஆத்மன். என்றும்,—சுவரூபம், யத்நம், தேகம், மனது, வியாபாரம், விருத்தி, சூரியன், அக்கினி, வாய்வு, ஜீவன், பிரம் மம் முதலானவைகளுக்குச் சொல்லலாமென்றும் செப்பியிருக்கின்றனர்.

"ஆத்மாவின்" பொருளைப்பற்றி தமிழ் கிரந்தங்களைப் பரிசோதிப்போ மானில், அதற்குப் பிராணன், ஜீவன், ஆன்மா, நாயகன், அதிகாரி, பிரதானி, உயிர், கூத்தன் முதலானவைகளால் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின் றது. இதைப்பற்றியே, "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே உடம் போடியிரிடை நட்பு,"—என்று திருவள்ளுவர் சொன்னதன்றியில்; "தோற் பைகள் நின்று தொழிலற்செய்துட்டுங் கூத்தன் புறப்பட்டக்கால்," என்று காலடியிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. பொதுவாக வேதாந்த நூல்களிலோ வெனில், "அகங்காரம் முதல் ஸ்தூலதேக பரியந்தமான காரிய காரண சங்க வாதத்துக்கெல்லாம் அதிஷ்டானமாய் இருதய கமலத்தில் அகமகமென்று ம்மரித்துக்கொண்டிருக்கின்ற பிரத்தியகாத்ம சைதன்யமே ஆத்மாவென்றும் சொல்லியிருக்கின்றனர்.

ஆங்கிலேயபாஷையில் ஆத்மாவிற்கு (Soul=ஸோல்) என்றும்; அதாவது, மனிதனில் அழியாத அறிவுள்ள ஆவியைப்போன்ற தேகமென்றும்; மனிதனை பூஜிக்கவும், நியாயக் கட்டுப்பாட்டிற் குட்படுத்தவும் செய்யும் நாயகமென்றும் மனிதனுடைய மஹோன்னதச்சுபாவம், அல்லது சக்தியென்றும்; பிராணாத்மா அல்லது உயிர் நிலையென்றும்; அறிவு ஆண்மைக்கு மீறிய பகிர்ந்திரியப் பிரிய காரணமாகும் மாயாரூபமென்றும்; மனோமங்கலமென்றும், மானுஷீக மனோ மயமென்மையென்றும்; மானத உணர்ச்சியின் உறையிட மென்றும்; மானத ரூபமென்றும், அறிவென்றும், உணர்ச்சியின் பேதத்தையறியும் புத்தியென்றும் பரம்பொருள் என்றும்; இன்னும் பலவிதமாக சொல்லப்பட்டிருக்கின்றது.

(26). சாந்தோக்கிய உபநிஷத்து

6-வது அத்தியாயம் 12-13-14-வது கண்டங்களில்

ந்யக்ரோத பலமத ஆஹரேதி ; இதம் பகவ இதி;
பிபீதி ; பிந்நம்பகவ இதி ; கிமத்ரபஸ்யஸீதி;
அண்ட்ய இவேமாதாஸா பகவ இதி ;
ஆஸாமம் கைகாம் பிபீதி ; பிந்நா பகவ இதி ;
கிமத்ர பஸ்யஸீதி ; கிஞ்சந ந பகவ இதி.

தக்ம்ஹோவாச; யம்வைஸோம்யைத மணிமாநம் நிபாலயஸ.
ஏதஸ்யவைஸோமயேஷாணிம்ந ஏவம்மஹாந்யக்ரோதஸ்தஷ்
[டதி.

ஸ்ரத்தத்ஸ்வ ஸோம்யேதி ஸயஏஷோணி
மைததாத்ம்யமிதக்ம்ஸர்வம் தத்ஸத்யக்ம்,
ஸஆத்மா, தத்வமஸி ஸ்வேதகேதோ இதி.

பூயஏவமா பகவான் விஜ்ஞாபயத்விதி ;
ததாஸோம்யேதி ஹோவாச ; லவணமேதத்தகே
வதாயாதமா பாதரூபஸீ ததா இதி; ஸஹதத்தாசசார.

தக்ம்ஹோவாச: த்யேதஷா லவணமுதகேவாதா அம்ததத,ஹ
சத்தாவம்ருஸ்யாநிவேதயதாவிதீநமேவாமக [சேதி,
அஸ்டாந்தா தாசாமேதி; ததமிதி; லவணமிதி;
மத்யாத்தாசாமேதி ததமிதி லவணமிதி:
அத்தாதாசாமேதி; ததமிதி : லவணமிதி;
அபிப்ராஸ்யை ததமோபஸீ ததா இதி: தத்ததாசசார.

தச்சஸ்வச்சம் வர்ததே, தக்ம்ஹோவாச
த்ரவாவதிலசத்ஸோம்ய நிபாலய ஸேத்தை வதிஸேதி;
ஸயஏஷோணி மைததாத்ம்ய மிதக்ம் ஸர்வம்
தத்ஸத்யம், ஸஆத்மா தத்வமஸி ஸ்வேதகேதோ இதி.

பொழிப்புரை.

உத்தாலகர் புத்திரனைப்பார்த்து இந்த நியக்ரோத (ஆல) மரத்தின் பழம் ஒன்று கொண்டுவாவென்றார். (புத்திரன்) இதோ கொண்டுவந்தேன் பகவானே என்றார். பிதா உடைவென்றார். புத்திரன் உடைத்தேன் பகவானே என்றார். பிதா அதில் என்ன காணப்படுகிறதென்றார். புத்திரன் ஒரு சிறிய வித்து காணப்படுகிறதென்றார். பிதா அவ்வித்தை உடை யென்றார். புத்திரன் பகவானே இதோ உடைத்தேனென்றார். பிதா அதில் என்ன காண்கிறாயென்றார். புத்திரன் ஒன்றுமிலலை பகவானே என்றார். பிதா எதில உனகது ஒன்றும் காணப்படவில்லையோ, அதில் ஒரு பெரிய நியக்ரோத (ஆல) மரமிருக்கின்றது. அன்புள்ளவனே! அதை கவனிப்பாயாக, இவற்றிற்கெல்லாம் ஆத்மாவாகிய அணு சத்தியம்; அது ஜகத்தகெல்லாம ஆத்மா. நீயதுவாயிருக்கிறாய் சுவேதகேதுவே என்றார். புத்திரன் அதை மறுபடியும் விளக்குவீராக என்று கேட்க பிதா அபபடியேயென்றார்.

பிதா: இந்த உப்பை அந்தஜலதில்கரைத்துவிட்டு நாளைக்கல்லமே என்னிடம் வா என்றார். புதத்ரன அப்படியே செய்தார். பிதா குழந்தாய் நேற்றிராதத்தரி நீ இந்த நீரில் கரைத்த உப்பை யெடு என்றார். உபபு கரைந்துபோனபடியால வினங்கவில்லை. பிதா அந்த நீரில் மேல்புறத்தில் கொஞ்சமெடுத் தாசமனம் செய்யென்றார். புத்திரன் அபபடியே செய்தா. பிதா அதெப்படி இருக்கிறதென்றார். புத்திரன் அது உப்புகரிக்கிறதென்றா. பிதா நடுவில் கொஞ்சம் எடுதது ஆசமனம் செய், எப்படியிருக்கிறதென்றார். புத்திரன் அது உப்புகரிகறிதென்றார். பிதா அடியில் கொஞ்சமெடுத்து ஆசமனம செய் அதெப்படி இருக்கிறதென்றார். புத்திரன் அது உப்பு கரிக்கிற தென்றா. பிதா ஆலை அதைக் கொட்டிவிட்டு உன்வாயைக் கழுவிவிட்டு, சோகிக்காமலிரு என்றார். அவரப்படி செய்து விட்டு நான் நீரிலகலந்த உப்பு எபபோது மிருக்கிறதென்றா. பிதா சத்தியமும் அபபடியே குழந்தாய், நீ அதைக் காணவிடிலும் அது இந்த தேகமெங்கும் வியாபித்திருக்கிறது. இதற்கெல்லாம் ஆதமாவாகிய அணு சததியம். அது ஜெகத்துக்கெல்லாம் ஆத்மா. நீ அதுவாயிருக்கிறாய் சுவேதகேதுவே என்றார்.

விசேஷ உரை.

தீர்மம் என்ற பதத்துக்கு பற்பல பொருள் இருப்பதால் சமஸ்கிருதம்

யக்காரர்கள் இந்தியாநில உபநிஷத்துக்களுக்கு பாஷியம் செய்தபோது தம் தம் கல்வி, கேள்வி அநுபவங்களுக்குத் தக்கபடி பாஷியங்களைச் செய்யப்போய் கடைசியில் அநேக சித்தாந்தங்கள் உண்டாயின.

திருஷ்டாந்தமாக—இந்த சாந்தோக்கிய உபநிஷத்திலிருக்கும் நியகிரோத (ஆலம்) பழத்தை=பிரகிருத உலகத்திற்கும், அதிலிருக்கிற சிறிய விதையை=ஜகத்துக்கும் உபமான உபமேயமாக்கி காட்டியதில், அணு ரூபமான (சிறு விதைக்கொப்பான ஆத்துமா வை ஒவ்வொரு மாமும், பழமுருண்டாகிறபடியால்; அது ஒன்றே சத்தியமாயும், சகலத்துக்கும் சத்தியாயும் இருக்கிறதென்றும்; அதுவே பிரம்மம் என்றும்; தத்துவமசி என்ற வாக்கியத்தினால் நீ அதுவாயிருக்கிறாய் என்றும், மற்ற உலகமெல்லாம் கேவலம் தோற்றமென்றும், பொய்யென்றும், அத்வைத பரமாக சில் பாஷியம் செய்திருக்கின்றனர். இதே பதங்களுக்கும், வாக்கியங்களுக்கும், துவைத விசிஷ்டாத்துவைதிகள் தம் தம் குருக்களின் படி வேறு விதங்களாக பாஷியங்களைச் செய்திருக்கின்றனர். எப்படியெனில்,

இந்த உபநிஷத்தில் காணும் நியகிரோத (ஆலம்) பழத்தை=பிரகிருதி ஸ்வரூபமாகிய ஜடம் அல்லது ஜகம் அல்லது அசித்தென்றும், பஞ்சபூதமென்றும்; இதில் காணும் அணு ரூபமான சிறு விதை, ஆத்துமா அல்லது ஜீவாத்துமா என்றும்;— அந்த சிறு விதையை உடைத்துப்பார்த்தால், அதற்குள் ஒரு சிறு முளை இருப்பது பிரத்தியக்ஷமாகையால், அதுவே பரமாத்துமா அல்லது ஈசுவரனென்றும்; ஆகவே, பழமாகிய ஜடம் அல்லது அசித்தும்; விதை என்ற ஜீவனுகிய சித்தும்; முளையாகிய ஈசுவரனுமாக மூன்று பதார்த்தங்கள் இருப்பன பிரத்தியக்ஷமென்றும்; தத்துவமஸி என்னும் வாக்கியத்துக்கு அத்வைதிகள் சொல்லும் பொருள் பொருந்தாதென்றும், அதை இலக்கணை நீங்கியாக பொருள் செய்தால் அதத்+துவம்+அஸி=அது (பிரம்மம்) நீ ஆல்ல என்று பொருளாகுமென்றும், பாஷியம் செய்திருக்கின்றனர். இந்த மூன்றுவித சித்தாந்தங்களே இந்நாட்டில் அதிக பிரபலமாக இருக்கிறபடியால்; அம்மூன்று சித்தாந்தங்களையும், அவைகளை பிரபலப்படுத்திய சித்தாந்திகளுடைய சரித்திரங்களுடன் விரிவிடையாக காட்டுவது அவசியமென்று தோன்றுகிறபடியால், முதலில் அத்வைத சித்தாந்தத்தைப் பற்றி இதனடியில் விசாரிப்போம்.

அத்வைத சித்தாந்த பிரபாகரர்
ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்
சரித்திர சங்கிரகம்.

சாரதா பீடம் சங்கராசாரியர் பிறந்த இடம், காலம், இன்னதென்று வியக்தமாக தெரிவிக்கும் சரித்திரங்கள் கிடையா; ஆயினும் அவர் கி. பி. முதல் நூற்றாண்டில் மலையாள நாட்டில், காலாதி என்ற அக்ரஹாரத்தில், ஆத்திரேய கோத்திரம், தம்பூரி பிராம்மணர் சிவகுருநம்பூதிரிபாதருக்கு, தம்புடைய மனைவி மஹாதேவியாரிடத்து பிறந்ததாக பல அல்லால் பிரியமோ

றது. இந்த சகுருவும்பூத்திரிபதர், சங்கரர் தம் மூன்றாவது வயது அடையு முன் சிவபதமடைந்தபடியால்; இவர் தாயாரே, இவரை கண்ணே இமைக்காப்பது போல பாதுகாக்க வளர்ந்தார். கர்பாஷ்டகத்தில் உபநயனம் செய்விக்கப்பட்ட இவர், தமதுபனிரெண்டாவது ஆண்டு நிறையுமுன்னே சகல சாஸ்திரங்களைக் கற்றுத் தெளிந்து பராங்கதராணபடியால்; பாரின்பப் பாழ்க்கும்பியில் விழாமல் பிறப்பறுத்து பேரின்பத்தைப் பெற்றுய்ய விரும்பி சந்நியாச ஆசிரமத்தை அடைந்தார். இது விஷயத்தில் இவரது உத்தம மாதாவுக்கு வீருப்பமில்லாமலிருக்க, அவரை வேதாந்த உண்மையைக்காட்டி திருப்தியாக்கினார். பாலகராயிருந்தபோதிலும் இவர் எப்போதும் வேதாந்த விசாரம் செய்து, அக்காலத்தில் மலிந்திருந்த புத்தர், சமணர், சாக்கியர் முதலானவர்களைக் கண்டித்தும்; ஹிமசேதுபரியந்தமுள்ள பல திவ்யதீர்த்த க்ஷேத்திரங்களுக்கு யாத்திரைசெய்தும், ஆங்காங்குள்ள பண்டிதர்களை சந்தித்து தர்க்கித்து ஜயிததும்; ஒப்பும் உவமையற்றவித்துவசிரேஷ்ணியாக பிரகாசித்தார். வியாசமுனிவர் வேதங்களை எல்லாங்கடைந்தெடுத்துச் சொல்லிய உத்திரமீமாஞ்சை என்னும் பிரம்ம சூத்திரங்களுக்கு பாஷியத்தை (பனாரிஸ் என்னும் காசிப்பட்டணத்திலிருந்தபோது) செய்தருளினார்.

இவரியற்றிய தஸோபநிஷத்பாஷியம், கீதாபாஷியம், நரஸிம்மதாபிநிபாஷியம், சஹஸ்ரநாமபாஷியம், ஆநந்தலஹரி, ஹரிமிடே, சிவபுஜங்கம், விஷ்ணுபுஜங்கம், விவேகசூடாமணி, ஆத்மபோதம், கநகதாரை, அமரசதகம் முதலான சிறந்த கிரந்தங்களின் வாக்கியபரசனை, நிராக்ஷாபாகமுடைய பெருமை இக்காலத்தாரும் இத்தேசத்தாரு மாத்திரமல்ல, மற்றெக்காலத்தாரும், எத்தேசத்தாரும் கண்டு வியந்து, கலிமுளே கலியுகத்தில் சங்காராக அவதரித்தாரோ என்று சொல்லும்படி இருக்கின்றது இவர் சைவம் வைஷ்ணவம் என்னும் பேதம் பாராட்டாமல் ஸ்மார்த்தமத சம்பிரதாயப்படி சர்வசமய சமரசவேதசித்தாந்த சிரோபூஷணராயும், மணமொழி மெய்களாற்செய்பத்தக்கனவற்றைச் செய்தும், சர்வாந்தரியாமியாயிய ஜகதீஸ்வரனே எங்குமாய் யாவுமாய் பார்த்து பேரானந்தமடைந்திருந்தாரென்று இவரியற்றிய நூல்களில் பரக்கக் காணலாம். இந்த சாகசமய சமரச ஞானத்தை தாமனுபவித்து ஆநந்திப்பதைப் போலவே, பிரபஞ்சத்தாரும் அநுபவிக்கவேண்டுமென்ற பொருள்கொண்டு ஜகந்நாதம், துவாரகை, பத்ரிநாதரமம் சிருங்கேரி முதலான விடங்களில் கி. பி. 1200 வருஷங்களுக்கு முன்பே மடங்களை ஸ்தாபிததும்; அமடங்களுக்கு முறையே பதுமபாதர், ஹஸ்தாமலகர், சுரேசுவராசிரியர், ஆநந்தகிரியர் முதலானவர்களை பீடாதிபதியமித்து பலவிடங்களிலும் பிரசங்கம் செய்யும் செய்தனர். அக்காலத்தில் காஷ்மீர நாட்டில் பல புலவர் சிகாமணிகளிருந்தமையால் அங்கும் போய் அவர்களை வென்று புலவர் பெருமானாகிய இவரை அச்சபை நடுவே கௌரவத்துக்காக இட்டிருந்த கவரதனின சிதமான சாதா பீடத்தில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டாடினார்கள். இப்படிக்கு இவர் இளமை முதல் ஐம்புலனை வாட்டி உடம்பை ஒடுக்கி பல தேச சஞ்சாரங்கள் செய்து கொண்டதால், மூலவியாதி கண்டு வருந்தி பத்ரிநாதக்ஷேத்திரத்தை அடைந்தும், சில நாள்களிருந்தும், இமயமலையின் உன்னத கொடுமுடியாகிய கேதார நாட்டை அடைந்து [illegible] முப்பத்திரண்டாம் வயதில் பரிபூரணரானார். இவர் தமது அற்புத [illegible] பல எங்கும் நிலைத்த பரம்பொருளை நியானித்த பிரார்த்தனை [illegible]

வேண்டுமென்று பாவி யான் செய்த பிழைகள் மூன்றையும் பொருத்தருளி, உருவமில்லாத உன்னை நியாகரித்ததின் பொருட்டு (விக்கிரகமாக) நினைத்தேன், மெய்வார்க்குக் எட்டாத உன்னை (அவதாரமாக) துதி செய்தேன் நீ எல்லாம் நிறைந்திருக்கிறாய் என்பதை எண்ணாது நீர்த்த யாத்திரை செய்தேன் என்ற அதாபப்பட்டாராம்.—

இப்படிப்பட்ட பக்தசிகாமணியே அத்துவைத சித்தாந்தத்தை ஸ்தாபித்து அதில் காணப்படும் உலகமெல்லாம் பொய் யென்றும், ஆத்துமா ஒன்றேமெய்யாய் உள்ளதென்றும்; அதுதான் நான், நானே அது என்றும், அதுவே பிரம்மம், அந்த பிரம்மமே நான் என்றும், (சுவரூப அத்துவைத) சித்தாந்தத்தை ஸ்தாபித்தார அவருக்குப் பின் வந்தவர்களால் பல கிரந்தங்கள் எழுதப்பட்டன. அவற்றின் சாரசங்கிரகதை சாதாரண வாலிபர்களும் எளிதாக அறியும்படி விஞ்ஞவிடையாக இங்கு தெரிவிப்பது அவசியமாகத்தோன்றுவதால்; அப்படியே செய்ய முனைந்தோம்.

———:0:———

அத்துவைத சித்தாந்த சாரசங்கிரஹ விஞ்ஞவிடை.

(நாம், ஒரு அத்துவைதியைப் பார்த்து)

ஐயா, அத்துவைதமென்றுலென்ன? (என்று கேட்கில்)

அத்துவைதி—அத்துவைதமென்றால், அத்+துவைதம்=அத்துவைதம், அத்=இல்லை, துவைதம்=இரண்டு, என்றால் இரண்டற்றது=ஒன்றேயுள்ளது; அதாவது ஆத்துமாவாகிய பரபிரம்மம் ஒன்றே யுள்ளது, மற்ற பூத பவுதிகங்களெல்லாம் பொய் என்பதாம்.

நாம்—பார்க்கும் பிரபஞ்சமெல்லாம் பொய்யா, இதென்ன ஆச்சரியம்!

அத்துவைதி—ஆம், அத்தியாரோபம், அபவாதமிவைகளால் தத்துவ நிர்ணயத்தை யறிந்தால் பார்க்கப்பட்ட பூதபவுதிகாதி பிரபஞ்சங்களெல்லாம் வெறும் கற்பனையென்றும், பிரம்மம் ஒன்றே சத்தியமாய் இருக்கிறதென்றும் ஸ்பஷ்டமாகும்.

நாம்—அத்தியாரோபமாவதென்ன?

அ—அதி+அ+ரூப=அத்தியாரூபம்; அதி=வஸ்து, அ=பொய், ரூப=உருவம்; அதாவது, கிளிஞ்சியில் வெள்ளியைப்போலவும், கயிற்றில் பாம்பைப் போலவும், பிரபஞ்சமற்றதாகிய ஆத்ம வஸ்துவில் பிரபஞ்சத்தைக் கற்பிப்பதே.

நா—இதில் கற்பனை உண்டாகக் காரணமென்ன?

அ—ஆத்மாவின் ஸ்வரூபஞானமில்லாமையாலே.

நா—அந்த அஞ்ஞானத்துக்கு வேறு பெயர்களுமுண்டே

அ—அந்த அஞ்ஞானத்தையே அவித்தை, தமஸ், மோகம், மூடம், பிரகிருதி, பிரதானம், குணசாம்யம், அவ்யக்தம், மாயை யென்றும் பலபெயர்களுண்டு.

ச—மூலப்பிரகிருதி யென்றால் என்ன?

அ—அதற்கு பிரளயமென்றும், மஹா சுஷுப்தியென்றும் பெயர். அது வெள்ளை, சிவப்பு, கருப்பு நூல்களால் நிரிக்கப்பட்ட கயிறுபோல சத்துவ ரஜஸ் தமோ குணக் கலப்புள்ளது.

ச—அதெப்படி?

அ—இந்த மூலபிரகிருதியில் அனந்தகோடி ஜீவர்கள் தம்தம் கருமவாசனையுடன் மெழுகு உண்டையில் தங்கசன்னங்களைப்போல பிரளயத்தில்=திருஷ்டி காலத்துக்கு முன்பி அடங்கியிருக்கின்றனர்.

ச—இந்த அனுபவம் எங்கிருக்கிறது?

அ—சகல ஜனங்களுக்கும் சுஷுப்தி அவஸ்தையிலிருக்கிறது.

ச—இந்த மூலப்பிரகிருதி திருஷ்டிகாலத்தில் எத்தனை விதமாயிற்று?

அ—ஜீவர்களுடைய புரிபக்குவ கருமவாசனையினாலே மாயை, அவித்தை, தாமஸி என மூன்றுவிதமாயிற்று

ச—இவைகளில் மாயை என்பது என்னகுணத்தையுடையது?

அ—சுத்த சத்துவ குணத்தை முக்கியமாக உடையது.

ச—திருஷ்டிக்குமுன்பி இருக்கிற பிரம்மசைதன்னியம் மாயையில் பிரதிபலித்த போது என்ன பெயரைப்பெறும்?

அ—ஈசுவரனென்று பெயரைப்பெறும்.

ச—இந்த ஈசுவரனுக்கு வேறுபெயர்களுமுண்டோ?

அ—அவனை அவ்வியாகிருதன், அந்தர்யாமி என்றும்; ஜகத்தின் சிருஷ்டிகர்த்தா என்றும்; பரிபூரண பிரம்மசைதனியரூபத்திலேலே தாமஸி என்றதில் அவிச்சின்னனுஷ் சேர்ந்தவன்போலிருந்துக்கொண்டு ஜகத்திற்கு (நூலுக்கு சிலந்திப்பூச்சிப்போல) உபாதான காரணனென்ற பெயர்களுமுண்டு

ச—இந்த சைதன்னியம், தமஸில் சேர்ந்ததென்று சொன்னதில், அது தமஸுக்கு அன்னியமாகாமல், தமஸ்ஸாகவே ஆய்விட்டதென்று தானே தாத்பரியம்?

அ—இல்லை. சிலந்திப்பூச்சியானது நூலைத்தானேயுண்டாக்கி, அதில் அச்சிலந்திப்பூச்சி சஞ்சரித்தாலும்; அது அந்தநூலைவிட அன்னியமாயும், அதை ஒட்டாமலும் இருக்கிறதைப்போலவே, சைதன்னியமும் மாயையில் ஒட்டாமல் அதற்கன்னியமாய் இருக்கிறது.

ச—சைதன்னியம் ஜகத்திற்கு உபாதானகாரணமென்பதெப்படி?

அ—உபாதானமென்பது=ஆரம்போபாதானம், பரிணாமோபாதானம், விவர்த்தோபாதானம் என மூன்றுவிதம். எப்படியென்றால்—

(1) துணிக்குக்காரணமான நூலுக்கு யாதொரு மாறுதலின்றியே துணியாயிற்று—இதுவிஷயத்தில் நூல் ஆரம்போபாதானம்.

(2) தயிருக்குக்காரணமான பால் அதன் ஸ்வரூபம் மாறி தயிராயிற்று இதுவிஷயத்தில் பால் பரிணாமோபாதானம்.

(3) கயிற்றில் பாம்பென்கிற தோற்றமுண்டாயிற்று; உண்மையில் கயிறு பாம்பாகவில்லை; கயிற்றில் பாம்புமில்லை; அப்படிக்கிருந்தும் பிரமையாகிய அறியாமையினால் தோற்றுவிக்கப்பட்ட பாம்பென்கிற மயக்கத்திற்கு கயிறு காரணமாகையால், அக்கயிறே விவர்த்தோபாதானம்; அதுவே, பிரம்மசைதன்னியம் ஜகத்திற்கு ஆரம்போபாதானமுமல்ல, பரிணமோபாதானமுமல்ல; எனெனில் மணியில் தூல்காணப்படுகிறதைப்போல ஜகத்தில் பிரம்மம் காணப்படாததினால் ஆரம்போபாதானமுமல்ல, தயிர் மற்றபடியும் பாலாகாததுபோல பிரபஞ்சமாகத் திரிவையடைந்தால் மறுபடியும் பிரம்மமாக மாட்டாதாகையால், பரிணமோபாதானமுமல்ல. விவர்த்தோபாதானமென்றே சொல்லவேண்டும்; எனெனில் அக்ஞானமிருக்கும்வரையில் கயிற்றில் பாம்புபோல, பிரம்மத்தில் ஜகத்தோற்றுகிறது ஞானம் வந்தவிடத்து பிரம்மத்தைத்தவிர வேறொன்றும் காணப்படாதாகையால் ஜகதென்பது பொய்யே.

ஈ—இந்த தாமஸீயின் மூலிபமாக உபாதி பிரதான்னியத்தினால் என்ன ஆகிறது?

அ—உபாதான காரணமாகிறன்.

ஈ—உபாதியென்றாலென்ன?

அ—ஒரு வஸ்துவை பலவிதமாய் தோற்றுவிக்கிறதற்குச் சாதகமாய் இருக்கிறதெதுவோ அதுவே. பிரம்மசைதன்னியத்தை ஈசுவரனாகத் தோற்றுவிக்கிறதற்கு சாதகமாயிருக்கும் மாயை ஈசுவரோபாதி என்றும், பிரம்மசைதன்னியத்தை ஜீவனாக தோற்றுவிக்கிறதற்கு சாதகமான அவித்தை ஜீவோபாதி என்றும் பெயர்.

ஈ—அதெப்படி ஐயா?

அ—சர்வ வியாபகமான ஆகாயத்தில் கடமும் (குடமும்) வீடுமிருக்கையில், கடத்தை ஆகாசத்திற்கு உபாதியாக கடாகாசமென்றும்; வீட்டை யாகாசத்திற்கு உபாதியாகக்கொண்டு மடாகாசமென்று விவகரிப்பது போலாம்.

ஈ—சைதன்னியம் தன்னுடைய பிராதான்னியத்தினால் என்ன ஆகிறன்?

அ—கடமுண்டாவதற்கு குயவன்போல ஜகத்திற்கு ஈச்வரன் நிமித்தகாரணமாகிறன். ஈசுவரன் இந்த ஜகதை எப்படி அதன் ஜீவர்களாக திருஷ்டித்தாரெனில், அவித்தை பலவிதமாயும், எண்ணதெதாலையாததாயும் இருக்கிறபடியால் ஒரு புருஷனைச்சுற்றி அநேக கண்ணாடிகள் வைத்தால் அந்த ஒரு புருஷனே எல்லாக்கண்ணாடிகளிலும் தோன்றுவதுபோல அவித்தையில் பிரதிபலித்தசைதன்னியஸ்வரூபிகளான ஜீவர்களும் அனந்தமாக இருக்கின்றனர்.

காரண சரீர லக்ஷணம்.

ஈ—இந்த ஜீவேசுவரர்களுக்கு காரண சரீரங்களெவை?

அ—வியஷ்டி ரூபமான அவித்தையும், சமஷ்டி ரூபமான மூலபிரகிருதியே இந்தச் சரீரங்களினால் ஜீவர்களுக்கு அகங்காரமும், காரண சரீரமும் ஆகுதலாய சேர்தலுமாம்.

சூக்ஷ்ம பிரபஞ்ச விஷயம்.

ந—இனி சூக்ஷ்ம பிரபஞ்ச விருத்தியெப்படி?

அ—ஈஸ்வரனுடைய பார்வையினல் தமோகுணரூபியான பிரகிருதியானது ஆகாசத்தி, லிங்கசரீரத்தி என இரண்டாக ஆயிற்று. அந்த லிங்கசரீரத்திலே ஆகாசம். அந்த ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பிரதிவியுமுண்டாயின.

ந—இவ்வைந்து பூதங்களுக்கும் பெயரென்ன?

அ—இவ்வைந்து பூதங்களுக்கும் சூக்ஷ்ம பஞ்சகங்கள், அபஞ்சீகிருதங்கள், தன்மாத்திரைகளென்றும் பெயர்.

ந—இவைகளுக்கு காரணமெவை?

அ—அக்ஞானத்திலிருந்து சத்து-ரஜஸ்-தமோகுணங்கள் வந்திருக்கின்றன.

ந—இவ்வாகாசம் முதலிய ஒவ்வொரு பூதங்களுடைய சத்துவகுணம்சத்திலிருந்து உண்டானவை எவை?

அ—காது, துவக்கு, கண், மூக்கு, நாக்கு என்னும் ஐந்து ஞானேந்திரியங்கள்.

ந—ஆகாசம் முதலிய சத்துவ சமஷ்டியினல் உண்டாகியது எது?

அ—அந்தக்கரணம்.

ந—அது எத்தனைவிதம்?

அ—மனம், புத்தி, சித்தம், அஹங்காரம், என நான்குவிதம்.

ந—இவைகளில் அஹங்காரமும், சித்தமும், எதிலெதிலடங்கியவை?

அ—புத்தியில் அஹங்காரமும்; மனதில் சித்தமுமே.

ந—ஆகாசம் முதலிய ஒவ்வொன்றின் ரஜோகுணத்திலிருந்து உண்டானவை எவை?

அ—வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்ற கருமேந்திரியங்கள்.

ந—பிராணன் எதனலுண்டாகியது?

அ—ஆகாசம் முதலான ரஜோகுண சமஷ்டியினல்.

ந—அது எத்தனைவிதம்?

அ—பிராணன், அபானன், வியானன், உதானன் சமானன் என ஐந்துவிதம்.

ந—இந்த ஞானேந்திரிய கருமேந்திரிய பிராணன்களோடும் மனம் புத்தி பதினேழும் சேர்ந்ததினல் என்ன ஆகிறது?

அ—லிங்கசரீரம். இதுவே போகசாதனம். இந்த சூக்ஷ்மசரீரத்தில் ஜீவ[illegible]

வ்தாது பிரபஞ்ச விஷயம்.

—ஸ்தூலசிருஷ்டி இரமமெப்படி?

—மோகுண பிரதானங்களான அபஞ்சிகிருத (சூக்ம) ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களை ஒவ்வென்றையும் இரண்டாக பாகித்து, அதிலொருபாதியை அதன் சுவந்தாமசங்களாகவைத்து, மற்றொருபாதியை நான்காகப் பிரித்து, அந்த நான்கையும் ஒவ்வொன்றாய் மற்ற நான்கு பூதங்களுடைய சுவந்தாமசமான பாதியுடன் சேர்ப்பது பஞ்சீகரணமாம்.

—அதெப்படி ஐயா?

—ஆகாசத்தில் அதன் சுவாசம் அரை, வாயுவாம்சம் அரைக்கால், அக்னி அம்சம் அரைக்கால், ஜலாம்சம் அரைக்கால், பிரதிவியாம்சம் அரைக்கால்; அதாவது ஆகாசத்தில் தன் சுவாம்சம் அரையும், மற்ற நான்கு பூதங்களில் ஒவ்வொன்றினுடைய அரைக்காலம்சம்சேர்ந்த அரையுமாக இருக்கிறது. இப்படியே மற்ற பூதங்களுக்கும். இப்படிச்செய்வதனால் ஐந்து பூதங்களும் பஞ்சீகிரதம் செய்யப்பட்டதாகின்றன.

—இப்பஞ்சபூதங்களிலிருந்து என்ன உண்டாயின?

—பிரம்மாண்டமும், அதிற்குட்பட்ட பதினான்கு லோகங்களும், உத்பீஜம், அண்டஜம், ஜராயுஜம், சுவேதஜமாகிய ஸ்தூலசரீரங்களும், அன்னம் முதலிய போஜ்ய வஸ்துக்களுமுண்டாயின. இந்த ஸ்தூலசரீரத்தில் ஜீவேசுவர்களுடைய இருப்பு ஜாக்கிரதாவஸ்தை. இதுவே அன்னமயகோசமாம்.

—இந்த ஸ்தூல சூக்ம காரண சரீரங்கள் தனித்தனியே எத்தனைவகை?

—சமஷ்டி, வியஷ்டி என இருவகையாம்.

—சமஷ்டியென்றாலென்ன?

—வனம், கிராமம் என்பவைகளைப்போல பொதுவான பெயர்கள்.

—வியஷ்டியென்றாலென்ன?

—மரம், வீடு என்றாதிகளைப்போல தனிப்பெயர். ஆகவே, பொதுவாகச் சகல சரீரமும் சமஷ்டி. தனியாக ஒரு சரீரத்தைக்குறிப்பது வியஷ்டியாம்.

—சமஷ்டியுபாதியுடையவன் எவன்?

—சகல பிரபஞ்சமும் தன்னுடைய ஸ்வரூபமென அபிமானங்கொண்டவன் ஈசுவரன்.

—வியஷ்டியுபாதியுடையன் எவன்?

—பிரம்மம் தன்னுடைதென்றுகொண்டவன் ஜீவன்.

—இந்த ஜீவேசுவரர்களுக்குள் அவாந்திரபேதங்களுண்டோ?

—[illegible] ஈசுவரனென்றும், காரணவியஷ்டியிலுள்ள பிரக்ஞானமாத்ர சமஷ்டியிலுள்ள [illegible] என்ற [illegible] வியஷ்டியிலுள்ள காரணன் தன் தமக்குத்தானாகவே [illegible] என்றும், ஸ்தூலவியஷ்டியிலுள்ள விஸ்வன்என்ற [illegible]

ந—இந்த ஈசுவரனே சத்துவ ரஜஸ் தமோகுணங்களால் என்ன ரூபமாகின்றான்?

அ—பிரம்மா, விஷ்ணு, ருத்திர ரூபங்களேப்பெற்று சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார ங்களேச் செய்கிறான். பிரம்மா விராட்டுரூபத்துக்குள்ளும், விஷ்ணு ஹிரண்யகர்ப்ப ரூபத்துக்குள்ளும், ருத்திரன் ஈசுவர ரூபத்துக்குள்ளும் அடங்கினவராகிறார்கள். இப்படித்தான் பிரபஞ்சத்தின் உற்பத்தி. இதுதான் அத்தியாரோபம்.

ந—இதுவரையில் தமோகுண பிரதானத்தினுடைய விக்ஷேப சக்தி காரியத்தை சொன்னீர்கள், இனி ஆவரண சக்தி காரியத்தைச்சொல்லுங்கள் ஐயா?

அ—ஈசுவரன், ஆத்ம ஞானி, இவர்களேத்தவிர மற்ற சகல ஜீவர்களுக்கும் பஞ்சகோசங்களுடையவும், ஆத்மாவினுடையவும் பேதத்தையுண்டாக்கி ஆவரணசக்தி (அந்தகாரம்போல) மறைக்கிறது.

ந—இந்த ஆவரணமானது எத்தனே வகை?

அ—அசத்தென்றும், அபாவமென்றும், அதாவது வஸ்துவில்லே என்கிற வியவகாரத்திற்குக் காரணம் அசத்துவாவரணம்—வஸ்து வினங்கவில்லே என்கிற வியவகாரத்திற்கு காரணம், அபாஞவரணம் என இருவகை.

ந—ஸம்சார விருக்ஷத்திற்கு மூலமெது?

அ—ஆவரணசக்தி காரியமேயொழிய, விக்ஷேபசக்தி காரியமில்லே. இந்த ஆவரணசக்தியே மோக்ஷத்திற்குங்காரணம்.

ந—இவ்விருவித ஆவரணமும் எதனல் நீக்கும்?

அ—தத்துவஞானத்தினல் நாசமடையும்.

ந—அந்தத் தத்துவஞானம் எத்தனே வகை?

அ—பரோக்ஷம், அபரோக்ஷமென இருவகை.

ந—பரோக்ஷ ஞானமென்றலென்ன?

அ—குருமுகமாக வேதாந்த விசாரணேயினலுண்டாவது. இதுவே சிரவணம்=கேட்டறிதலாம். இதனல் வஸ்துவில்லே என்கிற அசத்துவாவரணம் நாசமடைகின்றது; அப்போது வஸ்து இருக்கிறதென்று வியவகரிக்கப்படுகிறது.

ந—அபரோக்ஷ ஞானமென்றலென்ன?

அ—சிரவணத்தினல் சமூசயத்தையும், மனனத்தினல் அம்சபாவனேயையும், நிதிதியாசத்தினல் விபரீத பாவனேயையும், நிவர்த்திசெய்து; தானே ஆத்மா என்கிற ஞானம் எவ்வளவு உறுதிப்பட்டிருக்கிறதோ, அப்படிப்போல பிரம்மமேதான், தானே பிரம்மம் என்னும் ஞானமே அபரோக்ஷ ஞானம்.

ச—இப்படி பரோக்ஷாபரோக்ஷ ஞானத்தினால் பிரம்மமாகிய வஸ்து விளங்க வில்லை என்று வியவகாரத்துக்கேதவான ஆவரணமிரண்டும் நசித்தவிட தினிலென்னகும் ?

அ—அப்போது அசர்த்த நிவர்த்தியும், ஆநந்தபிராப்தியுமுடாகும். இவ்விதமாக ஏழு அவஸ்தைகள் சித்தியாகும்.

ச—ஏழு அவஸ்தைகளெவை ?

அ—அக்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷஞானம், அபரோக்ஷ ஞானம், அசர்த்த (அக்க) நிவர்த்தி, தடையற்ற நிருப்தி இவ்வேழும் ஜீவனுக்கு அவஸ்தைகள். இவ்விதமாக ஆகாசத்தைப்போல நிர்மலமாயிருக்கிற சைதன்னிய வஸ்துவில், பொய்பாயிருக்கிற பிரபஞ்சத்தைக் கற்பித்தலே அத்தியாரோபமாம்.

ச—நல்லது, அபவாதமென்றாலென்ன ?

அ—காரணத்தைத்தவிர காரியமில்லையென்னும் அறிவினால், கிளிஞ்சியில் வெள்ளிபோலவும், கயிற்றில் பாம்பு போலவும், பிரமத்தினிடத்தில் பிரபஞ்சமில்லை என்று தள்ளுவது அபவாதமாம். எதில்லையோ அது மாயை. எது இருக்கிறதில்லையோ அது அவித்தை என்ற இந்த வாக்கியங்களுடைய அர்த்தத்தினால் மாயை கற்பிதமென்பது சித்தம்.

ச—இப்படி பிரம்மத்துக்கு அந்நியமாக ஒன்றுமில்லை என்றும், அந்தப் பிரம்மமே "நானே" என்று விசாரித் தறிகிறவனுக்கு பெயரென்ன ?

அ—அவனே ஜீவன்முக்தன் என்று வேதாந்தத்தின் சித்தாந்தம்.

ச—இதற்கு அநுபந்த சாதுஷ்டயமெவை ?

அ—விஷயம், பிரயோஜனம், சம்பந்தம், அதிகாரியாகியவைகளே.

ச—விஷயமென்பது என்ன ?

அ—இந்த வேதாந்த சாஸ்திரங்களுக்கு விஷயம் பிரம்மமே.

ச—பிரயோஜனம் யாது?

அ—மோக்ஷமே.

ச—சம்பந்தமெது ?

அ—பிரதிபாத்திய=சொல்லத்தகுந்தது+பிரதிபாதக=சொல்லுகிறவன்,ு பாவம்=போதிய=தெரியத்தக்கவஸ்து. போதக=தெரிவிக்கிறவன் சம்பந்தம்=அதாவது சொல்லத்தகுந்ததை சொல்லி, தெரியத்தக்க வஸ்துவை தெரிவிக்கிறவன் என்பதாம்.

ச—அதிகாரி யார் ?

அ—சாதன சாதுஷ்டய சம்பன்னனே.

ந—சாதன சாதுஷ்டயமாவதெவை ?

அ—நித்தியாநித்திய வஸ்து விவேகம், இஹமுத்திரார்த்த பலபோக விராக சமாதிஷ்டகம் முமுக்ஷுத்துவம்.

ந—நித்தியாநித்தியவஸ்துவென்றுலென்ன ?

அ—பிரம்மமே நித்தியமானது, ஜகத் அநித்யமானது என்று சுருதி ஸ்மிருதி புராணுதிகளாலே தனக்குத்தானே உண்டாகிற ஞானமேயார்.

ந—இந்த ஞானத்தைப்பற்றிச் சொல்லும் சுருதிகளுக்கு என்னபெயர் ?

அ—மஹாவாக்கியங்களென்று பெயர்.

ந—அவை எவை ?

அ—இருக்குவேதத்தைச் சார்ந்த ஐ தரிய உபநிஷத்தில் பிரக்ஞானம் பிரம்மம் என்னும் வாக்கியமும், எஜுர்வேதத்தைச் சார்ந்த தைதிரிய உபநிஷத்தில் அஹம் பிரம்மாஸ்மி என்னும் வாக்கியமும், சாமவேதத்தைச்சார்ந்த சாந்தோக்கிய உபநிஷத்தில் தத்வமஸி என்னும் வாக்கியமும், அதர்வணவேதத்தைச் சார்ந்த மாண்டோக்கிய உபநிஷதத்தில் அயமாத்மா பிரம்ம என்னும் வாக்கியமுமே.

ந—ஜீவபரங்களுக்கு ஐக்கியத்தை பிரதிபாதிக்க ஒரேவாக்கியம் போதாதா ?

அ—முன்சொன்ன நான்குவாக்கியங்களிலும் பிரயோஜனமுண்டு.

ந—அதெப்படி ?

அ—தத்துவமஸி வாக்கியம் குருவின் உபதேச வாக்கியம்; அகம்பிரம்மாஸ்மி வாக்கியம் சிஷ்யன் அனுபவ வாக்கியம், பிரக்ஞானம் பிரம்ம மென்னும் வாக்கியம் லக்ஷணவாக்கியம், அயமாத்மா பிரம்ம மென்னும் வாக்கியம் சொரூப சாக்ஷாதகாரமாகும்.

ந—பிரக்ஞான பதத்திற் கருத்தமென்ன ?

அ—அது வாச்சியார்த்தம், லக்ஷியார்த்தமென இருவகை.

ந—வாச்சியார்த்தமென்றுலென்ன ?

அ—தசேந்திரிய வியாபார விஷயங்களையறிகிற ஜீவனே வாச்சியார்த்தம்.

ந—லக்ஷியார்த்தமெது ?

அ—அந்தக்காரணத்தையும் அதன் விருத்திகளையும் தேகேந்திரியாதி வியாபாரங்களையும் தள்ளி அவஸ்தாத்திரய சாக்ஷியமாய் கூடஸ்தனுய் நிர்விகாரப் பிரதியோகாத்துமாவே.

ந—இனி பிரம்மபதத்திற்கு வாச்சியார்த்தமெது ?

அ—எந்த சைதன்னியமானது ஏகமாய், பூரணமாயிருக்கிறதோ அதுவேயாம்.

ந—இனி அகம்பிரம்மாஸ்மி என்னும் வாக்கியத்திலிருக்கும் அகம் என்ற பதத்திற்கு பொருளென்ன ?

அ—பரிபூரணமாய் தேசகால வஸ்து பரிச்சேத சூனியமாய் பிரதியேக சைன்னியம் மனுஷ சரீரத்தில் புத்திக்கு சாக்ஷியமாக ஹிருதய கமலத்தில் அகமமென்று ஸ்மரித்துக்கொண்டிருப்பதுவே,

ந—இனி பிரும்ம பதத்திற் கருத்தமென்ன?

அ—தனக்கு மூன்றும் பிறரிடமும் யாதொரு காரண வஸ்துவும், தனக்கு அன்ய மாய் யாதொரு ஒப்பும் உயர்வுமற்று ஏகமாயிருப்பது.

ந—இனி அம்மி என்னும் பதத்திற்கு அருத்தமென்ன?

அ—அகம் பதலக்ஷியார்த்தமான கூடஸ்த சைதன்னியமும் பிரம்மபதலக்ஷியார் த்தமான பரமாத்மா சைதன்னியமும் ஏகத்துவ ஐக்கியமேயாம்.

ந—இனி தத்வமசி வாக்கியத்தில் தத் பதத்திற்கருத்தமென்ன?

அ—ஏகமேவாத்துவைதம்.

ந—ஏகமென்றால் போதாதா? ஏகமேவாத்துவைதம் என்று ஏன் சொல்லவேண் டும்?

அ—ஏகம் என்ற பதத்தில் சுஜாதி சூனியமும், ஏவம் என்ற பதத்தில் விஜாதி சூனியமும், அத்வைதமென்பதில் சுவகதபேத சூனியமும் விளக்குகி றபடியால் அப்படி சொல்லப்பட்டது.

ந—இனி தொம்பதத்திற்கருத்தமென்ன?

அ—தேகேந்திரியாதிகளுக்கெல்லாம் அதீதமாய்ச் சிரவண மனன நிதித்யாச த்துடன் கூடியிருக்கிற பிரதியேகாத்ம சைதன்னியமேயாம்.

ந—இனி அசிபதத்திற்கருத்தமென்னே?

அ—தத்பத லக்ஷியார்த்தமான பிரம்மத்துக்கும் தொம்பத லக்ஷியார்த்தமான கூடஸ்தனுக்குமுள்ள உபாதிகளை நீக்கிய இருபதத்தின் லக்ஷியார்த்த ஐக்கி யமேயாம்.

ந—இனி அயம் ஆத்மாப்பிரம்மம் என்கிற வாக்கியத்தில் அயம்பதத்திற்கு அரு த்தமென்ன?

அ—ஆத்மா அபரோக்ஷஸ்வரூபமென்று சொல்லப்படுவதே.

ந—இனி ஆத்மாவென்னும் பதத்திற் கருத்தமென்ன?

அ—அகங்காரமுதலாய் ஸ்தூலதேக பரியந்தமான காரியகாரண சங்காதத் துக்கெல்லாம் அதிஷ்டானமாய், இருதயகமலத்தில் அகமகமென்று ஸ்மரித் துக்கொண்டிருக்கிற பிரதியேகாதமசைதன்னியமே.

ந—இனி பிரம்ம பதத்துக்கருத்தமென்ன?

அ—தத்வமாயிருக்கிற பரமாத்ம சைதன்னியமே பிரம்ம பதத்திற் கருத்தமாம்.

ந—இதாமுத்திரார்த்த பலபோகவிராகமென்றாலென்ன?

அ—இவ்வுலகத்தின் விஷயபோகங்களும், சுவர்க்கம் முதலான லோகங்களின் அப்சரஸ்திரியாதி விஷய போகங்களும் அநித்தியமென்றும் அசுசிய மானவையென்றுணர்ந்தலாம்.

ந—சமாதிஷ்டகமென்றாலென்ன?

அ—சமம், தமம், உபாதி, நிதித்யா, சமாதானம், சிரத்தையாதிகளே.

ந—சமம் எது?

அ—மனதை சிரவணாதிகளிலொரு விஷயமான ஆத்மாவிடத்தில் நிறுத்தல்.

ந—தமம் எது?

அ—ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை அடக்குதல்.

ந—உபாதியெது?

அ—விவகாரமற்று நிஷ்காம்ய கருமானுஷ்டான மற்று சரியாசியாயிருத்தல்.

ந—திதிக்ஷா எது?

அ—பிராப்தத்தினுலுண்டாகும் சித உஷ்ணதிகளை சஹித்தல்.

ந—சமாதான மெது?

அ—சிரவணதிகளால் கிரஹிக்கப்பட்டதில் மனதை நிறுத்தல்,

ந—சிரத்தையாவது என்ன?

அ—வேதாந்தம் குருவாக்கியங்களில் விசவாசம்.

ந—முமுக்ஷா என்பது எது?

அ—சம்சாரமாகிய தாபத்தைப் பரிகரிக்க சகல ஈஷணைகளையும் விட்டவருடைய தீவரமான இச்சை.

ந—சமாதி எது?

அ—கோபதாபாதிகளை விட்டிருத்தல்.

ந—நல்லது இந்த பிரபஞ்சம் எத்தனைவகை?

அ—ஆத்மா அனாத்மா என இரண்டுவகை.

ந—பிரபஞ்சாதீதமான ஆத்மாவுக்கு எப்படி பிரபஞ்சத்திற்குள் அந்தர்பாவம்= அடக்கம் வந்தது.

அ—இந்த பிரபஞ்சம் சேதனசேதனாத்மகம் = (சித்தும் ஜடமும் ஸரஸ்வரூபமாகையாலும், ஆத்மா சேதனனானபடியினலும் ஆத்மாவைப்பற்றி பிரபஞ்சமில்லாததினுலேயும், ஆத்மாவுக்கு பிரபஞ்சத்துகுள் இருப்புசொல்லியே தீரவேண்டும்.

ந—சேதனமென்றாலெது?

அ—ஜங்கமம் (உயிருள்ளவைகளெல்லாம் சேதனம்.)

ந—அசேதனமென்றாலெது?

அ—ஸ்தாவரம் (உயிரில்லாத ஜடவஸ்துக்கள்) அசேதனம்.

ந—சேதனங்களும் அசேதனங்களும் வெவ்வேறாயும், பலவிதங்களாயும், இருக்க பிரபஞ்சமாத்திரம் இரண்டுவிதமென்று எப்படி சொல்லலாம்.

அ—ஆத்மா ஒன்றுதான். அந்தக்கரணாதிகளாகிற உபாதியினுல் அநேகஜீவராகவும், ஈசுவரர்களாகவும் விளங்குகிறான். இதுபோலவே அனாத்மாவும் ஒன்றாக இருந்தாலும் காரிய ரூபத்தினுல் அனேகமாகவாயிற்று.

ந—இதுசம்பந்தியை உதாரணங்களோடு விவரப்படுத்தும்?

அ—ஆத்மா ஒருவனாலும் அந்தக்கரணாதி உபாதிகளினுல் அவ்வவ்விடத்தில் வேறுபட்டவன்போல் விளங்குகிறான். [illegible]

டர்த்தியாயிருக்கிற விஷயத்திற்கு திருஷ்டாந்தம். இதுபோல்வே ஒரே ஜலமானது, சமுத்திரம் நதி குளம் கிணறு பாத்திரம் முதலானவிடங்களி லிருப்பதில் அநேகமாக வினங்குகிறது; இதுவே பிரதிபிம்ப பக்ஷ திருஷ்டாந்தம்; மேலும் இந்த சமுத்திர முதலானதுகளில் ஒரே சூரியன் பிரதி பிம்பிப்பதினால் அநேகமாய் விளங்குகிறதுபோலவே, ஒரே ஆதமாவானவன் அந்தக்கரணத்துடன் கூடிய சகல சரீரங்களிலும் பிரதிபலித்தவனுக விளங்குகிறான். அன்றியும் ஜலத்தின் இயற்கையான குளிர்ச்சி சலன முதலானதுகள் பிம்பமான சூரியனை எப்படி தொடமாட்டாதோ அது போலவே, அந்தக்கரண தருமங்களாகிய கர்திருத்துவம், போக தத்துவ விகாரங்களும் சிதாபாசனுகிய ஜீவனிடத்திலே விளங்குகிறதே யொழிய பிம்பனுகிய ஆத்மாவைத் தொடுகிறதில்லை. ஆகவே, கடாகாசமே மகாகாசம், மகாகாசமே கடாகாசம்போல ஜீவாத்துமாவே பரமாத்துமா பரமாத்துமாவே ஜீவாத்துமா. ஜீவாத்துமா என்பது கற்பிதம்.

ந—அப்படியா! ஜீவன் எத்தனைவிதம் விவரமாகச்சொல்லுங்கள்?

அ—பாரமார்த்திகன், வியவகாரிசன், பிரதிபாவிகன் என மூன்று விதம். இந்த ஜீவர்கள் சுஷுப்தி ஜாக்கிரம் ஸ்வப்பனுபிமானிகள். ஜலத்தில் அலையும், அலையில் நுரையும், கற்பிதமாகிறபடி; பாரமார்த்திகனிடத்தில் வியவகாரிகன் கற்பிதம். குளிர்ச்சி ருசிமுதலானதுகள் ஜலத்தினுடையதாகவும் அக்ஞானங்கள் அலையிலும் நுரையிலும் விளங்குவனபோல வியவகாரிகனிடம் பிரதிபாவிகன் கற்பிக்கப்படுகிறான். எப்படி அலையின்றி நுரையும், ஜலமின்றி அலையும், இல்லையோ? ஜலமாத்திரம் வாஸ்தவமோ யுள்ளதோ அப்படி பிரதிபாவிகன் விவகாரனைத்தவிர இல்லை. வியவகாரனும் பாரமார்த்திகனைத் தவிர இல்லை. இப்படி பஞ்சகோசங்களில் நின்று பாரமார்த்திக கூடஸ்தனையேற்படுத்தி அந்த கூடஸ்தன் நானே என்று அறியவேண்டும்.

ந—நல்லது ஜீவாத்துமாவுக்கு துக்கம் இயற்கையா? அல்லது ஆகந்துகமா? (வேறெதினுலாவது வந்ததா?)

அ—ஆகந்துகமே. ஆத்மா நித்தியன் என்றும், சுகஸ்வரூபியென்றும், சுருதிகளில் சொல்லியிருப்பதால் இந்த சுகஸ்வரூபம் நசித்தாலன்றி துக்கம் சம்பவிக்க இடமில்லை. இந்த சுகஸ்வரூபம் நசித்தலென்றால் ஆத்மஸ்வரூபத்துக்கே நாசமுண்டாம்.

ந—அதெப்படி?

அ—வெல்லத்திற்கு தித்திப்புகுணம் இயற்கை; ஆகவே தித்திப்புகுணம் நாசமடைய வேண்டியதாகில் வேல்லத்திற்கே நாசமுண்டாகும்.

ந—அக்கினிக்கு உஷ்ணம் இயற்கையாக இருக்கினும், மணி மந்திராதிகளினுலே அந்த உஷ்ணத்தை நிவர்த்திக்கக் கூடியதுபோல் இயற்கை குணம் கெட்டு ஸ்வரூபம் நசிக்காமலிருக்கக்கூடுமல்லவா? அதுபோலவே ஆத்மாவின் அக்ஞானம் பக்தியோகங்களினுல் நசிக்கச் செய்யலாமல்லவா?

அ—மூடியாது—அக்கினியின் இயற்கையான உஷ்ணம் மணிமந்திராதிகளால் குளிர்ச்சியாக்கக்கூடினும், அந்த மணிமந்திராதிகள் நசித்த உடனே அவைகளாலுண்டான குளிர் முதலானதுகள் நீங்கி மறுபடியும் அக்கினிக்கு இய

தீயையான உஷ்ணம் வந்துவிடும். அதுபோலவே, ஆத்மாவுக்கு பக்தி யோகம் முதலியவைகளால் உண்டாகும் துக்கம், தத்காலிகமே யொழிய நிரந்தரமாகமாட்டாது.

ந—சகல்வரூபனுகிய ஆத்மாவுக்கு துக்கம் எப்படி வந்தது?

அ—சரீரமடைகிறதனால் வந்தது.

ந—சரீரம் எப்படி அடைந்தது?

அ—பூர்வ கர்மத்துடன் கூடிய பஞ்சிகிருத பூதங்களாலே.

ந—கருமமெத்தனைவகை?

அ—ஆகாமி சஞ்சிதப் பிராப்தமென மூவகையாம்.

ந—இவைகளின் விவரமெப்படி?

அ—ஆகாமியமானது=இந்த தேகமெடுத்த பதினுன்கு வயதுமுதல் செய்த தம்: சஞ்சிதத்துடன் சேருகிறதுமாம். லஞ்சிதமானது =பூர்வஜன்மங் களில் செய்த கருமங்களில் அனுபவித்ததுபோக மிச்சமானவை; பிராப் தமெனில்=பூர்வஜென்ம கருமங்களில் எந்த கருமத்தின் பலனுக இந்த ஜென்மம் வந்ததோ, அந்த தேகத்தினுல் அதுபவிக்கவேண்டியவையாம்.

ந—இக்கருமங்கள் எப்போது நசிக்கும்?

அ—ஞானம் வந்தால் ஆகாம்யசஞ்சிதம் நாசமடையும்; பிராப்தம் அதுபவத்தால் தான் நசிக்கும்; ஆகவே எவரும் விதேக முக்தியின்பொருட்டு பிரயத்தனம் செய்யவேண்டும்.

ந—விதேகமுக்தியென்றுலென்ன?

அ—தேகமற்றமுக்தி.

ந—வேறுபல முக்திகள் எவை?

அ—ஸாலோக்கிய, ஸாமீப்பிய, ஸாரூப்பிய, ஸாயுஜ்ஜியம் என நான்காம்.

ந—இவைகளை அடைவதற்கு வேறு வேறு சாதனங்களுண்டோ?

அ—ஆம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்குவகைகளுண்டு.

ந—சரியையென்றுலென்ன?

அ—பகவத் கைங்கரிய ரூபமான தாச பாவனை.

ந—கிரியை என்றுல் என்ன?

அ—தேவதாபூஜை செய்தல்.

ந—யோகம் என்றுலென்ன?

அ—யமம், நியம் முதலான அஷ்டாங்கங்களால் பரமாத்துமாவினிடம் ஜீவாத்மா ஐக்கியம், அதாவது பிரமத்துடன் கலந்து பேதமற்றிருத்தல்.

ந—ஞானமென்றுலென்ன?

அ—பிரம்ம சைதன்னியத்தை எங்குமாய் எதுமாய் கண்டானந்தித்த ஐக்கிய முற்றிருத்தல். ஆக இந்த நான்கில் மூன்றும் மறுபடியும் பூமி பில ஜன்னத்தைச்சேர்க்கும். சாயுஜ்ஜியமே முக்கியமான முக்தி.

[illegible] பரிசுத்தத்திலும், ஆத்மாவுக்கு [illegible] தெளிவித்தம் ?

அ—பாபியம், பாவம், மிசரம் என மூன்றுவித்தங்களுண்டு.

ச—விவரமாகச் சொல்லும்.

அ—புண்ணிய கருமத்தினால் தேவாதிசரீரமும், பாவகருமத்தினால் மிருகாதி சரீரமும், புண்ணியபாவ மிசரக்கருமத்தினால் மனுஷியாதி சரீரங்கள் உண்டாகின்றன.

ச—இவைகளிலும் வித்தியாசங்களுண்டோ ?

அ—த்விருஷ்டம், மத்தியமம், சாமான்யம் எனத்தனித்தனி பேதங்களுண்டே இப்படி சொல்லப்பட்ட கருமபாதத்தினால்தான் நானாவித ஜனபேதமாகிறது. எப்படியெனில், ஹிரண்யகர்ப்பாதி சரீரம் புண்ணியோத்திருஷ்டம் இந்திராதிசரீரம் புண்ணிய மத்தியமம், யக்ஷ ராக்ஷஸ பிசாசம் புண்ணிய சாமானியமாம்.

ச—இந்த மூன்றுவித கருமம் எதினால் செய்யப்படுகின்றது ?

அ—மூன்றுவித காரணங்களினால்.

ச—அப்படியா ! ஆத்துமாவினாலல்லவா ?

அ—ஆத்துமா அவிகாரி, நிஷ்கிரியன் (அவத்தபேதம்) அவயவமற்றவனுகையால் கர்த்திருத்துவம் கிடையா.

ச—ஆனால் ஆத்மாவுக்கு கருத்திருத்துவம் இருக்கிறதுபோல தோன்றவேண்டியதேன் ?

அ—அத்தியாசமே. (ஆரோபிதமே)

ச—ஆரோபிதமென்றாலென்ன ?

அ—ஒன்றின் தருமங்கள் வேறொன்றினிடம் காணப்படுதலேயாம். அதாவது ஓடத்தின் ஓட்டம் நதிக்கரையிலிருக்கிற மரங்களிலேயும்; சலிக்காமலிருக்கும் தன்மையையுடைய மரங்களின் தருமம் ஓடத்திலும் ஆரோபிம்பது போலாம்.

ச—கல்லது மூன்றுகாரணங்களும் அசேதனமாக இருக்க, அதற்கெப்படி கருத்திருத்துவம் உண்டாகும் ?

அ—அசேதனமான ஜலமும் வாயுவும், மரமுதலானதுகளை வேருடன் பிடுங்கி தூரத்தில் கொண்டுபோய் போடும்படியான கருத்திருத்துவம் காணப்படுவது போல மூன்றுவித காரணங்களுக்கும் வேறு காரணங்களன்றியில் கருத்திருத்துவ மிருக்கிறது.

ச—இம்மூன்றுவித காரணங்களினால் செய்யப்படுகிற கருமங்களெவை ?

அ—ஸவிசேஷ சிந்தை, நிர்விசேஷ சிந்தை, பரலோக சிந்தை, பக்திஞான வைராக்கிய சிந்தை என்றறிகளே. இவைகளில் மனதினாற் செய்யப்படுகிறவைகள் புண்ணிய கருமங்கள். விஷய சிந்தை; அன்னியர்களுக்கு பொருட் சிந்தை, வேதசாஸ்திர அபிமான சிந்தை, தருமாதரும்மில்லையென்கிற சிந்தை இவைப்போன்ற புத்தி விகாரங்கள் மனச்சம்பவமான பாவகாரியங்கள். ஸவிசேஷ நிர்விசேஷ புண்ணிய விஷயசிந்தை மூலமான பலசித்

பிரதட்சணம், சத்தியம், பரோபகாரம் முதலிய புண்ணிய கருமங்களாம். வேதாகமத்தை வேதனிந்தனை, அசத்தியம், கடுஞ்சொல், பொய்சொல்லுதல், பரிகாசம், பேசல் முதலியன வாக்கினால் செய்யப்படும் பாபகருமங்களாம். வேதாத்தியயனம் தேவபூஜைகாலங்களில் பரிகாசம், அசத்தியம் முதலானதுகளை அநுஷ்டித்தல் மிகுபாவகருமங்களாம். இப்படியே புண்ணிய பாபகர்மங்களுமுண்டு. பிரம்மஞான மூண்டாயிருந்தாலும், மூன்று காரணங்களையும் புண்ணியகருமத்திலேயே நிறுத்தவேண்டும்.

ஈ—மூன்று காரணங்களுக்கும் சுவயமாகவே கருத்திருத்தல முண்டா?

அ—சுவயமாக இல்லை. இராக துவேஷாதிகளால் பிரேரேபிக்கப்படுவதனாலுண்டாகிறது.

ஈ—இந்த இராகத்துவேஷ விருத்திகளெவை?

அ—இராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாச்சரியம், ஈருஷை, அசூயை, டம்பம், தருப்பம், அஹங்காரம், இச்சை, புகழ், சிரத்தை என பதினைந்தும்.

ஈ—இவற்றின் விவரத்தைச் சொல்லும்?

அ—(1) இராகம்=ஸ்திரீகளிடத்தில் சித்தவிருத்தி.

(2) துவேஷம்=அபகாரம் செய்தவனுக்கு பிரதிசெய்ய இச்சித்தல்.

(3) காமம்=பூமி வீடுகளிச்சம்பாதிக்க விரும்பல்.

(4) குரோதம்=தன் இச்சைக்கு விரோதமானவரிடம் கோபித்தல்,

(5) லோபம்=பொருளை சதாபாத்திரத்தில் செலவழிக்க விரும்பாதிருத்தல்.

(6) மோகம்=பணச்செறுக்கால் இன்னது செய்யத்தக்கது இன்னது செய்யத்தகாதது என யோசிக்காமல் மந்தனாயிருத்தல்.

(7) மதம்=செல்வச்செறுக்கால் தன்னால் செய்யக்கூடாத காரியமில்லை என்றெண்ணுதல்.

(8) மாச்சரியம்=சம்பத்தினால் தனக்குச் சமானமாயிருப்பவனைக் கண்டு பொறுமைகொள்ளல்.

(9) ஈருஷை=பிறருடைய தக்கம் அவரைவிட்டு எம்மிடம் வந்ததென்றெண்ணுகிற சித்த விருத்தி.

(10) அசூயை=சகம் தனக்கேயுள்ளது, மற்றவர்க்கில்லை என்னும் சித்தவிருத்தி.

(11) டம்பம்=ஒரு தருமத்தில் தனக்கு பிரசித்தி அதிகமுண்டாயென்ற சித்தவிருத்தி.

(12) தருப்பம்=தனக்குச் சமானமானவனில்லை என்றெண்ணுதல்.

(13) அகங்காரம்=சகல விஷயத்திலும் தனக்கு சக்தி உண்டென்றெண்ணல்

(14) இச்சை=உண்ணல் கழித்தல் கருமம் செய்ய விரும்பல்.

(15) பக்தி=குரு, சர்ஜனர், தேவதைகளிடத்திலும், வேதவாக்கியங்களிலும் பிரீதி.

(16) சிரத்தை=யாகாதி கருமங்களில் விசுவாசம்.

இப்பதினாறில் இச்சையைத்தள்ளுவது அசாத்தியம்; பக்தி, சிரத்தையாகிய இரண்டையும் அனுஷ்டித்து மற்ற பதிமூன்றையும் தள்ளவேண்டும்.

ஈ—இந்த இராகாதிகள் எதனால் வருகின்றன?

அ—அபிமானத்தினால் வருகின்றன.

ஈ—இந்த அபிமானம் எப்படி வருகிறது?

அ—அவிவேகத்தினாலே.

ஈ—இந்த அவிவேகம் எப்படி உண்டாகிறது?

அ—தனது சிதாத்ம சுவரூபத்தை அனாதிகாலமாக மறைத்ததும், ஆத்ம ஞானத்தினாலேயே நிவிருத்தியாகத்தக்கதுமாகிய அனாதி அக்ஞானமே.

ஈ—இந்த அக்ஞானம் எப்படி வந்தது?

அ—இது அனாதி என்று வேதசாஸ்திரங்களில் சொல்லியிருப்பதால் காரணஞ் சொல்லுவது அசாத்தியம்.

ஈ—இந்த அக்ஞானத்துக்கு ஆதியில்லாவிடில் அந்தமுமில்லையல்லவா?

அ—அக்ஞானத்துக்கு ஆதியில்லாவிட்டாலும் அந்தமுண்டு. எப்படியெனில் தருக்க சாஸ்திரப்படி பிராகபாவத்திற்கு ஆதியில்லை, அந்தமுண்டு. விரத்து வம்ச பாவத்திற்கு ஆதியுண்டு, அந்தமில்லை.

ஈ—இதை விவரமாகச்சொல்லுங்கள்?

அ—குடமுண்டாகிறதற்குமுன் குடம் இல்லை, என்கிறதாகிய அபாவம் வெகு காலமாக இருக்கிறது. குடமில்லையென்கிற அபாவவாக்கியம் எப்போ துண்டாச்சுதென்பது தெரியாவிட்டாலும், குடமுண்டானவுடனே ஆதியில்லையென்கிற அபாவவாக்கியத்திற்கு அந்தமுண்டாய்விட்டது. இது தான் பிராகபாவம். நசிக்கச்செய்கிறதினால் இல்லாமையுண்டாகிறது, எப்படியென்றால், குடம் உடைக்கப்பட்டவுடன் குடமில்லாமையுண்டாகிறது. உண்டான இல்லாமைக்கு அந்தமில்லை ஆகையால் இதுவே பிரத்துவமஸ்தாபவம், ஆகவே வாதபித்தாதிகளாலுண்டான ரோகங்களுக்கு காரணமின்னதென்று தெரியாவிட்டாலும், மருந்துகளினால் அவைகளுக்கு பரிகாரம் காணப்படுகிறதைப்போல் அக்ஞானத்துக்குக்காரணம் தெரியாவிட்டாலும் ஞானத்தினால் அது நாசமாகிறதுண்மையே.

ந—இந்த அஞ்ஞானத்தின் சுவரூபலக்ஷணம் எப்படிப்பட்டது ?

அ—அது சத்துமல்ல, அசத்துமல்ல, சதசத்துமல்ல அவயவமுள்ளதல்ல, இல்லாததுமல்ல இவ்விரண்டும் சேர்ந்ததுமல்ல, சோதாதுமல்ல, அது அநிர்வாச்சியம் (வாக்கினால் சொல்லத்தகுந்த தல்லாதது) எனெனில், ஸ்தூலகாசமே சூக்ஷமமானது, அதிலும் சூக்ஷமம் (தன்மாத்திரை என்கிற) அபஞ்சிகிருத ஆகாசம், அதிலும் சூக்ஷமம் சத்துவாதி குணங்கள், அவைகளிலும் சூக்ஷமம் அஞ்ஞானம்; ஆகவே இத்தியாதி சூக்ஷமத்திற்கெல்லாம் மூலகாரணமாயிருக்கிறபடியால் அவயவமுள்ளதல்ல. அன்றியும், அதுவே ஸ்தூலபதார்த்தமாகிய ஜகதாகாரமாய் பரிணமிக்கிறதினால் அவயவமில்லாததுமல்ல. இப்படி அநாதியாயுள்ள அஞ்ஞானத்தினால் அவிவேகமும்—அவிவேகத்தினால் அபிமானமும்—அபிமானத்தினால் இராக துவேஷாதிகளும்—அவைகளால் கருமமும்—கருமத்தினால் சரீரமும்—அதினால் சம்சார துக்கமும், ஆத்மாவுக்கு பரம்பரமாக வருகிறது.

ந—இந்த சம்சாரதுக்கம் எப்போது போம் ?

அ—சரீரம்போனால் துக்கம்போம், கருமம் நசித்தால் சரீரம் போம். இராக துவேஷாதிகள் நசித்தால் கருமம்போம். அபிமானம் நசித்தால் இராக துவேஷாதிகள் நசிக்கும், அவிவேகம் நசித்தால் அபிமானம் போம். அஞ்ஞானம் நசித்தால் அவிவேகம் போம். அக்ஞானமோவெனில் அத்துவைத பிரம்மஸ்வரூப ஆத்மாவாகிய தன்னை பிரம்மமே நான், நானே பிரம்மம் என்ற ஞானத்தினால் நசித்துப்போம், அதாவது இருளும் வெளிச்சம்போல-இவைகளில்ஒன்றிருந்தால் மற்றொன்று இருக்கமாட்டாதது போல ஞானமுண்டானவிடத்தில் அக்ஞானம் இருக்கமாட்டாது.

ந—கருமமானது மூன்றுவித காரணங்களாலுண்டாகிறதென்று சொன்னீர், ஞானமும் அந்தக்காரணத்தினாலுண்டாகி விருத்தியானபடியால் அதுவும் கருமமேயாகிறதல்லவா ; ஆகவே அதெப்படி அக்ஞானத்தை நிக்கச்செய்யும் ?

அ—விருத்தி என்பது மனதிலிருந்துண்டான கருமமேயாம். அந்த விருத்தியானது ரூபத்தை அறிகின்ற விஷயத்தில் கண்ணாடிப்போல, ஞானத்திற்கு ஒரு சாதனமாயிருந்து அக்ஞானத்தை நிவர்த்திக்கிறது. ஞானம் நித்தியமானது.

ந—இந்த ஞானம் எத்தனை வகைப்படும் ?

அ—சுவரூபஞானம், விருத்தி ஞானம் என இருவகைப்படும். சுவரூப ஞானமென்றால் சுவரூபநிலையில் அக்ஞானத்தை பிரகாசிப்பிக்கிறதாம். இரண்டாவதில் விஷயங்களைப் பிரகாசிப்பிக்கிறது விருத்தி ஞானம்.

ஞானம் — ஆத்துமஸ்வரூபம், அந்த ஸ்வரூபமாயிருக்கிற ஞானமானது விருத்திகளில் பிரவேசித்து அக்ஞானத்தை நிக்கச் செய்கிறது.

ச—அதெப்படி? உதாரணத்தோடு காட்டும்?

அ—தேத்தாங்கொட்டை நியாயப்படி:—அதாவது தேத்தாங்கொட்டையானது தண்ணீரிலுள்ள அழுக்கைப்போக்கி, அவ்வழுக்குடன் அதுவும் அடியில் தங்கிவிடுவதுபோல, விருத்திஞானமும் அக்ஞானத்தையும், அதன் காரியத்தையும் நிக்கச்செய்து தானும் தானேயே நசித்துப்போகிறது. இப்படி விருத்தி காசமானால் அதில் பிரதிபலித்தஞானமும், தனக்கு பிம்பமான சுவரூபஞானத்தையடையும். பிறகு அதனுவதமாகிய ஆத்துமஸ்வரூபம் மட்டுமே மிஞ்சும். இப்படிப்பட்ட ஞானமானது ஆத்மஞ்தமா விசாரத்தினாலேயுண்டாகிறது.

ச—ஆத்மா யார்?

அ—மூன்று சரீரங்களுக்கு விலக்ஷணனுகியும், மூன்றவஸ்தைகளுக்கும் சாக்ஷியாகியும், பஞ்சகோசங்களுக்கு அதிஷ்டானுகியும் சச்சிதானந்த லக்ஷணனே.

ச—அனுத்துமா யார்?

அ—மூன்றுசரீரங்களும் உடையவன்.

ச—விவரமாகச் சொல்லும்?

அ—ஸமஷ்டிஸ்தூலசரீரம், ஸமஷ்டி சூக்ஷ்ம சரீரம், ஸமஷ்டி காரணசரீரம் என்றும்; வியஷ்டி ஸ்தூலசரீரம், வியஷ்டி சூக்ஷ்மசரீரம், வியஷ்டி காரண சரீரமென மூன்று சரீரங்களும், ஸமஷ்டி வியஷ்டியினால் ஆறுவிதமாக இருக்கிறன்.

ச—ஆத்துமாவுக்கு ஈசுவரத்துவமும், ஜீவாத்வமும் வாஸ்தவமோ?

அ—வாஸ்தவமல்ல. ஸமஷ்டி உபாதியினால் ஈசுவரத்துவமும், வியஷ்டி உபாதியினால் ஜீவத்துவமுமே. மயோபாதியினால் ஈசுவரத்துவமும், அவித்தியோபாதியினால் ஜீவத்துவமேயன்றி வாஸ்தவமல்ல. ஆத்மாவானவன் மாயையாகவும், அவித்தையாகவும் தானேயேயாகி ஜீவீசுவரர்களாகச் செய்துகொள்ளுகிறன். ஈசுவரனுக்கு ஸமஷ்டிகாரண சரீரத்தில் அபிமானமில்லை.

ச—ஏனில்லை?

அ—அந்தக்காரம் மஹாசுஷுப்தியில் நசித்துப்போவதினால்.

ச—இந்த ஸமஷ்டிக்காரணோபாதிகரான ஈசுவரனுக்கு என்ன பெயர்கள்?

அ—அவ்வியாகிருதன், அந்தரியாமி என்றும்,

ச—ஸமஷ்டி சூக்ஷ்மசரீரோபாதிகரான ஈசுவரனுக்கு என்னப்பெயர்கள்?

அ—ஹிரண்ணியகர்ப்பன், சூத்திராத்மா, மஹாப்பிராணன் என்பவைகளாம்.

ச—ஸமஷ்டிஸ்தூலோபாதிகளுக்கு ஈசுவரன் பெயர்களெவை?

அ—விராட்டு, வைராஜன், வைசுவானரனன், என்பனவைகளாம்.

ச—பரமாத்மாவுக்கு மூன்று சரீர உபாதியினால் ஈசுவரத்துவம் சித்தியான விதம் சொன்னீர்: இனி பரமாத்மாவுக்கு வியஷ்டியாகிற மூன்று சரீரத்தினால் ஜீவத்துவம் சித்தியாகிறதெப்படி?

அ—வியஷ்டிகாரணசரீரத்துடன் கலந்திருக்கிற பரமாத்மாவுக்கு, பிராக்ஞன்—பாரமார்த்திகன்—அவித்தியவசியனாகி என்றும், வியஷ்டிசூக்ஷ்மசரீரத்தோடு சேர்ந்திருக்கிற பரமாத்துமாவுக்கு தைஜசன்—சுவப்பனகற்பிதன்—பிராதிபாவிகன் என்றும், வியஷ்டி ஸ்தூலசரீரத்தோடு சேர்ந்திருக்கிற பரமாத்தமாவுக்கு—விசுவன—வியவகாரிகன்—சிதாபாசன் என்றும் சொல்லப்படும்.

ச—இந்த ஜீவனுக்கு இம்மூன்று தேகங்களால் என்ன பிரயோஜனம்?

அ—அந்தக்காரண பிரதிபிம்பன் ஜீவன்; ஆகவே, ஜீவனுக்கு சூக்ஷம சரீரம் அவசியம். பிறகு கருமம் செய்ய ஸ்தூலம் அவசியம், இக்காரிய சரீரங்களுக்குக் காரண சரீரமும் அவசியம்.

ச—இப்படி மூன்று சரீரமுடைய ஜீவனுக்கு அபிமானமுண்டோ?

அ—உண்டு, அபிமானமில்லாவிட்டால் சருமம், கருத்திருத்துவம் பொருந்தாது.

ச—ஆத்துமாவுக்கே அவித்தை மாயா உபாதிகளினாலே ஜீவேசுவரத்துவம் வினங்குவதற்கு உதாரணம் காட்டும்?

அ—ஒரே அக்கினியானது பெரிய பந்தத்திலிருந்துகொண்டு விஸ்தாரமான விடங்களுக்கு வெளிச்சத்தைத தருவதும்; அதனே, அற்பமான ஒரு சிறிய திரியிலிருந்துகொண்டு ஒரு வீட்டுக்கு மட்டும் வெளிச்சத்தை தருவதைப் போல, ஆத்மாவுக்கும மாயோபாதியாகிய பெரிய காரணத்தினால் சர்வக்ஞத்துவமும்; அவித்தையாகிய அற்ப காரியோபாதியினால் கிஞ்சிக்ஞத்துவமும வந்தன. இதனால், சர்வகஞாதமா கிஞ்சிக்ஞாதமா என இரண்டாத்துமா இல்லை.

ச—இதைப்பற்றி வேதசாஸ்திரங்களில் என்ன போதிக்கின்றன?

அ—தத் பதத்திற்கும் துவம் பதத்திற்கும் சம்பந்த நிரியத்தினால் அகண்டத்துவத்தை போதிக்கின்றன.

ச—சம்பந்தநிரயமெவை?

அ—இரண்டு வாக்கியங்களுக்கு ஸாமனாதி கரண்ணிய சம்பந்தம், இரண்டு பதார்த்தங்களுக்கும் விசேஷண விசேஷிய பாவசம்பந்தம், இரண்டு பதங்களுடனுடைய பதார்த்தங்களுடனுடைய, பிரதியேகாத்துமாவுக்கு லக்ஷண சம்பந்தமென மூன்று விதம்.

[illegible] தேவதை வேறுப்படும்?

[illegible] தேவதை என்றால், அந்த இரு பதங்களுக்கு தேவதை [illegible] சரணம் அதாவது அந்த தேவதையினாலே [illegible] என்று சொன்னதாக ஆயிற்று. இந்த தேவதத்தனிருக்கும் தேசம் காலத்தையனுசரித்த விசேஷன விசேஷிப பாவசம்பந்தமாகிறது. அன்றியும், அவன் இவன் என்ற பதங்களுக்காவது, அவைகளின் அர்த்தங்களுக்காவது அகண்டார்த்தமாகிய தேவதத்த பிண்டமாத்திரத்தை எடுத்துக்கொள்வதனால் விரோதாம்ஸத்தைத் தள்ளி விரோதமில்லாத தேவதத்தன் என்கிறது மாத்திரமான லக்ஷிபத்தினாலே லக்ஷிப லக்ஷணபாவ சம்பந்தமிருக்கிறது.

ந—இந்த லக்ஷணம் எத்தனை வகைப்படும்?

அ—பாகதியாக லக்ஷணம் என்றும் ஜகத் ஜகல்லக்ஷணமென்றும் இருவகைப்படும்.

ந—அதெப்படி?

அ—சாஸ்திரங்களில் வாக்கியத்தினுடைய அர்த்தத்தை கிரஹிக்கிற விஷயத்தில் முக்கியவிருத்தி, குணவிருத்தி லக்ஷணவிருத்திகளென மூவகையுண்டு.

ந—இந்த முக்கியவிருத்தி, குணவிருத்திபை உதாரணங்களுடன் விவரப்படுத்தும்?

அ—இந்த கஜ துரக பதாதிகள் போவதைப்பார்த்து இராஜா போகிறான் என்று சொல்லுவது முக்கியவிருத்தி. நீலோத்பலம், என்றால் நீலபுஷ்பமென்ற குணவிருத்தியாம்.

ந—இலக்ஷணவிருத்தி யெனறாலென்ன? அது எத்தனைவகை? உதாரணங்களுடன் தெரிவியுங்கள்.

அ—(ஜஹல்(=விட்ட) லக்ஷணை. அஜஹல் = (விடாத) லக்ஷணை ஜஹதஜஹல் = (விட்டும் விடாத) லக்ஷணை என மூவகையாம். இவைகளில் விட்டலக்ஷணையெனில் சொன்னவார்த்தையின் வாச்சிய அருத்தத்தை விட்டு, வேறே அருத்தத்தில் நிறுப்பது. அதாவது கங்கையில் கோஷம் (இடைச்சேரி) இருக்கிறதெனில், பிரவாகத்தோடுகூட கரையிலிருந்த இடைச்சேரியை கிரஹிக்கவேண்டியதுபோலாம். விடாத லக்ஷணமாவது =செவப்புக்குதிரையும், வெள்ளைப்பசுவும் ஒடுகின்றனவா? என்று கேட்டால், சிவப்பு ஓடுகிறது என்றால், சிவப்புக்குதிரையோடுகின்றது என்று கிரஹிக்கவேண்டியது, விட்டும் விடாத லக்ஷணையாவது = அந்த இந்த தேவதத்தன் என்றால் ஒருகால் காசியில்கண்ட தேவதத்தனே தொண்சங்காலத்திற்கு பின்பு காஞ்சியில் கண்டேனெனில், அந்தக்கால தேசம் இந்தக் காலதேசத்தோடு சமபந்தித்தல் தசாத்தியமென்று கிரஹிக்கலாம்:

ந—மாயை தத்துவம் என்ற இரண்டு பதங்களின் வாச்சியார்த்தமென்ன? லக்ஷியார்த்தமென்ன?

அ—மாயை, மாயாபிரதிபிம்பன் மாயைக்கிருப்பிடமாயிருப்பதுவும் இம்மூன்றும் சேர்ந்தே தத்பதத்தின் வாச்சியார்த்தம். மேலும் மாத்திரம் தத்பதத்திற்கு லக்ஷியார்த்தம்.

ந—துவம்பதவாச்சியார்த்தமென்ன?

அ—அவித்தை, அவித்தியாபிரதிபிம்பன், அவித்தைக்கிருப்பிடமான சாக்ஷியை தனியம் இம்மூன்றும் சேர்ந்து துவம்பத வாச்சியார்த்தம். சாக்ஷி கூடஸ்த சைதன்னியமாத்திரம் துவம்பதற்கு லக்ஷியார்த்தம். ஆகவே தத்துவம் பதவாக்கியார்த்தத்தை பிரதிபாதிப்பதில் வாச்சியார்த்தமானது ஜீவேசுவரர்களுக்கு விரோதமானபடியால், அவர்களுக்குள்ள விருத்தாம்சத்தைத்தள்ளி அவிருத்தாம்சமான பிரம்மசைதன்யமும் கூடஸ்த சைனியமும் ஒன்றானபடியினால் பிரம்மம் கூடஸ்தன் இவர்களை லக்ஷியமாகச்செய்து அகண்டார்த்தமாகிய ஐக்கியமே. அதாவது மாயை அவித்தை இந்த உபாதியைத் தள்ளுவதினால் சச்சிதானந்த சுவபாவ ஆத்மவஸ்து ஒன்றே மிஞ்சும்.

ந—பரமாத்மா முன்சொன்ன சரீரத்திரிய லக்ஷணமென்றும், அவஸ்தாத்திரிய சாக்ஷியென்றும், பஞ்சகோச வியதிரிக்தனென்றும், சச்சிதானந்த ஸ்வரூபனென்றும் நான்குவித லக்ஷணம் சொல்லுவானேன்? அவற்றின் விவரம் எப்படி?

அ—சரீரத்திரய விலக்ஷணமும், பஞ்சகோசவியதிரிக் தத்துவமுமே, அதத்வியாவிருத்தி லக்ஷணம், அவஸ்தாத்திரய சாக்ஷித்துயம் தடஸ்தலக்ஷணம். சச்சிதானந்தம் சுவரூப லக்ஷணம்.

ந—அதத்துவிய விருத்திலக்ஷணமென்றாலென்ன?

அ—ஆகாசம் முதல் சரீரம்வரையில் காணப்படுகிற வஸ்துக்களோ இதல்ல இதல்லவென்று தள்ளி மிஞ்சினவஸ்து எதுவோ அதுவே ஆத்மா.

ந—ஆத்மவஸ்து எது?

அ—இந்த பிரபஞ்சத்துக்கு இருப்பிடமாயிருப்பதெதுவோ அதுவே.

ந—சுவரூபலக்ஷணமெது?

அ—தடஸ்தலக்ஷணம் சச்சிதானந்தம் பூரணம், நித்தியம் ஆத்மவஸ்துவே.

ந—சரீரத்திரயமெவை?

அ—ன்தூல சூக்ஷ்ம காரணமென்பவையே.

ந—ஸ்தூலதேகமெது?

அ—எல்லோருக்கும்பிரத்தியக்ஷமாயும் அவயவங்களோடும்கூடியதாயுமிருப்பது.

ந—சூக்ஷமதேகமெது?

அ—பதினேழு அவயவங்கள் கூடியதே.

ந—காரணசரீரமெது?

அ—அக்ஞானமே.

ந—சரீரமென்றாலென்ன?

அ—கிடக்கிற வஸ்துக்களே.

ந—ஸ்தூலசரீரம் தான் அன்னபானாதிகள் இல்லாவிட்டாலும், வியாதி முதுமையாதிகளில் நசிக்கும், சூக்ஷமசரீரம் காரணசரீரம் எப்படி நசிக்கும்?

அ—சூக்ஷமதேகத்திற்கு இராகத்துவேஷாதி அந்தக்கரண விருத்தியினால் விரிதலும், அல்லது வளர்தலும், சுருங்குதலுமுண்டு. இப்படிச்சுருங்குதலே நசித்தல். காரணசரீரத்திற்கு "நான் ஜீவன்" என்கிறதே விருத்தி நானே பிரமமாயிருக்கிறேன் என்பதை சுருங்கல். அதுவே நசித்தலாம்.

ந—சரீரம் என்ற பெயருக்கு இப்படி பொருள்செய்தீர். சிலர் இதை தேகம் என்கிறார்களே அதற்கெப்படி சமாதானம்?

அ—தெரிக்க (எரிக்க)ப்படுகிற தெதுவோ அதுவே தேகம் என்று சொல்லிலக்கணத்தில் காணலாம்.

ந—அப்படியானால் ஸ்தூலதேகத்தை அக்கினி எரிப்பது பிரத்தியக்ஷம். சூக்ஷ்ம காரணதேகங்களை எப்படி அக்கினியினால் எரிக்கக்கூடும்?

அ—தாபத்திரியம் என்னும் (எரிச்சலினால்).

ந—தாபத்திரியமென்றாலென்ன?

அ—மூன்றுவித தாபம், எரிச்சலும் துன்பமே.

ந—அம்மூன்றும் எவை? விவரப்படுத்தும்

அ—அத்யாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம்=இவைகளில் அத்தியாத்மிகம்ஜ்வரம் தலைவலி முதலியன. ஆதிதெய்விகம் தெய்வச்செயலாலுண்டாகும் இடி புசல்முதலானதுகள், ஆதிபௌதிகம் புலிமுதலானதுகளால் உண்டாகும் துன்பங்கள்.

ந—சூக்ஷமதேகத்திற்பதினேழு அவயவங்கள் கூடியதென்று முன்சொன்னீரே அந்த விவரமெப்படி?

அ—காது துவக்கு கண் நாக்கு மூக்கு கூடிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், ஸப்தம், ஸ்பரிசம், ரசம், ரூபம், கந்தம் கருமேந்திரியங்கள் ஐந்தும், பிராணன்களைந்தும், மனம் புத்தியென்பவைகள் கூடியதே சூக்ஷமசரீரம்.

ந—பிராணன் என்பது என்ன? எத்தனைவகை?

அ—உச்சுவாசம் நிச்சுவாசம் முதலிய வியாபாரங்களினாலே சரீரத்தை தரிக்கிற சக்தியைகொடுப்பதாலே பிராணன். அந்த பிராணன், அபானன், வியானன் உதானன் சமானன் என ஐந்துவகையாம்.

ந—மனம் என்றாலென்ன?

அ—விசாரரூப சுவரூபமான அந்தக்கரண விருத்தியே.

ந—புத்தியென்றாலென்ன?

அ—நிச்சயஸ்வரூபமான அந்தக்கரண விருத்தியே.

ந—ஆத்மா சச்சிதானந்த சுவரூபமென்று சொன்னீரே அதன்பொருளென்ன?

அ—சத், என்றால்=பாதிக்கப்படாதது; சித், என்றால்=சுயப்பிரகாசமானது; ஆனந்தம், என்றால்=இயல்பாகவே.

கே—அப்படியா! சித்திற்கும் ஜடத்திற்கும் விலக்ஷணமென்ன?

அ—சித்தென்பது ஆதித்தன் முதலான அன்னிய பிரகாசத்தை வேண்டாமல் தன் இயற்கை பிரகாசத்திலுலேயே பிரகாசித்துக் கொண்டும், தன்னிடத்தில் ஆரோபிக்கப்பட்ட ஜடத்தையும் பிரகாசிப்பிக்கிறதாயும் இருக்கிறதெதுவோ அதுவே சித்து. ஜடலக்ஷணமாவது—இயற்கையாக பிரகாசமற்றதாயும், வேறுவஸ்துக்களே பிரகாசிப்பிக்கும் சக்தியற்றதாயும் இருப்பதெதுவோ அதுவே ஜடம்.

கே—ஆனந்தத்திற்கும் அக்கத்தக்கும் லக்ஷணமென்ன?

அ—ஆனந்தமெனில் உபாதியற்றதாயும், நிரதிசயமாயும், நித்தியமாயும் இருக்கிற அமிர்தம்போன்ற சுகமேயாம். அதற்கெதிர்மறையாயிருப்பதுவேதுக்கம்.

கே—ஆத்மாவுக்கு அவஸ்தாத்ரயலக்ஷணமெப்படி?

அ—ஜாக்ரத சுவப்ன சுஷுப்தியென மூன்று அவஸ்தைகளுண்டு.

கே—ஆத்மாவுக்கு இம்மூன்று அவஸ்தாத்ரியமெப்படிவந்தது?

அ—ஆத்மாவினிடம் சாக்ஷிலக்ஷணமிருப்பதினுலே.

கே—சாக்ஷிலக்ஷணமென்றுலென்ன?

அ—ஒருவன் வேறொருவனையும் அவனுடைய அவஸ்தை அவ்வவஸ்தையின் வியாபாரங்களையும்தான் விகாரமடையாமல் சோக்கப்பட்டதுபோல ஜீவாத்மாவும் ஸ்தூலசரீராபிமானியாகி ஜாக்ரதாவஸ்தையில் மூன்று விதகரணங்களின் வியாபாரத்துடன்கூடி விசுவனை என்ற பெயரையும், சூக்ஷ்மசரீராபிமானியாகி ஸ்வப்னவஸ்தையில் மனோமயமான மூன்று விதகரணங்களுடைய வியாபாரத்தினுல் தைஜஸன் என்ற பெயரையும், பிறகு காரணசரீராபிமானியாகி சுஷுப்தி அவஸ்தையில் நிர்விதகரணங்களே அடக்கிக்கொண்டு பிராக்ஞன் என்கிற பெயரைப்பெற்றும், இப்படி ஆத்மாவானவன் கூடஸ்தனுகவும் ஆகாசம் போலொட்டாதவனுகவும் மூன்று அவஸ்தைகளில் பிரதியக் சைதன்யமாய் இருக்கிறதுவே சாக்ஷிலக்ஷணம்.

கே—அவஸ்தையை அனுபவிக்கிறவனிடம்தான் சாக்ஷித்துவம் காணப்படுகிறது அப்படிக்கிருக்க அவஸ்தாசாக்ஷித்துவம் அந்நியனிடம் இருக்கிறதைப்போலல்லவா ஏற்படுகிறது.

அ—இந்த அவஸ்தையையுடையவன் அந்தக்கரணத்தில் பிரதிபிம்பித்த சைதன்யபாசனே. அவன் பொய்யானவன், அவன் ஜீவனென்ற சொல்லப்படுகிறான், ஜீவன் விகாரி, ஆத்மாவோ நிர்விகாரி; ஆகவே, ஆத்மாவுக்கே சாக்ஷித்துவம் பொருந்தும்.

கே—ஆத்மா நிர்விகாரி என்று எப்படி தெரியும்?

அ—அந்தக்கரண பிரதிபிம்பத்தினுல் அறியக்கூடும்.

கே—இந்த அந்தக்கரணமும் இதன் பிரதிபிம்பமான ஜீவன் ஆத்மாவை அறியாதோ?

அ—அறியாது. எனெனில் அறியப்படுகிற யாவும் நிருமை, (பார்க்கப்படுகிற வஸ்துக்கள்) ஆத்மா நிருக்ஞபம், அதாவது பார்க்கிற [illegible] பலன்.

ந—அதெப்படி ஐயா?

அ—காணப்படுகிற உடம்பு காணுகிறவனே பறியமாட்டாது; ஆனால் காணுகிறவனே சுயம் பிரகாசனுபடியால் தன்னைத்தான் அறிகிறான். ஆகவே காணப்படுகிற அகங்காரமும், அதன் அவஸ்தை, வியாபாரங்கள் ஆத்மாவைத் தொடமாட்டா. இப்படி ஆத்மாவை கேவலம் அவஸ்தாதிரிய சாக்ஷியாக அறிபவனே ஜீவன்முக்தன்.

ந—கோசமென்றால் என்ன?

அ—கோசமென்றால் சத்தியை உறையும், மாம்பழத்தைத் தோலும், மனுஷ்யனை சொக்காயும், மறைக்கிறதுபோலிருசகும் அன்னமய பிராண்மய மிஜ் ஞானமய ஆனந்தமயமென்னும் கோசங்களைந்தாம்.

ந—இந்த கோசங்களுக்கு ஆத்மா அன்னியன் என்பதெப்படி?

அ—அக்னியை அணுசரித்திருக்கிற புகைக்கு அந்த அக்னிபைத்தவிர வேறே இருப்பு இல்லாவிட்டாலும், அந்த புகையானது அந்த அக்னியை மறைக்கிறதுபோல; ஆத்மாவின் இருப்பையே இருப்பாக உடைய கோசங்கள் ஆத்மாவை மறைக்கிறதாக ஆரோபிக்கப்படுகின்றன. ஆனால் மண்ணினிடத்தில் ஆரோபிக்கப்பட்ட குடத்தினுடைய ரூபமும் பெயரும் பாதிக்கப்படுகையில் வாஸ்தவமாய் மண்மாத்திரம் எப்படி மிஞ்சுகிறதோ அப்படி ஆத்மாவிடத்தில் ஆரோபிக்கப்பட்ட பஞ்சகோசங்கள் ஆத்ம ஞானத்தினால் பாதிக்கப்படும்போது சச்சிதானந்த ஸ்வரூபமான ஆத்மா ஒருவனே மிஞ்சுகிறான்.

ந—நல்லது, ஆத்மாவின் சச்சிதானந்த ரூபத்துவம் என்னும் ஸத்ரூபம், சித்து ரூபம், ஆனந்தரூப லக்ஷணமெது?

அ—மூக்காலத்திலும், ஒன்றினாலும் பாதிக்கப்படாமலிருந்துக் கொண்டு ஒரே ரூபமாய் இருக்கிறது தான் ஸத் லக்ஷணம்.

ந—ஆத்மா சித்ரூபனென்பதற்கு பிரமாணமென்ன?

அ—தனது இருப்பை விளக்கிக்காட்ட சூரியன் முதலான சாதனங்களை அபேக்ஷியாமல், தானே விளங்கிக்கொண்டும், தன்னிடத்தில ஆரோபிக்கப்பட்ட சகலமான ஜடபதார்த்தங்களையும் பிரகாசிப்பித்துக்கொண்டும் இருக்கிறபடியால் சித்ரூபனெனப்படுகிறான்.

ந—இனி ஆனந்தரூபத்துவமெது?

அ—நித்தியமாயும் நிருபாதிகமாயும் நிரதிசயமாயும் இருக்கிற சுகமெதுவோ அதுவே ஆனந்த ரூபத்துவம்.

ந—அஃதெப்படி ஐயா?

அ—சச்சிதானந்தத்தில் சகலலக்ஷணம் இருப்பதனால் அந்த ஆனந்தமே "நான்" என்று அறிந்துகொள்ளத்தக்கது.

ந—சச்சிதானந்தத்தில் சத்சின்மாத்திரம் மட்டும் காணப்படுகிறதேயன்றி ஆனந்தத்தை அனுபவிப்பதைக் காணவில்லையே?

அ—ஆனால் நீ இரவினால் எழுந்திருந்து முன்னால் "நான் இன்னாரை யில்லை" என்ற சொல்லுவதால் ஆத்மா வக்கு சச்சிதானந்தத்தின் இருப்பைச்சொல்லுகிறான்.

ஈ—நிருபாதிகத்துவமென்ன?

அ—புஷ்ப சந்தன ஸ்திரீமுதலானதுகள் உபாதிகள்; இவைகளால் உண்டாகும் சுகம் ஔபாதிகம், சுஷுப்தியில் இவ்வுபாதிகளொன்றும் காணப்படுகிறதில்லை. அப்படிக்கிருந்தும் சுகமானது எல்லாராலும் அனுபவிக்கிறபடியால் சுஷுப்தியில் நிருபாதிகத்துவ ஆனந்தமிருக்கிறது.

ஈ—நிரதிசயத்துவமாவதென்ன?

அ—மனுஷ்யபர்யந்தம்முதல் ஹிரண்யகர்ப்பானந்தம் வரையில் பதிலோனானந்தங்களிருக்கிறபடியால் அவைகளுக்கு அதிசயத்துவம் உண்டு; ஆனால் இந்த மானந்தம் ஒன்றே எல்லையற்றதாயும், ஒப்பும் உயர்வும் அற்றதாயும் இருப்பதனால் சுஷுப்தி ஆனந்தமாகிய பிரம்மானந்தமே நிரதிசயம்.

ஈ—நித்தியத்துவமாவதென்ன?

அ—ஜாக்கிர சுவப்பனங்களில் அநேக விஷயங்களில் அநேக ரூபமான சுகம் தனித்தனியாக அனுபவிக்கலாம்; ஆனால், சுஷுப்தி சுகமாத்திரம் ஒரே ரூபமுடையதாயும் பூரணமாயும் இருக்கிறது.

ஈ—நாம் சச்சிதானந்த சுவரூபர்கள் என்ற அனுபவம் எப்படி வரும்? அது எப்படிப்பட்டது?

அ—வேதாந்த சாஸ்திர தாத்பரிய நிச்சய ரூபமாகிய சிரவணத்தை குருமுகத்தால் கேட்டும்; அதற்கனுசாரமாய் மனனமும்; மனனானுசாரமாய் நிதித்தியாசனமும் செய்தால் பிறகு சச்சிதானந்த பிரம்மமே "நான்" என்ற ஞானமுண்டாகும்; இதுவே பரோக்ஷஞானம். இத்தப் பரோக்ஷஞானத்தைப் பற்றிய காரியங்களைச் செய்யாதவனுகியும், நான் கருத்தா என்ற நி அபிமானத்தை விட்டவனுகியும், பிரம்மமே நானாக இருக்கிறேன் என்ற அனுபவத்தையும், அநுவிஷயமான பிரயத்தனத்தையும் கருத்திருத்துவத்தையும் விட்டவனுயும், சகலத்திலும் சுஷுப்தியிலிருப்பதுபோல பற்றற்ற சுவபாவமாகிய தோஷணீம் அவஸ்தையில் ஜலத்தில் உப்பு கரைந்துபோன லெப்படியோ அப்படி பிரம்மத்தில் கலந்துப்போன அந்தக்கரணத்தையுடையவனுகியும், நிர்விசேஷஸ்திதியிலிருக்கிறவனுக்கு நிர்விசேஷ ஞானமெதுவோ அது தானுக்கே உண்டாகிறது. இதுதான அபரோக்ஷானுபவம். இந்த அனுபவமெப்போதுண்டாகிறதோ அப்போது அவன் சுவானுபவரூபன் அப்போதுதான் ஆனந்த சுவரூபன். அந்த ஆனந்த அனுபவத்தை அவனே அறிவானேயன்றி மற்றவர்கள் அறியமாட்டார்கள். அந்த ஆனந்தத்தை அறிவிக்க எந்த வேதவேதாந்த சாஸ்திரங்களினுலும் முடியா மனோவாக்குகளாலும் முடியா. இப்படி வாக்குமனதுக்கெட்டாத அகண்டானந்த பிரம்ம சுவரூபானுபவத்திலிருக்கிறபடியால் தன்னுடைய ஆனந்தத்தைத் தானே அனுபவிக்கச்சக்தனுகிறன்.

ஈ—ஆத்மாவின் அகண்டார்த்தத்தைச்சொல்லுங்கள்?

அ—[illegible]

ச—பரிச்சேதமென்றுலென்ன?

அ—இம்பு அல்லத பிரிவு அல்லத பாகம். இந்த தேசகால வஸ்துபரிச்சேத மூன்றும் இயற்கையில் தேசத்திற்கே தனிர பரிபூரணருடைய பிரதியேகாத் மாவுக்குப் பரிச்சேதத்திரயமில்லை ஆகவே, தேசத்திலுலாவது, காலத் திலுலாவது, வஸ்துவிலுலாவது பிரித்த அல்லது பாகிக்கப்படாத தெ தலோ அதலே பிரம்மம். ஆத்மா, சர்வ வஸ்துக்களுகும் ஆத்மாவான படியினல் வஸ்துபரிச்சேதமில்லை.

ச—இவ்வஸ்துக்களெவை?

அ—ஸஜாதியபேதம், விஜாதியபேதம் சுவகதபேதம் என மூன்றுவகை.

ச—அவைகளை விவரப்படுத்தம்?

அ—ஒரு விருகூத்திற்கு மற்றொரு விருகும் ஸஜாதியபேதம்; விருகூத்திற்கும் கல் முதலியன விஜாதியபேதம். ஒரு விருகூத்திற்கு அதன் இலை, பூ, காய், கனி முதலியன சுவகதபேதம். இம்மூன்றுவித பேதங்களும் ஆத்மா வுக்கில்லாதபினல் அதற்கு வஸ்துபரிச்சேதமில்லை.

ச—அதெப்படி? ஒரே சைதன்னியமானது பிரம்மசைதன்னியமாயும், ஈசுவர சைதன்னியமாயும், ஜீவசைதன்னியமாயும் இருக்கச்சே; ஸஜாதியபேத மிருக்கிறதல்லவா? மேலும் ஆத்மஸ்வருபம் பிரம்மமென்றும்; அனாத்மஸ் வருபம் பிரபஞ்சமென்றும் இரண்டுவிதமாக இருக்கச்சே, விஜாதிபேத மிருக்கிறதல்லவா? அன்றியும் பிரம்மத்திற்கு சத்த சித்து ஆனந்தம் என்று மூன்றிருக்கிறபடியால் சுவகதபேதமிருக்கிறதல்லவா? இப்படி மூன்றுவித பேதங்களிருக்க பேதமில்லையென்று எப்படி சொல்லுகிறீர் கள்?

அ—ஆகாசம் ஒன்றுலும் உபாதிபேதத்தினல், மேகாகாசம், மடாகாசம், கடாகாசம் என்ற பேதமாய்க் காணப்படுகிறதைப்போல, சைதன்னியம் ஒன்றுலும் மாயோபாதியினல் பிரமமென்றும்; ஈசுவரனென்றும்; அவி த்தியோபாதியினல் கூடஸ்தன் என்றும் ஜீவனென்றும் ஸஜாதிய பேதம் தோற்றமேதான். மேலும் கயிறன்றி அதில் பாம்பென்கிற தோற்றமெப் படி இல்லையோ அப்படி ஆத்மாவன்றி அனாத்மா இல்லாகையால் விஜாதிபேதமில்லை. அதிஷ்டானத்தைத்தவிர ஆரோபிதமெல்லாம் மித் தையே=பொய்யே. ஆத்மா சாக்ஷிகூடஸ்தன், பாரமார்த்திகன், பிரரக் ஞன், பிரம்மம், சச்சிதானந்த நித்தியன், ஏகன், பூரணன், ஆகவே சுவகத பேதமில்லை.

ச—அப்படியானுல் ஆத்மா சத்சுபன் சித்சுபன் ஆனந்தசுபன் என்று என் அடிக்கடி சொல்லவேண்டும் ஒரே உபதேசம் போதாதா?

அ—ஆத்மா சுவரூபமான சத்தன்மையை ஜகத்திலும், சித்தன்மையை ஜடங்களாகிய புத்தியாதிகளிலும், ஆனந்தத்தன்மையை புத்திர பரியாதிகளிலும், அப்படி யே ஜகத்சுவபாவமாயுள்ள அசத்தன்மையும், புத்தியாதிகளிலுள்ள ஜடத் தன்மையும் புத்திரபரியாதிகளிலுள்ள அசத்தன்மையும் சச்சிதானந்த சுவரூபமான ஆத்மாவினிடத்திலும் பரோக்ஷம் அபரோக்ஷமாய் ஆரோபித படியால் இந்த பிரகாரமாகத்தினல் தொடர்ச்சியாகச் சொல்லவேண்டும்.

ந—கல்வது சத்து தானுகவே விளங்குகிறதா அல்லது மற்றொன்றினால் விளங்குகிறதா?

அ—சத்தே சித்தாகும், சத்தேசித்த சித்தேசத்து, அது தானுகவே விளங்குகிறது.

ந—தானுகவிளங்குகிற சத்தக்கு ஆனந்தத்தை மெப்படி ஐயா?

அ—சத்தக்கிரண்டாவது வஸ்து இல்லாததினால் ஆனந்தத்துவம் பூரணமாக இருக்கிறது. ஆகவே ஒன்றான சத்தக்கு இரண்டாவதில்லாததனால் அத்தவைதத்தவமும் அதினால் பூரணத்துவமும் சித்தம். இப்படிப்பட்ட பரிபூரணனந்த ஆதுமாவுக்கு தக்கம் ஆனந்தகம்; அந்த தக்கம் சரீரத்தினாலும், சரீரம் கருமத்தினாலும், கருமம் இராகத் தவேஷாதிகளினாலும், ராகாதிகள் அபிமானத்தினாலும், அபிமானம் அவிவேகத்தினாலும், அவிவேகம் அக்ஞானத்தினாலும் வந்ததென்று அறிந்த அந்த அக்ஞானத்தை ஞானத்தினாலும் நிவாதனியாக்கவேண்டும். அந்த ஞானமே விசாரத்தினாலுண்டாகிறதென்றும் ஆத்மா சச்சிதானந்த ஸ்வரூபமென்றும் தேகாதிபிரபஞ்சம் அந்த ஜடதக்கரூபமானதென்றும், இந்த பிரபஞ்சமானது அத்தியாரோபமென்றும் விசாரித்து தத்துவம் பதவாக்கியாததத்தினாலுண்டாகும் ஞானத்தினால் "நானே பிரம்மம்" என்கிற தன்னுடைய பரோக்ஷ ஞானானுபவத்தினால் சாக்ஷாத்காரமாகிற அபரோக்ஷ ஞானமெதவோ அதை அடைகிறவனே பரம குருவு எனவும் பரமஹம்ஸனென வும் சொல்லப்படுகிறான், ஆகவே அனைவரும் ஆத்ம தத்துவதைக் கேட்டு மனனம் செய்து. நியானித்த சாக்ஷாத்காரம் செய்தகொண்டு நித்திய சுத்த புத்த முக்த சத்திய பரமானந்த அத்தவைய பிரம்மஸ்வரூபமாய் இருக்க பிரயத்தனஞ்செய்யவேண்டும்.

இந்த அத்தவைத சித்தாந்தத்தை விவரமாக அறிய விரும்புவோர்—பிரம்ம சூத்திரங்கள், பகவத்கீதை, ஞானவாசிஷ்டம், கைவல்லியம விவேகசூளாமணி, தொராமாஞ்சனேய சம்வாதம, ராமஸ்தவராஜஜியம், வேதாந்தசாரசங்கிரகம், விஷ்டானுபூதி முதலான கிரந்தங்களை பரிசோதிக்கவேண்டும்.

What does the Advaitist declare?

"He says, if there is a God, that God must be both the material and the efficient cause of the universe. Not only is He the Creator, but He is also the created. He Himself is this Universe. How can that be? God, the pure, the spirit, has become this universe? Yes; apparently. That which all ignorant people see, this universe, does not exist. You and I and all these things we see, what are these? Mere self-hypnotisms; there is but One Existence, the Infinite, the ever-existing One. In that Existence we dream all these various dreams. It is the thing beyond all, the Infinite,

beyond the known, beyond the knowable; in and through That we see this universe. It is the only Reality. It is this table; It is the audience before me; It is the wall. It is everything, minus the name and form. Take the form of the table, take away the name; what remains is that It. The Vedantist does not call It either He or She; these are fictions, delusions of the human brain; there is no sex in the soul. People who are under illusion, who have become like animals, see a woman or a man; living gods do not see men or women. How can they who are beyond everything have any sex idea? Every one and everything is the *Atman*—the Self—the sexless, the pure, the ever blessed. It is name and form that makes the difference. It is the name, the form, the body, which are material, and they make all this difference. If you take off these two differences of name and from the whole universe is One; there are no two, no three, but One everywhere. You and I are one. There is neither nature, nor God, nor the universe, only that One Infinite Existence, out of which, through name and form, all these are manufactured. How to know the Knower? It cannot be known. How can you see your own Self? You can only reflect yourself. So all this universe is the reflection of that One Eternal Being, the *Atman*, and, as the reflection falls upon good or bad reflectors, good or bad images are cast up. So, in the murderer, the reflector is bad and not the Self.

In the saint the reflector is pure. The Self—the *Atman*—is by its own nature pure. It is the same that is reflecting itself from the lowest worm to the highest and most perfect beings, the One Existence of the Universe. The whole of this Universe is One Unity, One Existence, physically, mentally, morally and spiritually. We are looking upon this One Existence in different forms and creating all these images upon it. To the being who has limited himself to the condition of man this world is what he sees. To the being who is on a higher plane of existence it may become like heaven. There is but one Soul in the universe, not two. It neither comes nor goes. It neither

re-incarnates nor dies, nor is born. How can it? How to die? Where to go? All these heavens and all these earths, and all these places are vain imaginations of the mind. They do not exist; never existed in the past and never will exist in the future.

I am standing here, omnipresent, eternal. Where can I go? Where am I not already? I am reading this book of nature. Page after page I am finishing and turning over, and one dream of life goes away. Another page of life is turned over; another dream of life comes, and it goes away, rolling and rolling, and when I have finished my play I let it go and stand aside, throw away the book, and the whole thing is finished. What does the Advaitist preach? He dethrones all the Gods that ever existed, or ever will exist in the Universe and places on that throne the Self of man, the *Atman*, higher than the sun and moon, higher than the heavens, more infinite than this infinite Universe itself. No books, no Scriptures, no science can ever imagine the glory of that Self, that appears as man, the most glorious God that ever was, the only God that ever existed, ever exists, or ever will exist. I am to worship, therefore, none but my Self. "I worship my Self." says the Advaitist. Whom to bow down to? I salute my Self. Whom to go to for help? Who can help me, the infinite being of the Universe?

These are fools' dreams, brain hallucinations; who ever helped any one? Never. Wherever you see a weak man, a dualist, weeping and wailing for help from somewhere above the skies it is because he does not know that the skies also are in him. He wants help from the skies, and the help comes. We see that it comes; but it comes from within, and he mistakes it as coming from without. Sometimes a sick man is lying on his bed, and he hears a tap on the door. He gets up and opens the door. Nobody. He goes back to his bed, and again he hears the tap. He gets up and opens the door. Nobody. At last he finds that it was his own heart beating, which he interpreted as a knock

at the door. Thus all this vain search after the Gods above, Gods of the skies, Gods of the water, after it has completed the circle, comes back to the point from which it started—the human soul—and man finds that the God for whom he was searching in every hill and dale, for whom he was seeking in every little brook of water, in every temple, in little churches, in worse heavens, that God whom he was even imagining as sitting in heaven and ruling the world, is his own Self. I am He, and He am I. Non but I was the God, and this little I never existed.

Yet, how could that perfect God have been in this delusion? It never was. How could a perfect God have been dreaming? He never dreamed. Truth never dreams. One cloud is there; another comes and pushes it aside and takes its place. Another comes and pushes that one out. The very question where did this illusion arise is absurd. Illusion arises from illusion alone. There will be no illusion as soon as the truth is seen. Illusion always rests upon illusion; it never rested upon God, the Truth, the *Atman*. You are never in the illusion; it is illusion that is in you, before you. "As before the eternal blue sky clouds of various hue and color come; they remain there for a short time and again disappear, leaving it the same blue, eternally standing, even so are you, eternally pure, eternally perfect; you are the veritable Gods of the Universe; nay, there are not two; there is but One." It is a mitake to say you and I; say "I." It is I who am eating in millions of mouths; how can I be hungry? It is I who am working in an infinite number of hands; how can I be inactive? It is I who am living the life of the whole Universe; where is death for me? I am beyond all life, beyond all death. Where to seek for freedom, for I am free by my nature? Who can make me bound, the God, of this Universe? What are these books for me? These Scriptures of the world are but little maps, wanting to delineate my glory, who am the only existence of the universe. Thus says the Advaitist." *The Awakened India*, by Swami Vivakanada, Page 48.

சுருதிகளில் சில அத்துவைத சித்தாந்தத்தைச் சார்ந்தவைகளாய் இருப்பதாக சிலர் எண்ணி இருப்பதால், அந்த சித்தாந்த சாரசங்கிரஹத்தை சுருக்கமாக காட்டினேம். இனி சுருதிகளில் விசிஷ்டாத்துவைத சித்தாந்தத்தை ஸ்தாபிக்கும் சுருதிகளைப்பற்றி விசாரிப்போம்.

(27). பிருஹதாணிய உபநிஷத்து.

ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே குஹாம்
பரவிஷ்டௌ பரமே பராததே ; சாயாதபௌ
பரம்மவிதோவதந்தி டஞ்சாக்நயோ
யேசத்ருணசிகேதாஹ.

பொழிபுரை.

ஜடசரீரத்தில் சிறந்தவிடத்தில் இருவர் (ஜீவாத்மா பரமாத்மா) இருக்கின்றனர். அவர்களில ஒருவர (ஜீவாத்மா) தமது செய்கைகளுக்குரிய பயனை அனுபவிக்கிறார். மற்றொருவர் (பரமாதத்துமா] பலன்களைக் கொடுக்கிறார். பிரமஞானிகளும, ஐந்து அக்கினிகளை வளர்பவர்களும், திரிணசிகேதாக்களும் அவர்களை நிழலும் ஒளியும் போல பரஸ்பரம் அதி சமீப சம்பந்த முடையவர்களென்றும, வேறுவேறானவர்களென்-றும் உறைக்கின்றனர்.

விசேஷ உரை.

ஜீவாத்துமாவும் அதற்கு ஆச்சிரயஸ்தானமாகிய பரமாத்துமாவும் இரண்டும் அசித்தாகிய சரீரத்துக்குள்ளே இருக்கின்றன. அவைகளிரண்டும் ஐயமற்ற புத்தி பூர்வகமாக அடையப்படுகின்றன. நிழலும் ஒளியும் எப்படி ஒன்றுக்கொன்று வேறானபொருளோ, அப்படியே ஜீவாத்மா பரமாத்துமாக்களும் வேறுவேறான பொருள்கள். எப்படி ஒளியின்றி நிழலிருக்க முடியாதோ; அதுபோல, பரமாத்துமாவின் சம்பந்த மில்லமால் ஜீவாத்துமா இருத்தல் கூடாது. பரமாத்துமா உயிர்களுக்கு அவரவரது செய்கைகளுக்குத் தக்க பலன்களைத் தருகின்றார். ஜீவாத்துமா அந்தப்பலன்களை அனுபவித்துக்கொண்டு வாழ்ந்திருக்கின்றது. கேவலம் தத்துவதரிசிகளாகிய பிரமஞானிகள் மாத்திரம் (ஜீவாத்துமா பரமாத்துமா) இரண்டையும் இவ்விதமாக வேறு இயற்கையை உடையனவாக நிச்சயஞ்செய்திருக்கிறார்களென்பதில்லை. அக்கினிஹோத்திரம் செய்பவர்களும் இவ்விமாக உரைத்துக்கொண்டிருக்கின்றனர்.

There are two Beings (God and Soul) residing in the inmost recess, which is in the most superior part of the body. One of them enjoying the fruits of actions in this world and the other awarding the same. The knowers of God represent them to be as light and shadow. So also they represent who pay oblations to the five sorts of fire, and they who have thrice ignited Nachiketio fires.

விசிஷ்டாத்துவைத சித்தாந்தம்.

——:o:——

இந்த விசிஷ்டாத்துவைத சித்தாந்தத்தை பரதவருஷத்தில் பிரபலமாக்கினவர் ஸ்ரீ இராமானுஜாசாரியார். இவர் கி-பி-1017-வும் அல்லது கலியுகாப்தம் 4118-க்கு பிங்கள-வு சித்திரை-மீ சென்னைக்கு 26-மயில் தூரத்திலிருக்கும் ஸ்ரீ பெரும்பூதூரில் பிறந்தவர். இவர் தந்தையார் கேசவஸோமயாஜியானவர் யஜுர்வேதி, ஆபஸ்தம்ப சூத்திரதத்தைச் சார்ந்தவர். இவர் தாயார், காந்திமதி தேவியார். இவர் தனது பதினைந்து வருஷங்கள்வரையில் தம் வீட்டிலேயே வேதவேதாந்தங்களோவாசித்துக்கொண்டிருந்தும், பிறகு காஞ்சீபுரத்துக்குப்போய் யாதவ பிரகாசமிசாரிடம் தர்க்க சாஸ்திரங்களோ வாசித்து அவரது ஸ்வரூப அத்துவைத சித்தாந்தம் தமக்கு சம்மதிக்கொடாமையால் அவரை விட்டு (1) பகவத் போதாயனர், (2) திரமிதாசாரியர், (3) தனகாசாரியர் அல்லது பிரம்மாநந்தி, (4) குஹதேவாசாரியர் (5) ஆசாரிய பஹ்ருதி, (6) ஆசாரிய காபார்த்தி, (7) ஸ்ரீ காதமுனிகள், (8) யாமுனாசாரியர், முதலானவர்களுடைய விசிஷ்டாத்துவைத சித்தாந்தத்தில் பற்றுள்ளவராகி அபயப்பிரதாந ஸ்ரீரங்கத்திலிருந்த யாமுனாசாரியரை காடினர்; அங்கு வந்த பிறகுதான் அவர் பரமபதத்திற்கு எழுந்தருளவே, அவருடைய முகவிபரீதியை யாமுனாசாரிய ரென்னும் பெரியகம்பிகளே ஆச்ரயித்து விசிஷ்டாத்துவைத சித்தாந்தத்தை தெள்ள தெளிய கற்றுக்கொண்டார். இவர் முதலில் இல்லறத்தில் இருந்தாலும் தம் பதினெட்டாம் வயதில் அதைவிட்டு சந்நியாச ஆச்ரமத்தில் புகுந்து உலகத்தாருக்கு இந்த விசிஷ்டாத்துவைத சித்தாந்தத்தை போதித்து தமது 120-வது வயதில் பரமபதமடைந்தார். இவரியற்றிய பிரம்மசூத்திரபாஷ்யம், (2) வேதாந்ததீபம், (3) வேதாந்தசாரம், (4) வேதார்த்தசங்கிரகம், (5) கீதாபாஷ்யம் (6) சத்தியதிரியம், (7) நித்யகிரந்தம் என்பவை ஆழ்ந்த கருத்துகளுள்ள தத்துவ சாஸ்திரங்கள். இந்த விசிஷ்டாத்துவைத சித்தாந்தத்தை பலர் பல பெரிய கிரந்தங்களாக எழுதி இருக்கின்றனர். சாதாரண வாலிபர்களும் சுலபமில் அறிந்துய்யுமாறு இங்கு சங்கிரகமாகவும் விளவிடையாகவும் பதிபபிக்கின்றனம்.

காம் (ஒரு விசிஷ்டாத்துவைதியைப்பார்த்து)

ஐயா—விசிஷ்டாத்துவைதமென்றாலென்ன ?

(என்றுகேட்டால் அதற்கு அவர் சொல்லும் விடையாவது)

வி—அது விசிஷ்ட + அத்துவைதம் என்ற இரண்டு பதங்களால் ஆகிய வார்த்தை ; அத்துவைதம் எனில் ; இரண்டற்றது = ஒன்றேயுள்ளது, விசிஷ்டமெனில் = சித்து, அசித்து சாரீரமாகக் கொண்டிருக்கிறதென்றும்

விசேஷணத்தைக் காட்டுவதாம்; ஆகவே, விசிஷ்டாத்வைதமெனில், சித்து + அசித்து சேர்க்கையினால் பிரகாசிக்கும் இரண்டற்ற ஒன்றான பரபிரம்மம் உண்டென்று ஸ்தாபிக்கும் சித்தாந்தமேயாம்.

ந—இந்த விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் முக்கிய கருத்தென்ன?

வி—பரப்பிரம்மம் ஒருவரே நித்தியமாக இருக்கிறார் என்பதாம்.

ந—அவர் எப்படிப்பட்டவர்?

வி—அவர் நித்தியமாயும், சத்தியமாயும், ஞானமயமாயும், ஆனந்தமாயும், வியுவாயும், சர்வக்ஞராயும், சர்வசக்தியுடையவராயும் பிரபஞ்சத்தின் உபாதான காரணராயும், சஹகாரிய காரணராயும் இருக்கிறார்.

ந—அவருடைய நாமங்கள் எவை?

வி—வேதங்களில் அவரை சத்து என்றும், ஆத்மா என்றும், பிரம்மம் என்றும், ஈச்சுவரர் என்றும், ஈசர் என்றும், விஷ்ணுவென்றும் நாராயணரென்றும், வசுதேவரென்றும் புருஷோத்தமரென்றும் பின்னும் பல பெயர்களாலும் புகழப்பட்டிருக்கின்றன.

ந—அவர் எப்படிப்பட்டவர்?

வி—அவர் (சித்து)=ஆத்மா (அசித்து)=அனாத்மா என்னும் நித்தியப்பொருள்களோடு சதா சேர்ந்திருக்கிறார். இந்தச் சேர்க்கையினால் மாத்திரம் அறியக்கூடியவராக இருக்கினும்; அவர் பிரகிருதிவசப்பட்டவர், அவர் சித்து, அசித்துக்களுக்கு வேறாகவும், ஞானத்மகமாகவும் இருக்கிறார்.

ந—பரமாத்துமா ஒருவரே நித்தியமானவரென்று முன் சொன்னீர்களல்லவா? இப்போது, சித்தும், அசித்தும் நித்தியப்பொருள்களென்று சொல்லுகிறீரே, இது எப்படி சாத்தியமாகும்?

வி—பரமாத்துமா ஒருவரே நித்தியரும், சுதந்தராமுமுடையவர்; மற்ற சித்தும், அசித்தும் பரதந்திரமுடையவை. இந்த சித்தும், அசித்தும், பரப்பிரம்மமுமாகிய மூன்றும் தனித்தனியானவைகளாக இராமல், ஒரு பதார்த்தமும் அதன் குணங்களும் கலந்திருப்பதைப்போல; அதாவது—ஒருகடித்தில் அதன் வடிவமும் கருணமும் சேர்ந்திருப்பதைப்போல பரமாத்துமா சித்து அசித்தோடு சேர்ந்து இருக்கிறார்.

ந—இம்மூன்றின் சம்பந்தத்தைப்பற்றி வேதங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

வி—பரப்பிரம்மமாகிய சாரீரிக்கு, சித்தும் அசித்தும் சாரீரமாக இருக்கிறதென்றும்; சரீரி இல்லாமல் சரீரமும், சரீரம் இல்லாமல் சரீரியும் இருத்தல் அசம்பாவதமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ந—உபநிஷத்துக்களில் சரீரத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறதற்கு இதுதானா பொருள்?

வி—உபநிஷத்துக்களில் சரீரம் என்னும் பதத்தை மானுஷீக சரீரத்தைப் போன்றவைகளைப்பற்றிச் சொன்னதல்ல; சரீரியின் விலக்ஷணத்தைப்பற்றியே சொல்லப்பட்டிருக்கின்றது. சாரீரமென்றால்=அபிரதாக சித்தமென்றும், அது சேர்க்கையினால் அபிரதாக சித்தியென்றும், அதாவது ஒக்கால

மும் பிரிக்கக்கூடாமலும்; சதாகாலமும் சேர்ந்திருப்பதால், சித்து, அசித்து ஈசுவரன் என்பவைகள் எப்போதும் பிரிக்கக்கூடாதபடி சேர்ந்திருக்கிறதென்பது கருத்து.

ர—இந்த மூன்றுக்குள் பேதாபேதங்களுண்டோ ?

வி—அவுபாதிக மாயாகிருத வித்தியாசங்கள் தவிர வேறு வித்தியாசங்கள் இல்லை. சித்து, அசித்து, ஈசுவரனுகிய மூன்றும் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பது சத்தியம்; அந்த சம்பந்தத்தினால்தான் பிரம்மத்தை அறியக்கூடும். இதை ஏகத்தவமென்று வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தச்சித்து, அசித்து ஆகிய இரண்டுக்கும் இடையில் ஈசுவரன் நியாயகமாக இருந்து பிரகாசிக்கின்றார்.

ர—இந்த சித்தாந்தம் அத்துவைத சித்தாந்தத்தை ஸ்தாபிக்கிற உபநிஷத்துக்களுக்கு விரோதமாயிருக்கிறதல்லவா ?

வி—இல்லை. அசித்து, சித்து, ஈசுவரனுண்டென்னும் சித்தாந்தத்தையும், இந்த அசித்தும், சித்தும் பரபிரம்மத்துக்கு சாரீரமாக இருக்கிறதென்று ஸ்தாபிக்கிற உபநிஷத்துக்களும் இருக்கின்றன; ஆகவே, உபநிஷத்துக்களில் ஒன்றுக்கொன்று விபரீதமான வாக்கியங்கள் இருப்பன பிரத்தியக்ஷம். அசித்தும் சித்தும் சேர்க்கையே பரபிரம்மத்தின் இலக்ஷணமென்றும், பிரம்மம் இவ்விரண்டிற்கும் நியாயகமாக இருக்கிறதென்றும் கொள்ளும் பக்ஷத்தில் உபநிஷத்துக்களின் கருத்துக்களை சமரசப்படுத்தலாம்.

ர—வேதங்களில் பரப்பிரம்மம் நிற்குணமானது என்று சொல்லியிருக்கிறதல்லவா ?

வி—ஆம். அதனால் பரப்பிரம்மமாகிய நித்தியவஸ்து நிற்குணமானதென்பதல்ல, ஆனால்மனவஜாதியாருக்கு இருக்கும்படியான பிராகிருதசம்பந்தமானவும், பரதந்திரமும், அபரிபூரணமுமான ஹேயகுணங்கள் இல்லை என்பதே கருத்து.

ர—குணங்களென்றாலென்ன ?

வி—பிரகிருதி சம்பந்தமான சத்துவ ரஜஸ் தாமசமென்பனவுகளே. இப்படிப்பட்ட பிரகிருதி சம்பந்தமான குணங்கள் பரப்பிரம்மத்துக்கு இல்லை.

ர—பிரம்மத்துக்கு பெயரும் இல்லையல்லவா?

வி—ஆம்; ஆனால் அவரை அக்கினி இந்திராதி சாதாரணபெயர்களாலும்; விஷ்ணு, நாராயணன், வாசுதேவன் என்றாதி விசேஷ பெயர்களாலும் பிரஜைகள் பிரார்த்திக்கலாம்.

ர—பரபிரம்மத்துக்கு ரூபமும் இல்லையல்லவா?

வி—ஆம்; அதற்கு ரூபம், விக்கிரகம், வருணமுதலான தகளுமில்லை. அது எங்கும்நிறைந்தும், எங்கும் பிரவேசித்தும், எல்லையற்றும் இருப்பதால், எவ்வித ரூபமுமில்லை. ஆனால் அந்த பரப்பிரம்மத்திற்கு இச்சையுண்டானால் எந்தவித ரூபமாகவாகிலும், எந்தவித வருணத்திலாகிலும் அவதாரமெடுக்கலாம்.

ர—இப்படி அவதாரமெடுப்பது கர்மத்தினாலா?

வி—அல்ல.

ச—இப்படி எங்கும் அவதாரம் பிராணிருத சம்பந்தமானதா?

வி—அல்ல. சுத்தசத்துவ குணத்தோடு கூடியது.

ச—இந்த அவதாரத்தால் என்னபிரயோஜனம்?

வி—ஸ்வரூபமற்ற பிரம்மத்தைப்பற்றி மனதிலுல்தியானிப்பதகஷ்டமாகையால் யோகிகள் தியானிக்கும்பொருட்டு யாதாவது ஒரு அவதாரமாக வினங்குகிறார்.

ச—அதித்த எப்படி இருக்கிறது?

வி—அது காலம், மூலபிரகிருதி, சுத்தசத்துவம் என மூன்றுவிதங்களாக இருக்கின்றது.

ச—காலமென்றாலென்ன?

வி—அது எங்கும் நிறைந்து,நிரந்தரமாக எல்லாவித மாறுதல்களைச் செய்யும் காரணமேயாம். ஆனால் காண்டகாலம் என்பது கிரஹாதிகள் ஒன்றையொன்றுசுற்றுவதனாலாகும் ஓறை, நாள், யுகம், கல்பங்களைப்போன்றவை நிரந்தரமானவைகளல்ல.

ச—மூலப்பிரகிருதி அல்லது இயற்கை என்றாலென்ன?

வி—ஒரு பாத்திரத்திற்கு களிமண் எப்படி உபாதானகாரணமோ, அப்படி மூலபிரகிருதியே இந்த பிரபஞ்சத்துக்கு உபாதானகாரணம். அது சித்து என்னும் ஜீவாத்துமாவுக்கும், பரமாத்துமாவுக்கும் வித்தியாசமானது. என்றும் எப்போதும் ஆதியந்தமற்றும் தனியேகமானதாயிருக்கிறது. அப்படி இருக்கினும், அது பரப்பிரம்மதுக்கு கீழ்ப்பட்டதாம்.

ச—இந்த மூலப்பிரகிருதிக்கு வேதத்தில் வேறுபெயர்களுண்டோ?

வி—இந்த இயற்கையாகிய மூலப்பிரகிருதிக்கு அவியக்தமென்றும், பிரகிருதியென்றும், பிரதானமென்றும், தாமஸம், அக்ஷரம், பிரம்மம் என்றும், மாய்கையென்றாதி பெயர்களால் வழங்கிவரப்படுகிறதன்றியில் அது சத்துவ, ராஜஸ, தாமச குணங்களுக்கு நிதானமாக இருக்கிறது.

ச—அது முதலில் என்னமாக மாறுகிறது?

வி—முதலில் மஹத்தாக (புத்திஸ்வரூபமாக) மாறுகிறது.

ச—இந்த மஹத்திலிருந்து உண்டாகும் மாற்றமென்ன?

வி—அஹங்காரம்.

ச—இதில் பேதங்களுண்டோ?

வி—சாத்வீகம் அல்லது வியவஹாரிகஅஹங்காரம்; இராஜசம் அல்லது தியாஜச அஹங்காரம். தாமஸ அஹங்காரம் அல்லது பூதாதி அஹங்காரமென மூன்று பேதங்களுண்டு.

ச—இந்த மஹத்தினுடையவும், அஹங்காரத்தினுடையவும் சுபாவங்களென்னவை?

வி—பூமியிலிருந்து வெட்டி எடுக்கும் களிமண்ணானது ஒரு பாத்திரத்தைச் செய்வதற்குமுன்தி பலவித வேறுபாடுகளுக்கு உட்படுவதைப்போலவே இந்தப்பிரபஞ்ச தோற்றமாவதற்குன் பலவித மாறுபாடுகளைப் பெறுகின்றது:

ந—சாத்துவீக அஹங்காரத்திலிருந்து என்ன உற்பத்தியாகின்றன.

வி—(1) மனம் அல்லது அந்தக்கரணம். (2) கிராணம், ஜிஹ்வை, சக்ஷுஸ், த்துவக்கு, சோத்திரம என்னும் ஞானேந்திரியங்களும், உபஸ்தம், பாயு, பாதம், பாணி, வாகு, என்ற கர்மேந்திரியங்களும உண்டாகின்றன.

ந—தாமஸ அஹங்காரத்திலிருந்து என்ன உற்பத்தியாகின்றன.

வி—கந்தம், ரசம், ரூபம், ஸ்பரிசம், ஸப்தம் என்ற பஞ்சபூசங்களின் லக்ஷணங்களாகிய பஞ்ச தனமாத்திரைகளுண்டாகின்றன.

ந—பஞ்சபூதங்களெவை ?

வி—ஆகாயம், வாயுவு, தேஜசு, அப்பு, பிருதிவி என்பவைகளே.

ந—இராஜச அஹங்காரத்தினால் எனன பிரயோஜனம் ?

வி—சாத்துவீக அஹங்காரத்துக்கும், தாமச அஹங்காரத்துக்கும் அதாவது ஈசுவரனுடைய இச்சையின்படி எல்லாவற்றையும உண்டாக்க, மூலப்பிரகிருதிக்கும், மஹத்துக்கும் உதவிசெய்கிறது.

ந—இந்தப்பிரபஞ்சம் மண்ணுலகமாக மாறுவதற்குமுன் மூலப்பிரகிருதி என்னமாக இருந்தது.

வி—பிரபஞ்சமாற்றமாவதற்குமுன்பு, மூலப்பிரகிருதி ரூபமற்றதாயும், பார்க்கக் கூடாத அணுரூபமாயும், சூக்ஷ்மாவஸ்தையிலிருந்தது.

ந—சுத்தசத்துவமென்றாலென்ன ?

வி—ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலவாமல் கேவல சத்துவமாய், நித்தியமாய், ஞானந்தஜனகமாய், கர்மத்தாலன்றிக்கே கேவலம் பிரம்மத்தின் இச்சையாலே விமான கோபுர மண்டப பிரஸாதாதி ரூபங்களாய் பரிணமிக்ககடவதாய் நிரவதிக தேஜோரூபமாய், நித்திய முக்தராலும், ஈசுவரனாலும் பரிசோதிக்கவரிதாய், அதியத்புதமாயிருப்பதாம்.

ந—சித்து என்றாலென்ன ?

வி—அதுவே ஜீவாத்துமா. அது அசித்துக்கும், ஈசுவரனுக்கும் வேறுனதாயும், எவராலும் சிருஷ்டிக்கப்படாமல் நித்தியமாய், அஜடமாய், அணுவாய், ஆனந்தரூபமாய், அவ்வியக்தமாய், அசிந்தியமாய், நிரவியவமாய், நிர்விகாரமாய், ஞானசிரியமாய் ஈசுவரனுக்கு நியாமயமாய், தாரியமாய், சேஷமாய் இருப்பதுவேயாம்.

ந—இந்த ஜீவாத்துமாவில் பேதம் உண்டோ ?

வி—நித்தியர், முக்தர், பத்தர், என்கிற மூன்றுவிதபேதமுண்டு.

(1) நித்தியர் என்றால், பிரம்மானந்தர் நித்தியானந்தர் என்று சொல்லும்படி சதா பிரம்மானந்தத்திலிருப்பவர்களே. அவர்கள் பிராணிருத கர்மாதி கஷ்டங்களற்று வைகுண்டலோகத்தில் சதாவதிந்து அனந்தர், கருடர், விஷ்வக்சேனாதிகளாக பிரகாசிப்பவர்கள்.

(2) முக்தர் யாரென்றால், சம்சாரபந்தமற்று பரம சுகத்தை அனுபவிப்பவர்களே.

(3) பத்தர் யாரென்றால், சம்சார கஷ்டங்களில் விழுந்து கர்மபந்தம் உள்ளவர்களே.

க—பரப்பிரம்மமே சகலத்துக்கும் கர்த்தாவென்று முன்சொன்னீர்; ஆனால் இப்போது மூலப்பிரகிருதியே உபாதானகாரணமென்று சொல்லுகிறீரே! அது எப்படி ஐயா?

வி—மூலப்பிரகிருதியே மண்ணுலகிற்கு உபாதானகாரணமாக இருந்தாலும் அந்த மூலபிரகிருதியின் சரீரமாகிய பரப்பிரம்மமில்லாவிட்டால் பிரபஞ்சம் உண்டாகாது. ஆகவே, ஒரு ஆபரணத்துக்கு பொன்னே முக்கிய ஆதாரமாயிருப்பதைப்போலவும், பானைக்கு களிமண் முக்கிய ஆதாரமாக இருப்பதைப்போலவும், பரபிரம்மமே மூலப்பிரகிருதிக்கு முக்கிய ஆதாரமாயிருக்கிறது. மூலப்பிரகிருதியானது சூக்ஷ்மாகாரமாகவும், ஸ்தூலாகாரமாகவும், இருக்கிறது. ஸ்தூலாகார ஸ்திதியினால் ஜகத் உண்டாகிறது. இந்த தத்துவதத்தின்படி) சூக்ஷ்மாகாரமான மூலபிரகிருதியே ஒரு காரியத்துக்கு காரணமாக இருக்கிறது. இந்த தத்துவத்தின்படியே, பொன்னும் களிமண்ணும் ஆபரணத்துக்கும் பானைக்கும் முக்கியகாரணமாக இருக்கின்றன. ஆகவே மூலப்பிரகிருதி பரப்பிரம்மத்துக்கு சரீரமாகவும், பரபிரம்மம் மூலபிரகிருதிக்கு சரீரியாகவும் இருக்கிறது.

க—தங்கத்துக்கும் தட்டானுக்கும், களிமண்ணுக்கும் குசவனுக்கும், வித்தியாசமிருப்பதைப்போலவே; உபாதானகாரணத்துக்கும் கருவிகாரணத்துக்கும் ஒன்றுக்கொன்று விதத்தியாசமிருக்கிறதல்லவா? ஆகவே பரப்பிரம்மம் எப்படி உபாதானகாரணமாகவும் கருவிகாரணமாகவும் இருக்கக்கூடும்?

வி—பரப்பிரம்மமே கருவிகாரணமாக இருக்கிறார். அவரது இச்சையினால் மூலப்பிரகிருதி பிரபஞ்சமாக மாறுகிறது. காலமும் பரப்பிரம்மத்தின் சரீரியாய் இருப்பதினால் அந்தக்காலமும் சஹகாரிக்காரணமாக இருந்து பிரபஞ்சசிருஷ்டிக்கு உதவிசெய்கிறது.

க—இந்த மண்ணுலகம் மூலப்பிரகிருதியின் மாற்றத்தினாலுண்டாகிறதாகில் பரப்பிரம்மத்தை சிருஷ்டிகர்த்தாவென்று எப்படி சொல்லலாம்?

வி—சிருஷ்டியென்கிற வார்த்தைக்கு உலகத்தார் தப்பர்த்தமாக கொண்டிருக்கிறார்கள். பரபிரம்மம் ஆதியந்தமற்றிருக்கிற மூலப்பிரகிருதியிலிருந்து பிரபஞ்சமாக மாற்ற இச்சிக்க அந்த மூலப்பிரகிருதியானது அவர் ஆக்கினையின்படி தனக்குள்ளிருக்கும் சத்துக்களால் பிரபஞ்சமாக மாறுகின்றது. இந்த மாற்றத்துக்கே சிருஷ்டி என்று உலகத்தார் பெயரிட்டிருக்கிறார்கள். சர்வசூனியத்திலிருந்து ஒன்றை சிருஷ்டிப்பது சாத்தியமல்ல.

க—கேவல மூலப்பிரகிருதியின் மாற்றமாகிய இந்த சிருஷ்டி எத்தனை வகைப்படும்?

வி—இரண்டு அல்லது மூன்றுவகைப்படும்

க—அவை எவை?

வி—சமஷ்டி (சாதாரண) சிருஷ்டி என்றும்; வியஷ்டி (விசேஷ) சிருஷ்டி என்றும் இரண்டுவகைப்படும்.

க—சமஷ்டி சிருஷ்டி யென்றாலென்ன?

வி—ஈசுவரனுடைய இச்சையின்படி மஹத்து அஹங்காரம் முதலான மாற்றங்களே.

ச—விபஞ்ச சிருஷ்டியாவதென்ன?

வி—பஞ்சபூதங்களுண்டானபிறகு அவைகள் ஒன்றுக்கொன்று சேர்ந்து கர்ம சம்பந்தத்தினாலே பிரபஞ்சத்தில் சுரர், நரர், திரியகமென்னும் பிராணிகள் ஸ்தாவரமென்னுந் தாதுகந்தமூலாதி தேகங்களுண்டாவதே.

ச—மூன்றுவித சிருஷ்டியென்ன?

வி—பிரகிருதி சிருஷ்டி அல்லது சமஷ்டி சிருஷ்டியைப்போல மஹத்தத்துவம் காரங்கள் மாற்றமேயாம். இது பிரம்மா அல்லது ஹிரணியகர்ப்பமென்று ஒவ்வொரு மஹாகல்பத்தில் ஆரம்பிக்கிறது.

2-வது, தியனமதி சிருஷ்டி அதாவது வியஷ்டி சிருஷ்டியைப்போல பிரம்மாவின் ஒருதினமாகிய ஒவ்வொரு பிரும்மகல்பத்தில் மாறும் சிருஷ்டியாம்.

3-வது நித்திய சிருஷ்டி அதாவது கர்மானுசாரமாய் பிரதிதினம் நடக்கும் ஜடதேகசிருஷ்டியாம்.

ச—கல்பமென்றாலென்ன?

வி—கல்பமென்றால் காலத்தின் மத்தியகாலம்.

ச—அதை விவரமாய்ச் சொல்லும்?

வி—மஹாகல்பம், பிரும்மகல்பமென்று இரண்டு கல்பங்களுண்டு. இந்த கல்பங்கள் நான்கு யுகங்களாலாகிய மன்வந்தரங்களால் ஆக்கப்பட்ட காலமேயாம்.

ச—நான்கு யுகங்களின் விவரமெப்படி?

வி—4,32,000-வருஷங்கள் கொண்டது கலியுகம். 8,64,000-வருஷங்கள் கொண்டது துவாபரயுகம் 12,96,000-வருஷங்கள்கொண்டது திரேதாயுகம். 17,28,000-வருஷங்கள் கொண்டது கிருதயுகம். இந்த நான்கு யுகங்களாகிய 43,20,000-வருஷங்கள்கொண்டது ஓர் மஹாயுகம்,

ச—மன்வந்தரமென்றாலென்ன?

வி—எழுபத்தொரு மஹாயுகம் கொண்டது ஒருமனுவின் வயது. அந்த காலத்துக்கே மன்வந்தரம் என்றபெயர். இப்படிப்பட்ட மனுவந்தரங்கள் பதினான்கு.

ச—பிரம்மகல்பமென்றாலென்ன?

வி—பிரம்மாவின் ஒரு நாள். சந்தியோகூடிய பதினான்கு மன்வந்தரங்களாம் அதாவது 1,000-மஹாயுகங்கள்.

ச—மஹாகல்பமென்றாலென்ன?

வி—பிரம்மாவின் 360-நாள்கள்கொண்டது ஒரு பிரம்ம வருஷம், இப்படிப்பட்டது நூறு பிரம்மவருஷங்கொண்டது ஒரு மஹாகல்பம். அதாவது மானிட வருஷங்கள் 311,04,000,00,00,000 கொண்டவையே.

ச—நாம் இப்போது மஹாகல்பத்தின் எந்த பாகத்தைச்சேர்ந்திருக்கிறோம்?

வி—இந்த பிரபஞ்சம் மூலப்பிரகிருதியிலிருந்து மண்ணுலகமாகமாறி பரிகாமாகிவிட்டது. அதற்கு பரமென்று பெயர். இப்போது ஆரம்பித்திருப்பது அபரமென்று பெயர். அதாவது பிரம்மாவின் 51-வது வயது

ஆரம்பித்திருக்கிறது. இதுவரையில் ஆறு மந்வந்தரங்களாண்டு இப்போது ஏழாவது மந்வந்தரமாகிய வைவஸ்வத மநு ஆண்டுவருகிறார். மேலும் 71-மஹாயுகங்களில் 27-மஹாயுகங்கள் சென்று, இப்போது 28-வது மஹாயுகத்திலிருக்கிறோம். இந்த மாஹாயுகங்களில் மூன்று சாதாரண யுகங்களும் சென்று, இப்போது நான்காவதாகிய கலியுகத்தின் 4999-வருஷத்திலிருக்கிறோம்.

க—பிரளயமென்றாலென்ன?

வி—இந்த பிரபஞ்சமானது இப்போதிருக்கும்படியான ஸ்திதியைவிட்டு சூக்ஷ்ம ஸ்திதியைப்பெறுவதேயாம். இதில் பிராகிருத பிரளயம், நைமித்திக பிரளயம், நித்திய பிரளயம், அத்தியந்திக பிரளயம் என நான்கு வகுப்புகளுண்டு

க—பிரகிருதி பிரளயமென்றாலென்ன?

வி—இந்தபிரபஞ்சம் இப்போதிருக்கும் ஸ்திதியைவிட்டு சூக்ஷமமாக மாறி மூல பிரகிருதியோடு கலந்து சத்துவ ராஜச தாமச குணங்களற்றுப்போவதேயாம். இந்த பிரகிருதி பிரளயம் ஒவ்வொரு பிரம்மாவின் காலத்திற்கு ஒருதடவை அல்லது மஹாகல்பகாலத்தில் சம்பவிக்கும்.

க—நைமித்திக பிரளயமென்றாலென்ன?

வி—இது ஒவ்வொரு பிரம்மகல்பத்தின் கடைசியில் சம்பவிக்கிறது. இதில் சூரியாதி லோகங்கள் மாறி, பூதியங்களாகி புராதன ஸ்திதியைப் பெறுவதேயாம்.

க—நித்திய பிரளயமென்றாலென்ன?

வி—இது பிரதி நிமிஷமும் சம்பவிப்பது. இதனால் பிரபஞ்ச பிராணிசமூஹங்கள் மடிந்து மாறிவிடுவதேயாம்.

க—அத்தியந்திக பிரளயமென்றாலென்ன?

வி—ஜீவாத்துமாவுக்கும், பிரகிருதிக்கும் இருக்கும் சம்பந்தமற்றுப்போதலே இது ஜீவன் முக்தியடையும்போது சம்பவிக்கிறது.

க—இந்த உலகம் அழியாதென்று சொல்லுகிறீர்களே; ஆனால் பானைகள் ஒடிக்கப்பட்டுப்போவதும், நதிகள் வற்றிப்போவதும், மற்றப்பொருள்கள் கரைந்து காணமல்போவதும் பிரத்தியக்ஷமல்லவா?

வி—உருவத்தோடு கூடிய உலகம் நித்தியமென்று சொல்லவில்லை. உருவமுள்ள எந்த வஸ்துவும் ஒருகாலத்தில் கெட்டுபட்டு பாழ்த்தாப்போயே தீரவேண்டும்; ஆனால் அவற்றின் சூக்ஷம ஆதார சத்துக்கள் மாத்திரம் நசித்துப்போகா. இந்த சூக்ஷம சத்துக்களுக்கு சிருஷ்டி சம்ஹாரமில்லாமையால் எப்போதும் இருக்கும், பிரளயகாலத்தில் சத்துவ ராஜச தாமசாதி குணங்கள் தம் தொழில்களைச் செய்யாமல் அடக்கமாக இருந்து பிரபஞ்சம் பிரகாசிக்கும்போது மாத்திரம் தம்தம் தொழில்களைச்செய்ய ஆரம்பிக்கின்றன. பானை உடைக்கப்பட்டு அது நாசமாகிவிடலாம்; ஆனால் அதன் அணுரூபமான சத்துக்கள் மாத்திரம் என்றும் இருக்கும். இந்த ஹேய்வைப்பற்றி பிரபஞ்சம் நித்தியமென்று சொல்லப்பட்டது.

க—ஜனனமரணமென்றாலென்ன?

வி—ஜீவாத்துமா ஒரு தேகத்தில் பிரவேசிப்பதே ஜனனம். அத்தேகத்தை

விட்டு நீங்குவதே மரணம். ஜீவாத்துமா ஒரு தேகத்தில் கொஞ்சகாலம் வசித்து, அதைவிட்டு நீங்கி வேறொரு தேகத்தில் பிரவேசிக்கும். அப்படி பிரவேசிப்பதே மறு ஜனனம். ஜனனமரண மறு ஜனனங்கள் மாறுதலுக்கேற்ற தேகத்தைச் சேர்ந்ததேயொழிய மாறுதலற்ற ஜீவாத்துமாவுக்கு கிடையாது.

ந—ஜீவாத்துமா மரணமற்றும் நித்தியமாயும் பரிசுத்தமு மானதாகில், பிரகிருதி ரூபமான தேகத்தில் சம்பந்தப்பட்டு சுகதுக்கங்களை அனுபவிக்கவேண்டிய தேன்?

வி—கர்மத்தினால் ஜீவாத்துமா பிரகிருதிதேகத்தில் சம்பந்தப்பட்டு காரணசரீரியாகி சுகதுக்கங்களை அனுபவிக்கின்றது. ஜனனமரண மறுஜனனங்களுண்டாவதற்குகாரணம் கருமமே.

ந—கருமமென்றாலென்ன?

வி—கருமமென்றால் ஜீவாத்துமா மனசாக்ஷியறிய செய்த தொழிலின் பலனேயாம். ஈசுவரனுக்கு சந்தோஷமுண்டாகும்படி செய்வது நல்ல கருமம். ஈசுவரனுடைய கட்டளைக்கு விரோதமுண்டாகும்படிச் செய்வதே பாப கர்மம்.

ந—ஜீவாத்துமாவின் செய்கையினால் எப்படி கர்மமுண்டாகும்?

வி—அக்ஞானம் அல்லது அவித்தையினால் உண்டாகிறது. அது அநித்திய ஞானம், விபரீதஞானமென இருவகைப்படும்.

ந—அநித்திய ஞானமென்றாலென்ன?

வி—ஒருவஸ்துவின் லக்ஷணத்தை வேறொரு வஸ்துவினிட மிருப்பதாக மயக்கச்செய்வது.

ந—விபரீத ஞானமென்றாலென்ன?

வி—ஒருவஸ்துவை வேறொரு வஸ்துவாக பாவிக்கச்செய்வதேயாம்.

ந—அவித்தையினால் கர்மமுண்டாவதெப்படி?

வி—ஜீவாத்மா, ஜடதேகமேதானென்றும்; இந்த ஜடதேகத்தைச்சார்ந்த ஜனன மரணங்கள் தன்னுடையதென்றும்; பிரமித்துக் கொள்வதினாலேயாம். இந்த அக்ஞானத்தினால் காமக்ரோத லோபாதிகளுண்டாகி இவைகளினால் ஜீவாத்மா கர்மங்களுக்குட்படுகின்றது. இப்படி வந்தகர்மங்கள் வாசனையால் வேறு கர்மங்களையும் அக்ஞானத்தையும் உண்டாக்குகின்றன; மேலும்ஜீவாத்துமா ருசியென்னும் இச்சையால் வேறு பிராகிருத பதார்த்தங்களுடன் சம்பந்தப்படுகின்றது. இப்படி பிராகிருத பதார்த்த சம்பந்தத்தினால் அக்ஞானமுண்டாகி, இந்த அக்ஞானத்தினால் கர்மமுண்டாகிறது. இப்படி கருமமானது அவித்தை வாசனை ருசிபிரகிருதி சம்பந்தத்தினால் (கருமமானது) குறிப்பானகாலவரையன்றி வண்டி உருளையைப்போல் சுழன்றுகொண்டே இருக்கின்றது; ஆனதுபற்றியே இந்த கர்மத்தைப் பற்றியும் ஜீவாத்துமாவின் ஜடதேகசம்பந்த காரணதேகத்தைப்பற்றியும், பிரவாஹரூபத்தினால் என்று சொல்லப்பட்டது. அதாவது நதியோட்டத்தின் அறுப்புக்கு ஆரம்பகாலமில்லாததுபோல பிரளயகாலத்திலும் ஜீவாத்துமாவோடு சூக்ஷ்ம சரீரமாகக் கூடிக்கொண்டிருக்கிறது.

ந—ஜீவாத்மா பாபகர்மங்களே செய்யாதிருக்கும்படி ஈசுவரன் தடுக்கக்கூடாதா?

வி—ஈசுவரன், ஜீவாத்மா சமூஹத்தாருடைய பொதுக்ஷேமத்தைக் கருதி "உண்மைசெய், தீமைமற" என்ற கற்பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். இந்த ஆக்ஞையின்படி நடக்கவேண்டியது ஒவ்வொரு ஜீவாத்துமாவின் நிஷ்கலாகடமை. ஜீவாத்மாக்களுக்கு இது விஷயத்தில் சுயதந்திரம் கொடுத்திருப்பதால், பரதந்திரரைப்போல பாபகர்மங்களே அனுஷ்டிப்பவர் அவற்றின்பலனே அனுபவிக்கவேண்டும்.

ந—பாபகர்மத்தினலுண்டாகும் பலன் என்ன?

வி—இவ்வுலகில் கஷ்டஜீவனத்தையும் பிறகு நரகத்தையும் அனுபவிப்பதேயாம்

ந—நரகமென்றலென்ன?

வி—துஷ்கர்மமாகிய பாவத்தினல் ஜீவாத்மா எமலோகத்தில் கஷ்டத்தை அனுபவிப்பதேயாம்.

ந—நரகத்தில் ஜீவாத்துமா கஷ்டப்படும்போது அதற்கு சரீரமுண்டோ?

வி—உண்டு. ஜீவாத்மா ஸ்தூலதேகத்தைவிட்டுப்பிரிந்த உடனே சூக்ஷமசரீரத்தினிருந்து மாறிய நரகதேகம் அல்லது யாதனாதேகத்தையடைகிறது.

ந—சத்கருமத்தின் பலனென்ன?

வி—இவ்வுலகத்தில் சுகவாழ்வையும், பிறகு சுவர்க்கலோக போகத்தையும், அனுபவிப்பதேயாம்.

ந—சுவர்க்கமென்றலென்ன?

வி—சூக்ஷமசரீரத்திலிருந்து மாறிய சுகதேகத்தைப்பெற்று ஜீவாத்துமா ஊர்த்வலோகத்தில் யாதொருவிசனமுமற்று சுகமாகவாழும் ஸ்தி தி யே யா ம்

ந—ஊர்த்வலோகங்களென்றலெவை?

வி—புவர்லோகம் (அதாவது பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள லோகம்) சுவர்லோகம் (அதாவது சூரியனுலகமுதல் துருவநக்ஷத்திர லோகத்துக்கு இடையிலுள்ளலோகம்). மஹர்லோகம், ஜனர்லோகம், தபோலோகம், சத்தியலோகங்கள், என்றல்=துருவலோகமுதல் பிரம்மாண்டலோகம் (Macrocosm) வரையிலுள்ள புண்ணியலோகங்களே.

ந—ஜீவாத்மா, நரகம் அல்லது சுவர்க்கத்தில் எத்தனே காலமிருக்கும்?

வி—தம்தம் கர்மம் முடிகிறவரைக்கும்.

ந—பிதுர்லோகம், விஷ்ணுலோகம், சிவலோகமென்றலெவை?

வி—இவைகள் ஊர்த்வ லோகத்தின் சிலபாகங்களே.

ந—இவற்றைவிட வேறு பிரம்மாண்டங்களுமுண்டோ?

வி—சுவர்க்கம், நரகம், சூரியலோகம், சந்திராதி லோகங்களான பதினன்கு லோகங்களுமுண்டு.

ந—இந்த ஒவ்வொரு பிரம்மாண்டத்துக்கும் ஹிரணியகர்ப்பரென்னும் பிரமதேவர் உண்டோ?

வி—உண்டு.

ந—இந்த பிரம்மாண்டங்கள் நித்தியமானவையா?

வி—ஒவ்வொரு பிரம்மாவின் முடிவுகாலத்தில் இந்த பிரம்மாண்டங்கள் மாறி சூக்ஷ்மரூபங்களாக மாறிவிடும்.

ந—கர்மமானது வேறு பிரம்மாண்டங்களிலும் உண்டோ?

வி—உண்டு.

ந—எல்லா பிரம்மாண்டங்களும் ஒரே பிரளய காலத்துக்குட்பட்டவையா?

வி—ஒவ்வொரு பிரம்மாண்டத்துக்கும் ஒவ்வொரு பிரளயமுண்டு.

ந—ஒவ்வொரு பிரம்மாண்டமும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவையா?

வி—ஆம், பஞ்சபூதங்களுடன் மஹத்தும், அஹங்காரமும் கூடி வித்தியாசப்பட்டிருக்கின்றன.

ந—இந்த பிரம்மாண்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஈசுவரருண்டோ?

வி—ஒரே பரப்பிரம்மம் எல்லா பிரம்மாண்டங்களிலும் பூரணமாக இருந்து ஆண்டு வருகின்றார்.

ந—இந்த பிரம்மாண்டங்களெல்லாம் ஒரே மூலப்பிரகிருதியிலிருந்து உண்டானவையா?

வி—ஆம், மூலபிரகிருதியானது ஆதியும் அந்தமுமற்றது. அதில் மாற்றம் என்னும் சக்தி பிரவேசிக்க அநேக பிரம்மாண்டங்கள் உண்டாகின்றன

ந—நரகமோ அல்லது சுவர்க்கமோ அனுபவித்தபிறகு ஜீவாத்துமாவுக்கு என்ன சம்பவிக்கிறது?

வி—அது சுவர்க்கநரகங்களே அனுபவித்த தேகங்களே விட்டு தம்தம் கர்மானுசாரத்துக்கேற்ற தேகத்தில் பிரவேசித்து மோக்ஷம்டைகிறவரையில் பிரவர்த்தித்து கடைசியில் மறுஜனனமற்றதாகிறது.

ந—சத்கர்மங்களினால் ஊர்த்துவலோகங்களில் சதா சுகப்பட்டுக்கொண்டிருக்கலாமா?

வி—இல்லை. கர்மபலத்துக்குத் தக்கபடி ஒரு லோகத்தில்தான் சுகமடையக் கூடும்.

ந—ஊர்த்வலோகத்தில் யாரிருக்கிறார்கள்? அவர்கள் அங்கு செய்யும் காரியம் என்னே?

வி—ஹிரணியகர்ப்பர், ருத்திரர், இந்திரர், அக்கினி முதலான தேவர்களிருக்கிறார்கள். அவர்களில் ஹிரணியகர்ப்பர் பிரஜாபதியின் மூலியமாக சிருஷ்டி காரியங்களையும், மற்றவர்கள் தம்தம் காரியங்களையும் செய்துக்கொண்டு இருப்பார்கள்.

ந—அந்த தேவதைகள் பரப்பிரம்மத்துக்கும் மேலான காரியங்களைச் செய்ய சக்தியுடையவைகளா?

வி—இல்லை. அவர்கள் பரப்பிரம்மத்துக்கு கீழ்ப்பட்ட சில்லரை தேவதைகளே.

ந—அந்த சில்லரை தேவர்கள் அங்கு சதா வாழ்ந்துகொண்டிருப்பரோ?

வி—இல்லை. ஒவ்வொரு மஹாகல்பத்தின் முடிவில் எல்லா சில்லரை தேவதைகளும் தங்கள் தேகங்களை நியஜித்து மோக்ஷத்தையடைவார்கள்.

ந—அப்படியானால் மறுபடியும் வரும் மஹாகல்பத்தில் எந்த தேவதைகள் இருப்பார்கள் ?

வி—கர்மபலத்தினால் இந்திராதி தேவர்களாகும்படியான ஜீவாத்துமாக்கள் அந்த அந்தஸ்தைப் பெறுவார்கள்.

ந—மோக்ஷம் எத்தனைவகை ?

வி—கைவல்லியம் என்றும், பிரம்மானந்த கைவல்லியம் என்றும் இருவகையாம். கைவல்லியம் என்றால்=ஜீவாத்துமா தனது நிஜஸ்திதியில் பரமசுகத்தை அடைவதேயாம். பிரம்மானந்தம் என்றால்=ஜீவாத்துமாவானது பரப்பிரம்மத்தைப்போலவே பரிபூரண சுகத்தையடைவது. இதற்கு சாயுஜ்ஜிய பதவி என்று பெயர்.

ந—சாயுஜ்ஜியமென்றால் ஜீவாத்மா பரப்பிரம்மத்தில் லயமானஸ்திதியல்லவா ?

வி—அல்ல. ஜீவாத்துமா எக்காலத்திலும் பரபிரம்மத்துடன் பூரணமாக சேருகிறதில்லை. சாயுஜ்ஜியமென்பதினால் ஜீவாத்துமா பரபிரம்மத்தைப் போலவே பரிபூரண சுகத்தையடையும் ஸ்திதி. இதில் சாலோக்கியமும் சாரூப்பியமும் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

ந—சாலோகியமென்றாலென்ன,

வி—ஒரே இடத்தில் ஒருபொருளுடன் வசித்தலாம்.

ந—சாரூப்பியம் என்றாலென்ன ?

வி—சாரூப்பியம் என்றால் சுத்த சத்துவத்தினாலாகியதும், ஈசுவரனுக்குச் சமானமான சரீரத்தைப் பெற்றிருத்தலுமேயாம்.

ந—ஜீவாத்மா முக்தியையடைந்தபிறகு பந்தஸ்திதியையடையுமா ?

வி—இல்லை, அது உலகநன்மையைக்கருதி அவதாரமெடுத்தால் எடுக்கலாம். ஆனால் அந்த அவதாரகாலங்களில் அவைகளுக்கு பிராகிரத கர்மாதிகள் இல்லை.

ந—மோக்ஷமென்பது சுவர்க்கலோகத்தைப்போல ஒரு குறிப்பான இடத்தில் சுகமடையும் ஸ்திதியா ?

வி—வைகுண்டம் என்னும் பரமபதத்தில் அனுபவிக்கும் ஸ்திதியே. அந்த பரமபதம் பிராகிருத சம்பந்தமற்று, சுத்தசத்துவத்தாலாகிய மேலான இடம். கைவல்லியமும் பிரம்மானந்தமும் வைகுண்டத்தின் பலபாகங்களில் அனுக்கும் இன்பமேயாம்.

ந—மோக்ஷத்துக்கு முக்கிய சாதனங்களெவை ?

வி—ஜீவாத்துமா பிராகிருத சம்பந்தமான எல்லா பற்றுகளையும் விட்டு ஒழித்தும் துஷ்கர்மம் சத்கர்மங்களை விட்டொழித்தும், சுத்தசைதன்னியமாக இருத்தலாம். மோக்ஷம் என்னும் பதத்துக்கு பாதங்களை விட்டொழித்தலென்று பொருள்.

ந—இந்தச் சாதனங்களெப்போது கிடைக்கும் ?

வி—பிராகிருத லோகங்களைக்கடந்து பரமபதத்தில் சேருவதற்கு முன்பே.

ந—பிரம்மானந்தத்தை அனுபவிக்கும் முக்தர்களுக்குள்ளே வித்தியாசமுண்டா ?

வி—இல்லை. பரபிரம்மத்தின் சுகத்துக்கும், முக்தர்களின் சுகத்துக்கும் கூட வித்தியாசமில்லை.

ந—இந்த மோக்ஷத்தை எல்லா ஜீவர்களும் வித்தியாசமின்றி அனுபவிக்கக்கூடுமா

வி—பரிபக்குவ தசையையபெற்றஎல்லாஜீவர்களும்மோக்ஷத்தையடையக்கூடும்.

ந—அந்த பரமபதத்துக்கு அல்லது வைகுண்டத்துக்குப் போக இந்த பிரபஞ் சத்தில் வழியுண்டா ?

வி—உண்டு. அதற்கு அர்ச்சராதிகதி நிவியான வாசலென்றும், பிதிர்யானம் அல்லது தூமாதி மார்க்கமென்றும் சுருதிகளில் சொல்லப்பட்டிருக்கின் றன. ஒரு மனுஷன் இறந்து மோக்ஷமடைய வேண்டுமாகில், ஜீவனுடைய சூக்ஷ்ம சரீரியாகி, ஹிருதயத்திலிருந்து பிரம்ம ரந்திரத்திற்கு சம்பந்தப்பட் டிருக்கும் சூக்ஷ்மனமென்னும் நரம்புவழியாக கபாலத்துக்குப்போய் பிரம்ம ரந்திரத்தைப் பிளந்துக்கொண்டு, சூரிய கிரகணங்களின் மூலியமாக சூரிய மண்டலத்துக்குப்போய் பிறகு சூரியனிலிருக்கிற கரும்புள்ளியின் மூலிய மாக பரமபதத்துக்குப் போகின்றது.

ந—ஜீவன் பரமபதத்துக்குப் போகும் இந்த வழியை விவரமாகச் சொல்லுங்கள் பார்ப்போம்.

வி—ஜீவனுடைய யோகசாதனத்திலுல் அடையும் பரிபூரண ஞானத்திலுல் பரமபதத்துக்குப் பிரவேசிக்கின்றது. அப்படி பிரவேசிக்கும் ஜீவன் அதிவாஹிகாதிகள் என்னும் அர்ச்சி, ஆஹாசர், பூர்வபக்ஷர், உத்தராயணர், சம்வத்சரர், ஆதித்தியர், சந்திரர், வாயுதித்தியர், வருணர், இந்திரர், பிரஜாபதி, ஆமாநவர் விஷ்ணு என்னும் அத்திவாஹிகாதிகளால் அழைத்துக்கொண்டு போகப் படுகின்றது. இங்கு குறித்த அர்ச்சி ஆஹாசாதிகள் பரிசுத்த ஆத்மஸ்வரூபிகளேயன்றி சாதாரண இரவுபகல் மாசிக வருடாதிகளல்ல.

ந—மோக்ஷத்தை அடைய உபாயமென்னே ?

வி—கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், ப்ரபத்தி என்னும் நான்கு சாதனங்களே.

ந—கர்மயோகமென்றாலென்னே ?

வி—சுருதிகளின் மூலியமாக நித்து அநித்து ஈசுவர ஞானத்தைப்பெற்றும், சுய லாபத்தைக் கருதாமல், நீதிக்கும் சமயத்துக்கும் தக்க சத்கருமங்களைச் செய்தும், பரமாத்துமாவைப்பற்றி ஜபம், ஹோமம், யாகம், தானம், தபசு முதலானதுகளைச் செய்தலுமேயாம்.

ந—ஞானயோகமென்றாலென்னே ?

வி—யோக சாஸ்திரத்தில் சொல்லியபடி, இயம, நியம, பிராணயாம, பிரதியா ஹார, தியான, தாரண சமாதியாதி எட்டு அங்கங்களைத்தழுவி ஜீவாத்துமா வின் சுத்தசத்துவத்தை அறிவதேயாம். இதனுல் மோக்ஷஸ்திதியைப் பெற்று கைவல்லியம் அல்லது பிரம்மானந்தத்தைப் பெறலாம்.

ந—பக்தியோகமென்றாலென்னே ?

வி—இதற்கு உபாசனை என்றும் சொல்லலாம்—அதாவது, பரபிரம்மத்தின் பல திவ்ய குணங்களைப்பற்றி தியானித்தும், அவரை உள்ளார் உள்ள

வரையில் அநுஷ்டித்துக்கொண்டும்; தம்தம் கடமைகளை தக்கபடி செய்வ தேயாம். இந்த பக்தியை ஞானயோகத்தைப்போலவே அநுஷ்டிக்கலாம் இந்த பக்தியோகிகளுக்கும் மோக்ஷமுண்டாகி கைவல்லியம் பிரம்மாகத் தம் கிடைக்கும்.

ந—பக்தியோகத்தில் பரப்பிரம்மத்தை தியானிப்பதெப்படி?

வி—அஹம் பிரம்மாஸ்மி=நான் பிரம்மம், எனது ஆத்துமா பிரம்மம், அதாவது பரப்பிரம்மத்துக்கு இருக்கும் பலலக்ஷணங்களைப் போல எனது ஜீவன் (பரப்பிரம்மத்துக்கு) சரீரியாக இருக்கின்றது என்று தெரிந்துக்கொள்ளுதல்.

ந—பக்தியோகத்தில் வேறுவித்தங்களுண்டோ?

வி—வேதாந்தத்தில், தாரவித்யா, அந்தராத்மவித்யா, பிராணவித்யா புருஷ வித்யா, மாதுவித்யா என்றுகி முப்பத்திரண்டு வகையுண்டு.

ந—இந்த வித்தைகளில் வித்தியாசமுண்டோ?

வி—பரப்பிரம்மத்தை தியானம் செய்யும் விஷயத்தில் வித்தியாசமில்லை, பரப் பிரம்மத்தினுடைய குண லக்ஷணங்களைப்பற்றி தியானம் செய்வதில் மாத்திரம் பேதமுண்டு.

ந—ப்ரபத்தியென்றாலென்ன?

வி—மோக்ஷமடைவதற்கு ஹேதுக்களான முன் சொன்ன மூன்று சாதனங்களை அனுஷ்டிக்க சக்தியற்றவர்கள், ஈசுவரனுடைய தெய்வ குண லக்ஷணங்களையே சதாதியானித்தும், அவர் திருவுள பாங்கின்படியே நடந் தும் உள்ளநாள் உள்ளவரையில் அந்த ஜகத்ரக்ஷகனிடம் பக்திசெய்யும்மார்க் கமேயாம்.

ந—இதில் தியானிக்கும் ஈசுவர விலக்ஷணங்களெவை?

வி—ஈசுவரனுடைய ஞானம், சக்தி, பலம், ஐஸ்வரியம், வீரியம், தேஜஸ். அனந்தம், தயை, வாத்சல்யம், சவுலப்யம், சவுசில்யம், முதலானவைகளும் அசித்து, சித்து, பிரபஞ்சம் சரீரமாயிருக்கையையும் தனது இச்சையின் படி லக்ஷ்மி சமேதனாக தேவாவதாரமெடுக்கும் விலக்ஷணங்களுமேயாம்.

ந—இந்த நான்குவித மோக்ஷசாதனங்கள் எல்லாரும் அநுஷ்டிக்கத் தக்கவையா?

வி—கல்வி கேள்வி ஞானத்தினால் சிறந்தவர்களே கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்னும் மூன்றுவித சாதனங்களால் மோக்ஷமடையக்கூடும். மற்றெதத்துவ ஞானதத்துவம் அறிய சக்தியற்றவர்கள், மோக்ஷத்தை ப்ரபத் தியினால் அடையலாம். இந்த ப்ரபத்தி சாதனையை எந்த ஜாதியாரும் எந்த மதத்தாரும் ஆசாரியன் மூலியமாக ஞானம்பெற்ற எந்த சண்டாள ரும், மிலேச்சரும் யாதொரு வித்தியாசமுமின்றி அநுஷ்டிக்கலாம்.

ந—இந்தப்படி மோக்ஷம்பெற விரும்புவோருக்கு எப்படிப்பட்ட யோக்கியதை களிருக்கவேண்டும்?

வி—ஆசாரியனுடைய போதனையால் (1) அசித்து, சித்து, ஈசுவர ஞானமும்; (2) இப்படிப்பட்ட ஆசாரியனிடம் அன்பும்; (3) சுருதிஸ்மிருதிகளில் நம்பிக்கையும்; (4) மோக்ஷவிருப்பமும்; (5) உலக ஆசாபாசங்களை வீட் டொழிக்க வைராக்கியமும்; (6) தருமத்தில் கருத்தும்; (7) வேத வே

தார்த்த நேர்த்த காலக்ஷேபமும்; (8) சுயலாபத்தை விட்டொழித்து சாது சங்கத்தில் பிரவேசித்திருத்தலுமேயாம்.

க—இவைகளால் கர்மபந்தத்தை விட்டொழிக்கக்கூடுமோ?

வி—இவைகளால் துஷ்கர்மம் சத்கருமங்களே விட்டொழிக்கலாம்.

க—கர்மங்க ளெத்தனை வகைப்படும்?

வி—(1) சஞ்சிதம், (2) பிராப்தம், (3) ஆகாமியம் என மூன்றுவகைப்படும்.

(1) இவைகளில் சஞ்சிதமென்றால்=வேறு கர்மபலத்தினால் தடுக்கப்பட்டு இன்னும் தன் பலன்களைக்காட்ட ஆரம்பிக்காதிருக்கும் கருமமாம்.

(2) பிராப்த கருமமென்றால்=பலனையுண்டாக்க முன்னமே ஆரம்பித்த கருமமாம்.

(3) ஆகாமியம் என்றால் இனிமேல் நடக்கும் கருமமேயாம்;
சத் சாதனங்களினால் சஞ்சித கர்மத்தை நசிக்கச்செய்யலாம். பிராப்த கர்மம் தன் பலனைக்கொடுத்து நசித்துப் போகின்றது. ஆகாமிய கருமம் இவைகளால் யாதொரு பலனைக்கொடாதபடி தடுத்துவிடலாம்.

க—ஒரு மனுஷன் ஒரேஜன்மத்தில் இந்தசத்சாதனையை அனுஷ்டிப்பதனால் அந்த ஜன்மத்திலேயே மோக்ஷம் அடையலாமா?

வி—ஒருவனை பல ஜன்மங்களில் பிரவேசிக்கச் செய்யும் பிராப்த கருமத்தின் ஸ்திதிக்குத் தக்கபடியாகும் பிராப்த கர்மம் நசித்தபோதே மோக்ஷத்தை அடையலாம். அது ஒரே ஜென்மத்திலாகிலும் பல ஜன்மாந்தரங்களிலாகிலும் முடிவு பெறலாம். ஆனால் எவன் ப்ரபத்தியினால் எல்லா கருமங்களையும் முடிக்கிறானே அப்போது அவனுக்கு மோக்ஷம் இடைக்கத்தடை இல்லை. ஒருவன் மோக்ஷத்தை அடையத்தக்கவனாகும் போது சஞ்சிதம் விட்டுவிடுகின்றது. ஆகாமியம் அசக்தியைப்பெற, பிராப்தம் பாழ்த்துப் போகின்றது. ஆகவே பிராகிருதபந்தமாகிய கர்மம் இந்தகான்கு உபாயங்களால் நசித்துப் போகிறது.

க—இந்தச்சாதனங்களைக்கொண்டு ஹிரண்யகர்பர், மஹாதேவர், முதலான மற்ற தேவர்களையும் காளி முதலான தேவதைகளையும் த்யானம் செய்யும் விஷயத்தில் உபயோகப்படுத்தி மோக்ஷத்தை அடையக்கூடுமா?

வி—கூடாது. ஏனெனில், அத்தேவர்களெல்லாரும் பரமாத்துமா அல்லது ஈசுவரன் அல்லது பராபர வஸ்துவல்ல. அத்தேவர்களெல்லாரும் தம்தம் சத்கருமங்களினால் சில சுதந்தரங்களைப்பெற்று பரப்பிரம்மத்துக்கு அடியார்களாக இருப்பவர்கள். மோக்ஷத்தைக் கொடுக்கும் சக்தியையுடைய பரமாத்துமாவுக்கு இருக்கும்படியான குணலக்ஷணங்கள் இச்சில்வரை தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் இடையா. இத்தேவர்களுக்கும் ப்ராகிருத கர்மபந்தங்களிருப்பதால் ஜீவர்களை பந்தித்திருக்கிற கர்மங்களை போக்கடிக்கப் போதுமான சக்தி சாமார்த்தியங்கள் இடையா. மேலும் ஜீவாத்துமாக்களுக்கும் பரமசுகத்தைக் கொடுக்கவும் சக்தியிடையா. ஆகவே சதா லக்ஷ்மி சமேதனாகவிருக்கிறவ னெவனோ! விஷ்ணு, வாசுதேவன், நாராயணன் என்றாதி சிறந்த பெயர்களைப்பெற்று பிரகாசிப்பவனெவனோ! சர்வசக்தி சர்வவியாபகம், சர்வாந்தரியாமியாக இருந்து அண்ட பிண்ட சராசரங்களை நிருவஹித்து ஆதரித்து வரும் அப்பிரமேயன் எவனோ! எவனால்

ஜீவாத்மாக்கள் சகல கஷ்டங்களையும்விட்டொழிக்கப்பட்டு மோக்ஷ சாம்ராஜ்யத்தைப் பெறுகின்றனவோ! அவனே பரமாத்மா. அவனே பராபர வஸ்து. அவனே சர்வசக்தன். ஒப்பும் உவமையும் அற்ற உத்தமோத்தமன். அவன் ஒருவனே அடைவோருக்கே அனந்தகாலம் ஆனந்தபதவி கிடைக்கும். இதுவே விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் தாத்பரியம்.

இந்தச் சித்தாந்தத்தை விவரமாக அறிய விரும்புவோர் இராமானுஜ பாஷியம், தத்துவத்ரயம், தத்துவசேகரம், ஆசாரிய ஹிருதயம் முதலான கிரந்தங்களைப் பார்க்கக்கடவர்.

A CATECHISM OF THE VISISHTADWAITAM.

What is the Visishtadwaitam?

The word Visishtadwaita is composed of the two words Visishta and Adwaita. Adwaita means non-duality, or one reality; Visishta means containing the attributes (*visheshana*) *i e.*, containing Chit and Achit as sarira. The term Visishtadwaita, therefore, means the non-duality, or one reality—Parabrahman—which is united with Chit and Achit as its attributes.

How do you reconcile this system of Philosophy with certain passages in the Upanishads which set forth the doctrine of absolute non-duality?

These passages cannot be looked upon as teaching absolute non-duality, for there are other passages which teach the reality of Achit, Chit and Iswara, and others again teaching that Achit and Chit are the Sarira of Parabrahmam.

Hence there are seemingly conflicting passages in the Upanishads themselves, and the only way to reconcile them is to look upon Achit and Chit as the attributes of Parabrahman, and Parabrahmam, the only reality, as the centre of these attributes. Hence there is indissoluble union of the three and this is what is meant when non-duality is asserted in the Vedanta.

But is not Brahmam said in the scriptures to be nirguna (devoid of attributes and qualities)?

Yes, but by this it is not meant that Brahmam has no attributes whatever; for, every reality must have attributes (and Brahmam is a reality); but what is meant is, that Brahmam is devoid of those qualities of *Prakriti to which mankind is subject, such as bad qualities (heyagunas), material limitations and imperfections.*

Is not Parabrahmam said to be nameless?

Yes, because it has no particular name. It is signified by all names either directly or indirectly. Agni, Indra and other names signify it sometimes directly and sometimes indirectly. Narayana, Vishnu, and Vasudeva signify it directly.

Is not Parabrahmam said to be formless (nirakara) and colourless (arupa).

Yes. It is shapeless, formless and colourless, because it is omni-present, all-pervading and infinite, but it can take upon itself, by its own will, any form or body (which is finite) "of the colour of the sun."

What is Achit?

Achit (matter) is threefold. It is *Time* (*Kala*), *Nature* (*Mulapprakriti*) and *Suddasatwa* (intellectual substance).

What is time?

Time is said to be the cause of all changes, it is eternal, universal and unconditioned. Conditioned time (*Khandakala*) is not eternal, and is reckoned by the rotation and revolution of planets, as hours, days, yugas, kalpas, etc.

What is Nature?

Nature is the material basis (*upadana karana*) of the universe, just as clay is the upadana karana of the pot, and as such forms the body of the individual soul (Jivatma), and of everything else in the cosmos. It is different from either Chit (Jivatma) or Iswara. It has no origin, it is self-existing, eternal, universal and single, but it is in every respect subordinate to Brahman.

By what names is Nature called in the scriptures?

It is called Prakriti, Pradhana, Mulaprakriti, Avyakta and Maya. It is also sometimes signified by the words Tamas, Akshara and Brahmam. It is the centre of the three gunas, satwa, rajas and tamas; with these attributes it produces all its manifestations.

What is Chit?

It is Jivatma (soul) and is not material. It is eternal, not produced by anything else, and different from Achit and Iswara. The Jivatma in each individual is different from that in another. It is pure, blissful (anandamaya) atomic (anu), intellectual, immutable, the centre of intellect, the ego (subject to Karma till it attains Moksha), subordinate (sesha) to Parabrahmam. Until it attains Moksha it cannot exist without Prakriti. Every particle of Prakriti contains Jiva and is the sarira (body) of that Jiva which contains. Every Jiva has the Supreme Spirit as Sariri (antaryami). Parabrahmam pervades every Jiva as well as every particle matter.

What is Moksha?

There are two kinds: (1) Kaivalya, and (2) Brahmananda. Kaivalya is the enjoyment by Jiva, in its real condition, of supreme bliss; Brahmananda is enjoyment of supreme bliss by Jiva as Parabrahmam; *i.e.*, enjoyment of supreme bliss as Parabrahmam enjoys it. This is also called Sayujya.

Is not Sayujya the laya or absolute unity of the Jiva in Parabrahmam?

No, I have already said that Jiva does not become absolutely united with Parabrahmam. Sayujya means enjoyment of Brahmananda equally along with Parabrahmam as described in the Scriptures. This includes Salokya and Sarupya.

What are the essentials of Moksha?

Entire separation of Jiva from all connection with matter, and complete destruction of Karma whether good or bad. The word Moksha literally means release from bondage (bandha).

Is this Moksha attainable by every Jiva without exception? All Jivas can obtain Moksha if qualified to do so.

☞ சுத்த சைவமதமும், விசிஷ்டாத்துவைத மதமே; அந்த சித்தாந்தத்தை பிரபலப்படுத்தின ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர், விஷ்ணுவுக்கு பிரதியாக சிவபெருமானே பரமாத்துமாவாகக் கொண்டிருக்கிறாரே யொழிய மற்றபடி அதில் விசேஷ வித்தியாசங்களில்லை.

(28.) முண்டகோபநிஷத்து

3-வது முண்டகம் 1-வது காண்டம் முதல் வாக்கியம்.

த்வாசுபர்ணா ஸயுஜாஸகாயா ஸமாநம்
வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே; தயோரன்யஹ
பிப்பலம் ஸாத்வத்ய நஸ்நன்ன்யோ அபிவாகஸீதி.

பொழிப்புரை.

இரண்டு அழகான பறவைகள் இரட்டையாகவும், தோழமையுடனும் குடியிருக்கின்றன. அவைகளுள் ஒன்று செய்கைகளின் பயன்களையனுபவிக்கின்றது. மற்றொன்று பார்க்காமல் அனுபவித்துக்கொண்டு மாத்திரம் இருக்கின்றது.

விசேஷ உரை.

இரண்டு அழகிய பறவைகள் = ஜீவாத்துமாவும் பரமாத்துமாவும்; பரமாத்மாவினது அழகின விளக்கத்தைப்பெற்று ஜீவாத்மாவும் அழகுடையதா யிருக்கின்றது. ஜீவாத்துமா அற்குள்ளேயிருக்கிற பரமாத்துமாவுடன் எப்பொழுதும் ஒன்றுய்ச்சேர்ந்திருக்கின்றது. அவற்றிற்கிடையில் சிறிதிடமும் இல்லை. அவை இரண்டும் ஒருடலின்கண்ணே இருக்கின்றன; மேலும் அவை இரண்டும் தோழமையாயிருக்கின்றன. பரமாத்துமா ஜீவாத்துமாவினிடத்தில் சாக்ஷிரூபமாயிருந்துகொண்டு அதனது செய்கைக் குரிய பயன்களைக்கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஜீவாத்மா அதைப் பெற்றனுபவிக்கின்றது. பரமாத்துமா அபுவைத்த ஜீவாத்துமாவைக் காத்து வருகின்றது, ஜீவாத்துமா இம்மையிலிருந்துகொண்டு பரமாத்துமாவினிடத்தில் பிரீதியுடன் அதற்குப்பிரீதியாகிய காரியங்களைச் செய்துகொண் டிருக்கின்றது. பரமாத்துமா படைப்பது, ஜீவாத்துமா படைக்கப்பட்டது; பரமாத்துமா நியமிப்பது, ஜீவாத்துமா நியமத்துக்குள்ளடங்கியது; பரமாத்மா செய்கைக்குரிய பயனைத் தருவது, ஜீவாத்துமா அதை யனுபவிப்பது; பரமாத்மா ஒன்றே நமக்குத்தாணை. காம அவரை அருளால் விஷயசுகங்களையும், ஆத்ம சுகத்தையும் பேரின்பத்தையும், அனுபவிக்கின்றனம். ஜீவாத்துமா இவ்வுடலாகிய கூட்டின்கண்ணே இருந்துகொண்டும் அனைத்திற்கும் அன்னேபோன்ற பரமாத்துமாவினது அருளாகிய மார்பினிடத்தை போஷிக்கப்பட்டு பருவம் வந்த பொழுது இவ்வுடலை விட்டு நீங்கி அவரைப் பின்பற்றி அவருடன் எப்பொழுதும் சஞ்சரிக்கும்.

Two *beautiful birds* (1) cohabitants and friends, live in one common tree. (2) One among them enjoyeth the fruits thereof; the *other* fasting only witnesseth. (1) *God* and the soul. (2) The body.

இத்தியாதி சுருதிகள் துவைத சித்தாந்தத்தை ஸ்தாபிப்பதாக அநேகர் எண்ணியிருப்பதால், அந்தச் சித்தாந்தத்தின் சாரசங்கிரகத்தை வினவிடையாக இதனடியில காட்டுகிறோம்.

———:o:———

துவைத சித்தாந்த பிரபாகரர் ஸ்ரீ மத்துவாசாரியர் சரித்திர சார சங்கிரகம்.

மத்துவாசாரியர் கி. பி. 1119 ஆகஸ்டு மாதத்துக்குச் சரியான கலியுகாப்தம் 4220க்கு சரியான சாலிவாஹன 1040 விளம்பி-ஆவணி பஹுளம் 4-தேதியன்று துளுவ நாட்டில் உடுப்பிக்கருகில் பாஜாக க்ஷேத்திரத்தில் அனந்தேசுவர கிராமத்தில் ஜனித்தவர். முக்கிய பிராணதேவனென்ற வாயுவே, இராமாவதாரத்தில் ஆஞ்சனேயராகவும், கிருஷ்ணவதாரத்தில் பீமசேனராகவும், கலியுகத்தில் மத்துவாசாரியராகவும் இவர் அவதரித்தாரென்று சொல்லுவாருமுண்டு. இவர் தந்தையாகிய மத்தியகேஷபத்தர் இவருக்கு உபநயனமான உடனே விவாகம் செய்ய யோசித்திருந்தார்; இவரோ சந்நியாச ஆச்சிரமத்தில் சேர்ந்து ஜனோபகாரமாக உழைக்க பிரவர்த்தித்தார். இவருக்கு முதலில் வசுதேவாசாரியர், ஆநந்ததீர்த்தாசாரியர், என்ற பெயர்களுமுண்டு. தமது ஒன்பதாவது வயதிலேயே அச்சுதபிரகாசஸ்வாமிகளாகிய ஆசாரியருக்கு டோராகி கங்காயாத்திரைசெய்ய ஆரம்பித்தார்; ஆனால் ஆசாரியருடைய அனுக்கிரகத்தினால் வடகங்கையே இந்த இடத்துக்குவர அதில் அனைவரும்குளித்து அகமகிழ்ந்தார்கள். அது இன்றளவும் "மாத்துவஸரோவரம்" என்னும்பெயர்பெற்றிருக்கிறது. இவரது 17-வது வயதில் ஆசாரியர் இறந்து போக, இவர் பதரிகாச்சிரமத்துக்குப்போய் வியாசபகவானே தரிசித்தும், தத்துவஞானம்பெற்றும் எட்டு சாலக்கிராமங்களுடன் உடுப்பிக்கு வந்தும், அவைகளுக்கு எட்டு மடங்களை ஸ்தாபித்தும், வழியில் கோபிசந்தனத்தில் லகப்பட்ட ஒரு கிருஷ்ணவிக்கிரகத்தைக் கொண்டுவந்து உடுப்பியில் ஒரு கிருஷ்ணர் கோயிலையும் கட்டிவைத்தார். இவர் நிக்பாஷியம், தத்வோபநிஷத்பாஷியம், கீதாபாஷியம், பிரம்மசூத்திரபாஷியம்,

பாஷ்யத்துக்கு ஸ்ரீபாஷ்யம், பகவத்விஷயத்துக்கு பகவத்விஷயம், விஷ்ணுபுராணத்துக்கு விஷ்ணுபுராணம், தந்திரசாரம், அஷ்டோத்தரம் முதலான முப்பத்தேழு பெரிய கிரந்தங்களை இயற்றி, தமது மடத்தாருக்கு போதித்து, அவைகளை உலக ஜனங்களுக்கு போதிக்கும்படியாக ஏற்படுத்தி தமது 79-வது வயதாகிய கி. பி. 1198-ஆம் ஆண்டில் பிரவரிசித்திரை மாசம் 18-வது தேதியான சாலிவாகன 1120-ஆம் பிங்களவரு மாகசீ மாதபடியும் பதரிகாச்ரமத்துக்குப் புறப்பட்டுப் போனார். அப்படிப்போனவர் இதுவரையிலும் திரும்பிவராமையால் அவரிப்போதும் அந்த ஆச்ரமத்திலேயே ஸ்ரீவியாச பகவானிடம் இருப்பதாக இம்மதஸ்தர்கள் சொல்லுகிறார்கள்.

———:o:———

துவைத சித்தாந்த சார சங்கிரஹ விளக்கம்.

கா—(ஓர் துவைதசித்தாந்தியைப்பார்த்து) துவைதசித்தாந்தமென்றாலென்ன? என்று கேட்க,

து—துவி=என்றால் இரண்டு, அதாவது பரமாத்துமாவும் ஜீவாத்துமாவும்; பரமாத்துமாவும் பிரபஞ்சமும் வேறுவேறான இரண்டு வஸ்துக்களுண்டென்னும சித்தாந்தம். அல்லது பரமாத்துமா ஒரு தனிவஸ்து, மற்றதுகள் அதில் சேராத வேறுவஸ்துக்கள் என்னும் சித்தாந்தமேயாம்.

கா—இந்த சித்தாந்தம் ஸ்ரீ மத்துவாசாரியரே ஸ்தாபித்ததா? அல்லது இவருக்கு முன் இதையனுஷ்டித்தவர்களுமுண்டோ?

து—இது புராதனமான சித்தாந்தம். பரமாத்துமாவின் ஆதி ஹம்ஸத்தினிடம் சதுர்முக பிரம்மாவும், அவரிடமிருந்து சனகாதி தேவாகளும், துர்வாச ரிஷியும், ஆதியில் அநுஷ்டித்து வரவும்; அவர் சந்ததிகளாகிய ஸ்ரீஞானநிதி, கருடவாஹனர், கைவல்லியதீர்த்தர், ஞானசதீர்த்தர், வரதீர்த்தர், சத்தியபிராகியர், பிராகியர், அச்சுத பிரகாசர் முதலான மஹான்கள் அனுஷ்டித்தவர; இந்த அச்சுத பிரகாசரிடம் ஸ்ரீமத்துவாசாரியர் கற்று தெளிந்து இந்த சித்தாந்தத்தைப் பிரபலப்படுத்தினார்.

கா—இந்த துவைத சித்தாந்தத்தின் சாரசங்கிரகமென்னே?

து—விஷ்ணுபரமாத்துமா சர்வசக்தராயும், சர்வாந்தரியாமியாயும் சர்வலோக சரண்யராயும், இருந்து இந்த பிரபஞ்சத்தை ஜடபிரகிருதியிலிருந்து மாறும்படி நியமித்த நிமித்தகாரணர். ஜடபிரகிருதி உபாதானகாரணம். விஷ்ணு பரமாத்துமாவும், ஜீவாத்துமாவும், ஜடபிரகிருதியும் எவராலும் சிருஷ்டிக்கப்படாமல் முடிவற்று என்றுமுள்ள நித்திய வஸ்துக்களாம், இம்மூன்றும் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்று தனித்தனியான வஸ்துக்களாகவிருக்கினும்; பிரகிருதியும், ஜீவனும், விஷ்ணு பரமாத்மாவுக்குக் கீழ்ப்பட்டவைகளாம். ஜீவாத்துமா பிரகிருதி சம்பந்தமான ஸ்வரூபதிரோதான மத்திம குணங்களால் பீடிக்கப்படுவதனால், அநேக தர்மங்களுக்குட்பட்டு

ஜனன மரணநிகளில் சிக்கி தவிக்கின்றது. இப்படி தவிக்கும் ஜீவாத்துமா கர்ம கூயத்திலுல் ஜனன மரணநி பந்தங்களே விட்டொழித்தால் முக்தியையடையும். இந்த முக்தியடைவதற்கு முக்கியசாதனம் பக்தி. பக்தி என்னுல் மஹாவிஷ்ணுவினிடம் மனமுவந்த சிரத்தையுடன் தாசத்துவம் செய்து விஷ்ணுபிரசாதத்தை யடைதலாம். இப்படி விஷ்ணு பரமாத்துமாவின் கருணைகடாக்ஷமாகிய பிரசாதத்தையடைந்த விடத்து முக்தி நிடைப்பது நிச்சயம்; ஆகவே. ஒவ்வொரு ஜீவாத்துமாவும் தக்க முயற்சிசெய்த மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடையவேண்டியது.

க—இந்த சித்தாந்தத்துக்கு ஆதாரமென்ன ?

து—சுருதி, ஸ்மிருதி, பாஞ்சராத்திரம், மூல ராமாயணம், மஹாபாரதம் முதலானதுகளும் ஆதாரங்களாக இருப்பதன்றியில், பிரதியக்ஷம், அநுமானம், சுருதியாகிய மூன்று தருக்கசாஸ்திர பிரமாணங்களும் விசேஷ ஆதாரங்களாம்.

க—துவைதமத சித்தாந்தத்தின் தாத்பரியத்தைச் சொன்னீர் ! அதில் சில விசேஷங்களைப்பற்றி தெரிந்துக்கொள்ள விருப்பமிருக்கிறது ஆகவே இந்த சித்தாந்தத்தார் எத்தனை தேவர்களை அங்கீகரிக்கிறார்கள் ?

து—விஷ்ணுபரமாத்மா ஒருவரே பரப்பிரம்மம். ஆனுல் அவர் பிரபஞ்சாதிகளை சிருஷ்டிக்கவும், காக்கவும் காலத்துக்குக்காலம் பல அவதாரங்களை எடுக்கிறார்.

க—அப்படியானுல் பவத்சரும் ஒரு அவதாரம் தானே ? அவர் நாஸ்திகத்தை போதித்ததாகச் சொல்லுகிறார்களே அதெப்படி சாத்தியமாகும் ?

து—பவத்சரும் விஷ்ணுவின் ஓர் அவதாரமே. அவர் இந்தக்கலியுகத்தில் அவதரித்து அநேக ஜீவஹிம்சை முதலான அக்கிரமங்களைக்கண்டித்து மோக்ஷ சாதனமாகிய பவத்தாகமத்தை ஸ்தாபித்தார். அவர் கருதத்தை அறியாத மூடர்கள் அவரை நாஸ்திகரென்று சொல்லுகிறார்கள்.

க—விஷ்ணுவைவிட வேறு தேவர்கள் சிலர் உண்டென்று நீங்கள் நம்புகிறீர்களா ?

து—ஆம், உலக பரிபாலனார்த்தம் அநேக சில்லரை தேவர்களுண்டு. அவர்களெல்லாரும் விஷ்ணுபரமாத்மாவுக்கு கீழ்ப்பட்டவர்களே.

க—சில ஸ்திரீதேவதைகளுமுண்டென்று நம்புகிறீர்களல்லவா ?

து—ஆம். லக்ஷ்மி முதலானவர்கள், இவர்களில் லக்ஷ்மி தேவியானவள் கேவலம் பிரகிருதியின் சக்தியே.

க—அப்படியா ? விஷ்ணு பரமாத்துமாவின் குணலக்ஷணங்களைச் சற்று சொல்லும்?

து—அவர் அத்தவிதீயராயும், அநந்தமாயும் இருக்கிறார். அவர் அத்துவிதீயராய் இருப்பதனுல் அனைத்துக்கும் மேலானவராயும், ஒப்பும் உவமையுமற்றவராயும் இருப்பதன்றியில்; தன் இச்சையின்படி அநேக அவதாரங்களை எடுத்து அநந்தமாயும் இருக்கிறார். அவர் ஸத்தியஸ்வரூபி, ஞானஸ்வரூபி, அநந்தஸ்வரூபி, நித்தியஸ்வரூபி, ஜனன மரணமற்ற நிரந்தர், அவர் சர்வம் இடம் முதலானதற்கு மேலானவர்; முடிவற்ற குணபூர்ணர்.

க—அவர் அஸத்தலவா ?

து—ஆம். அவர் அவியக்கதமாக இருப்பதினால்.

க—அவருக்கு பெயருமில்லையல்லவா ?

து—அவருக்கு குறிப்பான எந்தப்பெயருமில்லை. அவர் சர்வர், எல்லாம் என்று சொல்லத்தக்கவர், அவரது பற்பல கிரியைகளுக்கருகி ஹிரணிய கர்பர், நாராயணர், விஷ்ணு என்றுகி பல பெயர்களால் புகழப்படுகின்றனர்.

க—அவர் கிற்குணரா ?

து—அவருக்கு பிரகிருதி சம்பந்தமானதும், மானவஜாதியாருக்கு இருக்கும் படியானவும் குணங்கள் இல்லையேயொழிய, நித்தியப்பொருளுக்குள்ள அனந்த நிவ்ய குணங்களெல்லாமுண்டு.

க—பரமாத்மாவுக்கு பிரகிருதி சம்பந்தமான குணங்களில்லாவிடில் அவர் பிரபஞ்சத்தையும் பிரஜைகளையும் சிருஷ்டிப்பதெப்படி ?

து—சிருஷ்டியென்பதனால் சூனியத்திலிருந்து ஜகத்தையும் ஜனங்களையும் உண்டுபண்ணுகிறதென்று அர்த்தமல்ல. சூனியத்திலிருந்து யாதொன்றையும், சிருஷ்டிப்பது அசம்பவம்; அநாதியாகவிருந்த மூலபிரகிருதியிலிருந்து மண்ணுலகத்தையும் மனுஷரையும் தோன்றச்செய்தார். இதுதான் சிருஷ்டிக்கு அருத்தம்.

க—அவருக்கு ரூபமும் வருணமுமில்லையல்லவா ?

து—அவருக்கு எவ்வித ரூபமும் வருணமுமில்லை.

க—அப்படியானால் பரமாத்துமாவோடு வேறு வஸ்துக்களும் அநாதியாக இருக்கிறதென்றல்லவா வற்படுகிறது ?

து—ஆம். ஜடமாகிற பிரகிருதியும், ஜீவனென்னும் மானுஷ ஆத்மாவும் வேறு சிலவும் பரமாத்துமாவைப்போல அநாதியாக இருக்கின்றன. ஆனால் அவைகள் யாவும் பரமாத்துமாவுக்குத் தாழ்ந்தவைகள்.

க—அப்படியானால் பரமாத்துமா பிரபஞ்சத்துக்கு காரணரென்று எப்படி சொல்லலாம் ?

து—இதைப்பற்றி சற்று விவரமாகச் சொல்லுகிறோம் கேளும். சாதாரண காரணம் இரண்டுவகைப்படும்; எப்படியெனில், தட்டான் பொன்னினால் ஒரு பதக்கத்தைப் பண்ணினதாக வைத்துக்கொள்வோம்; இவ்விடம் பதக்கம் காரியம்; பொன்னும் தட்டானும் இரண்டுவித காரணமாம். பதக்கம் செய்வதற்கு முக்கிய காரணமாக இருந்த பொன் உபாதான காரணம்; தட்டான் பொன்னைத்திரட்டிச்செய்ய கருவியாக இருப்பதால் கருவிகாரணம் அல்லது நிமித்த காரணனுகிறான். இதைப்போல இந்த உலக சிருஷ்டியைப்பற்றி பரிக்ஷிப்போமாகில் இரு காரணங்களிருக்கின்றன. அதாவது பிரபஞ்சத்துக்கு ஜடபிரகிருதி முக்கியமாகிய பதார்த்தத்தைத்தருவதனால்உபாதானகாரணமாயிருக்கிறது. இந்தஜடபிரகிருதிக்குள் பரமாத்துமா புருஷ ரூபமாக கோஷபாகியாமசமாக தண்டியதனால் கருவிகாரணம் அல்லது நிமித்தகாரணராகிறார். ஜடபிரகிருதி பூமாத்துமாவின் சக்தியும் தண்தெலுமின்றி பிரபஞ்சமாக மாறும் வல்லமை

யற்றதாகையால் பரமாத்துமாவே பிரபஞ்சத்துக்கு பரம காரணரென்று சொல்லப்பட்டனர்.

ந—அப்படியா, இந்த பிரபஞ்சத்திலிருந்து எதெது எப்படி யெப்படி தோன்றியது ?

அ—படைப்பு பத்துவகை. முதலில் தோன்றியது மஹத்து. (புத்தி) இரண்டாவது அஹங்காரம்; இதில் வைகாரிக, தியாஜஸ, பூதாதி என்ற மூன்று உட்பிரிவுகளுண்டு. (3-வது) இதிலிருந்து ஆகாசம், வாயு, தேஜஸ, அப்பு, பிருதிவி ஆகிய தன்மாத்திரைகள் பிறந்தன (4-வது) பஞ்சேந்திரியங்களும் காமேந்திரியங்களும் பிறந்தன; (5-வது) தேவதைகள் பிறந்தன; (6-வது) தாமச, மோஹ, மஹாமோஹ, தாமசமிஸ்ர, அந்ததாமிஸ்ரமென்னும் அக்ஞானம் அல்லது அவித்தை பிறந்தன. இவ்வாறும் பிராகிருத சர்காமென்று சொல்லப்படும். (7-வது) ஸ்தாவரம்; (8-வது) கிரியாக சுரோதமென்னும் பிராணிகள் பிறந்தன; (9-வது) ஊர்வாக சுரோதமென்னும் மனுஷ ஜாதி பிறந்தது, இம்மூன்றும் வைகிருதசர்காமென்று சொல்லப்படும். (10-வது) இந்த ஒன்பதுவித சிருஷ்டிகளைப் பாதுகாக்கபரமாத்துமாவே பல அவதாரங்களாக தோன்றியதாம்.

ந—இப்படிப்பட்ட சிருஷ்டி எப்போதுண்டாகிறது ?

அ—முட்டைகளுள் கரு முதலான ஜந்துக்கள் அடங்கியிருப்பதுபோல், ஜடபிரகிருதியில் அடங்கி இருந்த இவையனைத்தும், ஒவ்வொரு பிரும்ம கல்பகாலத்தில் தோன்றும்; இப்படிப்பட்ட பிரம்மகல்பங்கள் அநேகமாயிற்று, இனனும் அநேகம் ஆகும்; இந்த காலசக்கிரத்தின் அற்புதத்தை யறிய யாராலாகும் !

ந—பிரம்ம கல்பமென்றாலென்ன ?

அ—4320000ஹ ஒரு கலியுகம், 864000ஹ ஒரு துவாபரயுகம், 1296000ஹ ஒரு திரேதாயுகம், 1788000ஹ ஒரு கிருதயுகம், இந்நான்கும் கூடிய 4320000ஹ ஒரு மஹாயுகம், இப்படிப்பட்ட எழுபத்தொரு மஹாயுகம் ஒரு மன்வந்தரம்; அல்லது ஒரு மநுவின அரசாட்சிகாலம் 14-மன்வந்தரங்கள் சந்தியுள்பட 1000 மஹாயுகங்கள், இதுவே ஒருகல்பம். அல்லது பிரம்மாவுக்கு ஒரு நாள். இப்படிப்பட்ட 360-நாள்கள் இரவும்பகலுங்கூடி பிரம்மாவுக்கு ஒரு வருஷம். இப்படிப்பட்ட 100ஹ ஒரு பிரம்மாவின் ஆயுசு முடிவு; இதுவே ஒரு மகாகல்பமாம்; அதாவது 311040000000000 மனுஷவருஷங்களாம். இந்த பிரபஞ்சம் ஜடபிரகிருதியிலிருந்து தோன்றி இதில் பாதிபாக காலமாகிவிட்டது. இப்போது இரண்டாவது பாகம் ஆரம்பித்திருக்கிறது. அதாவது பிரம்மாவின் 58-வது வருஷம் ஆரம்பித்தது. இதற்குமுன் ஆறு மநுக்கள்மாண்டார்கள், இப்போதிருக்கும் ஏழாவதாகிய வைவஸ்வதமனு அரசு செய்கிறார்.

ந—பரமாத்துமாவும், ஜடபிரகிருதியும், ஜீவனும் அகாதி நித்திய வஸ்துக்களென்றும்; பிரபஞ்ச மாற்றத்தையும், பரமாத்துமாவின் குணலக்ஷணங்களையும் சொன்னீர்; இனி ஜடபிரகிருதியின் லக்ஷணத்தை சற்று சொல்லுங்கள் பார்ப்போம் ?

அ—ஜடம்—கர்த்தத்துவமற்றது; ஆகவே லக்ஷ்மி என்னும் பிரகிருதியிலிருந்து அந்தச்சக்தியைப் பெறுகிறது, இந்த லக்ஷ்மி என்னும் சக்தியானது

பரமாத்துமாவுக்கு வேறானதாயும்; காலம், இடம் முதலானதுகளைப் போல அளவில்லாததாயும்; எப்போதும் எவ்விடத்தும் பரமாத்துமாவோடு இருக்கிறது. இந்த லக்ஷணமியை பரமாத்துமாவோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது அது பரதந்திரமும் அபரிபூரணமும் மானதாக இருக்கினும், மற்ற பொருள்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பூரணமுள்ளதாயும்; ஜடமும் அநாதியாகவும், அதன் சத்துவத்தில் பதார்த்தமானபடியால் களிமண் எப்படி ஒரு பாத்திரத்துக்கு முக்கியகாரணமாக இருக்கிறதோ அதுபோல இந்த ஜடமே பிரபஞ்சத்துக்கு உபாதானகாரணமாக இருக்கிறது; ஆகவே இந்த ஜடமானது ஜீவனுக்கு தேகமாகிறது. இப்படி ஜடமானது உபாதான காரணமாகிறபடியால் சத்துவ, ரஜோ தம குணங்களோகொண்டிருக்கிறது.

ச—அப்படியா! இனி ஜீவன் அல்லது ஜீவாத்துமாவின் இலக்ஷணத்தைச் சொல்லும்?

கு—ஜீவன் பிரகிருதியல்ல. அது அநாதி நித்தியவஸ்து; ஆனால் பரமாத்துமாவுக்கு கீழ்ப்பட்ட ஓர்தனிவஸ்து. ஜீவன் ஜடதேகத்தில் கட்டுண்டபோது அந்த ஜடத்துக்கு இயற்கையாக உள்ள குணத்திரயங்களைப் பற்றுகின்றது. இது அநந்தவிதம். ஒவ்வொரு மானிட சரீரத்திலிருக்கும் ஒவ்வொரு ஜீவனும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. ஆயினும் எல்லா ஜீவர்களையும் (தொகுதியாக) மூன்று வகுப்புகளாக பிரிக்கலாம்.

ச—அம்மூன்று விதங்களின் விவரமெப்படி?

1-வது முக்தியோகிகள் அதாவது நிரந்தர பேராநந்தத்தை அனுபவிப்பவர்கள்.

2-வது தமோயோகிகள், அதாவது நிரந்தர கஷ்டங்களை அனுபவிப்பவர்கள்.

3-வது நித்திய சம்சாரிகள், அதாவது சுக துக்கங்களை சமமாக அனுபவிப்பவர்கள்.

இம்மூன்று வகுப்பாருள்ளும் ஒருவருக்கொருவர் வித்தியாசமுள்ளவர்கள் இருப்பார்கள்.

ச—இந்த அவைத சித்தாந்தத்திலும் பரமாத்துமாவுக்கும் பிரகிருதிக்கும் ஜீவாத்துமாவுக்கும் வித்தியாசமிருப்பன ஸ்பஷ்டமாகிறதன்றே?

கு—ஆம். பஞ்சபேதங்களுண்டு. அதாவது—

(1) பரமாத்துமா மற்ற எல்லாப்பொருள்களிலும் வேறுபட்டவர்.

(2) ஜடம், பரமாத்துமாவுக்கும் ஜீவாத்துமாவுக்கும் வேறுபட்டது.

(3) ஜீவன், பரமாத்துமாவுக்கும் ஜடத்துக்கும் வேறுபட்டது.

(5) ஜடாம்சம், அனந்த பிரகிருத அணுக்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை.

(5) ஜீவர்கள், அனந்தகோடி. அவைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவைகளாம்.

ச—இந்த வித்தியாசம் அல்லது வேறுபாடுகள் உண்மையானவைதானா?

ச—ஆம். பரமாத்துமாவும் அவரது லக்ஷணங்களும் நித்தியமானவைகள். ஜீவன், நித்தியமானவை; ஜடமும் பிரபஞ்சமும் நித்தியமானவை; பரமாத்துமா, ஜீவாத்துமா, ஜடத்தின் வித்தியாசங்களும் நித்தியமானவை; ஜீவர்களின் அநந்தகோடி பேதங்களும், பரமாணுக்களின் அநந்தகோடி பேதங்களும் நித்தியமானவையே.

க—பிரதி தினமும் பாத்திரங்கள் உடைந்து புழுதியாவதும், நதிகள் வற்றி நாசமாவதும், பருவதங்கள் இடிந்து பொடியாவதும், பட்டணங்கள் அழிந்து பாழ்த்தப்போவதும் பிரத்தியக்ஷமாகப் பார்க்கச்சே இந்த பிரபஞ்சம் நித்தியமானதென்று எப்படி சொல்லலாம்.

ச—நாம ரூபமான நதி, பருவதம், பட்டணம், பாத்திரம் முதலானதுகள் நித்தியமானவை என்று சொல்ல வரவில்லை. நாமரூபமுள்ளவை யாவும் நசித்தே தீரும். சிருஷ்டிக்குட்படாத சூக்ஷமப்பொருள்கள் மாத்திரம் நித்தியமாம். ஒரு பாத்திரத்தை உடைத்து பொடிசுரணமாக்கி விடலாம், உண்மையே; ஆனால் அதன் அணுரூபமான சூக்ஷமப்பொருள் மாத்திரம் என்றும் நித்தியமாயிருக்கும். இந்தக் கருத்தின்படி உலகம் நித்தியமென்று சொல்லப்பட்டது.

க—ஜீவாத்துமாவின் விஷயத்திலும் இப்படித்தானே ?

ச—ஆம். ஜீவாத்துமா குடியிருக்கும் ஜடதேகம் நசிக்கும்; ஜீவன் மாத்திரம் நித்தியமாயிருக்கிறது.

க—அப்படியானால் ஜனன மரணங்களென்பதின் பொருளென்னே ?

ச—ஜீவாத்துமா ஒரு தேகத்தில் கொஞ்சகாலம் வசித்து, அதைவிட்டு வேறு தேகத்தையடைகின்றது; இப்படி ஜீவாத்துமா ஒரு தேகத்தில் பிரவேசிப்பதே ஜனனம்; அத்தேகத்தை விட்டுப் பிரிவதே மரணம்; அப்படி பிரிந்த ஜீவாத்மா வேறு தேகத்தில் பரவேசிப்பதே மறு ஜனனம்; ஆகவே, ஜனன மரணங்கள் ஜடபதார்த்தத்தைச் சார்ந்ததேயொழிய ஜீவாத்துமாவுக்கில்லை.

க—நல்லது, உங்கள் சித்தாந்தத்தின்படியே பரமாத்துமா என்றும் நிறைந்திருக்கச்சே, ஜடமும் ஜீவாத்துமாவும் அந்தப்பரமாத்துமாவுக்கு வித்தியாசமானவைகள் என்றும்,வேறுபட்டவைகளென்றும் சொல்வதெப்படி?

ச—பரமாத்துமா எங்கும் நிறைந்து அணுவிலும் அணுவாக இருப்பது உண்மையே; ஆனால், அவர் எல்லா வஸ்துக்களிலும் சேர்ந்திருக்கிறாரேயொழிய, எல்லா வஸ்துவும் அவராகவே இருக்கவில்லை.

க—என்ன ! ஏகமாய் சம்பந்தித்திருப்பதை தனியேகமாக பிரிக்கக்கூடுமோ ? பூரமாத்மாவை விட்டு ஜீவாத்மாவை பிரிப்பதெப்படி ஐயா ?

ச—சம்பந்தம் என்பதில் இருவகையுண்டு. அதாவது—ஒரு மனுஷனுக்கும் அவன்உடைக்கும் இருக்கும் சம்பந்தத்தைப்போல. இந்த சம்பந்தத்துக்கு ஒரு ஆதியும் உண்டு, ஓர் அந்தமுமுண்டு; இந்த சம்பந்த ஆதியை, அந்த மனுஷனுக்கும், அவனுடைய உடைக்குமுள் கெடுதி வராதபடி முடிவாக்கலாம்; ஆனால், பரமாத்துமாவுக்கும் ஜீவாத்துமாவுக்கும் இருக்கும் சம்பந்தம் இப்படிப்பட்ட ஆதியும் அந்தமும் உள்ளதல்ல. அது அவினாபாவ சம்பந்தம்,—அதாவது ஒரு விருக்ஷத்திற்கும் அதன்

ரசத்துக்கும் இருக்கும் சம்பந்தத்தைப்போல என்றும் இருப்பதும்; அந்த விருக்ஷத்தைக் கெடுத்தாலன்றி அதன்ரசத்தைப்பிரிக்கக்கூடாததுமான சம்பந்தமேயாம்; ஆகவே, பரமாத்துமாவுக்கும் ஜீவாத்துமாவுக்கும் மூழு சேர்க்கையில்லை; ஆனால் இரண்டும் கூட்டுறவாக இருக்கின்றன. இந்த கூட்டுறவு பிரிக்கக்கூடாதது; அப்படிக்கிருக்கினும், அவைகள் இரண்டும் ஒன்றேயல்ல.

ந—அப்படியானால் உமது துவைத சித்தாந்தத்தை அத்துவைத சித்தாந்தத்தை போதிக்கும் சுருதிகளோடு சமரசப்படுத்துவ தெப்படி?

து—அத்துவைதத்தைப்பற்றிச் சொல்லுவதாகச் சொல்லும் சுருதிகளில் இரண்டும் (ஜீவாத்துமா பரமாத்துமா) ஒன்றே என்று சொல்லவில்லை; ஒன்றில் இரண்டு என்று சொல்லுகின்றன. உதாரணமாக ஒரு விருக்ஷத்திற்கும் அதிலிருக்கும் ரசத்திற்கும்,—ஒரு மனுஷனுக்கும் அவனது சக்திக்கும்,—உலகத்திற்கும் அதிலுள்ள உப்புக்கும் எப்படி வேறுபாடுகள் இருக்கின்றனவோ; அப்படியே, ஜீவாத்துமாவுக்கு பரமாத்துமா வேறுபட்டிருக்கிறது. இப்படி வேறுபட்டிருந்தும், எப்படி விருக்ஷமும் அதன் ரசமும் பிரிக்கக்கூடாததாயிருக்கின்றதோ; அப்படிப்போல, ஜீவாத்துமா பரமாத்துமாவிலிருந்து பிரிக்கக்கூடாததாயிருக்கிறது. இதைப்பற்றி பேசும் சுருதிகளையே அத்துவைத பரமானவைகள் என்று சிலர் எண்ணுகிறார்கள். அப்படி எண்ணுவது பிசகு; பரமாத்துமா சுதந்திரமும் பூரணமுமானது; ஜீவாத்துமா பரதந்திரமும அபரிபூரணமுமானது; ஆகவே இவ்விரண்டும் ஒன்றே என்றுசொல்லிற் பொருந்தாது.

ந—அப்படியானால் தத்துவமஸி=அது நீ = நீ அதுவாயிருக்கிறாய் என்ற சுருதி வாக்கியம் சொல்லுகிறப் பொருளென்ன? இந்த சுருதி வாக்கியத்தினால் ஜீவாத்துமாவும் பரமாத்துமாவும் கேவலம் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பதாக சொல்லாமல், ஜீவாத்துமாவே பரமாத்துமா என்று பொருளாகின்றதே?

து—அதேதா! அல்ல. இந்த சுருதி வாக்கியத்தினால் ஜீவாத்துமாவுக்கும் பரமாத்துமாவுக்கும் ஆருக்கும சம்பந்தத்தைக் காட்டுகின்றதேயொழிய, அவ்விரண்டும் ஒன்றென்று காட்டவில்லை. உதாரணமாக-தத் என்னும் பதமானது அறிய கூடாத அப்பிரமேய வஸ்துவைகுறிக்கிறது; துவம் என்னும்பதம் அறியக்கூடிய பரமித வஸ்துவைக குறிக்கிறது; ஆகவே, இரண்டும் ஒன்றே என்று சொலலக்கூடாது. மேலும், இந்த தத்துவமஸி என்ற வாக்கியமிருக்கும் சுருதி முழுதையும் இலக்கண ரீதியாக பரிசோதித்து பார்ப்போமானில் அதில் வருபபுகள் இருததல் பிரதானியகூமாகும்; எப்படியெனில், அதத்+துவம்+அஸி=அது நீ அல்ல=அது நீ ஆகவிருக்கவில்லை. என்றால் தத் = பரமாத்துமா, ஒன்றே சுவயம்பும் சுவீதந்திரமானது என்றும், துவம்=(நீ)=ஜீவாத்துமா, அது=பரமாத்துமா, அஸி =இருக்கிறதில்லை என்றும் பொருளாகும்.

ந—துவைத சித்தாந்தத்தின் கருத்து இப்படியானால், இனி ஜீவாத்துமாவின் முடிவுதானெப்படி?

து—ஜீவாத்துமா பிரகிருத சம்பந்தமான பந்தங்களை விட்டு (மோக்ஷம் அல்லது முக்தியினால்) பரமாத்துமாவையடைதே. உலக சகலவிதமும் ஆசா

பாசங்களும் கூணபங்குரமானவைகளாகவும் நிலையற்றவைகளாகவும் இருக்கின்றமையால் ; புத்திமான்கள் நித்தியசுகமாகிய முக்தியையடைய முயலல் வேண்டும்.

ந—முக்தியின் விலக்ஷணங்களெவை ?

து—கர்மக்ஷயம், யுத்கிராந்தி, அர்ச்சாராதிமார்க்கம் என்ற மூன்று லக்ஷணங்களையுடையது. ஜீவாத்துமா இவைகளைக்கடந்தது பிறகு போகம் என்னும் காண்டத்தையடைகின்றது.

ந—கர்மக்ஷயமென்றாலென்ன ?

து—கர்மத்தை நசிக்கச்செய்தல். அதாவது மனம், வாக்கு, காயத்தால் செய்யும் கிரியைகளையும், அவற்றின் பலனையும் விட்டொழிக்கலாம். ஜீவாத்துமா தேகத்தில் சம்பந்தப்படுவதினால், அந்தத் தேகப்பிரகிருதிக்கு இயற்கையான நன்மை தீமையாதி குணங்கள் ஜீவாத்துமாவையும் பீடித்து அதேக தொழில்களை செய்யச்செய்து கர்மத்தையடையச் செய்கின்றன. இப்படி வரும் கர்மம் அதேக ஜனனமரணங்களையடையச் செய்கின்றது. கர்மம் நசித்தால் ஜனன மரணங்கள் இல்லை.

ந—யுத்கிராந்தி என்றாலென்ன ?

து—கர்மத்தை விட்டொழித்த ஜீவாத்துமா, மானுஷீக தேகத்திலிருக்கும் 72000 இரத்த நரம்புகளில் பிரதானமானதாகிய ஸுஷும்னம் என்னும் பிரகாச வழியால் தேகத்தை விட்டுப்போகும் பிரவேசமேயாம்.

ந—அர்ச்சாராதி மார்க்கமென்றாலென்ன ?

து—அக்கினி முதலான வழிகளேயாம். அதாவது ஸுஷும்னமென்னும் வழியாக பிரவேசித்த ஜீவாத்துமா கபாலத்தில் சிறுபுள்ளி போலிருக்கும் பிரம்ம ரந்திரத்தின் வழியாகப் போய், அக்கினி மண்டலாதிகளில் பிரவேசித்து, கடைசியில் முடிவான ஸ்தானத்தைப்பெறுதலாம்.

ந—போகமென்றாலென்ன ?

து—இவ்விதமாக பிரவேசித்த பிறகு ஜீவாத்துமா அடையும் நித்திய சுகமேயாம்

ந—ஜீவாத்துமா இப்படி நித்திய சுகத்தையடைய இம்மூன்றுவித மார்க்கங்களிலும் பிரவேசிக்கவேண்டுமா ?

து—ஆம். கர்ம ஞானத்தினாலும், யோகாப்பியாசத்தினாலும் இந்த நித்திய சுகத்தையடைய வேண்டும்.

ந—இந்த கர்மபந்தத்தை விலக்குவதெப்படி ?

து—விஷ்ணுபரமாத்துமாவினிடம் பக்தியைக்காட்டி அவரது கிருபையாகிய பிரசாதத்தைப்பெற்றால் கர்மம் விலகும்.

ந—பரமாத்துமாவினிடம் பக்தியைக்காட்டுவதெப்படி ?

து—சுய தேவைகளை விட்டு, சுயவித பக்தியைக் காட்டுவதாம்.

ந—இந்த சுய (என்பது தேவை) குற்றங்களென்ன ?

து—(1) பரமாத்துமாவும் ஜீவாத்துமாவும் ஒன்றே என்றெண்ணுதல்.

(2) பரமாத்துமா குணங்களற்றவரென்றெண்ணுதல்.

(3) பரமாத்துமா அபரிபூரணரென்றெண்ணுதல்.

(4) பரமாத்துமாவுக்கு சமானருண்டென்றெண்ணுதல்.

(5) பரமாத்துமாவுக்கு மேலொரு பரம தத்துமா உண்டென்றெண்ணுதல்.

(6) பரமாத்துமா வேறு, அவர் அவதாரம் வேறென்றெண்ணுதல்.

(7) அவர் அவதாரங்களே தேவாவதாரமல்ல கேவலம் மனுஷாவதாரமென்றெண்ணுதல்.

(8) பாகவதர்களே துஷித்தல்.

(9) பரமாத்துமாவுக்கு சர்வசக்தி இல்லை என்று மறுத்தல்.
ஆகிய ஒன்பது குறறங்களேயாம்.

ச—இனி நவவித பக்திகளெவை ?

து—மேல் சொன்னவைகளுக்கு வைதிரேகமான அனுஷ்டானங்களே.

ச—மேல்சொன்ன ஒன்பது குற்றங்களே நீக்கி நவவிதபக்தியை யடைய சுலப சாதனங்களெவை ?

து—அங்கானம், காமகரணம், பக்தி முதலானவைகளே.

ச—அங்கானமென்றாலென்ன ?

து—ஸ்ரீ விஷ்ணு பரமாத்துமாவின் ஆயுதங்களாகிய சங்கு சக்கிராதிகளே பிரதினமும் கோபிசந்தனத்தில் தொட்டு முகம் மாபு புஜம் முதலானவிடங்களில் முத்திரையிட்டுக்கொள்ளுதலும், தம் மடாதிபதிகளால் சங்கு சக்கிரங்களே சூடாக்கி முத்திரையிட்டுக்கொள்வதுமேயாம். இவைகளால் ஈசுவர சக்தியைப்பெறலாம்.

ச—காமகரணமென்றாலென்ன ?

து—தம் புத்திர மித்திரர்களுக்கு விஷ்ணுபரமாத்துமாவின் பலபெயர்களே வைத்து அடிக்கடி அழைத்து அவரை நினைத்துகொண்டிருத்தலாம்.

ச—பஜனையென்றாலென்ன ?

து—பரமாத்துமாவின்மீது பூரண அன்பை வைத்தும், அவரது மக்களாகிய மானவஜாதியார்மீது இரு பையோடுசேர்த்தலுமாம். அதாவது (1) சத்தியம் (2) ஹிதம், (3) பிரியம், (4) சுவத்தியாபனம், (5) தானம் (6) பாரித்திராணம், (7) பாரிரக்ஷணம், (8) தயை, (9) ஸ்புர ஹதிருப்தி, (10) சிரதை என்ற தசவித தருமங்களே அனுஷ்டித்து இவைகளால் மனம் வாக்கு காயம் சுத்தியோடு பரமாத்துமாவை அடைவதாம்.

ச—மேல் சொன்ன தசவிதத்தருமங்களேத் தழுவி வருவதனால் பிரயோஜனமென்ன ?

து—அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்துவித கோசங்களினாலும்; ஸ்தூல சூக்ஷும காரண தேகங்களினாலும் மூடப்பட்டிருக்கும் ஜீவாத்துமா இகோசங்களேயும் தேகங்களேயும் படிப்படியாக விட்டொழித்துக்கொண்டு மோக்ஷத்தையடையலாம்.

ச—அப்படியடைந்தபிறகு ஜீவாத்துமாவுக்கு தேகமில்லையல்லவா ?

து—பிரகிருத சம்பந்தமான ஜடதேசமில்லை. ஆனால் பரமாத்துமாவினிடம் நித்திய சுகதையடைய சிவ்மாத்திரையான தேகமுண்டு.

ந—எல்லா ஜீவாத்துமாக்களும் இப்படி பூரண சுகத்தையடைகின்றனவா?

து—இல்லை. அந்தந்த ஜீவாத்துமாவின அந்தஸ்துக்குத் தக்கபடி சாரூப்பியம் சாலோக்கியம், சந்நிதி, சாயுஜ்ஜியம் என்னும் நான்குவித பதவிகளில் லயத்தையடைகின்றன.

ந—பரமாத்துமாவும் ஜீவாத்துமாவும் வேறு வேறான தனிப்பொருள்களென்று முன் சொன்னீரே, அப்படியிருக்க எந்த ஜீவனும் நான்காவது படியாகிய முக்தியை(அதாவது பரமாத்துமாவில் ஜீவாத்துமா லயமாகிற ஸ்திதியை) அடைகிறதென்று எப்படி சொல்லலாம?

து—ஜீவாத்துமா முக்தியினால் (அது பரமாத்துமாவில்) லயமாகிறதென்றல்ல. ஜீவனும் பரமனும் ஒருக்காலும் ஒன்றாகிறதில்லை. ஜீவாத்துமாவானது பூரண சுத்தியைப்பெற்றபோது பரமாத்துமாவின் சன்னதியில் பிரவேசித்து, தான் தனியாகவும், தனது இயற்கையான மனசாகியுடனும் ஜனன மரண மற்றதாகியும் இருந்து, பரமாத்துமாவின் முன்னிலையில் சதானந்தத்தை அனுபவிக்கும்; இதுவே முக்தி, இதுவே மநுஷனுடைய முடிவான முடிவு.

ந—ஐயா உண்மை இப்படி இருக்க, ஆரியர் வேதத்திலிருக்கும் உபநிஷத்துக்களெல்லாம் ஸ்வரூப அத்துவைத சித்தாந்தத்தை ஸ்தாபிப்பதாக அநேகர் சொல்லுவதற்குக் காரணமென்ன?

து—ஆரியவேத உபநிஷத்துக்களின் உண்மையான கருத்தை இலக்கண சாஸ்திரீதியாகவும், தருக்கசாஸ்திரீதியாகவும் அறிந்துக்கொள்ள சக்தியற்ற சாதாரண ஜனங்கள்தான் அப்படிச்சொலலுவார்கள்.

ந—அப்படியா? பரமாத்மா வேறு ஜீவாத்துமா வேறு என்றும், பரமாத்துமா ஜீவாத்துமாவிலும் சிரேஷ்டமானதென்றும், இந்தியாதி வைத சித்தாந்தத்தை ஸ்தாபிக்கும் சில உபநிஷத்துக்களை உதாரணமாகக் காட்டினீர்களா?

து—ஆஹா! அப்படியே காட்டுகிறேன்.

சுவேதாசுவதரம் 6–16.

ஸவிச்வதிருதவிச்வ விதாத்மயோநி: காலகாரோகுணி
ஸர்வவித்ய: பிரதாநக்ஷேத்ரக்ஞ பதிருக்குணேச:
ஸம்ஸார மோக்ஷ ஸ்திதிபந்தஹேது:

பொழிபபுரை.

அவர் ஜகத்தின் சிருஷ்டிகர்த்தா, ஜகத்தையறிபவர், ஆத்மாக்களின் உற்பத்தி ஸ்தானம், காலத்தின் கர்த்தா, சமஸ்த நற்குணங்களும் நிறைந்தவர், ஸர்வக்ஞர், பிரகிருதிக்கும் ஜீவனுக்கும் பதி, குணங்களுக்கு நாயகர், அவர் ஸம்ஸாரத்தின் மோக்ஷ ஸ்திதி பந்தத்தங்களுக்குக் காரணர்.

விசேஷ உரை.

பிரும்மத்தினிடம் சர்வசக்தி, சர்வக்ஞத்துவம், மங்களபாவம் முதலான

குணங்கள் இருக்கின்றனவாகையால், அவரை இந்தச்சுருதியில் குணி. என்று சொல்லியிருக்கிறது. சிருஷ்டிப்பொருள்களிலுள்ள குணங்களை அவர் நியமிப்பவர்; ஆகையால், அவரை குணேசர் என்று சொல்லியிருக்கிறது. அவர் தமது சர்வசக்தியினால் ஜகத்தைச் சிருஷ்டித்தார்; சிருஷ்டித்தபடியால் சிருஷ்டித்தவர் தன்னை அவசியம் அறிகின்றார்; ஆகையால் அவரை வி ஸ் வ வித் என்றும் ஸர்வக்ஞரென்றும் சொல்லியிருக்கின்றது. ஜடவஸ்துக்களின் சகுண சூட்சும பாவத்தை பிரதானம் அல்லது பிரகிருதியென்று சொல்லுகின்றார்கள்; அந்த ஜடபிரகிருதிக்கும் சேதன ஜீ வா த் து மா வு க் கும் பிரம்மமே பதி. அதாவது பாவனகர்த்தாவாகின்றார்; ஏனெனில், அவரது இச்சையினாலேயே அவைகளினது சத்தை குறிக்கின்றது. ஜீவாத்மாவை உலகத்தில் சேர்த்தவைத்தல், உலகத்தில் காப்பாற்றுதல், உலகத்தினின்று விடுவித்தல் அதாவது அதன் உன்னதியின் எல்லாக்கிரமமும் அதன் சுபத்தின் பொருட்டு மங்களமயரான பரமாத்மாவின் மூலமாகவே நியமிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த சுருதியில் அவரை விச்வகிருத் (ஜகத்தை சிருஷ்டித்தவர்) ஆ த் ம யோ நி: (ஆத்மாக்களுக்குக் காரணர்) என்று தெளிவாய்ச்சொல்லியிருக்கின்றது. இது ஜகத்தும் ஆத்மாக்களும் பிரம்மமே என்று கொள்ளும் ஸ்வரூப அத்வைதிகளின் சுருதிகளுக்கு மு ற் று ம் வி ரோ தமாகிறதன்றியில்; சிருஷ்டி ஸ்திதி முதலியகுணங்கள் ஜகத்தினிடத்தி லிருக்கின்றனவென்று கொள்ளும் பிரபஞ்சவாதிகளின் சுருதிக்கும் இந்த சுருதி விரோதமாகிறது, ஏனெனில் அவரை பிரபஞ்சத்திற்கும் ஆத்மாக்களுக்கும அவைகளின் குணங்களுக்கும் ஜகத்தின் கர்த்தாவென்றும் பிரபுவென்றும் சொல்லியிருக்கின்றமையால்தான்.

சுவேதாசுவதரம் 1 - 8.

ஸம்யுக்தமேதத்க்ஷரமக்ஷரம் சவ்யக்தாவ்யக்தம்பரதே
விச்வமீஸ : அநீஸஸ்சாத்மாபத்யதே போக்த்ரு
பாவாத்ஞாத்வாதே வாதேவமுச்யதேஸர்வபாசைஹி.

பொழிப்புரை.

இந்த ஜகத்து வியக்தாவியக்தமும் (திருசியப்பொருளும், அதிருசியப் பொருளும்) க்ஷராக்ஷரமும் (மாறுவதும் மாறாததும்) ஆனவஸ்துக்களால் கூடியது, இதை ஈசுவரன் பரிபாலிக்கின்றார். ஈசுவரனல்லாத ஜீவாத்மா அனுபவிப்பவனாகையால் இதில் கட்டுப்படுகிறான். ஆனால் ஈசுவரனையறிந்து எல்லா பாசங்களினின்றும் விடுபடுகிறான்.

விசேஷ உரை.

ஆத்மா அவ்யக்தமும் அக்ஷரமுமானது. சரீரமும் மற்ற ஜடபதார்த்தங்களும் வியக்தமும் க்ஷரமுமானவை; அத்யாத்மிக லோகங்களும் அவ்யக்தமானவை; இவைகளெல்லாம் சேர்ந்து ஜகதெனப்படுகிறது; இது ஈசுவரனாலே பரிபாலிக்கப்படுகிறது; ஜீவாத்துமா ஈசுவரனிலும் வேறானதால் அபூர்ணமானது அபூர்ணமானதால் உலகவிஷயங்களில் கட்டுப்படுகிறது; கட்டுப்படுவதால் பாபமும் புண்பமும் துக்கமும் அதைப்பற்றுகின்றன: இத்தீமை ஜீவாத்மாவின் அபூர்ணத்தன்மையால் உண்டாகிறதேயன்றி பூர்ணனான ஈசுவரனுக்குச் சம்பந்தப்பட்டதல்ல. மனுஷ்யன் விஷயசுகங்களை அனுபவிப்பதால் அதில்

இந்தி துக்கத்துக்குக் காரணமான பாபத்தைச் செய்கின்றான்; ஆனால், அவன் பரமாத்மசுவரூபமானதைப்பெற்று முடிவில் முக்தியையடைகிறான். இந்தச் சுருதியும் பரமாத்துமாவுக்கும் ஜீவாத்துமாவுக்குமுள்ள பேதத்தைத் தெளிவாய்க் காட்டுகின்றது; ஆகையால் ஸ்வரூப அத்துவைதத்தைக் கண்டிக்கப் போதுமான தாயிருக்கிறது.

கடம் 3 - 11.

இந்திரியேப்ய: பராஹ்யர்தா அர்தேப்யஸ்ச பரம்மந:
மநஸஸ்து பராபுத்திர் புத்தேராத்ம மஹாந்பர:
மஹதோ பரமவ்யக்தம் அவ்யக்தாத்புருஷ:பர:
புருஷாந்நபரம் கிஞ்சித் ஸாகாஷ்டா சாபராகதி:

பொழிப்புரை.

இந்திரியங்களிலும் இந்திரிய விஷயங்கள் சிரேஷ்டம்; விஷயங்களிலும் மனம் சிரேஷ்டம்; மனதிலும் புத்தி சிரேஷ்டம்; புத்தியிலும் மஹாஞான ஆத்துமா அதாவது ஜீவாத்துமா சிரேஷ்டம்; ஜீவாத்துமாவிலும் அவ்யக்தம் (பிரகிருதி சிரேஷ்டம்; அவ்யக்தத்திலும் புருஷன் அதாவது பிரும்மம் சிரேஷ்டம்; புருஷனிலும் சிரேஷ்டம் வேறு ஒன்றுமில்லை. அவரே முடிவு, அவரே பரமகதியாம்.

விசேஷ உரை.

ஜீவாத்துமாவுக்கும் பரமாத்துமாவுக்கும் எவ்வளவு பேதமிருக்கின்றதென்பதை இச்சுருதி தெளிவாகக்கட்டுகின்றது. இதைப்பார்த்தும் கேட்டும் அநேகர் ஜீவனையும் பிரும்மத்தையும் அபேதமென்பது ஆச்சரியமே.

கடம் 7 - 8.

இந்திரியேபஹ்யபரம்மநோமநஸஸ்ஸத்வமுத்தமம்
ஸத்வாததி மஹாநாத்மா மஹதோவ்யக்த முத்தமம்
அவ்யக்தாத்துபர: புருஷோ வியாபகோலிங்க ஏவசயத்ஞாத்வாத்
முச்சதே ஜன்மரமிருதத்வம்ச கச்சதி.

பொழிபபுரை.

இந்திரியங்களிலும் மனம் சிரேஷ்டம், மனதிலும் புத்தி சிரேஷ்டம், புத்தியிலும் ஜீவாத்துமா சிரேஷ்டம், ஜீவாத்துமாவிலும் அவ்யக்தம் (பிரகிருதி) சிரேஷ்டம், பிரகிருதியிலும் பரமாத்துமா சிரேஷ்டம், அவர் வியாபகர், ஆனால் யாரும் பார்க்கும்படியான ரூபம் அல்லது அடையாளத்தை யுடையவரல்லர் அவரையறிந்தே ஜீவர்கள் முக்தர்களாகி அமிர்தத்துவத்தை அடைகிறார்கள்.

விசேஷ உரை.

இந்தச்சுருதியிலும் பிரம்மம், ஜீவாத்துமாவைப் பார்க்கிலும் பிரகிருதியைப் பார்க்கிலும் சிரேஷ்டமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஜீவாத்மாவையும் பிரும்மத்தையும் ஒன்று என்றுவது, பிரும்மத்தையும் ஜகத்தையும் ஒன்று என்றுவது ஸ்தாபிக்க முயலுபவர்களுடைய மதம் வேதத்தின் சித்தாந்தத்துக்கு விரோதமானதென்றும் தப்பிதமானதென்றும் விளங்கும். இந்தச்சுருதியில் சொல்லியமஹான் ஆத்மா என்ற பதங்களுக்கு மஹத்தத்துவ

மென்றும், ஜீவாத்மாவல்லவென்றும் யாராவது பொருள்கூறத் தணிவார்களா னால் அவர்கள் இதற்கு பாஷியம்செய்த ஸ்ரீசங்கராசாரியார் மகான் ஆத்மா என்ற பதத்திற்கு ஜீவாத்மாவென்று பொருள் கூறியிருக்கிறார் என்று தெரிந்து கொள்ளத்தக்கது

A CATECHISM OF THE DWAITAM.

What is Duality, or Dwaita Siddanta?

Duality or Dwaita means that *God* and *Man's Soul*, and *God* and *Nature*, *are not one* and the *same*. *God is one thing*, the *others*, other things.

Will you be pleased to give me an account of this doctrines?

The Dwaitis hold that VISHNU is the Supreme Being, the Lord of all, and endowed with all the highest divine attributes; that VISHNU evolved the Universe out of Jada-prakriti (matter), and is consequently the efficient (or instrumental) cause of the Universe *(Nimitta Karana)*; while *Jada-Prakriti* serves as the material cause, *(Upadana Karana)*; that VISHNU, *Prakriti*, and *Jiva* (individual Soul) are all eternal, uncreated and indestructible; that they are different from one another, and each of them is a real and distinct entity in itself,—both retrospectively and prospectively; but that *Prakriti* and *Jiva* are absolutely subordinate to and are dependent upon VISHNU; that *Jiva*, being affected by the good, bad and mixed qualities of *Prakriti* performs a variety of actions (karma); and renders itself liable to birth, death, and rebirth successively; that *Jiva* becomes *mukta* (*i.e.* the individual soul becomes a free being), when he effects *Karma-Kshaya*, *i.e.*, a complete liberation from the material bonds which constitute the *Karma*; that the means of attaining *Mukti* is *Bhakti*; that *Bhakti* means constant, conscious, and unalloyed devotion to VISHNU; and that by means *of* such *Bhakti* the Jiva attains VISHNU'S *prasada* (Divine grace), and thence follows *Mukti*, otherwise called *Moksha*. This, in brief, is the summary of

the doctrine of the Dwaitees; and it should be the earnest endeavour of the JIVA to attain to this highest condition.

குறிப்பு.

இதன் மேல்காட்டிய அத்துவைதம், விஸிஷ்டாத்துவைதம், துவைதம் என்னும் மூன்று சித்தாந்தங்கள் பூதத்துவ வாதிகளுடைய கருத்தை (அதாவது ஜடபதார்த்தங்கள் தவிர ஜீவபதார்த்தங்கள் இல்லை என்னும் சித்தாந்தத்தை) கண்டித்து ஜீவாத்துமாக்களின் இருப்பை ஸ்தாபிக்கின்றன. சிலர் அத்துவைத சித்தாந்தத்தில் ஜக ஜீவ பரம் ஒன்றே என்று ஸ்தாபிப்பதாக சாதிக்கக்கூடும். அதற்கு சமாதானம் இதனடியிற்காணலாம். அதாவது:—

பரமாத்துமாவானவர் எங்கும், எல்லாவற்றிலும், எப்போதும், ஏகமாக இருக்கிறார் என்னும் சித்தாந்தத்தை புத்திமான்களான எக்காலத்தாரும், எம் மதஸ்தரும் அங்கீகரிக்கிறபடியால், அவர் இல்லாத இடமும், பொருளும், காலமும் இல்லை என்பது திண்ணம்; இதனையே அத்துவைத சித்தாந்தத்தின் அந்தரங்கக்கருத்து. அப்படிக்கிருக்க சிலர், எங்கும் எப்போதும் யாவற்றிலும் இருக்கும் பரமாத்துமா ஜடஜகத்திலும், ஜீவாத்துமாவிலும் இருப்பதால் இந்த ஜடஜகத்தும், ஜீவாத்துமாவும் பரமாத்துமாவேயொழிய வேறல்லவென்றும்; இதுவே அத்துவைத சித்தாந்தமென்றும் பிராந்தி கொண்டிருக்கிறார்கள்; இப்படிக்கெள்ளும் கருத்து சுருதி, யுக்தி அனுபவத்துக்கு விரோதமானதென்று காட்டுவதற்கே விஸிஷ்டாத்துவைதாதி சித்தாந்தங்கள் வெளிவந்தன. பரமாத்துமா எப்போதும் எல்லாவற்றிலும் ஏகமாய் நிறைந்திருப்பது உண்மை என்று இவ்விரு சித்தாந்திகளும் சம்மதித்துக்கொண்டாலும்; 'பரமாத்துமா' சர்வாந்தரியாமியாய் இருக்கிற ஹேதுவைப்பற்றியே ஜடமும் அஜடமும் ஒன்றே என்றும், இரவும் பகலும் ஒன்றே என்றும் திதிப்பும் கசப்பும் ஒன்றே என்றும், மாதாவும் மனைவியும் ஒன்றே என்றும், சுகமும் அக்கமும் ஒன்றே என்றும், கன்மையும் தீமையும் ஒன்றே என்றும், ஞானமும் அஞ்ஞானமும் ஒன்றே என்றும், தருமமும் அதருமமும் ஒன்றே என்றும், புண்ணியமும் பாவமும் ஒன்றே என்றும், ஜீவனும் பரமனும் ஒன்றே என்றும் சாதிக்கும் சில சுவரூப அத்துவைதிகளுடைய சூசித சித்தாந்தத்தை கண்டித்து, ஜடம் அசேதனமானதென்றும்; ஜீவாத்துமா பரதந்திரமும் அபரிபூரணமுமானதென்றும், இவைகளுக்குநாயகமாக பூரணமும், சுவதந்திரமும், அனந்த கலியாண குணங்களுமுடைய பரமாத்துமா ஒருவர் இருக்கிறார் என்றும்; அவரையடைந்தவருக்கே இகபரசுகம் கிடைக்கும் என்றும் ஸ்தாபிக்கின்றனர்; ஆகவே, அடுத்த அத்தியாயத்தில் அந்த பரம்பொருளின் அனந்த கலியாண குணங்களைப்பற்றியும், அவரை அடையுமார்க்கத்தைப்பற்றியும் விசாரிப்பாம்.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்

பிரம்ம இலக்ஷணம்.

(29). சாந்தோக்கிய உபநிஷத்து

உ-வது பிரபாடகம், உ-வது கண்டம், முதல வாக்கியம்.

ஓம் ப்ரம்மவாதி நோ வதந்தி.

பொழிப்புரை.

பிரமமவாதிகளுரைக்கின்றனர்.

விசேஷ உரை.

பிரமஞானமென்னும் மேன்மையாகிய தீ அனேவருடைய உள்ளங்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றது. எல்லோருடைய கருத்திலும் பிரமத்தின் அளவற்ற அருளுடைமை, அழிவற்ற எழுத்துகளால் எழுதப்பட்டிருக்கின்றது. உலகப்படைப்பாகிய காரியத்தின் ஆலோசனையினுல் அந்தத் தீயை எழச் செய்தாற்றான், அளவற்ற அருளேயே திருமேனியாக உடைய அந்த வள்ளலினது தரிசனம் கிடைக்கும். அவர் தனது மிகத்தூய்மையான அருள்வடிவத்தை மனிதனுக்குப்புறம்பாகிய சிருஷ்டியிலும், மனிதனது மாநஸபடத்திலும் பதித்து வைத்திருக்கின்றார் யார் அந்தப் பிரம்மத்தின் இருப்பை உண்மையாக நம்பி அவரது சுருத்திற்கிசைந்த லோகோபகாரமான ஸத்கருமங்களைச் செய்கின்றனரோ, அவர்கள் அனேவரும் பிரம்மவித்துக்கள்.

இப்பிரம்ம வித்துக்களில் யார் பிரபஞ்சத்தில் பூபாலனம், வர்த்தகம், ஸேவைத் தொழில் முதலான எத்தொழில்களில் அமர்ந்து இருக்கினும்; அவைகளை சத்தியமாகச்செய்தும், கல்விச்செருக்கு செல்வச்செருக்குகளை விட்டொழித்தும்; காமாதி இச்சைகளை கணத்திற் கண்டித்தும், எப்போதும் எவ்விடத்திலும் நற்புத்தியுடையவர்களாகியும், சதா பாபமில்லாச்செயலுடையவர்களாகியும், எந்த மஹாத்துமாக்கள் அந்த பிரம்மத்தை எக்காலத்திலும், எப்பொருளிலும எக்காரியத்திலும் அறியவல்லவராகின்றனரோ, அந்தப்பாக்கியவான்களனேவருமே பிரம்ம ஞானிகள்.

யார் இவ்விதமாக அறிந்து, தம்மைப்போலவே அனேவரும் பிரம்மஞானிகளாகவேண்டுமென்னும் இச்சைகொண்டும், பொருளவா, பேரவாக்களைவிட்டும் "சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல்" என்னும் முறையை நாடி, வேதாந்த தத்துவங்களை உண்மையாக உபதேசிக்கின்றனரோ அவர்கள் அனேவருமே பிரம்ம வாதிகள்.

இப்படி பிறருக்கு உபதேசிக்கிறபடியே தாமும் அநுஷ்டித்தும், உலக ஆசாபாசங்களை முற்றும் விட்டொழித்தும், உடல், பொருள் ஆவியை பரமாத்துமாவின் சன்னிதானத்தில் சமர்ப்பித்தும், அவரிடம் சதா ஆனந்தத்தை அடைபவர்கள் அனேவருமே பிரம்மாநந்தர்கள்.

பிரம்மவித்துக்களும், பிரம்மஞானிகளும், பிரம்மவாதிகளும், பிரம்மார்ஷர்களும் ஆகிறவர்கள், இன்னதேசத்திலாவது, இன்னகாலத்திலாவது, இன்ன ஜாதியிலாவது பிறந்தவர்களாயிருக்கவேண்டுமென்னும் நியமமில்லை. எந்தாட்டுப் பிரம்மவாதிகளுக்கும், பிரம்மவிஷயமான உபதேசஞ்செய்வதற்கு அதிகாரமுண்டு. பாரத வருஷத்தின் (ஹிந்துதேசத்தின்) மூற்காலத்திய பிரம்மவாதிகளாகியமஹா இரிஷிகள் பிரம்மவிஷயமாய் எந்த உண்மையான தத்துவங்களையும், ஆத்மபிரத்யக்ஷித்தமான ஸத்தியங்களையும் உபதேசித்துச்சென்றனரோ அவைகளனைத்தமே இந்த அத்தியாயத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகையினூற்றூன் ஆரம்பத்தில் "பிரம்மவாதிகளுரைக்கின்றனர்" என்று சொல்லப்பட்டது.

The Preachers on Brahmam (God) Say.

——o——

(30). நாராயண உபநிஷத்து

உ-வது அநுவாகம்.

காயத்ரி

ஓம் பூர் புவ: ஸுவ: ஓம்தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோதேவஸ்ய தீமஹி தியோயோந: பிரசோதயாத்.

பொழிப்புரை.

சிருஷ்டி ஸ்திதி லய காரண பூதனும், திரிலோக வியாபியாய் எமது மனோவிருத்திகளைப் பிரேரேபிக்காநின்ற ஓபரமாத்துமாவே! உன்னைத்தியானிப்போமாக.

எவன் யாவற்றையும் விளங்கச்செய்கிறனே, எவன் எல்லாவற்றையும் ரக்ஷிக்கிறனே, எவனிடத்தினின்று யாவும் ஜனிக்கின்றனவோ, எவனிடத்து யாவும் மீண்டு லயிக்கின்றனவோ, எவன் மோக்ஷத்தின்பொருட்டு எம்மனோவிருத்திகளைச் சன்மார்க்கத்தில் பிரவர்த்திக்கும்படி உதவுகின்றனே, அப்படிப்பட்ட திவ்யஸவிதாவாகிய தேஜோமயனே! உன்னை மேன்மேலும் கொண்டாடித் தொழுவோமாக.

விசேஷ உரை.

ஆரியர் ரிக்வேதம் மூன்றுவது மண்டலம் 62—11-லும், பிரஹ்மதாரணிய உபநிஷத்து 5-வது அத்தியாயம் 14-வது பிரமாணத்திலும், சாந்தோக்கிய உபநிஷத்து 3-வது அத்தியாயம் 12-வது பிரிவிலும் சொல்லப்பட்டிருக்கும் காயத்ரியானது சூரியனைகாடிச்செய்யும் பிரார்த்தனை என்று சிலர் சந்தேகப்படுகிறார்கள். அதிலிருக்கும் ஸவித்ரு என்னும் பதத்திற்கு சூரியன் என்னும் பொருளாலுலும், அது பரப்பிரம்மதத்துக்கு இடப்பட்ட பல பெயர்களில் அதுவும் ஒன்றேயாம், அதாவது சவித்ரு காமமுடையவன் என்பதாம்,

பிராகிருத சூரியன் பிரகாசித்தால் பிரபஞ்சத்தின் இருள் நீங்குவதுபோல, அபிராகிருதமாகிய ஜீவாத்மாவை மூடும் அஞ்ஞானமென்னும் இருளை நீக்க அபிராகிருத சூரியனைக்காட்டிலும் சவிசேஷமுடைய பரமாத்துமா என்றும், ஸர்வ ஜீவகோடிகளுக்குள்ளும், சூரிய பிம்பத்துக்குள்ளும் பிரவேசித்து ஆளுகின்ற பரமாத்துமா என்றும்; சூரியன் முதல் நரர் வரையிலுள்ளவர்களையும் அரசுசெய்யும் பரமாத்துமா என்றும் பொருள். இதைப்பற்றியே, சாந்தோக்கிய உபநிஷத்தில் "எவன் சூரிய பிம்பத்துக்குள் பிரவேசித்து அரசுசெய்கிறானோ, அந்த பரமாத்துமாவே உனது உள்ளத்திலும் புகுந்து அரசுசெய்கிறான்" என்றும், "பரமாத்துமா எல்லாப்பிராணிகளுடைய ஹிருதயங்களிலும் வஸிக்கிறார் என்று, பகவத்கீதையிலும் சொல்லப்பட்டது.

We meditate on the CAUSE of all, PERVADING all, and internally RULING all material objects, from the sun down to us and others.

"Let us adore the supremacy of THAT DIVINE SUN, "the God-head WHO illuminates all, WHO recreates all, from "WHOM all proceed, to WHOM all must return, WHOM "we invoke to direct our understandings aright in our pro-"gress toward his holy seat."

——o——

(31). தைத்திரிய உபநிஷத்து

சிக்ஷாவல்லி.

ஓ மித்ரஹ்மஹர்வே வ்ஸமைதேவா பலிமாஹரந்தி;
மத்யேவாமநமாஸீநம் விஸ்வேதேவா உபாஸதே.

பொழிப்புரை.

ஓம் என்கிற எழுத்தினால் விளங்குகிறதெதுவோ அது பிரம்மம். சகல தேவதைகளும் அதை பூஜிக்கின்றனர். பிரபஞ்சத்தினிடையேயிருக்கும் பூஜிக்கப்படத்தக்க பரமாத்துமாவை எல்லாதேவதைகளும் நியதமாக உபாஸிக்கின்றனர்.

விசேஷ உரை.

ஓம் என்னும் பிரணவாக்ஷரம் பார்வைக்கும் கேள்விக்கும் ஒரே அக்ஷரமாகத்தோன்றினும், அதில், அ - உ - ம் என்னும் மூன்று எழுத்துக்கள் அடங்கியிருக்கின்றன. இம்மூன்று எழுத்துக்களுக்குள் உலகத்தில் வழங்கும் சகல எழுத்துக்களும், சகல காரண காரியங்களும் அடங்கியிருக்கின்றன. எழுத்துக்களில் (யாதொரு உதவியன்றி) இயற்கையாக உச்சரிக்கும் எழுத்துக்களுக்கு உயிரெழுத்துக்களென்றும்; உயிரெழுத்துக்களின் உதவியால் உச்சரிக்கும் எழுத்துக்களுக்கு உயிர்மெய் எழுத்துக்களென்றும் சொல்லுகிறோம். உயிரெழுத்துக்களாகிய அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் எழுத்துக்களை

தக்கபடி பரிசீலிப்போமாகில், அவற்றில் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஏழு எழுத்துகளும் அகர எழுத்தின் திரிபாகும். உ, ஊ, ஒ, ஓ ஔ என்ற ஐந்து எழுத்துக்களும் உகர எழுத்தின் திரிபாகும்; ஆகவே இந்த அ-உ என்னும் எழுத்துக்களுடன், உயிரைப்போல் தொனிக்கும் அநுஸ்வரமாகிய புள்ளி =ம், சேர்க்க அ, உ, மீ=ஓம், என்றாகிறது. இவ்வமைப்பு சேவலம் இந்நாட்டுக்குரிய, கீர்வாணம், ஆந்திரம், தமிழ், கன்னடம், தெலுவம், இந்துஸ்தானி, வங்கம், குஜராத்தி, மஹாராஷ்டிரம், மலையாளமுதலான பாஷைகளில் மாத்திரமல்ல; அரபு பாஷையின் முதல் எழுத்தாகிய (*Hamza*) அ ம் ஸா என்பதும்; பாரசீக பாஷையின் முதல் எழுத்தாகிய (*Alf*) அ லிப் என்பதும், ஆங்கிலேயபாஷையின் முதல்எழுத்தாகிய A ஏ என்பதும் அகர உயிரின் திரிபேயாகும்; இப்படி உலகத்திலுள்ள சகல பாஷைகளின் உயிரெழுத்துக்களே எல்லாம் தக்கபடி பரிசோதிப்போமாகில் அவைகள் யாவும் "அகரமுதலவெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு" என்னும் திருக்குறள் மொழிப்படியாகும். ஆகவே,

ஓங்காரமே பிரஜைகளின் பாஷை:

இப்பிரபஞ்சத்தில் பகுத்தறிவோடு பேசும் பாஷைக்குரிய பிராணிகளாகும் மனுமானவர்ஜாதியின் மக்கள், ஜகத்தில் ஜனித்த உடனே யாதொரு உபாத்தியாயருடைய உதவியில்லாமல் இயற்கையாக உச்சரிக்கும் எழுத்துக்கள் அ-உ-உம் என்பவைகளே. பிள்ளைகள் பசித்தபோது அழும் சப்தமும் உங்கா! ஊங்கா என்னும் ஓங்கார சப்தமேயாம். தம்மை விட்டுப் பிரிந்து தூரத்திலிருக்கும் மாதாமுதலானவர்களே அழைக்க அ ஓ! ஓ! ஓம் என்னும்எழுத்துக்களையே திரிபாக உச்சரிக்கின்றன, அவைகளுக்கு வியாதி, வருத்தம் உண்டாகும்போது அம் உம் அஹ-ம் ஓம் என்றே உச்சரிக்கின்றன. சுக சந்தோஷமுண்டாகும்போது ஆஹா ஹாஹா-ஊஹூ-ஊஹூ-ஊ என்பனவும்ஓம்என்பதின் திரிபான உச்சரிப்புகளே. கவ்டங்கள் சம்பவித்து வருந்தும் உலகந்தாரனைவரும் கடவுளே, ஓங்! ஓங்! கடவுளே என்று கதறி அழைப்பது பிரத்தியக்ஷம்; ஆகவே, மானவஜாதியார் பிறந்தது முதல் இறக்கும் வரையில் உச்சரிக்கும் வார்த்தைகள் ஓங்காரமே. காலதேச வர்த்தமானங்களினால் இந்த ஓங்காரசப்தத்தை வேறு வேறு விதமாக உச்சரித்து வந்தாலும் அதன்பெருமை பிரபஞ்ச வெளிப்பொருள்களிலும் பிரத்தியக்ஷம். ஆகவே,

ஓங்காரமே பஞ்சபூதாதி பிராணிகளின் பாஷை:

பூததேகம்பூண்ட வெண்கலம், இருப்பு வெள்ளி முதலானதுகள் ஒன்றோடொன்று தாக்கும்போது உண்டாகும் சப்தத்தை கவனித்தால் அதவும் ஓங்காரத்தின் சப்தமாகும். பெருங்கடல்களிலிருந்து பெரும் பர்வதங்களேப்போல எழும்பும் பேரலைகளின் சப்தத்தை கவனிப்போமாகில் அதவும் ஓங்கார சப்தமாகும். சண்டமாருதம் வீசும் சப்தத்தை கவனித்துக்கேட்போமாகில் அதவும் ஓங்கார சப்தமேயாகும்; பற்பலவித விருக்ஷங்கள் காற்றிலசைந்து சப்திக்கும் சப்தத்தையும், பற்பலவித கட்டைகள் தீயிற்கலந்து எரியும்போது உண்டாகும் சப்தத்தையும், கவனிப்போமாகில் அவைகளும்ஓங்கார சப்தமேயாகும். பற்பலவித பூச்சிகள் வண்டுகள், பக்ஷிகள், மிருகங்களின் சப்தங்களே கவனிப்போமாகில் அவைகள் யாவும் ஓங்காரசப்தத்தின் திரிபான சப்தங்களாகும். சகல ஜந்துகோடிகளுக்கும் ஆனந்தத்தை விளைவிக்கும் சங்கீதத்தின் உற்பத்தியைப்பற்றி பரிசீலிப்போமாகில், அதவும் ஓங்காரத்திலிருந்தே ஜனித்தல் ஸ்பஷ்டமாகும். ஆகவே,

ஓங்காரமாகிய

அ	—உ	—ம்	என்னும் 3 எழுத்துகளிலிருந்தே
மூலை	—சூக்ஷ்மை	—காரணம்	என்னும் 3 தேகங்களும்
ஆண்	—பெண்	—அலி	என்னும் 3 பால்களும்
நிலைபம்	—யவ்வனம்	—முதுமை	என்னும் 3 தசைகளும்
ஜாக்ரதை	—ஸ்வப்பனம்	—ஸுஷுப்தி	என்னும் 3 அவஸ்தைகளும்
ஆத்யாத்மிகம்	—ஆதிதைவிகம்	—ஆதிபௌதிகம்	என்னும் 3 தாபத்திரயங்களும்
விஷயானந்தம்	—வாஸனானந்தம்	—பிரம்மானந்தம்	என்னும் 3 சுகங்களும்
புண்ணியம்	—பாவம்	—மிஸ்ரம்	என்னும் 3 கர்மங்களும்
ஜீவ	—ஈசுவர	—பிரகிருத்தம்	என்னும் 3 கர்த்தாக்களும்
ஸாத்விக	—ராஜஸ	—தாமிசம்	என்னும் 3 புத்திகளும்
இருக்கு	—யஜுர்	—சாமம்	என்னும் 3 வேதங்களும்
பெயர்	—வினை	—உரி	என்னும் 3 சொல்லுகளும்
தன்மை	—முன்னிலை	—படர்க்கை	என்னும் 3 இடங்களும்
ஒருமை	—பன்மை	—பலவை	என்னும் 3 எண்களும்
குரு	—சாஸ்திர	—நிஷ்டை	என்னும் 3 விசுவாசங்களும்
இச்சை	—ஞானம்	—கிரியை	என்னும் 3 சக்திகளும்
பூத	—பவுஷ்யம்	—வர்த்தமானம்	என்னும் 3 காலங்களும்
சுவர்க்க	—மர்த்திய	—பாதாளம்	என்னும் 3 உலகங்களும்
அசுரர்	—ருத்திரர்	—ஆதித்தியர்	என்னும் 3 தேவர்களும்
பிரம்மா	—ருத்திரர்	—விஷ்ணு	என்னும் 3 மூர்த்திகளும்
சாந்தம்	—கோரம்	—மூடம்	என்னும் 3 விருத்திகளும்
காபி	—ஹிருதயம்	—பூமத்தியம்	என்னும் 3 ஸ்தானங்களும்
விசுவன்	—தைஜஸன்	—பிராக்ஞன்	என்னும் 3 ஜீவர்களும்
விராட்டு	—ஹிரண்யகர்ப்பன்	—அவியாகிருதன்	என்னும 3 ஈசுவரர்களும்
ஐஹிகம்	—ஆமுஷ்மிகம்	—வைராக்கியம்	என்னும் 3 விரக்திகளும்
பாஹியம்	—அகங்கியம்	—ஏகாந்தம்	என்னும் 3 பக்திகளும்
திருக்கு	—வாக்கு	—ஸ்பரிசம்	என்னும் 3 தீக்ஷைகளும்
வாம	—தக்ஷிண	—நாஸாக்ரம்	என்னும் 3 நேத்திரங்களும்
அந்தரம்	—மத்தியம்	—பாஹியம்	என்னும் 3 லக்ஷியங்களும்
ஞானம்	—விக்ஞானம்	—பிரக்ஞானம்	என்னும் 3 ஞானங்களும்
ஸோமன்	—சூரியன்	—அக்கினி	என்னும் 3 மண்டலங்களும்
சுவாதிஷ்டான	—பூரண	—அரியம்	என்னும் 3 நிலைகளும்
கிரமமுக்தி	—ஜீவன்முக்தி	—விதேஹமுக்தி	என்னும் 3 முக்திகளும்

ஆக இத்தொண்ணூற்றாறையும், (96) இவைகளுக்கு இனமானவைகளையும் இவைகளுக்குட்பட்ட திரிவர்ணகமானவைகளையும் எங்கும் காணலாம்.

ஓங்காரத்தில் திரிவர்ணகங்களின் ஜனன விவரம்.

இந்த திரிவர்ணகமானவைகளில் சில (1) பஞ்சேந்திரியங்களால் அறியக்கூடியவைகளாகவும் (2) சில மனதினால் மாத்திரம் அறியக்கூடியவைகளாகவும் (3)சில மனதினாலும் அறிய முடியாமல் கேவலம் சஹஜஞானத்தினால் மாத்திரம் அறியக்கூடியவைகளாகவும் இருத்தல் பிரத்தியகஷம். இவற்றில் பஞ்சேந்திரியங்களால் கிரஹிக்கக்கூடிய ஜடஜகபதார்த்தங்கள் ஓங்காரத்தின் முதல் எழுத்தாகிய அகாரத்தையும், பஞ்சேந்திரியங்களுக்கு கோசரமாகாமல் மனதினால் மாத்திரம் கிரஹிக்கக்கூடியவை, ஓங்காரத்தின் இரண்டாவது எழுத்தாகிய உகாரத்தையும், மனதினாலும் கிரஹிக்கமுடியாமல் கேவலம் சஹஜஞானத்தினால் மாத்திரம் ஊஹித்தறியக்கூடியவைகள் ஓங்காரத்தின் மூன்றாவது எழுத்தாகிய மும் என்னும் அநுஸ்வரூபம் சேர்ப்பதனால் மாத்திரம் ஸப்தக்கும் மகாரத்தையும் சார்ந்ததாகும்.

ஓங்காரம் திரிவர்ணகமானவைகளுக்குக் காரணம்.

இப்படி எங்கும் எப்போதும் திரிவர்ணகமானவைகள் இருத்தல் பிரத்தியகஷம். இவைகள் உண்டாவதற்குக் காரணம் யாது? சர்வ சூனியத்திலிருந்து ஒன்றும் உண்டாகாதே. ஆகவே, இவைகளை யாதாவது ஒரு பொருள் சிருஷ்டித்திருக்கவேண்டும். இப்படி சிருஷ்டித்த பொருள் மேலே சொன்ன (96) தொண்ணூற்றாறு திரிவர்ணகமான பொருள்களில் தோன்றுமையால்; இத்திரிவர்ணகமானவைகளாவது தம்மைத்தாம் சிருஷ்டித்துக்கொண்டிருக்கவேண்டும். அப்படி சிருஷ்டித்துக்கொண்டதாகில், அவைகள் சுவதந்திரமும் பூரணமுமானவைகளாகஇருக்கவேண்டும்;ஆனால்,இத்திரிவர்ணகமானவைகளோ பரதந்திரமும் அபூர்ணமுமானவைகளாக இருத்தல் பிரத்தியகஷம்; ஆனதால் அவைகளே சிருஷ்டித்துக்கொள்ளும் சக்தியுடையவைகளல்ல ; அல்லாமற்போகவே, இத்திரிவர்ணகமானவைகளுக்கு ஆதாரமாகிய அகார, உகார, மகாரம் என்னும் எழுத்துக்களாவது சிருஷ்டித்திருக்கவேண்டும் ; இந்த ஓங்காரத்தின் எழுத்துக்களை கடிதம் முதலானதுகளின்மேல் எழுதிப்பார்க்கில், அதில், இந்த ஓங்காரத்தைச்சார்ந்த அகார உகார மகார எழுதுக்களைத்தவிர வேறு எழுதுக்களைதான் றவில்லை அல்லது அந்த ஓங்கார சப்தத்தைக்கேட்கும்போதும் அத்துடன் வேறு சப்தமுங்கேட்கவில்லை. அன்றியும் இந்த அகார உகார மகார எழுத்துக்களுக்கும் ரூப ஸப்த மாத்திரைகள் இருப்பதால் இவைகளும் பரதந்திரமும் அபூரணமுமானவைகளாகவே தோனறும்; அப்படித் தோன்றினும், இந்த அகார உகார மகார மயமாக எங்கும் எப்போதும் தோன்றி இருகும் பரதந்திரமும் அபூரணமுமான பொருள்களின் இருப்பின் கம்பிக்கையினால் அதற்குள் பூரணமும், சுதந்திரமுமான ஒரு பொருள இருக்கிறதென சஹஜஞானம் நம்பும்படிசெய்கின்றது.

இந்த நம்பிக்கை தானாக உள்ளது ; இதுவே இயற்கையறிவு அல்லது ஸஹஜ ஞானம். இந்த ஸஹஜஞானத்தைக்கொண்டு ரூபம், சப்தம், மாத்திரைகளையுடைய அகார உகார மகாரமயமான ஓங்காரத்தைப் பரிகூஷிப்போமாகில், அதற்குள் மாத்திரை முதலானதுகளில்லாமலும், அது சத்தியமாக இருக்கிறது என்னும் பொருள் படும். தத்ஸத்=அது சத்தியமாக இருக்கிறது, என்னும்

பொருள்அடங்கி இருக்கிறது. ஆகவே ஓங்காரத்தை சான்கு வகுப்புகளாக வகுத்து, அதில் மாத்திரைகளையுடைய அகார உகார மகார எழுத்துக்களை மூன்று வகுப்புகளாக்கி, அவைகளின் இருப்புக்கு ஆதாரமானதும், அமாத்திரையானதும், எதுவோ, அதுவே தத்ஸத் என்னும் பொருள் என்றும்; அதுவே மேலே சொன்ன தொண்ணூற்றாறு திரிவர்ணகமானவைகளின் ஆதாரமான ஓங்காரத்துள் நடுநாயகமாக இருக்கிறது என்றும்; ஆகவே, ஓங்காரம் என்பதற்கு அது சத்தியமாய் இருக்கிறது=(Beness) என்றும் பிரம்மவாதிகளுரைக்கின்றனர்.

ஆனதுபற்றியே ஓம்—தத்—ஸத் என்பதில்

ஓம், என்றால் = (பிராகிருத அபிராகிருதமான சகல பதார்த்தங்களையும் படைத்து அழித்து ஆக்கவல்ல) முதற்காரணம் (ஆகியதெதுவோ)

தத், என்றால் (ஆண் பெண் அலியற்றதாகிய)= அது

ஸத், என்றால் (எப்போதும் சத்தியமாக)= இருக்கிறது

இதையே, சத், சித், ஆநந்தம்கூடிய **சச்சிதாநந்தஹரி.** என்று சொல்லப்படுகிறது.

இந்த ஓங்காரத்தின் மகிமை இப்படிப்பட்டதாகையால்,

மாண்டூக்கிய உபநிஷத்தில்.

ஓங்காரமே பிரபஞ்சமயமாக இருக்கிறது. பிரபஞ்சத்தை விகஸிக்கச் செய்வதுவும் ஓங்காரமே. இந்த வெளியில் முன் எவை இருந்தனவோ, இப்போது எவை இருக்கின்றனவோ, இனி எவை இருக்குமோ இவைகள் யாவும் ஓங்காரமயமே. மூக்காலத்துக்கும் மேலானதெதுவோ அதுவும் ஓங்காரமே என்றும்,

சுவேதாஸ்வதரம்

முதல் அத்தியாயம் 13-வது சுருதியில்.

தீ, கட்டைகளுக்குள் மறைந்திருக்கும்போது தெரியாவிட்டாலும், அக்கட்டையை உறைப்பதனால் அத்தீயின் ஸ்வரூபம் வெளியாவதுபோல, பரமாத்துமாவானது ஓங்காரத்துக்குள் மறைந்திருக்கிறது. ஜீவாத்துமாவை கீழ்கட்டையாகவும், பரமாத்துமாவை மேல் கட்டையாகவும் பாவித்து தியான மென்னும் உறைப்பைக்கொண்டு உறைத்தால் தேஜோமயமான பிரம்மம் பிரகாஸிக்கும் என்றும்,

தைத்திரிய உபநிஷத்து

ஸிக்ஷாவல்லி நான்காவது அநுவாகத்தில்.

ஓங்காரஸ்வரூபனான தேவாதிதேவனே வேதஸ்வரூபனே, ஞானஸ்வரூபனே எனக்கு பாரமார்த்திக ஞானத்தை அருள்வாய், எனது மெய், வாய், கண், மூக்கு முதலானதுகளை ஓங்கார பிரணவத்தால் புனிதமாக்குவாய் என்றும்,

முண்டகோபநிஷத்து

இரண்டாம் பாகம் இரண்டாவது பிரிவு 3—4—6-ல்.

ஓங்காரமென்னும் பிரணவத்தை வில்லாகவும், ஜீவாத்மாவாவை அம்பாகவும், பிரம்மத்தைக்குறியாகவங்கொண்டு சலனமற்ற பக்தியுடன் எய்தால் பிரம்மானந்தத்தை அடையலாம் என்றும்,

கதா உபநிஷத்து

இரண்டாவது வல்லி 15—16-வது வாக்கியங்களில்.

எந்த இடம் அல்லது வார்த்தையைப்பற்றி எல்லா வேதங்களும் கொண்டாடுகின்றனவோ, எந்த வாரத்தையைப்பற்றி யாக யக்ஞிய மந்திர ஜபங்கள் கொண்டாடுகின்றனவோ, பிரம்மச்சாரிகள் எந்த இடத்தை அடைய விரும்புகின்றனரோ, அதுவே ஓங்காரம்.

பிரஸன்னை உபநிஷத்து

5-வது பிரஸ்னம் 1-முதல் 7-வரையில்.

ஓங்கார சப்தத்தை உள்ளநாள் உள்ளவரையில் உச்சரித்தால் அவனுக்கு எந்த உலகம் கிடைக்கும் என்று சத்தியகாமன் கேட்க, ஆசாரியர் சொல்லுகிறார் ஓ சத்தியகாமனே, மேலானதாகிய பரமும், தாழ்ந்ததான அபரமும், ஓங்காரத்துக்குள் அடங்கியவை என்றும்,

ஓங்காரத்தைச்சார்ந்த பிரணவாகூரங்களே சதாதியானிக்கிறவர்கள், ஸர்ப்பமானதுசன் சட்டையை உரிப்பதைப்போல், பாவமென்னும் சட்டையை உரித்தெரிந்த புனிதராகிறார்கள், அவர்கள் சாமவேதமந்திரங்களால் பிரம்மலோகத்துக்கு கொண்டுபோகப்படுகிறார்கள் என்றார் என்றும்,

பிரஹதாரணியக உபநிஷத்து

5-வது அத்தியாயம் முதல பிரமாணத்தில.

ஓம் என்பதே, ஆகாயம், அதுவே பிரம்மம், அதுவே வேதம், இந்த வார்த்தையிலுலேயே அறிவேண்டியவைகளெல்லாவற்றையும் அறியலாம் என்றும்,

சாந்தோக்கிய உபநிஷத்து

முதல் அத்தியாயம் முதல் பிரிவில.

ஓம் என்ற பிரணவமே உத்கீதம், அதைப்பாடி ஆராதிக்கவேண்டும் என்றும்,

மீன்னும் பலவாராக புகழ்ந்திருப்பதன்றியில்,

பகவத்கீதை

7-வது அத்தியாயம் 8-வது சுலோகத்தில்.

"எல்லா வேதங்களிலும் நானே ஓங்காரமாக இருக்கிறேன்" என்று கிருஷ்ணர் சொன்னார். ஆனதுபற்றியே பரமாத்மாவை ஓம், தத், சத், என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், இங்கோட்டிலிருக்கும் ஸ்மிருதி சாஸ்திர புராணங்களையும் பக்த சிரோன்மணிகளுடைய காவியங்களையும் சோதிப்போமாகில், அவைகள் இந்த ஓங்காரத்தையே ஆதாரமாகக்கொண்டிருக்கின்றன.

மதுதர்ம சாஸ்திரம்.

2-வது அத்தியாயம் 74-முதல் 85-வது வாக்கியங்கள்வரையில்.

ஓங்காரத்திலிருந்து பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் உண்டாயிற்று என்றும்,

பிராம்மணர்கள் வேதபாடங்களை ஆரம்பிக்கும்போதும், முடிக்கும்போதும் ஓம் என்ற பிரணவத்தை யுச்சரிக்கவேண்டும். அப்படி உச்சரிக்காவிட்டால் அவனுடைய படிப்பு பாழ்த்துப்போம் என்றும்,

உபாத்தியாயன், வீரன், வர்த்தகன் மற்றெவனுமிலும் இந்த ஓங்காரத்தை உச்சரிக்காமல் செய்யும் விரதங்கள் நிந்திதமானதுகளே என்றும், வேதங்களை யறிந்த புரோஹிதன் மூன்று எழுத்துக்களால் உண்டான ஓங்காரமென்னும் பிரணவத்தை காலை மாலைகளில் உச்சரித்தால் வேதப்பியாசத்தினுலுண்டாகும் பலனை யடைகிறான் என்றும்,

இந்த ஓம் பிரணவத்தை மூன்று வருஷம் விடாமல் உச்சரிக்கிறவர்கள் பரமாத்மாவின் சன்னிதானத்தை நாடி புனிதராகி பரலோகத்தை அனுபவிப்பார்கள் என்றும் பின்னும் பலவிதமாகவும் வர்ணித்தார்.

இம்மட்டோ ! இவ்வுலகிலுள்ள சமய நூல்களையும் சமயாசார கருத்துகளையும், சுவாமிகளின் பெயர்களையும் சாஸ்திரோக்தமாக சோதிப்போமாகில் அவைகள் யாவும் ஓங்கார சப்தத்திறகுட்பட்டதாகவே பிரத்தியக்ஷமாகும். எப்படியெனில்,

பார்ஸீகருடைய பிரதம தேவனுடையபெயர் ஜந்த பாஷையில் (Ahurmuzd)=அஹுரமஸ்ட் என்பதாம்; இந்த வார்த்தையிலுள்ள A. W. M. அ உ ம் எழுத்துக்களும் ஓங்காரத்தையே காட்டும்.

சீனு, ஜப்பான், திபேத்து முதலான பவுத்தலாமாக்களின் துவஜம் மனி பத்மி ஹோம் Mani Padmi Hom என்பதாம். இந்த மஹாவாக்கியத்திலும் அ - உ - ம் என்னும் ஓங்காரத்தைசசார்ந்த பிரணவாக்ஷரங்கள் இருப்பன பிரத்தியக்ஷம்

யூதமதஸ்தர்களுடைய கடவுளின்பெயர் Jehova = இ ஹோ வா இந்த இ ஹோ வா என்னும் பதத்துக்கு (Hebrue) ஹிபுரு பாஷையில் இருக்கிறேன் என்ற பொருள். இந்தப்பொருளுள்ள இ ஹோ வா (Jehova) என்னும் பதத்திலுள்ள E A O இ, எ, ஒ அல்லது A, W O அ உ ஒ என்ற உயிர்கள் ஓங்காரத்தின் பொருளாம். இந்த இஹோவா என்ற பதத்தை கிரேக்கு பாஷையின்படி பரிகஷிப்போமாகில் ஓம் ஏப "நான் இருக்கிறேன்" என்றும் ஏப H I என்ற வினையால் To Be=இருத்தல் என்றும் (Sèptugent) செப்டுஜூண்டில் ஓம் என்பதைப்போன்ற (ஏப=Ever Existing God)=பதத்திற்கு எப்போதும் இருக்கும் ஈசன் அல்லது நான் இருக்கிறேன் என்று பொருளாகும்.

கிறிஸ்து மதத்தார் கடவுளுக்குச் சாதாரணமாக வழங்கும் எஹோவா என்ற இ பதங்களையும், ஆமென் என்ற பதத்தையும் சோதிப்போமாகில் அவை

களில் அ - உ - ம் என்னும் பிரணவாக்ஷரங்கள் அடங்கி இருத்தல் பிரத்தியக்ஷம்

இதைப்பற்றியே In the Gospel of John the Apostle in Chapter I Verses 1—5. யோவான் எழுதிய சுவிசேஷம் அதிகாரம் 1—5-ல் In the beginning was the *Word* and the *Word* was with God, and the *Word* was God= ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்தவார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தையே தேவனுய் இருந்தது; என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தையே ஓங்காரமாகிய வார்த்தை. இந்த வார்த்தைக்குள்ளிருந்தே, பிதா குமாரன் பரிசுத்தாவி என்ற திரியேகத்துவம் உண்டாகியதாம்.

மகம்மது மதஸ்தருடைய குரூனில் கடவுளை ஸ்துதிக்கும் அவிப்-லாம்-மிம் A. L M. என்பவைகளை மகாமகிமையுள்ளவைகளாக முதலில் உபயோகப்படுத்தப்பட்டிருப்பது பிரத்தியக்ஷம். அரபுபாஷையில் Karam al-din காரம் அல்-டீன் என்பதில் Alip=அலீபுக்கு முன் உச்சரிக்கும் போது ல எழுத்து Karam - ud - din காரம்உடீன்என்று உகரமாக உச்சரிப்பது சஹஜமாகையால் இந்த அலிப் - லாம் - மிம் என்னும் வார்த்தையிலிருக்கும் லகரம் உகரமாக மாற அ-உ-ம் என்னும் ஓங்காரத்தைக் காட்டும். மேலும் மகம்மதியருடைய (Kalima) = கலிமா = பரிசுத்த வார்த்தையாகிய La-ilaha-il-lal-lahu-wa Mahammed-ur-Rasul-ulla = லா-இல்லால்லாஹு-வ-மஹமத்உர்-ரசூல் உல்லா என்றால் There is no deity but God and Mahamud is the Apostle of God = அல்லாவாகிய ஆண்டவர் ஒருவர் தவிர வேறு கடவுள் இல்லை, மஹமமது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபிகாயகமாவார் என்பதாம். இந்த கலிமாவில் லா என்பதிலுள்ள அ கரமும், ஹு என்பதிலுள்ள உகரமும், மஹம்மத் என்பதிலுள்ள மகரமும் ஓம் என்னும் ஓங்காரத்தையே காட்டும். இப்படி இவ்வுலக சமயங்களிலெல்லாம் மறைந்து நிற்பது ஓங்காரமே. ஆகையால் மகா பக்தசிகாமணியாகிய,

தமிழ் நாட்டிற்சிறந்த நம்மாழ்வார் இயற்றிய,

(2) உ யிர்வ ற உயிர்ந ல முடையவ னெவ னவன்
(3) ம யிர்வ ற மதிந ல மருளின னெவ னவன்
(1) அ யிர்வ று மமரர்க ளதிபதி யெவ னவன்
(4) து யரற சுடரடி தொழு தெழுன் மனமே. என்னும் பாட்டில்

1, 2, 3 இலக்கமிட்ட வரிகளிலுள்ள (1) அகர, (2) உகர, (3) மகரமாகிய மூ வரிகளின் முதல் எழுத்துக்கள் ஓங்காரத்தைச்சார்ந்தவையாகவும், நான்காவது வரியின் (4) முதலெழுத்தாகிய து என்பது மூ ஓங்காரத்தின் இருப்பை ஸ்தாபிக்க சத், ஸத் என்பதைக்காட்ட நிற்பது பிரத்தியக்ஷம்.

Om, (AUM) when considered as one letter uttered by the help of one articulation, is the simbol of the Supreme Spirit. It is derived from the radical அ, உ, to preserve, with the affix ம்.

* "Om" implies the Being on whom all objects, either visible or invisible, depend in their formation, continuance, and change.

† "Tut" implies the being that can be described only by the demonstrative pronoun "that," and not by any particular definition.

‡ "Sat" implies what "truly exists" in one condition independent of others. These three terms collectively imply, that the object contemplated through "Om" can be described only as "that" which "is *existing*."

The first term "Om" bears a striking similarity, both in sound and application, to the participle of the verb *to be*, in Greek: and it is therefore not very improbable that one might have had its origin from the other. As to the similarity in sound, it is too obvious to require illustration; and a reference to the Septuagint will shew that like "Om" is applied to Jehova the ever *existing* God. Exodus, iii, 14.

(Om) is the emblem of "the Most High."—*Munoo*, II. 83. "This one letter, Om, is the emblem "of the Supreme Being."—*Bhuguvudgeeta*. It is true that this emblem conveys two sounds, that of *o* and of *m*, nevertheless it is held to be one letter in the above sense; and we meet with instances even in the ancient and modern languages of Europe that can justify such previleges; such as Ξ (Xi) and *ψ* (Psi) reckoned single letters in Greek, and Q, W, X, in English and others. But when considered as a triliteral word consisting of அ உ ம் Om implies the three Vedas, the three states of human nature, the three divisions of the universe, and the three deities, Brahma Vishnu and Shiva, agents in the creation, preservation, and destruction of this world; or, properly speaking, the three principal attributes of the Supreme Being personified as Brahma, Vishnoo and Shiva. In this sense it implies in fact, the Universe controlled by the Supreme Spirit.

(32.) முண்டகோபநிஷத்து

உ-வது முண்டகம் உ-வது கண்டம் சு-வது வாக்கியம்.

ஓ மித்யேவம் த்யாயத ஆத்மாநம் ஸ்வஸ்தி வ: பராய தமஸ: பரஸ்தாத்; ஓம் காரே ணைவாயத நேநாந் வேதி வித்வான் யத்தச் சாந்த மஜர மம்ருத மபயம் பரஞ்ச.

பொழிப்புரை.

ஓங்காரப் பிரதிபாத்தியமான பிரமத்தைத் தியானியுங்கள், அஞ்ஞான இருளிலின்று நீங்குவதில் உங்களுக்கு நிர்விக்கின முண்டாவதாக. ஞானி ஓங்கார சாதனத்தைக்கொண்டே அந்த சாந்தரும், மூப்பற்றவரும், சாவற்றவரும், பயம் நீங்கியவரும், நிரதிசயருமானவரை அடைகின்றார்.

விசேஷ உரை.

ஓங்காரமந்திரத்துக்கு தேவதை அக்னி என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். தேவதையென்றால் "யாதே நோச்யதே யாதேவா" என்று லக்ஷணம். இந்த மந்திரத்தாற் சொல்லப்பட்டவன் அக்னி. அக்னியில் பிராகிருத அக்னி, அபிராகிருத அக்கினி என இருவகையாம். இங்கு காட்டியிருக்கும் அக்னி, பிராகிருத அக்கினியோ, அபிராகிருத அக்னியோ என்று சிலர் சந்தேஹிக்கக் கூடும். அந்தச்சந்தேஹத்தை ஸ்ரீ சங்கராசாரியரும், ஸ்ரீ கிருஷ்ணபண்டிதரும் ஸ்பஷ்டமாக நீக்கியிருக்கிறார்கள். எப்படியெனில் "அஸ்ய பிரணவஸ்ய அக்னிர்ஹி பரமாத்மதேவதா" என்று சொல்லி "தத்பக்ஷம் சங்கர பகவத் பாதைர்ஹி என்று எழுதியிருக்கிறார்கள். "பிரணவே பிரஹ்மாக்ஷி: ப்ரோக்த: சந்தோ காயத்ரீ முச்யதே பரமாத்மாதேவதாயா மோகூஷாத்வவிநியுஜ்யதே இதி அதயேவக்னிபதஸ்ய பரமாத்ம பரத்வம் வியாகியாதம்" என்று சொல்லி இருப்பதால் இங்கு அக்கினி பதத்திற்கு பரமாத்மா என்றே கொள்ளவேண்டும். இதற்கு காயத்திரி சந்தசு என ஸாமான்யமாக சொல்லப்பட்டது. காயத்திரிக்கு சாமானியமாக 24 எழுத்துக்கள் இருந்தாலும், இதில் எட்டு விதங்கள் உண்டு. அதில் தேவகாயத்திரிக்கு ஏகாக்ஷரம். இதைப்பற்றியே ரிக் வேதிகள் ரிஷிபிரஹ்மம் பிரணவஸ்ய பரமேஷ்டி பிரஜாபதி:சந்தஸு தேவ காயத்திரி, பிரம்மமே தேவதை என்று சொல்லுகிறார்கள்.

இந்த மந்திரத்தின் பொருள், சந்தசு முதலானதுகள் சுருதியிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியெனில்,

"ஓமித்யேகாக்ஷரம் பிரமஹ அக்னிர்தேவதா பிரஹ்ம இத்யாஹம் காயத்ரி சந்தம் பரமாத்மம் ஸ்வரூபம் சாயுஜ்யம் விநியோகம்" என்றால், ஓம் என்றால் ஏகாக்ஷரம் - பிரஹ்மவாசகம் பரமாத்மா தேவதை பரமாத்மாவே ரிஷி - காயத்திரியே சந்தசு இந்த மந்திரத்தை -உச்சரிப்பதின் பிரயோஜனம் பரமாத்மாவை அடைவதேயாம். ஆகவே, அவர் ஓம் என்னும் சொல்லிற்கும் விஷயர், யார் பஷைத்தளிக்கவல்ல பொருளோ; அவரே ஈச்வரர். அவரே பிரமம். அவரே ஓங்காரத்தினால் விளக்கப்படுகிற மஹாபுருஷர், பூமியைவிட அதிகமேலான உலகங்களில் வாழ்கிற தேவதைகள் நியதமாக அவரை ஆராதனைசெய்கின்றனர். நாம் பெருமையானதும் மேலானதுமான பதவியை விரும்பின், நாமும் அந்த தேவதைகளைப்போல அந்த விசுத்த மங்களஸ்வரூபருக்கு எப்பொழுதும் ஆதீனமாகி, அவரைப்பற்றிக்கொண்டு, அவரிடத்திலுள்ள அன்பை விருத்தியும் விசுவிக்கவும் செய்து அவரது உபாஸனையில் விருப்பமுடனிருத்தல் வேண்டும்.

நாய்மையும் எழுச்சியுமுடைய ஞானத்தினால் அந்த ஓங்காரப்பிரதிபாத்திமான பிரமத்தைத்தியானியுங்கள்; அப்பொழுது நிச்சயமாக நீங்கள் ஸம்ஸாரத்தின் அஞ்ஞானவிருளிலிருந்து நீங்குவீர்கள்; மேலும் சாந்தரும், மூப்பற்றவரும், பயமற்றவரும், சாவற்றவரும், நிரதிசயருமான பிரமதத்தையடைவீர்கள்.

(33.) கேனோபநிஷத்து

க-வது கண்டம் ச-வது வாக்கியம்.

யன்மநஸா நமதுதே யெநாஹுர்மநோ மதம்;
ததேவ ப்ரஹ்மத்வம் வித்திநேதம் யதித முபாஸதே.

பொழிப்புரை.

பிரமஞானிகளாகிய ஆசாரியர்களுரைக்கின்றனர். எது மனதினுல் கருதப்படவில்லையோ, எதனுல் மனது கருதப்படுகின்றதோ, அதையே கடவுளென்று நீயறியக்கடவாய்; எதை இது வென்று உபாசிக்கின்றனரோ அது கடவுளன்று.

விசேஷ உரை.

பரிமிதப்பொருள்களாலே கருத்துமுற்றும் சித்திக்கக்கூடும். ஆனல் அது முடிவற்ற ஞானத்தையே வடிவாக உடைய பிரமத்தை எவ்விதத்தில் முற்றும் சித்திக்கக்கூடும்? அவர் கருத்திற்கு ஒருபோதும் முற்றும் விஷயமாகமாட்டார் அந்தப்பூரணஸ்வரூபரை ஒருவரும் முற்றும் கருதி முடியாது. ஆனல் அவர் யாவற்றையும் தன் கருத்திற்கு விஷயமாக்கிக்கொள்ள வல்லார். அவர் மது எல்லா கருத்திற்கும், எல்லா விருப்பத்திற்கும், எல்லா செய்கைகளுக்கும் சாக்ஷியாகவிருப்பவர்.

WHOM the mind conceiveth not, but by WHOM, they say, mind is conceived. HE is GOD, know HIM. HE is not any finite object they worship believing, "THIS IS GOD."

(34.) முண்டகோபநிஷத்து

கூ-வது முண்டகம் க-வது கண்டம் அ-வது வாக்கியம்.

நசக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா
நான்யைர்தேவை ஸ்தபஸா கர்மணாவா;
ஜ்ஞான ப்ரஸாதேந விஸுத்த ஸத்வஸ்தத
ஸ்துதம் பஸ்யதே நிஷ்களம் த்யாயமாந:.

பொழிப்புரை.

அவர் கண்ணுக்குப் புலப்படார், வாக்குக்கெட்டார். மேலும் வேறு பொறிகளாலும் கிரகிக்கப்படார், தபஸினுலும் வேள்வி முதலியகருமங்களினுலும் அவரையடையக்கூடா, ஞானத்தினது பயனல் தூய்மையான உள்ளமுடையவர் தியானித்துக்கொண்டே நிரவயமான அவரை அடைகின்றனர்.

விசேஷ உரை.

ஞானத்தைக் கருதுவதாலும் தருமத்தை அநுட்டிப்பதாலும் உள்ளம் தூய்மையாயின் அவரை உள்ளத்திலேயே நேராக பார்க்கப்பெறுவோம் வேள்விமுதலிய வீண்விரதங்களையனுட்டித்தல் உணவில்லாமல் தீயினிடையே இருத்தல் முதலிய தவங்களியற்றுதல் இவற்றினுல் அவரை அடையப்போகாது இப்படிப்பட்ட வழிகள் யாவும் அவரை அடைவதற்குரிய வழிகளன்று. ஞானமாகிய வழியே அவரை அடையும் வழி.

HIM neither eye reacheth, nor speech, not the other senses, nor rites, nor austerities. Only the mind, purified by the grace of wisdom, seeth HIM the formless in mood Meditative.

நாராயணம் முதல் அநுவாகம்

கூ—வது வாக்கியம்.

நைநமூர்த்வம் நதிர்யஞ்சம் நமத்யே பரிஜக்ரபத் ;
நதஸ்யப்ரதிமா அஸ்தி யஸ்ய நாமமஹத்யச:.

பொழிப்புரை.

மேலுலகத்திலும், பக்கமாகிய லோகத்திலும், இடையிலுள்ள லோகத்திலும் இவரைக்கிரகித்து முடியாது. இவருக்குப் பிரதிமையில்லை. இவர் பெரும் புகழினர்.

விசேஷ உரை.

மிகஉயர்வான மாகவிக விருத்திகளுடன் கூடிய சிறந்த உயிர்களும், கறையற்ற ஞானக்கடலும், அழிவற்ற தன்மையையுமே வடிவாக உடையவரும் ஆகிய அவரது பெருந்தன்மையை, அளவுபடுத்தியறிய சக்தரல்லர் ; அவருக்குப் பிரதிமையில்லை, அவருக்கு ஒப்பும் இல்லை, அவரைப்போன்றிருக்கிற ஒரு பொருளுங்கிடையாது. சூரியபிம்பத்தினது ஒளி அவரது ஒளிக்கு எவ்விதத்திலும் இணையாகமாட்டாது, வைரத்தினது பலம் அவரது பலத்திற்கு சிறிதும் ஒப்பாகமாட்டாது, தாய்தந்தையரது உண்மையான நட்பும், உள்ளங்கலந்த நேயர்களினது ஸ்வப்பிரயோஜனமற்ற அன்பும், கற்புடைய மங்கையரது தூய்மையான பிரேமையும், அவரது நல்ல குணமையின் நிழல்மாத்திரமாகவிருக்கிறது அவருக்கு உடலில்லை; அவர் உடலெப்படைப்பவர், அவர் சிற்றறிவினரன்று; சிற்றறிவினரை உண்டுபண்ணுகிறவர் அவரது புகழ்ஆகாயத்தைப்போல எங்கும் வியாபித்திருக்கினறது. அவரது மகிமை மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலுமுள்ள ஒவ்வொரு அணுவிலும் மிகவாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. ஆனதால், அவர்பெயர் பெரும்புகழினர்

HIM none among the inhabitants of worlds higher, middle, or lateral, comprehendeth. HE has no *image* whose name is the "*All—renowned.*"

சாந்தோக்கிய உபநிஷத்து

அ-வது பிரபாடகம் - சு-வது கண்டம்-க-வது வாக்கியம்.

ஆகாசோவைநாமாநாமரூபயோர்நிர்வஹிதா;
தேயதந்தராதத்ப்ரஹ்மதத்அம்ருதம்.

பொழிப்புரை.

பிரமத்தின்பெயர் ஆகாயம். அவர், பெயரும், உருவமு

மூடைய பொருள்களினுடைய நிர்வாககர். பெயரும் உருவமு மூள்ள பொருள்களைக்காட்டிலும் வேருனவர் யாரோ, அவர் பிரமம். அவர் அழிவற்றவர்.

விசேஷ உரை.

பரமாத்துமாவுக்கு எப்படி எவ்வித ரூபமும் கிடையாதோ, அது போலவே அவருக்கு எவ்வித பெயரும்கிடையாது; ஆயினும், அவரது அகந்த கல்லியாண குணகர்மங்களைக்கருதி அவரை அனந்தமான பெயர்களால் பிரஜைகள் புகழ்ந்து பிரார்த்தித்து வருகிறார்கள். உண்மை இப்படியிருக்க,

இக்காட்டு ஆதி ஆரியர்கள் பிருதவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்ஆகிய பஞ்ச பூதங்களை பரமாத்துமாவாக பூஜித்துவந்தார்களென்றும்; பிறகு பலகாலஞ் சென்றதன்மேல்,பரமாத்துமாவின் யதார்த்த சொரூபத்தையறிந்துகொண்டார்க ளென்றும் அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

மேலும் ஆரியர்கள் பலதெய்வங்களைப் பூஜித்தவர்களென்றும், வெகு காலங் களுக்குபின்பு உபநிஷத்துக்களில் ஏகேசுவர பதத்தைக்கற்பித்தார்களென்றும் எண் ணுகின்றார்கள்; இப்படி எண்ணுதல் வேத ஆராய்ச்சி இல்லாத காரணமேயாம். ஆதிதொடங்கி ஆரியர்கள் நாமரூப ரகிதமான பரம்பொருள் ஒன்றையே உபா சித்துவந்தார்களென்றும், வேதங்களில் தோத்தரிக்கப்படும் இந்திரன், மித்தி ரன், வருணன் முதலியவர்களெல்லாம் அந்தப் பரமாத்துமாவைத்தவிர வேறு தெய்வங்களல்லவென்றும், அப்பரமாத்மாவுக்கே அப்பெயர்கள் வழங்கிவந்தார்க ளென்றும் ஸ்பஷ்டமாகும்—திருஷ்டாந்தமாக:—

ருக்வேதம் 1 - 6 - 189 - ல்.

சன்னோமித்ர: சம்வருண: சன்னோபவது அர்யமா,
சன்ன இந்த்ரோ பிரகஸ்பதி: சன்னோவிஷ்ணு: உருக்ரம:

(இதன்பொருள்) இரக்ஷகனையும் சிரேஷ்டனையும் நியாயகாரியாயும் சுவாமி யாயும் சர்வவியாபகனையும் பராக்கிரமனையுமுள்ள பரமேசுவரன் நமக்கு சுகத்தைக் கொடுப்பாராக எனறும்

ருக்குவேதம் 2 - 3 - 22 - 46 ல்

இந்தரம் மித்ரம் வருணம் அக்னிம் ஆஹு:
அதோ திவ்ய: ஸஸு:பர்ணோ கருத்மான், ஏகம் ஏகம் ஸத்
விப்ரா பகுதாவதந்தி அக்னிம் யமம் மாதரிச்வானமாஹு:

(இதன்பொருள்) ஈசுவரனை இந்திரனென்றும், மித்திரனென்றும், வருண னென்றும், அக்னியென்றும் சொல்லுகிறார்கள்; மேலும், அவர் அற்புதனையும் சுந்தரனையும் கம்பீரனையுமிருக்கிறார். அவர் ஒருவர், ஆனால் புத்திமான்கள் அவரை அக்னியென்றும் யமனென்றும் மாதரிசுவாவென்றும் அநேகவிதமாய் சொல்லுகின்றார்கள் என்றும்

ருக்வேதம் 10 - 141 - 4 ல்

இந்த்ரவா பூபிரகஸ்பதிம் ஸுஹவேஹ ஹவாமஹே.

(இதன் பொருள்) பூஜ்யனும் ஐசுவரியவானும் பலவானும் பெரியவனும் சுவாமியும் ஆகிய பரமேசுவரனை ஸ்மரிக்கின்றோம், என்றும்,

கமோ பிரும்மணே நமஸ்தேவாயோ த்வமேவ
ப்ரத்யக்ஷம் பிரும்மாஸ்மி.

(இதன்பொருள்) பரமேசுவரனுக்கு நமஸ்காரம். ஸர்வசக்திமானுகிய உனக்கு நமஸ்காரம். நீயே உண்மையாக எல்லாவற்றிலும் பெரியவன் என்றும் சொல்லியிருக்கின்றன.

இத்தியாதி சுருதிகளில் பரமாத்துமா ஒருவருக்கே இடப்பட்ட பலபெயர்களின் பொருள்களை அறிந்தும் சக்தியற்ற சாதாரண ஜனங்கள் இப்பெயர்களால் பல தேவர்களும் தேவதைகளும் உண்டென்று மனோராச்சியம் செய்கிறார்கள்; ஆனல்

சம்ஸ்கிருத பாஷையில் அற்புதமான சக்தியையுடையவராய், வேதங்களுக்கு பாஷ்பஞ் செய்திருக்கும் புகழுடம்பினராகிய தயாநந்த சரஸ்வதி சுவாமிகள் தமது சத்தியார்த்தப் பிரகாசிகையென்னும் கிரந்தத்தில், அப்பரமேசுவரனுக்கு வேதங்களில் வழங்கிவந்த ஒவ்வொரு பெயருக்கும் சொற்பொருள் இன்னதென்றும், அச்சொற்களின் பகுதிகளையும், நிருக்தத்தில் (வேத அகராதியில்) அப்பகுதிக்குரிய அருத்தங்கள் இன்னவையென்றும், எடுத்துக்காண்பித்திருக்கின்றார். அதன் கருத்தை அடியில் எழுதுகின்றேம்

ஆரியர் வேதத்தில் பரமாத்துமாவுக்கு வழங்கும் பலபெயர்களின் விவரம்.

---

1. விராட்டு, என்றால்=அநேக விதமாக ஜகத்தை பிரகாசிக்கச்செய்பவன்.
2. அக்கினி, என்றால்=ஞானஸ்வரூபனையும், சர்வக்ஞனையும் அடைவதற்கும், அறிவதற்கும், பூஜ்ப்பதற்கும் தக்கவனுயிருப்பவன்.
3. விசுவன், என்றால்=ஆகாசாதி பூதங்கள் யாரிடத்திலிருந்து பிரவேசிக்கின்றனவோ அவன்.
4. ஹிரண்யகர்ப்பன் என்றால்=சூரியன் முதலிய தேஜஸுக்களை கர்ப்பத்திலுடையவன்.
5. வாயு, என்றால்=சராசரமான ஜகத்தைப் பிரளயம் செய்பவன் அல்லது தாங்கிக்கொண்டிருப்பவன்; பலவானுக்கெல்லாம் பலவான்.
6. தைஜஸன் என்றால்=தனக்குத்தானே பிரகாசமுள்ளவன்; சூரியாதி தேஜஸுக்களைப் பிரகாசிக்கச் செய்பவன்.
7. ஈசுவரன் என்றால்=சத்தியம், ஞானம் முதலிய சமஸ்த ஐசுவரியத்தையுமுடையவன். ஆளுபவன, அரசன்.
8. ஆதித்தன், என்றால்=நாசமில்லாதவன்.
9. பிராக்கியன், என்றால்=ஞானி; ஞானிகளுக்கெல்லாம் சிரேஷ்டன் எல்லாப்பொருள்களையும் உள்ளபடி அறிகிறவன்.
10. மித்திரன், என்றால்=எல்லாருக்கும் நண்பன்.
11. வருணன், என்றால்=சிஷ்டர்களையும் முமூட்சுக்களையும், தருமாத்துமாக்களையும் ஸ்வீகரிப்பவன்; சிரேஷ்டர்கள் அடையத்தக்கவன் சிரேஷ்டன்.
12. அரியமா, என்றால்=எல்லாருடைய கருமங்களின் உண்மையான வியவஸ்தையை அறிந்து, பாபிகளுக்கும் புண்ணியவான்களுக்கும் பலன்களை நியமிப்பவன்.
13. இந்திரன், என்றால்=எல்லா ஐசுவரியத்தோடுங் கூடினவன்.
14. பிரகஸ்பதி, என்றால்=எல்லாரிலும் பெரியவனையும், ஆகாசாதிகளுக்கும் பிரம்மாதிகளுக்கும் குருவாயும் அதிபதியாயும் இருப்பவன்.

15. பிரஜாபதி, என்றால்=சமஸ்தப்பிராணிகளுக்கும் யஜமானன்.
16. விஷ்ணு, என்றால்=சராசரமாகிய ஜகத்தெல்லாம் வியாபித்திருப்பவன்.
17. உருக்கிரமன், என்றால்=திகுந்த பராக்கிரமத்தையுடையவன்.
18. பிரம்மா, என்றால்=எல்லாவற்றிலும் பிரகாசித்துக்கொண்டு எல்லாவற்றிற்கும் பெரியவனாயிருப்பவன்.

19. குபேரன், என்றால்=ஆகாசாதிகளுக்கு அச்சாதிகன்.
20. ஆத்மா, என்றால்=எல்லா ஜகத்திலும் வியாபித்திருப்பவன்.
21. பரமாத்மாவென்றால்=ஜீவாத்மாக்களிலெல்லாம் சிரேஷ்டன்.
22. பரமேசுவரன், என்றால்=ஈசுவரர்களுக்கெல்லாம் ஈசுவரன். ஐசுவரியத்தையுடையவர்களிலெல்லாரிலும் உயர்ந்தவன்.

23. ஸவிதா, என்றால்=சமஸ்தமான ஜகத்தையும் உற்பத்திபண்ணுகிறவன்

தேவன் என்னும் பதத்தின் பொருள்.

24. தேவன் என்றால் (1) ஸ்வயம் பிரகாசனாய், எல்லா ஜகத்தையும் ஜீவனிக்கச்செய்கிறவன். (2) தனது ஆனந்தத்தில் கிரீடிக்கிறவன் அல்லது ஜகத்தைக் கிரீடையாக சிருஷ்டித்தவன். அல்லது ஜகத்தின் கிரீடைகு ஆதாரமாயிருப்பவன். (3) எல்லாரையும் ஜயிப்பவன்; யாராலும் ஜயிக்கப்படாதவன். பாப புண்ணிய வியவகாரங்களை உபதேசிக்கிறவன். (5) எல்லாப் பிரகாசத்துக்கும் ஆதாரனாயிருப்பவன். (6) எல்லாராலும் துதிக்கப்படத்தக்கவன். (7) ஆனந்தஸ்வரூபனாய் எல்லாரையும் ஆனந்திப்பிப்பவன். (8) சந்தோஷிப்பிப்பவன். (9) பிரளயத்தில் எல்லாரையும் அவ்வியகத்தில் ஒடுக்குபவன். (10) சர்வாபீஷ்டங்களும் நிறைந்தவனாய் இஷ்டர்களால் விரும்பப்படத் தகுந்தவன். (11) எல்லோரையும் அடைந்து எல்லோராலும் அடையவும் அறியவும் தக்கவன்.

டஞ் பூத தேவதையின் பொருள்.

25. பிருதுவி, என்றால்=ஆகாசாதிகளிலெல்லாம் விஸ்தரித்திருப்பவன்.
26. ஜலம், என்றால் அவ்வியக்தத்தினின்றும் பரமாணுக்களை ஒன்றொன்றாய் சேர்க்கவும்; பிரளயத்தில் அவைகளைப்பிரிக்கவும் சக்தியுள்ளவன். அல்லது ஜ=என்பதினால் எல்லாவற்றையும் உண்டாக்குபவன்; ல=என்பதினால் எல்லாவற்றையும் தாங்குபவன்.

27. ஆகாசம், என்றால் = எல்லாவிடத்திலும், எக்காலத்திலும், எல்லாவற்றையும் பிரகாசிக்கச்செய்பவன்.
28. அன்னம், என்றால்=சராசரமான ஜகத்தைப்பட்சித்து ஜீரணிப்பவன்.
29. அன்னாதன், என்றால்=சராசரமான ஜகத்தைக் கிரகிப்பவன். அத்தா என்பதும் அதேபொருள்.
30. வசு என்றால்=ஆகாசாதி பூதங்கள் வசிப்பதற்கு இடமானவன்; எல்லா பூதங்களிலும் வசிப்பவன்.
31. ருத்திரன், என்றால்=துஷ்ட காரியங்களைச்செய்பவர்களை அழச்செய்பவன்.

சந்தியாவந்தன மந்திரத்தின் பொருள்.

32. நாராயணன், என்றால் = எல்லாப்பிராணிகளும் வசிக்கும் ஸ்தானம். எவனிடமிருந்து எல்லா பிராணிகளும் ஜனிக்கின்றனவோ; ஜனித்தவை, மறு படியும் எவனோடு சேருகின்றனவோ அவனே நாராயணன்.

33. கேசவன், என்றால்=நிரவதிக சுகத்தை வஹிக்கப்பட்டவன்.

34. மாதவன், என்றால்=ஞானத்திற்குப் பிரபுவானவன்.

35. கோவிந்தன், என்றால் = வாக்கினால் ஸ்தோத்திரிக்கப்படுபவன் அல்லது ஜீவகோடிகளாகிய பசுக்களை பாதுகாப்பவன்.

36. மதுசூதனன், என்றால் = ஞானத்தினால் பக்தர்களுடைய கர்மபல பாசத்தை போக்குபவன்.

37. திரிவிக்கிரமன், என்றால்=மூன்று லோகங்களிலும் வியாபித்திருப்பவன்

38. வாமனன் என்றால்=பங்களஸ்வரூபத்தினால் பிரகாசிப்பவன்.

39. ஸ்ரீதரன், என்றால்=ஸர்வஸம்பத்துகளை சரித்துக்கொண்டிருப்பவன்.

40. ஹிருஷிகேசன், என்றால்=இந்திரியங்களுக்கு பிரபுவானவன்.

41. பத்மநாபன், என்றால்=ஸர்வ ஜகத்காரண சம்பன்னன்.

42. தாமோதரன், என்றால் = சர்வலோகங்களையும் தனக்குள்ளாக உடையவன்

43. ஸங்கரஷணன், என்றால்=ஸர்வ ஜீவர்களையும் ஆகர்ஷிப்பவன்.

44. வாசுதேவன், என்றால் = ஸர்வ பூதங்களையும் தனக்குள்ளும், தான் ஸர்வபூதங்களுமாக இருப்பவன்.

45. பிரதியும்னன், என்றால்=அத்தியந்த பிரகாஸ சம்பன்னன்,

46. அநிருத்தன், என்றால்=பக்தர்களால் கிரஹிக்கப்படுபவன்.

47. நரசிம்ஹன், என்றால்=பாவிகளை தண்டித்து ஞானிகளுக்கு மோக்ஷம் தருபவன்.

48. அச்சுதன், என்றால்=நாஸரஹிதமானவன்.

49. ஜநார்தனன், என்றால்=ஜனங்களால் புருஷார்த்தத்துக்கு வேண்டப்படத்தக்கவன்.

50. உபேந்திரன், என்றால்=பரம ஐஸ்வர்யஸம்பன்னன்.

51. ஹரி, என்றால்=பக்தர்களுடைய பாவங்களை போக்கப்பட்டவன்.

நவக்கிரஹ தேவதைகளின் பொருள்.

52. சூரியன், என்றால் சராசரமான ஜகத்துக்கு ஆத்மா.

53. சந்திரன், என்றால்=ஜீவர்களையும் முக்தர்களையும் ஆநந்திப்பிக்கிறவன்.

54. மங்களன், என்றால்=தான் சுபரூபனாகி எல்லாருக்கும் சுபத்தைக்கொடுப்பவன்.

55. புதன், என்றால்=தான் ஞான (அறிவு) சொரூபனாய் எல்லாருக்கும் அறிவைத்தர காரணனாயிருப்பவன்.

56. சுக்கிரன், என்றால்=தான் பரிசுத்தனாகி எல்லாரையும் பரிசுத்தப்படுத்துகிறவன்.

57. சனீசுவரன் என்றால்= தான் தைரியவானாகி உலகத்தின் தைரியத்துக்குக் காரணனாயிருப்பவன்.

58. ராகு, என்றால்=ஏகாந்த சொரூபனாகி எதனுடனும் சேராமல் துறவி களின் துறவுக்குக் காரணனாயிருப்பவன்.

59. கேது, என்றால்=ஜகத்துக்கு வாசஸ்தானமாகி ரோக ரகிதனாய், முமுட் சுக்களின் ஜனன மரணங்களை நாசப்படுத்துபவன்.

யாகயக்கிய தேவதையின் பெயர்.

---

60. யக்கியன், என்றால்=பிரம்மாதிகளாலும் பூஜிக்கப்படுகிறவன். யக்கிய மென்பது விஷ்ணுவுக்குப்பெயர். விஷ்ணுவென்றால் வியாபகன்; ஆகையால் யக்கியனென்றால் வியாப்பியனென்றும் பொருள்.

61. ஹோமன், என்றால்=கொடுக்கவும் வாங்கவும் தக்கவன், உபதேசத்தைக் கொடுப்பதிலும் பக்தியைக் கிரகிப்பதிலும் பரமேசுவரனைவிட உத்தமனில்லை யாகையால்; அவனுக்கு ஹோமனென்ற பெயர் வழங்கியது.

62. பந்து, என்றால்=எல்லா உலகங்களையும் ஆக்கினையால் கட்டி தத்தம் மார்க்கங்களில் சுற்றும்படி நடத்துபவன். உறவினரைப்போல உலகங்கள் ஒன்றுக்கொன்று சகாயகாரியாயிருக்கச் செய்பவன்.

63. பிதா, என்றால்=பிரஜைகளை தகப்பனைப்போல கிருபையுடனும் பிரீதி யுடனும் இரட்சிப்பவன்.

64. மாதா, என்றால்=தாயைப்போல பிரஜைகளை அபிமானித்து அத்தியந்தம் பிரீதியும் கிருபையும் செய்பவன்.

தத்துவசாஸ்திரங்களில வழங்கும பெயர்கள்.

---

65. சத்தியன் என்றால்=நித்தியனும் அழிவற்றவனுமாயிருப்பவன்.

66. ஞானன், என்றால்=மூக்காலத்தையும் அறிந்தவன்.

67. அநந்தன், என்றால் = தேச கால வஸ்துக்களால் அபரிச்சின்னன். அகண்டமானவன்.

68. ஆநந்தன், என்றால் = எல்லாம் நிறைந்தவனாய், சச்தோஷ சித்தனாய் முமுட்சுக்களுக்கு நித்தியாநந்தத்தைக் கொடுப்பவன்.

69. சச்சிதானந்தன், என்றால் சத்தியசொரூபன், ஞானசொரூபன், ஆநந்த சொரூபன்.

70. சுத்தன் என்றால்=தான் சுத்தனாகி, ஜீவர்களின் எல்லாக்குற்றங்களையும் நீக்குபவன்.

71. புத்தன், என்றால்=அறிவுக்கு எல்லையாயிருப்பவன்.

72. முக்தன், என்றால்=தான் முக்தனாகி எல்லாருக்கும் முக்தியைக்கொடு ப்பவன்.

73. நித்தியன், என்றால்=என்றுமுள்ளவன், எவராலும் உண்டாக்கப்படாத வன்.

74. கணேசன், என்றால்=அண்டங்களின் கூட்டங்களுக்கெல்லாம் ஈசன்.

75. விசுவேசுவரன், என்றால்=ஜகத்துக்கெல்லாம் ஈசுவரன்.

76. சுடஸ்தன், என்றால்=யாரிடத்தில் எல்லா வியவகாரங்களும் உண்டா கின்றனவோ, எவன் எல்லா வியவகாரங்களிலும் வியாப்தனாகி அவைகளுக்கு ஆதாரனாயிருக்கின்றானோ எவனுடைய சொரூபத்தில் எவ்வித விகாரமுமில்லை யோ அவன்,

புராண இதிகாச தேவதையின் பொருள்.

77. சக்தி என்றால்=எல்லா பதார்த்தங்களையும் பரிக்கும் சக்தியுள்ளவன்.

78. லட்சுமி, என்றால்=எல்லாவுலகங்களையும் உண்டாக்கிப்பார்க்கின்றவன் ஜகத்தில் அவயவங்களே ஒன்றைப்போல மற்றொன்றில்லாதபடி, படைத்துப் பிரகாசிக்கச்செய்பவன். வேதாதி சாஸ்திரங்களே ஞானிகளுடைய தரிசனத்துக்கு எற்றவாறு செய்திருப்பவன். சகல சுகங்களையும் தருபவன்.

79. ஸரஸ்வதி, என்றால்=சகலவித ஞானங்கள் விளங்கப்பெற்றவன்.

80. நியாயகாரி, என்றால்=பக்ஷபாதமற்றவன், பாப புண்ணியங்களுக்குத் தக்கபடி பலனே அளிப்பவன்.

81. தயாளு, என்றால்=அபயங்கொடுத்தல், உள்ளபடி குணதோஷங்களே அறிதல், இரட்சித்தல், துஷ்டகர்மங்களைச் செய்வோரைத்தண்டித்தல், எல்லாரிடத்திலும் பிரீதியுடன் கிருபைசெய்தல் ஆகிய குணங்களையுடையவன்.

82. அந்தரியாமி, என்றால்=ஜகத்தின் உள்ளும் புறமும் எங்கும் வியாபித்து எல்லாவற்றையும் நியமத்தில் வைப்பவன்.

83. தருமராஜன், என்றால்=தருமத்தால் எப்போதும் பிரகாசிப்பவன், தருமத்தைப் பிரகாசிக்கச்செய்பவன்.

84. சிவன், என்றால் எப்போதும் கல்யாண குணங்களோடு இருப்பவன்.

85. பகவான், என்றால் ஞானஐசுவரார்கியாதி குணங்களே நித்தியமுமுடையவன்.

86. மனு, என்றால் ஜகத்தை அறிபவன். வேதாதி சாஸ்திரங்களாலும் சிஷ்டர்களாலும் அறியப்பட்டவன்.

87. விசுவம்பரன், என்றால் ஜகத்தையெல்லாம் தரித்துப்போஷிப்பவன்.

88. காலன், என்றால் ஜகத்தின் எண்ணிக்கை அளவுமுதலியவற்றை உள்ளபடி அறிபவன், .

89. பிரியன், என்றால் சிஷ்டர்களையும் முமுட்சுக்களையும் தனது ஆசுத்தத்தால் சந்தோஷப்படுத்துகிறவன்.

90. சங்கரன், என்றால் சுகத்தைக் கொடுப்பவன்.

91. சூட்சுமன், என்றால் எல்லாவற்றிலும் பெரியவன்.

92. சாம்பு, என்றால் சுவயமாக இருப்பவன்.

93. மஹான், என்றால் எல்லாவற்றிலும் பெரியவன்

இவ்விதமாய் பரமாத்மாவின் குண கர்ம சுவபாவங்களே அனுசரித்து பலநாமங்கள் அவருக்கு வேதங்களில் வழங்கியிருப்பதுமன்றி, பிரபஞ்ச சம்பந்தமான குணங்கள் அவரிடமில்லையென்பதை விளக்குகின்ற பல நாமங்களும் உண்டு.

அவையாவன:

94. அஜன், என்றால் பிறப்பில்லாதவன்.

95. நிராகாரன், என்றால் ரூபமில்லாதவன்.

96. நிரஞ்சனன், என்றால் மாயையும் அவித்தையுமற்றவன.

97. அத்துவிதீயன், என்றால் ஒப்புயர்வில்லாதவன. ஸஜாதி விஜாதி ஸ்வகத பேதமற்றவன்.

98. நிர்க்குணன்; என்றால் ஜன்மம் அவித்தை ஸத்துவம் முதலிய ஜகத்தின் குணமற்றவன்.

99. நிர்பயன், என்றால் யாரிடத்திலும் பயமில்லாதவன

100. அஜன், எனறால் ஆகியற்றவன் எவற்றிற்கும் ஆதியானவன்

101 அதீந்தியன், என்றால் விஷயாசக்தியுள்ளவர்களால் நினைக்கவும் அறியவும் படாதவன்

102 அப்பிரமேயன், என்றால் இவ்வளவு சக்தியுடையவனென்று அளவிட்டுச்சொல்லக்கூடாதவன்

103 அப்பிரமாதி, என்றால் பிராந்தியற்றவன்

104 அகாயன், என்றால் சரீரமற்றவன்

105 அவிருணன், என்றால் புண்ணற்றவன்

106. அஸ்நாவிரன், என்றால் நாடிநரம்பற்றவன்

107 அபாபனனெனறால் பாவமற்றவன் பாவனன்

108 நிர்விகாரன் எனறால் ஜகத்தின் பதார்த்தங்களைப்போல வளர்ச்சி தேய்வு முதலிய மாறுதலில்லாதவன. இப்படி ஒரே பரமாத்துமாவுக்கு அவரது அநந்த கலியாணகுண கர்மங்களைக்குறித்து ஆயிரக்கணக்கான பெயர்களிட்டு அழைத்துவந்தார்கள். இதன் அந்தரங்கமான அருத்தத்தை அறியாதார் ஆரியர் அநேகதேவர்களையும், தேவதைகளையும் வணங்கப்பட்டவர்களென்று எண்ணுகிறார்கள். ஆகவே அதைப்பற்றி இதனடியில் கிஞ்சித்செழுதுவோம்

முதலாவது

தேவன் என்னும் சொல்லின் சொற்பொருளை விசாரிப்போமாகில் அது வேதங்களில் பலவிடங்களில் பல அருத்தங்களில் உபயோகப்படும் காரணம் விதிதமாகும்: தேவன் என்னும் பதத்தின் பகுதிக்கு = தானங்கொடுத்தல் -பிரகாசித்தல் - போதித்தல் - விளையாடுதல் முதலியன முக்கியமான பொருள்கள். பரமாத்துமா எல்லா உலகங்களையும் படைத்து அவைகளை பிராணிகோடிகளின் உபயோகத்திற்கு தானமாகக் கொடுத்திருப்பதாலும், எல்லாவற்றையும் தனது சக்தியால் ஆசரித்து பிரகாசிக்கச்செய்திருப்பதாலும், சிருஷ்டியின் விமரிசையிலுலும், அந்தரியாமித்துவத்தாலும், மனிதர்களுக்கு அவரது ஞானத்தையும், ஆக்ஞைகளையும் இடைவிடாமல் போதித்து வருவதாலும், சிருஷ்டி ஸ்திதி - சங்காராதிகளை - ஒரு விளையாட்டாக நடத்தி வருவதாலும் தேவனென்றபெயர் வேதங்களில் பரமாத்துமாவுக்கு பலவிதமாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க,

தேவர்கள்அல்லது தேவதைகள்என்றபெயரை இத்தேசத்தில் இப்போது பலவாருகவழங்கிவருகிறார்கள், வேதங்களிலும் புராணங்களிலும் இச்சொற்கள் பலவிடங்களில் காணப்படினும்; இச்சொற்களின் பொருளின்னதென்பதை பெரும்பான்மையோர் நன்குணராமல் பலவிதபொருந்தாதபொருள்களைச்செய்து கொண்டிருப்பதலுல், அன்னிய மதஸ்தர்களும் அவைகளின் சொரூபத்தை விசாரியாமலே ஆரியர்கள் பல தெய்வங்களைப் பூஜிப்பவர்களென்று பழித்து வருகிறார்கள். இச்சொற்கள் வேதங்களில் வழங்கப்பட்டிருக்கும் பொருளுக்கும், புராணங்களில் வழங்கப்பட்டிருக்கும் பொருளுக்கும் வெகு வித்தியாசமுண்டு. வேதங்களில் யக்ஞிய மந்திரங்களையும், யகியமுதலிய கருமங்களையும், தேவதைகள் என்று சொல்லியிருந்தாலும் மாதா - பிதா - ஆசாரியன் - ஞானி முதலியவர்களுக்கும் வழங்கப்பட்டும்; பஞ்சேந்திரியங்களையும், மனம் புத்தி முதலிய அந்தக்கரணங்களையும், தேவதைகளென்றும்; சூரியன் முதலிய லோகங்களும் தேவர்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்திராதிதேவர்கள் விஷயத்தில் மாத்திரம் வேதங்களில் சொல்லப்பட்டிருப்பதற்கும் புராணங்களில் சொல்லப்பட்டிருப்பதற்கும் பேதமிருப்பதாகக்

காணவில்லை. திரிமூர்த்திகளென்று சொல்லப்படும் பிரும்மா - விஷ்ணு - ருத்திரன் ஆகிய பெயர்களைக் குறித்து வேதங்களில் ஒரு விதமாயும், புராணங்களில் ஒருவிதமாயும் சொல்லியிருப்பது படித்தவர்களுக்கு ஸ்பஷ்டமாகும்.

வியவகாரத்தில் சொல்லப்படும் தேவதைகள் 33 ஆவர். அவைகளின் விவரம் வசுக்கள் 8, ருத்திரர் 11, ஆதித்தர் 12, இந்திரன் 1, பிரஜாபதி 1 ஆகதேவதைகள் 33. அஷ்டவசுக்களாவன:—1 அக்கினி, 2 பிருதுவி (பூமி), 3 வாயு, 4 அந்தரிக்ஷம் (பூமிக்கும் வானத்திற்கும் இடையிலுள்ளவெளி), 5-ஆதித்தன் (சூரியன்), 6-தியௌ (வானம் அல்லது சொர்க்கம்), 7 சந்திரன், 8-நட்சத்திரம், எல்லாப தார்த்தங்களும் இவைகளில் வசிப்பதால் இவைகளுக்கு வசுவென்ற பெயர்வந்தது. ஏகாதசருத்திரர்களாவன: - மனிதனுடைய சரீரத்தில் வியாபித்திராகின்ற பிராண-அபான-வியான-சமான-உதான-நாக - கூர்ம - கிருத்வ - தேவதத்த தனஞ்செயனென்று சொல்லப்படும் 10 வாயுக்களும் ஜீவாத்மாவுமாம். இப்பதினொன்றும் மானிடதேகத்தை விட்டுப் பிரியுங்கால் பந்துஜனங்களையெல்லாம் அழும்படி செய்வதால் இவைகளுக்கு ருத்திரரென்ற பெயர்வந்தது. துவாதச ஆதித்தர் ஆவன:—12 மாதங்கள், இவைகள் மனிதனுடைய ஆயுளைக் கிரகித்துக்கொண்டுபோவதால் இவைகளுக்கு ஆதித்தரென்ற பெயர் வழங்கியது. இந்திரனென்பது மேகத்திற்கும் அதில் உண்டாகும் இடிக்கும் பெயர். இந்திரனென்பதற்கு ஐசுவரியத்தோடு கூடினவன் என்று பொருள். மேகம் மழை ரூபமாய் பூமியில் பிரஜைகளுக்கு ஐசுவரியத்தைக் கொடுப்பதால் மேக இடிகளுக்கு இந்திரனென்ற பெயர் வழங்கியது. பிரஜாபதி என்பது யக்கியத்திற்கும் பசுக்களுக்கும் பெயர். யக்கியத்தால் வாயு மேகம் முதலியவை சுத்தமடைந்து பிரஜைகள் இரக்ஷிக்கப்படுகிறார்கள். பசுக்களால் பிரஜைகள் சுகமாக ஜீவிக்கின்றார்கள். ஆகையால் யக்கியமும் பசுவும் பிரஜைகள் இரக்ஷிக்கப்படுவதற்குக் காரணமாயிருப்பதால் அவைகளுக்குப் பிரஜாபதி என்ற பெயர் வழங்கப்பட்டன

இங்கு தேவர்களென்று சொல்லப்பட்ட 33-கிருஷ்டிகளும் ஈசுவர சிருஷ்டியில் அடங்கியிருந்தபோதிலும், உலக இரக்ஷணைக்கும் சுகத்துக்கும் மிகுந்த பிரயோஜனகாரிகளாக இருக்கின்றமையால் அவைகளின் குணங்களையும் கருமங்களையும் நோக்கியும், இவைகளில் ஈசுவருடைய கருணையே குடிகொண்டிருப்பதால் இவைகளை தேவதைகளைப்போல பாவித்துக்கொண்டும்; இவைகளுடன் இவைகளுக்குஇனமானவைகளையும்கூட்டிப் பெறுக்கி மூப்பத்து மூக்கோடி தேவதைகளாக்கி ஒட்டலங்காரமாக வர்ணித்தார்கள். இந்த வர்ணனையின் தத்துவத்தை அறியாதார், ஆரியர் முப்பத்துமூகோடி தேவர்களை வணங்கப்பட்டவர்கள் என்று எண்ணுகிறார்கள். இம்முப்பத்துமூக்கோடி தேவதைகளாக வர்ணித்த சிருஷ்டிகள் கேவலம் பரதந்திரமும், அபூர்ணமுமான படைப்புகள். பரமாத்துமா ஒருவரே படைக்கப்படாத பூரணரும் சுதந்திரருமானவர். ஆகவே

மனது எப்பொழுது அந்த பிரமத்தினது முடிவற்ற தன்மையை அனுபவிக்கின்றதோ, அப்பொழுது வாக்கு அவரை வெளியிடச்சென்று அவருக்கு ஆகாயம் என்னும் பெயரைத்தருகின்றது; உண்மையில் அவருக்கு ஒரு பெயரு மில்லை; மேலும், ஒரு உருவமும் இல்லை; உருவத்துடனும் பெயருடனும் கூடிய எல்லாப்பொருள்களும் அவரால் படைக்கப்பட்டு அவருடைய ஆசிரயத்தில் பாலிக்கப்படுகின்றன என்று இந்த சுருதியில் சொல்லப்பட்டது.

His name is *Omni present*, the Sustainer of all things having name and form. HE, who is different from name and form, is God. HE is Immortal.

(37.) கேனோபநிஷத்து

க-வது கண்டம் நு-வது வாக்கியம்.

யத்வாசா நப்யுதிதம் யெநவாகப்யுத்யதே;
ததேவ ப்ரஹ்மத்வம்வித்திநேதம் யதித முபாஸதே.

பொழிப்புரை.

யார் வாக்கினல் முற்றும் விளங்கப்படாரோ, யாரால் வாக்கு விளக்கப்படுகின்றதோ, அவரே பிரமமென்று நீ யறியக் கடவாய், உலகத்தார் உபாசிக்கும் பரிமிதப்பொருள்கள் ஒரு பொழுதும் பிரமமன்று.

விசேஷ உரை.

வாக்கு வார்த்தைசொல்லும் சக்தி யாரால் பெற்றதோ, அவர் பிரமம். அவரால்தான் வாக்கு விளங்குகின்றது, ஆனல் அவர் வாக்கினல் விளக்கப் படார், உலகத்தார் இதுவெனறு நிச்சயித்து எந்தப் பரிமிதப் பொருள்களை உபாசிக்கினறனரோ அவை அவரன்று சிலர் நீர், காற்று, தீ, கல் மிருகம், பரவை, மரம் கொடி இவைகளை உபாசிக்கினறனர். சிலர் சந்திரன் சூரியன் முதலிய கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் உபாசிக்கினறனர் சிலர் தேவர்களையும் தேவிகளையும் மனதினல் கல்பனை செய்து கொண்டு அவற்றிற்கு பிரதிமூர்த்திகளைச் செய்து உபாசிக்கினறனர்; சிலர் உலகத்தில் விசேஷ சக்தி பெற்றிருந்த மனிதர்களைக் கடவுளென்று நம்பி வழிபடுகின்றனர் ஆனல் இவைகளிலொன்றும் கடவுளன்று. இவற்றின் வழிபாடு கடவுள் வழிபாடாகாது.

Whom words express not, but through Whom words are expressd, He is God, know Him. He is not any finite object they worship believing this is God.

(38.) கடோபநிஷத்து

உ-வது வல்லி கஅ-வது வாக்கியம்.

நஜாயதேம்ரியதேவா விபஸ்சிந்நாயம்
குதஸ்சிந்நபபூவகஸ்சித்.

பொழிப்புரை.

இந்தப் பரமாத்துமாவுக்குப் பிறப்பில்லை, இறப்புமில்லை; இவர் எல்லாமறிந்தவர். இவர் ஒன்றிலிருந்துண்டாவதுமில்லை, ஒன்றுவதுமில்லை.

விசேஷ உரை

ஜனனமரணங்களாகிய விகாரங்களற்றவரும், குரைவகுறைகளும் இல்லாதவரும், தூய்மையுள்ளவரும், பாபமற்றவருமாகிய பரமாத்துமாவிடத்திலிருந்து இவையாவும் உண்டாயிற்று; ஆனால் இவைகளில் தானொன்றுமல்லர், பால் எப்படி தயிராகின்றதோ, மண் எப்படி வேறுருவத்தைக்கொண்டு எப்படி குடமாகின்றதோ, பொன்வேறு நிலையைப்பெற்று எப்படி குண்டலமாகின்றதோ அது போல அவர் ஒரு பொருளாக பரிணமிக்கிறதில்லை. கயற்றினிடத்து பாம்பென்னுமயக்கமும், கானலினிடத்தில் நீரென்னு மயக்கமும், முத்துச் சிப்பியினிடத்தில் வெள்ளியென்னுமயக்கமும் எப்படி உண்டாகிறதோ அதுபோல; கடவுளிடத்தில் ஒரு மயக்கம் நமக்குதோன்றி இவ்வுலகம் விளகத்தைப் பெற்றிருக்கிற தென்பதுமில்லை. அவர் இந்த உலகத்தையெல்லாம் படைத்தார். உலகம் பொருண்மையால் கடவுளிலும் வேறுனதே. அவர் அசித்துப்பொருளுமன்று, அவர நம்மால் தொழப்படத்தக்கவரும், உபாசிக்கப்படத்தக்கவருமாக இருக்கிறார். நாமனேவருமோ, அவரது சேவகர்களும், உபாசகர்களுமாகவிருக்கிறோம்

This intelligent Being is neither born nor dieth, is not Form any, nor did He change Himself into any.

(39.) கேனேபநிஷத்து

க-வது கண்டம் உ-வது வாக்கியம்.

ஸ்ரோத்ரஸ்யஸ்ரோத்ரம் மநஸோமநோ
யத்வாசோஹவாசம் ; ஸஉப்ராணஸ்ய
ப்ராணஸ்சக்ஷுஷஸ்சக்ஷு:.

பொழிப்புரை.

யார் செவிக்குச்செவியும், மனதுக்கு மனதும், வாக்குக்கு வாக்குமோ அவர் பிராணனுக்குப்பிராணன்;கண்ணுக்குக்கண்ணு.

விசேஷ உரை.

பரமேசுவரனிடத்திலிருந்தே கண் காது வாக்கு மனது பிராணன் இவை அதனதன் சக்தியைப் பெறுகின்றன ; மேலும், அவரை ஆதாரமாகக்கொண்டே அவை அந்த சக்திகளேபெல்லாம் தனது தனது சக்தியுடன் சேர்க்கக்கூடியவையாக இருக்கின்றன ; ஆனதினுற்றான், அவர் செவிக்குச் செவியென்றும் மனதிற்கு மனதென்றும், வாக்குக்கு வாக்கென்றும்; கண்ணுக்கு கண்ணென்றும் சொல்லப்பட்டார். அவர் கண்ணுக்குக்கண்ணுயினும் தானே கண்ணல்லர், காதுக்குக் காதாயினும் தானே காதல்லர்; மனதிற்கு மனதாயினும் அவர் மனதல்லர்; அவர்அபரிமித ஞானஸ்வரூபி. அவர் யாவற்றிற்கும் காரணர், மேலும்; ஆதாரமானர்.

HE is the EAR of ear, the MIND of mind, the SPEECH of speech, the LIFE of life, the EYE of eye.

(40.) சுவேதாஸ்வதம்ர

சு-வது அத்தியாயம் அ-வது வாக்கியம்.

நதஸ்யகார்யம் கரணஞ்ச வித்யதே
நதத்ஸமஸ்சாப்யதிகஸ்சத்ருஸ்யதே ;
பராஸ்ய ஸக்திர் விவிதவஸ்ரூயதே
ஸ்வபாவிகீ ஜ்ஞாந பலக்ரியாச.

பொழிப்புரை.

அவருக்கு உடலுமில்லை பொறியுமில்லை; மேலும், அவருக்கு ஒப்பானவரும் மேலானவரும் காணப்படார்; விசித்திரமும் சிறந்ததுமான அவரது வல்லமை எங்கும கேள்விப்படுகின்றது. அவரது ஞானமும் வல்லமையுமான செய்கைகள் இயற்கையானவை.

விசேஷ உரை.

உடல் ஒரு யந்திர விசேஷம், ஒரு விசேஷமாகிய வேலை; பரமேசுவரர் உடலாகிய ஒரு யந்திரமன்று; அவர் உடலைப்போன்ற யந்திரத்தில் கட்டுப்பட்டவரன்று, அவர் யாருடைய காரியமுமன்று. யாவும் அவருடைய காரியமே, அவர் ஒன்றுகிய காரணஸ்வரூபர்; அவருக்கு உடலில்லை, பொறியில்லை, ஆனல் அவர் யாவற்றையும் பார்க்கிறார், அறிகிறார். அவர் ஒருவரே யாவற்றிலும் மேலானவர், அவருககு ஒப்பானவர் ஒருவருமில்லை, அவருக்கு மேலானவருமில்லை. அவர் யாவற்றையும் சிருஷ்டித்தவர், எல்லாப்பொருள்களும் அவரது படைப்பு, அவர் இவ்வுலகமாகிய பேரரசுக்கு அரசன், யாவரும் அவரது குடிகள். அவர் நமது சிறந்த தந்தை, நாமனைவரும் அவரது குழந்தைகள் அவர் நமது தலைவர், நாம் அவது கட்டளைக்குட்பட்ட வேலைக்காரர்கள். யாவும் அவரது நியமத்திற்குட்பட்டிருக்கின்றன; அவரது நியமப்படி உண்டாகி அவரது நியமப்படி அழிகின்றன. கலோளத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிற கலோளஞானமுடையவரென்ன, பூமியினது சருப்பத்திற்குள்ளிருப்பதைத் தேடியறிகிற பூதத்துவ வேத்தையென்ன, உடலினது நியமங்களை நிரூபிக்கும் சாரீரிகவிதான வேத்தை என்ன, அசித்துப்பொருள்களினது தத்துவங்களை நிர்ணயிக்கும் அசித்துப்பொருள் நூலில்வல்ல பண்டிதர்களென்ன, ஆத்தும தத்துவத்தைப் பரிசீலிக்கும் நுண்ணிய அறிவுள்ள புத்திமான்களது கூட்டமென்ன, யாவரும் அவரது வியப்பான கருதி முடியாத வல்லமையையே கோவிக்கின்றனர். அவர்கள் யாவரிடத்திலுமிருந்தே அவரது மேன்மையான வல்லமையின் விரிவுள்ள வர்ணனை எங்கும் கேள்விப்படுகின்றது.

நாம் எப்படி பொறிவழியாக ஒன்றையறிந்து சிறுகச்சிறுக புத்தியுக்திகளால் பரம்பரைக்கிரமத்தில் ஒவ்வொரு விஷயத்தை ஆராய்கிறோமோ அது போலவன்று அவரது பலமென்னும் செய்கை. அவர் இயற்கையாகவே தனது மகிமையால் யாவற்றையு மறிகிறார், மேலும் அவர் தனது ஒரு நினைப்பாலய பலத்தினல் தனது கர்நோக்கங்களை முடிப்பிக்கிறார். ஒரு விஷயத்தையறிவதற்காக பொறிகள் முதலிய வேரொன்றின் துணை அவருக்கு வேண்டியதில்லை. மேலும் தனது வல்லமையை விளங்கச்செய்யவும் அவருக்கு வேரொரு

உபகரணமும் அவசியமில்லை. அவரது ஞானக்கிரியையும், பலக்கிரியையும் இயற்கையானவை. யாரிடத்திலிருந்து ஞானத்துடன் கூடிய இவ்வெண்ணிறைந்த உயிர்கள் உண்டாகின்றனவோ. அவரது ஞானம் எவ்வளவு வியக்கத்தக்கது; மேலும் யாரிடத்திலிருந்து இப்பொருள்களெல்லாம் உண்டாகி அதற்குரிய வல்லமையைப்பெறுகின்றனவோ, அவரது வல்லமை எவ்வளவு பெருமையுடையது.

He has neither body nor senses; His equal or superior is not to be seen. His power pre-eminent and manifold is every where to be heard of? All His might and wisdom are self-derived.

(41.) சுவேதாசுவதர உபநிஷத்து

சு-வது அத்தியாயம் கூ-வது வாக்கியம்.

நதஸ்ய கஸ்சித் பதிரஸ்திலோகே
நசெசிதாநைவச தஸ்யலிங்கம் ;
ஸகாரணம் கரணாதிபாதிபோநசாஸ்ய
கஸ்சிஜ்ஜநிதாநசாதிப: .

பொழிப்புரை.

உலகத்தில் அவருக்கு யாதொரு தலைவருமில்லை, நியந்தாவுமில்லை. அவருக்கொரு அவயவமும் இல்லை. அவர் யாவற்றிற்கும் காரணர். மனதிறருத்தலைவர். அவரைப்பெற்றோருமில்லை. அவருக்கதிபதியுமில்லை.

விசேஷ உரை.

அவர் நித்தியர், நிரவயவர், ஸ்வதந்திரர், பிறப்பற்றவர், மிகப்பெருமையான ஆத்மா; ஆதலே, அவர் பல அவதாரங்கள் எடுத்ததாகவும், அவருக்கு தாய்தந்தை, சகோதரர், மனைவிமக்கள் இருந்ததாகவும்; பரதந்திரமும் அபூரணமான மானவஜாதியாரைப்போல சுக துக்கங்களை அனுபவித்ததாகவும் எண்ண இடமில்லை, அப்படி எண்ணுவது வேத விரோதமாகும்.

He is formless and has no master in these worlds, no governor. He is the Cause, He is the Lord of the soul. He has no progenitor,no sovereign.

(42.) சுவேதாசுவதர உபநிஷத்து

கு-வது அத்தியாயம் அ-வது வாக்கியம்.

ஸர்வாதிஸஹூர்த்வமதஸ்சதிர்யக்
ப்ரகாஸயன் ப்ராஜதே யத்வதத்வாந் ;
ஏவம் ஸதேவோ பகவான் வரேண்யோயோநி :
ஸ்வபாவாநதிதிஷ்டத்யேக:.

பொழிப்புரை.

சூரியபிம்பம் மேலும்கீழும் பக்கத்திலும் எல்லாவிடங்களையும் பிரகாசிப்பித்துக் கொண்டே விளங்குகிறதோ, ஞான ஒளியையே இயற்கையாக உடையவரும் ஐசுவரியத்தோடு கூடியவரும், தொழத்தக்கவரும், யாவற்றிற்கும் காரணருமானவர் அவ்விதமாகவே விளங்குகிறார். ஒருவராகவிருந்தும் அவர் எல்லாப் பூதங்களினது இயற்கைகளையும் நியமிக்கிறார்.

விசேஷ உரை.

சூரியபிம்பம் எப்படி யாவற்றையும் விளக்கிக்கொண்டே தானும் விளங்குகிறதோ, அத்துவிதீயராகிய பரமேசுவரரும் அதுபோல அருடையதாகிய இப்படைப்புக்கிடையில் விளங்குகிறார். இவரைப்பிரகாசிக்கச்செய்பவரும் ஒருவரில்லை; அவர் ஸ்வயம்பு, அவர் தாமாக விளங்குகிறவர். அவர் காற்றினிடத்தில் ஒலியையும், தீயினிடத்தில் சுடுகையையும், நீரினிடத்தில் தண்மையையும், வைரத்தினிடத்தில் வன்மையையும், பாதத்தினிடத்தில் நடக்குந்தன்மையையும், எல்லாபூதங்களிடத்தும் அவற்றின் ஸ்வபாவங்கள் யாவையும் நியமித்திருக்கிறார்.

As the sun shineth displaying all regious upper, middle, and lateral, even so manifest is the Being Divine, the Lord of all riches, Adorable, and the Origin of all. He alone regulateth all natures.

(43.) கேனோபநிஷத்து

க-வது கண்டம் ங-ச வது வாக்கியங்களில்.

நதத்ர சக்ஷுர்கச்சதி நவாக்கச்சதிநோமநோந
வித்மோநவிஜாநீ மோயதைத தநுலிஷ்யத்
அந்யதேவ தத்விதிதாததோ அவிதிதாததி;
இதிஸுஸ்ரும பூர்வேஷாம் யேநஸ்தத்வ்யாச சக்ஷிரே.

பொழிப்புரை.

அவர் கண்ணுக்கும் வாக்குக்கும் மனதிற்கும் விஷயமாகார். அவரைப்பற்றி நமக்கொன்றும் விசேஷமாகத்தெரியாது; அவரைப்பற்றி இவ்விதமாக உபதேசிக்கிறதென்றும் தெரியவில்லை. அவர் தெரிந்த பொருளுக்கும் தெரியாதபொருளுக்கும் வேறுனவராகவிருக்கிறார். பிரமவிஷயமாக நமக்கு உபதேசித்த பூர்வ ஆசாரியர்களால் இவ்விதமாகக் கேள்வியுற்றோம்.

விசேஷ உரை.

யார் கண்ணுக்குக்கண்ணுயிருந்தும் கண்ணுக்குப் புலப்படாரோ, வாக்குக்கு வாக்காகவிருந்தும் வாக்குக்கு விஷயமாகாரோ, மனதிற்கு மனதாகவிருந்தும் மனதினால் சுவரப்படாரோ, அவர் விஷயமாக அவர் நம்மாலறியப்

பட்டபொருள் அறியப்படாப்பொருள் யாவற்றிற்கும் வேறானவனென்று மாத்திரந்தான் உபதேசஞ் செய்யலாம்; நமக்கெத்தனை பொருள்கள் விசேஷமாகத் தெரிந்திருக்கின்றனவோ அவற்றில் ஒன்றும் அவரன்று. மேலும் எத்தனை பரிமிதமான படைப்புப்பொருள்கள் நமக்குத் தெரியாமலிருக்கின்றனவோ அவற்றிலும் அவரொன்றுமல்லர். அவர் அறியப்பட்டவும் அவர் அறியப்படாவுமாகிய எல்லாப் பரிமிதப்பொருள்களையும் படைத்தவர், அவற்றிற்கு ஆதாரத்தைத்தந்தவர், அவற்றை நிர்வகிப்பவர், யாவற்றிற்கும உள்ளேயிருப்பவர் யாவற்றிற்கும் வேறானவர், ஸ்வதந்திரர். முன்னோராகிய ஆசாரியர்களுடைய உபதேசமும் இதுதான்.

Him, neither eye reacheth nor speech, nor mind. We know Him not, therefore we know not how to teach His nature to others. He is apart from known as well as from unknown objects. This we have heard from them of days gone by who explained Him to us.

(44.) பிரஹதாரணிய உபநிஷத்து

சு-வது அத்தியாயம் ச-வது பிராமணம் உ-வது வாக்கியம்.

ஸஏஷநேதி நேத்யாத்மா க்ருஹ்யோ
நஹிக்ருஹ்யதே.

பொழிப்புரை.

அப்பரமாத்துமாவை இதுவன்று இதுவன்று என்று நிர்த்தேசித்தல் வேண்டும். அவர் ஒரு இந்திரியத்திலும் கிரகிக்கப்படத்தக்கவரன்று. அவர் ஒரு இந்திரியத்திலும் கிரகிக்கப்படமாட்டார்.

விசேஷ உரை,

படைத்தளித்தழிக்கவல்ல பரம்பொருள் யாரோ அவர் படைப்புக்கு அப்புறப்பட்ட பொருள்; இல்வளவுதான் அவரைப்பற்றி நிர்த்தேசிக்கலாம். கண்ணினால் எதைப்பார்க்கக்கூடுமோ கருத்தினால் எதை முற்றும் கருதக்கூடுமோ அது அவரன்று. அவர் இந்திரியத்தினாலும் மனத்தினாலும் கிரகிக்கப்படாதவர், கேவலம் பரிசுத்தமான ஞானத்தினால் அந்தச் சத்தியமான புருஷனைப்பார்க்கலாகும்.

Not this, not this is God. He is incomprehensible, therefore, He is not comprehended.

(45.) பிரஹதாரணிய உபநிஷத்து

எ-வது அத்தியாயம் எ-வது பிராமணம் க-வது வாக்கியம்.

ஸஏஷஸர்வஸ்யேஸாந: ஸர்வஸ்யாதிபதி:
ஸர்வமிதம் ப்ரஸாஸ்தியதிதம் கிஞ்ச.

பொழிப்புரை.

அப்படிப்பட்ட இப்பரமாத்துமாவே யாவற்றிற்கும் நியந்தை யாவற்றிற்கும் தலைவர்; அவர் இவ்வுலகத்தில் எத்தனை பொருள்க ளிருக்கின்றனவோ அவையாவற்றையும் நியமத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்.

விசேஷ உரை.

தேவர், மனிதர், விலங்கு, புள் யாவும் அவரது சாஸனத்திலேயே யிருக்கின்றன. யாரும் அவரது சாஸனத்தைக் கடக்கவல்லவரல்லர்.

He is the Governor of all, and the Sovereign of all, He it is that ruleth all this whatever is.

(46.) பிரஹதாரணிய உபநிஷத்து

சு-வது அத்தியாயம் ச-வது பிரமாணம் கூ0-வது வாக்கியம்.

ஏகதைவாநுத்ருஷ்டவ்யமே தத்பரமேயம் த்ருவம்;
விரஜ.பர ஆகாஸாதஜ ஆத்மாமஹான் த்ருவ:.

பொழிப்புரை.

ஒப்பற்றவரும் அழிவற்றவருமான கடவுளே ஒருவரென்று அறியத்தக்கது. அவர் நிருமலமானவர், ஆகாயத்தைவிட சூக்குமமானவர், பிறப்பற்றவர், பரமாத்துமா, பெரியவர், நித்தியமானவர்.

விசேஷ உரை.

கடவுள் ஒருவர். மேலும் ஒப்பற்றவர்; அவரோடு ஒப்பிடத்தக்க ஒரு பொருளுமில்லை. அவர் எல்லாப் பொருள்களிலும் வேறுனவர். அவர் ஆகாயத்தைக்கடந்தவர். அவர் ஆகாயத்தினிடையேயிருந்து தனக்குரிய சகலகாரியங்களையும் நியமனம் செய்கிறார்.

He is to be known as the one, without parallel and true. He is pure, unborn, great, eternal, and above all space.

(47.) சுவேதாசுவதர உபநிஷத்து

கூ-ம் அத்தியாயம் கஅ-வது வாக்கியம்.

அபாணிபாதோ ஜவநோ க்ருஹீதா
பஸ்யத்ய சக்ஷு: ஸஸ்ருணோத்யகர்ண: ;
ஸவேத்திவேத்யம் நசதஸ்யாஸ்தி வேத்தாத
மாஹுரக்யம் புருஷம் மஹாந்தம்.

பொழிப்புரை.

அவருக்கு கையில்லை, ஆயினும் கிரகிக்கிறார்; அவருக்கு காலில்லை, ஆயினும் நடக்கிறார்; அவருக்கு கண்ணில்லை, ஆயினும் பார்க்கிறார்; அவர் அறியத்தக்க யாவையும் அறிகிறார்; ஆனல் அவரை முற்றும் அறிந்தவரில்லை; அவரையாவற்றிற்கும் முதன்மையானவரென்றும், பூரணரென்றும், பெரியவரென்றும் உரைக்கின்றனர்.

விசேஷ உரை.

பரிமிதமாகிய இச்சிற்றுயிர்களுக்கு இருப்பதுபோல அவருக்கு கைகால் முதலிய ஒரு அவயவமும் இல்லை; ஆனல், கைகால் முதலியவைகளினுலாக வேண்டிய தொழில்கள் அவரது கருதற்கரிய வல்லமையினல் சாதாரணமாக நிறைவேறுகின்றன

He runneth without feet, graspeth without hands, seeth without eye and heareth without ear. He knoweth all but none knoweth Him. They say Him to be the First of all, Perfect and Great.

(48.) பிரஹதாரணிய உபநிஷத்து

அத்ருஷ்டோ த்ரஷ்டா ஸ்ருத:ஸ்ரோதா
மதோமந்தா விஜ்ஞாதோ விஜ்ஞாதா.

பொழிப்புரை.

அவர் பார்க்கப்படாதவர், பார்ப்பவர்; அவர் கேழ்க்கப்படாதவர், கேழ்ப்பவர்; அவர் கருதப்படாதவர், கருதுகிறவர்; அவர் அறியப்படாதவர், யாவற்றையும் அறிபவர்.

விசேஷ உரை.

பூரண புருஷனுகிய பரமேசுவரனுக்குக் கண் காது முதலிய பொறிகளும் இல்லை. ஆனல் நாம் கண் காது முதலியவைகளினல் எவற்றையறியக் கூடியவர்களாக விருக்கின்றேமோ அவ்வனேத்தையும், இந்தச் சருவஜ்ஞராகிய புருஷன் அறிகிறார்; மேலும், எவற்றை நாம் அறியவில்லையோ, அவற்றையும் அவரறிகிறார். அவர் குறைவற யாவருக்குள்ள யாவற்றையும் அறிகிறார்; ஆனல் ஒருவரும் அவரது ஸ்வரூபத்தை முற்றும் அறியவல்லவரல்லர்.

Being himself unseen, He is the Seer; unheard, He is the Hearer; Unconceived, He is the Conceiver; and Unknown, He is the Knower.

(49.) ஈசோபநிஷத்து

சு-வது வாக்கியம்,

அநேஜதேகம் மநஸோஜவீயோ
நத்தேவா ஆப்நுவன்பூர்வமர்ஷத் ;
தத்தாவதோந்யாநத்யேதிதிஷ்ட
த்தஸ்மிந்நபோமாதரிஸ்வாததாதி.

பொழிப்புரை.

கடவுள் ஒருவர். அவர் அசைபவரல்லர். மநதை விட அதிக விரைவாகச் செல்பவர். பொறிகளுக்கு முன்செல்லுகிற இக்கடவுளை பொறிகளிலொன்றும் அடையமாட்டாது. அவர் ஸ்திரமாகவிருந்தும் விரைவாகச்செல்லுகிற மனமுதலிய பொறி களைக்கடந்து செல்லுகிறார். காற்று அவரிடத்திலிருந்துகொண்டு உயிர்களுக்கு உடல்களினது அசைவைத் தருகின்றது.

விசேஷ உரை.

ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு போதற்கு செல்லல் என்று பெயர். ஒன்றாகிய கடவுள் எவ்விடத்திலும் ஒரேவிதமாக நிறைந்திருக்கிறார். அவரில்லாத இடமில்லை. அதுபற்றி ஒரு இடத்தைவிட்டு வேறொரு இடத் திற்கு போகிறாரென்று நினைக்கிறதற்கில்லை. ஆகையால் அவர் அசலர், அவர் அசைவதில்லை, அவர் அசலராயிருந்தும் மனதைவிட விரைவாகச்செல்பவர்; மனது அவரை முற்றும் பற்றமாட்டாது. பொறிகளனைத்தும் அவரைக்கிர கிக்கமாட்டா. விரைவாகச்செல்லுகிற மனதும் மற்ற இந்திரியங்களனைத்தும் அவரைப்பற்றுதற்கு எவ்வளவோ முயற்சி செய்கின்றது. அவர் ஸ்திரமாக இருந்தும் அவற்றை எல்லாம் கடந்து செல்லுகிறார். காற்று உயிர்களுக்கு உடல்களினது எல்லா அசைவுகளையுந் தருகின்றது. காற்றில்லாவிடின் உடல் அதிக சிறிது காலத்திற்குள்ளாகவே ஒழுங்கற்று விழுந்துவிடும். ஆனால் காற்று இந்த சக்தியை யாரிடத்திலிருந்து பெற்றதோ அவரில்லாவிடின் அது வேறு யாரிடத்திலிருந்து இந்தச் சக்தியைப்பெற்று அதன் மூலமாக உயிர் களினது உடலை காக்கக்கூடியதாக இருக்கிறது; அதினுற்றான் "அவரிடத்தி லிருந்துகொண்டு காற்று உயிர்களுக்கு உடலினது அசைவுகளனைத்தையுந் தருகின்றது." எனறு சொல்லப்பட்டது.

He, the one, moveth not, yet is He swifter than the mind. The mind with the senses reacheth Him not as He is always in advance of them. He not moving, outsprippeth them. It is through Him, air contributeth to the functions of life.

(50.) ஈசோபநிஷத்து

நு-வது வாக்கியம்.

ததேஜதி தந்நைஜதி தத்தூரே
தத்வதந்திகே, ததந்தரஸ்ய ஸர்வஸ்ய
ததுஸர்வஸ்யாஸ்ய பாஹ்யத:.

பொழிப்புரை.

அவர் அசைகிறார், அசையவில்லை ; அவர் தூரத்திலிருக்கிறார், அவர் ஸமீபத்திலுமிருக்கிறார் ; அவர் இந்த யாவற்றிற்கும் உள்ளேயிருக்கிறார், அவர் இந்த யாவற்றிற்கும் வெளியேயு மிருக்கிறார்.

விசேஷ உரை.

உலகத்தார் வேறொரு இடத்தை அடைவதன் நிமித்தம் சென்றுகொண்டிருக்கின்றனர். அவர் எல்லாவிடங்களிலும் வியாபித்திருப்பதனல் செல்வதினலுண்டாகத்தக்கபயன் அவருக்கு ஒரேகாலத்தில் கிடைக்கின்றது. ஆனதால் "அவர் அசைகிறார்" என்று சொல்லப்பட்டது. அதன பொருள் அவருக்கு அசைவதின் பய்ன் நிறைவேறியிருக்கிறதென்பதாம். ஆனல் உலகத்தார் எப்படி ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்குச் செல்கின்றனரோ அப்படி அவர் செல்வதில்லை. காரணமென்னை எனின், அவர் எங்கும் நிறைந்த வடிவமுடையவராக இருக்கிறார். அவர் நகூத்திரங்கள் எவ்வளவு தூரத்திலுருக்கின்றனவோ, அவ்விடத்திலுமிருக்கிறார். அவர் கேவலம் தூரத்தில் மாத்திரமில்லை; அவர் நமக்கருகிலுமிருக்கிறார். அவர் நமக்குள்ளாக மிக அருகிலுமிருக்கிறார். அவர் நம்மெல்லோருக்குள்ளும் இருப்பதுபோலவே, நமக்கு வெளியிலுமிருக்கிறார். யாதொரு அரசன் தனது விம்மாஸனத்தில் உட்கார்ந்துகொண்டு தனசேனையைச் செலுத்துவதுபோல, அவர் பரிமிதமாகிய ஓரிடத்திலிருப்பவரல்லர். அவர் எல்லா இடங்களிலும் ஒரே விதமாக இருந்துகொண்டு உலகத்தைக்காத்துவருகிறார்.

He goeth, He goeth not, He is far, He is near, He is within all, He is out of all.

(51.) சுவேதாசுவதர உபநிஷத்து

சு-வது அத்தியாயம் சு-வது வாக்கியம்.

ஸர்வத:பாணிபாதந்த ஸர்வதோக்ஷிசிரோமுகம்;
ஸர்வத:ஸ்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்யதிஷ்டதி.

பொழிப்புரை.

எங்கும் அவரது கைகாலகள், எங்குமவரது கண் தலை முகம், எங்குமவரது செவி. அவருலகெல்லாம் பரவி இருக்கிறார்.

விசேஷ உரை.

அவரெங்குமிருப்பதை அறிந்து ஓ மானிடர்களாகிய எல்லோரே! நற் செய்கைபுரிதற்குள்ளக்ஷிளர்ச்சியுடையவர்களாகுங்கள்; மேலும், பாவத்தொழிற் புரிதற்கஞ்சுங்கள்.

Every where are His hands and feet; every where are His eyes, head and face; every where are His ears in the world; He existeth outspreading all.

(52.) கடோபநிஷத்து

நி-வது வல்லி அ-வது வாக்கியம்.

யயேஷசுப்தேஷு ஜாகர்திகாமம் காமம்
புருஷோ நிர்மிமாண:; ததேவ ஶுக்ரம்
தத்ப்ரஹ்ம ததேவாம்ருத முச்யதே;
தஸ்மின் லோகாஶ்ரிதா: ஸர்வே
ததுநாத்யேதி கஸ்சந.

பொழிப்புரை.

எந்தப்பூரணபுருஷர் எல்லா உயிர்களும் உறங்கிக்கொண்டிருக்கையிலும், தான் விழித்துக்கொண்டிருந்து, அவைகளுக்கு வேண்டிய யாவற்றையும் படைத்துக்கொண்டிருக்கின்றாரோ அவர் சுத்தர்; அவர் பிரம்மம், அவர் அழிவற்றவரென்று சொல்லப்படுகிறார். யாரும் அவரை அதிக்கிரமிக்கமாட்டார்கள்.

விசேஷ உரை.

நாம் விழிப்புக்காலத்திலேயும் உறங்கிக்கொண்டிருக்கிறோம்; அவர் எப்பொழுதும் விழிப்பாகவேயிருந்து, நமக்கு பலவிதமாய் பயன்படத்தக்க யாவற்றையும் பகர்ந்து தருகிறார். நாம், நமக்கு நன்மையானதை முடிக்கும் உழைப்பில் வெறுப்படையும் காலத்தும் அவர் வெறுப்படைவதில்லை. அவர் நமக்கு ஓய்வில்லாமல் நன்மையைச் செய்துகொண்டேயிருக்கிறார்.

He, the Perfect who, while they sleep, is awoke with rearing up object after object of desire; He is the Pure, the Supreme, the Immortal. By Him are all worlds supported; none can transgress Him.

(53.) தைத்திரிய உபநிஷத்து

பிருகுவல்லி சு-வது அநுவாகம்.

ஆநந்தாத்யேவ கல்விமாநி பூதாநி
ஜாயந்தே ஆநந்தே நஜாதாநி ஜீவந்தி
ஆநந்தம் ப்ரயந்த்யபிஸம் விஸந்தி.

பொழிப்புரை.

நிச்சயமாய் இவ்வுயிர்கள் ஆநந்த ரூபனிடத்திலிருந்தே உண்டாகின்றன. உண்டானவை ஆநந்த ரூபனாலேயே நிலைபெற்றிருக்கின்றன. ஆநந்தரூபனையே நோக்கிச்சென்றடைகின்றன.

விசேஷ உரை.

படைத்தளித்தழிக்கவல்ல பரமேசுவரனுக்கு இருமுகியாக யாதொரு பெயருமில்லை. முற்காலத்திருந்த பிரமவாதிகள் தமக்குள் நிரதிசயஞானியும் மஹாஞானியும், எங்கும் நிறைந்தவனும், ஸர்வகதனும், நன்மையே வடிவாக உடையவனுமாகிய மஹாபுருஷனை ஸாக்ஷாத்தாக அடைந்து அதனாலுண்டான குற்றமற்ற பேரின்பத்தையனுபவித்து, அவரை ஆனந்த ஸ்வரூபனென்று வெளியிட்டனர். காமும் அவரது அன்பில் மூழ்கினவர்களாகி, நம்மிலும் பேரின்ப ரஸம் பெருகிற்றுனல்; அப்பொழுது, காமும் அவரை ஆநந்தஸ்வரூபனென்று சொல்லுவோம்.

From Him, the Blissful, do these creatures received being; through Him, the Blissful, they, after receiving being, subsist; and Him, who is Blissful they at last depart unto & enter.

(54.) பிரசன்னோபநிஷத்து

யஸ்சாயமஸ்மிந்நாகாசே தேஜோமயோ
அம்ருதமய: புருஷ: ஸர்வாநுபூ:;
யஸ்சாயமஸ்மிந்நாத்மநி தேஜோமயோ
அம்ருதமய: புருஷ: ஸர்வாநுபூ:;
தமேவ விதித்வாதிம்ருத்யுமேதி
நாந்ய: பந்தா வித்யதே அயநாய.

பொழிப்புரை.

இந்தவெளியில் யார் இந்த ஞானவடிவுடையரும், அழிவற்ற தன்மையரும், பூரணரும் யாவற்றையும் அனுபவிக்கிறவருமாக விருக்கிறாரோ; யார் இந்த ஆத்துமாவினிடத்தில் இந்த ஞான வடிவரும், அழிவற்றதன்மையரும், பூரணரும் யாவற்றையும்

அனுபவிக்கிறவருமாயிருக்கிறாரோ அவரையறிந்து சாதகர் மரணத்தைக்கடக்கிறார். அது தவிர முத்திபெறுதற்கு வேறு வழியில்லை.

விசேஷ உரை,

இவ்வெளி சூனியமாக இருக்கவில்லை, ஞானமயனும் அமிருத மயனுமாகிய புருஷனால் நிறைந்திருக்கிறது. இந்த ஆத்துமாவினிடத்திலும் அவர் பூரணஸ்வரூபராக வீற்றிருக்கிறார். அவர் உள்ளும் புறமும் எல்லா இடங்களிலும் இருந்துகொண்டு யாவற்றையும் அறிகிறார். யார் அந்த மஹானும் அமிருத மயனுமாகிய புருஷனை அறிந்து அவரிடத்தில் நிறைந்த அன்புடையவராகி அவரது சனேஷ்கத்துடன் தன்னுடைய நல் விருப்பத்தைச் சேர்ந்து அவரிடத்தில் ஆத்துமாவை ஸமர்ப்பிக்கிறாரோ : அவர் அழிவற்ற அந்தப் புருஷனையடைந்து அழிவுள்ள நிலையைக் கடக்கிறார்.

Having known Him who is in all space, the Glorious, the Immortal the Perfect, and the All Perceiving; Who is in the soul, the Glorious, the Immortal, the Perfect, and the All Perceiving one avoideth death (Spiritulal death). No other path there is for Salvation.

(55.) சுவேதாசுவதர உபநிஷத்து

சூ-வது அத்தியாயம் கூ-வது வாக்கியம்.

தமீஸ்வராணாம் பரமம் மஹேஸ்வரம்
தம்தேவாநாம்பரமம் சதைவதம்;
பதிம் பதீநாம் பரமம் பரஸ்தாத்
விதாமதேவம் புவநேசமீட்யம்.

பொழிப்புரை.

எல்லாப் பிரபுக்களுக்கும் சிறந்த பிரபுவும், எல்லாத் தேவதைகளுக்கும் சிறந்த தேவதையும், எல்லாத் தலைவர்களுக்கும் சிறந்த தலைவனும், சிறந்த எல்லாவற்றிலும் சிறந்தவனும், தானாக விளங்குகிறவனும் உலகங்களுக்கு ஈசனும், துதிக்கப்படத்தக்கவருமானவனை யாமறிவோம்.

விசேஷ உரை.

அவர் பிரம்மாண்டத்தினது தலைவர், அரசர்களுக்கெல்லாம் அரசர், யாவருக்கும் ஈசுவரர். அவரது செல்வத்திற்கு எல்லை இல்லை. உலகத்தில் யாருக்கு எவ்வளவு செல்வமிருக்கிறதோ அவையனைத்தும் அவரது செல்வமே, எவ்வளவு செல்வமுடைய பிரபுக்களிருக்கின்றனரோ அவர்களனைவருக்கும்

அவர் பிரபு; யாவருக்கும் அவர் மஹேசுவரர். அவர் இந்தப்புவியினது இரஜ ஜியேச்சுவரர்களுக்கும் ஈசுவரர், மேலும் இம்மண்ணுலகத்தைவிட சிறந்த வேறு உலகங்களில் வசிக்கும் தேவதைகளுக்கும் அவர் ஈசுவரர். ஜகத்தினது எந்தப்பாகத்தில் எந்த உலகத்தில் மனிதர்களைவிட ஞானம், தருமம், அன்பு இவைகளினால் உயர்வடைந்த மிகச்சிறந்து விளக்குகிற எத்தனை ஜீவர்களிருக் கின்றனரோ அவர்களனைவருமே தேவ சப்தத்தினால் சொல்லப்படுகிறவர்கள்; அந்த எல்லா தேவதைகளைவிட அவர் சிறந்த தேவதை, பரம பூஜனீயர்; மேலும் நியந்தா. அவர் எல்லா பிரதிபாலகர்களுக்கும் பிரதிபாலகர், அவர் சிறந்ததிலும் சிறந்தவர். அவரைவிட சிறந்தவர் யாருமில்லை. அவர் நாம் தொ ழத்தக்கவர், அவர் நாம் துதிக்கத்தக்கவர். அவர் நமது மிகுந்த அன்பிற்கு உரியவர்: நம்மால் மிகவும் பூஜிக்கப்படத்தக்கவர்.

We know Him who is of sovereigns the highest Sovereign, of Gods the greatest God, the Lords of lords, the Most Excellent of all things excellent, the Being Divine and the Governor of these worlds, worthy of homage.

(56.) முண்டகோபநிஷத்து

உ-வது முண்டகம் உ-வது கண்டம் உ-வது வாக்கியம்.

யதர்சி மத்யணுப்யோணு யஸ்மின்லோகா
நிஹிதா லோகிநஸ்ச; ததேதத் ஸத்யம்
ததம்ருதம் தத்வேத்தவ்யம் ஸௌம்யவித்தி.

பொழிப்புரை.

யார் ஞான ஒளியையே வடிவாக உடையவரோ, யார் அணு விலும் அதிசூக்குமமானவரோ, யாரிடத்தில் உலகங்களும் உல கத்தவரும் நிலைப்படுத்தப்பட்டிருக்கின்றனரோ அவரே, சத்திய ஸ்வரூபி; அவரே அழிவற்றவர். அவரே ஞானத்தினால் அறியப் படத்தக்கவர். ஓ பிரிய சிஷ்யனே! நீ அவரை ஞானத்தினால் அறியக்கடவாய்.

பொழிப்புரை.

ஓ அன்பனே! உனது கருத்தை யாவற்றிற்கும் உள்ளுக்குள்ளாகவிருக் கிற பரமாத்துமாவினின்று வேறு செய்யவேண்டாம். அவரினின்று அதை வேறுபடுத்தி தாழ்ந்தநிலைக்கு வந்துவிடவேண்டாம்; ஆனால், அதைத் தான்மைப் படுத்தி அவரது ஸமீபத்திற்குக்கொண்டுபோகக்கடவாய். கருத்தை ஒருவழிப் படுத்தி அதனால் பரமாத்துமாவையறியக்கடவாய். மேலும் இந்த அத்தியாத் துமயோகத்தினாலுண்டாகும் போகாநந்தத்தை அனுபவிக்கக்கடவாய்.

He is glorious and subtler than subtle and in Him are these worlds with their inhabitants placed. This is He who is true. He is Immortal. He should be penetrated into by meditation. O beloved penetrat into Him.

(57.) பிரஹதாரணிய உபநிஷத்து

சு-வது அத்தியாயம் சு-வது பிரமாணம் சு0-வது வாக்கியம்.

ஸர்வஸ்யவஸீஸர்வஸ்யேஸாந:
ஸர்வஸ்யாதிபதி:; ஸநஸாதுநாகர்மணாபூயான்
நொஏவ அஸாதுநாகணீயான்.

பொழிப்புரை.

யாவும் பரமாத்மாவசமாகவிருக்கின்றன. அவர் யாவற்றை யும் நியமிப்பவர்; மேலும், யாவற்றிற்கும் தலைவர்.. நல்லசெய் கையால் அவருக்குப் பெருமையும், தீயசெய்கையால் அவருக் குச்சிறுமையும் உண்டாவதில்லை.

விசேஷ உரை.

பரமாத்துமா எதை எந்த நியமத்தில் வைத்தாரோ அது அந்த நியமத்திலேயே யிருக்கின்றது; எதுவும் அவரது நியமத்தைக் கடக்கவல்லதன்று. அவர் ஸர்வேசுவரர், யாவற்றையும் நியமிப்பவர். யாவற்றிற்கும் தலைவர். மனிதர்கள் எப்படி நல்லசெய்கையால் உயர்வும், தீயசெய்கையால் தாழ்வும் பெறுகின் றனரோ; அப்படி அவரது நிலை மாறுவது சம்சவமன்று. அவருடைய ஸ்வ ரூபம் எதைவிட சிறந்ததொன்றில்லையோ அவ்வளவு சிறந்ததும்; மேலும் மாறுதலடைந்து தாழ்ந்த நிலைக்கு வரக்கூடாததெதுவோ, அவ்வளவு மாறு வியற்கையுடையதுமாகவிருக்கின்றது.

The Subjector of all, the Governor of all and the Sovereign of all, He has neither to become greater by good works nor through has works less.

(58.) பிரசன்னோபநிஷத்து

சு-வது பிரசினம் கக-வது வாக்கியம்.

விஜ்ஞாநாத்மா யஹதேவைச்சஸர்வை:
ப்ராணாபூதாநி ஸம்ப்ரதிஷ்டந்தியத்ர;
ததக்ஷரம் வேதயதேயஸ்து ஸௌம்ய
ஸஸர்வஜ்ஞ: ஸர்வமேவா விவேச.

பொழிப்புரை.

ஓ பிரியதரிசனனுகிய சிஷியனே! ஜீவாத்துமா, எல்லா இந்திரியங்கள், பிராணிகள், வேறுபொருள்கள், யாரிடத்தில் நிலை பெற்றிருக்கின்றனவோ, அந்த அழிவற்ற பொருளை யார் அறிகிறாரோ, அவர் யாவற்றையும் அறிந்தவராகி, யாவற்றிலும் பிரவேசிக்கிறார்.

விசேஷ உரை.

ஜீவாத்துமாவும், இந்திரியங்களும், பிராணனும் வேறு எல்லாப்பொருள்களும் யார்நிமித்தமாத்திரத்தில் உண்டாகின்றனவோ; யாருடைய திருவுள்ளப்படி கேந்திரமாக இருக்கின்றனவோ; அந்த அழிவற்ற புருஷரை யார் அறிகிறாரோ அவருக்கு எல்லா ஐயங்களும் நீங்குகின்றன; மேலும், அவர் யாவற்றிலும் பிரவேசித்து எல்லாப் பொருள்களிடத்திலும் அவ்வழிவற்ற மங்கள புருஷனைத்தரிசிக்கிறார்.

He, O beloved, who knoweth Him the imperishable in Whom dwell the soul, the senses, and living beings and things, knoweth all and comprehendeth all.

(59.) கடோபநிஷத்து

கூ-வது வல்லி கஉ-வது வாக்கியம்.

நைவவாசா நமநஸாப்ராப்தும்
சக்யோநசக்ஷுஷா; அஸ்தீதிப்ருவதோ
ஃந்யத்ரகதம் ததுபலப்யதே.

பொழிப்புரை.

பிரமத்தையடைவதற்குக் கூடியதாகவிருக்க வாக்கினுலுமில்லை, மனதினுலுமில்லை, கண்ணினுலுமில்லை, கடவுள் உளரென்று சொல்லுகிறவர்களேவிட பிறர், அவரை எப்படி அடைவார்கள்.

விசேஷ உரை.

பரமேசுவராது ஸ்வரூபம் காணப்படாதது, சொல்லிமுடியாதது, கருதி முடியாதது. அவரைக் கண்ணினலாவது, வாக்கினலாவது, கருத்தினலாவது அரியக்கூடாது; அவரைக்கேவலம் ஒரு ஆத்துமப் பிரத்தியயத்தினல் மாத்திரம் அடையலாகும். நாம் நம்மை அபூர்ணரென்றும் பரதந்திரரென்றும் நம்புகிறோம், அசற்குள் பூரணமும் ஸ்வதந்திரமுமான பொருளொன்றுள தென்னும் நம்பிக்கையடங்கியிருக்கிறது; அந்தக்காரணத்தினல் பூரணமும் ஸ்வதந்திரமுமான பொருளொன்றின்றேல், நம்மை அபூரணரென்றும் பரதந்திரரென்றும் நம்புவதற்கு ஒரு ஆதாரமுமில்லை; பரதந்திரமும், அபூரணமுமான ஒருபொருளின் இருப்பினல், ஒரு ஸ்வதந்திரமாகிய பூரணப்பொருளின் இருப்பு வெளிப்படுகின்றது. இந்த நம்பிக்கை தானுகவுள்ளது; இந்த எதுவினல் இதைப்பரீக்ஷிக்கவேண்டிய ஆவசியகமில்லை. பரதந்திரமும் அபூரணமுமான பொருளைப் படைத்தவரும், அதன் ஆச்ரயருமான ஸ்வதந்திரராகிய ஒரு பூரணபுருஷர் இருக்கிறரென்னும் இயற்கையான ஆத்துமப்பிரத்தியயமானது யாவருடைய உள்ளத்திலுமிருக்கிறது. பிறகு எப்பொழுது இவ்விஷயத்தில் ஐயமுண்டாகிறதோ அப்பொழுதுதான் யுக்திவிசாரணையுண்டாகிறது; ஆனல் அந்த விசாரணையின் பின்னரும், வாக்குக்கும் கருத்திற்கும் புலப்படாதவரும் ஞானத்திற்குப் புலப்படுகிறவருமான ஸ்வதந்திரராகிய ஒரு பூரணபுருஷரிருக்கிறரென்னும் வித்தாந்தமே உண்டாகின்றது. அக்காரணத்தினல் எப்பொழுது நமது நிர்மலமான ஞானத்திற்கு அந்த ஸத்திய சுந்தர மங்கள புருஷர் விளங்குகிறரோ, அப்பொழுது ஆத்துமப்பிரத்தியயம் அவரது அஸ்தித்துவத்திலுள்ள நம்பிக்கையை ஸ்திரப்படுத்துகின்றது. இந்த ஆத்துமப்பிரத்தியய விஷயமாக ஐயப்பட்டால், ஒரே தரத்தில் நியாயத்தின் வேர் அறுத்து விடுதல் ஆகின்றது. மேலும், விசேஷ ஐயமும் திரிபுமான உணர்ச்சியுண்டாகின்றது அப்படியாயின் நமது அஸ்திதுவத்திலும், வெளிப்பொருள்களின் அஸ்தித்துவத்திலும், காரியகாரணங்களின் அஸ்தித்துவத்திலும், ஐயமுண்டாகி புத்தி ஒரேதரமாக நாசத்தையடைகின்றது. யார் ஆத்துமப்பிரத்தியயத்தை ஆதாரமாகக்கொள்ளவில்லையோ; அவர் ஒருபொழுதும் ஞானகோசரரான நித்திய ஸத்திய மங்களஸ்வரூபரும், ஸர்வவியாபியும், சர்வாச்ரயரும், எல்லாம் வல்லவருமான பூரண புருஷரை, ஐயமின்றி நம்பக்கூடாதவராக இருக்கிறார். தருக்கதர்க்கத்தினலும் நிச்சயமற்றவராகி ஈச்வர சஹ்வாசத்தினலுண்டாகும் அதி நிர்மலமாகிய சாந்தியை அவர் ஒருபொழுதும் அடையக்கூடாதவராக இருப்பார். ஆத்துமப்பிரத்தியயத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு யார் "அவருளர்" என்றுறைக்கிறாரோ அவரன்றி, பிறர் யாராலும் அவர் ஒருபொழுதும் அடையப்படுவதில்லை.

Speach cannot describe Him; mind cannot comprehand Him; eye cannot See Him. How can others gain God than those who assert that He existeth?

(60.) சுவேதாசுவதர உபநிஷத்து

சு-வது அத்தியாயம் சு-வது வாக்கியம்.

மஹான் ப்ரபுர்வைபுருஷ:ஸத்வஸ்யைஷ
ப்ரவர்தக:; ஸுநிர்மலாமிமாம்சாந்திம்
ஈசாநோஜ்யோதி ரவ்யய:.

பொழிப்புரை.

இந்த மஹாபுருஷர் யாவருக்கும் பிரபு. ஞானத்தையே வடிவாகஉடைய ஈச்வரர். இந்த நிருமலமான சாந்தியைநோக்கி தருமத்தின் பிரவர்த்தகரானர்.

விசேஷ உரை.

நன்மையையே வடிவாகக்கொண்ட இந்த மஹாபுருஷன் நமக்கு கேவலம் இந்திரிய சுகங்களைத்தந்து நம்மைப் பசுக்களைப்போல ஸம்ஸாரத்தில் கட்டுப் படுத்தியிருக்கவில்லை; ஆனல் விலையறப்பெற்ற தருமத்தைத்தந்து நம்மை ஸ்வா தீனராக்கியிருக்கின்றார். அவர் விஷயசுகத்தைவிட ஆயிரம்பங்கதிகமான ஆன்மப்பிரசாதத்தை நோக்கியும், நமது அதிநிருமலமாகிய சாந்தியை உத்தே சித்தும் தானே தருமப்பிரவர்த்தகரானர். அவர் நமது உள்ளத்தில் நல்ல புத்தியையும், தருமபலத்தையும் உண்டாக்குகிறார். நாம் அவரது பிரசாதத் தினல் தருமபலத்தினல் ஸ்வாதீனமுள்ளவர்களாகி முத்திக்கு அதிகாரிக ளாகிறோம்.

He the Perfect, is the Great, the Lord, He leadeth men to rightousness with the view to unsullied pease. He is the Governer, Glorious, Unfading.

(61.) சாந்தோக்கிய உபநிஷத்து

7-வது பிரபாடகம், 25-வது கண்டம், 1-வது வாக்கியம்.

ஸஏவா தஸ்தாத் ஸஉபரிஷ்டாத் ஸபஸ்சாத்
ஸ்புரஸ்தாத் ஸதக்ஷிணத: ஸஉத்தரத:;
ஈசாஞ்சூதபவ்யஸ்ய ஸஏவாத்ய ஸஉஸ்வ:

பொழிப்புரை.

அவர் அடியிலே, அவர் மேலே; அவர் பின்புறத்திலே, அவர் முன்புறத்திலே; அவர் தென்திசையிலே, அவர் வடதிசையிலே. அவர் இறந்தகாலத்திற்கும் எதிர்கால்த்திற்கும் நியந்தா. அவர் இன்றுமிருக்கிறார், நாளையுமிருப்பார்.

விசேஷ உரை.

மேலிலென்ன, அடியிலென்ன; பின்புறத்திலென்ன, முன்புறத்திலென்ன; தென்திசையிலென்ன, வடதிசையிலென்ன; நமக்கு நான்குதிசைகளிலும், அவர்எல்லாவிடங்களிலும்,விளங்கிக்கொண்டிருக்கிறார். நாம் மலையின் உச்சியிலேறினும் அவர் அவ்விடத்திலும் விளங்கிக்கொண்டிருக்கிறார். நாம் திமிங்கிலமாகிய கடலினுள்ளே செல்லினும் அங்கும் அவர் வீற்றிருக்கிறார். சூரிய பிம்பத்தினது நடுப்பகலிலுள்ள கிரணங்களில் அவரெப்படி தாமாக விளங்கிக் கொண்டிருக்கிறாரோ; அதுபோல, இருண்ட இரவின் மிகுதியான இருளிலும் மிகவாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார். எல்லாவிடங்களிலும் அவரது அருகிருக்கிறது, எல்லாயிடங்களிலும் அவரது பார்வையிருக்கின்றது. எப்படி அவர் எல்லாத்தேசங்களிலும் வியாபித்திருக்கிறாரோ; அப்படி, அவர் எல்லா காலங்களிலிமிருக்கிறார். அவரெப்படி இக்காலத்திற்கு நியந்தாவோ, அப்படியே பிற்காலத்திற்கும் நியந்தா. அவர் இன்றுமிருக்கிறார், நாளையுமிருப்பார்.

He is above; He is below; He is before; He is behind. He is on the right, He is on the left. The Governor of times past and future, He is same to day as to-morrow.

(62.) சுவேதாசுவதர உபநிஷத்து

காணகாவது அதிகியாயம் 1-வது வாக்கியம்.

யஏகோ வர்ணோ பஹூதா சக்தியோகாத்
வர்ணாநநேகாந்நிஹிதார்தோததாதி;
விசைதி சாந்தே விஸ்வமாதௌஸதேவ:
ஸநோபுத்த்யாஸுபயாஸம் யுநக்து

பொழிப்புரை.

யார் ஒருவரோ, நிறமற்றவரோ, யா பிரஜைகளினது பிரயோஜநங்களையறிந்து, பலவிதமான வலலமையுடன் கூடியவராகப பல காமியவஸ்துக்களைத்தருகிறாரோ, எலலா உலகதகின் முதலிலும் முடிவிலும் யார் நிறைந்திருக்கிறாரோ, அவா தேவன். அவா நம்மை நலல புதிதியுடன் சோபபாராக.

விசேஷ உரை.

பலநிறங்களைப்படைத்த எந்த ஒன்றுகிய கடவுளோ அவர் தான் நிறமற்ற வராகவிருந்தும் துய்யதன்மையையுடைய ஞானிகளுக்கருகில் அவர் மிகவீளகக மாக விளங்கிக்கொண்டிருக்கிறார். அவர்கள் அந்தச்சதியபுருஷனைத் தருமத்தையும், பொருளையும், சுகசவுகியாதிகளையும் கொடுப்பவராகப்பாவித்து அவரை அதி சமீபஸ்தராக அறிகிறாரனர். மேலும் இம்மை சுகவிருப்பமற்றவராகி உள்ளத்தினிடத்துள்ள அன்புடன் அவரது உபாசனை செய்கின்றனர். அவரிடத்தில் ஒரு பிரார்த்தனையும் இல்லை. கேவலம் அவரை அடைதலின் நிமித்தமே நல்லபுத்தி கொடுக்கவேண்டுமென்னும் பிரார்த்தனை.

He who is one and colourless, and who, knowing the necessities of his creatures, dispenseth through power menifold; many an object of desire to them. He is the Being Divine, pervading the world from the beginning to end. Let Him engage us in salutry thoughts.

(63.) சுவேதாசுவதர உபநிஷத்து

மூன்றாவது அத்தியாயம் 7-வது வாக்கியம்.

ஸர்வேந்த்ரிய குணாபாசம் ஸர்வேந்த்ரிய
விவர்ஜிதம்; ஸர்வஸ்ய ப்ரபுமீசானம்
ஸர்வஸ்யசரணம் ப்ருஹத்.

பொழிப்புரை.

அவரால் எல்லாப்பொறிகளுடைய பண்புகளும் விளக்கத்தை பெறுகின்றன. அவர் எல்லாப பொறிகளுமற்றவர், அவர் யாவற்றிற்கும் பிரபு, யாவற்றிற்கும் தலைவர், யாவற்றிற்கும் அடைக்கல மானவர், யாவற்றுக்கும் நாணர்.

விசேஷ உரை.

அவர் நமக்கு ஞானத்தையும், சுகத்தையும், வல்லமையையும் தரக்கருதி நமது பொறிகளே அதற்குத்தகுந்த பலகுணங்களால் அலங்கரித்தார். கண்ணினால் உலகாதிபதியினது உலக அரசின் அதி வியப்பான அழகையும் நோக்கத்தையும் பார்த்துத்திருப்தியடைகிறோம். காதினால் பரவைகளினது இன்பமான ஒலி, நல்ல இனிமையான சங்கீதத்தின் ஓசை, பிரமகுணகீர்த்தனம் இவைகளைக்கேட்டு இன்பமடைகிறோம்; நாவினால் உண்டல் தின்றல் நக்கல் பருகல்களுக்குள்ளான பலவித நல்ல உணவுகளைக்கொண்டு சுகிக்கிறோம்; மூக்கினால் பலவிதமான நல்ல மணமுடைய மலர்களின் இன்பமான மணத்தைக் கிரகித்து சந்தோஷிக்கிறோம்; எல்லா உறுப்புகளிலும் பரவியிருக்கிற ஸ்பரிச இந்திரியத்தினால் நல்ல குளிர்ச்சிபொருந்திய மந்தமாருதத்தின் வீசுதலினால் குளிர்ச்சியைப்பெற்று நமது சுகமாகிய ஸரோவரத்தை நிறப்புகிறோம், எல்லா நன்மைகளுக்கும் இருப்பிடமாகிய பரமேசுவரர் ஒருவரே இவையாவற்றிற்கும் காரணர். அவர் இந்தப்பொறிகளுக்கு எவ்விதமான வல்லமையைத் தந்தாரோ அதறகுத்தக்கவாறு அதற்குறியவிடயங்களனேத்தையும் அவற்றிற்குப்பயன்படும் படி படைத்தினாலேயே நாம் அவரால் அருளப்பட்ட சுகத்தில் சுகிகளாயிருக்கிறோம். நமக்கு அவரால் இரண்டுகைகள் அருளப்பட்டதனால் நாம் கைகளினால் கிரகிக்கப்படத்தக்க பொருள்களனேதையும் பற்ற வல்லமையுள்ளவர்களாகவிருக்கிறோம். அவர் நமக்கு வாகிந்திரியத்தை அருளினதால் நமதுள்ளத்தினது கருத்துகளனேத்தையும் வெளியிட்டு சுகிகளாகிறோம், அவர் நமது ஒவ்வொரு இந்திரியத்தையும் சுகத்தின் களஞ்சியத்திற்கு ஒவ்வொரு வாயிலாக ஏற்படுத்தியிருக்கிறார். நமது ஒவ்வொரு ஞானேந்திரியமும், கருமேந்திரியமும்

ஒன்றையொன்று இன்பவடிவுடைய ஊற்றாகி இடைவிடாமல் இன்பவாரியை வெளி யிடுகின்றது; மேலும் அதனால் எல்லா சன்மைகளுக்கும் ஒன்றான இருப்பிட மாக விளங்குகிறவராகி உலக ரக்ஷகரது அற்புத மகிமையை விளக்குகின்றது.

அவர் உயிர்களினது நன்மையின்பொருட்டே இந்த மிகவியப்பாகிய பொறிகளனைத்தையும் படைத்தார்; மேலும், அவராலேயே இப்பொறிகளின் பண்புகளனைத்தும் விளக்கத்தைப் பெறுகின்றன; ஆனால் அவர் தான் எந்தப் பொறியையும் உடையவரல்லர். அவரது ஞானத்தின்பொருட்டு ஒரு ஞானேந்திரியமும் வேண்டியதில்லை அவர் கருமத்தின்பொருட்டு ஒரு கருமேந்திரிய மும் பயன்படாது; அவர் கண்காதற்றவராயிருந்தும் யாவற்றையும் பார்க்கிறார், யாவற்றையும் கேட்கிறார்; மேலும் கைகாலற்றவராயிருந்தும் எல்லாவிடங்களி லும் செல்லுகிறார், யாவற்றையும் பற்றுகிறார். இவர் யாவருக்கும் பிரபு, யாவ ருக்கும் ஈசுவரர், யாவருக்கும ஆச்சரயர், யாவருக்கும் நண்பர்.

THROUGH Whom the senses manifest their powers but Who is Himself devoid of senses; He is the Lord and Governor of all, the Friend and Protector of all.

(64.) கேநேபநிஷத்து

இரண்டாவது கண்டம் 2-வது வாகியம்.

நாஹம்மந்யேஸுவேதேதி நோநவேதேதிவேதச;
யோநஸ்தத்வேததத்வேதநோ நவேதேதி வேதச.

பொழிப்புரை.

யான் பிரமத்தை முற்றும் அறிந்தேனென்று நினைக்கவில்லை அது அறியப்பட்டதுமன்று, அறியப்படாததுமன்று. "அது அறி யப்பட்டதுமன்று அறியப்படாததுமன்று" என்னும் வாகியப பொருளை நமக்குள் யார் அறிகின்றனரோ அவரகளே பிரமதத்தை யறிகின்றனர்.

விசேஷ உரை.

பிரமத்தின் பூரணத்தன்மையை விசேஷித்து முற்றும் அறியக்கூடா தென்று சொல்வதால், அதன்கருத்து பிரமதத்தின் விஷயமாக சிறிதும் அறியக் கூடாது என்பதன்று. அவரது உண்மையான பூரணதத்தன்மையை ஒருவிதத் திலும் நமது அல்பமாகிய கருத்தில் கட்டுப்படாவிடினும்; அவரது இருப்பும், பூரணத்தன்மையும், நல்லதன்மையும் நமது ஞானக்கண்ணுக்கு விளக்கமாகப் புலப்படுகிறது. அவரது எல்லையற்ற ஞானத்திற்கும், எல்லையற்ற சக்திக்கும் எல்லையற்ற அன்புக்கும் நிதர்சனங்கள் எங்கும் காணப்படுகின்றன. இந்தக் காரணத்தால் "நான் பிரமத்தையறியவில்லை என்பதுமில்லை, அறிந்தேனென்ப தும் இல்லை." என்னும் இவ்வாக்கியம் சொல்லப்பட்டது. அதன் கருத்து யாதெனில்; நாம் அவரது ஆதியும் அந்தமுமற்ற பூரணத்தன்மையையும், அவரு டைய ஸத்தியஸங்கற்ப மங்களஸ்வரூபத்தையும் விளக்கமாக வறிகிறோம்;

ஆனால், ஒரு பரிமிதப்பொருளைப்போல விசேஷித்து அதைக் கருத்தினது எல்லைக்குள் அடக்கக்கூடவில்லை. யார் மிகவும் தூய்மையையுடைய ஞானநேத்திரத்தினால் அவரை நேராகக்கண்டு அவரது பூரணத்தன்மையை அறிகின்றனரோ, அவர்களே இவ்வாக்கியத்தின் மர்மத்தை கன்றாகவறிகின்றனர்.

I do not think that I know God well. *It is neither that I know not God, nor it is that I know him.* He among us who understandeth this *sentence*, knoweth God.

(65.) கேனோபநிஷத்து

இரண்டாவது கண்டம் 2-வது வாக்கியம்.

யஸ்யாமதம் தஸ்யமதம் மதம்யஸ்ய நவேதஸ:;
அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம விஜாநதாம்.

பொழிப்புரை.

யார் பிரமத்தின் ஸ்வரூபத்தை முற்றும் அறியவில்லையென்று நினைக்கிறாரோ, அவர் பிரமதத்தின் ஸ்வரூபத்தை யறிந்தார், யார் பிரத்தின் ஸ்வரூபத்தை முற்றும் அறிந்ததாக நினைக்கிறாரோ அவன் பிரமத்தின் ஸ்வரூபத்தையறியவில்லை, சிறந்த ஞானிகளது கருத்து பிரமஸ்வரூபத்தை முற்றும் அறியவில்லை என்பது. அஞ் ஞானிகளுடைய கொள்கை பிரமத்தின் ஸ்வரூபத்தை முற்றும் அறிந்தாரென்பது.

விசேஷ உரை.

பிரமத்தின் ஸ்வரூபத்தை நமது பரிமிதமாகிய அல்பபுத்தியினால் விசேஷமாக அறியவல்லார்களல்லம் என்பதை நாம் அறிந்தோமெனினும், முதலும் சுறுமற்ற அவரது பூரணத்தன்மை ஒருவாறு அறியலாயிற்று. ஞானவானுடைய யார் தூய்மையான தனது ஞானக்கண்ணினால் அந்த ஸ்தூல சுந்தர மங்களஸ்வரூபவிடைய பூரணத்தன்மையை நேராக அறிகின்றாரோ, அவரே பிரமத்தினது தன்மைக்கு இறுதியில்லை எனவறிகிறார்.

"He is conceivable to him who believeth that he conceiveth Him not, and inconceivable to him who believeth that he conceiveth Him. He is unknown to them who believe they know Him and known to them who believe they do not know Him.

(66.) மாண்டூகிய உபநிஷத்து

2-வது கண்டம் 7-வது வாக்கியம்.

அத்ருஷ்டமவ்யவ ஹார்யமக்ராஹ்யமலக்ஷண
மசிந்த்யமவ்யபதேச்ய மேகாத்மபரத்யயஸாரம்
பரபஞ்சோபஸமம்ஸ்ஹாந்தம் ஸிவமத்வைதம்.

பொழிப்புரை.

கடவுள் கண்ணால் காணப்படாதவர், கருமேந்திரியங்களாற் கவரப்படாதவர், வியவஹரிக்கப்படக்கூடாதவர், பரிமிதமான லக்ஷணமற்றவர், கருத்திலடங்காதவர், சொல்லிமுடியாதவர், உயிர்களினது ஆத்துமப்பிரத்தியயத்தையே தன்னிருத்தலுக்குப பிரமாணமாக உடையவர், ஸம்ஸாரதருமத்தைக்கடந்தவர், ஸாந்தமானவர், மங்களஸ்வரூபி, ஒப்புயர்வான இரண்டாவதற்றவர்.

விசேஷ உரை.

அவ்விறுதியற்ற ஞானத்தையே வடிவாகக்கொண்ட பரமேசுவரர் கண்களுக்குப்புலப்படத்தக்கவரன்று, அவரைக்கைகளால் பற்ற முடியாது, அவரைக் கருத்திலுல் கருதவும் முடியாது, அவரைப்பரிமிதப்பொருளைப்போல விசேஷமாகவறியவுங்கூடாது, கேவலம் நிருமலமான ஸகஜஞானத்திலுற்றுன் அவர் விளங்குவார். மேலும் ஒரு ஆத்துமப்பிரத்தியயத்தினுடைய பலத்தில்தான் ஞானத்திற்கு விளங்குகிற ஸத்தியசுக்ர மங்களஸ்வரூபியாகிய புருஷனது இருத்தலில் நாம் நம்புகிறோம். ஞானம் என்த இயற்கையான அழிவுமிறதியுமற்ற பூரணனே விளக்குகின்றதோ, ஆன்மா அத்தப்பூரணபுருஷனது இருத்தலில் நம்புகின்றது. ஞானத்திலுல் உண்மை விளங்குகின்றது. ஆன்மாவுக்கு அவ்வுண்மையில் நம்பிக்கையுண்டாகின்றது. ஆனதினுல் இத்த ஸ்வபாவசித்தமாகிய ஆத்துமப்பிரத்தியயமே அவரது அஸ்தித்வத்தின் பிரமாணத்தின் நிலைநிறுத்துவதற்கு ஒன்றான வது. எப்பொழுது ஆத்துமப்பிரத்தியயசித்தமான இறுதியற்ற புருஷன் ஸஹஜஞானத்திலுல் விளங்குகிறாரோ, அப்பொழுது புத்தி அவரது உலகப்படைப்பிலுள்ள கௌசலத்தைக் காண்பித்து அவரது விசேஷ ஞானத்தைத் தெரிவிக்கின்றது; மேலும் உலகத்திலுள்ள நன்னெக்கத்தினது நியமங்களைக்காண்பித்து அந்த நியந்தாவின் நல்ல தன்மையை விளக்குகின்றது. நமது பரிமித புத்தியால் அம்முடிவற்றபுருஷனை முழுதும் அறியக்கூடாவிட்டாலும் அந்தப் புத்தி ஸஹஜஞானத்தை மிகவும் போஷிக்கின்றது. ஆனதால் பிரமஜ்ஞாசுக்களான முமுக்ஷுக்கள் உலகத்திலுள்ள காரியங்களை உள்ளும் புறமுமாலோசிப்பதனுல் புத்தியைப்பரிசுத்தப்படுத்த ஒருபொழுதும் அலக்ஷியம் செய்யக்கூடாது. புத்தி செவ்வையாகப் பரிசுத்தப்பட்டால் ஸகஜஞானத்தினுடையவும், ஆத்துமப்பிரத்தியயத்தினுடையவும் அதிகாரத்தையும் நோக்கத்தையும் நாம் விசேஷமாக அறியவல்லவர்களாவோம்.

உலகம் யாரால் படைக்கப்பட்டு யாருடைய நியமங்களுக்குளளாகி இருக்கின்றதோ, அவர் எல்லா உலகதருமத்தையுங் கடந்தவர். இராகம் துவேஷம் முதலிய மனோவிருத்திகளொன்றும் அவரிடத்திலில்லை; ஆனதால் அவரே சாந்தர், அவர் மங்களஸ்வரூபி, அவர் யாவற்றின் நன்மையையும் நோக்கி

இவ்வுலகத்தை நியதமாகப் பாலித்துவருகிறார். அவருக்கு ஒப்பாவது, உயர்வாவதான இரண்டாவது பொருளில்லை. அவர் அத்துவிதியர்.

He is susceptible of no physical use, subject to no Organ of action, Invisible, Indefinable, Inconceivable, Indescribable, beyond the world, All-peace, All-goodness and without a second; the intutive belief in whose existence is the only proof of it.

(69). தைத்திரிய உப,

பிருகுவல்லி 1-வது அநுவாகம்.

யதோவா இமாநிபூதாநி ஜாயந்தே யேந
ஜாதாநி ஜீவந்தியத்ப்ரயந்த்யபி ஸம்விசந்தி
தத்விஜிக்ஞாஸஸ்வதத்ப்ரஹ்ம.

பொழிப்புரை.

எதனிடத்திலிருந்து (சிதசிதாத்மகமாகிய) பொருள்கள் உண்டாகின்றனவோ, உண்டானவை எதனால் நிலைபெற்றிருக்கின்றனவோ, (முடிவில்) எதை நோக்கிச்சென்றடைகின்றனவோ, அதை விசேஷமாகவறிய விரும்புங்கள். அது பிரமம்.

விசேஷ உரை.

நிலையியற்பொருளாகவும், இயங்கியற்பொருளாகவுமிருக்கிற இவ்வஸ்துக்களெல்லாம் யாரால் படைக்கப்பட்டனவோ, யாருடைய ஆதரவாலிருக்கின்றனவோ, யாரருகின் அவற்றின் ஒரு அம்சமும் இராதோ, அவரே பிரம்மம்; அவரே சத்தியஸ்வரூபி, அவரே நமது பிரபு, எல்லாம்வல்ல அந்தப்பரமேசுவரர் ஸத்தியகாமர், ஸத்தியஸங்கல்பர்; அவர் எதைக்கருதுகிறாரோ அது ஆகின்றது. ஸ்ரீத்ப்பூரணபுருஷனுடைய சக்தியிலிருந்து இந்த சகல வஸ்துக்களும் உண்டாகி, அதனதன் சக்தியைப்பெறுகின்றனவோ; அவர், அவற்றை அழிக்க வேண்டுமெனக்கருதின் அவை அதனின் சக்தியுடன் அந்த எல்லாம்வல்ல வஸ்துவின் சக்தியில் லயமாகி அவரிடத்திலேயே மறுபடியும் சென்றுவிடலாம். அப்போதவற்றின் குறியும் எங்கும் தென்படாது. படைத்துக்காத்தழிக்க வல்லவர் கேவலம் கடவுளொருவரே. நமக்குச்சில வஸ்துக்கள் கிடைக்கின்றன நாம் அவற்றின் குணங்களையறிந்து, அவற்றிற்கியன்றவாறு ஒன்றுடனொன்றைச்சேர்த்து, ஓர் அபூர்வமான யந்திரத்தைச் செய்யவல்லோம், உண்மையே; ஆனால், ஒருமணலணுவையும் படைக்கவாவது, அழிக்கவாவது வல்லவரல்லம். படைத்தளித்தழிக்கும் வல்லமை, தனக்கு ஒப்புயர்வுள்ள இரண்டாவது வஸ்துவற்ற கடவுளொருவரிடத்திலேயேயுள்ளது.

From Whom these creatures receive being, through Whom, after receiving being, they subsist, and Whom they at last deport unto and enter, desire to know Him; He is God.

(70). புராஹதாரணிய உபநிஷத்து

5-வது அத்தியாயம் 8-வது பிரமாணம் 8-வது வாக்கியம்.

ஏதத்வைதக்ஷயம் கார்கி ப்ராஹ்மணோ அபிவதந்தி;
யஸ்தூலமநண்வ.ஹ்ரஸ்வமதீர்க்க மலோஹித
மஸ்நேஹ மச்சாயமதோர்மோ வாய்வநாகாச
மஸங்கமரஸ மகந்த மசக்ஷுஷ்க மச்ரோத்ர
மவாகமநோர்தேஜஸ்க மப்ராணமமுகமமாத்ரம்.

பொழிப்புரை.

ஓ கார்க்கி! பிரமஞானிகள் யாரைப்பணிகிறார்களோ அவர் இந்த அழிவற்ற புருஷன். அவர் தூலரன்று, அணுவன்று, குறு கினவரன்று, நீட்சியுடையவருமன்று. அவர் வருணமுள்ள பொரு ளன்று, திரவபபொருளன்று, நிழலன்று, இருளன்று, காற்றன்று ஆகாயமன்று. சுகதுக்கமற்றவர், இரஸநேந்திரியமற்றவர், கிரா ணேந்திரியமற்றவர், கண்ணற்றவர், காதற்றவர், வாக்கற்றவர், மிதமாகிய மனதற்றவர், உஷ்ணமற்றவர், பிராணவாயுவற்றவர், முகமற்றவர், அவருக்கு ஓபமிலலை.

விசேஷ உரை.

ஆரியர்வேதத்தில் அர்ச்சைக்கு அல்லது விக்கிரகாராதனை செய்வதற்கு விதிகள்இருப்பனவாகஇந்நாட்டுஇந்துக்களில் அநே கரும், கிறிஸ்தவர் முதலான ஏனையமதஸ்தர்களும் நம்பி இருக் கிறார்கள். இந்த நம்பிக்கையினல் இக்கால இந்துக்கள் ஏராள மானபொருளையும், பொழுதையும் செலவழித்து கோயில்கோபு ரங்களைக்கட்டி அவைகளில அநேகவித விக்கிரகங்களைஸ்தாபித்து அர்ச்சை செய்துவருகிறார்கள். இவைகளைக்காணும் கிறிஸ்தவர் முதலான மதஸ்தர்கள்: இந்துக்கள் அக்ஞானிகளென்றும், அவர் களுடைய ஆரியவேதம் அக்ஞானத்துக்கு ஹேதுவான விக்கிரஹ ஆராதனையைபோதிக்கும் உபயோகமற்ற வேதமென்றும் பரிஹா சம் செய்துவருகிறார்கள். இப்படி செய்வதற்குக்காரணம் வேத விசாரணை இல்லாமையே. இதுவரையில் எடுத்துக்காட்டப் பட்ட வேத உபநிஷத்துக்களில் விக்கிரஹாராதனைக்கு விதிகள் இல்லாதிருத்தல் பிரத்தியக்ஷம். அதற்கு திருஷ்டாந்தமாக பின் னும்சில உபநிஷத்துக்களை இதனடியில் காட்டுகிறேம்.

முண்டகோபநிஷத்து பிரதமமுண்டகம் 1-வது அத்தியாயம்
6-வது வாகியத்தில்,

யத்ததத்ருஸ்ய மக்ராஹ்ய மகோத்ர மவர்ன
மசக்ஷுஸ்ரோத்ரம், ததபாணிபாதம் நித்யம் விபும்
சர்வகதம் ஸுஸூக்ஷுமம் ததவ்யயம் யத்பூதயோநிம்
பரிதிருஸ்யந்திதீரா:

அது (பிரமம்) அதிருஸியம், கிரஹிக்கக்கூடாதது, அடியற்றது, வர்ணமற்றது. கண்காதற்றது, நித்தியமானது, விபுசுவரூபி, எங்கும் பரவியது, சூக்ஷ்மமானது, அவ்யயமானது, அதைத்தீரர்கள் பூதங்களுக்கெல்லாம் ஆதிகாரணமென்று கண்ருயறிகிறார்கள். என்றும்,

கடோபநிஷத்து 3-வது வல்லி, 12-வது வாக்கியத்தில்,

ஏஷஸர்வேஷு பூதேஷு கூடாத்மானப்பிரகாசதே
த்ருஸ்யதே த்வக்ரயாபுத்யா ஸுஸூக்ஷுமாய
ஸுஸூக்ஷுமதர்சிபி:

ஸர்வபூதங்களிலும் கூடமான ஆத்மாவாக இருக்கும் இவன் (பிரமம்)(கண்ணுக்கு) விளங்குகிறதில்லை. நுண்ணறிவு உள்ளவருக்கு (மாத்திரம்) விளங்குவான் என்றும்,

கடோபநிஷத்து 6-வது வல்லி, 9-வது வாக்கியத்தில்,

நஸம்த்ருசேதிஷ்டதிரூபமஸ்ய நசக்ஷுஷாபஸ்யதி
கஸ்சனைநம்ஹ்ருதாமநீஷா மநசாபி: கலப்தோய
ஏதத்விதுரம்ருதாஸ்தேபவந்தி.

இவனுக்கு (பிரம்மத்துக்கு) ரூபம் (உரு) பார்வையிலில்லை. இவனை ஒருவரும் கண்ணால் பார்க்கிறதில்லை; ஹிருதயத்தினாலும், மனதினாலும் அறியப்படுகிறான். இதையறிந்தவர் அமிருதத்துவத்தை அடைகிறார்கள், என்றும்.

பிரசினோபநிஷத்து 4-வது பிரசினம், 10-வது வாக்கியத்தில்,

ஸயோஹவைததத்சாயமசரீரமலோஹிதம்சுப்ரமக்ஷரம்
வேதயதேயஸ்து ஸௌம்ய ஸஸர்வக்ஞ ஸர்வோபவதி.

ஓ அன்புள்ளவனே! யாரானால் அதை (பிரம்மத்தை) நிழலற்றது, அசரீரி, வர்ணமற்றது, ஒளியுள்ளது, அழிவற்றது என்றறிகிறானே அவன் சர்வக்ஞனாகவும் சகலமாகவுமாகிறான். என்றும்,

தைத்திரிய உபநிஷத்து, சிக்ஷாவல்லி 6-வது அநுவாகத்தில்,

சயேஸோந்த ஹ்ருதய ஆகாச: தஸ்மிந்நயம் புருஷோ
மநோமய: அம்ருதோஹிரண்மய:, ஆகாசசரீரம்
ப்ரஹ்ம சத்யாத்ம ப்ராணாராமம் மந ஆநந்தம்
ஸாந்தி ஸம்ருத்தமம்ருதம்.

ஹிருதயமாகிய ஆகாசத்தில் அமிர்தசுபாவத்தையும், பொன்போன்ற ஒளியை தேஜசையுமுடைய மனோமயமான புருஷனிருக்கிறான்; அந்தப்பிரம்மம் ஆகாசத்தைச்சரீரமாகவும், சத்தியத்தை ஆத்மாவாகவும், லீலையைப் பிராணனாகவும்,

ஆநந்தத்தை மனமாக உடையவனுகவும், பரிபூர்ண சாந்தத்தை யுடையவனுகவும் அமிர்தனுகவும் இருக்கிறுன, என்றும்,

வாஜஸனேய உபநிஷத்து, 8-வது வாக்கியத்தில்,

ஸபர்யகாகூஷ்க்ர மகாய மவர்ணம் அஸ்நாவிரம்
சுத்தமபாபவித்தம் கவிர்மநீஷீ பரிபூ: ஸ்வயம்பூ:
யதாதத்யதோர்த்தான் வ்யததாகூஸ்வதிப்யஸமாப்யம்.

அவரெங்கும் நிறைந்தவர், ஒளிபொருந்தியவர், எவ்விதசரீரமுமற்றவரீ, பரிசுத்தமானவர், பாவமற்றவர், விவேகி, மனதையாள்பவர், சகல பூதங்களுக்கும் மேலானவர், தானுய் உண்டானவர், பொருள்களே அதனதன் இயல்புக்குத் தக்கபடி சாஸ்விதமாகவும் சமமாகவும் அமைத்தார், என்றும்,

கடோபநிஷத்து, இரண்டாம்வல்லி 12-வது வாக்கியத்தில்,

தந்துர்த்தர்ஸம் கூடமநுப்ரவிஷ்டம்குஹாஹிதம்
கஹ்வரேஷ்டம் புராணம் அத்யாத்மயோகாதிகமேன
தேவம்மத்வாதீரோஹர்ஷசோகோஜஹாதி.

தீரர்கள் அத்யாத்மயோகத்தாலேயே காணக்கடிதானவும், ஆழமறியக்கூடாதவும், (ஹிருதய) குஹையிலிருக்கிறவும், புகவரிதான இடத்தையுடையவும், அணுவானவும் பிரம்மத்தை தியானித்து சந்தோஷத்தையும், வியசனத்தையும் விடுகிறுர்கள், என்றும், பின்னும் பல உபநிஷத்துகளில் பிரம்மத்துக்கு எவ்விதசரீரமும் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி விக்கிரஹாராதனையாகிய அர்ச்சைக்கு ஆதாரவிதிகள் ஆரியர்வேத உபநிஷத்துக்களில் இல்லை என்று ஸ்பஷ்டமாகிறதன்றியில், புராண இதிகாசாதி கிரந்தங்களும் அர்ச்சையாகிய (விக்கிரஹாராதனையைக்) கண்டிக்கிறதென்பதற்கு இங்கு சில உதாரணங்களைக்காட்டுகிறேம்.

உத்தரகீதையில்,

அக்நிர்தேவோ த்விஜாதீநாம்; முநீநாம் ஹ்ருதிதைவதம்;
ப்ரதிமாஸ்வல்பபுத்தீநாம்; ஸர்வத்ர ஸமதர்ஸிந:

த்விஜர்களுக்குத்தெய்வம் அக்கினியில். முனிவர்களுக்குத்தெய்வம் ஹிருதயத்தில், புத்திகுன்றியவர்களுக்கு தெய்வம் விக்கிரகத்தில். சமதிருஷ்டியுடையவர்களுக்கு தெய்வம் எங்கும், என்றும்,

பாகவதம் 3-வதுஸ்கந்தம் 29-வது அத்தியாயத்தில்.

அஹம் ஸர்வேஷ்ம பூதேஷ்ம பூதாத்மாவஸ்திதஸ்ஸதா
தமவக்ஞாய்யமா மர்த்ய: கூருதேர்ச்சாவிடம்பநம். யஸ்துஸர்
வேஷ்ம பூதேஷ்ம ஸந்தமாத்மாநமீஸ்வரம். ஹித்வார்ச்சாம்
பஜதே மௌட்யாத் பஸ்மந்யேவ ஜுஹோதிஸ: அஹமுச்சவ
சைத்ரவ்யை: க்ரியயோத்பம் நயாநகே! நைவ துஷ்யேர்சிதோ
ஆர்ச்சாயாம் பூதக்ராமாவமாநிந:.

நான் எப்போதும் சகல பூதங்களிலும் ஆத்மஸ்வரூபமாயிருக்கிறேன். அப்படிப்பட்ட என்னை மனிதன் அவமதித்து அர்ச்சையாகிய பரிகாசத்தைச் செய்கிறான். சகலபூதங்களிலும் ஆத்மஸ்வரூபமாயுள்ள ஈஸ்வரனாகிய என்னை விட்டுவிட்டு மூட்டாள்தனத்திலுல் அர்சனையை யார் தொழுகிறானோ அவன் செய்யும் பூஜை சாம்பலிற்கொட்டிய நெய்யிற்கொப்பாம். ஓ! நிர்த்தோஷமான வனே! சகல பூதங்களுக்கும் அவமானம் விளையும்படியாக என்னை அர்ச்சை யாகிய உயர்ந்த பதார்த்தங்களைக்கொண்டு பூஜிப்பவனிடத்தில் நான் சந்தோஷ மடையவேமாட்டேன், என்றும்,

பாகவதம் 11-வது ஸ்கந்தம் 3-வது அத்தியாயத்தில்,

ஸர்வபூதேஷ்வாத்மபஸ்யேத்பகவத்பாவமாத்மந:, பூதானி பகவத் யாத்மன்யேஷபாகவதோத்தம:. ஈஸ்வரே, தத்தீநேஷு, பாலிஸை ஷு, ஸ்னிக்தஸஷ்டசப்ரேமமைத்ரீகரோபா பெக்ஷாயாகரோதி ஸமத் யம:. அர்ச்சாயாமேவது ஹரே: பூஜா ய:ஸ்ரத்தயே ஹதே, நதத் பக்தேஷு சான்யேஷு ஸபத்த: ப்ராக்ருத ஸ்மருத:.

சகல பூதங்களிலும் பரவத்பாவமாகிய ஆத்மாவையும், பகவதாத்மாவில் பூதங்களையும் யார் காண்கிறானோ அவனே பாகவதர்களில் உத்தமன். கடவு ளிடத்திலும், அவர் பக்தர்களிடத்திலும், நீசர்களிடத்திலும், பகைவரிடத்திலும் பிரேமையும் நட்பும் கிருபையும் உபேக்ஷையும் யார் வைக்கிறானோ அவன் மத்தி மன். சிரத்தையுடன் அர்ச்சையில் எவன் பூசை விரும்புகிறானோ அப்படிப் பட்டவன் பக்தர்களில் சார்ந்தவனல்ல. பிராக்ருதனென்று சொல்லப் படுகின்றான், என்றும்,

சாதாதப வசனத்தில்,

அப்ஸுதேவா மநுஷ்யாணாம்; திவிதேவாமநீஷிணாம்; காஷ்ட லோஷ்டேஷுமூடாணாம்; யுக்தஸ்யாத்மநிதேவதாம்.

சாதாரண ஜனங்களுக்குத்தெய்வம் நீரில், சற்று தெரிந்தவர்களுக்குதெய் வம் ஆகாசத்தில்; மூடர்களுக்குத்தெய்வம் கல்லிலும் கட்டையிலும்; யோகி ஞருக்குத்தெய்வம் அவர்களுக்குள்ளே, என்றும்,

ஸ்காந்தபுராணம் ஞானயோககண்டம் ஈசுவசக்கிராத்தியாயத்தில்,

தீர்த்தேதாநேஷுதபோயஜ்ஞேஷுகாஷ்டேபாஷாணகேஸதா, ஸி வம்பஸ்யதிமூடாத்மா ஸிவோதேஹே பிரதிஷ்டித:. ஸர்வத்ரா வஸ்திதா ஸாந்தம் நபஸ்யதிசஸம்கரம், ஜ்ஞாநச்சக்ஷுர்விஹீ நத்வாத்அஹோமாயாபலம்முதே! ஆத்மஸம்ஸ்தம் ஸிவாத்யக்தா பஹிஸ்தம் யஜதே ஸிவம், ஹஸ்தஸ்தம் பிண்டமுத்ஸ்ருஜ்ய மி ஹேத்கஸ்பரமாத்மந:. ஸிவமாத்மநிபஸ்யந்தி ப்ரதிமாஸுஸுயோ கிந:, அஜ்ஞாநாம் பாவநார்த்தாய ப்ரதிமா:பரிகல்பிதா:. அபூர் வம் நாபரம்ப்ரஹ்ம ஸ்வாத்மாநம் ஸத்யமத்வயம், ப்ரக்ஞாந கந மாநந்தம் ய:பஸ்யதிஸபஸ்யதி, ஸர்வபூதஸ்தாத்மமாநம் விஸ்வதைக் ஞாநதேஹிநம், ஸ்வாத்மந்யயஸ்யபரஸ்யேஷு பஸ்யமாந்தே கட்பஸ்யதி.

மூடாத்மாக்கள் தீர்த்தத்திலும், தானத்திலும், தபசிலும், யக்ஞியத்திலும், கட்டையிலும், கல்லிலும் சிவனிருப்பதாய் நினைக்கிறார்கள். ஓ முனியே! ஞானக்கண்ணில்லாமையாலும், மாயையின் பலத்தாலும் (அல்லவா) எங்கும் வசிக்கும் சாந்தமூர்த்தியாகிய சங்கரனைக் காண்கிறதில்லை. தனக்குள்ளேயிருக்கும் சிவனைவிட்டுவிட்டு, சிவன் வெளியிலிருப்பதாய்ப் பூஜிப்பவன் உள்ளங்கையிலுள்ள சோற்றையெறிந்துவிட்டு, புறங்கையை நக்குவான்போல, யோகிகள் சிவனைச்சகஜமாகவுள்ளே காண்பார்களேயன்றி, பிரதிமைகளிற்காணார். அக்ஞானிகளுக்குப் பாவனார்த்தம் பிரதிமைகள் செய்யப்பட்டிருக்கின்றன. பிரம்மம் பூர்வமும் பரமுமற்றது, ஞானசுவரூபி, அளவற்ற ஆநந்தஸ்வரூபியென்று காண்பவனே கண்ணுடையவன். சர்வபூதங்களுக்கும் ஆத்மாவாகவும், பரிசுத்த ஞானத்தைச்சரீரமாகவும், சுவந்த ஆத்மாவிலேவிளங்குகிறது, அதை வெளியில் காண்கிறேனென்பவன் காண்கிறதில்லை, யென்றும், பின்னும் பல கிரந்தங்களில் விக்கிரஹாராதனையை கண்டிக்கப்பட்டிருக்கிறது ஆகவே,

---

பரமேசுவரர் தூலரன்று, அணுவன்று, குறுகினவரன்று, நீண்டவரன்று, அவருக்கொரு பரிமாணமுமில்லை. அவர் அலோஹிதர், அவருக்குச் சிகப்புமுதலிய ஒரு வர்ணமுமில்லை. அவர் திரவப்பொருளன்று அவர் நீரைப்போன்றவஸ்துவன்று, அவர் காற்றன்று, காற்று ஸம்பந்தமான பொருளுமன்று. இவர் இரசமுமன்று, கந்தமுமன்று, இவையாவும் வெளியரங்கமான ஜடப்பொருளின் தன்மைகள், அவர் ஒருபோதும் ஜடப்பொருளன்று; ஆனதால் இவையாவும் இஞ்சித்தேனும் அவரிடத்திலில்லை, அவர் ஜடவஸ்துவன்று, நம்மைப்போல் ஜடசரீரத்தோடு கூடியவருமன்று, அவரிடத்தில் சரீரிக பிராணவாயுவுமில்லை, அவரிடத்தில் முகாதி அங்கங்களுமில்லை. நமக்கும் சரீரத்திற்கும் எப்படி பரஸ்பர சம்பந்தமிருக்கிறதோ, மேலும் இந்த ஸம்பந்தத்தினால் எப்படி பார்க்கிறோமோ, கேட்கிறோமோ, வார்த்தை சொல்லுகிறோமோ, கடவுளப்பட ஒருடலோடு கூடிய ஜீவனன்று, ஆனதால் நம்மைப்போல அவர் கண்ணினால் பார்க்கிறதில்லை. அவர் கண்ணற்றவர், காதற்றவர், வாக்கற்றவர், அவர்மிதமாகிய நினைப்பற்றவர், அவர் உடலில்லாத சிற்றறிவினருமன்று. அவரிடத்தில் சிற்றறிவினரைச்சேர்ந்த காரியமொன்றுமில்லை. அவர் அஸங்கர், ஸாம்சாரிக சுகதுக்கங்களிலழுந்தினவரன்று. அவர் ஜடப்பொருளுமன்று சிற்றறிவினையுடைய சித்துப்பொருளுமன்று, அப்படியாயின் அவர் நிழல், இருள், வெளி இவற்றைப்போன்ற ஓர் பொருளல்லாதவரா? இல்லை. அவர் நிழல், வெளி, இருளைப்போல் ஒரு பொருளல்லாதவரன்று, அவர் நித்தியமாகிய ஸத்திய வஸ்து. அவர் அளவற்ற நன்மையுடையவர், அவர் ஞானத்தையே வடிவாகக் கொண்டவர், அவருக்கு ஒப்பில்லை. ஜடப்பொருளுக்கு எப்படி ஞானப்பொருளுயர்ந்ததோ அதுபோல சாதாரணமான ஞானப்பொருளைவிடஞானத்தையே வடிவாக உடைய பரமாத்துமா பலமடங்கு உயர்ந்தவர். அவரது ஞானம் படைக்கப்பட்ட சித்துப்பொருளினது ஞானத்தைப்போன்றதன்று. ஞானக்ரியைகள் அவரிடத்தில் இயறகையிலுள்ளவை. ஒருவஸ்துவையறியும்பொருட்டு அந்த எல்லாமறிந்த புருஷனுக்குப் பொறிகளுடைய ஸகாயம் ஆகியகமில்லை. முன் கடந்த விஷயங்களையறியும் பொருட்டும் அவருக்கு ஞாபகஸக்தி ஆவியகமில்லை. அவர் ஒரு காலத்திலேயே யாவற்றையுமறிகிறார். நமக்கிருப்பதுபோல அவருக்கு ஐமில்லை, பகையில்லை, வெறுப்பில்லை, துயரமில்லை.

அவருக்கு நமஸ்கரிப்பதுபோல மிதமாகிய தடையும், நட்பும், அன்பும், சந்தோஷமுமில்லை. அவர் நன்மையே வடிவாக உடையவர், அவரது அந்த நல்லதன்மையிலடங்கியிருக்கிற நட்பு, அருள், அன்பு, அவரிடத்திலின்று வெளிப்பட்டு உலகத்தை க்ஷேமமாக வைத்துக்கொண்டிருக்கின்றன; அவர் நமது மாகவிசுவிருத்தியைப்போன்ற அருள், நட்பு, அன்பு இவைகளுக்குப்பலமடங்கு கடந்தவர்; நமது அன்பு அவரது அளவற்ற அன்பின் அம்ஸமாத்திரமாக உள்ளது.

He the Imperishable, O Gargi! to Whom the holy class among men pay reverence, is neither thick nor thin, nor short nor long. He is colourless, homourless, shadowless. He is neither darkness, nor air, nor space, without company, without taste, without smell, without eyes, without ears, without speach, without finite mind, without vital beat, without organic life, without face, He is without parallel.

(71.) கடோபநிஷத்து

3-வது வல்லி 15-வது வாக்கியம்.

அஶப்தமஸ்பர்ஶ மரூபமவ்யயம் ததாரஸம்
நித்யமகந்தவச்சயத்; அநாத்யநந்தம்மஹத:
பரம்த்ருவம் விசாய்யதம் ம்ருத்யுமுகாத் ப்ரமுச்யதே.

பொழிப்புரை.

எது சத்தமற்றதோ, பரிசிக்கத்தக்க பண்பற்றதோ, உருவமற்றதோ, அழிவற்றதோ, இரஸநேந்திரியத்திற்கு விஷயமான பண்பற்றதோ, என்றுமுள்ளதோ மணமற்றதோ, முதலற்றதோ, ஈறற்றதோ, பெரிதிலும் பெரியதோ, நிதகியமானதோ அதை அடைந்து மரணத்தின் வாயிலிருந்து நீங்குகின்றனர்.

படைப்புக்கதீதமாகிய ஞானத்தையே வடிவாககொண்ட பரமேசுவரர் ஒருபொழுதும் செவி, மெய், முதலிய பொறிகளுக்குப் புலப்படத்தக்கவரல்லர் அவர் உருவற்றவர், வேறுபாடற்றவர், என்றுமுள்ளவர், பெரியவர். அவரை அறிந்தால் மரணத்தின் வாயிலிருந்து விடுபட்டு பிரமமென்னும் வீட்டிற்குட் புகுந்து; எக்காலத்திலும் மேன்பதவியைப் பெறறுக்கொண்டிருப்பார்.

Knowing Him Who is without sound, touch from taste, and smell, unfading, eternal, without origin, without end, greater than greatest, and true, one is freed from the mouth of death.

(72). தைத்திரிய உபநிஷத்து

ஆநந்தவல்லி 9 வது அநுவாகம் 1-வதுவாக்கியம்.

யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்யமநஸாஸஹ:
ஆநந்தம்ப்ராம்மணோவித்வான் நபிபேதிகுதச்சந.

பொழிப்புரை.

மனதுடன் வாக்கு எதை அடையமாட்டாமல் எதிலிருந்து திரும்புகின்றதோ அந்தபரமதத்தின் ஆநந்தத்தையறிந்தவர் ஒரு பொழுதும் அஞ்சார்.

விசேஷ உரை.

அளவற்ற ஞானத்தையே வடிவாகக் கொண்ட பரமேசுவரன் எவ்வித அளவுக்கும் அடங்கின பொருளன்று. அவர் ஜடப்பொருளுமன்று, பரிமித ஞானத்தையுடைய சித்தப்பொருளுமன்று, ஆனதால் மிதஞானத்தையுடைய மனதை அவரை முற்றும் அடையமாட்டாது. ஆனதபற்றி வாக்கும் அவரை குறைவற சொல்லமாட்டாது. மனது அவரை நினைப்பதற்காகச் சென்று திரும்புகின்றது. வாக்கு அவரை வருணிக்கச்சென்று பின்னிடுகின்றது. அவ்வரம்பற்ற புருஷனே மனதிற்கு மனதென்றும், வாக்குக்கு வாக்கென்றும், எல்லா ஞானப்பொருளுக்கும் ஞானத்தைத் தருபவரென்றும், யாவற்றிற்கும் காரணரென்றும் நிச்சயித்தச்சொல்லலாகும். யார் இந்த நிர்விசேஷஞானியும் ஸர்வவியாபியாகியுமிருக்கிற ஆநந்தஸ்வரூபனை தம்முள்ளத்தில் ஒவ்வொரு கணமும் நேராய் அடைந்த பேரானந்தத்தைப் பெறுகின்றனரோ அவர்களது எல்லா விருப்பங்களும் முடிவுறுகின்றன. அவர்கள் தமது மிக அன்பினுடைய செயற்கையால் திருப்தியடைந்த விரும்பியபேறுகளைப் பெற்றவர்களாகின்றனர். அவர்கள் அவரைச்சரணடைந்த, அவரைப்பற்றிய அடியவர்களாகி, அவருக்கன்பாகிய காரியங்களைச்செய்வதிலேயே சென்றிருப்பார்கள். அவர்கள் உலகத்தார் செய்யும் துற்றதலுக்காவது, பொறுத்தமுடியாத அவமானத்திற்காவது தகாத திரஸ்காரத்திற்காவது, விலக்கவறிய அன்பத்திற்காவது பயந்து அக்காரியங்களைவிட்டுப் பின்னிடார்கள். மிகவும் பிரியமுகிய அவருடைய கட்டளைகளை நிறைவேற்றும் நிமித்தம் உயிரைக்கொடுப்பதும் அவர்கள்விஷயத்தில் ஸாதாரணகாரியம், ஆனதபற்றி அவர்களை யார் பயமுறுத்தவல்லார்? அவர்கள் உயிரைக்கொடுத்தவனிடத்தில் உயிரை அர்ப்பித்தஞ்செய்து, பயம்நீங்கினவர்களாகின்றனர். யாவரையுங்கொல்லுவதும் பயந்தருவதுமாகிய மரணமும் அவர்களைப்பயப்படுத்தமுடியாது.

Knowing the blissful nature of God Whom not able to reach speech with the mind desist, one doth not fear any.

(73). கேனேபநிஷத்து

2-வது கண்டம் 1-வது வாக்கியம்.

யதிமந்யஸேஸுவேதேதி தப்ரமேவாபிநூநம்
த்வம்வேத்த ப்ரஹ்மணோரூபம்.

பொழிப்புரை.

பிரமத்தை முற்றும் அறிந்தனமென்று நினைத்தீரானால் பிரமத்தில் சுவரூபத்தை சிறிதே அறிந்தீரென்பது நிச்சய.

விசேஷ உரை.

பிரமத்தை மிக நன்றாக அறிந்தோமென்று யார் நினைக்கிறார்களோ அவர்கள் பிரமத்தின் விஷயமாக அதி அல்பமாகவே தெரிந்துகொண்டார்கள்; இப்படி சொல்வதற்குக் காரணமென்னேயெனின், அற்பமில்லாத ஸ்வரூபத்தையுடைய பிரமத்தை நன்றாக அறிந்து முடியாதென்று அவர்கள் தெரிந்துகொள்ளாததுதான். அவர்கள் பிரமத்தை வெளி இந்திரியங்களுக்குப் புலப்படத்தக்க உருவத்தையுடைய ஒரு பொருளேப்போல நினைத்து திருப்தியடைந்திருக்கின்றனர்; அல்லது அதைவிட அதிசூக்ஷ்மமாக இருப்பதாக நினைத்தார்களாயின் உடலற்றிருக்கிற பரிமிதமாகிய ஒரு சித்துப்பொருளேப்போன்ற வஸ்துவாக நினைக்கின்றனர். அவர் உடலுள்ள வஸ்துவமன்று, உடலற்றிருக்கிற சிற்றறிவினேயுடைய ஒரு சித்துப்பொருளுமன்று என்பதை அவர்களொருபோதும் அறிப்கூடாமலிருக்கின்றனர். அவர் உடலுள்ளவராயிருக்கின் வெளி இந்திரியங்களுக்கு விஷயமாவார்; பரிமிதமாகிய சித்துப்பொருளாக விருக்கின் நமது கருத்திற்கு முற்றும் விஷயமாவார். பலர் பிரமத்திற்கு உடலில்லே என்பதை நன்றாகவறிந்திருக்கின்றனர். ஆனல் அவர் பரிமிதமாகிய சித்துப் பொருளன்று என்பதை நனறாகவறிந்திலர். அவர்கள் சுத்தரூகியும், முச்தரூகியும், அளவற்றவரூகியும், ஞானத்தையே வடிவாகக்கொண்டவரூயுமிருக்கிற கடவுளிடத்தில் பரிமிதமாகிய சித்துப்பொருளுக்குரிய செய்கைகளேத்தையும் ஆரோபிக்கின்றனர்; அவர்கள் அவரிடத்தில் குரோதம், பகை, மிதமாகியகட்பு, மிதமாகிய தயை, பக்ஷபாதத்தன்மை இவைகளிருக்கிறதாக நினேக்கின்றனர். அவரிடத்தில் இப்படிப்பட்ட பரிமிதமாகிய சித்தப்பொருளின் தன்மைகளிருக்குமாயின் அவரை நன்றாகவறியக்கூடும்; ஆனதால் அவரை முற்றும் அறியக்கூடுமென்று யார் நினேக்கின்றனரோ; அவர்கள், அவரிடத்தில் பரிமிதமாகிய சித்துப்பொருளுக்குரிய தருமங்களேயும். அவர்களுக்குள் ஸ்தூல தரிசனராக விருப்பவர்கள் அவரிடத்து சரீரதருமங்களேயும் ஆரோபிக்கின்றனர். சித்துப் பொருளெதுவோ அது வெளியிந்திரியங்களுக்கு விஷயமாகாது, அது அதி சூக்ஷ்மஸ்வரூபஸ்து; அதைவிட ஸூக்ஷ்மவஸ்துவாரோ யாரிடத்தில் பரிமிதமாகிய சித்துப்பொருளுக்குரிய தருமங்களில்லேயோ, அவரை முற்றும் எவ்விதமாக அறியவல்லோம்? இந்த ஜகத்தின் சகல கவுசலங்களுக்கும் காரணம் யாரோ அவருக்கு அவசியமாக ஞானமிருத்தல் வேண்டும்; ஆனல் அந்த ஞானம் நமது ஞானத்தைப்போல்பரிமிதமானதா? அந்த அநந்த ஞானத்தை நமது அல்பமாகிய புத்தி மூலமாக அறியவல்லோமா? அவர் இவ்வுலகத்தைப்படைத்தார். மேலும், இதுவரையில் காத்துவருகிறார். ஆனதினல் சிருஷ்டிக்கவும் காக்கவும்

வல்லமை அவரிடத்திலிருக்கிறதென்று விளங்குகிறது. ஆனால், அவருக்கிருக்கும் வல்லமை நமக்கிருக்கும் வல்லமையைப்போல பரிமிதமானதன்று. அவரது அசிந்தியமாகியசக்தியை நமது சுருக்கினுல் எட்டிமுடியுமா? யார் இந்தப் படைப்பின் நன்மையின்பொருட்டு நேயம், கட்பு அன்பு முதலியவைகளையுண்டு பண்ணினரோ அவரது அன்பு சிற்றறிவினையுடைய நமது அன்பைப்போன்றிருக்குமா? அந்த ஸச்சிதானந்த மங்களஸ்வரூபியினது சுருக்கமுடியாத பெரியவன்பு யாருடைய சுருக்கினுல் சுருக்கமுடியும்.

If you think that you have known God well, then you know but little of the nature of God.

(74). ஸ்வேதாஸ்வதர உபநிஷத்து.

6-வது அத்தியாயம் 14-ம் வாக்கியம்.

நதத்ரஸூர்யோபாதி நசந்ரதாரகம்நேமா
வித்யுதோபாந்தி குதோயமக்நி:; தமேவபாந்த
மநுபாதிஸர்வம் தஸ்யபாஸாஸர்வமிதம்விபாதி.

பொழிப்புரை.

பிரமத்தைச் சூரியபிம்பம் விளங்கச்செய்யமாட்டாது. சந்திர நக்ஷத்திரங்களாலுமாகாது. இந்த மின்னலும் விளங்கச் செய்யமாட்டாது. இந்தத் தீ எப்படி விளங்கச்செய்யும். தாமாக விளங்குகிற அவரைப்பற்றிக்கொண்டே யாவும் விளங்குகின்றன. இவையாவும் அவரது விளக்கத்தினுலேயே விளங்குகின்றன.

விசேஷ உரை

அபாரமாகிய இந்த பிரஹ்மாண்டத்தைப் படைத்தவர் யாரோ அவரது அறிவுக்கு அளவில்லை, வல்லமைக்கு வரம்பில்லை, கருணைக்குக் கணையில்லை—என்றுல், அவரது இயற்கை எல்லா நன்மையிலும் நிறைந்த நன்மையுடையது. அவருடைய எத்தப் பல விசித்திரச்செயல்களை நாம் கண்டுகளித்து அவருடைய எத்தெத்தக் கலியாண குணங்களை ஒருவாறு தரிசிக்கின்றோமோ, அவற்றில் எதினுலும் அவரைப் பரிமிதஸ்வபாவமுடையவராகக கொள்ளக்கூடவில்லை; ஆனல், அவர் அளவற்ற அறிவினையுடையவர், அபார சக்தியையுடையவர், பூரணத்தன்மையுடையவர் என்னும் விஷயம் சர்க்கத்தினுல் ஸ்தாபிக்கவேண்டியதன்று. இது மானவஜாதியின் ஆத்மப்பிரத்யயவித்தமாகிய நிர்விவாத ஸ்வப்ரத்யக்ஷ ஸத்தியம். யார், உலக அமைப்பிலிருக்கிற நன்னேகத்திற்குக் காரணராகக்கடவர ஒருவருளர் என்று நம்புகிறார்களோ, அவர்கள் அவரை நம்மைவிடப் பூரணரென்று நம்பியே தீரவேண்டும்.

இவ்விஷயம் மானவஜாதியின் ஆத்மப்பிரத்யயவித்தமான உண்மையாயினும்; சிலர், நியாயத்தினுல் நிரூபிக்கப்படாத விஷயத்தில், மநப்பூர்வமாய் நம்பிக்கைவைப்பதில்லையாகையால்; இதை ஒருவாறு நியாயபூர்வகமாக ஆராய்ச்சி செய்வது அநுபயோகமன்று, எந்த விஷயத்தைப் பூரணமாயறிய நமக்கு

வல்லமையில்லையோ, அதை அபாரமென்று கொள்வது பெரும்பாலும் நமது
ன்மையாகவிருக்கிறது. நாம் சேச காலங்களின் ஆதி அந்தங்களை நிச்சயிக்க
க்கியற்றவர்களாகி, அவற்றை எல்லையற்றவையென்று நம்புகிறோம். ஒரு
அபரிமிதமான பெரியவஸ்துவின் அளவையறியக்கூடாமல், அதை அபரிமேய
மென்று நினைக்கவேண்டியிருக்கிறது. நாம் எந்தவஸ்துவின் எல்லையையாவது
அளவையாவது அறிபாமல் அதைப்பரிமிதமானதென்று நிர்ணயிப்பதற்கு எவ்
விதத்திலும் கூடவில்லை; ஆனால், தர்சந ஸ்பர்சநாதி இந்திரியங்களால் அறியக்
டாத அளவினையுடைய சில வஸ்துக்களின் பரிமிதஸ்வபாவத்தை அறிய
வல்லோம், உண்மையே; ஆயினும், இப்படியறிவது அவற்றின் இயற்கை
மக்ஷ வேறு மூலங்களால் தெரியவருவதைப்பற்றியே யன்றி வேறன்று.
அதிவிசாலமாகிய கடலின் அக்கரை நமது கண்ணுக்கெட்டாவிடினும் அது,
ரையுடையதென நம்புகிறோம். மிகுதியும் உயர்ந்திருக்கிற மலை உச்சியில்
ாமேறக்கூடாவிடினும், பூமியின் நிறை நாம் நிறைகோலால் நிறுத்து முடியா
விடினும், இவறறையெல்லாம் பரிமிதமானதென்றே நம்புகிறோம். ஏனெனில்
ாதாரணமாகப்புலப்படாத இவற்றின் பரிமிதஸ்வரூபம் நமக்கு உபாயாந்தரங்
களின் மூலமாகத் தெரியவருகின்றது. பூப்ரதக்ஷணம் செய்கிற மஹாநாவிகர்
ளால் நமக்குக் கடலின் எல்லை தெரிகின்றது. உயர்ந்த மலைகளின் உன்னத
மும், ஏறிப்பராமலே மனிஷகோவிதர்களுடைய நிறத்தாலறிகின்றனம். பூமி
னது நிறையளவும் ஜடதத்வஞர்களால் நிர்த்தேசிக்கப்படுகின்றது. ஆனால்,
சிருஷ்டிகர்த்தாவாகிய ஜகதீசுவரனது ஞான சக்தி கருணைகளுக்கு ஒருவிதத்
திலும் அளவிடுவதற்கு நாமெவ்வளவுதூரம் முட்டிப்பார்த்தபோதிலும் நம்மாலாக
யில்லை. இதைப்பறறியே நாமவரை அபரிமேயர் அல்லது பூரணர் என்று
கொள்ளாதிருக்க நமக்குச் சக்தியேது?

நாம் சிருஷ்டிகாரியத்தை ஆலோசித்து சிருஷ்டி கர்த்தாவின் ஞானம்,
அருள், வல்லமைகளை ஒருவாறு அறிந்து அவற்றை முற்றுமறியச் சக்தியில்லா
மல், அவரைப்பூரணரென்று நம்புகிறோம். மநுஷ்யஜாதி உண்டானது முதற்
கொண்டு, மனிதர்கள் இயற்கையாகவே ஜகதீசுவரது அஸ்தித்துவக்கியான
முடையவர்களாய் அவரது ஞானத்தையும், கருணையையும், சக்தியையும் கூடிய
வரையில் ஆலோசித்து வருகின்றனர். ஆனால், ஒரு காலத்திலும் அவர்கள்
சடவுளினது ஸ்வரூபத்தை முற்றும் அறிந்ததில்லை. யார் எந்தக்காலத்தில்
அவர் சம்பந்தமான எந்த விஷயமாகவாவது, அநுசந்தானம் செய்யச் சென்ற
போதிலும், அவர்கள் பகவானது எல்லையைக் காணமுடியாமல் அவரைப் பூரண
ஸ்வரூபமென்று கீர்த்தனம் செய்கின்றனர். அறிஞரென்ன, அறிவிலிக
ளென்ன், நாகரிகமுள்ளவர்களென்ன, நாகரிகமற்றவர்களென்ன, ஸாதுக்க
ளென்ன, துஷ்டர்களென்ன அனைவரும் ஒருவாய்பட்டாற்போல அவரை
அளவற்ற ஞானமுடையவரென்றும், அநந்த சக்திசம்பந்தரென்றும், அபார
கருணையுடையவரென்றும் கோஷிக்கின்றனர். நாகரிகமற்ற தேசஸ்தர்கள்
எப்படி அவரைக் கருணைக்கடலென்று முறையிடுகின்றனரோ, அப்படியே,
பண்டித கணங்களும் கூறுகின்றன. இணையற்ற ஞானிகளாய் இந்தத்தேசத்
தில் ஆதிகாலத்திலெழுந்தருளியிருந்த ரிஷிகளாகிய நம்முன்னோரும் கடவுளை
முற்றும் அறியக்கூடாதவர்களாகி, தமது தினத்தன்மையையும் அவரது அபரி
மேயஸ்வரூபத்தையும் கருதியே, அண்டபிண்ட சராசரங்களை தேடித்தேடித்
திரித்துப்பார்த்து ஞானதிருஷ்டியினாலே

"நேதி, நேதி = இதுவன்று, இதுவன்று; யதோவாசோநிவர்த்தந்தே அப்ராப்யமநஸாஸஹ = அடையக்கூடாமல் எதைவிட்டு வாக்கு மனதுடன் திரும்புகின்றதோ; யஸ்ஸர்வஜ்ஞ: = யார் ஸர்வக்ஞனே; ஏஷ ஸர்வேஸ்வர: = இவன் சர்வேச்வரன்."

என்பவை முதலிய அதேக ச்ருதிகளால் வாகாமகோசரமாய் வெளியிட்டிருக்கின்றனர். அவர்களது திவ்யோக்திகளின் பொருளை கண்கறிவதும் மந்தமதிகளாகிய நம்மால் கூடாமலிருக்கிறது. இப்போதிருக்கிற சர்வதேச பண்டிதர்களும் கடவுளை, பரிமிதஸ்வரூபனென்று சொல்லக் கூடாதவர்களாகவே யிருக்கின்றனர். அவர்கள், அவர் அப்ரிமேய கல்யாணகுணங்களுடையவனென்றும் உண்மையை நிர்விவாதமாய் அங்கீகரித்திருக்கின்றார்கள், இதைச் சந்தேதிகளாகிய சில நாஸ்திகர்கள் மறுக்க முயலலாம். அவர்களபிப்பிராயம் அந்த கோடிஜநங்களின் ஐயமற்ற ஐகண்டிகாபிப்பிராயத்தைப் பொய்யாக்கத்தக்கதன்று. எப்படிப்பகுதிகள் தன்கன் சக்திக்குத்தக்கபடி ஆகாத்தில் உயர்ந்து யர்ந்து பறந்தபோகிலும், அவற்றில் ஒன்றும் ஆகாசத்தின் அளவை எட்டமுடியாதோ; அப்படியே பண்டிதர்கள் அவரவரது சக்திக்கும், பக்திக்கும் தக்கபடி பரமாத்மாவின் ஸ்வரூப தத்வத்தை அறிந்தபோகிலும் அதை ஒருபொழுதும் யாராவது அளவுபடித்தியறிவது அசக்யம். பஹுஸ்ருதர்களாகிய பெரியோர்கள் அமோகமாய்த்திருவாய்மலர்ந்தருளிய திவ்ய சூக்திகளில் ஒவ்வொன்றின் பொருளை ஆலோசித்தாலும், கடவுளின் அப்ரமேயத்வம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது. கோளஞானம் (Astronomy), பூகோளஞானம் (Geography), ஜடதத்வஞானம் (Natural Philosophy), ஆத்மதத்வஞானம் (Mental Pnilosophy), அங்காதி பாதசாஸ்திரம் (Anatomy), காலவிருத்தாந்த சாஸ்திரம் (Chronalogy), இரசாயந சாஸ்திரம் (Chemistry), ஜீவதத்துவ சாஸ்திரம் (Biology), தாதுவர்க்க தத்துவ சாஸ்திரம் (Mineralogy) முதலிய எந்த ஞானனுசந்தானம் செய்தபோதிலும் அவற்றிலெல்லாம் அவரது அளவற்ற தன்மையே வெளிப்படுகின்றது. நாம் எந்த ஞானத்தைக் கற்க முயன்று அதிலும் ஆழ்ந்துபார்க்கின், அவரது அளவற்ற கருணை முதலிய கல்யாணகுணங்களையே கற்கவேண்டியிருக்கிறது. இதனால் யாஸ்தவமான கல்வி அவரது கல்யாகுணஞ்துபவம் செய்வதே என்று எளிதில் விளங்கும். நமது கல்வியால் நாம் சாமான்யமாய் விஷயங்களைக்கற்பதில் உண்மையாக ஒரு மாகாத்மியமுமில்லை. எப்பொழுது அதின் மூலமாய்க் கடவுளினது எந்த நன்மைக்காவது, சக்திகவுசலமாவது எந்த அளவுக்குத் தெரியவருகின்றதோ, அப்பொழுது அந்த அளவுகுத்தான் நமது கல்வி சிறப்படைகின்றது. இக்கருத்தை கொண்டே,

"கற்றதனலாய பயனென்கொல் வாலறிவ
னற்றாடொழாரெனின்"

என்று நாயனாரும் சொன்னர். நாம் எவ்வளவு கல்வியினாலும் அவரை முற்றுமறியக்கூடாதென்பது அபாதிதமான உண்மை. அகண்டமாகிய ஆகாசத்தில் அத்திக்கனிகள்போல அந்தரத்தில் அமைந்து நியமனப்படி தன்தன் கதியில் சஞ்சரித்துக்கொண்டிருகின்ற கிரஹ நக்ஷத்திராதி அண்டகோடிகளின் அளவு கதி முதலியவற்றை அறிவிகின்ற கோள ஞானமும், அவரது சக்தியை அளவுபடித்தக் கூடாததாகவிருக்கிறது. வஸ்து தத்துவஞானத்தின்

மூலமாகவும், அவரது ஞானத்திற்கு எல்லை ஏற்படவில்லை. எதனாலும் அவரது கருணைக்குக்கரை காண்கிலம். நமது ஆராய்ச்சியின் அளவுக்குத்தக்கபடி அவரைபபற்றிய நமது ஞானம், அதிகப்படுகின்றதேயன்றி, முற்றுப்பெற வில்லை

கானமார்க்கத்தில் விளங்கும் அவரது ஞாகசக்தியாகிகள் எப்படி தூர வீக்ஷணி (Telescope) நிர்மாணம் செய்யப்படாதபோது அளவிடக்கூடாதவை யாயிருந்தனவோ, அப்படிதான் அந்த மஹாயந்திரம் உண்டான இக்காலத்திலு மிருக்கின்றன. ஆனால், பேமெண்மெலில்; அக்காலதைவிட இக்காலத் தில் இந்த அருமையான கருவி ன் உதவியால் நிரக உபக்கிரஹ தூமகேதாதி உத்பாத மூகலியவற்றின் ஸங்க்யாதிகள் அதிகமாகத் தெரியவருதலின், அந்த அளவுக்குத்தக்கபடி அவரது கிபாக சக்தி முதலியன அதிகமாகத்தெரிய வந்ததென்பதேயன்றி முற்றும் தெரியவந்ததென்பதன்று. இவ்வாறே இந்த யந்திரம் இன்னும் சீர்பட சீர்படக் கோள மூலமாய்ச் சடவுள் சம்பந்தமான ஞானம் மேலுமேலும் விருத்தியாகுமேயன்றி முற்றுப்பெறாது. எப்படி தூர வீக்ஷணி, நபோமண்டலத்திலுள்ள அகணிதாண்ட ஜாலங்களின் மூலமாய் அண்ணலின் அபரிமேய ஸ்வரூபத்தைத் தன்னுலியன்றமட்டும் விளக்குகின் றதோ, அப்படியே சூக்ஷ்மவீக்ஷணியும் (Microscope) நமக்கு அதிக சமீபமான இடங்களிலும், அதிவிசித்ரமாகிய கவுசலத்தோடுங்கூடிய எண்ணிறைந்தப் படைப்பைக்காண்பித்து, அவரது அபரிச்சின்னத்தன்மையை ஓலடிகின்றது. எவ்வெவ்விடங்களோ முன்னர் உயிர்களற்ற சூந்யபரதேசங்களாக எண்ணியிருந் தனமோ, அவ்விடங்களிலெல்லாம் கோடிகோடி ஜீவராசிகள் சுகமாய் ஜீவித் ரித்துக்கொண்டிருப்பதைஇப்போது இந்த யந்திரத்தின்மூலமாய்க்காண்கிறோம். நாம் அதி பரிசுத்தமானதென்றும், சிறிதும் கல்மஷமற்றதென்றும் நினைத்துப் பானம்செய்கிற ஜலத்தில் ஒரு பிந்துவையெடுத்து இந்தக்கருவியினுல் பார்த்தா லும் அதில் விசித்ரவிசித்ரமாக எத்தனையோ பிராணிகள் சுகமாகவாழ்ந்திருத்தல் தென்படுகின்றன. மேலும் ஒவ்வோரிலை, பூ, கனி முதலியவற்றில் இந்த யந் திர பலத்தால் லக்ஷலக்ஷமாய் ஜந்து சமூகங்கள் இருத்தல் புலப்படுகின்றன.

மேற்குறித்த கருவியைக் கொண்டு கிரமப்படி யார்பார்த்தாலும் இந்த விசித்ரமான படைப்புகளெல்லாம் அவர்களுக்குத் தெரியும். கண்ணுடியினுல் புலப்படுகிற பொருள்களெல்லாம் பொய்யானுல் இந்தக்கருவிகளினுல் புலப்படு வதும் அப்படியேயாகலாம். இந்த யந்திரசக்தியெல்லாம் அதி சூக்ஷ்மமான வஸ்துவையும் அதனதன் உருவத்திற்குத்தக்க அளவு திருஷ்டிகோசரமாக்குவ தேயன்றி இல்லாததை இருப்பதாகக்காண்பிப்பதன்று. தூரவீக்ஷணியைப் பற்றி முன் குறிக்கப்பட்டதெல்லாம் இதற்குமொக்கும். ஜடதத்தவவித்தையும் இப்படியே உபயோகமாகிறது. அதுபயோகிகளாக முன்பு எண்ணப்பட்டிருந்த அநேக் இயற்கை செயற்கைப்பொருள்களிடத்திலும் இப்பொழுது இந்தக் கல்வியின் வியாபகத்தால் அற்புதமாகிய அநேக நற்குணங்கள் தோன்றி நம்மை ஆச்சர்யத்தில் அமிழ்த்துகின்றன. முன்பு ஒரு கன்மையும் உடையனவாக நமக்குத்தோன்றுமலிருந்த கொடிகள், செடிகள் முதலியவை அநேக உபகார சா தனங்களாயிருப்பது காத ரூப தத்தவதூலால் தெரியவந்து, கிருதக்ஞதா ஜலம் நம்முள்ளங்களில் சுரந்து அந்த கன்மைகளை உத்தேசித்துப் பெருஉட்புண் அவற்றைப் படைத்த பேரறிவினையுடைய கடவுளினது பாதகமலங்களுக்குப் பாத்யமாகச் செல்லுகின்றது. எவற்றை நமக்குக் கெடுதி விளைவிப்பதாக

முன் நினைத்தோமோ, அவை இப்பொழுது இவ்வாராய்ச்சியினால் சஞ்சீவியைப் போலக் காணப்படுகின்றன. இவ்வஸ்து தத்துவ விளக்கத்தால் சாமான்யப் பொருள்களும் நமக்கெவ்வளவோ மநோபகாரமாகின்றன! எத்தனை கஷ்டங்களையும் துயரங்களையும் தவிர்த்துச் சுகத்தை உண்டாக்குகின்றன! இவற்றிலெல்லாம் இந்த நற்குணங்களை அமைத்தவர் கடவுளே. இத்தன்மைகளை முன்னறியாததும், யாவுமறிந்தவர்போலிவற்றைத் தீமைகளாகப்பாவித்து பலவித குத்சித மதங்களுக்கிடங்கொடுத்ததும் நமது மடமையேயன்றி வேறன்று. சாதாரணமான பொருள்களாகிய நீர், நெருப்பு, முதலியவை புகைக்கப்பல் புகைவண்டி முதலானதுகளைப்போன்ற பரோபகாரமாகிய காரியங்களுக்குத்தவறென்று மூனபு யாருக்குத்தெரியும்? சாதாரண மண்முதலியவைகளில் குளோப்பு, லண்டர் முதலிய மிகவும் ரம்யமானதும் அதிக விலைபெற்றதுமான பொருள்களை அமைப்பதற்குபயோகமாகத்தக்க தன்மை இருக்கிறதென்பதை யார் முன் அறிந்திருந்தார்? இதை எல்லாம் அறிந்து அமைத்தவைத்தவர் கருணைக்கடலாகிய வள்ளலொருவரே. மனிதனது ஞானம் விருத்தி அடைய அடைய எவ்வளவு ஈச்வரனது ஞானநோக்கமும், பலசெய்கையும், அருட்குறிப்பும் வெளிப்பட்டதோ, வெளிப்படுகின்றதோ, வெளிப்படுமோ அதை அநேககோடி வருஷம் அநேககோடி நாவுகளுடன் கோஷிக்கினும் அது நிறைவேறுவதன்று. மேலும், எக்காலத்திலும் எவராலும் அவற்றை அளவுபடுத்தியறிய முடியாது. ஆகையால் கடவுளினது அறிவு, வல்லமை, அருள் இவைகளுக்கு அளவில்லையென்பது நிர்விவாதமாய்ச் சித்தாந்தப்படுகிறது. அவரை அப்ரமேயரென்றும் பூரணரென்றும் நிஸ்ஸந்தேகமாகச் சொல்லலாம். அவரை வேறுவிதமாகச் சொல்ல நமக்குக்தியிலலை. சொல்வதற்கு நியாயமுமிடந்ததராது. அவர் எப்பொழுதும் தனது மகிமையிலேயே பூரணராக விளங்கிக்கொண்டிருக்கிறார். மனிதன் ஒருகாலத்தில் அறிவிலியாயும் மற்றொருகாலத்தில் அறிஞனாயும் இருப்பதைப்போலவன்றுஅவரது தன்மை. அவர் எப்பொழுதும் ஞானமுடையவர், எல்லா ஞானமுமுடையவர், நிர் விகாரர். அவர் ஆதிமத்யாந்தரஹிதர், அகண்டர், பூரணர், அவரது தன்மைக்கு விருத்திக்ஷயங்களில்லை. அவர் அநிர்வாச்யர், அப்ரமேயர். ஆகவே,—

சூரிய சந்திராதிகளின் ஒளியினாலும் கடவுள் விளக்கப்படமாட்டார். ஆத்மாவினது ஞான ஒளியினால் உன்பார்வையில் அவர் விளக்கப்படுகிறார். உலகம் யாவும் தாமாக விளங்குகிற அத்தப்பரமேச்வரனது விளக்கத்தினால் பின் பிரகாசிப்பதாகி விளக்கத்தைப்பெறுகிறது. அவரைவிட்டு இவைப்பிரிந்ததாயின் கசித்துப்போகும்.

Him neither the sun manifesteh, nor the moon, nor the stars, nor these lightnings, much less fire, but all shine through Him the all-radiant; all these shine through His Light.

(75) சாந்தோக்கிய உபநிஷத்து

8-வது பிரபாடகம் 3-வது கண்டம் 4-வது வாக்கியம்.

தஸ்யவறவா ஏதஸ்யப்ரஹ்மணோ நாமஸத்யம்;
நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம்
நிரஞ்ஜநம்; அம்ருதஸ்யபரம்ஸேதும்
தக்தேந்தனமிவாநலம்.

பொழிப்புரை.

அப்படிப்பட்ட இந்தப்பிரம்மத்தின்பெயர் ஸத்தியம்; அவர் நிரவயவர் நிஷ்கிரியர், சாந்தர்; அவர் அனிந்தநீயர், நிர்லிப்தர் முக்தி க்குச்சிறந்த ஸேதுவைப்போன்றவர். மேலும் கொளுத்தப்பட்ட கட்டையிலிருந்து வெளிப்படுகிற தீயைப்போல ஸ்வப்பிரகாஸர்.

விசேஷ உரை.

மிக்க தூரத்திலிருப்பவரும், மிகவருகிலிருப்பவரும், யாவற்றிலும் நிறைந்த வருமாகிய அப்படிப்பட்ட இந்த பிரம்மத்தினதுபெயர் ஸத்தியம்; ஆனதால் அவர் ஸத்தியஸ்வரூபி. அந்த ஸத்தியஸ்வரூபரைப் பற்றிக்கொண்டே இவ்வுலகம் யாவும் ஸத்தியமாகவிருக்கின்றது. அவர் ஸத்தியத்திற்கு ஸத்தியம், பிராணத்திற்குப்பிராணம், ஞானத்திற்கு ஞானம், ஆன்மாவுக்கு ஆன்மா,

அவர் ஒன்றுகிய பிரக்கியாகுகர்; அவருக்கு அவயவமில்லை, அவருக்கு ஓர் பிரிவுமில்லை, அளவுமில்லை. அவர் நன்னெக்கமுடைய மாற்றக்கூடாத நியமங்களினத்தையும் ஏற்படுத்திக்கொண்டு இவ்வுலகமாகிய அரசை நடத்திவருகிறார். எல்லாம் வல்லவரும், யாவற்றையுமறிந்தவருமாகிய அத்தப்பூரணர் இவ்வுலக காரியங்களை நிர்வஹித்தற்பொருட்டு யாரிடத்தில் அல்லது எதனிடத்தில் எந்தச் செய்கையின் பலனைவைத்தாரோ, அவர் அல்லது அது அவற்றைத்தானுள்ளள வும் நடத்திவருகின்றது; அவர் யாவற்றிற்கும் தலைவராகி நியந்தாவாக எங்கும் வியாபித்திருக்கின்றார். அவரது இயற்கை நியமங்களுக்குள்ளாகி காலத்தில் சூரியபிம்பம் உதயமாகின்றது; மேகம் மழையைப்பொழிகின்றது. மரங்கள் பலனைத்தருகின்றன; மேலும் அவரது தரும நியம ஸாஸனத்தில் மனிதர்கள் சுவாதீனர்களாகி துர்மார்க்கத்தில் சென்றால் தருமதண்டனையாகிய பாபத்தி னல் வரும் இயற்கையான அனுதாபத்தில் வருந்துகிறார்கள். அவரது கர ணைடைந்து பாவத்தைவிட்டு நீங்கி காப்பைப் பெறுகின்றனர், புண்ணியா னுஷ்டானத்தைச்செய்து தருமத்தின் பாலுகிய ஆதாகாந்தத்தினால் பவித்திரர் களாகின்றனர்; பவித்திரர்களாகி அந்தப் பவித்திரஸ்வரூபனை அடைந்து உலகக்கட்டுப்பாட்டை விட்டு நீங்கி முக்திபெற்று மேலான பதவியையடை கின்றனர். அவர் தானுக ஒருகாரியத்தையும் செய்யவேண்டியதில்லை. அவர் தானுக ஒரு வருத்தத்தையும் வாங்கிக்கொள்ள வேண்டியதில்லை; அவர் நிஷ் கிரியர், சாந்தர், அவரது இச்சாமாத்திரத்தில் இவ்வுலகம் யாவும் உண்டாயிற்று; மேலும் அவர் ஒருவரது இச்சைகுட்பட்டு யாவும் சேர்ந்து அசித்துப்பொருள் கள் கட்டுப்பட்ட தன்மையினாலும், சித்துப்பொருள்கள் ஸ்வாதீனத்தன்மை

யிருலும் அவரது ஆச்சியாகைங்கரியத்தைப் புரிகின்றன. அவர் இவ்வுலகத்தின் தலைவர். ஆனல் இவ்வுலகத்திற்சிதர்; அவர் ஒரு உலகச்செய்கையிலும் ஸம்பந்தப்பட்டவரன்று; அவர் நிரஞ்சனர், நிர்லிப்தர். அவர் பூரணஸ்வரூபர், அவரது ஸ்வரூபத்தில் குற்றமில்லை, அவர் நிரவத்தியர், அநிந்தனீயர். அந்த அழிவற்றவரது சரணடைந்தால்தான் அவரையடையலாகும்; அவரையடைந்தாற்றான் மிருத்யுபயம் நில்லாது, அவர் அழிவற்றபதவிக்குச்சிறந்த ஸோபானவு, யார் அவரை ஞானக்கண்ணினல் பார்க்கப்பெறுகின்றனரோ, அவர்கள் அவரைச்சுடர்விட்டெறிகிற நீயைப்போல அவர் எங்கும் விளங்குகிறதைக் காண்கிறார்கள்.

THE name of God is Truth. He is Formless, tranquit, blamless, free, and devoid of action; Action like created beings. He is the bridge to immortality, and conspicious as the flame of blazing fuel.

---

(76). தைத்திரிய உபநிஷத்து

ஆநந்தவல்லி 1-வது அநுவாகம் 1-வது வாகுயம்.

ஸதயம் ஜ்ஞானமநந்தம் ப்ரஹ்மயோ வேதநிஹிதம்
குஹாயாம் பரமேவ்யோமன்; ஸோச்நுதேஸர்வான்
காமான் ஸஹ ப்ரம்மணா விபஸ்சிதா.

பொழிப்புரை.

ஸத்தியஸ்வரூபியும் ஞானஸ்வரூபியும் முடிவற்றவருமான பிரமத்தைச்சிறந்த தேகாகாசத்தில ஆதமாவினிடத்திலிருப்பதாக யார் அறிகின்றரோ அவர் எல்லாமறிந்த பிரமத்துடன் ஸகல போகங்களையுமனுபவிக்கிறார்.

விசேஷ உரை.

பரமேசுவரரே ஸத்தியத்திற்கு மூலம், அவரிடத்திலிருந்தே எல்லா உண்மைகளும் உண்டாகி அவரைப்பற்றிக்கொண்டேயிருக்கின்றன. அவர் ஆதி ஸத்தியர், அநாதிஸத்தியர், சிரேஷ்டமாகிய ஸத்தியர், நித்தியமாகிய ஸத்தியர், ஸநாதனர்

எது தன்னைத்தான் அறியவில்லையோ அது ஜடப்பொருள்; மேலும், எது தன்னைத்தான் அறிகின்றதோ அது சித்சுப்பொருள். மண், கல, உலோகம், மரம் முதலியவை தம்மைத்தாம் அறிவதில்லை. இத்தக்காரணத்தினல் இவையாவும் ஜடபொருள்கள்; ஜீவாத்துமா பாமாத்துமாக்கள் தம்மையும் தமகுவேறானவற்றையும் அறிகின்றன, இந்த எகவினல் அவை ஞானப்பொருள்கள்; ஆனல், அவற்றிற்குள் தாமாகவிளங்கும் பரமாத்துமாவினது அப்ரிமேயமான இயற்கை ஞானத்துடன் ஜீவாத்துமாவினது பரிமிதமாகிய அல்ப ஞானத்தை ஒப்பிட்டு முடியாது. பரிமிதமாகிய ஜீவாத்துமாவுக்கு ஞானமுமிருக்கின்றது, அஞ்ஞானமுமிருக்கின்றது; மேலும், கலக்கம், தவறல், ஆசை, இவைகளுமிருக்கின்றன.

ஆனல் பெருமையுள்ள பரமாத்துமாவுக்கோ கலக்கம், தவறல், ஆசை, அஞ்ஞானம் இவைகளில்லை. அவர் சுத்த புத்த முக்தத்தன்மையுடையவர், அவர் நிறைந்த ஞானமுடையவர்; அவர் எல்லாப்பொருள்களுக்கும் வேண்டிய அவ்வளவு அதற்குறிய பண்பையும், தன்மையையும் கொடுத்து அவற்றினது மிக மறைவான சத்தவங்களினத்தையும் நன்றாகவும் விசேஷமாகவும் தெரிந்துகொண்டிருக்கிறார். ஆனதால் கேவலம் அவர் ஒருவரே ஞானஸ்வரூபி; ஜீவாத்துமாவினது ஞானம் அவரது ஞானத்தின் விளக்கமாத்திரமாகவிருக்கின்றது.

அவர் இறுதியற்றவர்; அவரது ஞானத்திற்கு இறுதியில்லை, வல்லமைக்கு இறுதியில்லை, அருளுக்கு இறுதியில்லை, அவருக்கு இடத்திலும் இறுதியில்லை, காலத்திலும் இறுதியில்லை.

யார் இந்த ஸத்தியஸ்வரூபரும் ஞானஸ்வரூபரும் முடிவற்றவருமான பிரமத்தை மிகச்சமீபமாக தமக்குள் நேராக அறிகின்றாரோ; மேலும், அவரது கருத்துடன் தமது கருத்தைச்சேர்க்கின்றாரோ, அவர் அந்தப் பரமாத்துமாவோடு விரும்பத்தக்க எல்லா விஷயங்களையுமனுபவிக்கிறார். சிரேஷ்டமான பிதாவாகிய பரமேசுவரர், எவ்விதமான உதாரநோக்கத்துடன் உலகத்தைப்படைத்தாரோ; மேலும், அதியல்பமாகிய சிருமிவரையில் யாவற்றினுடைய நன்மையையும் கருதுகிறாரோ அவரும் அவ்வித நோக்கத்திற்கும் கருத்திற்கும் இசைய நடக்கிறார். யாதுயாது பரமேசுவரனது திருவுள்ளத்துக்கிசைந்ததோ, அதுதான் அவரது விருப்பம்; மேலும், அதுதான் அவரது காரியம். பரமேசுவரனது திருவுள்ளப்படி அவசியம் நிறைவேறும். ஆனதால் அவரது கருத்தை அனுசரித்தவர்களது விருப்பமும் வித்திபெறும். ஆகையாற்றான் அப்படிப்பட்டவர்கள் விரும்பிய எல்லா விஷயங்களையும் பரமேசுவரனுடன் அனுபவிக்கின்றனர்; மேலும், விரும்பியதைப்பெற்று அவருடன் பின்செல்லுகிறவர்களாகி அவரது தாய்மையான ஸுகவாஸத்திலுல் திருப்தியடைந்திருக்கின்றனர்.

He, who knoweth God the True, the Intelligent, and the infinite as dwelling in his understanding that is in the most superior part of his body, enjoyeth all bliss with the all Intelligent God.

(77). புஹதாரணிய உபநிஷத்து

3-வது அத்தியாயம் 4-வது பிரமாணம் 8-வது வாக்கியம்.

ததேததுப்ரேயः புத்ராத் ப்ரேயோவித்தாத்
ப்ரேயோ அந்யஸ்மாத் ஸர்வஸ்மாத்
அந்தரதரம் யதயமாத்மா.

பொழிப்புரை.

யாவற்றிற்கும் அதிக நெருங்கியவராயிருக்கிற எந்தப்பரமாத்துமாவோ அந்த இவர் புத்திரனிடவும் பிரியர், பொருளிடவும் பிரியர், வேறு யாவற்றைவிடவும் பிரியர்.

விசேஷ உரை.

அனைவிட நெருங்கிய மிக அன்புள்ள நண்பர் நமக்கு வேறுயாருமில்லை.

Dearer than son, dearer than wealth, dearer than all other things, is the Being who dwelleth deepest within.

---

(78). புஹதாரணிய உபநிஷத்து

நி-வது அத்தியாயம் அ-வது பிரமாணம் கக-வது வாக்கியம்.

தத்வா ஏததக்ஷரம் கார்க்ய த்ருஷ்டம் த்ருஷ்டு
ச்ருதம் ச்ரோத்ருமதம் மந்த்ருவிஜ்ஞாதம்
விஜ்ஞாத்ரு தஸ்மிந்நுகல்வக்ஷரேகார்க்யாகாச
ஓதஸ்ச்ப்ரோதஸ்ச.

பொழிப்புரை.

ஓ கார்க்கி! இவ்வழிவற்ற புருஷர் பார்வைக்குப் புலப்படார், பார்ப்பார், செவிக்குப் புலப்படமாட்டார், கேட்பார், நினைவுக்கு அகப்படார், தான் நினைப்பார், இவ்வழிவற்ற புருஷரிடத்தில ஓ கார்க்கி! ஆகாயம் ஓதப்புரோதயமாகப் பரவியிருக்கின்றது.

விசேஷ உரை.

நாம் பார்ப்பது கேட்பது நினைப்பது முதலிய சகல செய்கைகளால் எத்தச்சிறிது விஷயங்களைத் தெரிந்துகொள்ளமாட்டுவோமோ அவற்றை அவர் அறிந்துகொள்ளமாட்டுவார். மேலும் நாம் எவற்றையறிய நமக்கு வல்லமை யில்லையோ, அவற்றையும் அறிவார். ஆனல் அவர் யாருடையவும் பார்வை கேள்வி மநச புத்தி இவைகளுக்கு விஷயமாகார். அவர் தானேத்தான் எப்படி அறிகிறாரோ அப்படி யாரும் அவரை அறியவல்லவரல்லர். அளவற்ற ஸ்வரூ பத்தை புத்தி அளவுசெய்து அறியவல்லதன்று. இவ்வெல்லையற்ற அழிவற்ற புருஷனல் ஆகாசம் வியாபிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஸர்வவியாபியாகிய பரமேசுவரன் இல்லாத இடமில்லை.

This Imperishable being, O Gargi! being Himself unseen seeth, being Himself unheard, heareth, being Himself unconceived, conceiveth, being Himself unknown knoweth. It is by Him O Gargi, all space is pervaded.

---

(79). கடோபநிஷத்து

உ-வது வல்லி எ-வது வாக்கியம்.

ஸ்ரவணாயாபி பஹுபிர்யோ நலப்ய:
ச்ருண்வந்தோபி பஹவோயந்நவித்யு:;

ஆச்சர்யோவக்தா குசலோ ஆஸ்யபலப்தா
ஆச்சர்யோ க்ஞாதா குசலானுசிஷ்டஃ.

பொழிப்புரை.

கேள்வியில்லாததினாலும் யார் பலரால் அறியப்படவில்லையோ, கேள்வியடைந்தும் யாரை அநேகர் அறியக்கூடாமலிருக்கின்றனரோ, அப்படிப்பட்டவர் விஷயமான ஞானத்தையுபதேசிக்கவல்லவர் மிகவுமரிது. அவரையடைபவர் மிக நிபுணர், அவர்விஷயமாக விசேஷமாகக்கற்பிக்கப்பட்ட ஞானியும் மிகவரிது.

விசேஷ உரை.

பலர் பரமேசுவரனது உண்மையான தன்மையைப்பற்றியும், அவரது உண்மையான கருத்தைப்பற்றியும், உபதேசத்தைப் பெறுதலால் அவ்விஷயமான ஞானத்தையடையக்கூடாமல் போகின்றனர். புத்திவிருத்திகள் பரிசுத்தமாகாவிடின் பரமேசுவரனது தன்மையும், அவரது திருஉள்ளமும் நன்முகவறிதல் கூடாது. இதனுற்றான் பரமாத்துமதத்துவஞானிகள் எல்லாத்தேயங்களிலும் எல்லா ஜாதியாருள்ளும் மிகச்சிறிய எண்ணினராகவிருக்கின்றனர். எல்ல ஞானமும் உள்ளன்புமிருப்பவர்களன்றி அவரையொருவருமறியவல்லவரல்லர். மேலும் பரிசுத்தமான உள்ளத்தையுடைய பரமாத்தும ஞானிகளன்றி அவர் விஷயமாகவுபதேசிக்க யாரும் வல்லவரல்லர். அவரைப்பற்றிச் சொல்பவருமரிது; அவரையடைபவருமரிது; ஆனதால் பரமாத்துமஞானம் விசேஷ ஞானதால் பெறக்கூடியது. அவரையறியவேண்டுமென்று உள்ளுறவிச்சையும் உண்மையான முயற்சியுமிராவிடின் அவரை அறியமுடியாது. அவரைக்குருத்தில் நிறுத்தம் சாதனை செய்யவும் முடியாது.

Of Him who is not attained by many for want of oppertunities to hear about Him, and Whom many even hearing about Him comperhend not, rare is the Describer, rare the knower well - instructed. The able only can know Him.

(80.) தைதிரிய உபநிஷத்து
7-வது அனுவாகம் 1-வது வாக்கியம்.

கோஹ்யேவான்யாத் கஃ ப்ராண்யாத் யதேஷ ஆகாஶ ஆனந்தோ நஸ்யாத் ஏஷஹ்யேவானந்தயாதி.

பொழிப்புரை.

வெளியில் ஆநந்தஸ்வரூபமுகிய பரமாத்துமா இராவிடில் யாருக்கு சரீர அசைவுண்டாகும்? யார் உயிர்வாழ்வர்? இவரே அவரது செய்கைக்குத்தக்க இன்பத்தைத் தருகிறார்.

விசேஷ உரை.

பரமாத்மாவிருப்பதினாலேயே இந்த ஒப்பற்ற உலகம் உண்டாயிற்று. மேலும் உயிர்களனைத்தும உயிர்வாழ்வதற்குரிய உபகரணங்களைப்பெற்றிருக்கின்றன. அவரிராவிடில் இவையொன்றும் ஆகா. யாவற்றையும் படைத்து, யாவற்றிற்கும் இருப்பிடமாகி, நன்மையையே ஸ்வரூபமாகக்கொண்ட பரமேசுவரன் இவ்வுலகத்தைப் படைக்காமலும், இவ்விதநியமங்களைக் கிரமமாயேற்படுத்தாமலுமிருக்கின், இம்மண்ணுலகமேது? இவ்விண்ணுலகமேது? இவ்வியங்கியற்கைப்பொருளனைத்துமேது? அவற்றின் கிரியாகலாபங்களும், சுகசவுபாக்கியங்களுமெவ்விடம்? யாவருக்கும் இன்பத்தைத்தருபவர் அவரே. நன்மையையே வடிவாகக்கொண்டு யாவையும் காக்குமீசன் நம்மில் யாவருடைய சுகத்தையுங் கருதி எதெதில் எவ்வகையாகிய சுகத்தை வைத்தனரோ, நாம் அததில் அந்தந்த விதமான சுகத்தை அடைந்து கிருதார்த்தர்களாகிறோம். உலகத்தின் அழகைப்பார்த்தல், உண்பதற்கினிய அந்தரசத்தைப்பருகுதல், தாய்தந்தையரது அன்பையும் உறவினரது நட்பையும் பெறுதல், கல்விகற்றல், தருமம்புரிதல் இவைமுதலியவைகளில் எந்தெந்த மார்க்கத்தில் எந்தெந்தவிதமாகச்சுகத்தையடைகின்றோமோ அவையாவும் அவருடைய பிரசாதத்தினால். ஆ அ! அவரது கருணை என்னே! அவர் கேவலம் விஷயங்களின் மூலமாய் பலவிதமான இன்பங்களைத்தந்து நம்மைப்பாராமல் விட்டுவிடவில்லை. நாம் விரும்பின் அவர் தன்னையே நமக்குத்தந்து நமதுள்ளத்தைக்குளிரவைத்து, கருத்தை நிறைவேற்றி ஆசையைத்தணியச்செய்கிறார். சாந்தமான இயற்கையையுடைய விவேகிகள் விஷயசுகத்தில் திருத்தியடையாமல் ஒவ்வொரு கணமும் அவரையடைய விரும்புகின்றனர். அவர் விரைவில் அவர்களது உள்ளத்தில் குடிபுகுந்து அவர்களது கண்களிரண்டிலும் சோகத்தினால் உருகிய ஜலத்தைத்துடைத்து அமுதமழைபொழிந்து உலர்ந்திருக்கும் அவர்களது உள்ளமாகிய தாமரையை மலரச்செய்கின்றார். ஆஹா! யார் ஒரு கணப்பொழுதேனும் அமுதவடிவனுகிய அத்தப்பூரணபுருஷனை தம்முள்ளத்தில் நேரால் அடைந்து குற்றமற்ற ஆனந்தத்தைப்பெறுகின்றனரோ, அவர்களே அவரது மகிமையை அறிகின்றனர்.

WHO would have lived, who would have moved, if in all pace, He the Blissful, were not? It is He that maketh happy.

☞ இது வரையில் எடுத்துக்காட்டிய உபநிஷத்துக்களால் பரப்பிரம்மஸ்வரூப லக்ஷணங்கள் விவரமாகும். இனி இப்படிப்பட்ட பரப்பிரம்மத்தை அடைபவர்களுக்கே இகபரசுகம் கிடைக்குமென்று கோஷிக்கின்ற உபநிஷத்துகளில் சிலவற்றை இதனடியில் காட்டுகின்றனம்.

(81). தைத்திரிய உபநிஷத்து

ஆனந்தவல்லி 7-வது அநுவாகம் 1-வதுவாக்கியம்

ரஸோவைஸ:; ரஸக்ம் ஹ்யேவாயம்
லப்த்வாநந்தீபவதி.

பொழிப்புரை.

பரமாத்மா ஆநந்தகாரணன், ஜீவாத்மா ஆநந்த காரண னேயடைந்து ஆநந்தத்தைப் பெறுகின்றது.

விசேஷ உரை.

பரமாத்துமா அபிராகிருதமான வஸ்து. இந்த அபிராகிருத வஸ்துவிலிருந்து ஜனித்த ஜீவாத்துமாவும் அபிராகிருதவஸ்து. ஆகவே, பரமாத்துமாவாகிய அபிராகிருத வஸ்துவிடத்தில், ஜீவாத்துமாவாகிய அபிராகிருத வஸ்துவும் சேர்ந்தால்மாத்திரம் அது தன்மயமாகி பேரானந்தத்தையடையுமேயன்றி உலக ஆசாபாஸ அர்ச்சைகளிற்சேர்வதினல் புனிதமாகி பேராநந்தத்தைப்பெறுது

எப்படியெனில்

அக்கினியிலிருந்து பிறக்கும் அடுப்புக்கரியின் வருணம் கறுப்பு, அதை சிவப்பு பச்சைமுதலான மற்றவருணங்களுடன் கலக்கினல், அந்த சிவப்பு பச்சைமுதலான வருணங்களையும் கருப்பாக்கி அந்தக்கரியும் முன்போல கறுப்பாகவே இருக்கும். இப்படி கறுப்பாகஇருக்கும் கரியை அதன்பிறப்பிடமாகிய அக்கினியில் போட்டால், உடனே அதன் கறுப்பு வருணமாறி அக்கினிமயமாவது பிரதியக்ஷம்; அதுபோலவே அபிராகிருதமாகிய ஜீவாத்துமாவும் அபிராகிருதமாகிய பரமாத்துமாவையடைந்தாலன்றி பேராநந்தத்தைப்பெற வேறுவழியில்லை. ஆகவே,

எந்த ஜீவன் நன்மையே வடிவாகக்கொண்ட அவரது பிரேமரஸத்தை யடைந்து பேராநந்தத்தில் மூழ்கியிருக்கின்றதோ, அந்த ஜீவனது வாக்கு அவரை ரஸஸ்வரூபனென்று சொல்லி எழுகின்றது.

He is an object of enjoyment. Obtaining him who is the object of enjoyment, one becometh happy.

(82). கடோபநிஷதது

4-வது வல்லி 2-வது வாக்கியம்.

பாச: காமாநநுயந்தி பாலாஸ்தேம்ருத்யோர் யந்தி விததஸ்யபாசம்; அததீரா அம்ருதத்வம் விதித்வாத்ருவமத்ருவேஷ்விஹ நப்ரார்தயந்தே.

பொழிப்புரை.

சிற்றறிவினரானவரும் புறம்பான விஷயங்களில் விருப்பமுண்டையவர்களாகி மிருத்யுவின் விஸ்தீரணமான பாசத்தில்

கட்டுப்படுகின்றனர். விவேகிகள் நித்தியமாகிய அழிவற்ற வஸ்துவையறிந்து அநித்தியமான பதார்த்தங்களுக்குள் ஒன்றையும் விரும்புவதில்லை.

விசேஷ உரை.

யார் வெளி விஷயங்களை மாத்திரம் பார்க்கின்றனரோ, யார் தமது ஸ்வரூபத்தையும், தமதந்தராத்மாவின் ஸ்வரூபத்தையும் அறியக்கூடாதவர்களாகவிருக்கின்றனரோ, அவர்கள் வெளிவிஷயங்களில் விருப்பமுள்ளவர்களாகி தமது பிரவிருத்திகளுக்கே அடிமைகளாகி விஸ்தீரணமாகிய மிருத்யு பாசத்தில் கட்டுப்படுகின்றனர். விஸ்தீரணமாகிய மிருத்யு வென்பது இந்தச் சரீரத்தின் சரீரித்தன்மையுமாம். மேலும் மிருத்யுவின் பாசமென்பது இந்தக் கரிய மரண தொடர்ச்சியுடன் கூடிய இயற்கை நியமனங்கள். ஜடத்தன்மையும், கரிய காரண தொடர்ச்சியுடன் கூடிய பிராகிருதிக நியமங்களாகிய மிருத்யுபாசத்தில் கட்டுப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சிறந்த மானிடப்பிறவி பிறந்தும் யார் ஸம்ஸாரத்தினது விஷயவிசாரணையில் மூழ்கி மயக்கப்பட்டு பிரவர்த்திக்கிற சிறுவர்களைப்போல வியவஹரிக்கின்றனரோ அவர்கள் மிருத்யுபாசத்தில் கட்டுப்பட்டவர்களாகி தமது ஸ்வதீனத்தை இழந்து பிறருடைய வசப்பட்டவர்களாகி பரமபதத்திற்கும் சரமகதிக்கும் வெகுதூரத்தில் இருந்து அழிந்து அழிவற்ற தன்மையுடையவருடன் ஆத்ம விஷயத்தினால் செயற்கையறிந்து அநித்தியமான சம்சாரத்திற்குள் ஒரு பற்றும் வைப்பதில்லை அவர்கள் தருமத்தின் நியமத்தை அனுசரித்து கடைசி பிரயோஜனமாக வசப்படுதற்கென்றே உலகத்தந்தையினது திருவுள்ளத்திற்கு உகப்பான விஷயங்களை முடிக்கக்கூடுமானற்றன் முற்றும் திருத்தியடைந்திருக்கின்றனர்.

The puerile pursue external objects and are entangled in the wide-spread meshes of death. (1) The wise there-fore knowing life eternal, want not any among things perishable in the world. (2) Spiritual death.

---

(83). புருஹூதகாணிய உபநிஷத்து

கூ-வது அத்தியாயம் ச-வது பிரமாணம் அ-வது வாக்கியம்.

ஸயோந்யாமாகமத: ப்ரியம் ப்ருவாணம்
பூயாந ப்ரியம்மோகஸதிதீதி ஈச்வரோஹ
தைவவஹீயாது.

பொழிப்புரை.

யார் பரமாத்துமாவை விட வேறுனதைப் பிரியமானதென்று சொல்லுகிறாரோ அவரை நோக்கி பிரமப்பிரியவாதி உங்களுக்குப் பிரியமானது அழியுமென்று சொல்லுகிறார். அவருக்

கிப்படி சொல்ல அதிகாரமுண்டு. உண்மையில் அவர் சொல்லு கிறபடியே ஆகின்றது.

விசேஷ உரை.

மக்கள் மனவி பொருள் சுற்றத்தார் யாவும் அநித்தியம். இந்த சம்சாரத் தினுடை சகல பிரியவஸ்துக்களிலிருந்தும் ஒரு காலத்திலில்லாவி டாலும் வேறொருகாலத்தில் நீங்கவேண்டிவரும், ஆதலால் யாவற்றைவிட அதிக நெருங் கியவரும் மிக அன்பிற்குரியவருமான பரமாத்மாவை விட்டு இம்மையிலும் மறுமையிலும் ஒருபொழுதும் நீங்குவதில்லை பரமாத்மாவுக்கு வேறுனதை அன்பிற்குரியதென்று யார் உரைக்கின்றனரோ அவர்புசிப்பது அவசியம் அழியுமென்னும் வாக்கியம் ஐயமற்றது விடயவிருப்பத்தில் விசேஷ மூடத் தன்மை பெற்றிருக்கிறவர்களுக்கும் இப்படி உபதேசிக்கவேண்டிய அதிகாரம் ஒவ்வொரு ஞானியாகிய பிரமோபாசகருக்குமுண்டு. மேலும் யார் அவருடைய உபதேசத்தைப் பெற்றுக்கொள்ளவில்லையோ அவருக்குத் தயரமுண்டாகின் றது. யாவருக்கும் அதிநெருங்கியவரும், நன்மையே வடிவாகக்கொண்டிருக் கிறவருமான பரமாத்மாவே யாவற்றிலும் அதிகப்பிரியமானவர், அவரிடத்து அன்புசெய்யின் அவரது அன்பிற்குரிய எல்லாவற்றினிடத்தும் அன்புசெய்தல் வேண்டும், மேலும் இவ்வுலக சம்சாரத்தின் நன்மையின் நிமித்தம் அவர் யாரா ரிடத்தில் மிகுந்த பிரீதியும் நட்பும் செய்யும்படி கட்டளையிட்டிருக்கின்றாரோ அவர்களிடத்தில் தகுந்த பிரீதியும் நட்பும் வைக்கவேண்டும். ஆனால் பரமாத் மாவினிடத்தில் தவிர வேறு யாதொரு பொருளினிடத்தில் அதிக அன்பு வைத்தல். அதில் மூழ்கிக்கிடப்பது தாட்சையுடன் கூடிய அன்பின் ஸ்வரூப மன்று.

To him who acknowledgeth any other as the object of his love than God, let him that loveth God say, "Your beloved shall perish", To tell this he has a right and his words shall come to pass.

---

(84). தைதிரிய உபநிஷத்து

ஆநந்தவல்லி 7-வது அனுவாகம் 2-வது வாக்கியம்.

யதாஹ்யேவைஷ ஏதஸ்மிந்நதரேச்யேஅ
நாத்ம்யேஅ நிருக்தேஅ நிலயநேஅ பயம் ப்ர
திஷ்டாம் விந்ததே; அதோ அபயம்கதோ பவதி

பொழிப்புரை.

வெளியிற்கிரியங்களுக்குத் தோன்றுதவரும், உடலற்றவரும் சொல்லுக்கடங்காதவரும், ஆதாரமற்றவருமாகிய பிரமத்தினிடத் தில் உபாசகன் எப்பொழுது பயமின்றி நியாநத்தினால் நிலைபெறு கிறானோ அப்பொழுதவன் பயமற்றவனாகிறான்.

விசேஷ உரை.

குழந்தைகளுக்கு அச்சமுண்டாயின், தாயின் மார்பையடைந்து அச்சத்தை நீக்கிக்கொள்வதுபோல நாம் அழுத வடிவனுகிய புருஷனது எங்கும் பரவியிருக்கிற மார்பைப் பற்றிக்கொண்டு கவலை மிகுதியாக நிறைந்த இந்த ஸம்ஸாரத்தின் கவலையை விட்டு காப்பையடைகிறோம், அப்பொழுது நாம் கவலையற்றவர்களாகி, தான் புலப்படாமல் யாவற்றையும் புலப்படுத்திக் கொள்ளுகிறவரும், தனக்கோராதாரமுமின்றி தான் யாவற்றிற்கும் ஆதாரமாயும் ஆநியமாயு மிருப்பவருமாகிய பரமேசுவரரொருவனையே கண்பரெனவும் துணைவரெனவும் அறிந்து அவரிடத்து நம்மை சமர்ப்பித்திருக்கிறோம். மேலும் அவரது கட்டளையின்படி செலலுகிறவர்களாகி விருப்பத்துடன் அவராற்காட்டப்பட்ட வழியில் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கிறோம்.

When, in this invisible, incorporeal, indifinable, and abodeless Being, one attaineth a station of fearlessness, he becometh devoid of fear.

---

(85). புரஹதாரணிய உபநிஷத்து

அ-வது பிரமாணம் 5-வது வாக்கியம்.

யோவாஏததக்ஷரம் கார்க்ய விதித்வாஸ்மால்லோகாத் ப்ரைதிஸகக்ருபண:; அத ஏத தக்ஷரம் கார்கி விதித்வாஸ்மால்லோகாத ப்ரைதிஸப்ராஹ்மண:.

பொழிப்புரை.

ஓ கார்க்கி! யார் இவ்வழிவற்ற புருஷனையறியாமல் இவ்வுலகத்தைவிட்டு நீங்குகின்றனரோ அவன் அதிதீனன். ஓ கார்க்கி! யார் இந்த அழிவற்ற புருஷனையறிந்து இவ்வுலகத்தைவிட்டு நீங்குகிறாரோ, அவர் பிராம்மணர்.

விசேஷ உரை.

பூமண்டலத்தில் எத்தனை உயிர்களிருக்கின்றனவோ, அவற்றில் மனிதனே பிரம ஞானத்தைப்பெறுதற்கு அதிகாரி. சிறப்புள்ள யாவற்றிலும் சிறந்த கடவுளையும், அவரால் நியமிக்கப்பட்ட தருமங்களின் தொகுப்பையும், அறியும் அதிகாரம் இருக்கிறதென்றே மனிதன் பெயருக்கு இவ்வளவு சிறப்பிருக்கின்றது, யார் இந்த மிகச்சிறந்த மனிதப்பிறப்பைப் பெற்றும், அவரை அறியக் கடமல் போகின்றனரோ அவர்களிலும் நிர்ப்பாக்கியர்கள் வேறு யாரிருக்கின்றனர்? மிகுந்த அன்பிற்குரிய கடவுளையடைந்து சொல்லிமுடியாவானந்தத்தை அனுபவித்தும், அச்சுவையைக் கிரகிக்கவும் யார் சக்தியற்றவனுகிறானே அவனிலும் தீனன் வேறு யாவன்? அவனே இரக்கத்துக்குப் பாத்திரனுகிய அதிதீனன், அவனது பிறப்பு பனுவைச்சுமக்கும் பசுபிறப்பு. மேலும், யார் அவரையறிந்து இவ்வுலகத்தைவிட்டு அப்புறப்படுகின்றனரோ; அவரே மிகுந்த பாக்கியவான், அவரே மனிதர்களுக்குள் சிறந்தவர், அவரே பிராம்மணர்.

He, O Gargi! who not knowing this imperishable Being, departeth from this world, is indeed an object of composision. But he O Gargi, who knowing this imperishable Being departeth from this world, belongeth to the holy class among men.

---

(86). புரஹதாரணிய உபநிஷத்து

கூ-வது அத்தியாயம் ச-வது பிராமணம் அ-வது வாக்கியம்.

ஆத்மானமேவ ப்ரியமுபாஸீத; ஸயஆத்மான மேவ ப்ரியமுபாஸ்தே நஹாஸ்ய ப்ரியம் ப் மாயுகம்பவதி.

பொழிப்புரை.

*பரமாத்துமாவை அன்பாக உபாசித்தல் வேண்டும். யார் பரமாத்துமாவை அன்பாக உபாசிக்கின்றாரோ அவருக்கன்பா னது(பரமாத்துமா) ஒருபோதும் அழிவதில்லை.

விசேஷ. உரை.

யார் நமது சரீரத்தாகிய நிலத்தில் அன்பென்னும் மலரின் அதிக அழகிய மொக்கையுண்டாக்கினாரோ, முயற்சியினால் அதை மலரச்செய்து அதனுலவரை அருச்சித்தல் வேண்டும். அழிவற்ற பரமேசுவரர் யாருக்குப் பிரியமானவரோ, அவருக்குப் பிரியமானது ஒருபொழுதும் அழிவதில்லை. அவருக்குப்பிரியமான கடவுளிடத்திலிருந்து அவர் எப்போதாயினும் பிரிவார்களென்பது சம்பவ மன்று.

God should be worshipped as an object of love. He who worshippeth this Being, as an object of love, the object of his love perisheth not.

(87.) சுவேதாசுவதர உபநிஷத்து

3-வது அத்தியாயம் 20-வது வாக்கியம்.

நாராயணம்

அநுவாகம் 1-வது வாக்கியம்.

அணோரணீயான் மஹதோமஹீயா நாத்மா குஹாயாம் நிஹிதோ அஸ்யஜந்தோ:, தமக்ரதும் பஸ்யதி வீதசோகோதாது ப்ரஸாதாந்மஹிமா நமீசம்.

பொழிப்புரை.

*பரமாத்துமா சிறிதிலும் சிறிது. பெரிதிலும் பெரிது.

அவர் உயிர்களினது உள்ளங்களில் உரைந்துகொண்டிருக்கிறார். துயரமற்றவர்கள் விஷயபோகவிருப்பமற்ற கடவுளையும், அவரது மகிமையையும் அவரது அருளால் பார்க்கின்றனர்.

விசேஷ உரை.

ஜீவாத்துமாவிலும் அவர் மிக சூக்குமமானவர், மேலும். எல்லையற்ற விசும்பிற்கும் அவர் பெரிதானவர்: அவரைப்பார்ப்பதற்கு தூரத்தில் செல்லவேண்டியதில்லை; அவர் நம்மிலும் நம்முள்ளத்திலும் கருத்திலும் குடியிருக்கிறார். அவர் போகவிருப்பமற்றவர், நித்திய திருத்திபெற்ற ஆநந்தஸ்வரூபி. எந்த அடியர் அவரைத்தரிசிக்கிறாரோ, அவருக்குப் பிறகு துயரம் உண்டாவதில்லை; அவரது அன்பில் மூழ்கினவருக்குப் பிறகு ஒரு குறைவும் இருப்பதில்லை.

He is subtler than the most subtle, greater than the most great, and is seated in the work of creatures. The man who seeth, through His grace, Him and His glory who is without worldly desires, grieveth not.

---

(88). ஈசோபநிஷத்து

6-வது வாக்கியம்.

யஸ்துஸர்வாணி பூதான்யாத்மந்யே
வாநுபஸ்யதி; ஸர்வபூதேஷு சாத்மாநந்த
தொநவிஜுகுப்ஸதே.

பொழிப்புரை.

யார் பரமாத்துமாவினிடத்தில எல்லாப் பொருள்களையும், எல்லாம்பொருள்களிடத்திலும் பரமாத்துமாவையும் பார்க்கின்றாரோ அவர் ஒருவரையும் அவமதிக்கார்.

விசேஷ உரை.

பரமாத்துமாவினிடத்தில் எல்லாப்பொருள்களும் நிலைபெற்றிருக்கின்றன; அவர் எல்லாப்பொருள்களுக்கும் ஆதாரமானவர். அவரைப்பற்றிக்கொண்டே யாவுமிருக்கின்றன. யார் பரமாதமாவை எல்லாப்பொருள்களுக்கும் ஆதாரமானவரென்றறிகிறாரோ; மேலும், எல்லாப்பொருள்களிடத்திலும் அவா வியாபித்திருத்தலைப் பார்க்கின்றாரோ அவர் பிறகு யாரையும் அவமதிக்கார். அவர் நாமனைவரும் அந்த நித்திய புருஷனது பிள்ளைகளெனப் பார்க்கிறார்; யாவற்றிற்கும் நியந்தாவாகிய அந்த உலகரக்ஷகனால் யாரும் அவமதிக்கப்படத்தக்கவரும், தள்ளப்படத்தக்கவரும் அல்லர்; ஆனதால் அவர் ஒருவரையும் அவமதிப்பதும் வெறுப்பதும் இல்லை. அவரவரது உயர்ந்த தாழ்ந்த குணங்களுக்குத் தக்கபடி யாராரிடத்தில் எப்படி எப்படி நடந்துக்கொள்ளவேண்டுமோ அந்தந்த விதமாக நடந்துக்கொள்ளுகிறார்.

He who seeth all in God and God in all, despiseth not any.

(89) சாந்தோக்கிய உபநிஷத்து

7-வது பிரபாடகம் 23-கண்டம் 1-வது வாக்கியம்.

யோவை பூமாதத் ஸுகம் நால்பேஸுகமஸ்தி;
பூமைவஸுகம் பூமாத்வேவ விஜிஜ்ஞாஸிதவ்யஃ.

பொழிப்புரை.

யார் மஹானே அவர் சுகரூபி, அற்பசுகமுடையவரன்று. மஹானே சுகரூபியானதால், சுகரூபியே அறியப்படத்தக்கவர்.

விசேஷ உரை.

மனிதர்களினது கருத்து பரிமிதமாகிய அற்பப்பொருள்களில் ஒருபொழுதும் சுகத்தை யடையமாட்டாது. மஹானுகிய பரமாத்துமாவிடத்தே நமது சுகம், அற்பவிஷயங்களில் சுகமில்லை. விஷய சுகங்களில் ஆன்மா திருத்தியடையாது. விடயசுகமனேத்தம் ஒரு கணப்பொழுதினது, மிகவும் அற்பமானது. சிறிது காலத்திலது தருமத்திற்கு அநுகூலமாம், சிறிது காலத்திலது பிரதிகூலம்; சிறிது காலத்திலது தள்ளத்தக்கது, சிறிது காலத்திலது கொள்ளத்தக்கது. மஹானுகிய ஈசுவரரே நமது திருத்திக்கு இடம், நமது பரிசுத்தமாகிய சாந்தி நிகேதகம்; ஆனதால், அவரைத்தேடுங்கள், அவரை யறியவிரும் புங்கள்.

He who is infinite is blissful; in things finite is no bliss; the Infinite alone is blissful. The knowledge of the Infinite therefore is to be desired.

---

(90). புஹதாரணிய உபநிஷத்து

6-வது அத்தியாயம், 4-வது பிராமணம் 1-வது வாக்கியம்.

ப்ராணஸ்யப்ராண முத சக்ஷுஷஶ்சக்ஷுஷ
ருதச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம் மநஸோயெ
மநோவிது:; தேநிசிக்யுர்ப்ரஹ்மபுராணமக்ரயம்.

பொழிப்புரை.

யார் பிரமத்தை உயிருக்குயிராகவும், கண்ணுக்குக்கண்ணுகவும், செவிக்குச்செவியாகவும், மநதிற்கு மநதாதவும் அறிகின்ருரோ; அவர்களே, புராதனனும் மேலானவனுமான பிரமத்தை உண்மையாக அறிகின்றனர்.

விசேஷ உரை.

யார் இவரையாவருக்கும் ஞானதத்தைக்கொடுப்பவரென்றும், காரணரென்றும், ஆதாரமானவரென்றும் அறிகின்றனரோ அவர்கள் இவரை நிச்சயமாக அறிகின்றனர்.

They certainly know the ancient God, the first of all, who know Him as the Life of life, the Mind of mind, the Eye of eye, Ears of ears.

---

(91). முண்டகோபநிஷத்து

3-வது முண்டகம் 2-வது கண்டம் 5-வது வாக்கியம்.

ஸம்ப்ராப்யை நம்ருஷயோஜ்ஞானத்ருப்தா:
க்ருதாத்மா நோவீதராகா: ப்ரஸாந்தா:;
தேஸர்வகம் ஸர்வத: ப்ராப்யதீராயுக்தாத்மாந:
ஸர்வமேவா விஸந்தி.

பொழிப்புரை.

இருஷிகள் இவரை கண்முகவடைந்து ஞானத்தினல் திருப்தியடைகின்றனர், பரிசுத்தமான உள்ளமுடையவராகின்றனர், இராகாதி தோஷமற்றவராகின்றனர், இந்திரிய சஞ்சலமற்றவராகின்றனர். ஒருவழிப்பட்ட கருத்தையுடைய அந்த விவேகிகள் யாவற்றிலும் நிறைந்திருக்கிறவரை எல்லாவிடங்களிலும் அடைந்து யாவற்றிலும் ஞானத்தினல் பிரவேசிக்கின்றனர்.

விசேஷ உரை.

அந்த விவேகிகள் ஞானத்தினல் அந்த சத்தியஸ்வரூபனேயறிந்து அன்பினல் அவரது மங்களஸ்வரூபத்தை பூஜித்து, அவரது கல்பனோக்கத்துடன் தமது கல்ப விருப்பத்தைச்சேர்த்து ஒருவழிப்பட்ட கருத்தையுடையவராகின்றனரோ; அவர்கள் யாவற்றிலும் நிறைந்து எல்லா கர்மைகளுக்கும் காரணராயிருக்கிறவருடைய சேர்க்கையைப்பெற்று, யாவற்றிலும் பிரவேசித்து யாவற்றினுள்ளும் அன்பையே வடிவாக உடைய அந்த நித்தியபுருஷனைப் பார்க்கின்றனர்.

They the sages who have got Divine knowledge, who are wise, are without fondness for objects of this world, are tranquil of heart, and have minds devoted to God, having obtained Him every where Who is every where, comprehended by knowing God the end with which all things have been created is known all things.

---

(92). சுவேதாசுவதர உபநிஷத்து

3-வது அத்தியாயம் 12-வது வாக்கியம்.

ததோயதுத்தரதரம் ததரூபமநாமயம்;
யஏதத்விதுரம்ருதாஸ்தேபவந்தி
அதேதரே துக: கமேவா பியந்தி.

பொழிப்புரை.

யார் காரணத்திற்குக்காரணரோ, அவர் உருவமற்றவர், நிராமயர். யார் இவரையறிகின்றனரோ அவர் அழிவற்ற பதவியைப் பெறுகின்றனர்; பிறர் துயரத்தையே அடைகின்றனர்.

விசேஷ உரை.

இவ்வுலகத்தில் எந்த சகல காரணங்களிலிருந்து எந்த சகல காரியங்களு முண்டாகின்றனவோ, அந்தச்சகல காரணங்களுக்கும் காரணபிரமம்; அவர் உருவற்றவர், நிராமயர். யார் இவரை ஞானக்கண்ணினால் பிரத்தியக்ஷமாகிகொள்வதினால் இவருடன பிரியாத சம்பந்தத்தை உண்டாகிக்கொள்கின்றனரோ அவர்கள் அழிவற்றபதவியைப் பெறுகின்றனர். பிறர் ஒருவரும் இந்த சம்சாரத்துயரத்தைக் கடக்கவல்லவரல்லர்.

He, who is the Cause of causes is Formless and without pain and disease. They who know Him become immortal, others go to misery.

---

(93). புஹதாரணிய உபநிஷத்து

ரு-வது அத்தியாயம் அ-வது பிரமாணம் க-வது வாக்கியம்.

யோவா ஏததக்ஷரம் கார்க்ய விதித்வா அஸ்மின்
லோகே ஜுஹோதி யஜதேதபஸ்தப்யதே
பஹூனிவர்ஷ ஸஹஸ்ராண்யந்த
வதேஸ்யவாஸ்யதத்பவதி.

பொழிப்புரை.

ஓ கார்க்கி! யார் இவ்வுலகில் புருஷனையறியாமல் அநேகாயிரம் வருஷங்கள் ஓமம், வேள்வி, தவம் இவைகளைச்செய்யினும் அவர்களுக்கு அழிவுள்ள பயனே உண்டாகின்றது.

விசேஷ உரை.

மங்களவடிவுடைய பரமேசுவரனை உள்ளத்தில் நேரே அறிந்து, அவரிடத்து அன்பையுண்டாக்கிக்கொள்ளவேண்டும். அவரது மகிமையை அறிந்தும் கேள்வியுற்றும், அவரது திருப்பணிசெய்வதில் சேரவேண்டும்; அப்படியாயின் அவரது சேர்க்கையாலுண்டாகிற அழிவற்ற பயனைப்பெறலாகும். அவரை அறியாமல் மனதை வேறே இடத்தில் செலுத்தி, விடயங்களில் விருப்பமுற்றவராகி வெளியாடம்பாங்களுடன் இரவும்பகலும் அவரை உபாசிக்கினும், அல்லது உலகத்திற்கு மகிழ்ச்சியுண்டாக்கத்தக்க வீணான வேள்விமுதலிய செய்கைகளிலேயே உடலையும் மனதையும் விழுந்திருக்கும்படி செய்யினும், அல்லது மானம் மரியாதை யசசு கீர்த்தி இவைகளைப் பெறவிரும்பி தமக்குள்ள பொருளையெல்லாம் செலவழிக்கினும், கடவுளிடத்து அவருக்குச் சிறிதும் சம்பந்தமுண்டாகமாட்டாது, ஆனதால் அவருக்கு அழிவற்ற பயன் உண்டாவதில்லை. யார்

கடவுள் விஷயமான ஞானத்திலுலும் அவரிடத்துள்ள அன்பிலுலும், அவருக் கன்பாகிய காரியங்களைச் செய்யவெண்ணி அவரால் நியமிக்கப்பட்ட தருமங்க ளோப்புரிகின்றனரோ, அவரிடத்தில் தருமத்தின் எல்லாலக்ஷணங்களும் கிடைக் கின்றன. மேலும் அவர்கள் என்றும் மிகுதியும் விரும்பத்தக்க அழிவற்ற பிரம் மாநந்தத்தை அநுபவித்துக்கொண்டேயிருக்கின்றனர்.

He, O Gargi, who not knowing this imperishable Being, performeth ritual observances and practises austerities in this world for many thousands of years, obtaineth fruits but transitory.

(94). சாந்தோக்கிய உபநிஷத்து

8-வது பிரபாடகம 15-வது கண்டம 2-வது வாக்கியம்.

மாஹம் ப்ரஹ்ம நிராகுர்யாம் மாமாப்ரஹ்ம நிராகரோத நிராகரணமஸ்து.

பொழிப்புரை.

பிரமம் என்னைவிடவில்லை, நான் பிரமத்தை விடாமலிருப் பேனாக. என்னால் பிரமம் விடப்படாமலிருப்பாராக.

விசேஷ உரை.

அருள்வடிவனாகிய உலகத்தந்தை ஒருகாரியத்திலும் கம்மை மறந்திருக்க வில்லை. நாம் ஒவ்வொரு நிமிஷமும் அவரது அருள்வாரியைப்பெறுகிறோம். மேலும் ஒவ்வொருதரம் மூச்சு உள்ளே கொள்ளுகையிலும் அவரது அருளென் னும் காற்றையே உட்கொள்ளுகிறோம். அவர் கம்மை ஒருகாரியத்திலும்மறந் திருக்கவில்லை, ஒருகாலத்திலும் மறந்திருக்கவில்லை. அவர் கம்மை எப்பொழு தும் அருட்பார்வையால் பார்க்கிறார். ஆனதால் நாம் அவரை மறவாமலி ருப்போமாக, அவரது செய்கன்றிபயறிந்து, எப்பொழுதும் அவருடைய அரு ளாகிய அமுதத்தைப் பருகுவோமாக. அவர் அருளியிட்ட கட்டளைகளினைத் தையும் சந்தோஷமாக நிறைவேற்றுவதில் பிரவர்த்திப்போமாக.

Let me not forsake God as God has not forsaken me. Let Him not be abandoned by me.

---

(95). பிரசிநோபநிஷத்து

6-வது பிரசினம் 6-வது வாக்கியம்.

தம்வேத்யம் புருஷம் வேதயதாமாவோ ம்ருத்யுஃபரிவ்யதாஃ.

பொழிப்புரை.

மரணம் உங்களைபீடிக்காதபடி அந்த அறியத்தக்க புருஷனை அறியுங்கள்.

விசேஷ உரை.

அந்த அழிவற்றபுருஷனே அறியுங்கள். அவர் மீது யாவற்றின்மீதிலும் தம்மீதிலும் உள்ளசைவிட அதிக அன்பைவையுங்கள். அப்பொழுது உங்களது மரணபீடை ஒழிந்துவிடும். யார் பிரமத்தையடைகின்றனரோ, யார்பிரமத்துடன் நித்திய வாழ்வைப் பெறுகின்றரோ; அவர் இங்கேயிருந்தும் ஸம்ஸாரதைக்கடக்கிறார், மேலும் மரணமென்னும் கயற்றிலிருந்து விடுபட்டுக்காப்பைப் பெறுகிறார். அவரிடத்தில் குறைவு, நிறைவாகின்றது. விபத்து சம்பத்துகாரமாகவும், மரணம் அழிவற்ற பதவிக்குப் படியாகவும் கொள்ளப்படுகின்றது.

Know Him the Perfect, who should be known that death may not afflict thee.

---

(96). கடோபநிஷத்து

3-வது வல்லி 6-வது வாக்கியம்.

யஸ்துவிஜ்ஞானவான்பவதி யுக்தேநமனஸாஸதா.
தஸ்யேந்திரியாணிவஸ்யானி ஸதஸ்வா
இவஸாரதேः.

பொழிப்புரை.

யார் விவேகியாகவும், எப்பொழுதும் வசப்பட்ட மனதுடனும் இருக்கிறரோ; அவருடைய இந்திரியங்கள் தேர்ப்பாகனது நல்ல குதிரைகளைப்போல வசமாயிருப்பனவாகள்.

விசேஷ உரை.

யாருடைய இந்திரியங்களனைத்தும் புத்தியின் வசப்பட்டிருக்கின்றனவோ, அவர் அவைகளைக் கடவுள் அருளிய நன்மார்க்கத்தில் செல்லும்படி செய்கிறார். மேலும் இதனால் அவருக்கு விசேஷ நன்மைகிடைக்கிறது.

He who is wise with a mind always under rule, his senses are subject to him as docile horses are to a charioteer.

(97). கடோபநிஷத்து

3-வது வல்லி 9-வது வாக்கியம்.

விஜ்ஞானஸாரதிர்யஸ்துமநः ப்ரக்ரஹவான்நரः;

ஸோஅத்வநः பாரமாப்நோதி தத்விஷ்ணோःபரமம்பதம்.

பொழிப்புரை.

எந்த விவேகி ஞானத்தைத்தேர்ப்பாகனை உடையவரோ மனதிற்குக் கடிவாளமிட்டிருக்கிறவரோ, அவர் ஸம்ஸாரத்தின்

எல்லையாகிய அந்த ஸர்வ வியாபகருடைய பரமபதத்தையடை கிறார்.

விசேஷ உரை

யார் தன்னுடைய மனதை ஞானத்திற்கும் தருமத்திற்கும் வசப்படுத்தி வைத்திருக்கிறாரோ, அவர் சம்சாரத்தினால் வெல்லக்கூடாத மோகத்திலிருந்து நீங்கி ஸர்வவியாபியாகிய பிரமத்தையடைகிறார்.

He whose reason is his charioteer, and who bridleth his mind, obtaineth the mansion of God which is the good or worldly career.

---

(98). புருஹதாரணிய உபநிஷத்து

6-வது அத்தியாயம் 4-வது பிரமாணம் 11-வது வாக்கியம்.

அநந்தாநாமதேலோகா அந்தேநதமஸாவ்ருதா:
தாம்ஸ்தேப்ரேத்யபிகச்சந்தி அவித்வாம்ஸோ
புத்தோஜநா:.

பொழிப்புரை.

அஞ்ஞானிகளும், மூர்ப்புத்தியுடையவர்களுமான ஜனங்கள் இறந்தபின், பார்க்கக்கூடாத இருள்மூடிய உலகங்களையடைகின்றனர்.

விசேஷ உரை.

யார் இவ்வுலகத்தில் ஞானத்தையும் தருமத்தையும் ஸம்பாதிப்பதை அவமதித்து பவித்திரமாகிய பிரமாநுபவத்தை அடையக்கூடாதவர்கள் ஆய்விடுகின்றனரோ, அவர்கள் மரணாந்தரம் அதைப்பெறுதற்கு அதிகாரிகளல்லர். எவ்வளவு தூரம் இவ்விடத்தில் ஞானத்துடனும் தருமத்துடனும் பிரமாநந்தத்தை யனுபவிக்கக்கூடுமோ அதற்குத்தக்கபடியே சிறந்தபதவிகிடைக்கும். ஆனதால் இவ்வுலகத்திலிருக்கையிலேயே மனதைஸ்வாதீனப்படுத்திக்கொண்டு பரிசுத்தராகி ஈசுவரனோடு நமது சம்பந்தத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளல்வேண்டும். சிறந்த பதவியைப் பெறுதற்கு வேறு உபாயமில்லை.

Lo worlds devoid of felicity wrapped up in blinding gloom, those go after death who are ignorant of God and are unwise.

---

(99). புருஹதாரணிய உபநிஷத்து

6-வது அத்தியாயம் 4-வது பிரமாணம் 23-வது வாக்கியம்.

ஸாந்தோதாந்த உபரதஸ்திதிக்ஷு: ஸமாஹிதோபூத்வா
ஆத்மந்யேவாத்மாநம் பஸ்யதி.

பொழிப்புரை.

பிரமஞானி வெளியிந்திரியங்களையும், உள்ளிந்திரியங்களையும், வசப்படுத்திக்கொண்டு, பாபத்தில் வெறுப்புற்று சுகதுக்கங்களைப் பொறுத்துக்கொண்டு, தன்னிடத்திலேயே பரமாத்துமாவை தரிசிக்கிறார்.

விசேஷ உரை.

ஒரு புறத்தில் ஸம்ஸாரசுகத்தில் விருப்பம். வேறொரு பக்கத்தில் கடவுளையடையவேண்டுமென்னும் இச்சை. எவ்வளவுதூரம் ஸம்ஸாரசுகத்திலுள்ள விருப்பம் குறைகிறதோ, அவ்வளவுக்கும் கடவுளையடையவேண்டுமென்னும் இச்சை எழுச்சியுறுகின்றது. கடவுளையடையவேண்டுமென்னும் விருப்பம் மிகுதியாக எழுச்சியுறின், அப்பொழுது அறிவு அவரைத்தேடுகின்றது. மேலும் எப்பொழுது அதுதேடி அந்தப்பூரணஸ்வரூபனை அடைகின்றதோ, அப்பொழுது அவர் எங்கும் பரிபூரணராக விருக்கிறரெனப்பார்க்கிறது; மேலும் பார்த்து கிருதார்த்தத்தைப் பெற்று பவித்திர பிரமாநந்தத்தை அனுபவிக்கின்றது. பிரமஞானிகள் ஞானப்பிரஸாதத்தினால் பரிசுத்தர்களாகி, ஸத்தியத்தினது ஸத்தியமும், பிராணத்தினது பிராணமும், அறிவினது அறிவுமான அந்தந்த மங்களஸ்வரூபரை சமக்குள் ஆத்மாவிலேயே தரிசித்து கிருதார்த்தர்களாகி மிகத்தூய்மையான பிரமாநந்தத்தை அனுபவிக்கின்றனர். அந்தப்பூரணபுருஷன் நம்மில் யாருக்கும் தூரத்திலிருக்கவில்லை. எங்கே ஜீவாத்துமா உளதோ அங்கேயே அவரிருக்கிறார். எல்லாப்பொருள்களும் எல்லா உலகங்களும், எல்லா உயிர்களும் அவரது அருளென்னும் மார்பைப் பற்றிக்கொண்டிருக்கின்றன. எவ்வளவுதாள் ஞானக்கண் திறக்கவில்லையோ அவ்வளவுதாள் வரையிலும் கடவுள் தூரமாகவிருக்கிறரென்று மனிதன் நினைக்கிறான்; ஆனால், திறக்கப்பட்ட ஞானநேத்திரத்தையுடையவர் வெளியிந்திரியங்களையும் உள்ளிந்திரியங்களையும் வசப்படுத்திக்கொண்டவராகி, பாபத்தில் வெறுப்புற்று சுகதுக்கங்களில் வெறுப்புற்று ஒருவழிப்பட்ட கருத்தினால் தன்னுள்ளத்திலேயே கடவுளைத்தரிசிக்கிறார்.

Being of well-regulated and peaceful mind, averse to vice, patient; and of undivided attention, one seeth God in the soul.

---

(100). புராதாரணிய உபநிஷத்து

6-வது அத்தியாயம், 4-வது பிராமணம் 15-வது வாக்கியம்.

*** யததமநுபஸ்யத்யா த்மாநம் தேவமம்ஜஸா;**
ஈசாநம் பூதபவ்யஸ்ய நததோ விஜுகுப்ஸதே.

பொழிப்புரை.

ஸ்வப்பிரகாசமுள்ளவரும், இறந்தகால எதிர்காலங்களின் நியந்தாவுமான இந்தப் பரமாத்துமாவை, யார் எப்பொழுது

பிரத்தியக்ஷமாகத் தரிசிக்கிறாரோ; அப்பொழுது அவர் தன்னை அப்பரமாத்துமாவினின்று மறைத்து வைத்துக்கொண்டிருப்பார்.

விசேஷ உரை.

எவன் பாப காரியங்களில் மூழ்கிக்கிடக்கின்றானோ, அவன் தன்னை மறைவாக வைத்துக்கொண்டிருக்க விரும்புகிறான்; ஆனால் பிறர் பாராமல் தன்னை மிகவாக மறைத்தவைத்துக்கொள்ளக்கூடுமாயினும், யாவருக்கும் அந்தராத்துமாவாக யாவற்றையும் பார்க்கின்ற புருஷன் பாராமல் தன்னைமறைத்து வைத்துக் கொண்டிருக்கமுடியாது. யார் பிரகாசமுள்ளவரும், இறந்தகாலவருங்காலங்களின் நியந்தாவுமான பரமாத்துமாவை உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல சாதாரணமாய் பிரத்தியக்ஷமாகத் தரிசிக்கிறாரோ, அவர் ஒரு குற்றமுள்ள செய்கையிலும் சம்பந்தப்படவிரும்பார்; ஆனதால் தன்னை அவர் பாராமல் வைத்திருக்க விரும்புவதும் இல்லை. மோகவசத்தினால் ஏதேனும் அவர் ஒரு குற்றத்தில் சம்பந்தப்படினும் தன்னை அவர் பாராமல் வைத்துவைக்க விரும்புவதில்லை; ஆனால் தான் குற்றத்திலிருந்து மீளுவதற்காக ஸரளமான உள்ளத்துடன் அநுதாபப்பட்டு அவரைப் பிரார்த்திக்கிறான்; மேலும் அவர் அவனை அந்தப் பாபத்திலிருந்து விடுவிக்கிறார்.

He, who easily can conceive God, the Being Divine and the Governor of times past and future, wisheth not to conceal himself from Him.

---

(101). கடோபநிஷத்து

2-வது வல்லி 24-வது வாக்கியம்.

நாவிரதோ துச்சரிதாந் நாசாந்தோ
நாஸமாஹித:; நாஸாந்த மாநஸோ வாபி
ப்ரஜ்ஞாநேநைந மாப்நுயாத்.

பொழிப்புரை.

கெட்டசெய்கையை விட்டு வெறுத்திராதவனும், பொறிகளினது சஞ்சலத்தை விட்டு சாந்தமாகவிராதவனும், நிச்சயசித்தமுடனிராதவனும், அமைதியான கருத்துடனுவதிராதவனும் கேவலம், ஞானத்தினால் இப்பரமாத்துமாவையடையான்.

விசேஷ உரை.

பிரிய தமஞ்ஞிய பரமாத்துமாவை யறிந்தனம், ஆனால் அவரிடத்தில் கருத்தை நிறுத்த இல்லை; மேலும் அவரிடத்தில் கருத்தை நிறுத்தி அவரோடு அதன்மயோகத்தில் சேருவதினால் வரும் விமலாநந்தத்தை ஒருபொழுதும் அநுபவித்திலம்; அவரை மகானென்றும், பரிசுத்தரென்றும் அறிந்தும், நமது நடையை பெருமையுள்ளதாகவும் பரிசுத்தமானதாகவும் செய்துகொண்டு அவருடன் கூடிவாழத் தகுந்தவர்களாகவில்லை; காமவசரை நியந்தாவாகவும் விதாதாவாக

வும் அறிந்தும், அவர் காட்டிய கல்வழியில் நாம் ஒருபொழுதும் செல்வதில்லை. கேவலம் இம்மையிலுள்ள ஸ்வப்பிரயோஜனத்தின்பொருட்டே பிறந்ததுமுதல் வேலை செய்துக்கொண்டிருக்கின்றோம்; அப்படியாயின் இன்னும் அவரை யடைவது எப்படி ஸம்பவிக்கும்.

He who refraineth not from vice is passionate, is of distracted attention and is of mind untranquil, obtaineth not God through mere knowledge of Him.

---

(102). கேனோபநிஷத்து

2-வது கண்டம் 5-வது வாக்கியம்.

இஹசேதவேதீ ததஸத்யமஸ்தி நசேதிஹா
வேதீந் மஹதீ விநஷ்டி:; பூதேஷு பூதேஷு
விசிந்த்ய தீரா: ப்ரேத்யா ஸ்மால்லோகா
தம்ருதா பவந்தி.

பொழிப்புரை.

இம்மையில் மனிதன் பிரமத்தையறிந்தாற்றான் அவனுடைய பிறப்பு பயனுள்ளதாகின்றது. இம்மையில் அறியாமையின் மிகுந்த நஷ்டமுண்டாகின்றது; ஆனதால் விவேகிகள் நிலையிலாப் பொருள் இயங்கியற்பொருளாகிய சகல வஸ்துக்களிலும் ஒன்றாகிய கடவுள் வியாபித்திருக்கிறாரென விசேஷமாகவறிந்து, இவ்வுலகத்தைவிட்டு நீங்கி அழிவற்றபதவி யுடையவர்களாகின்றனர்.

விசேஷ உரை.

நமது அறிவின் மூலமாக பிரமத்தின் ஸ்வரூபத்தை ஒரு பரிமிதப்பொருளைப்போல முழுவதும் அறிவதற்குச் கூடாவிடினும், நமது அறிவிற்கு ஆதாரமாகிய ஸகஜஞானத்திலுல் எல்லா காரணங்களுக்கும் காரணரும், எல்லா ஆதாரங்களுக்கும் மூலாதாரரும், எல்லா நன்மைகளுக்கும் இருப்பிடமானவரென அவரது பூரணமாகிய மங்களஸ்வரூபத்தை ஐயமின்றி யறிந்திருக்கிறோம். பாபம் நசித்த ஜீவாத்மா, இறுதியற்ற ஞானத்தையும் நன்மையையும் வடிவமாக வுடைய கடவுளை யாவற்றிற்கும் ஆச்சயஸ்தானமாக இருப்பவரென்று தனக்குள்ளே நேராக அறியக்கூட்டும். இவ்விதமாக இப்புவியின்மீதிருந்து அவரை யாம் அறியவல்லவர்களாயின் நமது பிறப்புப் பயனுள்ளதாகின்றது. அவரை அறிவதினுலல்லாது நமது பிறப்பு வேறெவ்வகையினுல் பயனுள்ளதாகும்? அவர் நமக்கு அவரை யறியும் அதிகாரத்தை யளித்திருக்கிறார், இதுதான் அவருடைய எல்லா அருள்களிலும் முக்கியமாகிய அருள். நாம் இருள் சூழ்ந்த இச்சிறுபுவியினது ஜந்துக்களாயிருந்தும்; யாவற்றையும் கடந்த அந்த ஸத்தியஸ்வரூபத்தை புருஷனே அறிகிறோம். இதைவிட நமது பாக்கியத்திற்கு விஷயம் வேறு யாதிருக்கின்றது! உலகத்தினது கௌசலத்தைக்கண்ணுற்று, அந்தக் கௌசலகருத்தாவினது இறுதியற்ற ஞானத்தைத் தெரிந்துத்தெளிகிறோம்.

உலகத்தினது எல்லா நியமங்களிலுமிருக்கிற நன்மைக்கத்தையறிந்து அந்த நியந்தாவின் கல்ல கருத்தை உணருகிறோம், அவரால் நியமிக்கப்பட்ட கருமத்தை யாசரித்து நாம் உயர்ந்த பதவியைப்பெறுகிறோம்; மேலும் நம்மெல்லோரிடத்தும் அவருக்குள்ள அன்பைக்கண்டு அவரிடத்தில் கனறியறிவுள்ளவர்களாகி அவரது அன்பில் மூழ்கினவர்களாகிறோம். இங்கு நாம் அவரை யறியாமலிருக்கினும், அவரது அன்பில் மூழ்காதிருக்கினும், அவரால் நியமிக்கப்பட்ட தருமங்களே ஆசரியாமலிருக்கினும். அப்பொழுது நமது நிலை என்ன ஆயிற்று? மூத்திரையிட்ட பொன்னை மிகுதியாக ஸம்பாதிப்பதினலாவது, பேரும்புகழையும் மரியாதையையும் பெறுவதினலாவது, இழிவான இந்திரிய சுகங்களை யனுபவிப்பதினலாவது ஆன்மா திருப்தியுடனிருக்குமா? அழிந்துபோகத்தக்க ஜடப்பொருள்களிலும், பாபத்துடன் கூடிய நிறைவற்றதனமைகளிலும் நமது அன்பைவைக்கின். அன்பு பயனைப்பெறுமா? யார் பிரமத்தையறியாமல் அவரது சேர்க்கையினல் உண்டாகிற அழிவற்ற பேராநந்தத்தைவிட்டுநீங்கி புலினது தூய்மையற்ற சுகங்களில் மூழ்கியிருக்கின்றனரோ அவர்களுக்கு மிகுந்த கெடுதியுண்டாகும். அவர்கள் புண்ணியலோகத்தைவிட்டு வெகு தூரத்தில் அலைவர். நிலையிற்பொருள், இயங்கியற்பொருள்களாகிய படைப்புகளில் விளங்கும் வல்லமையையும், நோக்கத்தையும் கருதி, பிரமஞானத்தை எழச்செய்தல்வேண்டும், மேலும் ஆத்மபிரத்தியயத்தைக்காக்கவேண்டும். நிலையிற்பொருள் இயங்கியற்பொருள்களாகிய யாவும் அவரது படைப்பே, அவரது கௌசலமே; அவை அவரது கல்ல கருத்தையே விளங்கச்செய்கின்றன; அவரது மகிமையை வெளியிடுகின்றன, அவரது பெயரை கோஷிக்கின்றன. கோளநூல், பூதத்வநூல், வைத்தியநூல், மனோவிஞ்ஞானநூல், ஆத்மதத்வநூல்; நீதிநூல் முதலிய எல்லா ஞானநூல்களும் அவரது அளவற்ற ஞானமும் கன்மையுமாகிய தன்மையையே உபதேசிக்கின்றன. இவ்வெல்லா ஞானநூல்களிலிருந்தும் இந்த எல்லா ஞானங்களுக்கும் ஆதாரமாகிய பிரமஞானத்தைப்பெற்று பிரம ஞானியாகவேண்டும். மேலும் இவ்வுலகத்தைவிட்டு நீங்கியபின் நித்தியமாகிய பொருளோப்பற்றிக்கொண்டு நித்திய பதவியைப்பெறவேண்டும்.

If man know Him here then it is good, but if he know Him not, great is the ruin. Contemplating Him in object after object, the wise, after departing from this world, become immortal.

---

(103). கடோபநிஷத்து

2-வது வல்லி 2-வது வாக்கியம்.

ஸ்ரேயச்ச ப்ரேயச்ச மநுஷ்யமே தஸ்தௌ ஸம்பரீத்ய விவிநக்திதீர:; தயோ:ச்ரேய ஆததா நஸ்ய ஸாதுபவதி ஹீயதே அர்த்தாத் ய உப்ரேயோ வ்ருணீதே.

பொழிப்புரை.

சிரேயமும் பிரேயமும் மனிதனையடைகின்றன. விவேகி அவையிரண்டையும் நன்றுகவாராய்ந்து வேறுவேறுகப் பிரிக்கிறான். அவைகளுக்குள் சிரேயத்தைக்கிரகிக்கிறவனுக்கு நன்மையுண்டாகிறது. யார் பிரேயத்தைக்கிரகிக்கிறானே அவன் பரமார்த்தத்தை விட்டுப் பிரஷ்டனாகிறான்.

விசேஷ உரை.

கடவுளையடையும் மார்க்கத்தைப் பற்றுதல் சிரேயமானது, ஸம்ஸாரசுகத்தில் மூழ்கிக்கிடப்பது பிரேயமானது. ஒவ்வொரு காலத்தில் கடவுளையடையும் வழியைப்பற்ற விருப்பமுண்டாகிறது. ஒவ்வொரு சமயத்தில் ஸம்ஸாரசுகம் மனதைக் கவருகின்றது. இவைகளுக்குள் யார் ஈச்வரனையடையும் வழியைப் பற்றுகிறாரோ அவருக்குச்சிறந்த நன்மைபுண்டாகிறது. எவன் ஸம்ஸாரசுகத்தில் மூழுகிக் கிடக்கிறானே, அவன் ஒருபொழுதும் பரமபவித்திரமாகிய பிரமானந்தத்தை யடைவதற்குத் தக்கவனல்லன். யார் ஈச்வரனிடத்தில் அன்பு செலுத்துகிறாரோ அவர் அந்தப் பரமப் பிரேமாஸ்பதனுடைய திருப்பணி எனினைத்து ஸம்ஸாரகாரியங்களைச் செய்கிறார்; எவன் ஸம்ஸாரத்தில் விருப்பமுடையவனாக விருக்கிறானே, அவன் ஸம்ஸாரத்தின் நன்மையைக் கருதியே மிகுந்த நன்மைகளுக்கு இருப்பிடமாகிய ஈச்வரனை உபாஸனை செய்கிறான். ஸம்ஸாரத்தில் விருப்பமுள்ளவனாகி ஸ்வப்பிரயோஜனபரனாகவிருக்கிற எவனும "ஓ! பரமாத்துமாவே! உனது கட்டளையின்படி உலகநன்மையின்நிமித்தத்தினாலும், உனக்கன்பான காரியமென்னும் நிமித்தத்தினாலும், ஸம்ஸாரயாத்திரை நிர்வஹிக்கும்பொருட்டுப் பிரவர்த்திக்கிறேன்" என்னும் வாக்கியத்தை ஒருபொழுதும் மனப்பூர்வமாக வாய்விட்டுச்சொல்லான். எப்பொழுது உள்ளக்கிளர்ச்சியுடன் இவ்வாக்கியத்தைச்சொல்லவல்லவர்களாவோமோ; மேலும், நாம் செய்கிற காரியகளிலனைத்திலும் இதையே லக்ஷியமாக வைத்துக்கொள்ளுவோமோ, அப்பொழுது நாம் சிரேயமானதை நன்றுகப்பற்றினோமென்று அறியகடவோம்.

Duty and pleasure both offer themselves to man. The thoughtful man considereth about them. He, who of these two accepteth duty, becometh blessed; he loseth his eternal interests who accepteth pleasure.

---

(104). கடோபநிஷத்து

5-வது வல்லி. 13-வது வாக்கியம்.

நித்யோ நித்யானாம் சேதனச் சேதனானா
மேகோ பஹூனாம் யோ விததாதி காமான்;
தமாத்மஸ்தம் யே நுபஸ்யந்தி தீராஸ்தேஷாம்
சாந்தி: சாஸ்வதீ நேதர ஷாம்.

பொழிப்புரை.

யார் எல்லா அநித்தியப் பொருள்களுக்குள் நித்தியரோ, எல்லா ஞானப்பொருள்களுக்கும் ஞானத்தைத்தருபவரோ, ஒரு வராயிருந்தும் யாவருக்கும வேண்டியவற்றைக் கொடுக்கிறாரோ அவரைத்தம்முள் இருப்பவராகக்காண்கிற தீரர்களுடையதே அழிவற்ற சாந்தி, அது வேறு யாருடையதுமன்று.

விசேஷ உரை

இவ்வுலகத்தின்கண்ணேயுள்ள எல்லாப் பொருள்களும் அநித்தியங்கள்; கேவலம் அவரொருவரே நித்தியர், அவர் சித்துப்பொருள்களுக்கெல்லாம் ஞானத்தைக்கொடுத்துப் படைத்தார்; அவர் அவைகளுக்கு உணவைத்தந்து காப்பாற்றிவருகிறார்; இந்த எண்ணிறந்த உயிர்களுக்கு வேண்டியதனைத்தையும் அவரொருவரே பூர்த்தி செய்கிறார். இவ்வொரு மண்ணுலகத்திலேயே அவரால் காக்கப்படவேண்டிய உயிர்களெத்தனை? இவ்வொவ்வொரு உயிருக்கும் வேண்டியவை எத்தனை? அவர் ஒருவரே இவ்வெல்லாவற்றிற்கும் வேண்டியவற்றை தகுந்தபடி கொடுத்துவருகிறார்; அவர் ஒரு அற்பமாகிய புழுவுக்கு வேண்டியதையும் மறப்பதில்லை. யாவருக்கும் நண்பரும், நன்மையே வடிவாகக்கொண்ட வருமான இம்மிகச்சிறந்த தேவதையை, யார் தம்முள்ளமாகிய கோவிலில் நேரம் தரிசனை செய்கின்றாரோ; அவரது மனத்திருத்தியென்னும் தடாகம் ஒருபொழுதும் காய்ந்துபோவதில்லை, எப்பொழுதும் நிறைந்திருக்கின்றது, அவர்களுக்கே நித்தியசாந்தி கிடைக்கின்றது.

He is the only Eternal among things transitory, is the Life of all living things and, Being One, fulfilleth the desires of many. The wise who see Him within themselves, theirs is peace everlasting not of any others.

---

(105). கடோபநிஷத்து

5-வது வல்லி 12-வது வாக்கியம்.

ஏகோவசீ ஸர்வபூதாந்த ராத்மா
ஏகம் ரூபம் பஹுதாயः கரோதி; தமாத் மஸ்தம்
யெநுபஸ்யந்தி தீராஸ் தேஷாம் ஸுகம்
சாச்வதம் நேதரேஷாம்.

பொழிப்புரை.

யார் ஒருவரோ, தம்வயமுடையவரோ, எல்லா உயிர்களுள்ளுமிருப்பவரோ, ஒருருவத்தைப் பல உருவாகச் செய்பவரோ, அவரைத் தம்மிடத்திருப்பவராகப் பார்க்கிற விவேகிகளுடையதே நித்தியசுகம், அது பிறருடையதன்று.

விசேஷ உரை.

யாவர் அவருடைய வசத்தில் இருக்கின்றன, அவர் யாவற்றிற்கும் நியந்தை. அவர் நாமரூபவராகிய ஆண்மாக்களுள்ளுமிருக்கிறார். அவர் ஒருவராயிருந்தும் வேறு யாருடைய சகாயம் பற்றுமல் இவ்விசித்திரமாகிய உலகத்தைப்படைத்தார்; அவர் நித்தியமாகிய தனது ஸ்வரூபத்தில் மாறுபடாமல் இருந்தகொண்டே ஒருருவத்தைப் பல உருவாகச்செய்கின்றார்; தான் வேறொரு பொருளாகத்திரிவதில்லை. இப்படி ஒருவர் நியந்தாவாகவும் எல்லாப் பொருள்களிலும் அந்தராத்துமாவாகவும் இருப்பவரை தமக்குள் யார் தீராய் அடைந்து அவருடன் சேர்க்கையைப் பெறுகின்றனரோ, அவர்களடையும் விடயாதீத நித்திய சுகத்தை, வேறு யாரும் ஒருபோதும் அடையார்.

He is the One, the Subjector, the Soul of the souls of all beings, and changeth one form into many. The wise who see Him within themselves, their's is bliss everlasting, that is, as the Soul of the souls not of any others.

---

(106). முண்டகோபநிஷத்து

3-வது முண்டகம் 1-வது கண்டம் 4-வது வாக்கியம்.

ப்ராணைஹ்யே ஷயः ஸர்வ பூதைர் விபாதி
விஜாநன் வித்வான்பவதே நாதி வாதீ;
ஆத்மக்ரீடா ஆத்மரதி: க்ரியா வாநேஷ
ப்ரஹ்ம விதாம வரிஷ்டः.

பொழிப்புரை.

எல்லாப்பொருள்களிடத்திலும் விளங்குகிறவர் யாரோ, அவர் இந்தப் பிராணஸ்வரூபராகிய பரமேசுவரர். அறிந்த ஞானிகள் அவரைக்கடந்து ஒரு வார்த்தையுஞ் சொல்லார். பரமாத்துமாவையே விளையாட்டுக்கும் ஸந்தோஷத்திற்கும் விஷயமாக உடையவரும், நல்ல காரியங்களைச்செய்கிறவருமானவர் பிரமஞானிகளுக்குள் சிறந்தவர்.

விசேஷ உரை.

யாவற்றையும் படைத்து, யாவற்றிற்கும் ஆதாரமாகவிருக்கிற பிரம்மம் இராவிடில் ஒன்றுமிராது, ஒன்றுமாகாது; அவரே யாவற்றிற்கும் உயிரைப் போன்றவர். சலித்துக்கொண்டிருக்கிற மனி இரவிகளென்ன, சழைத்திருக்கிற மரம் கொடிகளென்ன, வன்மையுடனிருக்கிற பசுக்கள் பறவைகளென்ன, இவையாவற்றிற்கும் காரணராகவும், ஆதாரராகவும், யாவற்றிற்கும் உயிரைப் போன்றவராகவும், யாவற்றிற்குள்ளும் அவரே விளங்குகிறார். பிரம ஞானிகள் பரமேசுவரரே தமக்குச்சிறந்த சற்றமெனவறிகின்றனர். அவர்கள் அன்புள்ள

அந்த நண்பரது குணகீர்த்தனங்கள் செய்துகொண்டே எப்பொழுதும் உவகை யடைந்திருக்கின்றனர். கேவலம் அவரது காரியங்களே பேசுவதிலேயே அவர்களுக்கு அதிக இன்பம் உண்டாகின்றது; கேவலம் அவரது பிரசங்கம் செய்வதிலேயே, அவரது உள்ளம் எப்பொழுதும் ஆவலுள்ளதாகவிருக்கிறது; கருத்தை வேறுவிஷயத்திற் செலுத்தாமல், அவரது ஸ்வரூபசிந்தனைசெய்வதால் அவருக்கு எவ்விசமான உவகையுண்டாகிறதோ, அவ்விசமான உவகை அவர் களுக்கு வேறு யாதொரு விஷயத்திலும் உண்டாவதில்லை. பரமேசுவரரே தங்கள் சிறந்த தந்தையெனவும், அவர் தங்களால் பூஜிக்கப்படத்தக்கவரெனவும், அவரது கட்டளையை நிறைவேற்றுவதே தங்களுற்செயற்பாலதெனவும், அது தவிர வேறுயாதொன்றும் தங்களுற்செயற்பாலதன்றெனவும், பிரமஞானிகள் அறிகின்றனர்; ஆதலால் அவர்கள் அவரது நன்னோக்கத்தை முடிப்பதற்கே எப் பொழுதும் முயலுகிறார்கள். எந்த விஷயத்திலுல் அவரது நல்ல தன்மை விளங்குமோ, அவரது நன்னோக்கம் தெரியுமோ, அதையே அவர்கள் தேடு கின்றனர், அதையே அவர்கள் கற்கின்றனர்; மேலும் அதைப்பே அவர்கள் உப தேசிக்கின்றனர்; அவரைக் கடந்து அவர்கள் ஒரு வார்த்தையும் சொல்வதில்லை. பரமேசுவரனிடத்திலேயே அவர்களுக்கு நிறைந்த விருப்பம்; மேலும் அவரி டத்திலேயே அவருக்கு அழிவற்ற உவகை; ஆதலால் பிரமஞானி பரமாத்து மாவிடத்தில் கிரீடிக்கிறாரென்றும் இரமிக்கிறாரென்றும் சொல்லப்பட்டது. ஆனால் இத்தப் பிரமஞானிகளுக்குள் யார் கேவலம் பிரமத்தினிடத்தில் அன்பு மாத்திரம் வைத்து, அவரது திருவுள்ளத்தையும் தெரிந்துக்கொண்டு திருப்தி யடைந்து சும்மாயிராமல் அவரது திரு உள்ளத்தை யனுசரித்து அவருக்காகும் காரியங்களேச் செய்யச்சென்று நல்ல காரியங்களேச் செய்கின்றனரோ அவர் களே சிறந்தவர்கள். நமக்குள் யாருக்கு அவரிடத்தில் எவ்வளவு அன்பு உண் டாகிறதோ, யார் எவ்வளவு தூரம் அவரது திரு உள்ளப்படி நல்ல காரியங் களேச்செய்ய முயலுகின்றனரோ, அவ்வளவுக்குத்தான் அவர்களுக்குச் சிறப் புண்டாகும். மேலும், அவ்வளவுக்குத்தான் அவர்களது பிறப்புப் பயன்பெறும். இதுதான் நமது காரியம். இதுதான் நமது லக்ஷியம்.

He who is manifest in all things, is the life of all. Knowing him, the knower of God doeth not talk much of any thing else. He whose amusement is God, whose enjoyment is God, and who doeth good works, is the best among the knowers of God.

---

(107). முண்டகோபநிஷத்து.

3-வது முண்டகம் 1-வது கண்டம் 5—6-வது வாக்கியம்.

ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்; ஸத்யேநலப்ய
ஸ்தபஸாஹ்யேஷ ஆத்மாஸம்யத்ஜ்ஞாநேந;
யேநாக்ரமந்த்ரஷயோஹ்யாப்தகாமாயத்ரதத்
ஸத்யஸ்ய பரமம் நிதாநம்.

பொழிப்புரை.

மெய்யேவெல்லும் பொய்யன்று; உண்மையினலும், ஒரு வழிப்பட்ட கருத்தினலும், நல்ல ஞானத்தினலுமே இப்பரமாத்துமாவையடையலாகும். இருஷிகள் இவ்வனுஷ்டானத்தினல் திருத்தியுடையவர்களாகி ஸத்தியத்தின் மேலான இருப்பிடமாகிய பிரமத்தையடைகின்றனர்.

விசேஷ உரை.

சாந்த சித்தர்களாகி உண்மையை யறியுங்கள், உண்மையை யறிந்து உண்மையான வழியில் செல்லுங்கள்; அப்பொழுது உண்மைக்கு ஜயங்கிடைப்பதால் உமக்கும் ஜயங்கிடைக்கும். பரமேசுவரனே யடையவேண்டுமாயின் மெய்யை அடைக்கலஸ்தானமாகப் பற்றுங்கள், பொய்யையும் கபடத்தன்மையையும் விட்டுவிடுங்கள். உண்மையைப் பற்றுவதினலும், கருத்தை ஒரு வழிப்படுத்துவதினலும், நல்ல ஞானத்தினலும் அவ்வுண்மையின் மேலான இருப்பிடமாகிய பிரமத்தை யடையலாகும். முற்காலத்தில் திருப்தியான சித்தமுடையவர்களும், சுற்றமற்றவர்களுமான இருஷிகள் கேவலம் இவ்விதஉபாயங்களினலேயே சித்திபெற்றனர்.

Truth triumphs, not untruth. Through truth and meditation and the fulness of wisdom, this Being is gained. Through them the all—contented sages obtain the peace where He, the great abode of truth is.

---

(108). புரஹதாரணிய உபநிஷத்து

*சு-வது அத்தியாயம் நி-வது பிராமணம் கரி-வது வாக்கியம்.

ஸவா அயமாத்மா ஸர்வேஷாம் பூதானும்
அதிபதி: ஸர்வேஷாம் பூதானும் ராஜா.

பொழிப்புரை.

அப்படிப்பட்ட இந்த பரமாத்துமா எல்லா உயிர்களுக்கும் தலைவர், எல்லா உயிர்களுக்கும் அரசர்.

விசேஷ உரை.

அவர் யாவற்றையும் நியமமாக வைத்திருக்கிறார், சரஞ்சபடி இரக்ஷிப்பும் சிக்ஷிப்பும் நியதமாகக்கொடுத்துவருகிறார்.

This God is the Lord of all beings, the King of all beings.

---

(109). புஹதாரண்ணிய உபநிஷத்து

6-வது அத்தியாயம் 4-வது பிராமணம் 14-வது வாக்கியம்.

இஹைவஸந்தோ தவித்மஸ்தத்வயம்
நசேதவேதிர்ஹதீவிநஷ்டி:;
யயேதத்விதுரம்ருதாஸ்தேபவந்தி
அதேதரேது:கமேவாபியந்தி.

பொழிப்புரை.

இவ்விடத்திருந்தும் நாம் அவரையறிகிறோம். நாமவரை அறியாவிடின் மிகுந்த கெடுதியுண்டாகும்; யார் இவரை அறிகின்றனரோ அவர்கள் அழிவற்ற பதவியைப் பெறுகின்றனர். பிறர் துயரத்தையே அடைகின்றனர்.

விசேஷ உரை.

என்ன ஆச்சரியம்! நாம் இவ்விடத்திருந்தும் அவரை அறிகின்றோம், இந்த இருள்மயமாயிருக்கிற ஸம்ஸாரத்தில் மூழ்கினவர்களாயும் மறைக்கப்பட்டவர்களாயுமிருந்தும் நமது ஞானக்கண் அந்த உண்மை ஞானச்சுடரைக் காணக்கூடியதாயிருக்கிறது. மேலும், நம்மூள்ளம் அவரிடத்தில் தூய்மையான அன்பை வைத்துப் பாபதாபங்களிலிருந்து மீட்பைப் பெறுகின்றது. இதைவிட வியக்கத்தக்கது வேறென்ன இருக்கிறது? இதனாலேதான் நாம் பாக்கியவான்களாயிருக்கிறோம். அவர் இம்மண்ணுலகத்தில் எத்தனை வகையான உயிர்களைப் படைத்திருக்கின்றனர், அவற்றிற்கெல்லாம் இவ்விதமான வல்லமையையும், அதிகாரத்தையும் தரவில்லை,நம்மிடத்தில் கிருபைசெய்து இவையனைத்தையும் தந்தார். இதனால் நாம் கிருதார்த்தர்களாகிறோம். இதனாலேதான் நாம் எல்லா செல்வத்தையும் அடைந்திருக்கிறோம். நாம் அவரை இம்மையில் அறியக்கூடாவிடினும், அவருடன் இடைவிடாத நித்திய சம்பந்தத்தை உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடாவிடினும், அப்பொழுது நாம் முடிவற்ற தீய நிலைமையை அடைவோம். அப்படியாயின் இந்த சம்சாரமாகிய துயரக்கடலில் விழுந்து வேறெவ்விடத்தில் புகுமிடம் பெறுவோம்; உலகத்தாரால் கடுமையாய் நடத்தப்பட்டு எவ்விடத்தில் குளிர்ச்சியைப்பெறுவோம்? மரணபயத்திலிருந்து நம்மை யார் மீட்பார்கள்?

Being even here we have known Him: if we had not known Him, great would have been the ruin. They, who know Him become immortal, others go to misery.

(110). முண்டகோபநிஷத்து

3-வது முண்டகம் 1-வது கண்டம் 3-வது வாக்கியம்.

யதாபஶ்யः பஶ்யதே ருக்மவர்ணம்
கர்தாரமீசம் புருஷம் ப்ரஹ்மயோநிம்;
ததாவித்வான் புண்யபாபேவிதூயநிரம்ஜநः
பரமம்ஸாம்யமுவைதி; மஹாந்தம்
விபுமாதமாநம் மத்வாதீரோ நஶோசதி.

பொழிப்புரை.

எப்பொழுது ஞானி ஸ்வப்பிரகாசனுகவும், உலகத்தின் கருத்தாவாகவும், நியந்தாவாகவும், காரணஸ்வரூபியாகவும் இருக்கிற பிரமத்தைத் தரிசிக்கிறாரோ; அப்பொழுது அவர் புண்ணிய பாவங்களிலிருந்து நீங்கி, கல்மஷமற்ற உயர்ந்த பதவியைப்பெறுகிறார். விவேகி மஹானும் சர்வ வியாபியுமான பரமாத்துமாவை அறிந்து பிறகு துயரப்படுகிறதில்லை.

விசேஷ உரை.

எப்பொழுது ஞானத்தைப்பெற்ற பிரமநிஷ்டராகிய பிரமோபாசகர் தனது ஞானக்கண்ணினால் பிரமத்தை நேரே தரிசிக்கிறாரோ, அப்பொழுதுஅவர் பிரமத்தையடைந்து பாபத்திலிருந்து நீங்குகிறார்; மேலும் புண்ணியத்தின் பயனை விரும்பி யாதொரு செய்கையும் செய்வதில்லை. அவர் விடயசம்பந்தமற்றவராகி, உலகத்தினது நன்மையின் பொருட்டும், கடவுளினது அன்பின்பொருட்டும் கடவுளுக்கன்பான கரியங்களைச் செய்கிறார். எப்பொழுது பிரபுவானவர் உள்ளத்திலெழுந்தருளுகிறாரோ, அப்பொழுது மனோவிருத்திகளனைத்தும் அடங்குகின்றன, அப்பொழுது சித்தம் சமத்தன்மையைப்பெற்றுத் தூய்மையுடனிருக்கின்றது. விவேகிகள் கடவுளையடைந்து பின்பு தீனத்தன்மையில் மூழ்கித்துயரப்படுவதில்லை.

When the wise man seeth the All—glorious, the Lord, the Governor, the Perfect, the Cause, the Supreme, he the knower, being free, and washed from virtue and vice, attaineth great tranquillity knowing the Great and all pervading, the wise man grieveth not.

---

(111). புஹதாரணிய உபநிஷத்து

6-வது அத்தியாயம் 4-வது வாக்கியம்.

பரமேவாக்ஷரம் ப்ரதிபத்யதே
ஸயோஹவைததச்சாயமசீர மலோஹிதம்
சுப்ரமக்ஷரம் வேதயதே:.

பொழிப்புரை.

யார் அந்த இருளற்றவராகவும், வருணமற்றவராகவும், தூய்மையானவராகவும் அழிவற்றவராகவுமிருக்கிறவரை அறிகிறாரோ அவரந்தச்சிறந்தவரும் அழிவற்றவருமானவரை அடைகிறார்.

விசேஷ உரை.

பரமேசுவரர் எப்பொழுதும் எங்கும் இருக்கிறார். தூய்மையான சித்த முடையவர்களாகி அவரை அறிந்தாற்றான் அவரை அடையலாகும்.

The Being all excellent and imperishable, he gaineth who knoweth Him, Who is shadowless bodiless, colourless, pure, and undying.

---

(112). சாந்தோக்கிய உபநிஷத்து

8-வது பிரபாடகம் 7-வது கண்டம் 3-வது வாக்கியம்.

யஆத்மா பஹ்ரதபாத்மாவிஜரோவிம்ருத்யுர்
விசோகோ விஜிகத்சோ பிபாச: ஸத்யகாம:
ஸத்ய ஸம்கல்ப:; ஸோந்வேஷ்டவ்ய:
ஸவிஜ்ஞாஸிதவ்ய:; ஸஸர்வாம்ஸ்ச
லோகாநாப்நோதி ஸர்வாஸ்சகாமான்
யஸ்தமாத்மாநமநுவித்யவிஜாநாதி.

பொழிப்புரை.

எந்தப்பரமாத்துமா பாபமற்றவரோ, மூப்பற்றவரோ, சாவற்றவரோ, துயரமற்றவரோ, பசிதாகங்களற்றவரோ, ஸத்திய காமரோ, ஸத்திய சங்கல்பரோ அவர் தேடப்படத்தக்கவர், விசேஷமாகவறியப்படத்தக்கவர். யார் அப்படிப்பட்ட பரமாத்துமாவைத்தேடியறிகிறாரோ, அவர் எல்லா உலகங்களையும் எல்லா விருப்பங்களையும் அடைகிறார்.

விசேஷ உரை.

நாம் பூரணத்தன்மையற்றவர்களும், திரிபான உணர்ச்சியுடையவர்களும், பாபத்தினால் கவரப்பட்டவர்களுமான உயிர்களாகவிருந்தும்; பாபமற்றவரும் பரிசுத்தரும், பரிபூரணரும், ஸத்தியமானவரும், அழிவற்றவருமான புருஷனை அறியக்கூடியவர்களாகவிருப்பது நமக்குச்சாதாரணமான பாக்கியமன்று. ஆனால், அவரை அறியவேண்டுமாயின், நமது அந்தரங்கமான விருப்பமும், முயற்சியும், நடக்கையும் ஆவசியகங்களாகவிருக்கின்றன. தீர்வேட்கைகொண்ட

மான் எப்படி நீரைத்தேடுமோ அதுபோல அந்த நித்தியரும், ஸத்தியரும், விகாரமற்றவரும், அழிவற்றவருமானவரை விரும்பித் தேடல்வேண்டும்; மேலும் உள்ளங்கைக்கனி எவ்வளவு பிரத்தியக்ஷமாகவிருக்கின்றதோ, அதுபோல அவரைத்தூய்மையான ஞானத்தின் வழியாக ஐயமில்லாவண்ணம் அதி சமீபஸ்தராக அறிய விரும்பல்வேண்டும். பொறிகளை வென்று விசேஷமாகத்தேடிய பின்னர் அவரைக்குற்றமறறஒளிவடிவாகிய தமக்குள் ஆன்மாவுக்கான்மாவாகவும், பிராணனுக்கு பிராணனுகவும், யாவற்றிற்கும் காரணராகவும், பற்றுக்கோடான வராகவும் பிரத்தியக்ஷமாகவறியக்கூடுமாயின் கீர்வேட்கையிஞல் வருந்திய மான் எப்படி நீரையடைந்து திருப்தியைப்பெறுமோ, அதுபோல அவர் திருப்தியடைகிறார். அவரது எலலா விருப்பங்களும் வித்தியாகி பூமி முதலிய சகல உலகங்களினுடைய சுகத்தையும் அடைகிறார்; அவர் பிரம்மாநந்தத்தைப் பெற்று சகல ஆனந்தங்களையும் அநுபவிக்கிறார்.

God is without vice without decay, without death, without sorrow, without hunger, without thirst. What He willeth is done, what He resolveth is effected, He shouldbe sought after. He should be known. He gaineth all world and all desires who, seeking God, knoweth Him.

---

(113). முண்டகோபநிஷத்து.

1-வது முண்டகம் 1-வது கண்டம் 5-வதுவாக்கியம்.

அபரா ரிக்வேதோ யஜுர்வேத: சாமவேதோ
தர்வவேத: ஸிக்ஷாகல்போவ்யாகரணம்
நிருக்தம் சந்தோ ஜ்யோதிஷமிதி;
அதபராயயாததக்ஷரமதிகம்யதே.

பொழிப்புரை.

இருக்குவேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸ், சோதிடம் இவை சிறந்த வித்தியைகளன்று. அழிவற்றபொருளை எதனலறிகிறார்களோ, அதுவே சிறந்த வித்தை.

விசேஷ உரை.

கடவுளினது தன்மையையும், அவரது கருத்தையும் பற்றிய ஞானத்தைப் பெறுவது மனிசனது முக்கிய புருஷார்தம். எந்தக் கல்வியக்கற்றால் மிகவும் விரும்பத்தக்க அந்த ஞானரத்தினத்தைப் பெறலாமோ, அதுவே உண்மையான கல்வி; அதுவே உயர்ந்தகல்வி; அதற்கு வேறான யாவும் உயர்ந்த வித்தைகளன்று. இக்காரணத்தினால் இருக்கு, யஜுசு, சாமம், அதர்வணம், என்னும் வேதங்களும் சிக்ஷை கலபம், வியாகரணம் சந்தசு, சோதிடம் என்னும் வேதாங்கங்களும் அகூசரவிலக்கணம், இலிகிதம், கணிதம், புராணம், நீதி சாஸ்திரம், சருமசாஸ்திரம், யோக சாஸ்திரம், மந்திர சாஸ்திரம், சகுண சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், உருவ சாஸ்திரம், சாமுத்திரிகம், இதிகாசம், அலங்காரம், மதுரபானம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திர பரிட்சை, கன பரிட்சை, கஜ பரிட்சை, அசுவ பரிட்சை, இரத்தின பரிட்சை, பூமி பரிட்சை, சங்கிராமலிக்கணம், மல்லயுத்தம், ஆகருடனம், உச்சாடனம், வித்துவேடணம், மதனசாத்திரம், மோகனம் வசிகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பீலீவாதம், கவுத்துகவாதம், சாதுவாதம், காரூடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம். பரகாயப்பிரவேசம், அதிரிசியம் இந்திரஜாலம், மகேந்திரஜாலம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப்பிரயோகம், என்றுதி 64-கலைசகியானங்களும், இவையெல்லாம் சிறப்பற்ற வித்தைகளென்று கூறப்பட்டன. இருக்கு, யஜுஸு, சாமம் முதலியவற்றில் எந்தெந்தப்பிரிவுகள்; மேலும் வேறொந்த எல்லாவித்தைகள் பிரம விஷயமாக உண்மையான தத்வோபதேசத்தைச் செய்கின்றனவோ, அவையே சிறந்த வித்தைகள். அவை யாவரும்வாசிக்கத் தக்கவை.

The inferior knowledge is the Rig Veda, the Yajur Veda, the Sama Veda, the Atharva Veda, Siksha, Kalpa, Vyakarana, Nirukta, Chandas and Jyotish. The superior knowledge is that by which the Undecaying is known.

Siksha is Treatise on Intonuation.

Kalpa	... ...	Ritual
Vyakarana	... ...	Grammar.
Nirukta	... ...	Signification of obsolute words.
Chandas	... ...	Prosody.
Jyotish	... ...	Astronomy.

(114). புரஹதாரணிய உபநிஷத்து

6-வது அத்தியாயம் 4-வது பிராமணம் 23-து வாக்கியம்.

நைநம்பாப்மாதரதிஸர்வம் பாப்மாநந்தரதி
நைநம் பாப்மாதபதிஸர்வம் பாப்மாநந்தபதி;
விபாபோவிரஜோ அவிசிகித்ஸொ ப்ராஹ்மணோபவதி.

பொழிப்புரை.

இவரைப் பாபம் பற்றாது. இவர் எல்லாபாபத்தையும் கடக்கிறார்; இவரைப்பாபம் தபிக்கச்செய்யாது, இவர் எல்லாபாபத்தையும் தபிக்கச்செய்கிறார்; இவர் பாபமற்றவரும் நிச்சலமான சித்தமுடையவரும் கடவுள் ஒருவர் உளர் என்பதில் ஐயமற்றவரும் பிராம்மோபாசகராகிறார்.

விசேஷ உரை.

யார் ஞானக்கண்ணே பிரமமென்னும் லக்ஷியத்தினிடத்தில்வைத்து தரும மார்க்கத்தில் செல்லுகிறாரோ அவரை பாவம் வந்து பற்றமாட்டாது. அவர் பாபதாபங்களிலிருந்து நீங்கி பிரமோபாசகராகிய பிராம்மணராகிறார்.

Vice cannot subject him, He subjecteth vice, Vice cannot oflict Him, He aflicteth vice, Being viceless, pure, and without any religious doubts, one becometh a Brahmin.

---

(115). புரஹதாரணிய உபநிஷத்து

6-வது அத்தியாயம், 5-வது பிராமணம் 6-வது வாக்கியம்.

ஆத்மவா அரேத்ரஷ்டவ்யஃ
ஸ்ரோதவ்யோமந்தவ்யோ நிதித்யாஸிதவ்யஃ.

பொழிப்புரை.

பரமாத்துமாவினது தரிசனமும், சிரவணமும், மனனமும் நிதித்தியாசனமும் செய்தல் வேண்டும்.

விசேஷ உரை

பரமாத்துமாவை சரிசித்தல் வேண்டும் என்றால் அவர் செய்தருளிய இவ்வுலகப்படைப்பினால், அவரது ஞானத்தையும், சத்தியையும், மகிமையையும் அறிதல் வேண்டும். யாவற்றிற்கும் உயிரைப்போன்றிருக்கிற அவரை எங்குமுள்ளவராகத் தெரிந்துகொள்ளல் வேண்டும்; மேலும் ஞானிகளாகிய ஆசாரியர்களிடத்தில் அவரது மகிமையை வெளியிடுகிற உபதேச வாக்கியங்களினத்தையும் மிகுந்த அன்புடன் கேட்டல்வேண்டும். உலகத்தில் அவரது மகிமையைக் கண்ணுற்று; மேலும் ஆசாரியர்களிடத்தில் அவரது பெருமையைக்கேள்வியுற்று இவையினத்தையும் மறுபடியும் ஆலோசித்து அவரைக்குருதல்வேண்டும். பிறகு அவரை நிச்சயமாக தியானித்தல் வேண்டும் அவரிருத்தலில் ஐயமற்றவர்களாகி அவரிடத்து ஆத்துமசமர்ப்பணம் செய்தல் வேண்டும்.

God should be seen, heard of, thought of, and meditated upon as an Object known beyond any doubt.

(116). கடோபநிஷத்து

6-வது வல்லி 15-வது வாக்கியம்.

யதா ஸர்வே ப்ரபித்யந்தே ஹ்றுதயஸ்யே ஹக்ரந்தய:; அதமர்த்யோ அம்ருதோபவத்யே தாவதநுஸாஸநம்.

பொழிப்புரை.

இவ்வாழ்க்கையிலேயே எப்பொழுது உள்ளத்தினது பாபமாகிய முடிச்சுகளனைத்தும் அவிழ்ந்துபோகின்றனவோ, அப்பொழுது மனிதன் அழிவற்ற நிலையைப் பெறுகிறான். இது தான் உபதேசம்.

விசேஷ உரை.

அஞ்ஞானமும், மோகமும் நமதுள்ளத்திலுள்ள முடிச்சுகள். பாவவிருப்பமும் அஞ்ஞானமுமாகிய உள்ளத்திலுள்ள முடிச்சுகளனைத்தையும் அழிக்காவிடின், மிகத்தூய்மையையுடைய புருஷனை அடைவது சம்பவமன்று. மிகவருத்தத்துடன் நீக்கத்தக்க இவ்வுள்ளத்தின் முடிச்சுகளனைத்தும், நீங்கியபொழுது எந்த நல்லவழியைப்பற்றின் சிறந்த பிதாவுக்குருகேசென்று, ஒரு பயமுமின்றி, அவருடன் பேரானந்தத்தில் அழிவற்ற வாழ்க்கையைப் பெறுவோமோ, அவ்வழிப்போக்கர்கள் ராஜமென்றும், மரணத்தைக் கடந்து பரம புருஷனை அடைந்தனமென்றும் அறியக்கடவோம். இது ஸ்ருதிசாசனம் இது உபதேசம்.

When the knots of error and sin in the heart are destroyed, then the mortal man becometh immortal. Thus much is our instruction.

(117). முண்டகோபநிஷத்து

1-வது கண்டம் 7-வது வாக்கியம்.

நாராயணம்.

10-வது அனுவாகம் 20-வது வாக்கியம்.

சுவேதாசுவதர உபநிஷத்து

3-வது அத்தியாயம் 9-வது வாக்கியம்.

வ்ருக்ஷ இவஸ்தப்தோ திவிதிஷ்டத்யேக:; தேநேதம்பூர்ணம்புருஷேண ஸர்வம்.

பொழிப்புரை.

அத்துவிதியனுகிய பரமாத்துமா விருக்ஷத்தைப்போல நிச்சலமாகவிருந்துகொண்டு ஸ்வப்பிரகாசமாகிய மகிமையில் வீற்றிருக்கிறார். அந்தப்பூரணபுருஷனல் இவையாவும் நிறைந்திருக்கின்றன.

விசேஷ உரை.

இவ்வுலகாதிபதியைப் பற்றிக்கொண்டு உலகமாகிய சக்கிரம் எப்பொழுதும் சுழன்றுக்கொண்டும்; மேன்மேலும் விருத்தியடைந்துக்கொண்டும், அவரது நன்னெஞ்சங்களனைத்தையும் முடிக்கின்றது. அவர் சாக்ஷியாகவும், நியந்தாவாகவும், எப்பொழுதும் நிச்சலமாயிருந்துக்கொண்டு தன்னல் கருதப்பட்ட நன்மைகள் வினவதில் ஐயமற்றிருக்கிறார். ஆற்றுப்பெருக்கினல் ஆற்றங்கரையிலிருக்கிற கிராமங்களும் நகரங்களும் மூழ்கிப்போகின்றன; அதேக தேசங்களும், பிரதேசங்களும் வெள்ளத்திலடித்துக்கொண்டு போகின்றன; மிகுதியான காற்றும் அதிபயங்கரமான பூகம்பமும் உண்டாகி அதேக லக்ஷம் உயிர்களை சாவின் வாயில் விழச்செய்கின்றன; ஆனல், சருவஜ்ஞரும், நன்மைக்கே இருப்பிடமுமாகிய பரமேசுவரர் தற்காலத்திற்கு தன்பத்தைத் தருவதாகத் தோற்றுகிற இக்காரியங்களனைத்தையும், பிற்காலத்தின் அதுகூலத்திற்காகச் செய்து கலக்கமற்று நிச்சலமான தன்மையில் வீற்றிருக்கிறார். எப்பொழுது மிகக்கொடியதாகிய கல்மாரியினலும், மேக மூழக்கத்துடன்கூடி அடிக்கடி இடி விழுவதாலும், பூமிக்குப்பெரிய ஆபத்து வந்துவிட்டதாக நினைக்கத்தக்கதாக விருக்கிறதோ, மிகுதியும் அச்சத்தைத் தரத்தக்க அக்கினிமலைகளிலிருந்து நீ எழும்பி காற்பகைங்களிலுமுள்ள பசுக்கள் பரவைகள் மனிதர்கள் இவைகளுடன் கூடிய கிராமங்களையும் பட்டணங்களையும் தீக்கின்றதோ, அரசனலும் குடிகளாலும் யுத்தங்களுண்டாகி மனிதர்களினது கண்டங்களிலிருந்து வருகிற இரக்தப்பிரவாகத்தினல் பூமி மூழ்கிப்போகிறதோ; அப்பொழுது, அவர், தான் வெகுகாலமாகக்கருதிய முடிவான நன்மையை நிறைவேற்றும் விஷயத்தில் நிச்சயமுடையவராக விருந்துக்கொண்டு எப்பொழுதும்போல சாந்தாகவிருக்கின்றார்.

அவர் தனது ஸ்வப்பிரகாசமான மகிமையிலிருக்கின்றார். மற்றவையாவும் அவரைப்பற்றிக்கொண்டேயிருக்கின்றன, அவர் ஒன்றையும் பற்றிக்கொண்

டிருக்கவில்லை; அவர் தனது மகிமையிலேயே இருக்கின்றார். அந்தப் பூரண புருஷனால் இவ்வுலகம் யாவும் நிறைந்திருக்கிறது.

Still as a motionless tree, He, the One, dwelleth in His glory. All this is full of Him, the Perfect.

(118). முண்டகோபநிஷத்து

2-வது முண்டகம் 1-வது கண்டம்.

திவ்யோஹ்யமூர்த:புருஷ: ஸபாஹ்யா
ப்யந்தரோஹ்யஜோ ப்ராணோஹ்யமநா:;
யம்பஸ்யந்தியதய:க்ஷீணதோஷா:.

பொழிப்புரை.

ஸ்வப்பிரகாசர், நிரவயவர், பூரணபுருஷர், யாவற்றிற்கும் உள்ளேயும் வெளியேயும் நிறைந்திருப்பவர், பிறப்பற்றவர், சாரீரிக பிராணமற்றவர், பரிமிதமான மனதற்றவர்; இவரை தோஷங்களை நசிக்கச்செய்துகொண்ட யத்தினசீலர்கள் பார்க்கின்றனர்.

விசேஷ உரை.

அவர் ஸ்வப்பிரகாசர், எல்லும் விளங்கிக்கொண்டிருக்கிறார். இந்த அதி விஸ்தீரணமான உலகத்தின் ஒவ்வொருபொருளும் அவரிருக்கிறரென்பதற்குப் பிரமாணத்தைத் தருகிறது. இவற்றின் ஒவ்வொரு சக்தியம், இவற்றிற்குக் காரணமாகிய அவரது மூல சக்தியை விளக்குகிறது. அவருக்கு ஒரு மூர்த்தியில்லை. அவர் பூரண புருஷர்; அவர் எல்லாப்பொருள்களுக்கு வெளியேயும், எல்லாப்பொருள்களுக்கு உள்ளேயுமிருக்கிறார். அவர் பிறப்பற்றவர், அவர் என்றுமுள்ளவர், அழிவற்ற தன்மையுடையவர். அவர் மனிதர்கள் முதலியவர்களைப்போல பிராணவாயுவைப்பற்றிக்கொண்டு ஜீவித்திருப்பதில்லை; அவர் தானே பிராணஸ்வரூபி, அவர் பிராணத்திற்குப் பிராணமானவர். மனது அவரால் படைக்கப்பட்ட பரிமிதப்பொருள்களிலொன்று; ஆனதால், அவருக்கு இப்படிப்பட்ட மனதிருக்குமென்று நினைப்பதற்கிடமில்லை. அவரது ஞானம் மனது ஞானத்தைப்போல மனோவிருத்தியன்று, அவரது ஞானக்கிரியை இயற்கையாகவுள்ளது. யார் பாபாசரணையை விட்டு வெறுப்புடனிருந்து பரிசுத்தர்களாகி அவரைத்தேடுகின்றனரோ அவர்கள் அவரைப் பார்க்கின்றனர்.

He is glorious, formless and perfect is within and without, is unborn, and is without organic life and finite mind. He is seen by them who seek after Him and are viceless.

(119). சுவேதாசுவதர உபநிஷத்து

1-வது அத்தியாயம் 12-வது வாக்கியம்.

ஏதத்ஜ்ஞெயம் நித்யமேவாத்மஸம்ஸ்தம்
நாதஃபரம்வேதிதவ்யம்ஹிகிஞ்சித்.

பொழிப்புரை.

எப்பொழுதும் ஆன்மாவிலிருக்கிற பரமாத்துமாவே அறியப்படத்தக்கது அதன்பின்னர் அறியப்படத்தக்கது சிறிதும் இல்லை.

விசேஷ உரை.

பரமாத்துமா சர்வவியாபி, அவர் எல்லாவிடங்களிலுமிருக்கிறார்; அவர் நிருமலர், அவர் நிஷ்களர், யாதொரு களங்கமும், யாதொரு தீமையும் அவரை பணுகவல்லதன்று. அவர் நிரவயவர், அவருக்கு ஓரவயவமும் இல்லை. ஆனதால் அவர் சரம்பற்றவர், அவருக்கு சரம்பில்லை; மேலும் அவருக்குப்புண்ணுமில்லை காயமுமில்லை. அவருக்கு உடலைப்பற்றிய ஒரு தீங்கும் துன்பமுமில்லை. அவர் எப்படி உடலற்றவரோ, அப்படியே பரிமிதமாகிய மனதுமற்றவர். ஆனதால் மனதைப்பற்றிய தீங்குகளாகிய பாவம் துயரம் இவை யாவும் அவருக்கில்லை. நாம் எப்படி பிணியினால் வருந்துகிறோமோ, துயரத்தினால் வியாகூலப்படுகிறோமோ, பாபத்தினால் சபிக்கப்படுகிறோமோ, அப்படி அவரில்லை; அவருக்கு பிணியில்லை, துயரமில்லை, பாபமில்லை; அவர் புண்ணற்றவர் அவர் சுத்தர், அவர் பாபமற்றவர், அவர் யாவற்றையும் பார்ப்பவர், அவர் கவி. செளரமண்டலத்தில் கிரகங்கள் அமைக்கப்பட்டிருக்கிற சிறந்த வரிசைக்கிரமமென்ன, அமுதம்பொழியும் பூரணச்சந்திரனது இரமணீயமான ஒளி என்ன, ஞானம் தருமம் என்னும் இரத்தினங்களினது அபூர்வமான மஹிமைவின்பத்தைத் தரும் தன்மை என்ன, இவை யாவும் அவரது மிகவல்லமையும் வியப்புமான சிலவே. அவர் மநீஷி, அவர் மனதினது நியந்தா, மனதின் நியந்தாவாகிய பரமபுருஷன் வெவ்வேறினமான ஜந்துக்களின் கருத்துகளில் வெவ்வேறு நியமங்களை ஏற்படுத்தியிருக்கிறார்; ஆனால் பிரிவற அவ்வெல்லா நியமங்களினது நோக்கமும் இவையனைத்தும் சுகமாகவிருக்கவேண்டுமென்பதே. விசேஷமாக அவர் மனிதனது மனதை அவனது ஞானமும் தருமமும் உயர்வதுடன் அவன் ஆத்மோந்நதியும் அடையத்தக்கவிதமாக அதிவியப்பான நியமங்களினது ஸ்வாதீனப்படுத்தியிருக்கிறார். மனித ஆன்மா அவரது மிகுந்த முயற்சியின் பொருள்; மிகுந்த வல்லமையுடன் அவரதைக்காத்துவருகிறார். மனித ஆன்மா மோகமாகிய வலையினின்றும், துயரத்தினால் வரும் வியாகூலத்தினின்றும் பாபத்தினுடைய தாபத்திலிருந்தும். மரணத்தினது வாயிலிருந்தும் மீட்கப்பட்டு பிரமஞானத்தையும், பிரமாநந்தத்தையும், பெறத்தக்கவிதமாக இந்தத்தரும நியமங்களனைத்தும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறன. அவர் பரிபூரணர், அவர் யாவற்றிலும் சிறந்தவர், அவர் சுவயம்பு. அவர் தாமாக விளங்குகிறவர். எல்லா ஜந்துக்களும் அவரால் படைக்கப்பட்டு விளங்கச்செய்யப்பட்டிருக்கின்றன. அவருக்குப்பிறப்பில்லை, ஆதி, அவர் யாராலும் படைக்கப்பட்டவருமன்று, விளங்கச்செய்யப்படுகிறவருமன்று; அவர் எப்பொழுதும் தாமாக விளங்குகிறவராகவிருக்கிறார். அவர் எப்பொழுதும் பிரஜைகளனைவருக்கும் வேண்டிய பொருள்

ஞானத்தையும் பகர்ந்தகொடுக்கிறார். கீர் நிலம் வெளி குகைகளில் நிறைந்திருக்கிற புழுக்கள், விட்டிற்பறவைகள், எறும்புகள், மீன்கள், ஆமைகள், முதலைகள், பசுக்கள், பறவைகள், மனிதர்கள் முதலிய அளவற்ற அநந்தகோடி பார்ப்பதற்கரிய சூக்கும உயிர்களுக்கு அததனால் விரும்பப்பட்ட அந்நபானமுதலிய பல போகப்பொருள்களே வேண்டுமளவும் எப்பொழுதும் அதிதியாயமாகப்பகர்ந்தகொடுத்துக்கொண்டுவருகிறார். இவை அவற்றைப்பெற்று இங்குமங்குமாக சுகித்துக்கொண்டு சஞ்சரிக்கின்றன.

He is to be known Who dwelleth ever in himself. There is nothing else which is to be known in preference to Him.

---

(120). கடோபநிஷத்து

2-வது வல்லி 12-வது வாக்கியம்.

தந்துர்தர்சம் கூடமனுப்பிரவிஷ்டம் குஹாஹிதம்
கஹ்வரேஷ்டம் புராணம்; அத்யாத்மயோகாதிகமேந
தேவம் மத்வாதீரோஹர்ஷ சோகௌஜஹாதி.

பொழிப்புரை.

மிகவருத்தத்தினால் அறியப்படத்தக்கவரும், எல்லாப்பொருள்களிலும் அதி சூக்குமமாகப்பிரவேசித்திருக்கிறவரும், ஆத்மாக்களிலிருப்பவரும், அதிஸங்கடஸ்தானங்களிலுமிருப்பவரும், புராதனருமான அந்தத்தேவனே உள்ளத்தை விடயங்களினின்று நீக்கி பரமாத்துமாவினிடத்தில் சேர்த்து வைக்கும் சாதனையினால் விவேகிகளறிந்து சுகதுக்கங்களே விட்டுவிடுகின்றனர்.

விசேஷ உரை.

அவர் வருத்தத்தினாலறியப்படத்தக்கவர். விஷய போகத்தினால் நசித்த ஞானத்தையுடையவர்கள் அவரை ஒருபோதும் அறியவல்லவரல்லர்; அவர் தரிசனசாத்திரங்களேப்படிக்கட்டும், சருமதூல்களேப்படிக்கட்டும் அவர்களது உள்ளங்களிலுள்ள ஐயம் ஒருபோதும் நீங்குவதில்லை, அவர்களது ஞானம் ஒருபொழுதும் திருப்தியடைவதில்லை. ஸத்தியத்திற்கு ஸத்தியம் அவர்களுக்கருகில் நிழலேப்போல விளங்கிக்கொண்டிருக்கும். கட்டையில் எப்படி தீ மறைந்திருக்கின்றதோ, அதுபோல எல்லாப்பொருள்களிலும் அவர் சூக்குமமாகப் பிரவேசித்து மறைந்திருக்கிறார்; தூய்மையான சத்துவகுணமுடையவர்களும், பிரமஜிஷ்டர்களுமானவர்களுடைய நிருமலஞானத்திற்கு அந்தச்சிறந்த தேவதை எரிக்கப்பட்டகட்டையினின்று வெளிப்பட்டுப் பிரகாசிக்கிற தீயைப்போல விளங்குகிறார். அவர் ஆத்துமாவுக்கு அந்தராத்துமா, அவர் ஆத்துமாக்களிலெப்பொழுதும் குடிகொண்டிருக்கிறார். அவர் ஆகாயத்தில் ஓதப்புரோதத்தன்மையாகவிருக்கிறார், அவர் மலைகளினது குகைகளிலும், இமயம் கைலாயம் முதலிய மலைகளின் உச்சிகளிலும், மிகுதியான காட்டுத்தீயினிடத்திலும், பயங்கரமான சமுத்திரத்

தின் அலைகளிடத்திலும், ஜாசஞ்சாரமில்லாததும் போவதற்குக் கஷ்டமுமான இடங்களிலும் அவர் எப்பொழுதும் வீற்றிருக்கிறார். அவர் நமது நேரான தந்தை, அவர் நமது அழிவற்ற பாட்டன். விவேகிகள் அத்தியாத்மயோகத்தினால் அந்த அறிவதற்கரிய பரமாத்துமாவை அறிந்து இன்பதன்பங்களைவிட்டு நீங்குகின்றனர். பரமாத்துமாவினிடத்தில் ஜீவாத்துமா சேர்ந்திருப்பதே அத்தியாத்மயோகமென்று சொல்லப்படும். அத்தியாத்மயோகத்தில் எப்பொழுது நமது கருத்து அவர் கருத்துடன் சேருகின்றதோ, எப்பொழுது அறிவு அவரது ஸதாதிய ஸுந்தர மங்களஸ்வரூபத்தை அறிந்து திருப்தியடைகின்றதோ; அப்பொழுது, உள்ளம் அவருக்கு அன்பென்னும் காணிக்கை செலுத்தி, ஆநந்தக்கடலில் மூழ்கி விடய இச்சையினுலுண்டாகும இன்பதன்பங்களிலிருந்து நீங்குகின்றது. எவ்வளவு தூரம் நமது கருத்து அவர் கருத்தோடும், நமது அறிவு அவர் அறிவோடும், நமது அன்பு அவர் அன்போடும் சேருகின்றதோ, அவ்வளவுக்கு நமக்கும் அவருக்குமுள்ள சம்பந்தம் அதிக உறுதியுமுள்ளதாகின்றது. மேலும், அவ்வளவுக்கு அவரது தூய்மையான ஸாமீப்பியத்தைப் பெற்றுத் தூய்மையுடையவர்களாகிறோம். இப்படிப்பட்ட *யோகத்தினுலேயே அவரை நாம் அறியவல்லோம், இப்படிப்பட்ட யோகத்தினுலேயே அவரால் கட்டளையிடப்பட்ட தருமானுஷ்டானத்தினுல் பலத்தைப் பெருகிறோம். இவ்விதமான யோகத்தினுலேயே மறுமை யின்பம் கிடைக்கிறது, இவ்விதமான யோகதத்தினுலேயே முக்திகிடைக்கிறது.

* யோகம் என்னும் பதம் வடமொழிப்பதம், அப்பதம் நிஷ்டை, உபசாரம், உபாயம், உயர்ச்சி, உற்சாகம், கூடல், சுகுஷத்திரமென்னும் பல பொருள்களைக் குறித்ததபோதிலும், இவ்விவகாரத்தில் மதவிஷயமான பொருளைகொள்ளல்வேண்டும். ஆகவே, யோகமென்னும் பதமானது பூர்வத்தில் யுகமென்னும் பதத்திலிருந்து மருவியிருக்கவேண்டும். அதாவது யுகியென்னும் வினையடியால், (பரமாத்துமாவை) ஆழ்ந்து யோசித்தறிந்துகூடும் நிலையெனகொள்ளல்வேண்டும்.

இந்த யோகத்தில் பலபிரிவுகளிருந்தாலும், அவற்றில் ஹதயோகம், இராஜயோகமென இரண்டு பெரிய வகுப்புகளுண்டு. இவ்விரண்டில் ஹதயோகமாவது=தனது இஷ்டதத்தின்படி மனதை வசப்படுதத்திக்கொள்ள ஸ்தூலதேகத்தை பழகுவதேயாம். அதாவது தலைகீழாக நிற்றல், தண்ணீர்மீதும் தீயின்மீதும் நடந்துபோதல், மரகிளைகளில் ஒரு கரதத்தையும், அல்லது ஒருகாலையும் மாட்டித் தொங்கியாடல் சிலசமயங்களில் ஆகாயத்தில் நிற்றல் முதலியவைகளாம்.

இராஜயோகமாவது=ஹதயோகத்தினுல் ஸ்தூலதேகத்தையும் மனம் புத்தி சித்தாகிய தமது அடிமையாக்கி ஆத்மாவின் அபீஷ்டப்படி நடக்கச்செய்வதேயாம்.

அங்கிசை முதலிய, இயமம்; தபசு முதலிய, நியமமும்; சுவஸ்திக முதலிய, ஆசனமும்; இரேசக முதலிய, பிராணயாமமும்; சரீர முதலிய, பிறத்தியாகாரமும்; பூத முதலிய, தாரணையும்; அஷ்டதார முதலிய, சமாதியும், என்னுமிவற்றை அனுஷடிக்கும் நிலையேயாம் அவையாவன.

* இயமம், நியமம், ஆஸனம், பிராணயாமம், பிறத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டு வகுப்படும். இதுவே அஷ்டாங்கயோகமாம்.

☞ இந்த யோக விஷயத்தை விவரமாக அறிய விரும்புவோர் எமது ராஜயோக விளக்கவிடையைப் பார்க்கவும்.

Him the Being Divine and difficult to be comprehended that is hidden within all things, is seated in the hearts of beings, and is in all inaccessible places; Him who is the Ancient, the wise, knowing by concentration of mind upon Him, avoid both mirth and sorrow.

---

(121). முண்டகோபநிஷத்து.

3-வது முண்டகம் 2-வது கண்டம் 3-வது வாக்கியம்.

நாயமாத்மாப்ரவசநேநலப்யோ நமேதயாந
பஹூநாச்ருதேந; யமேவைஷ வ்ருணுதேதேந
லப்யஸ்தஸ்யைஷ ஆத்மாவ்ருணுதே
தநூம்ஸ்வாம்.

பொழிப்புரை.

இப்பரமாத்துமா நல்ல சொற்களினால் பெறப்படமாட்டார், புத்தியினாலுமில்லை, பலகேள்விகளினாலுமில்லை; யார் அவரை விரும்புகிறார்களோ, அவர்களால் அவர் பெறப்படுகிறார். பரமாத்துமா அப்படிப்பட்டவருக்குத் தனது தன்மையை விளங்கச்செய்கிறார்.

விசேஷ உரை.

அவரையடையவேண்டுமென்னும் முயற்சியும் *பக்தியும் இராவிடின், நல்லபுத்தியிருக்கினும்; மேலும், நல்ல உபதேச வாக்கியங்களைக் கேட்கினும், எதனாலும் அவரை அடையக்கூடாது. யார் தாகங்கொண்ட வழிப்போக்கரைப்போல, கவலையுடையவராகி தனிமையில் அவரை பக்தியினால்தேடுகின்றனரோ அவர்கள் முன்பாகவே பரமாத்துமா தனது ஸ்வரூபத்தை விளக்குகிறார். அப்பொழுது அந்தச்சாதகர் விரும்பியதைப் பெற்றவராகியும் தூய்மையுடையவராகியும் திருத்தியுடையவரும் ஆகிறார்.

*பக்தி—என்னும் பதம் வடமொழிப்பதம். இந்தப்பதத்திற்கு அமரம் அல்லது காமலிங்காநுசாசனமென்னும் கிரந்த வியாக்கினமாகிய தருபால பிரபோதம் என்னும் கிரந்தம் தவிதியகாண்டம் 623-வதில் "பிஸ்ஸா ஸ்ரீபக்தமம் தொன்னமோதனே ஸ்ரீஸதீதிவி" என்ற சுலோகத்தினால் பக்தி என்னும் பதமானது "பஜ்ஜதி இதி பக்தம்; பஜ" ஸேவயாம் = ஆசரிக்கக்கூடியது,

என்றும்; ஸமஸ்கிருத சப்தார்த்த கல்பதரு என்னும் பெரிய ஸமஸ்கிருத அகராதியில், பக்தி என்னும் பதத்துக்கு பாக=பாகம், ஸேவாயாம்=ஸேவித்தல் என்று பொருளாகுமென காஞ்சர்த்தரத்னமாலா என்னும் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருப்பதாகவும், 'சப்தஸிந்தார்த்த சந்திரிகா' என்னுங்கிரந்தத்தில் யாகே, பக்தியோகம், செய்தல், க்பாவே, அபிப்பிராயம் என்றும் பொருள்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அன்றியும் சாண்டலிய ரிஷியர்கள் செய்த பக்தி சூத்திரங்களுக்கு வியாக்கியானம் செய்த சுவப்பனேசுவர சுவாமிகள் அந்த கிரந்தத்தின் 56-வது சூத்திரத்துக்கு வியாக்கியானம் செய்த போது, பக்தி என்ற பதமானது பஜன் என்ற பதத்துக்குப் பொருளென்றும், இந்த இரண்டு பதங்களும் பஜ் என்னும் தாதுவிலிருந் துண்டானதென்றும்,— அதாவது பஜ யதி, இபிஹி என்பதனால், பரமேசுவரரைப்பஜிக்குந் தொழிலுக்கு பக்தி என்றும், பஜி என்ற பதம் சகார ஜகார இலக்கண சந்திபேதங்களினால் பக்தி என்றுயிற்றென்றும் சொல்லியிருக்கிறார். மேலும், சைதன்னிய சுவாமிகள் 'பக்தி' என்னும் பதத்திலிருக்கும் ப=எழுத்து பரமேசுவரரையும் க்=ஜீவாத்மாவையும் தி=சேர்ப்பதெதுவோ அது பக்தி என்று சொல்லுவதற்கனுகூலமாகவே, வேதமூர்த்திகளான ஸ்ரீ சங்கராசாரி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய 'சிவானந்தலஹரி' என்னுங்கிரந்தத்தில் "அங்கோலம் நிஜ பீஜ ஸந்ததி ரயஸ்காந்தோபலம் ஸூசிகா ஸாத்வீநைஜ விபும்லதாகமி திருஹம் வின்தஸ்ஸரித்வல்லபம், பிராப்நோதிஹயதா ததா பசுபதே! பாதாரவிந்தத்வயம் சேதோவ்ருத்தி ருபேத்யதிஷ்டதி ஸதாஸா பக்திரித்யுச்சதே" = அழிஞ்சற் செடியின் விதைகள் பக்குவமான காலத்தில் பூமியில் உதிர்ந்த மறுபடியும் யாதொருவருடைய பிரயத்தனமில்லாகமல் வேர செடியில் தம்மிடத்தை நாடி செல்லுவதைப்போலவும், ஊசிகள் காந்தத்தைநாடிச் செல்லுவதைப்போலவும், பதிவிரதையானவள் தன் நாயகன் பாதத்தைநாடிச் சேர்வதைப்போலவும், கொடி விருக்ஷத்தைநாடிப் படருவதைப்போலவும், நதியானது சமுத்திரத்தைநாடிச் செல்லுவதைப்போலவும், சித்தத்தினுடைய வியாபாரமானது சதா பரமேசுவருடைய பாதாரவிந்தங்களே நாடுவதென்பதெதுவோ அதற்குத்தான் பக்தி என்று செப்பியிருக்கின்றனர்.

இத்தியாதிகளால் பக்தி என்பது பரமேசுவரரிடத்தில் ஜீவாத்துமாக்கள் சிரத்தையோடு கூடி இகபரசுகங்களே அனுபவிப்பதற்கு பரமேசுவரர் படைத்த இயற்கைச்சாதனமென்றும்; இந்த சாதனம்: மானவஜாதியாராகிய நாம் தாது வர்க்க, கந்தமூல வர்க்க ஜீவவர்க்க தசையிலிருந்த காலங்களிலும்; பிறகு மானவஜாதியாராகப்பிறந்த இப்போதும், பாலியதசையில் பயம் அல்லது பீதி ரூபமாக இருந்தும், பிறகு யௌவன காலத்தில் பிரியம் அல்லது பிரீதி அல்லது அன்பு ரூபமாக மாறியும், பிறகு சராசரப்பொருள்களின் மேலிருக்கும் ஆசாபாசங்களே மூற்றும் விட்டொழித்து யாதொரு பிரதி பிரயோஜனத்தை நாடாமல் பரமேசுவரரிடம் வைக்கும் பூரண அன்பிற்கே பக்தி என்று பொருளாகிறது.

God is not attained through religious sayings, or through capacity of intellect, or through much hearing of holy men. He who wanteth Him, obtaineth Him.

(122). புஹதாரணிய உபநிஷத்து

3-வது அத்தியாயம் 3-வது பிராமணம்.

ததேதத்ப்ரஹ்மாபூர்வம் ஏத தம்ருதமபயம் சாந்த உபாஸீத.

பொழிப்புரை.

எது அந்தப்பிரமமோ, அதற்குமுன் ஒன்றுமில்லை; அது அழிவற்றது, பயமற்றது சாந்தராகி அதை உபாசியுங்கள்.

விசேஷ உரை.

யார் இவை யாவற்றிற்கும் காரணரோ அவருக்கு ஒரு காரணமுமில்லை; அவர் முதலும் ஈறும் அற்றவர், அழிவற்றவர் எங்கும் நிறைந்தவர். அந்தப் பயமற்றவரது சரணடையின் வேறொரு பயமுமிராது, சாந்தராக அவரது உபாஸனையைச் செய்யுங்கள். சாந்திதான் கடவுளிடத்துள்ள அன்பிற்கு இருப்பிடம். எப்பொழுது மனது நிருமலமாகி அசைவற்ற தடாகத்தைப்போல சாந்தமாக விருக்கின்றதோ, அப்பொழுதுதான் உள்ளத்தில் கடவுளினது ஸ்வரூபம் விளங்கும்; அப்படியிராமல், மிகுந்த பொருளாவினலும் புகழாவினலும், பொறிகள் வழி எல்லாம் சென்று மனம் தூய்மையற்றிருக்கினும், மிகத் தூய்மையானதாகிய பிரமானந்தத்தை அனுபவிக்க வல்லமையிராது. ஆனதால் சாந்தராக அவரை உபாஸியுங்கள்.

This is He, the supreme, who has nothing prior to Him. He is immortal and without fear. With a tranquil heart is He to be worshipped.

குறிப்பு.

இந்த அத்தியாயத்தில் இதுவரையில் எடுத்துக்காட்டிய உபநிஷத்து வாக்கியங்களினல், பிரம்மலக்ஷணம் இப்படிப்பட்டதென்றும், இப்படிப்பட்ட பிரம்மத்தையடைபவருக்கே இகபரசுகம் கிடைக்குமென்றும், இந்த இகபரசுகத்தைத்தரும் பிரம்மத்தை அடைவதற்குக் கேவலம் பக்தியே சிறந்த சாதனமென்றும், இந்தப் பக்தியினல் பரமேசுவரரை உண்மையோ உபாஸனைசெய்து அடைவதே பக்தியோகமென்றும், இந்தப் பக்தியோகத்தை சாதித்தல் சகலருக்கும் சுலபமான மார்க்கமென்றும் ஸ்பஷ்டமாக்குகிறபடியால்; அடுத்த அத்தியாயத்தில் இந்தப் பக்தியோகமாகிய பிரமோபாஸனையைச்செய்யும் இடம், காலம், விதம் முதலான விவரங்களைப்பற்றி அறிவிக்கும் உபநிஷத்துக்களைக்காட்டுகிறேம்.

நான்காவது அத்தியாயம்.

பிராமோபாஸனை

பிராமவாதிகளுரைக்கின்றனர்.

(123). கடோபநிஷத்து

3-வது வல்லி 14-வது வாக்கியம்.

உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்யவராந் நிபோதத ;
க்ஷுரஸ்ய தாரா நிசிதா துரத்யயா
துர்கம் பதஸ்தத் கவயோ வதந்தி

பொழிப்புரை.

ஓ! உயிர்களே! எழுந்திருங்கள், அஞ்ஞானத்தூக்கத்தை விட்டு விழித்துக்கொள்ளுங்கள். பிரமநிஷ்டராகிய சிறந்த *ஆசாரியரிடத்திற்குச் சென்று ஞானத்தைப்பெற்றுக் கொள்ளுங்கள். விவேகிகள் இந்த வழியை தீட்டப்பட்ட கத்திமுனையைப்போல செல்வதற்கரிதானதால் நடப்பதற்குக்கடினமானதென்று உரைக்கின்றனர்.

விசேஷ உரை.

ஓ! உயிர்களே! எழுந்திருங்கள். அஞ்ஞானத்தூக்கத்தைவிட்டு விழிப்படையுங்கள்; இன்னும் எவ்வளவுகாலம் அவரை விட்டிருப்பீர்கள், இன்னம் எவ்வளவுகாள் அந்தப் பெருஞ்செல்வத்தை மறந்திருப்பீர்கள். காலம்செல்லுகின்றது, சாவு சமீபிக்கின்றது, மந்தத்தன்மையையும், சோம்பலையும் ஒழித்துவிடுங்கள்; சிறந்த ஞானிகளாகிய ஆசான்களுக்கருகே சென்று எல்லா விருப்பங்களையும் முடிப்பதற்குரிய கருவியானவரும் மிகுந்த அன்பிற்குரியருமானவரை அறியுங்கள். ஆயிரம் நூல்களை வாசிப்பதினால் ஆகாததும் சிறந்த ஆசானது சொல்லினாலாகும். ஈச்வரனிடத்திற்குப்போகும் வழியைப்பற்றவேண்டுமாயின் அறிவைத்தூய்மைப்படுத்தல்வேண்டும், பொறிகளை வசப்படுத்தல்வேண்டும், பொறுமையைப்பழகப்படுத்தல்வேண்டும், தருமக்கருத்துகளினத்தையும் வளர்த்தல் வேண்டும்; மேலும், கடவுளிடத்துள்ள அன்பில் கருத்தை ஆழ்த்தல்வேண்டும்; ஆனதால் இவ்வழி செல்வதற்கு மிகக்கடினமான வழி. ஆயினும் கடவுளுடைய அருளாலும், சாதகனது விருப்பத்தினாலும், இவ்வருத்தமானவழியும் எளிதானவழியாகும்.

*ஆசாரியன் என்னுல் = தான் பிறருக்கு போதிப்பதைப்போல, தானும் அனுஷ்டிக்கப்பட்டவன். சில சமயங்களில் இப்பதத்திற்கு குருவென்று சொல்வாருமுண்டு. குருவென்னுல் கு=அந்தகாரம், ரு=என்னுல் சூரியன். அதாவது அந்தகாரத்தில் சூரியன் பிரகாசம்பட்டால் அந்த இருட்டுநீங்குவதைப்போல், கு=(அஞ்ஞானத்திலிருக்கும்) சீடனுக்கு, ரு= (என்னும் சூரியனைப்போல பிரகாச) ஞானத்தைத்தருபவன் என்ற கருத்து.

Awake, arise, and going to the best of men, understand God. The path of Religion, say the wise, is as difficult of passage as the edge of sharpened razor.

---

(124). சுவேதாசுவதர உபநிஷத்து

2-வது அத்தியாயம் 5-வது வாக்கியம்.

ஸ்ருண்வந்துவிச்வே அம்ருதஸ்ய புத்ரா
ஆ யே தாமானி திவ்யானி தஸ்துர:.

பொழிப்புரை.

ஓ! ரமணீயமான இடங்களில் வசிப்பவர்களும் நித்தியருடைய பிள்ளைகளுமாகிய எல்லா உயிர்களே, செவியுற்றுக்கேளுங்கள்.

விசேஷ உரை.

நிர்விகாரரும் அழிவற்றவருமான பிரமத்தை உதயகாலத்தின் சூரியப்பிரகாசத்தைப்போல தம்முள்ளங்களின் வழியாக அடைந்து புதிய ஊக்கங் கொண்ட பிரமவாதிகள் "ஓ! அழிவற்ற புருஷருடைய பிள்ளைகளே! விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் வசிக்கிற தேவர்களே! மனிதர்களே! செவியுற்றுக்கேளுங்கள்; நாங்கள் இருளுக்கடந்த ஒளிவடிவராகிய மஹாபுருஷனை யறிகின்றனம்." என்று உறைக்கின்றனர்.

Hear this. O all ye sons of the Immortal! Who in these pleasant mansions reside the earth and the orbs of Heaven.

---

(125). சுவேதாசுவதர உபநிஷத்து

3-வது அத்தியாயம் 8-வது வாக்கியம்.

வேதாஹமேதம் புருஷம் மஹாந்தமாதி யவர்ணம்
தமஸ:பரஸ்தாத்; தமேவவிதித்வாதி ம்ருத்யுமேதி
நான்ய:பந்தா வித்யதேஅயநாய.

பொழிப்புரை.

நான் மஹானும் ஸ்வப்பிரகாசரும் இருளுக்கடந்தவருமான இந்தப்புருஷரை அறிவேன். அவரையே அறிந்து சாதகர் மரணத்தைக்கடக்கிறார். பரமபதமடைவதற்கு வேறுவழி இல்லை.

விசேஷ உரை.

இந்த இருளுக்கடந்த ஒளிவடிவராகிய மகாபுருஷரை அறிந்து சாதகர் மரணத்தைக்கடக்கிறார், அவர் அளவற்ற காலம் வரையில் ஞானத்தையும் அன்

பையும் வடிவாகக் கொண்ட புருஷனைத்தொடர்ந்து பேராகந்தத்தை அனுபவிக்கிறார். அவரை சரணமாக அடைதலன்றி முத்தியைப்பெறுதற்கு வேறு உபாயமில்லை.

I have known Him Who is Perfect, Great, Glorious and beyond darkness. Knowing Him alone one avoideth death. No other path there is for salvation.

(126). சுவேதாசுவதர உபநிஷத்து

2-வது அத்தியாயம் 10-வது வாக்கியம்.

ஹமேசுசௌ சர்வாவந்நி வாலுகா விவர்ஜிதே
சப்த ஜலாவ்ரயாதிபி:; மநோநுகூலே நதுசக்ஷு-
பீடநே குஹாநிவாதா ச்ரயணே ப்ரயோஜயேத்

பொழிப்புரை.

மேடுபள்ளமில்லாமல் சமமாகவும், சுத்தமகவும், சிறு மணலும் சூடேறியமணலும் இராததாகவும், ஓசை, நீர் இருப்பிடம் முதலியவைகளால் கருத்திற்கின்பம்தருவதாகவும், பார்வைக்கு வெறுப்பான பொருள்க ளில்லாமலுமிருக்கிற போதுமான காற்றுவருகிற தனித்த இடத்தில் கருத்தை பிரமத்தினிடத்தில் செலுத்தத்தக்கது.

விசேஷ உரை.

எவ்விடத்திலிருக்கின் கருத்து நன்றாகவிருக்குமோ; மேலும், தூய்மையான அந்தப் புருஷனிடத்திற்கு ஆயாசமின்றி கருத்துச்செல்லுமோ, அவ்விடத்திலுட்கார்ந்து உபாஸனை செய்யத்தக்கது. கெட்ட மணம் வீசுகிறதும், அனல் வீசுகிறதும், சுத்தி செய்யப்படாததும், அசுத்தமானதுமான இடத்தில் உட்காரின் கருத்தில் மாசுண்டாம்; மேலும், வேண்டியபடி ஈச்வரனிடத்திலும் சிந்தனை செல்லாது. ஆனால் எந்த இடம் மிகவும் தனித்தும் சுத்தமாயும், சுத்தி செய்யப்பட்டும், கூரையிடப்பட்டும், குளிர்ச்சியாயும் ஸமமாயுமிருக்கிறதோ, எவ்விடத்தில் நன்னீருளதோ, எவ்விடத்தில் காற்றினால் தீங்கில்லையோ, எவ்விடத்தில் பரவைகளினது இனிய ஓசை கேட்கப்படுகிறதோ, எவ்விடத்தில் கண்ணுக்கருவருப்பான விஷயங்களில்லையோ, அப்படிப்பட்ட இடத்தைவிட வேறெந்த இடத்தில் கருத்து மிகவுநன்றாகக்கூடும்? இதனால் இப்படிப்பட்ட தூய்மையும் சுகமுமானவிடத்தில் உட்கார்ந்து உபாஸனை செய்யவேண்டியது பிரமவாதிகளினது கருத்து. எந்த இடத்தில் கருத்து நன்றாகவும் தூய்மையாகவும் கலக்கமற்றும் இருக்கக்கூடுமோ, அப்படிப்பட்ட இடத்தில் உபாஸனைசெய்யவேண்டும்; காரணமென்னவெனில் கருத்து கலக்கப்பட்டு நிலை குலைந்து மலினப்படுமாயின், தூய்மையான ஸ்வரூபமுடைய ஈச்வரனது உபாஸனை கிரமமாய் நிறைவுறாது என்று உபாஸனைசெய்யும் இடத்தின் விவரத்தைப் பற்றி இந்த வாக்கியத்தில் சொல்லப்பட்டது.

In a pure and even spot devoid of gravel or burning sand, with good sounds and sheets of water, and shelter from rain and sun shine; a spot delightful, with nothing before disagreeable to sight; a recess exposed to no fierce gusts of wind; in such a retreat should one apply himself to God.

---

(127). சுவேதாசுவதர உபநிஷத்து

2-வது அத்தியாயம் 8-வது வாக்கியம்.

திரிருந்நதம் ஸ்தாப்ய சமம் ஶரீரம்
ஹ்ருதீந்திரியாணி மநஸாஸ நிவேஶ்ய
ப்ரஹ்மோடுபேந ப்ரதரேதவித்வான்
ஸ்ரோதாம்ஸி ஸர்வாணி பயாவ ஹாநி

பொழிப்புரை.

மார்பு கண்டம் தலை ஆகிய மூவ்வுறுப்புகளும் நிமிரும்படி உடலைவைத்துக்கொண்டு ஞானிகள் சம்சாரமென்னும் கடலினது அச்சத்தைத்தரத்தக்க வெள்ளத்தை பிரமமென்னும் ஓடத்தினற் கடக்கின்றனர்.

விசேஷ உரை.

முன்னர் எப்படி *உபாஸனைக்குரிய இடவிஷயமாய்ச்சொல்லப்பட்டதோ, அதுபோல உபாஸநாகாலத்தில் இவ்விதமாக உட்காரவேண்டுமென்பதிவ்வசனத்தினற் பெறப்படுகின்றது. மார்பு, கழுத்து, தலை இவைகளை நிமிரவைத்துக்கொண்டு; சாதாரணமாய் உட்காரின், உடலுக்கு முள்ளத்திற்குமொரு விகாரமுமுண்டாவதில்லை; ஆனதினற்ருன் உபாஸநா காலத்திலிவ்விதமாயுட்கார்ந்துக்கொண்டு பொறியின் செயல்களையும். மனதின் செயல்களையு முள்ளத்திலடக்கல்வேண்டும். அவைகளைப் பலவிதமான வெளிவிடயச் செய்கைகளிலிருந்து பிரித்து மனதுடனத்துமாவை பரமாத்துமாவினிடத்தில் நிறுத்தல் வேண்டும்; மேலுமுள்ளத்தினன்பை யவரிடத்திற்செலுத்தி உய்யவேண்டும்.

Keeping the body errect, and concentrating the mind and the senses within the heart, the knower of God should cross all torrents fearful in the ocean of the world with God as his boat.

---

(128). தைத்திரிய உபநிஷத்து

ஆநந்தவல்லி 1-வது அநுவாகம்.

தபஸா ப்ரஹ்மவிஜிஜ்ஞாஸஸ்வ;
ப்ரம்மவிதாப்நோதிபரம்.

பொழிப்புரை.

கருத்தை ஒருவழிப்படுத்தி பிரமத்தை விசேஷமாகவறிய விரும்புங்கள். பிரமஞானி பிரமத்தையடைகிறார்.

விசேஷ உரை.

பிரமஞானத்தைப் பெறுதற்கு கருத்தை வேறு வழியில் செலுத்தாமல் மறுபடியும் மறுபடியும் அவரையே கருதல்வேண்டும் சாந்தஸமாஹித சித்தராகி, அகக்கண்ணினால் அவரது ஸத்தியஸுந்தரமங்களத்தன்மையைக் காணல்வேண்டும். அப்பொழுதுதான் நாம் அவரையடைந்து வேண்டியதைப்பெற்றவர்களாவோம் பிரமம் உள்ளும் புறமும் எங்கும் ஓரேவிதமாக வியாபித்திருக்கிறார். அவரையடையும் நிமித்தம் ஒரு இடத்திலிருந்து வேறிடத்திற்குப் போகவேண்டியதில்லை. அவரை நேராகஅறிவதே அவரையறிவது. மனிதலோகத்திலேயே அவரை யறிய ஆரம்பிக்கலாகும்; ஆனாலப்படி யறிதல் அநந்தகாலம் வரையிலும் முற்றுபெறாது. இவ்வுலகதை விட்டு லோகாந்தரத்தில் அவரை எவ்வளவு அதிகமாக வறியவல்லவர்களாவோமோ, அவ்வளவுக்கு அதிகமும் நுய்மையுமான பிரமாநந்தத்தை அனுபவித்து கிருதார்த்தர்களாவோம்.

Desire to know God through meditation; the knower of God attaineth God.

---

(129). புருஹதாரணிய உபநிஷத்து

3-வது அத்தியாயம் 3-வது பிராமணம் 28-வது வாக்கியம்.

ஏநாஹமம் நாம்ருதாஸ்யாம் கிமஹம்
தேநகுர்யாம்; அஸதோமாஸத்கமய
தமஸோமா ஜ்யோதிர்கமய ம்ருத்யோர்மா
ம்ருதம்கமய; ஆவிராவீர்மயேதி;
ருத்ரயத்தே தக்ஷிணம் முகம்தேந
மாம்பாஹிநித்யம்.

பொழிப்புரை.

எதனால் நான் அழிவற்றபதவியை அடையேனே அதனால் நான் என்ன செய்வேன்? அஸத்தானதைவிட்டு ஸத்தானதை என்னையடையச்செய்யும், இருளைவிட்டு என்னை ஒளியையடை

யச்செய்யும். அழிவுள்ள தன்மையை விட்டு அழிவற்றதன்மை யையடையச்செய்யும். ஓ ஸ்வப்பிரகாசனே! எனக்காகப்பிரகாசி யும், * ஓ ருத்திரனே! உனது மகிழ்ச்சியைத்தரத்தக்க முகமெது வோ அதனால் என்னைக்காப்பாற்றும்.

விசேஷ உரை

எதனால் நித்தியபுருஷனோடு கூடும் வாழ்க்கை கிடைக்காமல் நித்தியபத வியைப் பெறேனோ அதையடைந்து நானென்னசெயவேண்? விஷய விபவமும் பெருமையான புகழும், ஆமோதப்பிரமோதங்களும் யாவும் நிலையற்றவை; வை நிலையுள்ளவைகளாகவிருக்கினும், பிரியதமனாகிய ஈச்வரனைவிட்டு இவைய னைத்தையும் அடைந்து என்னசெய்வேன்? ஆனதால் ஓ! பரமேச்வரனே! எத னால் உம்மையடையும் வல்லமையைப்பெறுவேனோ, அதை எமக்குத்தாரும். அஸத்தாகிய ஸம்ஸாரத்தை விட்டு நீக்கி உமது ஸத்தாகிய மார்க்கத்தில் என் னைச்சேர்ப்பியும், அஞ்ஞானமாகிய இருளை நிச்சயமாய் எமதுள்ளத்தில் ஞானஒளிவிளங்கச்செய்யும். அமிர்தஸ்வரூபனாகிய நீ என்னை உன்னிடத்துக் கொண்டுபோம். ஓ ஸ்வப்பிரகாசனே! என்னருகில் எப்பொழுதும் பிரகாசித் துக்கொண்டிரும். எதேனும் விபத்தில் விழுந்து உனது ருத்திரமுகத்தைப் பாராமலிருப்பேனாக. எப்பொழுது உனது பிரசன்னமுகத்தை நான் பாராம லிருக்கிறேனோ, அப்பொழுது நான்குபக்கங்களிலும் இருளைப்பார்க்கிறேன். நீர் எமது இருளுக்கு விளக்கைப்போன்றவர்; சாகாதிற்கு ஜலத்தைப்போன்ற வர். மேலும் எமது இளைப்பாருமிடமும் நீரே.

Things through which I can not gain life eternal, what shall I do with them? Lead me forth, O God! from the unreal into the real, from darkness into light, from death into immortality. O! Show all Manifest! manifest Thyself to me. O! God! protect me ever with Thy Bright face.

பிராமோபாஸனை பத்ததி.

இந்த *பிரமோபாஸனை, ஸ்தோத்திரம், வந்தனம், தியானம், பிரார்த்தனை என்னும், நான்கு அங்கங்களையுடையது.

ஸ்தோத்திரமாவது, கடவுளது குறைவற்ற நித்திய லக்ஷணங்களை யுன்னி, நமது பக்தி, சிரத்தைகளை வெளியிடுதை.

வந்தனமாவது, நமது உடலையும், உயிரையும், சம்ரக்ஷணைசெய்யும், அவ ரது அளவற்ற கருணையைக்குறித்து நமக்குள்ள நன்றியறிவைத் தெரிவிக்கை.

தியானமாவது, ஈசுவரனுடைய, ஸர்வ வியாபகத்துவம், ஸர்வஜ்ஞத் வம், ஸர்வ காருணியத்வம், ஸர்வ நிருமலத்துவம், என்பவற்றைச் சிந்தித்து அவரது அதிஸமீப ஸான்னித்யத்தை மனக்கண்ணால் காண முயலுகை.

பிரார்த்தனையாவது, பாப பந்தங்களைவிட்டு நீக்கும்படிக்கும், ஆத்மசாந்தியையும், தூய்மையையும், அருளும்படிக்கும், ஈசுவரனை வினயமாய் வேண்டுதல்

இந்த நான்கங்கங்களும் சுன்கமைதலே பிரமோபாஸனையாம்.

ஆரியருடைய பிரார்த்தனைகளின் உத்தேசம் இன்னதென்று அறியச்சக்தியற்ற சில கிறிஸ்து முதலான மதஸ்தர்கள், ஆரியர் கேவலம் விக்கிரஹாராதனைக்காரர்களென்றும், அவர்கள் செய்யும் பிரார்த்தனைகள் பிரதிமனுஷனுடைய பாவமன்னிப்பைப்பற்றியதல்லவென்றும், கேவலம் இகலோக சுகத்தைக்கருதிய வீண் சடங்குகளென்றும், எண்ணியிருக்கிறார்கள் அப்படிப்பட்டவர்கள் ஆரியருடைய சந்தியாவந்தனம் என்னும் பிரார்த்தனையைப்பற்றி ஆராய்ந்து பார்க்கில், அதில் பிரதிதினமும் காலை, மாலை மத்தியானங்களில், பிரதிமனுஷன் தான் தனது சரசரணம், மனம் புத்தி முதலானதுகளால் செய்த பாவங்களை அப்போதுக்கப்போது போக்க அதிக அதிதாபத்துடன் செய்யும் பாவவிமோசனார்த்தமான பிரார்த்தனைகளென்று ஸ்பஷ்டமாகும், ஆகவே அந்த சந்தியாவந்தனத்தின் அருத்த சாராம்சத்தை இதனடியிற்பதிப்பிக்கின்றனம்.

சந்தியாவந்தனத்தின் சாரசங்கிரகம்.

ஆசமனம்.

ஓம் அச்சுதாயநமः, ஓம் அனந்தாயநமः, ஓம் கோவிந்தாயநமः,

ஓம்கேசவாயஸ்வாः, ஓம் நாராயணாயஸ்வாः, ஓம் மாதவாயஸ்வாः ஓம் கோவிந்தாயநமः ஓம் விஷ்ணவேநமः, ஓம் மதுசூதநாயநமः, ஓம் திரிவிகரமாயநமः, ஓம் வாமநாயநமः, ஓம்ஸ்ரீதராயநமः, ஓம் ஹிருஷிகேசாயநமः, ஓம் பத்மநாபாயநமः, ஓம் தாமோதராயநமः, ஓம்சங்கர்ஷணாயநமः, ஓம் வாசுதேவாயநமः, ஓம்பிரத்யும்மனாயநமः, ஓம்அநிருத்தாயநம, ஓம் புருஷோத்தமாயநமः, ஓம் அதோக்ஷயாயநமः ஓம்நாரசிம்மாயநமः, ஓம்அச்சுதாயநமः, ஓம்ஜநார்தனாயநமः, ஓம்உபேந்திராயநः, ஓம்ஹரயேநமः, ஓம்ஸ்ரீ கிருஷ்ணாயநமः,

☞ இதன் பொருளை இப்புத்தகத்தின் 157-ம் பக்கம் பார்க்கவும்.

பிராணயாமம்.

ஓம் பூः ஓம்புவः ஓம் ஸுவः ஓம் மஹः ஓம் ஜநः ஓம் தபः ஓம் ஸத்யம், ஓம் தத்ஸ விதுர்வரேண்யம், பர்கோதேவஸ்ய தீமஹி தியோயோநः பிரசோதயாத் ஓமாபோஜ்யோதீரசோமிருதம் பிரஹ்ம, பூர்புவஸ்வரோம்.

பொருள்.

ஓம் பூः=ஸர்வபரிபூரணஸ்ருகியும், ஓம் புவः=ஸர்வ சிரேஷ்டஸ்ருகியும், ஓம் சுவः=சோபன சுகஸ்வரூபஸ்ருகியும், ஓம் மஹः=ஸர்வபூஜநீயஸ்ருகியும், ஓம் ஜநः=ஸர்வ ஜனசமாகியும், ஓம் தபः=ஞானஸ்வரூபஸ்ருகியும், ஓம் ஸத்யம்=ஸத்தியஸ்வரூபஸ்ருகியும், யः=எந்த சவித்ராமத்தைக்கொண்ட பரப்பிரமம் நः=நம்முடைய, தியः=புத்திகளை, பிரசோதயாத்=பிரேரேபணைசெய்கிறதோ,

தத்=அந்த பிரசித்தியான, ஸவிதுர்:=பிரேகஞ்ஞிய, தேவஸ்ய=பகவானுடைய வரேண்யம்=அனைவராலும் விரும்பத்தக்க, பர்க:=பாவத்தை நசிப்பிக்கும் தேஜஸை, தீமஹி=தியானிக்கிறோம், அந்த தேஜஸு ஓம்=பிரணவ பிரதி பாத்தியமான அப:=பரிபாலன சக்தி சம்பன்னனும், ஜ்யோதி:=பிரகாஸஸ் வரூபத்தையும், அமிருதம்=மரணரஹிதமான, பிரம்ம=ஸர்வ பரிபூரணத்தை, பூர் புவ: சுவ:=பூலோக புவர்லோக சுவர்லோகாத்தரியாமியாக இருக்கிறது.

கருத்துரை.

மேலேசொன்ன அநந்தகலியாண குணங்களையுடைய பகவானேத்தியாகிக் கிறேன் என்பதாம்.

(இங்கு சங்கல்பம்)

மார்ஜனம்.

ஓம் ஆபோஹிஷ்டமயோபுவ: தான ஊர்ஜே ததாதன மஹே ரணயச்சகூசே யோவஸ்ஸிவதமோரஸ: தஸ்யபாஜயதேஹந: உஸ தீரிவ மாதர: தஸ்மா அரங்கமாமவ: யஸ்ஸகூயாயஜின்வத ஆபோ ஜனயதாசந:

பொருள்

ஆப:=ஆப்காமுத்தையுடைய பரப்பிரம்மமே, மயோபுவ:=சுககர்த்தஞ்ஞிய வனே, ஹி=உண்மையாகவே, ஸ்த=ஆவாய், தா:=அப்படிப்பட்டீர், ந:=எம்மை, ஊர்ஜே=ஞானரசத்தின் நிமித்தம், ததாதன=இருக்கக்கவை

எனெனில்:

மஹேரணய=திவியமங்களமான, சகூசே=தரிசனத்திற்காக, ய:=ஏ, சிவதம அநந்தகலியாணமாகிய, வ:=உனதசம்பந்தமாகிய, ரஸ:=அமிர்தரசமுண்டோர் தஸ்ய=அப்படிப்பட்டதற்கு, ந:=எம்மை இஹ=இவ்வுலகத்திலேயே, பாஜயத =அநுபவிப்பதற்கு அருளாளாய்ச்செய்யும், உஸதீ:=விரும்பும் மக்களுக்கு, மா தர:+இவ=தாய்மார்களைப்போல் (அநுபவிக்கச்செய்யும்) தஸ்யை=அப்படிப் பட்டஅமிர்தரசத்திற்காக, வ:=உம்மை, அரம்=மிகவும், கமாம்=சேருகிறோம், யஸ்ய=பாவத்தினுடைய, கூயாய=நசிப்பதற்கு, ஜின்வத=பிரியத்தையடை யச்செய்யும், ச=மேலும், ஆப:=ஓ பகவானே, ந:=எம்மை, ஜநயத=பிறப்பி யும், (என்றுல் ஞானயுக்தர்களாகச்செய்யும்)

கருத்துரை.

பரமேசுவரன் (நமது பாவத்தைப்போக்கி) ஞானமோகூத் தையருள்வாராக என்பதாம்.

பிராதக்கால பிராசன மந்திரம்

சூரியஸ்ச மாமன்யஸ்ச மன்யுபதயஸ்ச மன்யுகிரதேப்ப:பாபே ப்யோ ரகூஷந்தாம் யத்தாத்ரிய பாபமகார்ஷம், மநஸாவாச அஸ் தாப்யாம், பத்ப்யாமுதரேண சிஸ்ன, ராத்ரிஸ்ததவலும்பது யத் கிஞ்ச துரிதமை இதமஹம், மாமமிர்தயோநௌ, சூர்யேஜ்யோதி ஷி ஜுஹோமிஸ்வா:

இம்மந்திரத்திற்கு ருஷி நாராயணர், சந்தசு பிரகிருதி, 84 அகூஷரங்களுடையது.

பொருள்.

சூரிய=சூரியநாமகனுடைய பரப்பிரம்மம், ச=மேலும், மன்யு:=குரோதத்தை சிக்கச்செய்யும் பரபிரமம், ச=மேலும், மன்யுபதய: = குரோதத்திற்குப் பாதிக்ஷனான ராகாதிகளும் நசிக்கச்செய்யும் பரப்பிரம்மமே, மன்யுகிருதேப்யம்=குரோதத்தினால் செய்யப்படும், பாபேப்ய:=பாவங்களே, மா=என்னை, ரக்ஷந்தாம் = இரக்ஷிப்பாயாக, யத்=ஏ, பாபம்=பாவத்தை, ராத்ரியா=இராத்திரிகாலங்களில் மநசா=மனதினாலும், வாசா=வாக்கினாலும், அஸ்தாப்யாம் = கைகளினாலும், பத்ராப்யாம்=பாதங்களினாலும், உதரேண=வயிற்றினாலும், சிஸ்நை=குஹியத்தினாலும், அகார்ஷம்=செய்தேனே, தத்=அதை, ராத்ரி:=ராத்திரி நாமக பரப்பிரம்மமே, அவயஜம்ருது=நசிக்கச்செய்வாயாக, யத்கிஞ்ச=எவ்வளவு கொஞ்சமானபோதிலும், துரிதம்=பாவத்தை, மை=என்னிடம் (இருக்கிறதோ) இதம்=இந்த பாவங்களே, மாம்=அந்த பாவங்களுக்குக்கர்த்தனுடைய என்னை,அஹம்=நான், அமிர்தயோநௌ=சாஸ்வித பதவிக்காதாரமான, சூர்யே=பகவத்சம்பந்தமான, ஜ்யோதிஷி=தேஜஸினிடத்தில், ஜுஹோமி=ஹோமம்செய்கின்றேன், சுவாஹா என்னை சமர்ப்பித்துக்கொள்ளுகிறேன்.

கருத்துரை.

பிரேரகனுடைய பரமாத்துமாவே! குரோதாபிஷ்டனுடையனது சர்வ இந்திரியங்களால் செய்யலான பாவங்களை நசிக்கச்செய்வதற்காக, (எனது) ஆத்மாவை சமர்ப்பணம்செய்து எனது பாவத்தை (உனது பகவத்தேஜஸுகுள்) ஹோமம் செய்கின்றேன்.

மத்தியானத்தில்செய்யவேண்டியபிராசனமந்திரம்.

ஆப: புநந்து ப்ருதிவீ பூதாபுநாதுமாம் புநந்து ப்ரஹ்மணஸ்பதிர் ப்ரஹ்மபூதாபுநாதுமாம, யதுச்சிஷ்டமபோஜ்யம் யத் வாதுஸ்சரிதம் மம ஸர்வம் புநந்து,மாமாபோ ஸதாஞ்ச ப்ரதிக்ரஹாகம்ஸ்வாஹா.

இந்த மந்திரத்திற்கு பூதாரிஷி அஷ்டாசந்தர் ஆபோருஷிரனுஷ்டுப்சந்த:.

பொருள்.

ஆப:—அமிர்தரசம், புருதிவீம்—மஹாபூதவிகாரத்மசரீரத்தையும், புநந்து—பவித்திரம் செய்வாயாக, பூதா— பவித்திராமாக்கப்பட்ட, புருதிவி — சரீரம், மாம்—என்னை, புநாது—பவித்திரம் செய்வதாக,பிரஹ்மணஸ்பதி—பரமாத்மா, புநந்து—பவித்திரம் செய்வதாக, பூதா—பவித்திரமான, பிரஹ்ம—வேதம், மாம்—என்னை, புநாது—பவித்திரம் செய்வதாக, யத்—எந்த, உச்சிஷ்டம்—பிறருடைய சம்பந்தமாகி செய்தனுபவிக்கப்படுகிறதோ, தத்—அந்தபாவம், (என்றால் பிறருடைய பொருளையெடுப்பதாலுண்டாகும் பாவம்) அபோஜ்யம்—புசிப்பதற்காகாமாகிய பதார்த்தங்களை புசிப்பதனாலுண்டாகும் பாவமும், யத்—எந்த, துஸ்சரிதம்—துஷ்டாசாரணையான பாவமும், மம—என் சம்பந்தமான, ஸர்வம்—சகலமான பாவத்தையும், அசதாம்—அந்த புருஷர்களுடைய சம்பந்தமான, ப்ரதிக்ரஹம்+ச—ப்ரதிக்ரஹத்தினால், மாம்—என்னை, ஆப:—என்னும் சப்தநாமகனான பரமாத்துமா, புநந்து—பவித்திரம் செய்வராக, ஸ்வா:—ஆத்மசமர்ப்பணம் செய்யேனே.

கருத்துரை.

பகவத்கருணாரசம் எனது சரீரத்தை பவித்திரமாக்கி எனது பாவங்களைப்போக்கி என்னை ரக்ஷிப்பாராக.

சாயங்காலத்தில் செய்யவேண்டிய [illegible]

அக்நிஸ்ச மாமக்யஸ்ச மந்யுபதய்ய [illegible] பாபேப்யோ ரக்ஷந்தாம் யதந்ந பாபமகார்ஷம் [illegible] ஸ்தாப்யாம் பப்யாமுதரேண சிஸ்நா அஹஸ்தது [illegible] துரிதமயி இதமஹம் மாமமிர்ருதேயென [illegible] ஜுஹோமிஸ்வாஹா.

இந்த மந்திரத்திற்கு யஞ்ஞாவல்கியரிஷி, [illegible]

இதன்பொருள்.

யத்—எந்த பாபத்தை, ஆஹன—பகலில், அகார்ஷம்—செய்தேனோ, ஆஹ: ஆஹோராத்ரமக பரப்பிரம்மம், தத் அந்தபாவத்தை, அவலம்புக போக்குவாயாக, ஸ்ரியேஜ்யோதிஷி ஸத்தியரூபமக பரப்பிரம்மத்தில், ஜுஹோமி ஸமர்ப்பிக்கிறேன். ஏ பதாம். மற்றவைகளுக்கு காலைவந்தனத்தில் எழுதப் பட்டிருப்பதால் அந்த அர்த்தத்தை அன்வயமாகக்கொள்ளவேண்டும்.

கருத்துரை.

அக்னி ரூபத்தால் பிரகாசிக்கும் பரமாத்துமாவே! ருஷிகளால் நிரைந்த எனது சர்வ இந்திரியங்களால் செய்த பாவங்களை நசிப்பதற்காக ஆத்ம சமர்ப்பணம் செய்து, என் பாவங்களை பகவத்தேஜசின்முன் ஹோமமாக செய்கின்றேன்.

அர்க்கியம்.

ஓம் பூர்புவஸ்ஸுவ: ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந:பிரசோதயாத்.

மத்தியாஹ்நிகார்க்கியப்பிரதானமந்திரம்.

ஹம்ஸச்சு சிஷத்துவசுரந்தரிக்ஷஸத்தோதவேதிஷத்தி. திதுர்ரோணஸத் நிருஷத்வரஸதுரத ஸத்வோயமஸத் பாஜகோ ஜாருதஜா அதிரிஜாருதம் புரஹத்.

இந்த மந்திரத்திற்கு வாசுதேவரிஷி, ஜகதிசந்தசு.

பொருள்.

ஹம்ஸ:—அஹிங்காரமென்னும் அஞ்ஞானத்தைப்போக்கும் பரமாத்துமாவே, சுசிஷத்—சுவர்க்கத்திலிருக்கும், வசு:—நியாமகனை, அந்தரிக்ஷத் அந்தரிக்ஷத்திலிருப்பவனும், ஹோதா—ஞானிகளுக்கு கூப்பிடுகிறவனும், வேதிஷத்—புருதிவியிலிருப்பவனும், நிருஷத்—மனுஷர்களிடமிருப்பவனும் வரஸத்—சிரேஷ்டஸ்தானத்திலிருப்பவனும், ருதஸத்—சத்தியத்தில் ஜுஹவீக்கப்பட்டவனும், வியோமசத்—அபிராகிருத ஆகாசத்திலிருப்பவனுமாகிய இந்த பகவா

டைய மஹிமை எப்படிப்பட்டதெனில், ஆப்ஜாஹம்—ஆபூபிரகமாகும் பிரகிருதியை சிருஷ்டித்தவனும், கோஜா:—அப்படிப்பட்ட பிரகிருதியினால் பூமாதி கோளங்களை சிருஷ்டித்த, ருதஜா:—எல்லா பூதங்களிலும் பிரவேசித்தும் ருதமென்னும் வழியையேற்படுத்தியவனும், அத்ரிஜா—ஸமஸ்தமான பூதங்களுக்கு ஜீவாதாரமாக மேகம் மழை மரம் முதலானதைகளையுண்டாக்கிய அந்த பரமாத்மாவினது மோக்ஷத்தின் நிமித்தம், புரஹூத்—பெரிதான, ருசம்—மானசயக்ஞத்தை நிர்ணயித்தது.

கருத்துரை.

பரமேசுவரர் மூன்று லோகங்களிலும் வியாபித்து, அஞ்ஞானத்தைப்போக்கி, சத்தியம் முதலான குணங்களினால் பவித்திரனான நமது ஹிருதயங்களிலிருந்து, சகல பொருள்களையும் நமது சுகத்துக்காக சிருஷ்டிப்பதால், நாம் மனமுவந்து அவரை தியானிக்கவேண்டும் என்பதாம்.

ஜபம்.

ஓம் பூர்புவ:ஸுவ: ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்யதிமஹி தியோயோந: பிரசோதயாத்.

அபிவாதனம்.

சதுர்விகபரியந்தம் ஸர்வபூதேப்ய: ஸர்வஜநேப்ய: சுபம் பவது, பிரபரான்வித: கோத்ர: அஹம்போ அபிவாதயே,

பொருள்.

சர்வலோகங்களிலிருக்கும், ஸர்வஜீவகோடிகளுக்கும் க்ஷேமுண்டாவதாக, அந்தந்த பிரவரையில் கோத்திரத்தையுடைய என் பரபிரம்மத்துக்கு வந்தனம் செய்கிறேன் என்பதாம்.

இந்த சந்தியாவந்தனத்தில் கண்டபடி பிரதிமநுஷ்யனும் தன் பிதிருக்களும் செய்யும் பாவத்தைப்போக்க பிரார்த்திப்பதைப்போலவே, பிரதிநினரும் தன் குடும்பத்தில் மனைவி மக்கள், குடும்பசமேதராகவும் இஷ்ட பந்துக்களுடனும் கூடி அடியில் காட்டியிருக்கிறபடி பிரார்த்தனை செய்யலாம்.

பொதுஜன சமூஹபிரார்த்தனை.

புரஹதாரணிய உபநிஷத்து

ஓம் அஸதோமா ஸத்கமய,
தமஸோமா ஜ்யோதிர்கமய,
ம்ருத்யோர்மா அம்ருதம்கமய,
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

இதன் பொருள்.

ஸத் ஸ்வரூபனும், ஜகத்காரணனும் ஆகிய உனக்கு நமஸ்காரம்; ஞான ஸ்வரூபனும், ஸர்வலோகாச்ரயனும் ஆகிய உனக்கு நமஸ்காரம்; ஒப்புயர்வான இரண்டாவது வஸ்துவற்றவனும், முத்தியளிப்பவனுமாகிய உனகு நமஸ்காரம்; பெரியபொருளும், ஸர்வ வியாபியும், நித்தியனும் ஆகிய உனக்கு நமஸ்காரம்.

த்வமேகம் சரண்யம் த்வமேகம் வரேண்யம்,
த்வமேகம் ஜகத்பாலகம் ஸ்வப்ரகாசம்,
த்வமேகம் ஜகத்கர்த்ரு பாத்ரு ப்ரஹர்த்ரு,
த்வமேகம் பரம் நிச்சலம் நிர்விகல்பம்.

(இ-ள்.) நீ ஒருவனே அடைக்கலஸ்தானமானவன், நீ ஒருவனே பூஜனீயன், நீ ஒருவனே உலகத்தைக்காப்பவன், தானேவிளங்குகிறவன், நீ ஒருவனே உலகத்தைப் படைத்துக்காத்தழிக்க வல்லவன்; நீ ஒருவனே மேலானவன், சலனமற்றவன், விகாரரஹிதன்.

பயாநாம் பயம் பீஷணம் பீஷணானும்,
கதிஹ்ப்ராணினாம் பாவநம் பாவனானும்,
மஹோச்சைரபதாநாம் நியந்த்ருத்வமேகம்.
பரேஷாம் பரம் ரக்ஷணம் ரக்ஷணானாம்.

(இ-ள்) நீ சகல பயங்கர வஸ்துக்களுக்கும் பயங்கரன், பயாநக வஸ்துக்களுக்கு பயாநகன்; உயிர்களுக்குத்தஞ்சம், பரம பாவநன், நீ யொருவனே மிகுந்த உயர்பதவிகளையும் ஆண்பவன், ஸர்வ சிரேஷ்டன், மஹாரக்ஷகன்.

வயம் த்வாம் ஸ்மராமோ வயம் த்வாம் பஜாமோ
வயம் த்வாம் ஜகத் சாக்ஷிரூபம் நமாம:
ஸதேகம் நிதாநம் நிராலம்ப மீசம்,
பவாம்போதி போதம் சரண்யம வ்ரஜாம:.

(இ-ள்.) நாங்களுன்னை ஸ்மரிக்கின்றோம், நாங்களுன்னைத்துதிக்கின்றோம்; உலக சாக்ஷிரூபனாகிய உன்னை நாங்கள் நமஸ்கரிக்கின்றோம், ஸத்யஸ்வரூபனும், ஒருவனும் ஆச்ரயவரூபனும், அவலம்பரஹிதனும், யாவற்றையும் கடந்துநிறவனும் ஸம்சாரக்கடலைக்கடக்க மரக்கலமும் ஆகிய உன்னை சரணமடைகின்றோம்.

அஸதோமா ஸத்கமய, தமஸோமாஜ்யோதிர்கமய
ம்ருத்யோர்மா அம்ருதங்கமய, ஆவிராவீர்ம ஏதி ருத்ர!
யத்தே தக்ஷிணமுகம், தேநமாம் பாஹிநித்யம்.

(இ-ள்.) ஓ நாயகனே! எம்மை அசன்மார்க்கத்தினின்று நீக்கி ஸன்மார்க்கத்தையடையச்செய்வாய்; எம்மை அஞ்ஞான இருளினின்று விடுவித்து சுஞ்ஞானவொளியடையச்செய்வாய்; அநித்திய நிலையினின்று நித்தியபதவியையடைய அருள்வாய்; ஓ ஸ்வப்பிரகாசனே! எம்மருகில் பிரகாசிப்பாய். ஓ துக்கத்தைப் போக்கடிப்பவனே! உனது கருணையாகிய முகத்தினால் எம்மை எப்பொழுதும் காப்பாற்றுவாய். ஓ! அளவற்ற ஸத்தியஸ்வரூபனே! நினது ஆஸ்திகத்துவத்தை எமக்குத் தெரிவித்தருள்வாய். நீ கருணைநிதியாகையால் எம்மை எப்பொழுதும் நின் திருபா சமுத்திரத்தில் அமிழ்த்துவாய் ஓம் தத்ஸத்.

ஓம் பிராமிருபாஹி கேவலம்.

ஏகாந்தசேவை.

ஆசியர்கள் இப்படி பிரதிதினமும் காலைமாலைகளில் மனம்கர்ம வசனங்களால் செய்யும் பாவங்களைப்போக்கிக் கொள்ள சந்தியாவந்தனம் பிரார்த்தனைகளும், இலலற சுகத்தைக்கருதியும் பொதுஜன சமூஹத்தைக்கருதியும் பிரார்த்தனைகளும் இருக்கச்சே, சிலர் இல்லறத்தைவிட்டு இமாலையம் முதலான பர்வத பிரதேசங்களுக்கு ஏகாங்கிகளாகப்போய் தபசுசெய்யவேண்டிய காரணமென்னவென்று எண்ணக்கூடும்; அப்படிப்பட்டவர்களுடைய திருப்தியின்பொருட்டு ஏகாந்தசேவையின் பெருமையைப்பற்றி இங்கு சற்று பிரஸ்தாபிப்போம்.

ஏகாந்த சேவை என்றல் ஜகதீசுவரனை யாதாமொரு பர்வத பிரதேசங்களுக்குப்போய் தனியாகஇருந்துதியானித்தலாம்

ஏகாந்த சேவைக்குப் பற்பல தொழில்களாலும், தொல்லைகளாலும், கவலைகளாலும், பிரபஞ்ச ஆசாபாச சஞ்சலங்களாலும், சூழப்பட்ட நாடு நகரங்கள் மாட மாளிகைகளைப்பார்க்கிலும், நிர்மலமான ஹிருதயத்தோடு ஈசுவரனையாராதிப்பதற்கு அசோகவனங்களும் நிஸ்ஸப்தமான உன்னத பருவத பிரதேசங்களும், திவ்விய நதி தீரங்களும் சிரேஷ்டமானவை.

நமது சரீர சவுக்கியத்திற்கு கூட பர்வதாதி தூதன பிரதேசங்களுக்கு சிலகாலம் போயிருந்தால் உத்தமமென வைத்திய நூல்கள் முறையிடுகின்றன. அதாவது: நமது சரீரத்திலிருக்கும் இரத்தம் செட்டு அதன் சத்துக்கள் க்ஷீண தசையடைய, கொடிய வியாதிகள் சம்பவித்து நொந்து பலஹீனமடையும்போது நாமிருக்கும் பழையவிடங்களைவிட்டு தூதன ஸ்தலங்களுக்கு போகும்படி ஆயுர்வேதம் ஆஞ்ஞாபிக்கிறது. தீராத வியாதியஸ்தர்களாகி இனி பிழைக்க மாட்டோமென்று எண்ணியவர்களும், நல்ல பூசாரமும், சுத்த காற்றும், சுத்த ஜலமும் உள்ளவிடங்களுக்குப்போய்; அங்கு சிலகாலந்தங்கி, வியாதிகள் நீங்கி மறு ஜனனம் பெற்றுவந்தவர்களைப் பலரைக் வீடுவந்து சேர்ந்தவர்களை நாம் பிரத்தியக்ஷத்தில் கண்ட உண்மையல்லவா? இவ்வண்ணமாகவே பக்திரஸமென்னும் சுத்த இரத்தஞ்செட்டு, பாவமென்னும் வியாதியினால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்களும், பாவாக்னியின் கூட்டத்தையும் இடத்தையும்விட்டு பரிசுத்தமான தூதன பர்வத பிரதேசங்களுக்குப்போய் தம் தாபத்தை தீர்த்துக்கொண்டு தன்னியராகலாமென்பது நிண்ணம். அங்கு ஆத்துமாவை பாவ பந்தங்களுக்காதாரமான சிற்றின்ப எண்ணங்களை விட்டு பேரின்பத்தையடையச்செய்யும் சாதனங்களனந்தமிருக்கின்றன. அவைகள் நமது பிரயத்தனமில்லாமல், தாமாக பிரம்மாநந்தத்தில் மூழ்கத்தூண்டும்.

அங்குதோன்றும் பிரம்மாண்டமும், பயங்கரமுமான பர்வதங்களும், அவற்றின்மேலிருக்கும் பிரம்மாண்ட குன்றுகளும் சஞ்சலமும் சலனமுமற்று, சர்வேசுரரைக் காண்பதற்கு விண்ணுலகை நோக்கி (மௌனயோகிகளைப்போல் அசைவற்று) நிரந்தரமாக நிற்க; அந்த மலைகளாகிய மௌனயோகிகளின் சலனமும் சஞ்சலமுமற்ற தபசை, சர்வேசுரரானவர் கண்டு கொண்டாடி, விண்ணுலகத்திலிருந்து தேவாமிர்தத்தை தாம் வாரி வாரி கொடுப்பதைப்போல, அப்பர்வதங்களின் கொங்களில் பெய்த விண்ணுலகின் பனித்துளிகள் உறைந்து, வெய்

யோனைப்போல் வெளுத்து பெரும் பனிக்கட்டிகளாகி, பிரபாகரனுடைய பிரகாசம் அவற்றின்மேல்பட, பற்பலவித வைரத்தினங்களினால் செய்யப்பட்ட பொன்மணி கிரீடங்களைப்போல் அவைகளுக்கு சடகோபுரங்கள் வைத்திருப்பனபோல் பிரதிபிம்பிக்கின்றன. அந்த உன்னதமான பர்வத தேகங்களை அலங்கரிக்க விநோதமான தேக்கு, தேவதாரம், செங்கு, மா, பலா, கதலி, கமுகு கொன்றை கொய்யா புன்னை பாதரி பன்னீர் பாரிஜாதம் சந்தனம் அகில் மகிழ் வன்னி அசோகம் அசுதி அரசு ஆலம் சம்பகம் மதனகாமம் முதலான விருக்ஷ ஜாதிகள் கொம்புங்களோகளுமாய் பருத்து, நெரித்து படர்ந்து அடர்ந்து அவற்றின் அழகிய இலைகள் தென்றலால் நடிக்கவும், அவற்றின் புஷ்பங்கள் விதம்விதமான வர்ணங்களோடும், வாசனைகளோடும் விகவிதமும் அவற்றின் விதம் விதமான காய்களிகள் வான்வெள்ளிகளைப்போல பிரகாசித்தும், அவைகள் பானுவின் உஷ்ணத்தினால் பழுத்து வெடித்து அதன் தேனை வண்டுகளுண்டு; ரீம் ரீம் என்று மந்தகீதம் பாடியாடவும், அவ்விருக்ஷங்கள் தங்களைப்படைத்து ஆதரிக்கும் அகிலவினைதனுடைய ஆயாசத்தை தீர்ப்பதைப் போலவும் அவ்வனல் விண்ணுலகத்திலிருக்கிறதாகவும் எண்ணி, தம் குன்ற வளம்பொருந்திய அழகிய குளிர்ந்த இலைகள், பூக்கள் கனிகளோடுகூடி வெண் சாமரம் வீச, விண்ணுலகைநோக்கி வளர்துகொண்டிருப்பதுபோலு மிருக்கின்றன.

இப்படி வளர்ச்சியையும், வன்மையையுமுடைய விருக்ஷங்களான நாயகர் களுக்கு உதவிசெய்யவந்த நாயகிகளைப்போல, மல்லிகை முல்லை ஜாதி சம்பங்கி முதலான கொடி செடிகள் அவ்விருக்ஷங்களுக்கடியில் முளைத்து வளர்ந்து அவ்விருக்ஷங்களின்மீது உத்தம நாயகிமார் தம் உத்தமநாயகரை எப்போதும் தழுவிச்சேர்வதுபோலவும் அந்த விருக்ஷங்களிமீது ஜப்பு சரங்களைப்போலவும் மரகத மாணிக்க மலர் மாலைகளைப்போலவும் படர்ந்து அவ்விருக்ஷங்களை அலங்கரித்தும், தமது ஒப்பற்ற புஷ்பங்கள் குப்பென புஷ்பிக்க தம் நாயகராகிய அவ்விருக்ஷங்களையும், அவ்விருக்ஷங்களுக்கிருப்பிடமான பர்வதங்களையும், அப் பர்வதங்களுக்காதாரமான பரமேசுவரரையும் பரிமளிக்கச்செய்கின்றன. அப் பர்வதங்களையடுத்த பள்ளத்தாக்குகளில் புஞ்சை நஞ்சை பயிர்கள் வளர்ந்து அவற்றின் தானிய இளங்கதிர்கள் பொன்மணிகளைப்போல் பிரகாசித்து, ஒப் பொன்போன்ற மணிகளையுண்டாக்கும் பயிர்களைப்படைத்த ஜகதீசுவரரின் பொற்கரங்களுக்கு முத்தமிட மேல்நோக்கிப் போவதைப்போல் ஆடுகின்றன.

அதன் முதிர்ந்த கதிர்களோவெனில், பராபர வஸ்துவின் அபார பெருமை யையுணர்ந்த பெரியோர், அப்பரமேஸ்வரருடைய பாதங்களின்மீதே தலைநிமிர்ந்து நின்றும் வண்ணமாக அப்பயிர்களின் முதிர்ந்த தானிய பொன்மணிகள் குனிந்து நெகிழ்ந்து பரமேஸ்வரனாகி தன்மை படைத்த ஜகதீசுவரனுடைய அடிகளை நமஸ்கரிப்பதைப்போல் பிரகாசிக்கின்றன. அப்பர்வத பிரதேசங்களெங்கும் பற்பலவித புஷ்பசெடிகளாலும், அவற்றின் ஆபரணங்களாக அப் புஷ்பங்களின்மீது பெய்த முத்துக்களைப்போன்ற பனித்துளிகளாலும் பெரன் செடிகளாலும், பச்சைப்பசேலென்றுள்ள தரையாலும் பசும்புல்லுகளாலும், நிறைந்து அப்பர்வதபிரதேசங்களிடம் வரப்பட்டவர்களுக்கு பட்டு மகம்மல் ஜமக்காளமிட்டழைப்பதுபோல நின்று நிலக்காற்றால் நடிக்கின்றன. பர்வதங்களின் பல சிகரங்களில் பரமேசுவரருடைய காருண்ணியத்தைக் காட்டுவதுபோல, ஆகை ஊற்றுக்கண்களும் ஜல சரங்களும் உற்பத்தியாகி அவற்றிலிருந்து

சுத்த ஜலம் பீறிட்டெழுந்து ஜகதீசுவரனே நம்மிஷ்டருக்கு அவனருள் இப்படித் தான் எதேஷ்டமாக வருமென்று உத்கோஷிப்பதைப்போல அடுத்த பள்ளத் தாக்குகளில் குபீர் குபீரென்று வெள்ளிரசம்போல் விழுந்து பேரருவிகளாக வும் சிற்றருவிகளாகவும் பாய்ந்து பல கற்களிலும் மெடிகளிலும் தாக்கி, சர்வே சுவரரின் சக்தியைப்பற்றி சலசலவென்று பாடுகின்றன. அப்படிப்பாயும் அருவிகளின் அழகிய கரைபோரக்களிலும், அதனைகத்திலுண்டாகிய வாவி கூபதடாகங்களிலும், கரை தீரங்களிலும் ஆடி, மாடி, பசு புலி, யானை, கரடி, நரி, மான், மந்தி முதலான மிருகங்கள் அல்து எதேஷ்டமாகவிருக்கும்; அமிர்த உணவுகளே கௌவியும் வௌவியும் தின்று தேக்கெறிந்து மதேஷ்டத்தின்படி திரிந்து விளையாடி விண்ணுலகிற்கொப்பான இப்பர்வத வாரங்களே மனிஷர் வந்து மிதமிஞ்சிக் கெடுக்காவண்ணம் இயற்கைக் காவலாளிகளைப்போல காக் கின்றன.

அருகில் நிற்கும் விருக்ஷங்களிலும், செடி கொடிகளிலும் பச்சை, நாகம், சாரை, விரியன் முதலான அழகிய பாம்பினங்கள் வனிதை லீலைப் போல அம்மரங்களில் தொங்கி, அவ்வனங்களே அன்னியர் புகுந்து பெடுக்காத வண்ணம் வேலிகளைப்போலிருந்து காப்பதாக ஊஞ்சலாடிக்கொண்டிருக்கின் றன. அடியிலிருக்கும் அழகிய பிரண்ஸ் புல்லுகளே மனுஷர் பெடுக்காவண் ணம் அழகிய அட்டைகள் நீள நீண்டு ஒச்சரிக்கையிடுகின்றன. அங்கு அரு ணோதயகாலத்தில் ஆரம்ப பரவசமாகி அப்பனிடத்தில் அன்பையும் நன்றியறித லையும் காட்டி, அவர் மஹிமையை தாமறிந்தாற்போலும், அவரது சிருஷ்டி செய்த சுவஷ்டமாகிய ஆசாசத்தைத் தீர்ப்பதுபோலும் கோகிலம், கிளி, காகண வாய், சக்கிரவாகம், செம்போத்து, வானம்பாடி முதலான பக்ஷிகள் தமக்கு தெரிந்த பாவைகளில் இனிய கீதங்களைப்பாடியும் ஆனந்தமுண்டாக்கியும்; அவற்றில் சிலபக்ஷிகள் குறித்து கிளைகளில் விளையாடியும் (உத்தமகன்னிகைகள் கொம்மியடித்தாடுவதுபோல) விருக்ஷங்களிலிருக்கும் கனிகளைத்தாவி தூவி உண்டு உல்லாசமாக ஆடுகின்றன. அப்படி விருக்ஷங்களின்மேல் பாடும் பக்ஷி களின் கீதங்களுக்கேற்க அடியில், மயில் அன்னம் புறு முதலான பக்ஷிகள் தம் பலவித வருண அலங்காரமான இரக்கைகளை விரித்து (கற்புடைய மாதர் தம் கணவர்மெசச நடித்து நடப்பதுபோல) தம் சிருஷ்டிகர்த்தாவாகிய கடவுளின் ஆனந்த அழகைகொண்டாடி நடிக்கின்றன. மீளவும் இப்பர்வத பிரதேசங்களே நாடிவரும் தபோநிதிகள், எதேந்திரியர்கள், ஜிதேந்திரியர்களாகிய மஹான்கள் சுகமாக தங்கியிருப்பதற்கு இயற்கையான குகைகளும், பலவித புஷ்பக்கொடிகளாலாகிய சிங்கார லதாகிரஹங்களும், அங்குலந்து தங்கப்பட் டவர்க்குப் பலவித கனிகளும் கிழங்குகளும்; காமதேனுவைப்போன்ற காட்டுப் பசுக்கள் தமது கித்திப்பான பாலில் பாதி பாகத்தை தம்மோடு குதித்துக் குதித்துத் துள்ளி விளையாடும் தம் கண்மணிகளான கன்றுகள் குடிக்கக்கொ டுத்தபோக, மீதியைக்குடிப்பதற்கியாருமில்லையே என்று வங்கி மஹாத்துமாக் களான வன சஞ்சாரிகளுக்காவது உபயோகமாகும்படி பர்வத குகைகளுக்கும், வத கிரகங்களுக்கும் அருகில் போய், அங்கு கிடக்கும் பாறைக்கற்களின்மீது படுத்து தம் மடிகளை அழுத்த, அமிர்தத்துக்கொப்பான அவற்றின் பால் தானுக வடிந்து வெண்ணுரைகளாகப் பெருகிப் பாய்ந்தோடிய பிறகு, பிரபாகரனுடைய உஷ்ணத்தினுல் காய்ந்து வெடித்து ஸ்படிக துண்டுகளைப்போலவும், பத்தாசு கட்டிகளைப்போலவும் பிரகாசிக்கும் பாற்கட்டிகளையும்; குளிர் சீதளமுதலானது

களால் வருந்தாதபடி, ஸலம், இஞ்சி, சுக்கு, மிளகு, திராம்பு முதலான மூலதரும் பொருட்களையும், புலித்தோல் மரவுரிமுதலான சர்மங்களையும் மந்திரன் கொண்டு வந்து சேர்த்து வைக்கின்றன. ஏகாந்தவாஸிகளுக்கு "ஏகமேவாத்விதீயம், பிரம்மஸிருபாஸ்ரீகேவலம்" என்றறி சுருதிகளை அப்பர்வதரிஷிகள் பாடுவதை ஸிரிகவ பழக்கத்தால் பாடஞ்செய் அங்கு பாடுகின்றன. மற்ற ஸில்வண்டுகளனைத்தும் "ஓம் தத்சத்" என்று ஒரே ராகமாகப்பாடி ஆநந்தமூட்டுகின்றன.

இப்படிப்பட்டவிடத்தில் பிரபஞ்ச சம்பந்தமான பாபதாபங்கள் பிரவேஸிக்க வழியில்லை. இவ்விடத்தில் உலக ஆதாபாதங்கள் வந்து அணுகுவதற்கு அதிகாரமில்லை; உலக தாபத்திரயங்களால் வருந்தும் மானுஷிக ஹிருதயங்களை கிருபாநிதியாகிய கடவுள் தம் கருணைக்கரங்களால் தடவிக்கொடுத்து அழைப்பதுபோல் குளிர்ந்த காற்று தேகத்தின்மீது வீஸி சாந்தியை அடையச்செய்கின்றது. மேலும், பர்வத பிரதேசங்களில் அடிக்கடி மழைபெய்வது சஹஜ மாகையால், அவ்விடத்துக்குப்போகும் பக்திமான்களுக்கு அப்பரமேஸ்வர ருடைய இருப்பைக்காட்டும்படி மேக கர்ச்சனைகள் கிடி, கிடி, தாம், தாம், தீம், தீம் என்று அடிக்க கர்ஜித்து நான் எங்கும் இருக்கிறேன் என்று அடிக்கடி ஸினேப்பூட்ட, அவரது மஹிமா சக்தியை மின்னற்கொடிகள் மோஹன சுந்தரி களைப்போல ஜ்வலித்து நடித்துக்காட்ட இத்திய திசைக் கண்டும் கேட்டும் அறிந்த பக்திமான்களுக்கு கடவுள் கருணாசம் பொழிவதைப்போல அடிக்கடி பாட்டம் பாட்டமாக மழை பெய்து மனதைச்சாந்தப்படுத்தும். இம்மட்டோ! இந்தப் பர்வத பிரதேசங்களிற்கண்ணுறும பற்பல பதார்த்தங்களும் பரமேசுவர ருடைய மஹிமையைப் பிரதிஷ்டையாக்கி அவ்வள்ளலைச்சிந்திக்கச்செய்யும்; ஆம் அவைகள் நமது பிரயத்தினமில்லாமலும் நம்மையறியாமலும் மனதை பகவத்தியாநத்தில் மூழ்கி சதானந்த யோக சமாதியையடையச்செய்யும்.

ஆனதுபற்றியே ஆரிய ரிஷிகள் ஏகாந்தசேவைக்காக பர்வத பிரதேசங்களுக்குச்சென்றனர்.

DIVINE WORSHIP.

Divine worship consists of four parts:—Adoration, Thanksgiving, Meditation, and Prayer.

Adoration is the expression of reverence and devotion to the Diety at the conception of His perfect and eternal attributes. Thanksgiving is the expression of gratitude at the conception of His infinite mercy and love, where-with He protects our body and soul. Meditation is the spiritual insight in to His living persence at the contemplation of His all-pervading existence. Prayer is the humble supplication of deliverance from sin, and of peace and purity in the soul. The harmonious combination, of these four elements constitutes true Divine worship.

(130). முண்டகோபநிஷத்து.

3 வது முண்டகம் 2-வது கண்டம் 9 வது வாக்கியம்.

லமோததே மோதநீயம் ஹிலப்த்வா;
தாநிசோகந்தரதி பாப்மாநம் குஹாக்ரந்தி
ப்யோவிமுக்தோ அம்ருதோ பவதி.

பொழிப்புரை.

(இப்படி பிரமோபாஸனை செய்யும்)
அவர் ஆநந்திப்பிக்கிற பிரமத்தையடைந்து ஆநந்திகிறார்.
[illegible] பாபத்தைக்கடக்கிறார் உலகத்திலுள்ள
[illegible] நீங்கி அழிவற்றபதவியடையவராகிறார்.

விசேஷ உரை.

யாவற்றிலும் சிறந்ததாகும் உள்ளாத்மாக்குத் திருத்தியை வருவிக்கிற ஒன்று
[illegible] பெருமையான பிரமத்தை அடைந்த அவரில் பிராணனை வைத்த, பிரமஞானி
[illegible] மிடம் சென்று முடிவற்ற சுகத்தை அநுபவிக்கின்றனர். யார் பிரமத்
[illegible] பிரமத்தினது திருவுள்ளப்படி எல்லாக்காரியங்களையும்
[illegible] ஒரு நியமனையும் விரும்பாமல அவரால நியமிக்கப்பட்ட தரும
[illegible] தவறாமல் அநுசரணைசெய்துகொண்டிருக்கிறார். மேலும் ஸ்வப்பிரயோஜனத்தைத்
[illegible] அடியோடு அலக்ஷ்யம் செய்து அவருக்கு அநுபவனை காரியங்களையே செய்வதிலேயே முயற்சி செய்து
[illegible] கொண்டிருக்கிறார். ஆனால் அவர் துயரத்திலிருந்து நீங்குகிறார். பாபத்தி
[illegible] நீங்குகிறார். இவ்வுலகத்தினது மோஹபாசத்திலிருந்து விடுபட்டு எப்
[illegible] பிரமத்தினிடத்தில் நித்தியமும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

Having obtained Him, the all-cheering, one rejoiceth. He avoideth sorrow, avoideth vice and freed from the knots of error in the mind, becometh immortal.

---

(131). ஈசாவாஸ்ய உபநிஷத்து

1-வது வாக்கியம்.

ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச
ஜகத்யாம் ஜகத்; தேநத்யக்தேந பும்ஜீதா
மாக்ருதஃகஸ்யஸ்விததனம்.

பொழிப்புரை.

இந்தப்பிரமாண்டத்தில் எதோ கிஞ்சித்தாக இருக்கும் இவ் வுலகமுழுமையும் பரமேசுவரனல் வியாபிக்கப்பட்டிருக்கிறது. பாப சிந்தையைவிட்டுப் பிரம்மாநந்தத்தையடையுங்கள். யாருடைய பொருளையும் விரும்பாதேயுங்கள்.

விசேஷ உரை.

அப்படி பறவைகள் தங்கள் குஞ்சுகளைத்தங்கள் இறக்கைகளினால் மூடி வைத்துக்கொண்டு பல இடுக்கண்களிலிருந்து காக்கின்றனவோ; அவ்விதமாக பரமேசுவரனால் இவ்வுலக முழுமையும் போர்த்தப்பட்டும் வியாபிக்கப்பட்டும் இருக்கின்றது; மேலும் நிதமாக ரக்ஷணையைப் பெறுகின்றது. அவர் உலகத்தினது இராஜாதிராஜன், அவர் நமது தந்தை, இரக்ஷகர், பந்து, அவரது அதிகாரம் எங்கும் வியாபித்திருக்கின்றது. அவரது அன்பு எங்கும் விளங்குகின்றது; பாப சிந்தையையும், விஷய விருப்பத்தையும் விட்டு, அன்பிற்குரிய அவரை யடைந்து பிரமாநந்தத்தை அனுபவியுங்கள். எப்படி உடலினது இயற்கையான நிலையின் திரிபு பிணியோ, அப்படி மனோவிகாரம் பாபம். பிணி உண்டாயின் எப்படி அன்னாஹாரம் செல்லாதோ, அதுபோல பாபாசரணை செய்யின் பிரமாநந்தானுபவத்தில் கருத்திராது; ஆனதால், பாபசிந்தையும் பாபானுஷ்டானத்தையும் விட்டு, மனதை நன்நிலையில் நிறுத்தி, சுத்தப்படுத்திப் பிரமாநந்தத்தை யனுபவித்தல் வேண்டும். குற்றம் புரிபவராகியும், நல்லொழுக்கமில்லாமலிருக்கிற பிள்ளைகள், தமது தந்தையினிடத்து ஒருபொழுதும் அன்புசெய்யாமட்டாதவர்களாகி இருக்கின்றனர்; மேலும், தம்மிடத்து அவர்களுக்கிருக்கும் அன்பையும் அறியமாட்டாதவர்களாக இருக்கின்றனர்; அவரது கட்டளைகளில் எப்பொழுதும் தயரப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அதுபோல பாபத்தைச் செய்கிறவர்கள் நாள்தோறும் அவரது சிறந்த தந்தையினால் ஸ்தாபிக்கப்பட்ட தருமமென்னும் அணையைக்கடந்து தகுந்த தண்டனையைப்பெற்று எப்பொழுதும் தயரத்திலேயேயிருக்கின்றனர். அவரது சாந்தஸ்வரூபத்தையும், அவரது பவித்திரமாகிய ஸ்வரூபத்தையும், அவரது மங்கள ஸ்வரூபத்தையும் அனுபவிதனிலையற்றதும், அல்பமானதும், தூய்மையற்றதுமான சித்தத்தை அவரது அன்பாகிய இரசத்தில் எவ்விதமாக நனைக்கமாட்டுவார்கள்! ஆகையால், யாருக்கு பிரமத்தையடையவேண்டுமென்னும் விருப்பமிருக்கிறதோ அவர்கள் விஷய விருப்பத்தை விடவேண்டும்; அவர்கள் முற்றும் பாபசிந்தையையும், பாபத்தைப் பற்றிய வார்த்தைகளையும், பாபானுஷ்டானத்தையும விட்டு நீங்கியிருத்தல் வேண்டும். அவர்கள் பிறருடன் அந்நியாயமான வியவஹாரத்தைச்செய்யக் கூடாது; பிறர்மனைவியின்மீது கெட்ட நோக்கத்தை வைக்கலாகாது, பிறரது பொருளை விரும்பலாகாது.

All this whatever is in this world is full of God. Abandoning vicious desires, enjoy Him and covet not the riches of any.

குறிப்பு.

பிராமோபாஸனையின் விதத்தையும் உபயோகத்தையும் பற்றி இந்த அத்தியாயத்தில் சங்கிரஹமாக காட்டப்பட்டது. இனி பிராமோபாசனை செய்யும் ஆரியர் அநுஷ்டிக்கவேண்டிய தருமங்களின் சாரசங்கிரஹத்தை அடுத்த அத்தியாயத்தில் காணலாம்.

ஐந்தாவது அத்தியாயம்.

ஆரியர் தருமலக்ஷணம்.

பிராமவாதிகளுரைக்கின்றனர்.

(132). தைத்திரியஉபநிஷத்து

சிக்ஷாவல்லி 11-வது அநுவாகம் 2-வது வாக்கியம்.

யாந்யஸ்மாகம் ஸுசரிதானி தாநித்வயோ பாஸ்யாநிநோ இதராணி.

பொழிப்புரை.

எங்களுடைய நல்லொழுக்கள் உங்களால் அனுஷ்டிக்கப்படத்தக்கவை; வேறுனவை அனுஷ்டிக்கப்படத்தக்கவையன்று.

விசேஷ உரை

நாங்கள் சொல்லுகிற எல்லா நல்லுபதேசங்களின் படிக்கும், எங்களுடைய எல்லா ஸதாசார அநுஷ்டானங்களின்படிக்கும் நீங்கள்நடத்தல்வேண்டும்; துஷ்டக்களைப்பார்த்து அவர்களது துர்மார்க்கத்தில செல்லல் வேண்டாம், என்று பிரம ஞானிகளாகிய ஆசாரியர்கள் உபதேசிக்கின்றனர்,

Those good deeds which we perform, them you should perform, not those of a contrary nature.

(133). தைத்திரியம்

சிக்ஷாவல்லி 11-வது அநுவாகம் 2-வது வாக்கியம்.

யாந்ய நவத்யானி கர்மாணி தானி ஸேவிதவ்யாநி நோ இதராணி.

பொழிப்புரை.

எந்தக்காரியங்கள் நிந்திக்கப்படத்தக்கவைகளல்லவோ, அந்தக்காரியங்கள் அநுஷ்டிக்கப்படத்தக்கவைகள்; வேறு காரியங்களன்று.

விசேஷ உரை.

இவ்வுலகில் விசேஷ தருமம், சாமானிய தருமம் என இரண்டுவகை காரியங்களுண்டு. இவைகளில் விசேஷ தருமகாரியமேதெனில், அந்தந்த தேசத்துக்கும, காலத்துக்கும் தக்கபடி நியமித்துக்கொள்ளும் தருமகாரியங்களாம். இவைகளே அந்தந்த தேசத்துக்கும், காலத்துக்கும் தக்கபடி, காலத்துக்குக்காலம் மாற்றிக்கொள்வதில் பாதகமுமில்லை சாதகமுமுண்டு. சாமானிய தரும காரியங்களோ எல்லா தேசத்தாருக்கும் எல்லா காலத்தாருக்கும் பொதுவானவை:

அவைகளே ஆனாலும் அங்கீகரிக்கத்தக்கவையாம். அவை யவை யெவை யெனில், "நன்மை செய் தீமை மற" என்னும் நல்ல காரியங்களேயாம். ஆகவே,

எல்லா நன்மைகளுக்கும் காரணமாகிய பரமேசுவரரது நன்னெஞ்சகத்தை லக்ஷியத்தில் வைத்துக்கொண்டு, நன்மையைக்கருதி நற்காரியத்தை அநுஷ்டித்தல் வேண்டும்; தீயகாரியத்தை அனுஷ்டிக்க வேண்டாம்

Those actions which are blameless, them you should practise, not those of a contrary nature.

---

(134). தைத்திரியம்

சிக்ஷாவல்லி 11-வது அனுவாகம் 3-வது வாக்கியம்.

மாத்ருதேவோ பவ, பித்ருதேவோபவ
ஆசார்யதேவோபவ.

பொழிப்புரை.

தாய் தந்தை ஆசான் இவர்கள் தெய்வத்தைப்போல மரியாதை செய்யப்படத்தகுந்த உரியவர்களென்று அறியக்கடவீர்.

விசேஷ உரை.

மாதா பிதா குரு தெய்வமென்ற மனு [illegible]
யும் பிரமவும் முன்னறிதெய்வமென்ற [illegible]
பெறுதலில் தாய்தந்தைகள் அதிகம் [illegible]
வருந்தினும் போதாதாகையால்; [illegible]
அதிக கவரவத்தக்குரியவர், இந்த பூமியைவிட
மோ வானத்தைவிட உயர்ந்தவர், குருவை [illegible]
நல்ல புதல்வர் தாய் தந்தைகளுடன் [illegible]
சொல்லல் வேண்டும். அவர்களுக்கு [illegible]
கிறவரையில் அநுஷ்டிக்கவேண்டும்; [illegible]
னது நல்ல நன்மைக்கு உலகத்தில் பிரதிநிதிகள்
போல நம்மைக் காத்து வருகிறார்கள் [illegible]
ரானை இருக்கவிட்டு நீங்கி மூப்பும் [illegible]
யடைகிறோம்; ஆனதால் ஆசாரியர்களிடத்தில் [illegible]
வேண்டும்.

Consider your mother as a deity. Consider your father as a deity. Consider your spiritual preceptor as a deity.

தைத்திரியம்

(135). பிரசன்னோபநிஷத்து

6-வது பிரசினம் 1-வது வாக்கியம்.

ஸத்யம்வத; ஸமூலோவா ஏஷ
பரிசுஷ்யதி யோ அ நிருதமபிவததி.

பொழிப்புரை.

மெய்யைச்சொல. பொய்யைச்சொல்லுகிறவன் வேறுடன் நீங்குபோகிறான்.

விசேஷ உரை.

ஸத்யம் என்னும் பதம், ஸத் என்னும் தாதுவிலிருந்து பிறக்கது. அந்த ஸத் – தாதுவக்கு = அது இருக்கிறது. உள்ளது, உண்மை, மெய் என்றுதி பொருள்களம்; அதாவது, எது ஆதியாகவும், என்றுமுள்ளதாகவும் இரண்டற்றதாகவும், மற்ற சேதனசேதனங்கள் யாவும் எதிலிருந்து ஜனித்தாகவும், ஜனிப்பதாகவும், ஜனிக்கிறதாகவும், பறுபடியும் எதினிடமே போய் சேர்வதாகவும் இருக்கிறதெதுவோ அதற்கு ஸத் என்று பெயர். இந்த ஸத் என்னும் தாதுவிலிருந்தே ஸத்தியம் என்ற பதமாகியது. இந்த ஸத்து பதத்தின் பெருமையிப்படிப்பட்டதாகையால், "ஸதயமேவ ஜயதி" —ஸத்யமேவப்போ நும் ஜெயத்தைப்பெறுமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும்,

ஸத்தியமே வேதாந்த சித்தாந்த சமயதீபம்; அந்த சித்தியதீபத்தை அவிக்க யாவராலும் முடியாது. அதுவே பரிசுத்தவான்களுடைய சமயம், அதுவே பரிசுத்தமான பக்தி, அதுவே பூத உடலை நசிக்கச்செய்து ஜீவாத்துமாவை பரமாத்துமாவினிடம் சேர்க்கும் சாதகம், அதுவே மூடிவான சுகிர்த்தத்தைத்தருவது. அதுவே பூரணப்பெருளைக்காட்டுவது. அதையனுஷ்டிப்பதே உண்மையான பூஜையும், உண்மையான விரதமும், உண்மையான வேள்வியுமாம். அதிலுலே யே எதவும் ஸ்திரப்படுத்தப்படுகிறது. யார் சுயலாபத்தை விட்டு பொதுநலத்துக்கு உழைக்க அந்த ஸத்தியத்தை துணையாகக் கொள்ளுகின்றனரோ, அவரை அது பூஷணப்படுத்தும். ஸத்தியத்திற்கு மேலானது ஒன்றுமில்லை. ஸத்தியத்தின் ஒரு அணுவை ஒரு கிராசுகட்டிலும், ஆயிரம் அசுவமேத யாகபலனை யோர் கிராசுதட்டிலும்வைத்தாலும்; அந்த அணுரூபமான சத்தியம் அந்தஆயிரம்அசுவமேதயாக பலனையுடைய கிராசுத்தட்டைதூக்கி கவிழ்த்துவிடும்; ஆகவே, ஸத்தியத்தை நாடி தலைவணங்குங்கள், அது என்றும் பக்கத்திலிருந்து புனிதமாக்கும் என்று பாரதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும்,

ஸத்தியம் என்பது தனியேகமானது. அது அநந்தமல்ல. அது சன்மயமாக நிற்பதால் அதை விகாரிக்க நருக்கலங்காரம் வேண்டியதில்லை. அது சகலரும் அறியக்கூடிய சமீபத்தில் சாதாரண சாதனமாகவிருப்பதால் அதை அறிய அதிகாரம்பார்க்கவேண்டிய தில்லை. அதைத்தொன்றுதொட்டு அறிந்தய்ய அம்மை ஆவலைகொண்டார்கள்; ஆனால் அனாதிமுதல் இன்று வரையிலும் அதை ஒருவரும் முற்றுமுடிய அடைந்தார்கள் இல்லை. அந்த விலையற்ற செல்வத்தைப்பெறாதவர்கள் பாக்கியமே பாக்கியம்; அதைப்பெற்றவர்களுடைய துர்ப்பாக்கியமே துர்ப்பாக்கியம். அது பாக்க பிரயத்தனப்பட்டால் பிரதியூகமாகும், பாராதவடனே ஸ்பஷ்டமாகும்; ஸ்பஷ்டமானால், அதைவிடப்பிரிய மனம்வராது. அது மானவஜாதியாரின் மதசித்தாந்தங்கள் யாவற்றிலும் மறைந்து நிற்கின்றது. பிரபஞ்ச லௌகீக தெய்வீக காரியங்களெல்லாவற்றிலும் எப்போதும் பிரகாசித்துகொண்டிருக்கிறது, அது அந்தகாரமான இருட்டின்மறைவிலும் மங்காமலிருக்கிறது. பூரண சந்திரபிரகாசத்தில் புஷ்பச்செடிகளுக்கடி

மில் பரிமளகந்திகளைப்போல் மடிக்கின்றது. அது பயங்கரமான மேக கர்ச் சனைகளிலிருந்து பாவிகளை பயப்படுத்துகிறது; நகூத்திரங்களிலிருந்து கல் லோர் முகத்தைப்பார்த்து நகைக்கின்றது.

அது அருள்வாக்குபெற்ற ஆசாரியர் வார்த்தைகளிலிருந்து பீறிக்கொண்டு வந்து உபதேசிக்கின்றது. அதுநிரபராதிகளின் நேத்திரங்களிலிருந்து மூலவிக் கின்றது. அதுசூரமுள்ளகுற்றவாளிகளின் கண்களைக்கூசப்படிசெய்கின்றது. இம்மட்டோ! அது குழந்தைகள் முகத்தில் கருணையுருபமாக குடிகொண் டிருக்கிறது. பாலியர் முகத்தில் பூரண அன்பாக பிரகாசிக்கிறது. முதியோர் முகத்தை மஹிமைப்படுத்துகின்றது. ஆகவே ஸத்தியம் என்பது எங்கும் எப் போதுமிருத்தல் பிரத்தியக்ஷம். அதை அநுஷ்டித்ததலைல்லவா ஹரிச்சந் திரன் முதலானவர்களுடைய பெருமை இன்றளவும் பிரபஞ்சமெங்கும் பிரதிஷ்ட டையுடன் புகழப்பட்டுவருகிறது. ஆகவே,

ஸத்தியரூபமே பிரமம், ஸத்தியமே தருமத்திற்கு மூலம்; ஆனதால் பிரம பாராயணர்களாகிய சான்றோர் மெய்ஞ்ஞானபுடையவர்களாகி, மெய்யைசொல் லல் வேண்டும், மெய்யாக நடத்தல்வேண்டும்.

Tell truth. He drieth to the very roots who telleth untruth.

---

(136). தைத்திரியம்

சிக்ஷாவல்லி 11-வது அநுவாகம் 1-வது வாக்கியம்.

ஸத்யாந்நப்ரமதிதவ்யம் தர்மாந்நப்ரமதிதவ்யம் கூசலாந்நப்ரமதிதவ்யம்.

பொழிப்புரை.

ஸத்தியத்தைவிட்டு வழுவலாகாது, தருமத்தைவிட்டு வழு வலாகாது, நற்செய்கையைவிட்டு வழுவலாகாது.

விசேஷ உரை.

ஸத்தியம் சொல்லுதலும், ஸத்தியமாக நடத்தலும் ஆரியர் சமயத்தின் உயிர். யார் சத்தியஸ்வரூபியாகிய பிரமத்தையடைய விரும்புகின்றனரோ அவர்கள், ஒரு பொழுதும் சத்தியம் தவறலாகாது. பிரம பாராயணராகிய பிரம நிஷ்டர் நல்ல தன்மையுடன் எப்பொழுதும் தருமத்திற்கு மூலமானவரும், நன் மைக்கே இருப்பிடமுமான கடவுளால் நியமிக்கப்பட்ட தருமானுஷ்டானத்தி லேயேயிருக்கிறார். தருமானுஷ்டானமின்றி உள்ளம் பரிசுத்தமாவதில்லை; கட வுளுடைய அருளும் கிடைப்பதில்லை. பிரமஞானமும் விளங்குவதில்லை; ஆ கையால், மோக்ஷத்தில் விருப்பமுடையவர் ஒருபொழுதும் தருமத்தைவிட்டு வழுவலாகாது. கடவுளினது நல்ல நோக்கத்துடன் தமது நல்ல விருப்பத் தையும் சேர்த்து, அவரால் நியமிக்கப்பட்ட ஸமஸாரத்தினது கன்மைக்கு வே ண்டிய காரியங்களில் செல்லாவிடின், அவரது நல்லநோக்கத்தையறிய வல்லே மல்லம்; ஆனதுபற்றியே, நல்லகாரியங்களைவிட்டு நீங்கலாகாது.

One should not part from truth; One should not part from rightousness; One should not part from good deeds.

---

(137). தைத்திரியம்

சிக்ஷாவல்லி 11-வது அநுவாகம் 3-வது வாக்கியம்.

ஸ்ரத்தையாதேயம்; அஸ்ரத்தையா அதேயம்.

பொழிப்புரை.

அன்புடன் தானம் செய்தல்வேண்டும், அன்பின்றி தானம் செய்யத்தக்கதில்லை.

விசேஷ உரை.

தக்கவருக்கே தானம் செய்யவேண்டும்; என்றால், கூன் குருடு நொண்டி முடவர்களுக்கும் அல்லது பிணி மூப்பு முதலானதுகளால் யாதொரு தொழிலையும் செய்ய சக்தியற்ற ஏழைப்பரதேசிகளுக்கும், ஏழைகளுக்காக ஸ்தாபித்த கல்வி, கைத்தொழில் வைத்தியசாலைகளுக்கும், ஜனோபகாரமாகவும் தேசோபகாரமாகவும் ஸ்தாபிக்கும் தருமசாலைகளுக்கும் செய்வதே உத்தமமான தானம். குடியர், மடையர், தடியர், சோம்பேரி, வேஷதாரிகளுக்கும்; பிறர் மெச்சும்படியாகவும், டம்பார்த்தமாகவும் செய்யும் தானத்தினால் தீமையுமுண்டு நன்மையுமில்லை; மேலும், செய்யும் தானத்தை வீண் டம்பத்துக்கும் கட்டாயத்துக்கும் செய்யாமல் உண்மையான அன்புடன் செய்யவேண்டுமாகையால், எவரும் அயரத்துடன் தானம் செய்யவேண்டுவதில்லை, ஆனால் அன்புடன் தானம் செய்தல்வேண்டும்.

One should give graciously. One should not give ungraciously.

---

(138). தைத்திரியம்

சிக்ஷாவல்லி 11-வது அநுவாகம் 1-வது வாக்கியம்.

தர்மஞ்சர; தர்மாத்பரம்நாஸ்தி;
தர்ம:ஸர்வேஷாம் பூதானும் மது.

பொழிப்புரை.

தருமத்தை அனுஷ்டியும், தருமத்தைவிடச்சிறந்ததொன்றுமில்லை. தருமம் எல்லா உயிர்களுக்கும் இனிமை.

விசேஷ உரை

தருமம் என்னும் பதம் தீரி: என்னும் ஸம்ஸ்கிருத தாதுவிலிருந்துண்டானது. இந்த தீரி:—என்னும் தாதுவுக்கு = காப்பாற்று என்பது பொருள். அதாவது—பிரபஞ்ச வாழ்க்கை என்னும் ஆசாபாச படுகுழியில் தப்பித்தவறி விழுந்த தத்தளிப்பவருக்கு கைகொடுத்து மேல்தூக்கி பாதுகாக்கும் செய்கைக்கு

தருமமென்று பெயர். ஆகிலிலிருந்த இக்காட்டு ஆரியர் இந்த தருமத்தை 32 விதங்களாக வகுத்தார்கள். அவையெவையெனில்:

1 ஆதுலர்க்குச்சாலை—ஏழைகள் குடியிருக்கவீடுகளைக்கொடுத்தல்.
2 ஓதுவார்க்குணவு—படிப்பவருக்கு போஜனமிடல்
3 அறுசமயத்தார்க்குண்டி—சைவாதி 6 சமயத்தாருக்கு உணவுகொடல்.
4 பசுஒக்கலாயுறை—பசுக்களைத்தினமேபாட்டு வளர்த்தல்.
5 சிறைச்சோறு—குற்றஞ்செய்த கைதிகளுக்குஉணவுகொடல்.
6 ஐயம்—ஏழைகளுக்கு பிச்சைகொடுத்தல்.
7 நின்பண்டம் நல்கல்—யாத்திரைக்காரருக்குணவுகொடல்.
8 அறவைச்சோறு—நோயற்றவர்களுக்கு அன்னமிடல்.
9 மகப்பெறுவித்தல்—பிள்ளைபெறுவோர்க்குதவிசெய்யல்.
10 மகவுவளர்த்தல்—பிள்ளையைபோஷித்தல்.
11 மகப்பால் வார்த்தல்—குழந்தைகளுக்கு பால்தருதல்.
12 அறவைப்பிணஞ்சுடுதல்—பிரேதங்களை சுட்டு புதைத்தல்.
13 அறவைத்தூரியம்—நோயற்றவர்க்கு வஸ்திரமீயல்.
14 சுண்ணம்—தாம்பூலத்துக்கு சுண்ணம்புதருதல்.
15 நோய்மருந்து—வியாதியஸ்தர்களுக்கு மருந்தீதல்.
16 வண்ணூர்—ஏழைகளின் துணிவெளுக்க கூலிதரல்.
17 காவிரன்—தருமகர்வரம் செய்வித்தல்.
18 கண்ணுடி—முகம்பார்க்கக்கண்ணுடிதரல்
19 காதோலை—ஏழைப்பெண்களுக்குகாதுகளுக்கு ஓலைதரல்.
20 கண்மருந்து—கண்களுக்கு மைதரல்.
21 தலைக்கெண்ணை—ஏழைகள் வாரிக்குளிக்க எண்ணைதரல்.
22 பெண்போகம்—கலியாணம் செய்வித்தல்.
23 பிறர்துயர்காத்தல்—ஏழைகள் துயரத்தை நீக்கல்
24 தண்ணீர்ப்பந்தல்—வழிப்போக்கருக்கு ஜலதருமம் செய்யல்.
25 மடம்—யாத்திரைக்காரருக்கு தங்க சத்திரங்கள் கட்டல்.
26 தடம்—ரஸ்தாக்கள், தடாகம் குளங்கள் வற்படுத்தல்.
27 சோலை—வழிப்போக்கர் தங்க தோப்புகளையுண்டாக்கல்.
28 ஆவுரிஞ்சுதாண்—கால்நடைகள் உடம்பைதேய்க்க கற்கள்நடல்
29 விலங்கற்குணவு—பிராணிகளை போஷித்தல்.
30 எறுவிடுதல்—பசுக்களுக்காக காளைகளைக்கொடுத்தல்.
31 விலைகொடுத்துயிர்காத்தல்—பொருள்கொடுத்து பிராணனைக்காத்தல்.
32 கன்னிகாதானம்—கன்னிகைகளை சொத்துடன் விவாஹம்செய்வித்தல்.

என்று வகுக்கப்பட்டும் அறுஷ்டிக்கப்பட்டும் வந்தாலும், இந்த தருமம் என்னும் பதத்தின் பொருளைபற்றி ஆழ்ந்து ஆராய்வோமானால் அதற்கு கடமை என்னும் பொருளே பலவிதத்திலும பொருந்தியதென்று சொல்லலாம்.

அதாவது:

மாதுடைக்கடமையை முடித்தலின் பெயர் தருமம். தமது விஷயத்தில் தாம் செய்யவேண்டிய கடமை, தாய்தந்தைகள் விஷயத்தில் தாம் செய்யவேண்டியகடமை மனைவி விஷயமாயும் குழந்தைகள் விஷயமாயும் செய்யவேண்டியகடமை அண்டைவீட்டார் விஷயமாயும் சுற்றத்தார் விஷயமாயும் செயிய வேண்டியகடமை, செல்வவான்கள் விஷயமாகச் செய்யவேண்டியகடமை,

ழைகள் வறுமையிலுள்ளோர் ஆதரவற்றவர் இவர்கள் விஷயமாகச் செய்யவேண்டியகடமை, ஸ்வதேசத்தைப்பற்றி செய்யவேண்டியகடமை, கடவுள் விஷயமாகச்செய்யவேண்டியகடமை, இவையனைத்தையும் முடித்தலின்பெயர் தருமம்.

இந்த தருமத்தின் விவரம்.

தமது விஷயத்தில் நாம் செய்யவேண்டிய கடமையாவது:—தமது தேகக்ஷேத்தைத் தகுந்த உணவு, உடை, உழைப்புகளால் காப்பாற்றியும், தகுந்த கல்வி தகுதொழில்களினாலும, சாதுஜன சஹவாசத்தினாலும், ஆசாரியர்களுடைய போதனைகளினாலும், ஞானவிவிருத்தி அடைந்தும்; ஸத்தியம், சாந்தம், பரிசுத்தம் முதலான திவ்ய குணங்களினால் ஆத்மபரிசுத்தம்பெற்றும் பிரகாசிக்க வேண்டும்.

2. தாய் தந்தைகள் விஷயத்தில் நாம் செய்யவேண்டிய கடமையாவது—தம்மை அன்போடு பெற்றெடுத்து வளர்த்த "அன்னையையும் பிதாவையும்" மூன்னறிதெய்வமாகக்கொண்டி, அவர்கள் சொல்லும் நீதிவசனங்களை (நியாயமாகவிருக்கிறவரையில்) சிரமேற்கொண்டி நடந்தும், அவர்களுக்கு இக்கட்டி, பிணி, மூப்பு முதலானதுகள் சம்பவிக்கும்போது அருகிலிருந்து வேண்டிய உதவிகளனைத்தையும் உண்மையான உள்ளத்துடன் செய்தும் பாதுகாக்கவேண்டும்.

3. மனைவி விஷயமாகச்செய்யவேண்டிய கடமையாவது:—இல்லறத்தாருடைய மனையியானவள் கேவலம் காமசாந்தமாக்கவும், பிள்ளைகளைப்பெற்றுபோஷிக்கவும், சமையல்வேலை செய்யவும், ஜாடிமாலி முதலான வேலைகளைச்செய்யவுமாத்திரம் வந்தவளல்ல. இல்லறத்தானுடைய இகலோக சுகத்துக்கும், பரலோக பெரும்பாக்கியத்துக்கும் பொருத்தமானவள் மனைவியேயாகையால்; அவளிடத்தில் புருஷன் அதிக அன்புவைத்து, அவள் விரும்பும் உணவு வஸ்திராபரணங்களை (நியாயமானவரையிலும், தன் யோக்கியதைக்குத் தக்க வரையிலும்) கொடுத்தும்; மாமிகாத்திகள் முதலானவர் கொடுத்திற்கிடங்கொடாமலும், கல்வி, ஞானம் தேவபக்தி முதலானதுகளை தானே ஓர் ஆசிரியனைப்போலிருந்து போதித்தும்; அவளுக்கு மாதவிடாய், கர்ப்பம், பிரசவ சங்கடம், பிணி மூப்பு முதலான இக்கட்டுகள் சம்பவிக்கும் காலதசையில், அருகிலிருந்து அன்போடி வேண்டிய உதவிகளனைத்தும் செய்தும்; அவளிடம் பேசும்போது அதிக சாந்தமாகவும், மரியாதையாகவும், பிரியமாகவும் பேசியும்; அவளது விருப்பத்தை யுக்தியினலறிந்து செய்தும், உண்மையான வாழ்க்கைத்துணையியாகக்கொண்டி கவரவப்படுத்தவேண்டும்.

4. குழந்தைகள் விஷயமாகச் செய்யவேண்டிய கடமையாவது:—இல்லறத்தாருடைய குழந்தைகள் கேவலம் காமசாந்தியின பலனுக வந்தவர்களல்ல. அவர்கள் பரமேசுவரருடைய பரிபூரண அன்பினல் பிரகாசிக்கும் பிரபஞ்சத்தின் பிரஜாவிருத்தியாக்க தேவதூதராக அனுப்பப்பட்டவர்கள். அப்படி அனுப்பப்பட்ட பிள்ளைகளைத் தக்கபடி போஷித்து காத்துப் பிரபலமாக்க, பெற்றோராகிய தாய் தந்தைகளை பரிபாலகராக பரமேசுவரர் நியமித்திருக்கிறார்; ஆகவே பெற்றோர் தமது மக்களை உணவு, உடுப்பு, தேகாப்பியாசம் முதலானதுகளால் தக்கபடி பாதுகாத்தும்; கல்வி கைத்தொழில் ஞானம் நீதம் தேவபக்தி முதலானதுகளைப்போதித்தும், தாம் போதிக்கிறபடி தாமும் முன்மாதிரியாக நடந்தும், தமது நடவடிக்கைகளினல் அவர்களும் பின்பற்றும்படி வளர்க்கவேண்டும்.

5. அக்கம்பக்கத்தார் விஷயமாகச்செய்யவேண்டிய கடமையாவது:—இல்லறத்தார் அக்கம்பக்கத்தாரை அலக்ஷியம் செய்யக்கூடாது; எனெனில்

மானவஜாதியார், மற்ற மிருகங்கள், பக்ஷிகள் முதலான ஜீவப்பிராணிகளுக்கு இருக்கும் கூர்மையான கொம்பு, பல், நகம், இரக்கை முதலான சொந்த காப்பு களுக்கேற்றவைகளில்லாமல் படைக்கப்பட்டிருப்பதால், பிறருடைய சகாய மில்லாமல் சுகமாக பிழைத்தலரிது. அப்படிப்பட்ட சகாயம் பெரும்பாலும் அக்கம்பக்கத்தாரிடம் அடைவது சஹஜம்; ஆகவே, அக்கம்பக்கத்தார் தனவான் களானபோதிலும், தரித்திரவான்களானபோதிலும் அவர்களுக்குச் சம்பவிக்கும் சுகதுக்கங்களுக்கு தாம் இடுப்பைக் கட்டிக்கொண்டுபோய் உதவிசெய்ய வேண்டும்.

6. சுற்றத்தார் விஷயமாகச்செய்யவேண்டிய கடமையாவது:—சுற்றத் தார் சர்வ சுவாமியினுல் அனுப்பப்பட்ட பிரியமுள்ள பந்துக்கள்; கஷ்டம் வரும் காலங்களில் சுற்றத்தார் உதவி செய்வதைப்போல வேறேயோர் உதவி செய்தல் அபூர்வம்; ஆகவே, சுற்றத்தாரில் எவராவது நல்ல பதவியில் இருந்தால் அவர்களைக் கண்குளிரக்கண்டும் கேட்டும் சந்தோஷப்படவேண்டும். அவர்கள் கெட்டதசையிலிருந்தால் அவகளுக்கு வேண்டிய உதவிகளைச்செய்து ஆதரித்து வரவேண்டும்.

7. செல்வவான்கள் விஷயமாகச் செய்யவேண்டிய கடமையாவது:— இந்தப்பிரபஞ்சத்தில் செல்வவான்கள் சிலராகவும், அவர்களுடைய உதவியினுல் ஜீவிப்பவர்கள் பலராகவும் இருக்க பரமேசுவரர் நியமித்திருக்கிறார். இப்படிச் சிலராகவிருக்கும் செல்வவான்களில் பெரும்பான்மையோருக்கு, செல்வதைச் சரானவழியில் செலவழிக்கத்தெரியாமல், கெட்ட விஷயங்களில் செலவழித்து, இகத்துக்கும் பரத்துக்கும் தீமையை விலைவித்துக்கொள்வார்கள். ஆகவே, செல்வவான்களுடையத் திரவியத்தைத்தக்கபடி நல்ல விஷயங்களில் செலவ ழிக்க புத்திமான்கள் அடிக்கடி அறிவிக்கவேண்டும்.

8. ஏழைகள், வருமையிலுள்ளோர், ஆதரவற்றவர்கள் இவர்கள்விஷயமா கச்செய்யவேண்டிய கடமையாவது:— இந்தப்பிரபஞ்சத்தில் பெரும்பான்மை யோரை ஏழைகளாகவும், சிறுபான்மையோரை திரவியவான்களாகளாகவும் நிய மித்து போஷித்துவரும்படி பரமேசுவரர் நியமித்திருக்கிறார்; ஆகவே, வேலை செய்ய வகையற்ற பெரியோரையும், கூன், குருடு, தொண்டி, முடம், மூப்பு முதலியவைகளால் யாதொரு தொழில் செய்யசக்தியற்ற ஏழைகளையும், பெற் றோர் அற்ற பிள்ளைகள, புருஷரற்ற பெண்கள் முதலான ஆதரவற்றவர்களை யும், இல்லறத்தார் தமது மக்களைப்போல பாவித்துப் போஷித்தப்பாதுகாக்க வேண்டும்.

9. சுவதேசத்தைப்பற்றிச் செய்யவேண்டிய கடடையாவது:—தமது தேசத்தைவிட வேறு தேசங்களில் கல்வி, கைத்தொழில், வர்த்தகம், நாகரீகம் சுதந்திரம், சுகவாழ்வு, நீதி, தேவபக்தி முதலானதுகள் சிறந்து விளங்கில், அ வைகளைப் பல விதத்திலும் தெரிந்த, அவைகளை தமது தேசத்தில் பலவித கல் விச்சாலைகளினுலும், கைத்தொழிற்சாலைகளினுலும், வர்த்தகசாலைகளினுலும், சமாசாரப் பத்திரிகைகளினுலும், புத்தகங்களினுலும் பகிரங்கமாக்கி அவைகளி னுல் தமது ஜனனதேசத்த ஜனங்கள் சுகவாழ்வைப்பெற்று பிரபஞ்சத்தில் பெருமையாகப் பிரகாசிக்கச்செய்யவேண்டும்.

10. இராஜாங்க விஷயமாகச்செய்யவேண்டிய கடமையாவது:— இந்த உலகில் எப்படிப்பட்ட இராஜனும் எல்லா ஜனங்களுக்கும் திருப்தியாக நீதி செலுத்துவது கஷ்டசாத்தியம்—ஏனெனில் இந்த உலகத்தையாளும் இராஜாக் களோ சிலர். இவர்களுடைய குறைவுகுறறங்களைக் கண்டுபிடிப்பதற்கு பத்தர

ப்கோடி கண்களும் காதுகளும் கரசரணங்களுமுள்ள குடிகள் காத்துக் ண்டிருக்கின்றனர். அதாவது அந்தகோடி குடிகள் இராஜாக்களுடைய றவு குற்றங்களைக்கண்டு கூக்குரலிடுவது சஹஜம். இப்படிப் பல குடிகளு ய குறைவுகளையும், இராஜாக்கள் கேர்கோராக அறிந்து யாவருக்கும் திருப்தி ாக நீதிசெலுத்த முடியாது; ஆகவே, இல்லறத்தார் பூரண இராஜபக்தியுள் ர்களாகி இராஜாங்கத்தாரை பெற்றோரைப் போல பாவித்தும், அவர்கள் குடி டைய கஷ்ட நிஷ்டூரங்கள் தெரிந்துகொள்ளச் சக்தியற்ற காலத்தில், சு வ நிறைவுகளைப்பற்றி சாந்தமாகவும், சத்தியமாகவும், மரியாதையாகவும் தெ ப்பித்தியுட்; தேசத்தில் பஞ்சம், புசல்காற்று, வெள்ளம், அக்கினிபாதை, ள்ளை வியாதி, கலகம் முதலான இக்கட்டுகள் சம்பவிக்கும்போதும், துஷ்ட கள் கலகம்செய்து குடிகளை வருத்தும்போதும், அல்லது துஷ்டரான எதிர் ர படைபெடுத்து வரும்போதும், இல்லறத்தார் தமது இராஜாங்கத்தாருக்கு வியாக நின்று உழைத்து உள்ளன்புடன் இராஜபக்தியைக்காட்டவேண்டும்.

11. சாமானியர் விஷயமாகச்செய்யவேண்டிய கடமையாவது:—இல்ல தார் பிறரிடத்தில் உண்மை பேச வேண்டும். அவர்களிடம் சொன்ன ல்லின்படி நடக்கவேண்டும். அவர்களிடம் நீதியாகவும் நன்றியறிந்தவர் ாகவும் இருக்கவும், ஏழைகளிடம் பிரீதிவைத்தும், கேவலம் சுயலாபத்தைக் ருதாமல் பொதுஜன சமுதாயத்தினுடைய சுகவிருத்திக்கு உழைக்கவேண்டும்.

12 ஜீவஜந்துக்கள் விஷயமாகச் செய்யவேண்டிய கடமையாவது;— ிகள் மிருகங்கள் மற்ற கிருமிகீடாதி அறப பிராணிகளையும் வீணாகவும் கொடூ ரமாகவும் வதைத்து வருத்தப்படுத்தாமல், அவைகளின சுக துக்கங்களும் தமது துக்கங்களைப்போல பாவித்து போஷித்து பாதுகாத்து ஜீவகாருண்ணியர்க ள இருக்கவேண்டும்.

13 கடவுள் விஷயமாகசெய்யவேண்டிய கடமையாவது —அத்துவதீய ம், சத்தியஸ்வரூபருமாகிய பரமேசுவரரை கம்பி, அவரிடத்தில் தூரிருதயபூர்வக ன பக்தியைக்காட்டி உபாசித்தும், அவர் விரும்பும் ஸத்கருமங்களைச் செய்ய வண்டும். இது விஷயத்தில் பிரபஞ்சத்திலிருக்கும் பல மதஸ்தர்கள் பலவித க்கிகளாண்டி அனுஷ்டிக்கதிபோலும், அவ்வெல்லா மதங்களிலும் சத்தியம் றைந்து இருக்கிறது; ஆகவே, எந்த மதத்தையும், எந்த தேவதையும், ஏளனம் ய்யக்கூடாது. சிலர் சமரசமான சாமானிய தருமத்தை அறிய சக்தியற்றி ப்பார்கள்; அப்படிப்பட்டவர்களுக்கும் சங்கடமுண்டாக்காமலும், சாந்த ாகவும், மரியாதையாகவும் சத்தியத்தை அன்போடு போதித்து, பரமேசுவர டைய பிரபாவத்தை இந்தப்பிரபஞ்சமெங்கும் பாராயணம் செய்து உய்யு படி செய்யவேண்டும். இப்படி

வ்விடத்தில், எக்காலத்தில், எந்நிலையில், எக்காரியத்தை செய்யவேண்டியது மது கடமையோ; சரியாக அவ்விடத்தில், அக்காலத்தில், அந்நிலையில், அக்காரி தத்தைச் செய்தல்வேண்டுமென்னும் கட்டளையை நமக்குள் ஒவ்வொருவருடைய ற்புத்தியின் மூலமாக ஈசுவரர் ஒவ்வொரு க்ஷணமும் வெளியிடுகிறார்; நாம் அவ து அப்படிப்பட்ட எல்லாக்கட்டளைகளுக்குமே உள்ளாகி, ஸத்திய மார்க்கத்தி ும், தரும மார்க்கத்திலும், நன்மார்க்கத்திலும் நடப்போமாயின், நமக்குச்சிரச் சதமுண்டாயினும் உண்மையான உயிர்ப்பைப் பெற்று அழிவற்றபதவியை டையவல்லோம்.

Practice virtue. There is nothing superior than Virtue. Virtue acteth as balm to all beings.

(139). புஹதாரணிய உபநிஷத்து

6-வது அத்தியாயம் 4-வது பிராமணம் 5-வது வாக்கியம்.

யதாகாரீ யதாசாரீ ததாபவதி; ஸாதுகாரீ
ஸாதுர்பவதி பாபகாரீ பாபோபவதி;
புண்யஃபுண்யேந கர்மணாபவதி பாபஃபாபேந.

பொழிப்புரை.

யாரெப்படி செய்கிறாரோ, யாரெப்படி யாசரிக்கிறாரோ அவரப்படி யாகிறார்; நல்ல காரியங்களைச் செய்கிறவர் நல்லவராகிறார், பாபகாரியங்களைச் செய்கிறவன் பாபியாகிறான். தரும காரியங்களைச் செய்வதினால் ஆன்மா பரிசுத்தமுள்ளதாகிறது; பாபகாரியங்களைச் செய்வதினால் ஆன்மா பாபமுள்ளதாகின்றது.

விசேஷ உரை.

இவ்வுலகத்தில் எக்குலம் பிறந்த யாவராயிருக்கினும், அவரவர்கள் ஆசரிக்கிறபடியும், அவரவர்கள் செய்கிறபடியும் ஆகின்றனர். பாவ எண்ணங்களைக் கொண்டவர்களும், பாவகாரியங்களைச் செயகிறவர்களும் பாவிகளாகிறார்கள். தரும காரியத்தை யெண்ணுந்தோறும், தரும காரியத்தைச் செய்யுந்தோறும் ஆத்மா பரிசுத்த நிலைகளுப் போகின்றது; ஆகவே பாப கருமத்தை விடுதலும் புண்ணிய கருமத்தை அநுஷ்டித்தும் ஆத்மாவைப்பரிசுத்தப்படுத்திக்கொண்டு பரமாத்துமாவுடன் கூடி வாழ்தல் வேண்டும்.

What one doth, what one followeth, he deriveth his character from the same. The practiser of virtue becometh virtuous. The practiser of vice becomes vicious. Through virtuous actions one becometh virtuous; through vicious actions, vicious.

---

(140) .கடோபநிஷத்து

3-வது வல்லி 5-வது வாக்கியம்.

யஸ்த்வ விஜ்ஞானவான் பவத்யயுக்தேந
மநஸாஸதா; தஸ்யேந்த்ரியாணி வஸ்யாநி
துஷ்டாஸ்வா இவஸாரதேஃ

பொழிப்புரை.

யார் அவிவேகியோ, எப்பொழும் அடங்காத மனதுடையவனோ, அவனுடைய இந்திரியங்கள் தேர்ப்பாகனது துஷ்டக்குதிரைகளைப்போல வசப்படாதனவை.

விசேஷ உரை.

ஜீவாத்மாவாகிய இராஜன் வகிர்தலரும் ஸ்தூலதேசம் பஞ்ச பூதங்களால் ரய்யப்பட்ட ஒரு ரதமாம்; இந்த ரதத்துக்கு மனம் என்னும் குதிரையைக்கட்டப் ட்டிருக்கிறது. அக்குதிரையின் கடிவாளத்தை அவிவேகம் என்னும் சாரதி னிடம் கொடுத்தால்; அந்த அவிவேகமென்னும் சாரதி அந்த தேகமென்னும் த்தையும், அதிலிருக்கும் ஜீவாத்துமா என்னும் ராஜனையும், பஞ்சேந்திரியங் ளென்னும் படுகுழிகளில் தள்ளி தத்தளிக்கச்செய்து விடுவான்; ஆனல் புத்தி ன்னும் சாரதியினிடம் கடிவாளத்தைக்கொடுத்தால், ரதம் சரியாக கடைபெற தைப்போல; மனம் தன்வசப்பட்டிராவிடின் அது அந்த ஆத்மாவை தரும ார்க்கத்தை விட்டு நிர்ப்பாக்கியமான வேறு மார்க்கத்தில் செலுத்திக்கொண்டு ாய் பாபமென்னும் முள் நிறைந்தகாட்டில் தள்ளி,முடியாத வேதனை அதைப் ற்றும்படி செய்தவிடும்; ஆனதால் எவ்விதத்திலும் மனமும் இந்திரியங்களும் த்திலிருத்திக்கு வசப்பட்டும் தரும நியமனத்திற்கும் புறம்பாகாமலும் இருக்க வண்டும்.

He who is unwise with a mind always unruly, his enses are not subject to him as wicked horses are not o a charioteer.

---

(141). கடோபநிஷத்து 3—13 ல்.

யச்சேத்வாங்மனசிப்ராஜ்ஞஸ்தத்
யச்சே ஞான ஆத்மனி, ஞானமாத்மனி மஹதிநி
யச்சேத்தத் யச்சே சாஸ்த ஆத்மனி.

பொழிப்புரை.

விவேகியானவன் தன் வாக்கை மனதிலும், மனதை புத்தியி லும், புத்தியை ஆத்மாவிலும், ஆத்மாவை பரமாதமாவிலும் டுடக்கவேண்டும்.

விசேஷ உரை.

மனதின்கண்ணுள்ள சிந்தையால் வாக்கையடக்கல்வேண்டும், புத்தியின் ண்ணுள்ள விசாரணையிலுல் மனதின் சிந்தையையடக்கல்வேண்டும், புத்தி ின் விசாரணையை புறத்தினின்றும் தன் ஆத்மாவினிடம் நிறுத்துதல் வேண் டும். ஆத்மாவை பரமாத்மாவில் நிறுத்தல்வேண்டும், இதுவே யோகசாதனை ின் கிரமம்.

A wise man should keep down speech and mind; he should keep them within the Self which is knowledge; he should keep knowledge within the Self which is the Great; and he should keep that (the Great) within the Self which is the Quiet.

(142). புருஹூதாரண்யம்—4—4—22ல்.

யஜ்ஞேநதாநேநதபஸாநாசகே
நைதமேவ விதிஷவாமுநிர்பவதி.

பொழிப்புரை.

யக்ஞம், தானம், விஷயவாசனைகளை விடுவதான தபசு, ஆகிய இவைகளால் இந்த பரமாத்மாவை அறிந்துகொண்டு மநுஷ்யன் முனியாகிறான்.

விசேஷ உரை.

பரமாத்மாவை அறிந்து நற்செய்கைகளைச் செய்பவனே முனிபெனப் படுவதற்குத்த தகுந்.

Brahmins seek to know Him by the study of the Veda, by sacrifice, by gifts, by penance, by fasting, and he who knows Him, becomes a Muni.

---

(143). சுவேதாசுவதரம் 1—15 ல்.

திலேஷு தைலம் ததிநீவசர்ப்பிரா
பச்போதஸ்சர்வநீஷு சாக்நி:
ஏவமாத்மநி க்ருஹ்யதே ஸௌ
ஸத்யேநைநம் தபஸாயோநுபஷ்யதி.

பொழிப்புரை.

எள்ளில் எண்ணெய்போலும், தயிரில் நெய்யைப்போலும், நதியில் தண்ணீரைப்போலும், கட்டையில் அக்கினியைப்போலும், ஆத்துமாவில் பரமாத்துமாவை; சத்தியத்தையும் தபசையும் கொண்டு தேடுபவர்கள் அறிந்துகொள்ளுகின்றார்கள்.

As oil in seeds, as butter in cream, as water in (dry) river-beds, as fire in wood, so is the Self-seized within the self, if man looks for Him by truthfulness and penance.

---

(144). தலவாகரம்—4-9.

யோவாஏதாமேவம் வேதாபஹத்ய
பாப்மாநமநந்தே சுவர்க்கலோகே
ஜ்யேப்ரதிஷ்டிதி ப்ரதிஷ்டிதி.

பொழிப்புரை.

எவன் இந்த பிரும்ம வித்தையை (திகில்)சொல்லியவிதமாய் அறிகின்றானே, அவன் பாபத்தைவிட்டு சிரேஷ்டமும் அனந்தமுமான சொர்க்கலோகத்தில் வசிக்கின்றான்.

விசேஷ உரை.

மேலே சொல்லியபடி சாதனைசெய்து பிரும்மஞானத்தையடைந்தால் முக்தி கிடைக்கின்றது. பாபத்தையும் அதன் பலனுகிய துக்கத்தையும் முற்றும் விட்டு, சிரேஷ்டமான சொர்க்கலோகத்தில் அனந்தகாலம் வரைக்கும் ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதே முக்தியாம். மனுஷிய சரீரத்தை விட்டு எந்த உத்தமலோகத்தை அடைந்து வசிக்கின்றானே அந்த லோகம் சொர்க்கம். எந்த ஆத்மா எந்த லோகத்துக்கு யோக்கியமானதோ அந்த லோகத்தையடைகின்றது. பிரும்மோபாசகன் சிரேஷ்டமான சொர்க்கலோகத்தை அடைந்து அங்கே அனந்தகாலம் வசிக்கின்றான். அவன் தாழ்வையடைவதில்லை. அநேகர் பிரும்மத்தில் லயப்படுவது முக்தியென்கிறார்கள். அது முக்தியல்ல, விநாசமென்று அறியத்தக்கது. பாபத்தினின்று முற்றும் விடுபட்டு பிரும்மத்தை நேராக தரிசிக்கூடிய அனந்த ஆனந்தத்தைத்தரும் லோகத்தையடைந்து தேவதைகளோடு வசிப்பதே உண்மையான முக்தியாம்.

He who knows this Upanishad, and has shaken off all evil, stands in the endless, unconquerable world of Heaven, yea, in the world of Heaven.

---

(145). முண்டகோபநிஷத்து.

3-வது முண்டகம் 2-வது கண்டம் 4-வது வாக்கியம்.

ஏதைருபாயைர்யததேயஸ்து வித்வான்
தஸ்யைஷ ஆத்மா விசதே ப்ரஹ்மதாம.

பொழிப்புரை.

எந்த பிரமஞானி, இந்த உபாயங்களால் பிரமத்தையடைய முயலுகிறாரோ; அவருடைய ஆன்மா பிரமமென்னும் வீட்டையடைகின்றது.

விசேஷ உரை.

எந்தப்பிரமஞானிஸத்தியத்தைப்பற்றி, சருமத்தைத் தொடர்ந்து,சற்சருமங்களே அதுஷ்டானத்திற்கு கொண்டுவந்து; தாய் தந்தை ஆசாரியர் இவர்களிடத்தில் அன்புவைத்து, பிரமத்தை அடையும் நிமித்தம் முயற்சி செய்கிறாரோ, அவர் பிரமமென்னும் வீட்டையடைகின்றார். அவர் பிரமத்தையடைந்து அவருடன் நித்தியமாகக்கூடிவாழ்கையால் உண்டாகும் பேரானந்தத்தையனுபவிக்கிறார்.

The soul of that knower of God, who exerteth himself through these means to obtain God, entereth God as its habitation.

---

(146). தைத்திரியம்

சிக்ஷாவல்லி 11-வது அநுவாகம் 5-வது வாக்கியம்.

ஏஷ ஆதேச ஏஷ உபதேச ஏததநுசாஸநம்;
ஏவமுபாஸிதவ்ய மேவமுபாஸிதவ்யம்.

பொழிப்புரை.

இது கட்டளை, இது உபதேசம், இது பிரமாணவசனம்; இவ்விதமாக கடவுளை உபாசித்தல் வேண்டும்.

விசேஷ உரை.

ஹிமாசலாதி பர்வத பிரதேசங்களில் பல்லாண்டுகளுக்கு முன் பரமஹம்ஸர்களாகவும், தபோநிதிகளாகவும், ஏதீந்திரர்களாக எழுந்தருளியிருந்த மஹரிஷிகள் தாம் திருவாய்மலர்ந்தருளிய தீர்க்கதரிசன வாக்கியங்களடங்கிய இந்த வேதத்தை உபதேச பிரகாரமாகவும், பிரமாண வாக்கியங்களாகவும் கொண்டு அநுஷ்டிக்க வேண்டுமென்று கட்டளையிடுகின்றனர். யார் இந்த வேதத்தில் சொல்லிய தீர்க்கதரிசன வாக்கியங்களின்படி பரமேசுவரருடைய இருப்பை நம்பி, அவரை உண்மையான பக்தியினால் உபாசித்து, அவருக்குப்பிரியமான சாமான்ய தருமங்களைச்செய்து வருகிறார்களோ; அவர்கள், எந்தகாலத்திலும், எங்கிருக்கினும், எப்படிப்பட்டவர்களாகிலும் இகபரசுகத்தையடைவார்கள் என்பது ஸத்தியம். அவர்களே பிரம்மாநந்தர்கள்; அவர்களுக்கு இதுவே உபதேசம்.

This is the commandment. This is the teaching. This is the authority. Thus should God be worshipped.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ஹரி: ஓம்.

ஆரியர் வேதமென்னும் இந்து பைபிளின்



PRINTED AT THE "CRESCENT PRESS," COIMBATORE.